
ஹஸ்ரத் முஹம்மது (ஸல்)
அவர்களின்
வாழ்க்கை

# ஹஸ்ரத் முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கை

*உருது மூலம்:*
ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி)

*தமிழாக்கம் :*
மவ்லவி P.M. முஹம்மது அலி H.A.

*வெளியிடுவோர் :*
நஸாரத் நஷ்ரோ இஷாஅத்
சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா
காதியான், பஞ்சாப்.

---

Copy rights Reserved

***'Hazrat Muhammad(Sal) Avarhalin Vazhkkai'***
Tamil Version of *NABIYONKA SARDAR*
*by* **Hazrat Mirza Bashir-ud-din Mahmud Ahmad**

First Edition : 2006

Translated by
**Maulavi P.M. Muhammad Ali H.A.**

Published by :
NAZARAT, NASHR-O-ISHAAT
Sadr Anjuman Ahmadiyya
Qadian - 143516
PUNJAB STATE

# பதிப்புரை

*'ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) அவர்களின் வாழ்க்கை' என்னும் இந்நூல், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இரண்டாவது கலீ:பாவாகிய ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்கள் எழுதிய 'நபியோங்கா சர்தார்' என்ற உருது நூலின் தமிழாக்கமாகும்.*

*ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றுவதற்கு முன் அரபு நாட்டு மக்களின் ஒழுக்கநிலை மிகவும் சீர்கெட்டுப் போயிருந்தது. காட்டுமிராண்டிகளைப் போன்று வாழ்ந்தவர்களை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மனிதர்களாக மாற்றினார்கள். பின்னர் அவர்களை பண்புள்ளவர்களாக மாற்றினார்கள். பிறகு அவர்களை இறை நெருக்கம் கொண்டவர் களாக மாற்றினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இத்தகு சாதனையை நூலாசிரியர் இரத்தினச் சுருக்கமாக இந்நூலில் எடுத்துரைத்துள்ளார்.*

*ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில், அல்லாஹ்வின் திருத்தூதரிடம் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கிறது என்று கூறுகிறான். (33:22)*

*ஒழுக்கத்தின் மேன்மைகளை முழுமைப்படுத்துவதற்காக நான் எழுப்பப்பட்டுள்ளேன் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அவர்கள் தம் சமுதாய மக்களிடம், உறவினர்களிடம், தோழர்களிடம், சந்ததிகளிடம், சிறுவர்களிடம், எதிரிகளிடம், போர்க் கைதிகளிடம், அடிமைகளிடம் நடந்து கொண்ட விதம் அவர்கள் அனைத்துலகங்களுக்கும் அருட் கொடையாக விளங்கினார்கள் என்ற திருக்குர்ஆன் வசனத்தை உண்மைப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது.*

*எனவேதான் அன்னாரின் ஒழுக்கம் எப்படியிருந்தது என்று நபித்தோழர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் கேட்டபோது, அன்னாரின் ஒழுக்கம் குர்ஆனாகவே இருந்தது என பதில் கூறினார்கள். அந்த அளவுக்கு அவர்கள் திருக்குர்ஆனின் செயல்வடிவமாகத் திகழ்ந்தார்கள்.*

*இஸ்லாத்தின்மீது செய்யப்படும் மிகப்பெரிய ஓர் ஆட்சேபணை புனிதப்போர் (ஜிஹாது) பற்றியதாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஏன் புனிதப்போர் செய்ய நேர்ந்தது? அதன் நிபந்தனைகள், வழிமுறைகள் என்ன என்பதைப் பற்றியும் ஆசிரியர் இந்நூலில் மிக விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். விருப்பு வெறுப்பின்றி நடுநிலையுடன் படிப்பவர்களுக்கு உண்மை விளங்கும்.*

*இந்நூல் மவ்லவி முஹம்மது அலி சாஹிப் H.A. அவர்களால் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு, சமாதான வழி மாத இதழில் தொடராக வெளிவந்து கொண்டிருந்தது. தற்போது அதனை புத்தக வெளியீட்டுக்குழு சரிபார்த்த பிறகு நூல் வடிவில் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.*

*இப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் அல்லாஹ் மேலான நற்கூலியை வழங்குவானாக! மேலும், இதன் மூலம் பலருக்கும் நேர்வழி கிடைக்க அல்லாஹ் வழிவகை செய்வானாக! ஆமீன்.*

*- வெளியீட்டாளர்.*

# பொருளடக்கம்


ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தோன்றிய காலத்தில் சிலை வணக்கம் 7
மதுவும் சூதாட்டமும் 9
வணிகம் 9
அரபு மக்களின் இயல்புகளும் பழக்கவழக்கங்களும் 10
ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறப்பு 11
ஹலஃபுல் ஃபுஸூல் மன்றத்தில் உறுப்பினராதல் 12
ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களுடன் திருமணம் 13
அடிமைகளின் விடுதலையும், ஸெய்து (ரலி) அவர்களும் 14
ஹிரா குகையில் இறைவணக்கம் 15
திருக்குர்ஆனின் முதல் இறை அறிவிப்பு 15
ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் நம்பிக்கைக் கொள்ளுதல் 17
நம்பிக்கைக் கொண்டவர்களின் சிறிய ஜமாஅத் 17
மக்கா தலைவர்களின் எதிர்ப்பு 18
நம்பிக்கைக் கொண்ட அடிமைகளுக்கு நிராகரிப்போர் இழைத்த கொடுமைகள் 19
சுதந்திர முஸ்லிம்களின் மீது இழைக்கப்பட்ட அநீதிகள் 21
ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் 23
இஸ்லாத்தின் தூது 24
அபூதாலிபிடம் நிராகரிப்போரின் முறையீடும் நபிகள் நாயகத்தின் உறுதிப்பாடும் 26
மக்காவைத் துறந்து அபிஸீனியாவிற்குச் செல்லல் 27
ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவுதல் 29
முஸ்லிம்களை ஊர் நீக்கம் செய்தல் 30
ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தாயிஃப் பயணம் 32
மதீனாவாழ் மக்கள் இஸ்லாத்தைத் தழுவுதல் 37
இஸ்ரா (ஆத்மீக இரவுப்பயணம்) 39
ரோமானியர்களின் வெற்றி குறித்து முன்னறிவிப்பு 39
மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செல்லுதல் 43
ஹஸ்ரத் நபிகள் நாயகத்தைப் பிடிக்கச் சென்ற ஸுராகாவும், அவரைப்பற்றிய முன்னறிவிப்பும் 45
ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவில் குடியேறுதல் 47
ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்சாரி (ரலி) அவர்களின் வீட்டில் தங்கியிருத்தல் 49
ஹஸ்ரத் நபிகள் நாயகத்தின் பணியாளர் அனஸ் (ரலி) அவர்களின் சாட்சி 49
மக்காவிலிருந்து குடும்பத்தினரை அழைத்துவரச் செய்தலும், மஸ்ஜிதே நபவிக்காக அடிக்கல் நாட்டுதலும் 50
இறைவனுக்கு இணை வைத்துக் கொண்டிருந்த மதீனாவின் கோத்திரங்கள் இஸ்லாத்தைத் தழுவுதல் 50
முஸ்லிம்களுக்கு மீண்டும் இன்னல்கள் செய்ய மக்கத்தினர்கள் செய்த முயற்சிகள் 51
அன்ஸாரிகளுக்கும், முஹாஜிரிகளுக்கும் இடையில் சகோதரத்துவம் 52
முஹாஜிர்கள், அன்ஸார்கள், யூதர்கள் ஆகியவர்களுக்கிடையில் உடன்படிக்கை 53
மக்கத்தினர்கள் மீண்டும் புதிதாக இன்னல்கள் செய்தல் 54
நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தற்காப்பு நடவடிக்கை 55
மதீனாவில் இஸ்லாமிய ஆட்சிக்கான அடிப்படை 56
குரைஷியர்களின் வணிகக் குழுவின் வருகையும், பத்ர் போரும் 57
ஒரு மகத்தான முன்னறிவிப்பு நிறைவேறுதல் 61
பத்ர் போரின் கைதிகள் 63
உஹுதுப் போர் 64

| | |
|---|---|
| தோல்வியாக மாற்றப்பட்ட வெற்றி | 66 |
| உஹுதுப் போருக்குப் பின் மதீனாவாழ் மக்கள் காட்டிய தியாக உணர்வு | 71 |
| மது அருந்தக் கூடாது என்ற கட்டளையும், அதன் பயனும் | 74 |
| உஹுதுப் போருக்குப் பின் நிராகரிக்கும் கோத்திரங்களின் சதித்திட்டங்கள் | 75 |
| குர்ஆனை மனனம் செய்திருந்த எழுபது பேர் கொல்லப்பட்ட நிகழ்ச்சி | 78 |
| பனூ முஸ்தலிக் போர் | 79 |
| மதீனாவின் மீது முழு அரபு நாட்டின் தாக்குதலும், அகழ்ப்போரும் | 81 |
| அகழ்ப்போரின்போது இஸ்லாமியப் படை வீரர்கள் எத்தனை பேர் இருந்தனர்? | 84 |
| பனூ குரைலாவின் சதித்திட்டம் | 86 |
| நயவஞ்சகர்களும், நம்பிக்கையாளர்களும் | 89 |
| இஸ்லாத்தில் இறந்துபோன சடலத்திற்கு மதிப்பளித்தல் | 90 |
| முஸ்லிம்கள் மீது கூட்டணிப்படைகளின் தாக்குதல் | 91 |
| பனூ குரைலா கோத்திரத்தினரும், இணை வைப்பவர்களும் ஒன்றுசேர்ந்து தாக்குதல் நடத்த எடுத்த முயற்சியும் அதில் அவர்கள் அடைந்த தோல்வியும் | 92 |
| பனூ குரைலா கோத்திரத்தினர் செய்த சதிச்செயலுக்கு கிடைத்த தண்டனை | 95 |
| பனூ குரைலாவினர் தாங்களாகவே நியமித்த நடுவர் ஸஅத் செய்த தீர்ப்பு தவ்ராத் வேதத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது | 97 |
| முஸ்லிம்களது வெற்றியின் தொடக்கம் | 100 |
| போர் பற்றிய யூத, கிறிஸ்தவ சமயங்களின் போதனைகள் | 102 |
| போர் பற்றிய இஸ்லாத்தின் போதனை | 104 |
| அகழ்ப்போருக்குப் பின்னர் நிராகரிப்பாளர்கள் மீண்டும் முஸ்லிம்களைத் தாக்குதல் | 112 |
| ஆயிரத்து ஐநூறு நபித்தோழர்களுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவுக்குப் பயணம் | 113 |
| ஹுதைபிய்யா சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகள் | 116 |
| மன்னர்களுக்கு எழுதப்பட்ட கடிதங்கள் | 119 |
| ரோமானிய மன்னர் ஹெராகிளியஸுக்கு எழுதிய கடிதம் | 119 |
| மன்னர் ஹெராகிளியஸுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுதிய கடிதத்தின் வாசகம் | 122 |
| ஈரான் மன்னருக்கு எழுதப்பட்ட கடிதம் | 123 |
| அபீஸீனிய மன்னர் நஜ்ஜாஷிக்கு எழுதப்பட்ட கடிதம் | 125 |
| எகிப்து மன்னர் மகவ்கிசுக்கு எழுதப்பட்ட கடிதம் | 126 |
| பெஹ்ரைன் நாட்டுத் தலைவருக்கு எழுதப்பட்ட கடிதம் | 128 |
| கைபர் கோட்டையின் வீழ்ச்சி | 129 |
| வியக்கத்தக்க மூன்று நிகழ்ச்சிகள் | 130 |
| கஅபாவைச் சுற்றி வரும் நிகழ்ச்சி | 133 |
| ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பலதாரமணம் செய்தது தொடர்பாக எழுதப்பட்ட ஆட்சேபனைக்குப் பதில் | 134 |
| காலிது பின் வலீதும், அம்ரு பின் ஆஸும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுதல் | 135 |
| மூத்தா போர் | 135 |
| மக்கா வெற்றி | 139 |
| ஹுனைன் போர் | 153 |
| மக்கா வெற்றிக்கும்,ஹுனைன் போருக்கும் பின் நிகழ்ந்த நிகழ்ச்சி | 158 |
| தபூக் போர் | 159 |
| ஹஜ்ஜத்துல் விதாவின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு | 163 |
| ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மறைவு | 166 |
| ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மறைவினால் நபித்தோழர்களுக்கு ஏற்பட்ட நிலை | 170 |

# ஹஸ்ரத் முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கை

அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு பிற இறைதூதர்கள் எல்லாரின் வாழ்க்கை வரலாற்றையும் விட மிகவும் தெளிவாக உள்ளது. இது இறைவனின் மிகப் பெரிய ஓர் அடையாளமும் இஸ்லாத்தின் உண்மைக்கு மாபெரும் சான்றுமாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வரலாறு மிகத் தெளிவாக இருப்பதால் அவர்களைக் குறித்து பிற இறைதூதர்களைக் குறித்து கிளப்பப்பட்டதைவிட அதிகமான ஆட்சேபணைகள் கிளப்பப்பட்டன. எனினும் இந்த ஆட்சேபணைகளுக்கு சரியான பதில்கள் கிடைத்த பின்னர் ஒருவர் எந்த அளவு பரந்த மனப்பான்மை யுடனும் மிகுந்த பற்றுடனும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நேசிக்க முடியுமோ அவ்வாறு வேறெந்த மனிதரையும் நேசிக்க முடியாது என்பதிலும் சந்தேகமில்லை. ஏனென்றால் ஒருவரின் வரலாறு தெளிவற்றதாகவும் பல நிகழ்ச்சிகள் மறைந்து போனவையாகவும் இருந்தால் அவர்களின் மீது கொள்ளும் நேசத்தில் குறைபாடு ஏற்படுவதற்கு எப்போதுமே வாய்ப்புண்டு.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு, அவர்கள் தொடர்பாக எழக்கூடிய எல்லா ஆட்சேபணை களுக்கு பதிலளிக்கக்கூடிய அளவுக்கும் அவர்கள் தொடர்பாக எழக்கூடிய எல்லா ஐயப்பாடுகளையும் களையக்கூடிய அளவுக்கும் ஒரு திறந்த நூலாகத் திகழ்கிறது.

வேத நூல்களை சரியான பொருளில் மக்களின் மனத்தில் பதியச் செய்வதற்கு அவற்றின் கருத்துக்களுக்கேற்ப சரியாக நடந்து காட்டும் மிகச் சிறந்த முன்மாதிரியாக ஒருவர் இருப்பது மிகவும் இன்றியமையாதது. அவ்வேதம் எவருக்கு அருளப்பட்டதோ அவரே மற்றெல்லாரையும்விட மிகச் சிறந்த முன்மாதிரியாக இருக்க முடியும். இது மிகவும் நுட்பமானதும் தத்துவரீதியானதும் ஆகிய கருத்தாகும். எனினும் பெரும்பாலான மதங்கள் இந்த நுட்பமான உண்மையைப் புரியவேயில்லை.

இந்து மதம், வேதங்களைக் காட்டுகின்றது. ஆனால் அவ்வேதங்களைக் கொண்டு வந்த ரிஷிகள், முனிவர்கள் ஆகியவர்களின் வரலாற்றைக் குறித்து முற்றிலும் மௌனம் சாதிக்கின்றது. இந்து மத அறிஞர்களால் இதன் தேவையை இன்று வரைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

இவ்வாறே கிறிஸ்தவ அறிஞர்களும் பாதிரிகளும் யூத அறிஞர்களும் இஸ்ரவேல் இனத்தவர்களுள் தோன்றிய இறைத் தூதர்களிடம் பல குறைபாடுகள் காணப்பட்டனவென்று துணிச்சலாகவும் பெருமையாகவும் கூறி வருகின்றனர்.

இவர்களால் பின்வரும் கருத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. வேதத்தை வழங்குவதற்காக இறைவன் எந்த மனிதரைத் தேர்ந்தெடுத்துள்ளானோ அந்த மனிதரையே அவ்வேதத்தால் சீர்திருத்த முடியவில்லையாயின், அவரால் மற்றவர்களை எவ்வாறு சீர்திருத்த முடியும்? அம்மனிதர் அவ்வாறு சீர்திருந்த தகுதியற்றவராக இருந்தாரெனில், இறைவன் அவரை ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்? வேறொருவரை ஏன் தேர்ந்தெடுக்கக் கூடாது? ஸபூர் என்னும் இறை போதனைக்கு, ஹஸ்ரத் தாவூது நபி (அலை) அவர்களைத் தேர்ந்தெடுக்க இறைவனுக்கு என்ன நெருக்கடி ஏற்பட்டு விட்டது? இஸ்ரவேல் இனத்தவர்களிலிருந்து வேறொருவரை அவன் தேர்ந்தெடுத்திருக்கலாம்.

எனவே எவர் மூலம் இறைவன் தனது போதனையை அருளினானோ அவரையே அப்போதனையால் சீர்திருத்த முடியவில்லை என நினைத்தல் அல்லது சீர்திருத்த தகுதியற்ற ஒருவரை இறைவன் நபியாகத் தேர்ந்தெடுத்தான் என நினைத்தல் ஆகிய இரண்டு கருத்துகளுமே பகுத்தறிவிற்கு முற்றிலும் மாற்றமானவையே. தமது அடிப்படைக் கொள்கைகளிலிருந்து பல மதங்கள் வெகுதூரம் சென்றுவிட்டமையால், அம்மதங்களில் இத்தகைய தவறான கருத்துகள் இடம் பெற்றுள்ளன. அல்லது மனிதனின் அறிவு வளர்ச்சி முழுமையடையாததால், பண்டைக் காலத்தில் மேற்கூறப்பெற்ற விஷயங்களின் முக்கியத்துவத்தை உணர முடியாமலே போயிற்று என்று கூறலாம். எனினும் இஸ்லாத்திலோ ஆரம்பத்திலிருந்தே அவ்விஷயங்களின் முக்கியத்துவம் உணரப்பட்டு விட்டது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துணைவியார் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், பதிமூன்று அல்லது பதினான்கு வயதில் அவர்களைத் திருமணம் செய்து ஏழாண்டு காலம் அவர்களுடன் வாழ்ந்தார்கள். அவர்கள் மரணமடைந்தபோது, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் வயது இருபத்தொன்று. அன்னார் வயதில் குறைந்தவ ராகவும் எழுதப்படிக்க தெரியாதவராகவும் இருந்துங்கூட ஒரு போதனை அதனைப் போதித்தவரிடமிருந்து பிரித்துப்பார்க்க முடியாததாகவே இருக்க வேண்டும் என்ற மேற்கூறப்பெற்ற அந்த நுட்பமான கருத்தினை நன்றாகத் தெரிந்திருந்தார்கள்.

ஒருதடவை அன்னாரிடம் ஒருவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பண்புகளைக் குறித்து கூறுமாறு கேட்டதற்கு,

“அவர்களின் பண்புகளைக் குறித்து கூறவும் வேண்டுமோ? திருக்குர்ஆனின் கட்டளைகளையே அவர்கள் போதித்தார்கள். அதன் போதனைகளே அவர்களின் செயல்களாய் விளங்கின. அதில் கூறப்பட்ட கட்டளைகளுக்கேற்பவே நடந்து காட்டினார்கள். அவர்களின் ஒவ்வொரு செயலும் திருக்குர்ஆனின் போதனையாய் இலங்கிற்று” எனப்பதிலளித்தார்கள். இது மிகவும் நுட்பமானதும் வியக்கத்தக்கதுமான கருத்தைக் கொண்ட பதிலாகும்.

இதிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பண்புகள், படிக்காத ,வயதில் குறைந்த ஒரு பெண்ணின் கவனத்தைக் கூட ஈர்த்து வெற்றி கொள்ளும் அளவிற்கு மிக விரிவானதாகவும் மிகவும் உயர்ந்ததாயும் இலங்கினவென்பதை தெரிந்து கொள்ளலாம்.

இந்து, கிறித்தவ, யூத மதங்களைச் சேர்ந்தவர்களாலும், கிறித்தவ தத்துவ அறிஞர்களாலும் புரிந்து கொள்ளவியலாத உண்மையினை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் புரிந்து கொண்டார்கள். அந்தச் சிறிய வாக்கியத்தின் மூலம் உண்மை யானவரும் மாசற்றவருமான ஒருவர், உலகிற்குப் போதனை செய்து விட்டு, அவற்றிற்கேற்ப அவர் செயல்படாமலிருப்பது அல்லது அவர் மட்டும் ஒரு நல்ல காரியத்தை ஆற்றிவிட்டு, அதனை உலகிற்கு தெரியாமல் மறைத்து வைப்பது ஆகிய இரண்டும் சாத்தியமற்றவை யாகும் என்பதை உணரலாம். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பண்புகளைத் தெரிந்து கொள்வதற்கு எந்த வரலாறும் உங்களுக்குத் தேவையில்லை. அவர்கள் உண்மை மிக்கவரும் களங்கமற்றவருமாகயிருந்ததால், எதைச் சொன்னார்களோ, அதையே செய்து காட்டினார்கள். எதைச் செய்து காட்டினார்களோ, அதையே சொன்னார்கள். நாங்கள் அவர்களின் பண்புகளைப் பார்த்து திருக்குர்ஆனின் கருத்துக்களைத் தெரிந்து கொண்டோம்.

எங்களுக்குப் பிறகு இஸ்லாத்தைத் தழுவிய நீங்கள் திருக்குர்ஆனின் கருத்துக்களைத் தெரிந்து கொள்வதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தெரிந்து கொள்ளலாம் என்ற நுட்பமான கருத்தினை விளக்கினார்கள். ***அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் கமா ஸல்லய்த்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம வபாரிக் வஸல்லிம் இன்னக்க ஹமீதும் மஜீத்.*** (அல்லாஹ்வே! ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் அவர்களுடைய குடும்பத்தார் மீதும் நீ கருணை காட்டியது போல, ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் நீ கருணை காட்டுவாயாக. மேலும் அருள்புரிவாயாக. நிச்சயமாக நீ மிக்க புகழுக்குரியவனும், மிக்க கண்ணியத்திற்குரியவனுமாவாய்.)

## ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தோன்றிய காலத்தில் சிலை வணக்கம்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றிய காலத்திலுள்ள மக்களின் நிலைகளையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வரலாற்றின் ஒரு பகுதியாகவே கருத வேண்டும். ஏனென்றால் அந்த பின்னணியையும் கவனத்தில் கொண்டால் மட்டுமே அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் உண்மையை ஒருவரால் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் கி.பி. 570 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் பிறந்தார்கள். அவர்களுக்கு ‘*முஹம்மது*’ என்று பெயர் சூட்டப்பட்டது. முஹம்மது என்பதற்கு புகழப்படுபவர் என்று பொருள்.

அவர்கள் பிறந்தபோது, மிகச் சிலரைத் தவிர மற்றெல்லா அரபு மக்களும் இறைவனுக்கு இணை வைப்பவர்களாகவே விளங்கினர். இவர்கள் தம்மை ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் வழித்தோன்றல்கள் எனக் கூறி வந்தனர்.

ஹஸ்ரத் இப்ராஹீம் நபி (அலை) அவர்கள் இறைவனுக்கு இணைவைத்தவர்களல்லர் என்பதை இவர்கள் ஏற்றுக் கொண்டிருந்துங்கூட இவர்கள் இறைவனுக்கு இணை வைத்தனர். இதற்கு இவ்வாறு சான்று தந்தனர்.

'சில மனிதர்கள் முன்னேற்றமடைந்து இறைவனிடத்தில் மற்றவர்களுக்காகப் பரிந்துரை செய்யுமளவிற்கு அவனுக்கு நெருக்கமானவர்களாய்த் திகழ்ந்தனர். இறைவனோ மிகவும் உயர்ந்த அந்தஸ்திற்குரியவன். எல்லாராலும் அவனை அடைந்து விட முடியும் என்பது சாத்தியமன்று. முழுமை பெற்ற மனிதர்களே அவனை அடைந்திட முடியும். எனவே சாதாரண மக்கள் வஸீலா என்னும் துணையை உருவாக்கிக் கொண்டு, அத்துணையின் மூலம் இறைவனுடைய திருப்பொருத்தத்தையும் உதவியையும் பெற வேண்டும்'. இணைவைத்தலுக்கு அவர்கள் கூறிய சமாதானம் இது.

இவர்களின் இத்தகைய வினோதமான கொள்கை மூலம், ஹஸ்ரத் இப்ராஹீம் நபி (அலை) அவர்கள் ஏகத்துவத்தைக் கடைபிடித்து நடந்தவர்கள் என இவர்கள் ஒப்புக் கொண்டிருந்துங் கூட இறைவனுக்கு இணை வைப்பதைத் தமக்குப் பொருத்தமாக்கிக் கொண்டனர். ஹஸ்ரத் இப்ராஹீம் நபி (அலை) அவர்கள், உண்மை மிக்கவர்களாயிருந்ததால் நேரடியாக இறைவனை அடைய முடிந்தது. ஆனால் தாமோ இத்தகைய உன்னத நிலையை அடையாததால், தமக்கு சில பெரியவர்களின் துணையை உருவாக்கிக் கொள்வது அவசியமென கருதினர். எனவே, இறைவனை அடைவதற்காக அவர்கள் அந்தப் பெரியவர்களை சிலைகளாக வடித்து, அவற்றையே வணங்கி வந்தனர். இவ்வாறு தம்முடைய சொந்த எண்ணத்திற்கேற்ப அப்பெரியவர்களை மகிழ்வித்து இறைவனிடத்தில் தமக்கு **வஸீலா**வை (இறைவனுக்கும் தமக்கும் இடையில் தொடர்பை உண்டாக்குபவற்றை) உருவாக்கிக் கொண்டனர்.

இக்கொள்கையிலுள்ள குறைபாடுகளையும் தொடர்பின்மை களையும் களைவதன்பால் அவர்களின் சிந்தனை ஒருபோதும் சென்றதில்லை. ஏனென்றால், ஏகத்துவத்தைப் போதிக்கும் சிறந்த போதகர் எவரும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஒரு சமுதாயத்தில் இறைவனுக்கு இணை வைக்கும் பழக்கம் ஆரம்பமாகி விடுமாயின், அது மேலும் வளர்ச்சியடைந்து கொண்டேதான் இருக்கும். ஒரு கடவுளிலிருந்து இரு கடவுள்கள், இரண்டு கடவுள்களிலிருந்து மூன்று கடவுள்கள் என்று கடவுள்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகும்.

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றிய காலத்தில், கஅபாவில் (இது இப்போது முஸ்லிம்களின் புனிதமான மஸ்ஜிதாகும். இதனை ஹஸ்ரத் இப்ராஹீம் நபி (அலை), ஹஸ்ரத் இஸ்மாயீல் நபி (அலை) ஆகிய இருவரும் கட்டினர்.) வரலாற்று ஆசிரியர்களின் கூற்றுப்படி, முன்னூற்று அறுபது சிலைகள் இருந்தன.

*(புகாரி - கிதாபுல் மகாஸீ, பாபு ஃபத்ஹே மக்கா மற்றும் ஸர்கானி தொகுதி 2, பக்கம் 334)*

சந்திர மாதங்களின் கணக்கிற்கேற்ப, ஒவ்வொரு நாளுக்கும் ஒரு சிலை என அவர்கள் கணித்துக் கொண்டார்கள் போலும். இச்சிலைகள் மட்டுமல்லாமல், அதன் சுற்றுப் பகுதியிலுள்ள மாநிலங்களின் ஒவ்வொரு பெரிய ஊரிலும் பெரும் பெரும் சமுதாயத்தின் முக்கிய மையங்களிலும் தனித்தனியான சிலைகள் இருந்தன. இவ்வாறு அரபு நாட்டின் ஒவ்வொரு பகுதியும் இறைவனுக்கு இணை வைப்பதில் சிக்கிக் கொண்டிருந்தது.

அரபு மக்களிடத்தில் மொழியின் நாகரிகம், அதன் சீர்திருத்தம் ஆகியவற்றிற்கான கவனம் மிகவும் மேலோங்கி நின்றது. அவர்கள் தமது மொழியினை மிகவும் அறிவார்ந்ததாக ஆக்க முயன்றனர். ஆனால் இதனைத் தவிர அவர்களைப் பொருத்தவரை கல்விக்கு வேறெந்தப் பொருளும் இருக்கவில்லை.

வரலாறு, புவியியல், கணிதம் முதலான கல்விகளுள் எதனையும் அவர்கள் தெரிந்திருக்கவில்லை. எனினும் அவர்கள் பாலைவனத்தில் வாழ்ந்து வந்ததாலும் அதில் பயணம் செய்ய நேர்ந்ததாலும் விண்ணியலில் வல்லுநர்களாகத் திகழ்ந்தனர். அரபு நாடு முழுவதிலும் ஒரு பள்ளிக்கூடம் கூட இருந்ததில்லை. சிறப்பிற்குரிய மக்காவில் விரல்விட்டு எண்ணும் அளவிற்கே எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் இருந்தனர் எனக் கூறப்படுகின்றது.

அரபு மக்கள் தம் நடத்தைகளைப் பொருத்தவரையில், வினோதமான முரண்பட்ட ஒரு சமுதாயத்தினராகத் திகழ்ந்தனர். அவர்களிடம் மிகவும் பயங்கரமான சில பாவச்செயல்கள் காணப்பட்டன. எனினும் அதே சமயத்தில் அவர்களின் சமுதாயத்தின் தரத்தை மிகவும் உயர்த்தக்கூடிய சில நன்மைகளும் அவர்களிடம் இருந்தன.

## மதுவும் சூதாட்டமும்

அரபு மக்கள் மிகவும் அதிகமாக மது அருந்தும் பழக்கம் உடையவர்களாயிருந்தனர். மது அருந்திய போதையில் உணர்விழந்து அலைதல் அல்லது கண்டபடி உளறுதல் அவர்களிடம் இழிவான செயல்களாய்க் கருதப்படவில்லை. எனினும் இவை இரண்டும் சிறப்பிற்குரியனவாய்க் கருதப்பட்டன. கண்ணியமான ஒருவர், தமது நண்பர்களையும் அண்டை அயலார்களையும் அதிக அளவு மதுவருந்த வைப்பது, அவரின் சிறப்புத் தன்மைக்குரிய அடையாளங்களுள் ஒன்றாகக் கருதப்பட்டது. ஒருநாளில் ஐந்து வேளைகளில் மதுவருந்தும் சபைகளைக் கூட்டுவது, பணவசதி படைத்தவர்களுக்குக் கட்டாயமாக இருந்தது.

சூதாடுதல் அவர்களின் சமுதாய விளையாட்டாக இருந்தது. இதனை ஒரு கலையாக அவர்கள் மதித்தனர். தமது பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக அவர்கள் சூதாடவில்லை. கொடை வழங்குவதற்கும் பெருமை பாராட்டுவதற்கும் இச்சூதாட்டத்தைச் சாதனமாக்கிக் கொண்டனர். உதாரணமாக, சூதாட்டத்தில் வென்று விடுபவர், வென்ற பணத்திலிருந்து தமது நண்பர்களுக்கும் தமது சமுதாயத்தினருக்கும் விருந்தளிக்க வேண்டும் என்று சூதாடுபவர் களுக்கிடையில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுவதுண்டு.

போர்களின்போது, சூதாட்டமே பணம் திரட்டுவதற்கான வழியாகக் கொள்ளப்பட்டது. இக்காலத்தில்கூட போர் நடக்கும் நாள்களில், லாட்டரி நடத்தும் பழக்கம் பெருகிக் கொண்டிருக்கிறது. லாட்டரியைக் கண்டுபிடித்ததற்கான புகழ் அரேபியர்களுக்கே சேரும் என்பதை ஐரோப்பா, அமெரிக்க முதலிய நாடுகளின் லாட்டரி நிறுவனங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். போர் நிகழும் போதெல்லாம் அரபு கோத்திரத்தார் ஒருவரோடொருவர் சூதாடி வந்தனர். மேலும் சூதாட்டத்தில் வென்றவர் போரின் பெரும் செலவுகளை ஏற்று வந்தார். இவ்வாறு உலகத்தின் (பிற நாடுகளுக்குக் கிடைத்திருக்கும்) சுகபோகங்களையும், வசதிகளையும் இழந்ததற்கு மதுவைக் கொண்டும் சூதாட்டத்தைக் கொண்டும் அரபு மக்கள் ஈடு செய்தனர்.

## வணிகம்

அரபு மக்கள் வணிகர்களாயிருந்தனர். அவர்களின் வணிகக் குழுக்கள் வெகு தூரங்களுக்கெல்லாம் சென்றன. அபிஸீனியா, சிரியா, பாலஸ்தீனம் ஆகிய நாடுகளிடையே அவர்கள் வணிகம் நடத்தினர். இந்தியாவுடனும் அவர்களுக்கு வணிகத் தொடர்புகள் இருந்தன. அவர்களுள் பண வசதி படைத்தவர்கள் இந்தியாவில் செய்யப்பட்ட வாளாயுதங்களை மிகவும் விரும்பி வாங்கினர். ஏமன், சிரியா ஆகிய இரு நாடுகளிலிருந்தே அதிகமான துணிகளை வாங்கினர். இவ்வர்த்தகங்கள் அரபு நாட்டின் நகரங்களில் நடைபெற்றன.

ஏமன் நாட்டிலுள்ள மக்களையும் இன்னும் சில வட பகுதியிலுள்ள மக்களையும் தவிர, மற்றெல்லாப் பகுதிகளிலும் வாழ்ந்த அரபு மக்கள் நாடோடிகளாய் வாழ்ந்து வந்தனர். இவர்களுக்கென்று நிரந்தரமான நகரங்களோ, ஊர்களோ இருக்கவில்லை. இவர்களில் ஒவ்வொரு கோத்திரத்தைச் சேர்ந்தவர்களும் நாட்டின் பகுதிகளைப் பகிர்ந்து கொண்டு, தத்தமக்குரிய பகுதிகளில் மட்டும் சுற்றித் திரிந்தனர். அவர்கள் தங்கியிருந்த இடத்தில் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டு விட்டால், அங்கிருந்து கிளம்பி தண்ணீர் கிடைக்குமிடத்திற்குச் சென்று தமது கூடாரங்களை அமைத்துக் கொள்வர். ஆடுகளும், ஒட்டகங்களும் அவர்களின் செல்வம். இவற்றின் உரோமத்தால் ஆடைகளும், தோல்களால் கூடாரங்களும் தயாரித்தனர். இவற்றின் எஞ்சிய பொருட்களைச் சந்தைக்குக் கொண்டு சென்று விற்று வந்தனர்.

## அரபு மக்களின் இயல்புகளும் பழக்கவழக்கங்களும்

தங்கம் வெள்ளியைப் பற்றி அவர்கள் தெரிந்திருந்தாலும், இவ்விரண்டும் அவர்களுக்குக்கிடைப்பது மிகவும் அரிதாக இருந்தது. இதனால் அவர்களுள் பொதுமக்களும் ஏழைகளும் சங்குகளாலும் நறுமண கலப்புப் பொருட்களாலும் தமக்கு நகைகள் செய்து கொண்டனர். கிராம்பு, கர்பூசா, வெள்ளரிப்பழம் முதலியவற்றின் விதைகளாலும் இவை போன்ற மற்ற பொருட் களினாலும் மாலைகளைத் தயாரித்துக் கொண்டனர். மங்கையர் இவற்றை அணிந்து கொண்டு நகைகளின் தேவைகளை நிறைவு செய்தவர்களாய் இருந்தனர்.

அரபு மக்களிடம் கட்டுப்படாமை மற்றும் தீமைகள் மிகுதியாக இருந்தன. திருடுவது குறைவாக இருந்தாலும், வழிப்பறிக் கொள்ளை மிகவும் அதிகமாக இருந்தது. ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர் இன்னொரு சமுதாயத்தினரிடம் வழிப்பறி கொள்ளையிடுவது சமுதாய உரிமை என்று அவர்கள் கருதினர்.

இத்தன்மைகளைக் கொண்ட அவர்களிடம் வாக்கைக் காப்பாற்றுவது எந்த அளவிற்கு அதிகமாக இருந்ததோ, அந்த அளவுக்கு மற்ற எந்தச் சமுதாயத்திலும் காணப்படவில்லை. பலம் வாய்ந்த ஒரு மனிதரிடம் அல்லது ஒரு சமுதாயத்திடம் ஒருவர் வந்து, நான் உங்கள் பாதுகாப்பில் வந்து விட்டேன் எனக் கூறினால், அவருக்கு பாதுகாப்பளிப்பது அம்மனிதருக்கு அல்லது அந்தச் சமுதாயத்திற்கு கடமையாக ஆகிவிடும். அவர்கள் பாதுகாப்புக் கொடுக்கவில்லையாயின், அவ்வரபு நாடு முழுவதிலும் அவர்களுக்கு இழிவு ஏற்பட்டுவிடும்.

கவிஞர்கள் மிகவும் அதிகமாக செல்வாக்குப் பெற்றிருந்தனர். இவர்கள் சமுதாயத் தலைவர்களாகக் கருதப்பட்டனர். மொழிப்புலமை பெற்றிருத்தல் முடிந்தால் கவிஞராக இருப்பது தலைவருக்கு மிகவும் அவசியமாக இருந்தது. விருந்தோம்பல் அரபு மக்களிடம் உச்சகட்டத்தை எட்டி நின்றது. காட்டில் வழிதவறிய பயணி ஒருவர், ஓர் இனத்தவரிடம் வந்து நான் உங்களுடைய விருந்தாளியாக வந்துள்ளேன் எனக் கூறினால், எந்தத் தயக்கமும் காட்டாமல் ஆடுகளையோ ஒட்டகத்தையோ அறுத்து அவருக்கு விருந்தளித்து விடுவர். வந்திருக்கும் விருந்தாளியின் அந்தஸ்து என்னவென்பது குறித்து சிறிதும் அவர்கள் கவனம் செலுத்துவதில்லை. விருந்தினர் வருவதே அவர்களுக்குத் தமது சமுதாயத்தின் மதிப்பை உயர்த்தக்கூடியதா யிருந்தது. விருந்தினர்க்கு மதிப்பளித்துத் தமது மதிப்பை உயர்த்திக் கொள்வது அச்சமுதாயத்தின் கடமையாக விளங்கியது.

அவர்களின் சமுதாயங்களில் பெண்களுக்கென்று எந்த உரிமையும் இருக்கவில்லை. ஒரு தந்தை தமது பெண் குழந்தையைக் கொன்று விடுவது மதிப்பிற்குரியதாகச் சில இனத்தவரிடம் கருதப்பட்டது. அரபு நாடு முழுவதிலும் பெண் குழந்தைகளைக் கொன்றுவிடும் பழக்கமிருந்ததென்று வரலாற்றாசிரியர்கள் எழுதியிருப்பது தவறு. நாடு முழுவதிலும் இப்பழக்கம் இயல்பாக இருந்திருக்க முடியாது. ஏனென்றால் நாடு முழுவதிலும் இவ்வழக்கம் இருந்திருக்குமென்றால், அந்த நாட்டின் சந்ததியே இல்லாதொழிந்திருக்கும்.

உண்மையிலேயே அரபு நாடு, இந்தியா முதலிய நாடுகளில், இப்பழக்கம் காணப்பெற்றவிடங்களிலெல்லாம் சில குடும்பத்தினர் தங்களைச் சிறந்தவர்களாய் நினைத்துக் கொண்டு அல்லது தங்களின் பெண்களுக்குத் தங்களின் அந்தஸ்திற்கேற்ற மணமகன்கள் கிடைக்க வழியில்லையே என்ற கவலையில் பெண்களைக் கொன்று வந்தனர். இத்தீய பழக்கம் சில குடும்பத்தில் மட்டுமே இருந்தது. எல்லாச் சமுதாயங்களிலும் பெண் குழந்தைகளை அழித்து விடும் பழக்கம் இருந்ததில்லை.

அரபு மக்களின் சில சமுதாயங்களில் பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்துக் கொல்லும் பழக்கமிருந்தது. வேறு சில இனத்தவர்களில், கழுத்தை நெரித்துக் கொல்லும் வழக்கமுமிருந்தது. இவையல்லாத வேறு முறைகளிலும் பெண் குழந்தைகளை அழித்தனர்.

அரபு மக்கள் தம்மைப் பெற்றெடுத்த தாயைத் தவிர, மற்றத் தாய்களை தாய்களாகக் கருதவில்லை. அவர்களைத் திருமணம் செய்து கொள்வதில் தவறில்லை எனக் கருதினர். எனவே, தமது தந்தை மரணமடைந்த பிறகு, தமது மாற்றாந் தாய்களை அவர்கள் மணமுடித்துக் கொண்டனர்.

அங்கு பலதார மணம் பொதுவானதாக இருந்தது. ஒருவர் இத்தனை திருமணங்களைத்தான் செய்ய வேண்டுமென்ற எந்த எல்லையும் இருந்ததில்லை. ஒரே தாயிற்கு பிறந்த சகோதரிகளைக் கூட ஏக காலத்தில் திருமணம் செய்து கொள்ளும் பழக்கமிருந்தது.

போரில் கொடூரமான அநீதிகள் இழைத்தனர். அளவு கடந்த பகைமையிருப்பின் போரில் காயமடைந்தவர்களின் வயிற்றைக் கிழித்து அவர்களின் ஈரல்களைச் சுவைத்துத் துப்புவர். மூக்கு, காதுகளைத் துண்டித்து விடுவர். கண்களைத் தோண்டி எடுப்பர்.

மக்களை அடிமைகளாக்கும் பழக்கம் அதிக அளவில் இருந்தது. சுற்றுப் புறங்களிலுள்ள பலவீனமான இனத்தவர்களின் மக்களைப் பிடித்துக் கொண்டு வந்து தமக்கு அடிமைகளாக்கிக் கொண்டனர். அடிமைகளுக்கு எந்த உரிமையும் இருக்கவில்லை. அவ்வடிமைகளிடம் எஜமானர்கள் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளலாம். அந்த எஜமானர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. அடிமைகளைக் கொலையே செய்து விட்டாலும் குற்றமில்லை. ஒருவர் மற்றொருவரின் அடிமையைக் கொலை செய்தாலும் மரண தண்டனைக்கு அவர் ஆளாக்கப்படுவதில்லை. கொலை செய்யப்பட்ட அடிமையின் சொந்தக்காரருக்கு ஏதாவது ஈட்டுத்தொகை கொடுத்துவிட்டு, அக்குற்றத்திலிருந்து விடுதலை பெற்றிடுவார்.

பெண்ணடிமைகளைத் தமது இச்சைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான சாதனங்களாக ஆக்கிக் கொள்வது, எஜமானர்களின் சட்டரீதியான உரிமை என ஒப்புக் கொள்ளப்பட்டிருந்ததால் அப்பெண்ணடிமைகளுக்குப் பிறந்த குழந்தைகளும் அடிமைகளாகவே இருந்தனர். குழந்தைகள் பெற்ற பின்னரும் அப்பெண்ணடிமைகள் அடிமைகளாகவே இருந்தனர்.

நாகரிகம் மற்றும் சமுதாய முன்னேற்றத்தை பொருத்தவரை அரபு மக்கள் மிகவும் பின்தங்கியவர்களாக இருந்தனர். ஒருவருக்கொருவர் இணக்கமாகவும் இரக்கத்துடனும் நடந்து கொள்வது அவர்கள் அறியாத ஒன்றாக இருந்தது. பெண்கள் அந்தஸ்தில் மிகவும் கீழானவர்களாகக் கருதப்பட்டனர். ஆனால் மனிதனுக்கே உரிய சில குணங்களும் வீரத்திற்குரிய சில பண்புகளும் அவர்களிடம் காணப்பட்டன. இவற்றிற்கு நிகர் அக்காலத்தில் வேறெந்தச் சமுதாயங்களிலும் இல்லாத அளவிற்கு இத்தன்மைகளை பெற்றுத் திகழ்ந்தனர்.

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறப்பு

மேற்கூறப்பெற்ற சூழ்நிலையில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்தார்கள். அவர்கள் பிறப்பதற்கு முன்னரே அவர்களின் தந்தையார் ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். எனவே அவர்களையும், அவர்களின் தாயார் ஹஸ்ரத் ஆமினாவையும் அவர்களின் பாட்டனார் அப்துல் முத்தலிப் அவர்கள் தம் பொறுப்பில் வைத்துக் கவனித்து வந்தார்கள்.

அரபு மக்களின் வழக்கத்திற்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பாலூட்டுவதற்காக தாயிஃப் நகரத்தின் அருகில் வாழ்ந்து வந்த பெண்ணொருத்தியிடம் ஒப்படைக்கப்பட்டார்கள். குழந்தைகள் தூய்மையான மொழியைக் கற்றுக் கொள்வதற்காகவும், அவர்களின் உடல் நிலை ஆரோக்கியமாக அமைவதற்காகவும் அவர்களைக் கிராமப் பெண்களிடத்தில் ஒப்படைப்பது அரபு மக்களின் வழக்கம்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆறாவது வயதில் அவர்களின் தாயார் ஹஸ்ரத் ஆமினா அவர்கள் மதீனாவிலுள்ள தமது பெற்றோர்களைக் காணச் சென்றார்கள். அங்கிருந்து திரும்பி வரும்போது மக்காவிற்கும் மதீனாவிற்கும் இடையில் மரணமடைந்து விட்டார்கள். அவ்விடத்திலேயே நல்லடக்கமும் செய்யப்பட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைப் பணிப்பெண்ணொருத்தி தம்முடன் மக்காவிற்கு அழைத்து வந்து, அவர்களின் பாட்டனாரிடம் ஒப்படைத்து விட்டார். அவர்களின் எட்டாவது வயதில் அவர்களை வளர்த்து வந்த அப்பாட்டனாரும் மரணமடைந்து விட்டார்கள். அவர்களின் தந்தையின் சகோதரர் அபூதாலிப் தமது தந்தையாரின் வஸிய்யத்திற்கேற்ப (மரணசாசனத்திற்கேற்ப) அவர்களைப் பொறுப்பேற்று வளர்த்து வந்தார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அரபு நாட்டிலிருந்து வெளிநாட்டிற்கு இரண்டு அல்லது மூன்று முறை சென்றுவரும் வாய்ப்புகள் கிடைத்தன. இவற்றுள் ஒரு பயணத்தைத் தங்களின்

பன்னிரண்டாவது வயதில் தமது தந்தையின் சகோதரர் அபூதாலிபுடன் செய்தார்கள். இது வணிகத்திற்காக சிரியா நாட்டிற்குச் சென்ற பயணமாகும். அவர்கள் இப்பயணத்தில் சிரியாவின் தென் கிழக்கு வியாபார நகரங்களுக்கு மட்டுமே சென்றார்கள். இப்பயணத்தில் **பைத்துல் முகத்தஸ்** (ஜெருசலேம்) போன்ற இடங்களுக்கு சென்றதாக எந்தக் குறிப்பும் வரலாற்றில் இல்லை. இதன் பின்னர் வாலிபப் பருவம் வரை அவர்கள் மக்காவிலேயே இருந்து வந்தார்கள்.

## ‘ஹலஃபுல் ஃபுஸூல்’ மன்றத்தில் அவர்கள் உறுப்பினராதல்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிறு வயதிலிருந்தே சிந்திப்பதிலும் ஆராய்வதிலும் இயல்பாகவே ஈடுபட்டிருந்தார்கள். மக்கள் செய்து வந்த சண்டைகளிலும் குழப்பங்களிலும் அவர்கள் தலையிடாதிருந்தார்கள். எனினும் சண்டைகளையும் குழப்பங்களையும் தீர்த்து வைப்பதில் பங்கெடுத்து வந்தார்கள்.

மக்காவிலுள்ள இனத்தவர்களுக்கும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழ்ந்து வந்த இனத்தவர்களுக்குமிடையில் ஏற்பட்டுக் கொண்டிருந்த சண்டைகளினால் வெறுப்படைந்த மக்காவின் சில வாலிபர்கள், அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஹலஃபுல் ஃபுஸூல் என்ற பெயரில் ஒரு மன்றத்தை அமைத்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் மிக்க ஆர்வத்தோடு அம்மன்றத்தில் உறுப்பினராக இணைந்து கொண்டார்கள். அதன் உறுப்பினர்கள் அநீதிக்குள்ளாக்கப் பட்டவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றும், கடலில் ஒரு சொட்டுத் தண்ணீர் எஞ்சியிருக்கும் வரை அவர்களுக்கு அவர்களின் உரிமையை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்றும், தம்மால் அவ்வாறு செய்ய முடியவில்லையாயின் தம்மிடமிருந்தே அநீதிக்குள்ளாக்கப்பட்டவர்களின் உரிமையை நிறைவேற்ற வேண்டும் என்றும் சத்தியம் செய்து உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். ***(ஆதாரம் : இப்னு ஹிஷாம் தொகுதி 1 பக்கம் 36)*** இந்த உறுதிமொழிக்கு ஏற்ப செயல்படுவதற்கான வாய்ப்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர அம்மன்றத்தின் உறுப்பினர்களுள் வேறெவருக்கும் கிடைக்காமல் இருந்திருக்கலாம். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களை நபி என்று வாதித்த போது மக்காவின் தலைவனான அபூஜஹில் மற்றெல்லோரையும் விட மிகவும் அதிகமாக அவர்களை எதிர்த்து பகைமை பாராட்டினான். இவன் மற்றவர்களிடம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் எவரும் பேசவோ அவர்களுடைய போதனைகளை கேட்கவோ கூடாது என்றும், சாத்தியமான எல்லா விதத்திலும் அவர்களை அவமானப்படுத்த வேண்டுமென்றும் கூறிக் கொண்டிருந்தான்.

இவ்வேளையில்தான் அபூஜஹிலுக்கு தாம் கொடுத்திருந்த கடனை வாங்குவதற்காக ஒரு மனிதர் மக்காவிற்கு வந்து தமக்கு தரவேண்டிய கடனை அடைக்குமாறு அவனிடம் கேட்டார். அவன் அக்கடனை திருப்பிக் கொடுக்க மறுத்து விடவே இது குறித்து மக்காவிலுள்ள சிலரிடம் அம்மனிதர் முறையிட்டார். அப்போது சில வாலிபர்கள் தீய எண்ணத்தோடு அவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றால் அவர்கள் அவருக்கு இது சம்பந்தமான உதவியைச் செய்வார்கள் எனக்கூறி அவர்களின் முகவரியையும் கொடுத்தனர்.

அவ்வாலிபர்களின் நோக்கம், ‘நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கத்தினரின் பொதுவான எதிர்ப்பையும் அபூஜஹிலின் கடினமான எதிர்ப்பையும் கவனத்திற் கொண்டு அம்மனிதருக்கு உதவி செய்ய மறுத்து விடுவார்கள். இதனால் (**நவூதுபில்லாஹ்** - இறைவன் பாதுகாப்பானாக) அரபு மக்களிடம் அவர்கள் இழிவிற் குரியவர்களாகி விடுவார்கள்; அம்மன்றத்தில் எடுத்திருந்த உறுதிமொழிக்கு மாற்றம் செய்து விட்டார்கள் என்றும் தூற்றப் படுவார்கள்; அல்லது அவர்கள் அம்மனிதருக்கு உதவி செய்வதற்காக அபூஜஹிலிடம் சென்றால் அவன் அவர்களை இழிவுபடுத்தி தன் வீட்டிலிருந்து வெளியேற்றி விடுவான்’ என்பதே ஆகும்.

அம்மனிதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று அபூஜஹிலைப் பற்றி முறையிட்டபோது, அவர்கள் எத்தயக்கமுமின்றி உடனடினயாக எழுந்து, அவருடன் அபூஜஹிலின் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டினார்கள். அபூஜஹில் வீட்டிலிருந்து வெளியே வந்ததும் தனக்குக் கடன் கொடுத்தவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தனது வாசலில் நிற்பதைக் கண்டான். உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவனிடம், இம்மனிதருக்கு நீர் கொடுக்க வேண்டிய

கடனைக் கொடுத்து விடும் என்றார்கள். அபூஜஹில் எதுவும் பேசாமல் அவருக்குக் கொடுக்க வேண்டிய கடனைக் கொடுத்து விட்டான்.

இதனைக் கேள்விப்பட்ட நகரத்தலைவர்கள், அபூஜஹிலை நோக்கி, ‘முஹம்மதுவை நாங்கள் இழிவுபடுத்த வேண்டும்; அவர்களுடன் எத்தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று நீங்கள் தானே எங்களிடம் சொல்லிக் கொண்டிருந்தீர்கள்; ஆனால் அவ்வாறு சொல்லிய நீங்களே அவருடைய பேச்சை ஏற்றுக் கொண்டு அவருக்கு மரியாதையையும் அளித்து விட்டீர்களே’ என்று அவனைப் பழித்துக்கூறவே, அபூஜஹில் அவர்களிடம், ‘இறைவன்மீது ஆணையாக! என்னுடைய இடத்தில் நீங்கள் இருந்திருந்தாலும் இதையேதான் நீங்களும் செய்திருப்பீர்கள். ஏனென்றால் முஹம்மது அவர்களின் வலப்பக்கமும் இடப்பக்கமும் மதம் பிடித்த ஒட்டகங்கள் நின்று கொண்டிருந்ததையும் அவை என் கழுத்தை திருகி என்னை அழித்துவிட விரும்பியதையும் நான் கண்டேன்’ என்று கூறினான். ***(இப்னு ஹிஷாம் பாகம் 1 பக்கம் 136)***

அபூஜஹிலின் இந்த கூற்றில் உண்மை இருக்கின்றதா இல்லையா என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். உண்மையிலேயே அல்லாஹ் அவனுக்கு ஓர் அடையாளத்தைக் காட்டினானா? அல்லது உண்மையின் திகில் அவனை நிலைகுலைய வைத்ததா? என்பதை நம்மால் கூற இயலாது. அந்த நகரத்திலுள்ள அனைவராலும் வெறுக்கப்பட்டும் ஒதுக்கப்பட்டும் இருந்த ஒருவர் மிகுந்த தீரத்துடன் வெளிப்படையான எவ்வித உதவியுமின்றி தனிமையில் அந்த நகரத்தின் தலைவரிடமே சென்று பாதிக்கப் பட்டவரின் கடனை திருப்பித்தரக் கோரினார். உண்மை ஏற்படுத்திய திகிலானது அபூஜஹிலின் தீமைகளைச் செய்யும் ஆன்மாவை அழித்திருக்கலாம். மேலும் அதுவே அவனை உண்மையின் பக்கம் தலைகுனிய வைத்தது.

## ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களுடன்<br>ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் திருமணம்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இருபத்தைந்தாவது வயதில் அவர்களின் நேர்மையையும், அவர்கள் இறைவன்மீது கொண்டிருந்த அளவற்ற பற்றையும் குறித்து மக்கள் எல்லாரும் பரவலாகப் பேசினர். அவர்களைச் சுட்டிக் காட்டி, ‘இதோ உண்மை மிக்க மனிதர் சென்று கொண்டிருக்கிறார்கள்’, ‘இதோ நம்பிக்கைக்குரிய மனிதர் சென்று கொண்டிருக்கிறார்கள்’ என்று அவர்களைப் பாராட்டினர்.

இச்செய்திகள் மக்காவின் சீமாட்டியாகிய ஒரு விதவைக்கும் கிடைத்தது. அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரர் அபூதாலிபிடம் சென்று, சிரியா நாட்டின் வர்த்தகக் குழுவுடன் செல்லும் தமது வர்த்தகப் பொருட்களின் பொறுப்பை அவர்களின் சகோதரரின் மகன் முஹம்மது ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக் கூறினார்கள். அபூதாலிப் இதனை அவர்களிடம் கூறவே, அவர்களும் இதற்கு ஒப்புக் கொண்டார்கள்.

இப்பயணத்தில் அவர்களுக்கு பெரும் வெற்றி கிடைத்தது. எதிர்பார்ப்பதைவிட அதிகமான இலாபத்துடன் அவர்கள் திரும்பினார்கள். வர்த்தக சந்தைகளின் சூழ்நிலையால் மட்டுமல்லாமல், வர்த்தகக் குழு தலைவரின் நேர்மையாலும் நாணயத்தாலும்தான் இந்த இலாபம் கிடைத்திருக்கும் என ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சென்ற தமது அடிமையாகிய மைஸர் என்பவரிடம், அவர்களைப் பற்றி வினவியதற்கு அவரும் அக்கருத்தையே உறுதிப்படுத்தி, பயணத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த அளவிற்கு நாணயத்துடனும் நல்லெண்ணத்துடனும் நடந்து கொண்டார்களோ அவை அவர்களுக்கு மட்டுமே உரிய சிறப்புப் பண்புகளாகும் என்றார்.

இப்பண்புகள் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் உள்ளத்தை மிகவும் கவர்ந்தன. அப்போது அவர்களின் வயது நாற்பது; இரண்டு தடவை விதவையாகி விட்டவர்கள். இவ்வாறிருந்தும்கூட, தம்மை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருமணம் செய்து கொள்ள விரும்புவார்களா என்பதை தெரிந்து கொள்வதற்காக தமது தோழி ஒருத்தியை அவர்களிடம் அனுப்பினார்கள்.

அத்தோழி அவர்களிடம் சென்று, ‘தாங்கள் ஏன் திருமணம் செய்து கொள்ளாமல் இருக்கின்றீர்கள்?’ என்று வினவியதற்கு அன்னார் ‘திருமணம் செய்து கொள்ள என்னிடம் பொருள் வசதி இல்லை’ என்று விடையளித்தார்கள். ‘(வசதியில்லை என்ற) இந்த சிக்கல் நீங்கி, நற்பண்புகளைக் கொண்டவரும், செல்வமிக்கவரு மான ஒரு பெண்ணுடன் தங்களுக்கு திருமணம் நிகழ்ந்தால் பிறகு (என்ன சொல்கிறீர்கள்)?’என அத்தோழி கேட்டாள். ‘யார் அந்தப் பெண்?’ என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டதற்கு ‘கதீஜா’ என அவள் கூறினாள். அதற்கு அவர்கள்,‘உயர்ந்த அந்தஸ்துள்ள அப்பெண்ணை நான் எவ்வாறு திருமணம் செய்து கொள்ள இயலும்’என்று கேட்டதற்கு, ‘அது என்னுடைய பொறுப்பு’ என்றாள்அவள். ‘அப்படியாயின் எனக்கு சம்மதமே’என்றார்கள். அப்போது ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரர் மூலம் திருமணத்திற்கான முடிவை உறுதி செய்து கொண்டபிறகு அவ்விருவருக்கும் திருமணம் நிகழ்ந்தது.

ஏழையாகவும் அனாதையாகவும் இருந்த ஒரு இளைஞருக்கு இவ்வாறு செல்வத்தின் முதல் வாயில் திறந்தது. ஆனால், அவ்விளைஞர் இச்செல்வத்தை எவ்வாறு பயன்படுத்தினார்கள் என்பது முழு உலகிற்கும் படிப்பினையைக் கற்றுக் கொடுக்கும் ஒரு நிகழ்ச்சியாகும்.

## அடிமைகளின் விடுதலையும் ஸெய்து (ரலி) அவர்களும்

இத்திருமணத்திற்குப் பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துணைவியாராகிய தாம், பண வசதி நிறைந்தவராகவும் அவர்கள் தம்மீது தேவையுள்ளவர்களாகவும் இருக்கும் நிலையில் தன்மான உணர்வுமிக்க அவர்களின் உள்ளத்திற்கு சிறப்பான எந்த மகிழ்ச்சியும் கிடைக்காதென உணர்ந்து கொண்ட ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ‘என் செல்வங்களையும் அடிமைகளையும் தங்களிடம் ஒப்படைத்து விட நான் விரும்புகிறேன்’ என்றார்கள். ‘கதீஜாவே! உண்மையாகவா?’ என்று அவர்கள் வினவியதற்கு, அவர்கள் மீண்டும் அதே விருப்பத்தை தெரிவிக்கவே, ‘அவ்வாறாயின் எனது முதற்பணி அடிமைகளுக்கு சுதந்திரம் வழங்குவதேயாகும்’ எனக் கூறிவிட்டு, உடனடியாக அடிமைகளை அழைத்து, ‘நீங்கள் எல்லாரும் இன்று முதல் முழு சுதந்திரம் பெற்றவர்களாவீர்கள்’ என்றார்கள். அடுத்து, செல்வத்தின் பெரும் பகுதியினை ஏழை எளியவர்களுக்கு பகிர்ந்தளித்து விட்டார்கள்.

சுதந்திரம் பெற்ற அடிமைகளுள் ஸெய்து என்னும் பெயரைக் கொண்ட ஒருவரும் இருந்தார். இவர் மற்ற அடிமைகளை விட அறிவுமிக்கவராகவும் திறமைசாலியாகவும் இருந்தார். ஏனென்றால் இவர் மதிக்கத்தக்க ஒரு சிறப்புவாய்ந்த குடும்பத்தில் உள்ளவராவார். சிறு வயதில் இவரை வழிப்பறிக் கொள்ளையர்கள் கடத்திக் கொண்டு வந்து விட்டனர். இவர் ஒவ்வொருவரிடமாக விற்கப்பட்டு இறுதியாக மக்காவிற்கு கொண்டு வரப்பட்டார்.

இந்த இளைஞர் தமது நுட்பமான அறிவாலும் விவேகத்தாலும் சுதந்திரமான வாழ்வைவிட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அடிமையாய் இருப்பதே மிக்க சிறப்பிற்குரியதாகும் என முடிவெடுத்தார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அடிமைகளுக்கு சுதந்திரம் வழங்கியபோது, ‘தாங்கள் எனக்கு சுதந்திரம் வழங்கி உள்ளீர்கள். ஆனால், நான் தங்களுடனே வாழ விரும்புகின்றேன்’ என ஸெய்து கூறினார். பின்னர் அவர்களுடனேயே வாழ்ந்து வந்தார். அவர்களின்மீது அவர் கொண்ட அன்பும் பற்றும் நாளுக்கு நாள் வளர்ந்தது.

ஸெய்து பொருளாதார வளமுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவராய் இருந்ததால், அவருடைய தந்தையாரும் சிறிய தந்தையாரும் வழிப்பறிக் கொள்ளையர்களை பின்தொடர்ந்து விசாரித்தவர்களாய் தம் மகனைத் தேடி கண்டுபிடிக்க கிளம்பி விட்டனர். இறுதியாக, தமது மகன் மக்காவில் இருப்பதாக அவர்களுக்குத் தெரிந்ததும் மக்காவிற்கு வந்து விசாரித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து சேர்ந்தனர். அவ்விருவரும் அவர்களிடம், ‘தாங்கள் எங்கள் குழந்தைக்கு விடுதலை வழங்கி

விடுங்கள்; அதற்கு எவ்வளவு பணம் வேண்டுமாயினும் பெற்றுக் கொள்ளுங்கள்' என்று வேண்டிக் கொண்டார்கள். 'ஸெய்திற்கு நான் ஏற்கனவே விடுதலை வழங்கி விட்டேன்; அவர் மிக்க மகிழ்ச்சியோடு உங்களுடன் செல்லலாம்' என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிவிட்டு, ஸெய்தை வரவழைத்து, அவருடைய தந்தையார், சிறிய தந்தையார் ஆகிய இருவரையும் சந்திக்கச் செய்தார்கள்.

மூவரும் ஒருவரையொருவர் சந்தித்து கண்ணீர் விட்டழுது தத்தம் மனக்கவலையை தீர்த்துக் கொண்டபோது ஸெய்தின் தந்தையார் தம் மகனிடம் "சிறப்பிற்குரிய இவர்கள் உனக்கு சுதந்திரம் வழங்கி விட்டார்கள். உன் அன்னை உன் நினைவால் ஏக்கமுற்று உன்னைக் காண துடித்துக் கொண்டிருக்கின்றார். இப்போதே விரைந்து சென்று அவரது நிம்மதிக்கும் அமைதிக்கும் வகை செய்" என்றார். இதற்கு ஸெய்து, "தாயும் தந்தையும் எவருக்குத்தான் பிரியமானவர் இல்லை? என்னுள்ளத்தில் பெற்றோரின் மீதுள்ள பாசம் நிறையவேயிருக்கிறது. ஆனால் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை விட்டு நான் பிரியவே இயலாத அளவிற்கு அவர்கள் மீது நான் கொண்டுள்ள பாசம் என்னுள்ளத்தில் பதிந்து விட்டது. உங்களைச் சந்தித்ததில் எனக்கு மகிழ்ச்சியே. ஆயினும் முஹம்மது (ஸல்) அவர்களை விட்டு விடுவது என் சக்திக்கு அப்பாற்பட்டதேயாகும்" என்றார்.

ஸெய்தின் தந்தையும் தந்தையின் சகோதரரும் எவ்வளவோ வற்புறுத்தியும் அவர்களுடன் செல்ல ஸெய்து இணங்கவில்லை. ஸெய்தின் இத்தகு அன்பைக் கண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுந்து நின்று, "ஸெய்து ஏற்கனவே விடுதலை பெற்றவரே ஆவார்; ஆயினும், இன்றிலிருந்து இவர் என் மகனாவார்" என்றார்கள்.

மிகவும் வியக்கத்தகு இந்நிலைகளைக் கண்ட ஸெய்தின் தந்தையும் அவருடைய சகோதரரும் தம் ஊருக்குத் திரும்பிச் சென்று விட்டனர். ஸெய்தோ நிரந்தரமாக மக்காவிற்குரியவராகி விட்டார்.

## ஹிராக் குகையில் இறைவணக்கம்

இப்பொழுது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வயது முப்பதைவிட சற்று அதிகம். இறைவணக்கத்தின்மீதுள்ள ஆசை ஏற்கனவே அவர்களின் உள்ளத்தில் இருந்ததை விட மிக அதிகமாயிற்று. இதனால் அவர்கள் நகர மக்களின் விஷமத் தனங்கள், தீமைகள், கேடு விளைவிக்கும் நடத்தைகள் ஆகியவற்றால் வெறுப்படைந்து மக்காவிலிருந்து இரண்டு மூன்று மைல் தொலைவிலுள்ள சிறியதொரு மலை உச்சியில் அமைந்திருந்த கற்களால் கட்டப்பட்ட சிறிய குகை ஒன்றில் அமர்ந்து இறைவனை வணங்கிவரத் தொடங்கினார்கள்.

ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் சில நாட்களுக்கான உணவை தயாரித்து அவர்களுக்கு கொடுத்து வந்தார்கள். அவர்கள் அதனைப் பெற்று கற்களாலான ஹிரா குகைக்குச் சென்று அங்கு அமர்ந்து இரவு பகலாக இறைவணக்கத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

## திருக்குர்ஆனின் முதல் இறை அறிவிப்பு

முஹம்மது (ஸல்) அவர்கள் நாற்பது வயதை அடைந்த போது ஒருநாள் அதே குகையில் அவர்கள் முன் ஒருவர் - ஜிப்ரீல் என்னும் மலக்கு - தோன்றி 'படிப்பீராக' என்று சொல்வதை கஷ்ஃப் என்னும் ஆன்மீகக் காட்சியின் மூலம் கண்டார்கள். இதற்கு அவர்கள், 'எனக்குப் படிக்கத் தெரியாதே' என பதிலளித்ததும், அவர் இரண்டாவது மூன்றாவது தடவையும், 'படிப்பீராக' என்று சொல்லிவிட்டு ஐந்து வசனங்களை அவர்களைச் சொல்லுமாறு செய்தார். அவ்வசனங்களாவன:

***இக்ர∴ பிஸ்மி ரப்பிகல்லதீ கலக்; கலகல் இன்ஸான மின் அலக்; இக்ர∴ வரப்புகல் அக்ரம்; அல்லதீ அல்லம பில் கலம்; அல்லமல் இன்ஸான மாலம் யஃலம்.*** (96:2-6)

இத்திருவசனங்களே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருளப்பெற்ற திருக்குர்ஆனின் முதல் வஹீ (இறை அறிவிப்பு) ஆகும். இதன் கருத்தாவது, உம்மையும் மற்றெல்லா படைப்பையும் படைத்த உம்முடைய இறைவனின் பெயரால் முழு உலகிற்கும் படித்துக் காட்டி ஆத்மீகத் தூதுச் செய்தியை அறிவிப்பீராக. இறைவனையும் அவன் படைப்புகளையும் நேசிக்கும் தன்மை

மனிதனின் உள்ளத்தில் இருக்குமாறு அவ்விறைவன் அவனைப் படைத்தான். ஆம், மற்றெல்லாரையும் விட மிகுந்த கண்ணியத்திற்குரிய உம்முடைய இறைவன் உம்முடனிருப்பான் என்ற தூதையும் உலகிற்கெல்லாம் அறிவிப்பீராக. அவனே உலகிற்கு கல்விகளை கற்றுக் கொடுப்பதற்கு எழுதுகோலைப் படைத்தான். இதற்கு முன் தெரியாதவற்றையெல்லாம் மனிதனுக்கு கற்றுக் கொடுப்பதற்காக அவன் ஆயத்தமாகி விட்டான்.

இந்த சில சொற்கள், இனிமேல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருளுப்படவிருந்த திருக்குர்ஆனின் போதனைகள் அனைத்தையும் உள்ளடக்கியவையாகும். இச்சொற்களினுள் உலகின் சீர்திருத்ததத்திற்குரிய மிக முக்கியமான விதைகள் விதைக்கப்பட்டு விட்டன. இவற்றிற்குரிய விரிவுரை திருக்குர்ஆனில் உரியவிடங்களில் வரையப்படும். இவ்விடத்தில் இவ்வசனங்களைக் கூறியதன் காரணம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வில் அந்த நிகழ்ச்சி மிகவும் முக்கியத்துவம் பெற்றதாகும். இவ்வசனங்கள் திருக்குர்ஆனிற்கு ஓர் அடிக்கல்லாக இருக்கின்றன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இவ்வசனங்கள் அருளப்பட்டதும் இறைவன் தம்மீது சுமத்திய இவ்வளவு பெரிய பொறுப்பினை தம்மால் நிறைவேற்ற முடியுமா என்ற அச்சம் அவர்களின் உள்ளத்தில் எழுந்தது. அதே சமயத்தில் வேறொருவராக இருந்தால், எல்லாம் வல்ல இறைவன் தம்மிடம் ஒரு பணியினை ஒப்படைத்து விட்டான் என்ற பெருமையால் அவரது புத்தி பேதலித்துவிட்டிருக்கும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ பணியாற்றத் தெரிந்திருந்தார்கள். ஆனால் அப்பணி தமக்கு தரப்பட்டது குறித்து கர்வம் கொள்ளாதவர்களாக இருந்தார்கள்.

அந்த இறையறிவிப்பிற்குப் பிறகு அவர்கள் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களிடம் சென்றார்கள். அவர்களின் முகம் வாடி இருந்தது. முகத்தில் பதற்றத்தின் அறிகுறிகள் தென்பட்டன. 'தங்களுக்கு என்ன நேர்ந்தது?' என ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் விசாரிக்கவே, நடந்த நிகழ்ச்சி முழுவதையும் கூறிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'என்போன்ற பலவீனமான மனிதனால் இச்சுமையை எவ்வாறு சுமக்க முடியும்?' என்றார்கள். இதற்கு ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள், ***'கல்லா வல்லாஹி மாயுக்ஸீ கல்லாஹுஒ அபதா இன்னக ஸதஸிலுர் ரிஹ்ம வதஹ்மிலுள் கல்ல வதக்ஸில் ம:.தூம வதக்ரில் லை:.ப வதுயீனு அலா நவாயிபில் ஹக்கி'***

"இறைவன் மீது ஆணையாக! அவன் தங்களுக்கு இவ்வசனங்களை அருளியதன் நோக்கம் தாங்கள் தோல்வியுற்றவர் களாகவும், தங்களின் குறிக்கோளில் தாங்கள் வெற்றி பெறாதவர் களாகவும் ஆகி விட வேண்டும் என்பதற்கன்று. மேலும் இறைவன் உங்களுடன் இருப்பதை கைவிடுவதற்கும் அன்று. அவன் ஒருபோதும் அவ்வாறு செய்ய மாட்டான். தாங்களோ உயர்ந்த பண்புகளைப் பெற்றுத் திகழ்கின்றீர்கள். உறவினர்களுடன் இனிமையாக நடந்து கொள்கின்றீர்கள். உதவியற்றவர்களின் சுமையை சுமக்கின்றீர்கள். நாட்டிலிருந்து அழிந்து விட்ட நற்பண்புகளெல்லாம் தங்களின் மூலம் மீண்டும் நிலைநாட்டப் படுகின்றன. விருந்தோம்பல் செய்கின்றீர்கள். உண்மையான துன்பத்திற்குள்ளான மக்களுக்கு உதவி செய்கிறீர்கள். இவ்வாறான உயர்ந்த பண்புகளைக் கொண்ட மனிதனை இறைவன், சோதனைக் காளாக்கி விடுவானா?" என்றார்கள். *(புகாரி)*

பின்னர் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை, கிறித்தவராக மாறிவிட்ட தமது ஒன்றுவிட்ட சகோதரர் வரக்கா பின் நவ்:.பல் என்பவரிடம் அழைத்துச் சென்றார்கள். அவர் அந்த நிகழ்ச்சியைக் கேட்டதும், 'தங்களுக்கு காட்சியளித்த அந்த மலக்கு மூஸா நபி (அலை) அவர்களுக்கு காட்சியளித்த மலக்கே ஆவார்' என்று தம்மை அறியாமலேயே கூறிவிட்டார்.

*(புகாரி அதிகாரம் இறை அறிவிப்பின் ஆரம்பம்)*

அதாவது, உபாகமம், அதிகாரம் 18, வசனம் 18ல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி முன்னறிவிக்கப் பட்டிருந்ததை அவர் சுட்டிக் காட்டினார்.

மேற்கூறப்பட்ட நிகழ்ச்சி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் விடுதலை அளிக்கப்பட்ட அடிமையாகிய, ஏறத்தாழ முப்பது வயதுடைய ஹஸ்ரத் ஸெய்த் (ரலி) அவர்களுக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரரின் மகனும் பதினொரு வயது

நிரம்பப் பெற்றவருமான ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கும் தெரிய வந்தது. இவர்கள் இருவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின்மீது நம்பிக்கை கொண்டனர்.

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் நம்பிக்கை கொள்ளுதல்

சிறு வயதிலிருந்தே அவர்களின் நண்பராகத் திகழ்ந்த ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் அந்நிகழ்ச்சி நடந்தபோது வெளியூரில் இருந்தார்கள். அங்கிருந்து ஊருக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கும்போதே, 'உங்கள் நண்பருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. வானத்திலிருந்து மலக்குகள் இறங்கி தம்முடன் உரையாடுவதாக அவர் சொல்கிறார்' என்று மக்கள் அவர்களிடம் கூறினர். இதனைச் செவியுற்ற ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் நேரடியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டினார்கள். அவர்கள் கதவைத் திறந்ததும், நிகழ்ந்தவற்றை குறித்து அவர்களிடம் வினவினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களின் சிறு வயதிலிருந்தே நண்பராக விளங்கும் அபூபக்கர் அவர்களை தவறான எண்ணத்திலிருந்து காப்பாற்றுவதற்காக சிறிது விளக்கம் தர விரும்பினார்கள். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களோ, அவர்களைப் பேச விடாமல் தடுத்து, "இறைவனுடைய மலக்குகள் தங்களிடம் வந்ததாகவும் அவர்கள் தங்களுடன் உரையாடு வதாகவும் தாங்கள் அறிவித்தீர்களா என்பதற்கு மட்டும் தயவுசெய்து பதில் தந்தால் போதுமானது" என்றார்கள். இதற்கு அவர்கள் மீண்டும் விளக்கமளிக்க விரும்பினார்கள். ஆனால் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் சத்தியம் செய்து, "என் கேள்விக்கு மட்டும் பதில் சொல்லுங்கள். வேறொன்றும் சொல்ல வேண்டாம்" என்று கேட்டுக் கொள்ளவே, "ஆம்" என்று பதிலளித்தார்கள்.

இப்பதிலைக் கேட்டவுடனேயே ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், "நான் தங்களின் மீது நம்பிக்கை கொள்கிறேன். இதற்கு தாங்களே சாட்சி" என்று கூறிவிட்டு, "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் சாட்சிகள் காட்டி என் நம்பிக்கையை பலவீனமாக்கவிருந்தீர்கள். தங்களின் வாழ்க்கையைப் பற்றி தெரிந்த ஒருவருக்கு தங்களின் உண்மைக்கு வேறு சான்று தேவைதானா?" என்றார்கள்.

## நம்பிக்கைக் கொண்டவர்களின் சிறிய ஜமாஅத்

மிக சிலரைக் கொண்ட ஜமாஅத் ஒன்று உருவாயிற்று. இதன் மூலம் இஸ்லாத்தின் அடிப்படை நாட்டப்பெற்றது. இந்த ஜமாஅத்தில் அங்கம் வகித்தவர்கள்,

1) முதிய வயதடைந்த ஒரு பெண்.
2) பதினொரு வயதைக் கொண்ட ஒரு சிறுவர்.
3) தம் சொந்த ஊரைவிட்டு அந்நியர்களிடையில் வாழ்ந்து கொண்டிருந்தவரும் தமக்கு உதவி செய்யும் உறவினர் எவரும் இல்லாதவரும் அடிமையாயிருந்து விடுதலை பெற்றவருமான ஒரு வாலிபர்.
4) நண்பர் ஒருவர்.
5) தமக்கு இறைஅறிவிப்பு வருகிறது என்று வாதிக்கும் ஒருவர்.

இவர்களே முழு உலகிலும் இறைவனின் ஒளியினை ஏற்றி வைப்பதற்காக நிராகரித்தல், வழிதவறிச் செல்லல் ஆகிய களங்களை நோக்கி புறப்பட்ட குழுவினர் ஆவர். இவர்கள் எடுத்துரைத்த செய்திகளைக் கேட்ட மக்கள் ஏளனமாக சிரிக்கத் தொடங்கினர். தம் பார்வைகளாலேயே ஒருவருக்கொருவர், அக்குழுவினரைக் குறித்து இவர்களுக்கு பைத்தியம் பிடித்து விட்டது என்று ஜாடை காட்டினர். இவர்களின் பேச்சைக் கேட்டு வியப்படைய வேண்டாம். அவற்றைக் கேட்டு இன்புறுங்கள் என்று ஏளனத்துடன் பேசினர்.

ஆயினும், உண்மை தனது முழு கம்பீரத்துடன் வெளிப்படத் தொடங்கிற்று. 'கற்பனையின்மேல் கற்பனையும், கற்பனையின் மேல் கற்பனையும், பிரமாணத்தின்மேல்

பிரமாணமும், பிரமாணத்தின் மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாக இருக்கும்' என்ற ஏசாயா நபியின் முன்னறிவிப்பிற் கேற்ப *(ஏசாயா அதிகாரம் 28, வசனம் 13)* நிகழ்ந்து கொண்டிருந்தது. இதற்கு முன் அரபு மக்கள் அறியாதிருந்த செய்திகளெல்லாம் அருளப்பட்டன. இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மூலம் அரபு மக்களிடம் பேசத் தொடங்கினான். இளைஞர்களின் உள்ளங்களிலும் உண்மையைத் தேடுபவர்களின் உடல்களிலும் நடுக்கம் உண்டாயிற்று. சிரிப்பும் நகைப்பும் பரிகாசமும் செய்து கொண்டிருந்த இவர்களின் குரல்களில் விருப்பங்களும் பாராட்டுச் சொற்களும் சிறுகச் சிறுக மேலோங்கத் தொடங்கிற்று. அடிமைகள், இளைஞர்கள், அநீதிக்குள்ளான பெண்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு கூட்டம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி குழுமத் தொடங்கிற்று. ஏனென்றால் அவர்களின் போதனைகளில் பெண்கள் தங்கள் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை பார்த்துக் கொண்டிருந்தனர். அடிமைகள் தங்கள் விடுதலை பெறும் அறிவிப்பை செவியேற்றுக் கொண்டிருந்தனர். இளைஞர்கள் மாபெரும் இலட்சியங்களை அடைந்திடும் வழிகளும், மாபெரும் முன்னேற்றங்களின் வழிகளும் திறந்து கொண்டிருப்பதை உணர்ந்து கொண்டிருந்தனர்.

## மக்கா தலைவர்களின் எதிர்ப்பு

சிரித்து நகைத்த குரல்களிலிருந்து விருப்பம் தெரிவிக்கும் ஒலிகளும் பாராட்டுரைகள் வழங்கும் குரல்களும் உயர்ந்து வரத் தொடங்கியதும் மக்காவின் தலைவர்கள் பதற்றம் அடைந்தனர். அதிகாரிகளின் உள்ளத்தில் அச்சம் ஏற்பட்டது. இதனால் அவர்கள் எல்லாம் ஒன்றுகூடி கலந்தாலோசனை செய்து சதித்திட்டங்கள் தீட்டினர். சிரித்து நகைத்து ஏளனம் செய்ததற்குப் பதில் இனி அநீதி, கடினம், தொடர்பைத் துண்டித்துக் கொள்ளுதல் ஆகியவற்றை நடைமுறைக்கு கொண்டு வரலாம் என்று முடிவெடுத்து அவற்றின்படி செயல்படத் தொடங்கினர்.

மக்கத்தினர் இப்போது இஸ்லாத்துடன் தீவிரமாக மோத முடிவு கட்டி விட்டனர். இப்போது அவர்களின் எண்ணத்தின்படி பைத்தியக்காரத்தனமான அந்த வாதம் முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கும் ஓர் உண்மையாகத் தென்படத் தொடங்கியது. மக்காவின் அரசியலுக்கு ஆபத்து வரப்போவதாகவும் மக்காவின் மதத்திற்கு ஆபத்து வரப்போவதாகவும் மக்காவின் நாகரிகத்திற்கு ஆபத்து நிகழப்போவதாகவும் மக்காவின் சடங்கு சம்பிரதாயங் களுக்கு ஆபத்து நேரிடப்போவதாகவும் அது காட்சியளித்துக் கொண்டிருந்தது.

ஒரு புதிய வானத்தையும் ஒரு புதிய பூமியையும் இஸ்லாம் தோற்றுவிப்பதாகத் தென்பட்டது. இந்த புதிய வானமும் புதிய பூமியும் தோன்றி விடுமாயின், அரபு நாட்டின் பழைய வானமும் பழைய பூமியும் நிலைத்திருக்க முடியாததாகி விடும்.

இப்போது மக்கத்தினருக்கு இந்தப் பிரச்சனை ஏளனம் செய்து நகைக்கும் பிரச்சனையாகத் தோன்றவில்லை. வாழ்வா? சாவா? என்ற பிரச்சனையைத் தோற்றுவித்து விட்டது. அவர்கள் இஸ்லாத்தின் சவாலை ஏற்றுக் கொண்டனர். இதற்கு முன் தோன்றிய இறைத்தூதர்களின் விரோதிகள் இறைத்தூதர்களின் சவாலை ஏற்றுக் கொண்ட அந்த உணர்வுடனே இவர்களும் சவாலை ஏற்றனர்.

சான்றுக்குப் பதில் சான்று காட்டாமல், வாளாலும் அம்புகளாலும் பதில்தர அவர்கள் முனைந்து விட்டனர். இஸ்லாத்தின் நல்லெண்ணத்திற்கும் உயர்ந்த பண்புகளுக்கும் உரிய பதிலை அவற்றைப்போன்ற உயர்ந்த பண்புகளால் தராமல், ஏசிப்பேசுவதாலும் தீய வார்த்தைகளாலும் பதில்தர அவர்கள் தீர்மானம் செய்து விட்டனர்.

மீண்டும் ஒருமுறை உலகில் நிராகரிப்பிற்கும் இஸ்லாத்திற்கும் இடையில் போர் தொடங்கிற்று. மீண்டும் ஒருமுறை ஷய்த்தான்களின் படைகள் மலக்குகளின்மீது தாக்குதல் தொடுத்தனர். விரல்விட்டு எண்ணும் அளவில் இருந்த இந்த மனிதர்களின் சக்திதான் என்ன? இவர்களால் மக்கத்தினரை எதிர்த்து நிற்கத்தான் முடியுமா?

பெண்கள் வெட்கக்கேடான முறைகளால் கொலை செய்யப் பட்டனர். ஆண்கள் கால்களை விடார்ந்து கொடூரமாகக் கொல்லப் பட்டனர். அடிமைகளின் தோல்கள் பிராணிகளின் தோல்கள்

போன்று ஆகி விடும் அளவுக்கு அவ்வடிமைகள் சூடு மணலிலும் சுரசுரப்பான கற்களிலும் இழுத்துச் செல்லப்பட்டு சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டனர். சிறிது காலத்திற்குப் பிறகு இஸ்லாத்திற்கு வெற்றி கிடைத்தது. இஸ்லாத்தின்கொடி கீழ்த்திசைகளிலும் மேல் திசைகளிலும் பட்டொளி வீசி பறந்துகொண்டிருந்த காலம் அது. ஒரு தடவை ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை தழுவிய ஓர் அடிமை கப்பாப் பின் அல் அராத் (ரலி) அவர்களின் முதுகு வெளியே தெரிந்து விட்டது. அவர்களது முதுகின் தோல் மனிதர்களின் தோல் போன்று இல்லாமல் மிருகங்களின் தோல்போன்றிருந்ததைக் கண்ட அவர்களின் நண்பர்கள் அதிர்ச்சியடைந்து, 'தங்களுக்கு இது என்ன வியாதி?'என்று வினவியதற்கு, அவர்கள் சிரித்து விட்டு,"இது வியாதியன்று. இஸ்லாத்தை ஆரம்ப நாட்களில் ஏற்றுக்கொண்ட நினைவுத்தழும்பு ஆகும். புதிதாக இஸ்லாத்தை தழுவிய அடிமைகளாயிருந்த எங்களை மக்காவின் வீதிகளில் கடினமான சொரசொரப்புள்ள கற்களின்மீது அரபு மக்கள் இழுத்துச் சென்று சித்ரவதை செய்தனர். எங்களின் மீதுஇத்தகு அநீதிகள் தொடர்ந்து இழைக்கப்பட்டு வந்தன. அதன் விளைவாகவே என் முதுகுத் தோல் இப்படி ஆகி விட்டது" என்றார்கள்.

## நம்பிக்கைக் கொண்ட அடிமைகளுக்கு நிராகரிப்போர் இழைத்த கொடுமைகள்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்ட இந்த அடிமைகள் பல்வேறு சமுதாயங்களைச் சேர்ந்தவர்களாவர். இவர்களுள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் அபீஸீனியாவைச் சேர்ந்தவராவார்கள். ஹஸ்ரத் ஸுஹைப் (ரலி) அவர்கள் ரோமாபுரியைச் சேர்ந்தவராவார். ஹஸ்ரத் ஜுபைர் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் ஸுஹைப் (ரலி) அவர்களும் கிறித்தவ மதத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தனர். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் அம்மார் (ரலி) அவர்களும் இறைவனுக்கு இணை வைக்கின்ற இனத்தைச் சார்ந்தவர்களாக இருந்தனர்.

அபீஸீனிய இனத்தைச் சேர்ந்த ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் மக்காவின் தலைவர்களுள் ஒருவனான உமய்யா பின் கலஃப் என்பவனுக்கு அடிமையாயிருந்தார்கள். உமய்யா என்பவன் அவர்களை கோடைக்கால நடுப்பகல் வேளையில் மக்காவிற்கு வெளியே அழைத்துச் சென்று வெற்றுடம்போடு சுட்டெரிக்கும் மணலில் கிடத்தி பெரும் பெரும் கற்களை அவர்களின் நெஞ்சின்மீது வைத்து விட்டு அவர்களிடம் ,'லாத், உஸ்ஸா ஆகிய இரு சிலைகளை கடவுளாக ஏற்றுக் கொண்டு முஹம்மதுவை விட்டும் நீ விலகி விட்டதாக பகிரங்கமாக அறிவித்து விடு' என்று சொல்லி வந்தான். இதற்குப் பதில், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் 'அஹத், அஹத் இறைவன் ஒருவனேயாவான். இறைவன் ஒருவனேயாவான்' என்றே சொன்னார்கள். மீண்டும் மீண்டும் அவர்களிடமிருந்து இதே பதிலைக்கேட்ட உமய்யாவுக்கு மிகுந்த கோபம் வந்தது. இதனால் அவன் அவர்களின் கழுத்தில் கயிற்றைக் கட்டி துஷ்டர்களிடம் ஒப்படைத்து, அவர்களை மக்காவின் வீதிகளிலுள்ள கற்களின்மீது இழுத்துக் கொண்டு செல்லுமாறு கூறினான். இத்தகு சித்திரவதையின் காரணமாக அவர்களின் உடல் இரத்தத்தால் நனைந்தது. அப்படியிருந்தும் 'அஹத் அஹத் இறைவன் ஒருவனே, இறைவன் ஒருவனே'என்றுதான் அவர்கள் கூறிக்கொண்டிருந்தார்கள்.

சிறிது காலத்திற்குப் பிறகு இறைவன் முஸ்லிம்களுக்கு மதீனாவில் அமைதியினை வழங்கிய வேளையில் சுதந்திரமாக இறைவனை வணங்கும் சூழ்நிலை அவர்களுக்குக் கிடைத்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் பிலால் அவர்களை அதான் (பாங்கு - தொழுகைக்காக அழைத்தல்) கூறும் பணியை நியமித்தார்கள்.

அபீஸீனியாவைச் சேர்ந்த இவர்கள் அதான் சொல்லும் போது '*அஷ்ஹது*' என்பதற்குப் பதிலாக 'அஸ்ஹது' என்று கூறுவார்கள். இப்படிக் கூறுவதைச் செவியுற்ற மதீனாவில் உள்ளவர்கள் அவர்களின் மேன்மையை தெரியாதிருந்ததால் சிரிப்பார்கள்.

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் பாங்கு கூறுவதைக் கண்டு சிலர் சிரிப்பதைப் பார்த்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அம்மக்களை,"நீங்கள் பிலால் (ரலி) அவர்கள் சொல்லும் அதானைக் கேட்டு சிரிக்கின்றீர்கள். ஆனால் இறைவனோ அர்ஷின் (அரியணையின்) மீது அமர்ந்து அவர்களின் அதான் ஓசையினைக் கேட்டு இன்புறுகின்றான்" என்றார்கள்.

இதன் மூலம் அவர்கள் சுட்டிக் காட்டிய கருத்தாவது அவர்களால் 'ஷ' என்ற எழுத்தை உச்சரிக்க இயலவில்லை என்பதுதான் உங்களுக்குத் தெரிகிறது. இந்த 'ஷ' என்பதிலும் 'ஸ' என்பதிலும் என்ன வேற்றுமை இருக்கின்றது? அவர்கள் சுட்டெரிக்கும் மணலில் வெற்று மேனியுடன் கிடத்தப்பட்டார்கள். துஷ்டர்கள் தமது செருப்புக் கால்களுடன் அவர்களுடைய நெஞ்சின்மீது ஏறி நின்று குதித்தார்கள். 'இப்போதாவது உனக்கு அறிவு வந்ததா? இல்லையா?' என்று கேட்டபோதெல்லாம் அவர்கள் தமது அரைகுறையான மொழியில் 'அஹத் அஹத் - இறைவன் ஒருவனே', என்று கூறி ஏகத்துவத்தைப் பறைசாற்றிக் கொண்டும் தமது பற்று தமது ஏகத்துவக் கொள்கை, தமது மன உறுதி ஆகியவற்றை நிரூபித்துக் கொண்டும் இருந்தார்கள். எனவே அவர்களுடைய 'அஸ்ஹது' என்பது மற்றெல்லாரின் 'அஷ்ஹது' என்பதை விட மிக உயர்ந்ததும் விலை மதிப்பற்றதுமாகும்.

அவர்களுக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதியினைக் கண்ட ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் அவர்களின் எஜமானுக்கு ஈட்டுத் தொகையைக் கொடுத்து அவர்களுக்கு விடுதலை வழங்கச் செய்தார்கள்.

இவ்வாறே மேலும் அதிகமான அடிமைகளுக்கு ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் தங்களின் சொந்த பணத்தால் விடுதலை வழங்கச் செய்தார்கள். இவ்வடிமைகளுள் ஸுஹைப் (ரலி) அவர்கள் பணவசதி படைத்தவர்களாய் இருந்தார்கள். இவர்கள் வாணிபம் செய்து வந்தார்கள். மக்காவின் வசதி படைத்தவர்களுள் ஒருவராகக் கருதப்பட்டார்கள். இவர்கள் பொருள் வசதி படைத்தவராகவும் விடுதலை பெற்றவராகவும் இருந்தும் மக்காவின் குரைஷிக் கோத்திரத்தினர் இவர்களை அடித்தடித்து உணர்விழந்து போகுமாறு செய்து விடுவர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து இடம்பெயர்ந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்ற பிறகு, ஸுஹைப் (ரலி) அவர்களும் ஹிஜ்ரத் செய்து மதீனாவிற்கு செல்ல விரும்பினார்கள். ஆயினும், மக்கத்தினரோ அவர்களைத் தடுத்து நிறுத்தி 'நீங்கள் மக்காவில் சம்பாதித்த செல்வத்தை மக்காவிற்கு வெளியே எவ்வாறு கொண்டு செல்லவியலும்? நீங்கள் மக்காவிலிருந்து வெளியேற நாங்கள் விடமாட்டோம்' என்றனர். இதற்கு ஸுஹைப் (ரலி) அவர்கள், 'இந்த செல்வம் எல்லாவற்றையும் நான் இங்கு விட்டு விட்டால், நீங்கள் என்னை இங்கிருந்து வெளியேற விடுவீர்களா?' என்று வினவியபோது, இதற்கு அவர்கள் சம்மதித்ததும் அவர்கள், தங்களின் எல்லா செல்வங்களையும் மக்கத்தினரிடம் ஒப்படைத்து விட்டு, வெறுங்கையுடன் மதீனாவுக்கு சென்று விட்டார்கள். அங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றதும் "ஸுஹைப் (ரலி) அவர்களே! உங்களுடைய இந்த வணிகம் இதற்கு முன்னுள்ள எல்லா வணிகங்களையும்விட பயன்மிக்கதாகும். அதாவது இதற்கு முன் நீங்கள் பொருள்களுக்குப் பதிலாக பணம் சம்பாதித்தீர்கள். ஆனால் இப்போதோ பணத்திற்குப் பதிலாக ஈமானை (நம்பிக்கையை) சம்பாதித்துள்ளீர்கள்" என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இவ்வடிமைகளுள் பெரும்பாலானவர்கள் உள்ளும் புறமும் உறுதியாக நிலைத்து நின்றனர். எனினும் சிலரிடம் வெளிப்படையாக சில குறைபாடுகளும் காணப்பட்டன.

எடுத்துக்காட்டாக, ஒரு தடவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மார் என்ற பெயர் கொண்ட அடிமையை கடந்து சென்றபோது அவர் தேம்பித் தேம்பி அழுது தமது கண்களிலிருந்து வடிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டிருந்தைக் கண்டு 'அம்மார்! என்ன நிகழ்ந்தது?' என்று வினவியதற்கு, 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனது நிலை மிகவும் மோசமானது. உங்களுக்கு எதிராகவும் தேவதைகளுக்கு சாதகமானதுமான வார்த்தைகளை என் வாயிலிருந்து வெளியாகும் வரை அவர்கள் என்னை தொடர்ந்து அடித்துக் கொண்டும், தொல்லைகளுக்கு ஆளாக்கிக் கொண்டுமே இருந்தனர்' என்று அம்மார் கூறினார். ஆனால் நீங்கள் உங்கள் உள்ளத்தில் கொண்டிருந்த உணர்வு என்னவென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வினவியதற்கு, 'உள்ளத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை இருந்ததையே நான் உணர்ந்தேன்' என்றார் அம்மார். 'உள்ளம் ஈமானால் அமைதி கொண்டிருந்த தெனில் உங்கள் பலவீனத்தை இறைவன் பொறுத்தருள்வான்' என்றார்கள்.

அவர்களுடைய தந்தையார் யாஸிர் (ரலி) அவர்களுக்கும் அவர்களுடைய தாயார் ஸுமய்யா (ரலி) அவர்களுக்கும் நிராகரிப்போர் மிகுந்த தொல்லைகளைக் கொடுத்தனர். ஒரு தடவை இவ்விருவரையும் அவர்கள் துன்புறுத்திக் கொண்டிருந்த போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவர்களைக் கடந்து செல்ல நேர்ந்தது. அப்போது இவர்கள் படும் துன்பங்களைக் கண்டு மிகவும் வருந்தி "யாஸிரின் குடும்பத்தினரே! பொறுமையை மேற்கொள்க. இறைவன் உங்களுக்காக சொர்க்கத்தை ஆயத்தமாக்கி வைத்துள்ளான்" என்றார்கள். ***(இப்னு ஹிஷாம் தொகுதி 1 பக்கம் 110).*** இந்த முன்னறிவிப்பு சில நாட்களிலேயே நிறைவேறிற்று.

ஏனென்றால் யாஸிர் (ரலி) அவர்கள் தொடர்ந்து அடிக்கப்பட்டதால் இறந்து போனார்கள். இவ்வாறு மரணம் அடைந்தும் அந்த நிராகரிப்போருக்கு திருப்தி வரவில்லை. வயது முதிர்ந்த இவர்களின் மனைவி ஸுமய்யா (ரலி) அவர்களின்மீது தொடர்ந்து அநீதி இழைத்துக் கொண்டேயிருந்தனர்.

அபூஜஹில் என்பவன் ஒருநாள் கோபமடைந்து அந்த அம்மையாரின் தொடையின்மீது வேகமாக ஈட்டியைப் பாய்ச்சினான். அது தொடையை துளைத்துக் கொண்டு அவர்களின் வயிற்றில் புகுந்து விட்டது. இதனால் அவர்கள் இறந்தார்கள்.

நபீரா (ரலி) அவர்கள் ஒரு அடிமைப்பெண். அபூஜஹில் இவர்களை அதிகமாக அடித்ததால், இவர்களின் கண்கள் குருடாயின.

அபூஃபகீஹா (ரலி) அவர்கள் ஸஃப்வான் பின் உமய்யா என்பவனுக்கு அடிமையாய் இருந்தார்கள். அவனும் அவனுடைய குடும்பத்தினரும் சுட்டெரித்துக் கொண்டிருக்கும் மணலில் கிடத்தி இவர்களின் நாவு வெளியே வந்துவிடும் அளவிற்கு பெரும் பெரும் சூடான கற்களை அவர்களின் மார்பு மீது வைத்து விடுவார்கள். இவை போன்ற நிலைமைகளே மற்ற அடிமைகளுக்கும் ஏற்பட்டன.

ஐயத்திற்கிடமின்றி இத்தகு அநீதிகள் மனித சக்திக்கு அப்பாற்பட்டவையே. ஆயினும் இத்தகு அநீதிகளுக்கு ஆளானவர்கள் வெளிப்படையில் மனிதர்களாகவும் உள்ளத்தால் வானவர் களாகவும் இருந்தனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளத்திலும் செவிகளிலும் மட்டும் திருக்குர்ஆன் அருளப்பட்டுக் கொண்டிருக்க வில்லை. இஸ்லாத்தைத் தழுவிய அம்மக்களின் உள்ளங்களிலும் இறைவன் உரையாடிக் கொண்டிருந்தான். ஒரு மதத்தை முதன் முதலில் ஏற்றுக்கொண்டவர்களின் உள்ளங்களிலிருந்து இறைவனுடைய குரல் உயர்ந்தோங்காதவரை எந்த மார்க்கமும் நிலைத்து நிற்க முடியாது.

முதலில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களை மற்ற மக்கள் கைவிட்டு விட்டனர். குடும்பத்தினரோ அவர்களிடமிருந்து முகந்திருப்பிக் கொண்டனர். இவ்வாறான சமயத்தில் இறைவன் அவர்களின் உள்ளத்தில், "நான் உங்களுடன் இருக்கிறேன். நான் உங்களுடன் இருக்கிறேன்" என்று கூறினான்.

இதனால் அத்துன்பங்கள் எல்லாம் அவர்களுக்கு இன்பங் களாகவே இருந்தன. திட்டிப்பேசிய ஏச்சுக்களெல்லாம் துஆக்கள் போன்று காணப்பட்டன. கற்களெல்லாம் காயங்களுக்குரிய மருந்தாகிய களிம்பின் இடத்தை வகித்தன. எதிர்ப்புகள் அதிகமாகிய அவ்வேளையில் நம்பிக்கையும் அதிகரித்துக் கொண்டே சென்றது. அநீதிகள் அளவுகடந்து சென்ற அதே வேளையில், மாசற்ற பற்று சென்றகால எல்லைகள் அனைத்தையும் தாண்டிச் சென்றது.

## சுதந்திர முஸ்லிம்களின்மீது இழைக்கப்பட்ட அநீதிகள்

சுதந்திர முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளும் குறைந்தவையல்ல. இந்த முஸ்லிம்களின் குடும்பப் பெரியார்களும் இவர்களுக்குப் பல்வேறு தொல்லைகளைக் கொடுத்து வந்தனர்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு ஏறத்தாழ நாற்பது வயது; பண வசதிபடைத்தவர்கள். இவ்வாறிருந்தும், குரைஷியர்கள் இவர்களுக்கு அநீதியிழைக்க முடிவெடுத்தபோது, இவர்களின் சிறிய தந்தை ஹகம் என்பவர் இவர்களைக் கயிற்றால் கட்டி கடுமையாக அடித்துள்ளார்!

ஸுபைரிப்னுல் அவ்வாம் (ரலி) அவர்கள் மிகவும் வீரமிக்க ஒரு இளைஞர். இஸ்லாத்திற்கு வெற்றிகள் கிடைத்து வந்த காலத்தில் இவர்கள் ஒப்பற்ற தளபதியாய்த் திகழ்ந்தார்கள். இவர்களின் சிறிய தந்தையும் இவர்களுக்கு மிக்க அதிகமான தொல்லைகளைக் கொடுத்து வந்தார். இவர்களை ஒரு பாயில் சுருட்டி கீழிருந்து மூச்சுத் திணறும் வகையில் புகையை மூட்டி விட்டு, ‘இப்போதாவது இஸ்லாத்திலிருந்து விலகுகின்றாயா? இல்லையா?’ என்று கேட்பார். இவர்களோ அக்கொடுமைகளை சகித்துக் கொண்டு, ‘நான் உண்மையினை தெரிந்து கொண்ட பிறகு அதனை என்னால் மறுக்க இயலாது’என்றே பதிலளித்தார்கள்.

ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்கள் *க:ப்பார்* என்ற கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள், மக்காவில் ஒருவர், தாம் இறைவனால் அனுப்பப்பட்ட நபி என்று வாதிப்பதாக அவர்கள் அங்கு கேள்விப்பட்டு, இது குறித்து ஆராய்வதற்காக மக்காவிற்கு வந்தபோது மக்கத்தினர் அவர்களை ஏமாற்ற முனைந்து ‘முஹம்மது எங்கள் குடும்பத்தினர்தாம். அவர்கள் ஓர் கடை திறந்திருக் கின்றார்கள். இதுதான் எங்களுக்குத் தெரியும்’ என்று கூறினர். எனினும் அபூஸர் (ரலி) அவர்கள், தாம் நாடிவந்த காரியத்தில் இருந்து விலகிக் கொள்ளாமல் பல்வேறு வழிகளில் முயன்று இறுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தபோது அவர்கள் இஸ்லாத்தின் போதனைகளை எடுத்துக் கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை தழுவி விட்டு, ‘எனது கோத்திரத்தாரிடம் சிறிது காலம் வரை நான் இஸ்லாத்தை தழுவியது குறித்து தெரிவிக்காமல் இருந்தால், குற்றமாகுமா?’ என்று வினவியதற்கு, ‘சில நாட்கள் மவுனமாக இருந்தால், குற்றமாகாது’ என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விடையளித்தார்கள்.

இந்த அனுமதியுடன் அவர்கள் தங்கள் கோத்திரத்தினரை நோக்கி திரும்பிச் செல்லும்போது, சிறிது காலம் நிலைமைகளை சரி செய்தபின்னர், நான்இஸ்லாத்தை தழுவியதை பிரகடனப்படுத்துவேன் என மனதில் முடிவெடுத்துக் கொண்டு மக்காவின் வீதிகளை அவர்கள் கடந்து சென்றார்கள்.

அப்போது மக்காவின் தலைவர்கள் இஸ்லாத்திற்கு மாற்றமாக ஏசிப்பேசி திட்டிக் கொண்டிருந்ததைக் கண்டு, சில நாட்கள் வரை தமது கொள்கையினை மறைத்து வைக்க முடிவு செய்திருந்த அவ்வெண்ணம் மனத்திலிருந்து மறைந்து விட்டது. இதனால் அவர்கள் தம்மை அறியாமலேயே மக்கத்து தலைவர்கள் கூடியிருந்த அந்த சபையில் “இறைவன் ஒருவனே; முஹம்மது அவனுடைய அடியாரும், தூதரும் ஆவார்கள் என்றும் நான் சாட்சி கூறுகிறேன்” என்று பறைசாற்றி விட்டார்கள்.

விரோதிகளின் அம்மன்றத்தில் இவ்வோசை முழங்கியதும், அவ்விரோதிகள் எல்லாரும் அவர்களை உதைக்க ஆயத்தமாகி விட்டனர். அவர்கள் மயக்கமுற்றுக் கீழே விழும் அளவிற்கு மிக மோசமாக அவர்களைத் தாக்கினார்கள். அவ்வாறு மயங்கி விழுந்தும் அந்த அநியாயக்காரர்கள் அடிப்பதை நிறுத்தாமல், தொடர்ந்து அடித்துக் கொண்டேயிருந்தனர். இவ்வேளையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சிறிய தந்தையார் அப்பாஸ் (ரலி) அவர்கள் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அப்போது வரை இஸ்லாத்தை தழுவாதிருந்த அவர்கள், அம்மக்களை கண்டித்து, “அபூஸலீம் கோத்திரத்தாரை கடந்தே உங்களுடைய வணிகக் குழு வந்து கொண்டிருக்கிறது. அவருடைய சமுதாயத்திற்கு உங்கள் மீது கோபம் வந்து விட்டால், மக்கத்தினர் பட்டினியினால் மாண்டு போவார்கள்” என்று எச்சரித்தார்கள். இதனைக் கேட்ட அம்மக்கள் அவர்களை விட்டு விட்டனர்.

அபூஸர் (ரலி) அவர்கள் ஒருநாள், ஓய்வெடுத்துக் கொண்டு, மறுநாள் அதே சபைக்குச் சென்றார்கள். அங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக பேசுவது அன்றாட வழக்கமாக இருந்தது. அவர்கள் கஅபா ஆலயத்திற்கு சென்றபோதும் அந்த பேச்சே நடந்து கொண்டிருந்தது. இதைக்கண்ட அபூஸர் (ரலி) அவர்கள் எழுந்து நின்று மீண்டும் தங்களது ஏகத்துவக் கொள்கையினை பிரகடனம் செய்தார்கள். திரும்பவும் அம்மக்கள் அவர்களை உதைக்கத் தொடங்கி

விட்டனர். இவ்வாறே இதே நிகழ்ச்சி மூன்று நாட்கள் தொடர்ந்தது. இதன் பிறகு அவர்கள் தங்கள் கோத்திரத்தாரை நோக்கி சென்று விட்டார்கள்.

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூட எதிரிகளின் அநீதிகளிலிருந்து தப்பவில்லை. அவர்கள் பல்வேறு வகையான தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள். ஒருமுறை அவர்கள் இறைவனை வணங்கிக் கொண்டிருந்தபோது, அவர்களின் கண்கள் வெளியே வந்துவிடும் அளவிற்கு எதிரிகள் அவர்களின் கழுத்தில் துணியைச் சுற்றி இழுக்கத் தொடங்கினர். இவ்வேளையில் அங்கு வந்து சேர்ந்த ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், அம்மக்களை நோக்கி 'இறைவனே என் எஜமான்' என்று இவர்கள் சொல்கிறார்கள். இப்படி சொன்ன குற்றத்திற்காகவா நீங்கள் இவர்களை கொலை செய்ய முயல்கிறீர்கள்? என்று அம்மக்களிடம் கூறி அவர்களை விடுவித்தார்கள்.

மற்றொருமுறை, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுது கொண்டிருந்தார்கள். அவர்களின் முதுகில் ஒட்டகத்தின் பெருங்குடலை கொண்டு வந்து வைத்து விட்டனர். அதன் சுமையினால் அவர்கள் தங்கள் தலையை உயர்த்த முடியாத நிலை ஏற்பட்டது. இதனைக் கண்ட மற்றவர்கள் அங்கு வந்து அப்பெருங் குடலை அவர்களின் முதுகிலிருந்து அகற்றிய பின்னரே அவர்களால் தலையை உயர்த்த முடிந்தது.

பிரிதொரு சமயம், அவர்கள் கடை வீதி வழியாக சென்று கொண்டிருந்தார்கள். மக்கத்து தீயவர்களின் ஒரு கூட்டம் அவர்களை சுற்றி வளைத்துக் கொண்டது. 'மக்களே! தன்னை நபி என்று சொல்பவன் இம்மனிதன்தான்' என்று சொல்லிக் கொண்டே வழிநெடுகிலும் அத்தீயவர்கள் அவர்களின் பிடரியில் அடித்துக் கொண்டே சென்றனர்.

அவர்களின் வீட்டைச் சுற்றியுள்ள வீடுகளிலிருந்து அவர்களின் வீட்டின் மீது தொடர்ந்து கற்கள் எறியப்பட்டன. அவர்களது வீட்டின் அடுப்புகளில் அசுத்தப் பொருள்களும் ஆட்டுக் குடல்களும் ஒட்டகக் குடல்களும் எறியப்பட்டன. அவர்கள் தொழும் போது அவர்களின்மீது மண்ணும் புழுதியும் கொட்டப்பட்டன. இதனால் சிரமத்திற்கு ஆளான அவர்கள், கட்டிடத்திற்கு வெளியில் நீண்டிருந்த ஒரு கல்லின் கீழ் மறைந்து கொண்டு வணங்க நேர்ந்தது.

எனினும் இக்கொடுமைகளையெல்லாம் இவர்கள் சகித்து வந்தது பயனற்றுப் போய் விடவில்லை. நல்லியல்பு கொண்டவர்கள் இவற்றைக் கவனித்து வந்ததால், அவர்களின் உள்ளம் இஸ்லாத்தின் பால் ஈர்க்கப்பட்டது.

ஒருநாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கஃபத்துல்லாஹ்விற்கு அருகில் உள்ள ஸஃபா என்னும் மலைக் குன்றின்மீது அமர்ந்திருந்தபோது, அவர்களின் மிகப்பெரும் விரோதியும் மக்காவின் தலைவனுமாகிய அபூஜஹில் அவ்வழியாகச் சென்று கொண்டிருந்தான். அவர்கள் அங்கு அமர்ந்திருப்பதைக் கண்ட அவன், தன்வாயில் வந்தபடியெல்லாம் அவர்களை பேசத் தொடங்கினான். அவர்களோ அவனுடைய வசைமாலைகளைக் கேட்டுக் கொண்டேயிருந்தார்கள். எவ்வித பதிலும் தராமல், மவுனமாக அங்கிருந்து எழுந்து தங்களது இல்லத்திற்கு சென்று விட்டார்கள். அவர்களின் குடும்பத்தின் பணிப்பெண் ஒருத்தி இந்நிகழ்ச்சியினை பார்த்துக் கொண்டேயிருந்தாள். அவர்களின் சிறிய தந்தையார் ஹம்ஸா (ரலி) அவர்கள் துணிச்சல் மிக்கவரும் வீரம் நிறைந்தவருமாவார்கள். இவர்களின் வீரத்தின் காரணமாக அந்நகர மக்கள் இவர்களுக்கு பயந்தவர்களாய் இருந்தனர். அபூஜஹில் வசைமாறிப் பொழிந்த அன்று மாலை இவர்கள் வேட்டையாடி விட்டு காட்டிலிருந்து திரும்பினார்கள். தோலில் வில்லை மாட்டிக் கொண்டு மிக்க பெருமிதத்தோடு தங்கள் வீட்டில் நுழைந்தார்கள்.

அப்பணிப்பெண்ணின் மனமோ அன்று காலையில் கண்ட காட்சியினால் அளவற்ற வேதனை அடைந்திருந்தது. ஹம்ஸா (ரலி) அவர்களை இக்கோலத்தில் கண்ட அவள் சகித்துக் கொள்ள இயலாமல், அவர்களைக் குறை கூறும் வகையில், "நீங்கள் உங்களை பெரும் வீரர் என்று நினைத்துக்

கொண்டு எப்போதும் ஆயுதங்களுடன் இருந்து வருகிறீர்கள். ஆனால் இன்று காலை அபூஜஹ்லில் உங்களுடைய அண்ணன் மகனுடன் எவ்வாறு நடந்து கொண்டான் என்பது உங்களுக்கு தெரியாது” என்று அப்பணிப்பெண் கூறியதும், “அவன் என்ன செய்தான்?” என்று அவர்கள் வினவியதற்கு, நடந்த நிகழ்ச்சிகளை அவர்களுக்கு அவள் விளக்கினாள்.

அன்றுவரை ஹம்ஸா (ரலி) அவர்கள் இஸ்லாத்தை தழுவவில்லையென்றாலும் நற்பண்புகளைக் கொண்டவராக இருந்தார்கள். இஸ்லாத்தின் போதனைகளை செவியேற்றும் இருந்தார்கள். அப்போதனைகள் குறித்து உண்மையாகவே அவர்களின் உள்ளத்தில் நல்லெண்ணம் ஏற்பட்டிருந்தது. ஆயினும், தங்களின் சுதந்திரமான வாழ்க்கையின் காரணத்தால் நிதானத்தோடு அப்போதனைகளை ஆழ்ந்து சிந்திக்கும் சந்தர்ப்பம் அவர்களுக்கு கிடைக்கவில்லை. எனினும் அபூஜஹ்லில் வசைமாறிப் பொழிந்த அந்த நிகழ்ச்சியைக் கேட்டதும் அவர்களின் தன்மான உணர்வு பொங்கி எழுந்தது. கவனக்குறைவு என்ற திரை கண்களை விட்டு அகன்றது. விலைமதிப்பற்ற ஒரு பொருள் கைகளிலிருந்து வெளியேறிக்கொண்டிருப்பதாக அவர்கள் உணர்ந்தார்கள்.

எனவே சிறிதும் காலம் தாழ்த்தாமல் வீட்டிலிருந்து வெளியேறி, தலைவர்களின் ஆலோசனைக்குரிய இடமாகிய கஃபாவை நோக்கி சென்றார்கள். தமது தோளில் வில்லைக் கழற்றி அபூஜஹ்லிலை நோக்கி வேகமாக வீசிவிட்டு, “இதோ நானும் முஹம்மது (ஸல்) அவர்களது மார்க்கத்தை தழுவுகின்றேன். நீ இன்று காலை அவர்கள் எதுவும் பேசமாட்டார்கள் என்ற காரணத்தால் எக்காரணமுமின்றி அவர்களை சரமாரியாக ஏசிப் பேசியுள்ளாய். நீ வீரன் என்றால், என் வில்லடிக்கு பதில்கொடு” என்றார்கள்.

இந்த நிகழ்ச்சி திடீரென நிகழ்ந்ததால், அபூஜஹ்ல் பதற்றமடைந்து விட்டான். அவனுடைய தோழர்களோ ஹம்ஸாவை எதிர்க்க முனைந்தபோது ஹம்ஸாவின் வீரத்தையும் அவர்களின் பலம் வாய்ந்த குடும்பத்தையும் கவனத்தில் கொண்ட அபூஜஹ்ல், இப்பொழுது சண்டை மூண்டுவிட்டால், இதன் விளைவு பயங்கரமானதாகி விடும் என்று நினைத்தான். இந்நிலையில் சமாதானமாக நடந்து கொள்வதே பொருத்தமென கருதி அவன் தனது நண்பர்களிடம், ‘நடந்ததை விட்டு விடுங்கள். உண்மையிலேயே நான் அவர்களின் அண்ணன் மகனை இழிவாக திட்டிவிட்டேன்’ என்று கூறி, தனது நண்பர்களை தடுத்து நிறுத்தி விட்டான்.

## இஸ்லாத்தின் தூது

ஒரு பக்கத்திலிருந்து, எதிர்ப்பு கடின மடைந்ததும் மறுபக்கத்திலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களின் தோழர்களும் மக்காவாசிகளுக்கு கீழ்க்கண்டவாறு இறைவனது தூதை வலியுறுத்தி எடுத்துக்கூறத் தொடங்கி விட்டனர்.

‘உலகைப் படைத்த இறைவன் ஒருவனே. அவனையன்றி வேறெதுவும் வணக்கத்தக்கதன்று. இதுவரை தோன்றிய இறை தூதர்கள் எல்லாம் அவனது ஏகத்துவத்தைப் போதித்து தத்தமது சமுதாயத்தினரையும் இப்போதனையின்பால் அழைத்தனர். எனவே நீங்களும் ஒரே இறைவன் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். இக்கற்சிலைகளை வணங்குவதை விட்டு விடுங்கள். இவை முற்றிலும் பயனற்றவையே. இவற்றிற்கு எவ்வித சக்தியும் இல்லை.

மக்காவாசிகளே! இச்சிலைகளின் முன் சமர்ப்பிக்கப் படுகின்ற பொருட்களின்மீது ஈக்கள் வந்தமர்ந்தால், அவற்றை விரட்டி அடிக்கக்கூட இவற்றிற்கு சக்தியில்லை. இவற்றை எவர் தாக்கினாலும் இவற்றால் தம்மை பாதுகாத்துக் கொள்ளவும் இயலாது. இவற்றிடம் எவரும் கேள்வி கேட்டால், இவற்றால் பதில் தரவும் இயலாது. இவற்றிடம் எவரும் உதவிகோரினால், இவற்றால் அவருக்கு உதவி செய்யவும் இயலாது என்பவையெல்லாம் உங்களுக்குத் தெரியவில்லையா?’

‘ஆனால் அந்த ஏக இறைவனோ, தன்னிடம் வேண்டியவர் களின் தேவையை பூர்த்தி செய்கின்றான். கேள்வி கேட்பவர்களுக்கு பதில் தருகின்றான். உதவி கேட்பவர்களுக்கு உதவி செய்கின்றான். தனது விரோதிகளை வென்று விடுகின்றான். தன்னை வணங்கும் அடியார்களுக்கு மிகவும் உயர்வான முன்னேற்றங்களை வழங்கு கின்றான். அவனை வணங்குபவர்களை ஒளிமயமாக்கும் ஒளி அவனிடமிருந்து கிடைக்கின்றது.’

‘இவ்வாறிருக்கும்போது நீங்கள் ஏன் அந்த இறைவனை விட்டு அகன்று, உயிரற்ற சிலைகளின் முன் பணிகின்றீர்கள்? இவ்வாறு உங்களுடைய வாழ்நாளை ஏன் வீணாக்குகின்றீர்கள்? உங்களுடைய பண்புகள் என்னவென்று உங்களுக்குத் தெரிய வில்லையா? அந்த உயர்ந்த இறைவனின் ஏகத்துவத்திலிருந்து நீங்கள் விலகி விட்டதனால் உங்களுடைய எண்ணங்கள் அசுத்தமடைந்து விட்டன. உங்கள் உள்ளங்கள் இருளடைந்து விட்டன. பல்வேறு வகையான வெறுங்கற்பனை போதனைகளில் நீங்கள் சிக்கிக்கொண்டிருக்கின்றீர்கள். ஹலால், ஹராம் (ஆகுமானவை, விலக்கப்பட்டவை) வேறுபாடு உங்களிடம் கிடையாது. நல்லவை எவை? தீயவை எவை? என்பதை உங்களால் பகுத்துணர முடியவில்லை. நீங்கள் உங்கள் தாய்மார்களை கண்ணியக்குறைவாக நடத்துகின்றீர்கள். உங்களுடைய சகோதரி களுக்கும் பெண் மக்களுக்கும் அநீதியிழைக்கின்றீர்கள். அவர்களுக்குரிய உரிமைகளை அவர்களுக்கு கொடுப்பதில்லை. உங்கள் மனைவியரிடம் நீங்கள் நடந்து கொள்ளும் முறை சரியன்று.’

‘அநாதைகளின் உரிமைகளைப் பறிக்கின்றீர்கள். இறைவனிடம் தீய முறையில் நடந்து கொள்கின்றீர்கள். ஏழைகளின் மீதும் பலவீனமானவர்களின்மீதும் அநீதியிழைக்கின்றீர்கள். மற்றவர்களின் உரிமைகளைப் பறித்து உங்கள் பெருமையை நிலைநாட்ட விழைகின்றீர்கள்.’

‘பொய் பேசுபவதும் ஏமாற்றுவதும் வெட்கக்கேடானவை என்பது உங்களுக்குத் தெரியவில்லை. திருடுவதையும் வழிப்பறிக் கொள்ளையிடுவதையும் நீங்கள் வெறுக்கவில்லை. சூதாடுவதிலும் மது அருந்துவதிலும் நீங்கள் மூழ்கியுள்ளீர்கள். கல்வி கற்பதிலும் சமுதாயத்திற்கு தொண்டாற்றுவதிலும் நீங்கள் கவனம் செலுத்த வில்லை.’

‘அந்த ஏக இறைவனை எத்தனை நாட்கள் அலட்சியம் செய்து கொண்டிருக்கப் போகிறீர்கள்? எங்களுடன் இணைந்து உங்களை சீர்திருத்திக் கொள்ளுங்கள். அநீதியிழைப்பதை விட்டு விடுங்கள். ஒவ்வொருவருக்கும் உரிய உரிமையைக் கொடுத்து விடுங்கள். இறைவன் உங்களுக்கு பொருள் வளத்தை வழங்கி இருந்தால், அதனை நாட்டின் பணிக்கும் சமுதாயப் பணிக்கும் பலவீனமானவர்களின் முன்னேற்றத்திற்கும் ஏழைகளின் முன்னேற்றத்திற்கும் செலவழியுங்கள்’.

‘பெண்களுக்கு மதிப்பளித்து, அவர்களுக்குரிய உரிமைகளை நிறைவேற்றுங்கள். அனாதைகளை, இறைவனால் உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொருள்கள் என்று கருதுங்கள். அவர்களை நல்ல முறையில் வளர்த்து வருவது மிகவும் உயர்ந்த செயல் எனக் கருதுங்கள், விதவைகளுக்கு உதவி செய்பவர்களாக இருங்கள். நற்செயல்களையும் இறைவனுக்கு பயந்து நடப்பதையும் நிலை நாட்டுங்கள்.’

‘நீதியுடன் நடப்பது மட்டுமல்லாமல், கருணை காட்டு வதையும் உபகாரம் செய்வதையும் உங்கள் பண்புகளாக ஆக்கிக் கொள்ளுங்கள். இவ்வுலகில் உங்கள் வருகை பயனற்றதாக இருக்க வேண்டாம். நிரந்தரமான நன்மையை தரும் வகையில் நல்ல செயல்களை உங்களுக்கு பின்னால் விட்டுச் செல்லுங்கள். உரிமைகளைப் பெருவதில் உண்மையான கண்ணியம் இல்லை. தியாகம் செய்வதால்தான் உண்மையான கண்ணியம் கிடைக்கும். எனவே தியாகத்தை மேற்கொண்டு இறைவனுக்கு நெருக்கமானவர் களாகத் திகழுங்கள். இறைவனிடமிருந்து உங்களுக்குரிய உரிமை கிடைப்பதற்காக அவனுடைய அடியார்களின் முன் தியாகத்தை முன் மாதிரியாகக் காட்டுங்கள்’.

‘ஐயத்திற்கிடமின்றி முஸ்லிம்களாகிய நாம் பலவீன மானவர்களே! எனினும் அப்பலவீனத்தை பார்த்துக் கொண்டு இருக்காதீர்கள். உண்மையே நிச்சயமாக வெற்றி அடையும். இது விண்ணில் இறைவனால் விதிக்கப்ப்பட்ட நியதி. தற்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மூலம் நியாயம் என்னும் அளவுகோல் நிலைநாட்டப்படும். நேர்மையான ஆட்சி நிலை நாட்டப்படும். கருணைமிக்க ஆட்சி நிலைநாட்டப்படும். இவ்வாட்சியில் எவருக்கும் அநீதியிழைக்கப்படமாட்டாது. மத சம்பந்தமான எந்தத் தலையீடும் இருக்காது. பெண்களின்மீதும் அடிமைகளின்மீதும் இழைக்கப்பட்ட அநீதிகள் அழிக்கப் பட்டுவிடும். ஷய்த்தானின் ஆட்சிக்குப் பதிலாக ஏக இறைவனின் ஆட்சி நிலைநாட்டப்பட விருக்கின்றது.’

## அபூதாலிபிடம் நிராகரிப்போர் முறையீடும் நபிகள் நாயகத்தின் உறுதிப்பாடும்

மேற்கூறப்பட்ட தூதுச் செய்தி மக்காவின் மக்களுக்கு தொடர்ந்து போதிக்கப்பட்டபோது நல்லியல்பு கொண்ட மக்களை அது வெகுவாக ஈர்த்தது. இதனால் மக்காவின் தலைவர்கள் ஒருநாள் ஒன்றுகூடி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரர் அபூதாலிப் அவர்களிடம் சென்று இவ்வாறு கூறினார்கள்: 'தாங்கள் எங்களுடைய தலைவராக இருக்கின்றீர்கள். தங்களுக்காக தங்களின் சகோதரரின் மகன் முஹம்மதுவை (ஸல்... அவர்களை) நாங்கள் எதுவும் சொல்லாமல் விட்டு வைத்திருக் கின்றோம். இப்போது நமது சமுதாயத்திற்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை தடுக்க வேண்டிய நேரம் வந்து விட்டது. ஒன்று, தாங்கள் அவருக்கு அறிவுரை கூறுங்கள். அல்லது அவர் முடிவாக எங்களிடம் எதிர்பார்ப்பது என்னவென்று அவரிடம் கேளுங்கள். அவருடைய விருப்பம் கண்ணியத்தை பெறுதல் எனில் எங்களின் தலைவராக ஆக்கிக் கொள்ள நாங்கள் ஆயத்தமாயுள்ளோம். அவர் செல்வத்தை விரும்பினால், எங்களுள் ஒவ்வொருவரும் தத்தமது பொருளின் ஒரு பகுதியினை அவருக்கு வழங்கி விடவும் ஆயத்தமாயுள்ளோம். திருமணம் செய்துகொள்ள அவர் விரும்பினால், மக்காவின் பெண்களுள் எவரை அவர் விரும்புகின்றாரோ அவரைக் குறிப்பிடட்டும். நாங்கள் அப்பெண்ணை அவருக்கு மணமுடித்து வைக்கவும் ஆயத்தமாயுள்ளோம்.

இதற்குப் பதிலாக அவரிடமிருந்து எதையும் நாங்கள் எதிர்பார்க்கவில்லை. எந்தப் பணியிலிருந்தும் அவரைத் தடுத்திடவும் இல்லை. எனினும் எங்களுடைய சிலைகளுக்கு எதிராக கூறுவதை அவர் விட்டுவிட வேண்டும் என்பதை மட்டுமே நாங்கள் அவரிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். இறைவன் ஒருவன் என்று அவர் தாராளமாகச் சொல்லட்டும். ஆனால் எங்களுடைய சிலைகள் தீயவை என்று அவர் சொல்ல வேண்டாம். எங்களுடைய இக்கருத்தினை அவர் ஏற்றுக் கொண்டு விட்டால் எங்களுக்கும் அவருக்குமிடையில் சமாதானம் ஏற்பட்டு விடும்.

தாங்கள் இதனை அவருக்குப் புரிய வையுங்கள். எங்களுடைய திட்டத்தை ஏற்றுக்கொள்ள அவரை ஆயத்தம் ஆக்குங்கள். இல்லையென்றால், இரண்டில் ஒன்று நடந்தே தீரும். அவற்றுள் ஒன்று, தாங்கள் தங்களுடைய அண்ணன் மகனை விட்டுவிட நேரும். அல்லது தங்களுடைய சமுதாயம் தங்களின் தலைமைப் பதவியை மறுத்துவிட்டு தங்களை கைவிட்டு விடும்' என்றார்கள்.

மக்கா தலைவர்களின் இந்த பேச்சு அபூதாலிபுக்கு பெரும் பிரச்சனையாகத் தென்பட்டது. அவர்கள் தமது சகோதரரின் மகனை விட்டுவிடுவதை எவ்வளவு கடினமாக கருதினார்களோ அதே அளவு தங்களின் சமுதாயத்தால் புறக்கணிக்கப்படுவதையும் கடினமானதாகவே கருதினார்கள். அரபு மக்கள் பணத்தை ஒரு பொருட்டாகக் கருதுவதில்லை; தலைமைப் பதவியையே மிகுந்த மதிப்பிற்குரியதாக கருதினர். தலைவர்கள் சமுதாயத்திற்காகவும் சமுதாயம் தலைவர்களுக்காகவும் வாழ்ந்தனர். இதனால் அபூதாலிப் நிம்மதியிழந்து தவித்தார்கள்.

அபூதாலிப் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அழைத்து வரச்செய்து, 'என் சகோதரர் மகனே! என் சமுதாயம் என்னிடம் வந்து ஒரு தூதுச் செய்தியினை (மேற்கூறப்பெற்ற முறையீட்டை) என்னிடம் கூறியது மட்டுமல்லாமல், உங்களுடைய சகோதரர் மகன் இவ்விஷயங்களில் எதன் மீதும் திருப்தி கொள்ள வில்லையாயின், எங்கள் சார்பாக நாங்கள் சொல்ல வேண்டியவற்றை யெல்லாம் நாங்கள் சொல்லி விட்டோம். இவற்றிற்கேற்ப அவர்கள் தமது வழிமுறையிலிருந்து விலகிக் கொள்ளவில்லையாயின் தாங்கள் அவரை கைவிட்டு விட வேண்டும். தாங்கள் அவரை கைவிட்டு விடத் தயாராக இல்லையாயின் நாங்கள் தங்களின் தலைமைப் பதவியை மறுத்து விட்டுத் தங்களைக் கைவிட்டு விடுவோம் என்றும் என் சமுதாயத்தினர் என்னிடம் கூறிச் சென்றுள்ளனர்' என்றார்கள்.

அபூதாலிப் இச்செய்தியினைத் தெரிவித்த போது, அவர்களின் கண்களில் கண்ணீர் வந்தது. அவர்கள் கண்ணீர் விட்டதைக் கண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்களிலும் கண்ணீர் மல்கியது.

பின்னர் தங்களுடைய தந்தையின் சகோதரரிடம், 'தாங்கள் தங்களின் சமுதாயத்தை விட்டுவிட்டு எனக்கு துணை நிற்க வேண்டும் என்று நான் கூறவில்லை. இதற்குப் பதிலாக, என்னை விட்டுவிட்டு தங்களின் சமுதாயத்திடம் தாராளமாக இணைந்து கொள்ளுங்கள்.'

'ஆனால் எந்த இணையுமில்லாத அந்த ஏக இறைவனின் மீது ஆணையாக! அவர்கள் சூரியனை என் வலப்பக்கமும், சந்திரனை என் இடப்பக்கமும் கொண்டு வந்து நிறுத்தினாலும் எனது இறைவனின் ஏகத்துவத்தை போதிப்பதிலிருந்து என்னால் விலகிக் கொள்ள இயலாது. இறைவன் எனக்கு மரணத்தைத் தருகின்ற வரை நான் எனது இப்பணியினை தொடர்ந்து ஆற்றிக்கொண்டே இருப்பேன். தங்களுக்கு எது நன்றாகத் தெரிகின்றதோ அதனை தாங்கள் சிந்தித்துக் கொள்ளுங்கள்' எனக் கூறினார்கள்.

நம்பிக்கையும் தூய்மையான பற்றும் நிறைந்த இப்பதில் அபூதாலிபின் கண்களை திறக்கப் போதுமானதாக இருந்தது. எனவே அவர்கள் தமக்கு நம்பிக்கைக் கொள்ள பாக்கியம் கிடைக்கவில்லையாயினும் இந்த நம்பிக்கையின் காட்சியினை பார்க்கும் பாக்கியம் தமக்கு கிடைத்து விட்டது என்றும், இதுவே செல்வங்களிளெல்லாம் மிகப்பெரும் செல்வமாகும் என்றும் உணர்ந்து கொண்டார்கள்.

இவ்வாறு உணர்ந்த அவர்கள், 'என் சகோதரர் மகனே! செல்; உனது கடமையை அயராது ஆற்றிக் கொண்டேயிரு. இச்சமுதாயம் என்னை விட்டுவிட விரும்பினால் தாராளமாக விட்டு விடட்டும். ஆனால் என்னால் உன்னை விட்டுவிட ஒருபோதும் இயலாது' என்றார்கள். *(இப்னு ஹிஷாம் தொகுதி 1 பக்கம் 88 மற்றும் திப்ரீ)*

## மக்காவைத் துறந்து அபிஸீனியாவிற்குச் செல்லல்

மக்காவாசிகள் இழைத்து வந்த அநீதிகள் எல்லையைக் கடந்து சென்ற போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஒரு நாள் தங்களின் தோழர்களை அழைத்து , 'மேற்கு திசையில் கடலுக்கப்பால் ஒரு நாடு உள்ளது. அங்கே இறைவனை வணங்குவதற்காக அநீதியிழைக்கப்படுவதில்லை. மதமாற்றத்தால் மக்கள் கொலை செய்யப்படுவதுமில்லை. அங்கு நெறி தவறாத ஒரு மன்னர் உள்ளார். எனவே, நீங்கள் மக்காவைத் துறந்து அங்கு சென்று வாழ்ந்தால், அநேகமாக உங்களுக்கு அமைதியான சூழ்நிலை உருவாகலாம்' என்றார்கள்.

இந்த ஆலோசனையை ஏற்று சில முஸ்லிம்கள் தமது பெண்களையும் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு அபிஸீனியாவிற்குச் சென்றனர். இந்த இடம்பெயர்தல் சிறிய அளவிலும் பரிதாபகரமாகவும் இருந்தது.

மக்காவாசிகள் கஃபாவின் பொறுப்பாளர்களாக தம்மை கருதி வந்தனர். அவ்வாறே இருந்தும் வந்தனர். அதனால் மக்காவை விட்டுச் செல்வதென்பது அவர்களுக்கு மிகுந்த துயரத்தை அளிக்கக்கூடியது. மக்காவில் வாழ்வதென்பது அறவே முடியாது என்ற நிலை ஏற்படாதவரை அதனை பிரிவதென்பது அவர்களால் நினைத்துக்கூட பார்க்க இயலாத ஒன்றாகும். எனவே மக்காவை துறந்து செல்வது அவர்களுக்கு மிகுந்த வேதனையைத் தந்த நிகழ்வாகவே இருந்தது. மேலும் எவருக்கும் தெரியாமல் வெளியேறுவதும் அவசியமாய் இருந்தது. அவர்கள் வெளியேறுவது எதிரிகளுக்குத் தெரிந்து விட்டால் அவர்கள் தங்களை வெளியேற விடமாட்டார்கள் என்பதை அவர்கள் நன்கு தெரிந்திருந்தனர். இதனால் அவர்கள் தங்களுடைய உற்றார் உறவினைரைக் கண்டு விடைபெறக்கூட முடியவில்லை.

அவர்களின் மனநிலை எவ்வாறு இருந்திருக்கும் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. அவர்களைப் பார்த்தவர்கள்கூட அவர்களின் இத்தகு இன்னல்களை நினைத்து மிக்க வருத்தமடைந்தனர்.

இக்குழுவினர் வெளியேறிக் கொண்டிருந்தபோது, அந்நேரம் வரை இஸ்லாத்தை நிராகரிப்பவராகவும் அதன் விரோதியாகவும் முஸ்லிம்களுக்கு தொல்லை கொடுப்பவர்களுள் முன்னணியில் நின்றவருமாகிய ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தற்செயலாக அக்குழுவினருள் சிலரைச் சந்திக்க நேர்ந்தது. அவர்களுள் உம்மு அப்தில்லாஹ் என்ற ஒரு பெண்ணும் இருந்தார். மிருகங்கள்மீது சுமைகளாக ஏற்றப்பட்டிருந்த வீட்டுப் பொருட்களைக் கண்டு இவர்கள் மக்காவைத் துறந்து அடைக்கலம் தேடி வேறு இடத்திற்குச் செல்ல இருக்கின்றனர் என்பதை புரிந்து கொண்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், உம்மு அப்தில்லாஹ் என்ற பெண்ணிடம் 'இவையெல்லாம் ஹிஜ்ரத்திற்குரிய ஏற்பாடாகத் தெரிகின்றதே! என்ன செய்தி?' எனக் கேட்டார்கள். இதற்கு உம்மு அப்தில்லாஹ் அவர்கள், 'ஆம் இறைவன்மீது ஆணையாக! நாங்கள் வேறு நாட்டிற்குச் செல்கின்றோம். ஏனென்றால் நீங்கள்

எங்களுக்கு அதிகமான தொல்லைகள் கொடுத்து விட்டீர்கள். எங்களுக்கு அதிகமான கொடுமைகள் இழைத்துவிட்டீர்கள். இறைவன் உங்களுக்காக அமைதியான நல்ல சூழ்நிலையை உருவாக்கித்தராத வரை நாங்கள் எங்கள் தாய் நாட்டிற்குத் திரும்ப மாட்டோம்' என்று கூறியதும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் 'நல்லது; இறைவன் உங்களுடன் இருப்பானாக!' என்று கூறினார்கள். இவ்வாறு கூறிய அவர்களின் குரலில் உருக்கமும் வருத்தமும் இருந்ததை நான் உணர்ந்தேன். இவ்வாறான மென்மையினை அவர்களிடம் நான் கண்டதேயில்லை. பின்னர் அவர்கள் தங்கள் முகத்தை திருப்பிக் கொண்டு அங்கிருந்து விலகிச் சென்று விட்டார்கள். எங்களுடைய ஹிஜ்ரத் நிகழ்ச்சியினால் அவர்களின் உள்ளம் மிகவும் அதிகமாக வருத்தமடைந்திருக்கும் என நான் உணர்ந்தேன் என்று உம்மு அப்தில்லாஹ் கூறினார்கள்.

அடுத்து, இவர்கள் ஹிஜ்ரத் செல்லும் செய்தி மக்கத்தினருக்கு கிடைத்ததும் அவர்கள் இவர்களைப் பிடித்து வருவதற்கு பின்தொடர்ந்து சென்றனர். இவ்வாறு கடல்வரை அவர்களைப் பின்பற்றி சென்றனர். ஆனால் அவர்கள் கடலை வந்தடைவதற்கு முன் இக்குழுவினர் அபிஸீனியாவை நோக்கி பயணமாகிவிட்டனர்.

இவர்கள் அபிஸீனியாவிற்கு சென்று விட்ட செய்தி மக்கா வாசிகளுக்குத் தெரிந்ததும் அவர்களெல்லாம் ஒன்றுகூடி, ஒரு குழுவினரை அபிஸீனிய மன்னரிடம் அனுப்பி முஸ்லிம்களுக்கு எதிராக அம்மன்னரை தூண்டிவிடவேண்டுமென்றும் நகரத் தலைவர்களின் அநீதிகளைச் சகித்துக் கொள்ளாமல் முஸ்லிம்கள் மக்காவைவிட்டு ஓடிவிட்டக் காரணத்தால் அதற்குத் தண்டனை பெற முஸ்லிம்களை மக்கத்தினரிடம் ஒப்படைக்குமாறு அம்மன்னரைத் தூண்ட வேண்டுமென்றும் முடிவெடுத்தனர்.

அம்ரிப்னுல்ஆஸ் என்பவர் அக்குழுவினருள் ஒருவராவார். பின்னர் இவர் இஸ்லாத்தைத் தழுவினார். இவர் மூலமே பின்னாளில் எகிப்து வெற்றி கொள்ளப்பட்டது.

அக்குழுவினர் அபிஸீனியாவிற்குச் சென்று மன்னரைச் சந்தித்தனர். அங்குள்ள தலைவர்களையும் அறிஞர்களையும் முஸ்லிம்களுக்கு எதிராகத் தூண்டினர்.

ஆனால் இறைவனோ அபிஸீனிய மன்னரின் உள்ளத்தை உறுதியாக்கியிருந்தான். மக்காவின் குழுவினரும் அரசவை யினரும் எவ்வளவோ வற்புறுத்தியும் முஸ்லிம்களை நிராகரிப் போரிடம் ஒப்படைக்க மன்னர் மறுத்து விட்டார்.

அக்குழு தோல்வியுற்றுத் திரும்பியதும் மக்கத்தினர் முஸ்லிம்களை அழைப்பதற்கு வேறொரு திட்டம் வகுத்தனர். அதாவது, மக்காவிலுள்ளவர்கள் எல்லாம் முஸ்லிம்களாகி விட்டனர் என்ற செய்தியினை அபிஸீனியாவிற்குச் செல்லும் சில குழுவினரிடையே பரப்பி விட்டனர். இச்செய்தி அபிஸீனியாவிற்கு கிடைத்ததும் அங்குள்ள முஸ்லிம்களுள் அதிகமானவர்கள் மகிழ்ச்சியினால் மக்காவிற்குள் திரும்பினர். ஆனால் அவர்கள் மக்காவை அடைந்தபோதுதான், இச்செய்தி விஷமத்தனமாகவே பரப்பப்பட்டுள்ளது என்றும் இதில் எந்த உண்மையும் இல்லை என்றும் அவர்களுக்குப் புரிந்தது.

எனவே, மக்காவிற்கு வந்தவர்களுள் சிலர் மீண்டும் அபிஸீனியாவிற்குத் திரும்பி சென்று விட்டனர். மற்றுஞ்சிலர் மக்காவிலேயே தங்கிவிட்டனர். மக்காவில் தங்கி விட்டவர்களுள் உஸ்மான் இப்னு மஸ்ஊன் என்பவரும் ஒருவராவார். இவர் மக்காவில் பெருந்தலைவர்களுள் ஒருவரின் மகன். இதனால் இவருடைய தந்தையின் ஒரு நண்பராகிய வலீத் இப்னு முஹீரா என்பவர் இவருக்குப் பாதுகாப்பு அளித்தார். எனவே இவர் அமைதியாக மக்காவில் வாழ்ந்து வரலானார்.

முஸ்லிம்களுக்கு தொல்லைகள் கொடுக்கப்படுவதையும் மிகக் கொடூரமான இன்னல்களுக்கு அவர்கள் ஆளாக்கப் படுவதையும் இவர் கண்டார். இவர் மிகவும் தன்மானம் உள்ளவராக இருந்ததால், தமக்குப் பாதுகாப்பளித்த வலீதிடம் சென்று, 'நீங்கள் எனக்களித்த பாதுகாப்பிலிருந்து நான் விலகிக் கொள்கின்றேன். ஏனென்றால், நான் மட்டும் சுகமாக இருந்து கொண்டு மற்ற முஸ்லிம்களுக்கு தொல்லைகள் கொடுக்கப்படுவதை என்னால் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை' என்றார்.

எனவே, வலீத் இப்பொழுது உஸ்மான் என்னுடைய பாதுகாப்பில் இல்லை என்று அறிவிப்புசெய்து விட்டார்.

இதன் பின்னர் ஒருநாள் லபீது என்னும் அரபு நாட்டின் புகழ்பெற்ற சிறந்த கவிஞர் மக்காவின் தலைவர்களுடன் உட்கார்ந்து கொண்டு தமது கவிதையை பாடிக் கொண்டிருந்தார். அந்த கவிதையில் '**வ குல்லு நயீமின் லா மஹாலத் ஸாயிலுர**' என்று பாடினார். 'ஒவ்வொரு அருட்கொடையும் ஐயத்திற்கிடமின்றி இறுதியில் அழிந்துவிடக் கூடியதே' என்பது அதன் பொருள்.

இக்கருத்து தவறென்றும் சுவர்க்கத்தின் அருட்கொடைகள் நிரந்தரமாய் நிலைத்து நிற்பவை என்றும் உஸ்மான் இப்னு மஸ்ஊன் (ரலி) அவர்கள் கூறினார்கள். கவிஞர் லபீது ஒரு பெரிய மனிதராக இருந்தார். எனவே, இப்பதிலைக் கேட்ட அவர் ஆத்திரப்பட்டு, 'குரைஷியர்களே! உங்கள் விருந்தினராகிய என்னை இதற்கு முன் எவரும் இவ்வாறு இழிவுபடுத்தியதில்லை. இப்புதிய பழக்கம் எப்போதிருந்து ஆரம்பமானது' என்று கேட்டார்.

இதுகேட்டு ஒரு மனிதர், 'இவர் ஒரு மடையர். இவருடைய கூற்றை பொருட்படுத்த வேண்டாம்' என்று பதிலளித்தார். இதற்கு ஹஸ்ரத் உஸ்மான் இப்னு மஸ்ஊன் (ரலி) அவர்களோ தமது கருத்தை வலியுறுத்தி, 'இதில் மடமை என்ன இருக்கிறது? நான் கூறியதுதான் உண்மை' என்றார்கள். உடனே அம்மனிதர் எழுந்து வந்து அவர்களின் முகத்தில் வேகமாக குத்தினார். இதனால் அவர்களின் ஒரு கண் பிதுங்கி வெளியே வந்து விட்டது.

அப்போது அந்த சபையில் வலீதும் உட்கார்ந்துதான் இருந்தார். உஸ்மான் (ரலி) அவர்களின் தந்தையுடன் இவருக்கு மிக்க நெருக்கமான நட்பு இருந்து வந்தது. மரணமடைந்து விட்ட தமது நண்பருடைய மகனின் இந்நிலையை அவரால் பார்த்துக் கொண்டிருக்க இயலவில்லை. ஆனால் மக்காவின் நடைமுறைக் கேற்ப உஸ்மான் (ரலி) அவர்கள் அவரின் பாதுகாப்பில் இல்லாததால் அவரால் எந்த ஆதரவும் கொடுக்க இயலவில்லை. இதனால் அவர்களுக்கு அவரால் வேறெதுவும் செய்ய இயலவில்லையாயினும் மிகவும் வருத்தமடைந்து, உஸ்மான் (ரலி) அவர்களை நோக்கி, 'எனது நண்பருடைய மகனே! இறைவன் மேல் ஆணையாக! வலிமைமிக்க பாதுகாப்பில் (என்னுடைய பாதுகாப்பில்) நீ இருந்திருப்பாயாயின் உன்னுடைய இக்கண் பிதுங்கி வெளியாகாமல் காப்பாற்றப்பட்டிருக்கும். ஆனால் நீயே இப்பாதுகாப்பிலிருந்து விலகிக் கொண்டதால் இத்துன்பத்தை அனுபவிக்க வேண்டியதாயிற்று' என்றார்.

இதற்கு உஸ்மான் (ரலி) அவர்கள், 'எனக்கு நிகழ்ந்துள்ளது நான் சுயமாக விரும்பியதேயாகும். பிதுங்கப்பட்ட என் கண்ணுக்காக நீங்கள் ஒப்பாரி வைக்கிறீர்கள். ஆனால் நலமாக இருக்கின்ற என்னுடைய மறு கண், தனது சகோதரி கண்ணுக்கு நிகழ்ந்தது தனக்கும் ஏன் நிகழவில்லை என்று துடித்துக் கொண்டிருக்கிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியே எனக்குப்போதும். அவர்கள் இன்னல்களை சகித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் நான் மட்டும் ஏன் சகித்துக் கொண்டிருக்கக்கூடாது? எனவே இறைவனுடைய ஆதரவே எனக்குப் போதும்' என்று பதிலளித்தார்கள்.

## ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை தழுவுதல்

இதே வேளையில் மக்காவில் நடந்த ஒரு நிகழ்ச்சி அங்கு நெருப்பை மூட்டிற்று. அந்நிகழ்ச்சி பின்வருமாறு நிகழ்ந்தது:

பின்னாளில் இஸ்லாத்தின் இரண்டாவது கலீஃபாவாக திகழ்ந்தவரும், ஆரம்பத்தில் இஸ்லாத்தின் கொடூரமான பகைவர்களுள் ஒருவராகவும் இருந்த ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒருநாள் உட்கார்ந்திருந்தபோது, அவர்களின் உள்ளத்தில், 'இன்றுவரை இஸ்லாத்தை ஒழித்துக் கட்டுவதற்காக அதிகமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு விட்டன. ஆனால் இம்முயற்சியில் வெற்றி கிடைக்கவில்லை. எனவே, இஸ்லாத்தை தோற்றுவித்தவரையே கொன்று விட்டால் இக்குழப்பத்தை நிரந்தரமாக அழித்து விட்டதாக ஆகிவிடுமல்லவா?' என்ற எண்ணம் எழுந்தது. இவ்வெண்ணம் தோன்றிய உடனேயே, அவர்கள் வாளை எடுத்துக் கொண்டு, வீட்டிலிருந்து வெளியேறி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கண்டுபிடிக்கச் சென்றார்கள்.

வழியில் அவர்களின் நண்பர் ஒருவர், அவர்களை இந்நிலையில் கண்டு வியப்படைந்து, ‘உமரே! எங்கு சென்று கொண்டிருக்கின்றீர்கள்?’ என்று வினவியதற்கு ‘நான் முஹம்மதை கொலை செய்வதற்காக சென்று கொண்டிருக்கின்றேன்’ என்றார்கள். ‘நீங்கள் முஹம்மதை கொன்று விட்டு அவர்களின் கோத்திரத்தாரிட மிருந்து உங்களால் தப்பித்துக்கொள்ள முடியுமா? சற்று உங்கள் வீட்டின் நிலையைக் கவனித்துப் பாருங்கள். உங்கள் சகோதரியும் அவருடைய கணவரும்கூட முஸ்லிம்களாகி விட்டனர்’ என்றார் அந்த நண்பர்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் தலையை மின் விசை தாக்கியது போன்றிருந்தது இச்செய்தி. இதனால் அவர்கள், இஸ்லாத்திற்கு கொடிய பகைவனாக இருக்கும் நான் முஹம்மதை கொலை செய்வதற்காக சென்று கொண்டிருக்கின்றேன். ஆனால் என்னுடைய சகோதரியும் சகோதரியின் கணவரும் இஸ்லாத்தை தழுவிவிட்டனர் என்றால், முதலில் எனது சகோதரியையும், அவளுடைய கணவரையும் நான் தீர்த்துக்கட்ட வேண்டும் என்று எண்ணினார்கள். இந்த எண்ணத்தோடு அவர்கள் தம்முடைய சகோதரியின் வீட்டை நோக்கி சென்றார்கள்.

வீட்டின் வாயிலை அடைந்ததும் வீட்டிலிருந்து இனிய குரலில் ஒரு வசனத்தைப் படிக்கும் ஒலிகள் அவர்களின் காதில் விழுந்தன. இதனைப் படித்துக் கொண்டிருந்தவர்கள் ஹஸ்ரத் கப்பாப் (ரலி) அவர்கள் ஆவார்கள். இவர்களே அவர்களின் சகோதரிக்கும், அவருடைய கணவருக்கும் திருக்குர்ஆனை கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) விரைவாக வீட்டில் நுழைந்தார்கள். அவர்களின் காலடி ஓசையைக் கேட்ட ஹஸ்ரத் கப்பாப் (ரலி) அவர்களோ ஒரு மூலையில் பதுங்கிக் கொண்டார்கள். ஃபாத்திமா என்னும் பெயரைக் கொண்ட அவர்களின் சகோதரி அவ்வேளையில் படித்துக் கொண்டிருந்த திருக்குர்ஆனின் எழுத்துப் பிரதிகளை மறைத்து விட்டார்கள்.

வீட்டின் அறையினுள் நுழைந்த ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ‘நீங்கள் உங்களுடைய மதத்திலிருந்து விலகி விட்டீர்களாமே’ என்று கோபத்துடன் கேட்டார்கள். அதன் பிறகு ஏற்கனவே தமது ஒன்றுவிட்ட சகோதரரான, சகோதரியின் கணவரை தாக்க முனைந்தார்கள். தமது சகோதரர் தமது கணவரைத் தாக்க வருவதைக் கண்ட ஃபாத்திமா (ரலி) விரைந்து அவர்கள் இருவருக்குமிடையில் நின்றார்கள். இதனால் உமர் (ரலி) அவர்களின் கை ஃபாத்திமாவின் முகத்தில் இறங்கியது. அவர்களின் மூக்கிலிருந்து இரத்தம் பீறிட்டது. அந்த அடி ஃபாத்திமாவை மேலும் உறுதிகொள்ளச் செய்தது. ‘ஆம். நாங்கள் முஸ்லிம்களே! நாங்கள் அதிலேயே நிலைத்திருப்போம். உங்களால் முடிந்ததை செய்து கொள்ளுங்கள்’ என்று அவர்கள் மிகுந்த தீரத்துடன் கூறினார்கள்.

உமர் (ரலி) அவர்கள் வீரமிக்கவராக இருந்தார்கள். அநீதியானது அவர்களது வீரத்தை அழித்துவிடவில்லை. ஒரு பெண்ணை அதுவும் தம் சகோதரியை தமது கையினாலேயே காயப்படுத்தியதை எண்ணி வெட்கமும் வேதனையும் அடைந்தார்கள்.

சகோதரியின் முகத்திலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. உமர் (ரலி) அவர்களின் உள்ளத்திலிருந்த கோபம் இப்போது தணிந்து விட்டது. தம் சகோதரியிடம் மன்னிப்புக் கேட்கும் எண்ணம் வலுவடைந்து கொண்டிருந்தது. வேறு எந்தச் சாக்குபோக்கும் கூறாது, தமது சகோதரியிடம், ‘சரி; இப்போது நீங்கள் படித்துக் கொண்டிருந்த அவ்வசனத்தை என்னிடம் காட்டுங்கள்’ என்று கேட்டார்கள்.

‘நான் அதனைக் காட்டமாட்டேன். ஏனென்றால் நீங்கள் அந்த எழுத்துப்பிரதிகளை வீணாக்கி விடுவீர்கள்’ என்று ஃபாத்திமா (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள். ‘இல்லை சகோதரி; நான் அவ்வாறு செய்யமாட்டேன்’ என்று உமர் (ரலி) அவர்கள் கூறியதற்கு ‘நீங்கள் இப்பொழுது தூய்மையற்றவர்களாய் இருக்கின்றீர்கள். முதலில் குளியுங்கள். பின்னர் அவ்வசனத்தைக் காட்டுகின்றேன்’ என்று ஃபாத்திமா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

உமர் (ரலி) அவர்கள் கடினமான மனவருத்தத்தின் காரணமாக, எல்லாவற்றையும் செய்ய ஆயத்தமாகி விட்டார்கள். அவர்கள் குளித்து விட்டு வருவதற்கும் இணங்கிவிட்டார்கள். குளித்து விட்டுத் திரும்பியபோது அவர்களின் கையில் திருக்குர்ஆனின் அந்த எழுத்துப் பிரதிகளை ஃபாத்திமா (ரலி) அவர்கள் கொடுத்து விட்டார்கள்.

திருக்குர்ஆனின் தாஹா என்னும் அதிகாரத்தின் சில வசனங்களாய் அவை இருந்தன. அவர்கள் அவற்றைப் படித்துக் கொண்டே வந்தபோது, கீழ்க்காணும் வசனங்களைப் படித்தார்கள்:

***"இன்னனீ அனல்லாஹு லாயிலாஹ இல்லா அன.:.பாபுத்னீ வஅகிமிஸ்ஸலாத் லிதிக்ரீ.இன்னஸ் ஸாஅத்த ஆத்தியதன் அகாது உக்.:.பா பீஹாலிதுஜ்ஸா குல்லு ந.:.ப்ஸின் பிமா தஸ்ஆ"***

"நிச்சயமாக நானே அல்லாஹ். என்னையன்றி வேறெவனும் வணக்கத்திற்குரியவன் இல்லை. எனவே, நீர் என்னையே வணங்கி என்னை நினைவு கூர்வதற்காக தொழுகையை நிலைநாட்டுவீராக. நிச்சயமாக மறுமையின் காலம் வரக்கூடியது. ஒவ்வொரு ஆன்மாவுக்கும் செயல்களுக்கேற்ப கூலி வழங்கப்படுவதற்காக நான் அதனை வெளிப்படுத்த இருக்கின்றேன்." (20:15,16)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வசனங்களைப் படித்ததும், இவை எவ்வளவு வியப்பிற்குரியதும், எவ்வளவு தூய்மையான வசனங்களாகவும் உள்ளன என்ற வார்த்தைகள் அவர்களை அறியாமலேயே அவர்களின் வாயிலிருந்து வெளியாயின. இச்சொற்களைக்கேட்ட ஹஸ்ரத் கப்பாப் (ரலி) அவர்கள் தாம் ஒளிந்திருந்த இடத்திலிருந்து வெளியில் வந்து, இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துஆவுக்கு (பிரார்த்தனைக்கு) கிடைத்த பயனே ஆகும். இறைவன் மேல் ஆணையாக! நேற்று அவர்கள் பின்வருமாறு துஆ செய்ததை நான் செவியுற்றேன். "இறைவா! உமர் இப்னுல் கத்தாப் அல்லது அம்ர் இப்னு ஹிஷாம் ஆகியவர்களுள் யாராவது ஒருவருக்கு இஸ்லாத்தின்பால் கட்டாயம் நேர்வழி காட்டுவாயாக."

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எழுந்து நின்று, 'முஹம்மத் (ஸல்) அவர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்பதை எனக்குத் தெரிவியுங்கள்' எனக் கேட்டார்கள். அவர்கள் அர்க்கம் என்பவரின் வீட்டில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதும் உமர் (ரலி) அவர்கள் அதே உருவிய வாளை எடுத்துக்கொண்டு அங்கே சென்று வாயிற் கதவை தட்டினார்கள். நபித்தோழர்கள் கதவின் இடுக்குகள் வழியாக பார்த்தபோது, வெளியே உருவிய வாளுடன் உமர் நின்று கொண்டிருப்பதைக் கண்டனர். இப்போது கதவைத் திறந்தால் உமர் உள்ளே வந்து ஏதாவது குழப்பம் செய்து விடலாம் என்று அத்தோழர்கள் அஞ்சினர்.

ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'என்ன நிகழ்ந்துவிட்டது? கதவைத் திறவுங்கள்' என்றார்கள். உமர் (ரலி) அவர்கள் அதே வாளுடன் உள்ளே நுழைந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன் சென்றார்கள். அப்போது,' உமரே! நீங்கள் எந்த எண்ணத்துடன் வந்துள்ளீர்கள்' என்று அவர்கள் வினவியதற்கு உமர் (ரலி) அவர்கள், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் இஸ்லாத்தைத் தழுவ வந்துள்ளேன்' என்று பதில் அளித்தார்கள். இதனைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உரத்த குரலில் "*அல்லாஹு அக்பர்* - இறைவன் மிகப்பெரியவன்" என்று முழங்கினார்கள். இதைத் தொடர்ந்து அவர்களின் எல்லாத் தோழர்களும் இதே சொற்களை உரத்த குரலில் முழங்கினார்கள். இம்முழக்கங்கள் மக்காவின் குன்றுகளில் எதிரொலித்தன. சற்று நேரத்திற்குள் இச்செய்தி மக்காவெங்கும் தீப்போல் பரவிற்று.

இதற்கு முன் நபித்தோழர்களுடன் மற்றவர்கள் கடினமாக நடந்து கொண்டதுபோன்றே இப்பொழுது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடனும் கடினமாக நடந்து கொண்டனர். ஆனால், முதலில் நபித்தோழர்களை தாக்குவதிலும், கொலை செய்வதிலும் இன்பம் கண்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களோ இப்பொழுது தாக்கப்படுவதிலும் அடிபடுவதிலும் இன்பம் கண்டார்கள். ஈமான் (நம்பிக்கை) கொண்ட பின்னர் மக்காவின் வீதிகளில் நான் அடி உதைதான் வாங்கிக் கொண்டிருந்தேன் என ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களே கூறியுள்ளார்கள்.

## முஸ்லிம்களை ஊர் நீக்கம் செய்தல்

இப்போது முஸ்லிம்களின்மீது இழைக்கப்பட்ட கொடுமைகள் வரம்புமீறிச் சென்று கொண்டிருந்தன. இதனால் சிலர் மக்காவைத் துறந்து வேறிடங்களுக்குச் சென்று விட்டனர். எஞ்சியவர்கள் முன்னை விட அதிகமான இன்னல்களுக்கு ஆளானார்கள். ஆயினும், அநீதியிழைத்தவர்களின் உள்ளங்களிலுள்ள வேகம் தணியவில்லை.

நாம் இதுவரை இழைத்து வந்த அநீதிகளால் முஸ்லிம்களின் உள்ளம் உடைந்திடவில்லை. அவர்களின் ஈமானில் அதிர்வும் நிகழவில்லை. மாறாக, அவர்கள் ஒரே இறைவனை வணங்குவதில் மேலும் முன்னேறி விட்டனர். இதில் முன்னேறிக் கொண்டே செல்கின்றனர். சிலைகளிடம் அவர்கள் கொண்டிருக்கும் வெறுப்பு வளர்ச்சியடைந்து கொண்டே செல்கின்றது என்பனவற்றைக் கவனித்த அந்த எதிரிகள் மீண்டும் ஒரு ஆலோசனைக் குழுவைக் கூட்டி முஸ்லிம்களை முழுமையாக ஊர் நீக்கம் செய்ய வேண்டும். எவரும் அவர்களுக்கு எதையும் விற்கக்கூடாது. அவர்களுடன் கொடுக்கல் வாங்கல் வைத்துக் கொள்ளக்கூடாது எனத் தீர்மானித்து விட்டனர்.

இவ்வேளையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் அவர்களை ஏற்றுக் கொண்ட சிலருக்கும் அதுவரை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாமல் இருந்தாலும்கூட அவர்களை விட்டுப் பிரிய தயாராக இல்லாமல் இருந்த அவர்களுடைய உறவினர்களுக்கும் அபூதாலிபுக்கு சொந்தமான ஒரு தனி இடத்தில் புகலிடம் தேட நேர்ந்தது.

*(இப்னு ஹிஷாம் பாகம் 1 பக்கம் 130; 2 ஸுர்கானி பாகம் 2 பக்கம் 279)*

அவர்கள் வாழ்வதற்கு உதவியாக இருக்கக்கூடிய எந்த பொருளோ வழிவகைகளோ அவர்களிடம் இருக்கவில்லை. அந்த கடினமான காலகட்டத்தில் அவர்கள் கடந்து சென்ற நிலைகளை கணித்துப் பார்ப்பது மற்றவர்களுக்கு சாத்தியமானதன்று.

ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் வரை இந்நிலை நீடித்தது. மக்காவின் ஊர் நீக்கத் தீர்ப்பில் எந்த தளர்வும் காட்டப்படவில்லை. ஏறத்தாழ மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் மக்காவிலுள்ள நல்லியல்பு கொண்ட ஐவரின் மனத்தில் இவ்வநீதிக்கு மாற்றமாக கிளர்ச்சி உருவாயிற்று. அவ்வைந்து பேரும் அபூதாலிபுக்கு சொந்தமான அவ்விடத்தின் வாசலுக்குச் சென்று அங்கு முற்றுகைக்கு ஆளானவர்களை அழைத்து அவர்கள் யாவரும் வெளியே வரவேண்டும் என்றும் இந்த ஊர் நீக்கத்தின் உடன்படிக்கையினை முறித்து விட முற்றிலும் தாங்கள் தயாராக இருப்பதாகவும் கூறினர்.

நீண்டகால இந்த முற்றுகையினாலும் பல நாட்கள் பசித்திருக்க நேர்ந்ததாலும் மிகவும் பலவீனமாகிவிட்ட அபூதாலிப் அவர்கள் வெளியே வந்து தமது சமுதாயத்தினரை நோக்கி அவர்களின் இந்த நீண்டகால கொடுமை எந்த வகையில் நியாயமாகும் என்று அவர்களைக் கேட்டார்கள்.

நல்லியல்பு கொண்ட இந்த ஐவரின் கிளர்ச்சி உடனடியாக மின்னல் வேகத்தைப் போன்று மக்கா நகரத்தில் பரவி விட்டது. மனிதனின் இயற்கையான இயல்பு மீண்டும் தலைதூக்கத் தொடங்கியது. நன்மைக்கு மீண்டும் ஒரு முறை உயிர் வந்தது. இதனால் மக்காவினர் இத்தீய உடன்படிக்கையினை முறித்து விடும் கட்டாய நிலைக்கு உள்ளாயினர்.

இதனைத் தொடர்ந்து இந்த உடன்படிக்கை முடிந்து விட்டதென்றாலும் மூன்று ஆண்டுகால பசிப்பிணியானது தனது விளைவைக் காட்டத்தொடங்கியது. இது முடிந்து சில நாட்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நன்றியுணர்வுமிக்க துணைவியார் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் அந்த ஊர்நீக்க காலத்தில் அனுபவித்த இன்னல்களால் மரணமடைந்து விட்டார்கள். இதிலிருந்து ஒரு மாதம் கழித்து அபூதாலிப் அவர்களும் இவ்வுலகிலிருந்து விடைபெற்று விட்டார்கள்.

## ஹஸ்ரத் கதீஜாவும் அபூதாலிபும் மறைந்தபிறகு இஸ்லாத்தைப் பரப்புவதில் ஏற்பட்ட தடைகளும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் தாயிஃபுக்கு பயணமாதலும்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களின் தோழர்களும் அபூதாலிபின் இணக்கமான செல்வாக்கை இழந்தவர்களாகி விட்டனர். இல்லற வாழ்வில் துணையாயிருந்த ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட்டு பிரிந்து விட்டார்கள். இவ்விருவருடன் கொண்டிருந்த தொடர்பினால் எதிரிகள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் தோழர்கள் மீதும் கொண்டிருந்த கொஞ்சநஞ்ச இரக்க உணர்வுகளும் இவர்களின் மரணத்தால் இயல்பாகவே குறைந்து விட்டன.

அபூதாலிபின் மறைவால் ஏற்பட்ட மிகுந்த வருத்தத்தாலும் அவர்களின் இறுதிக்கால வஸிய்யத்(மரணசாசனத்)தின் காரணத்தாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் கொடிய விரோதியாகவும் அபூதாலிபின் தம்பியுமாக இருந்த அபூலஹப் என்பவன் சில நாட்கள் வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு ஒத்துழைப்பு கொடுத்து வந்தான். ஆனால், இறைவனின் ஏகத்துவத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களையெல்லாம் குற்றவாளிகள் என்றும், தண்டனைக்குரியவர்கள் என்றும் இந்த முஹம்மத் (ஸல்) அவர்கள் கருதுகின்றாரே என்று மக்கத்தினர்கள் அவனிடம் கூறி அவனுடைய உணர்ச்சிகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கெதிராக தூண்டியபோது அவன் தனது முன்னோர்களின்மீது கொண்டிருந்த பற்று காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒத்துழைப்பு கொடுப்பதை நிறுத்தி விட்டு இனிமேல் முன்பை விடவும் அதிகமாக அவர்களை எதிர்க்க உறுதி எடுத்துக் கொண்டான்.

ஊர் நீக்கம் செய்யப்பட்டு முற்றுகை வாழ்வில் மூன்று ஆண்டு காலம் வரை அந்த முஸ்லிம்கள் தமது உறவினர்களை விட்டுத் தனித்திருக்க நேர்ந்ததால் குடும்பத் தொடர்புகள் தளர்ந்து விட்டன. மக்கத்தினர்களோ முஸ்லிம்களுடன் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ளாதிருக்கப் பழகிவிட்டனர். இதனால் இஸ்லாத்தைப் பரப்புவதற்குரிய களம் ஓர் எல்லைக்குள் குறுகி விட்டது. இத்தகு சூழ்நிலையினைக் கண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிற்குப் பதிலாக தாயிஃப் நகரத்திற்குச் சென்று அங்குள்ள மக்களுக்கிடையே இஸ்லாத்தைப் பரப்ப முடிவு செய்தார்கள். அவர்கள் இது குறித்து சிந்தித்துக் கொண்டிருந்த போதே மக்கத்தினர்களின் கடும் எதிர்ப்பு இத்திட்டத்திற்கு மேலும் வலுவூட்டியது.

இம்முடிவிற்கு முதற் காரணம், மக்கத்தினர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் பிரச்சாரத்தை காது கொடுத்துக் கேட்பதே இல்லை. இரண்டாவது காரணம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீதிகளில் நடந்து செல்ல முடியாத நிலையினை மக்கத்தினர்கள் உருவாக்கி விட்டனர். அவர்கள் வெளியே சென்று மக்களை சந்திக்கக்கூடாதென்பதற்காக மண்ணை வாரி அவர்களின் தலையில் கொட்டினர்.

ஒரு தடவை அவர்களின் தலையில் மண் கொட்டப்பட்டிருந்த நிலையில் வீட்டிற்குத் திரும்பியபோது அவர்களின் ஒரு மகள் அவர்களின் தலையிலிருந்து மண்ணை அகற்றிக் கொண்டே அழத்தொடங்கினார். அப்போது அவர்கள், ‘மகளே! அழ வேண்டாம். ஏனென்றால், நிச்சயமாக இறைவன் உங்கள் தந்தையுடனேயே இருக்கின்றான்’என்றார்கள். ***(இப்னு ஹிஷாம் பாகம்1 பக்கம் 145)***

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களினால் அவர்கள் பதற்றம் அடையவில்லை. தங்களுடைய பிரச்சாரத்தை மக்கள் செவிகொடுத்துக் கேட்காமல் இருந்ததே அவர்களுக்கு வருத்தமாக இருந்தது. தங்களின்மீது இழைக்கப்படும் இன்னல்கள் அவசியம் என்றே அவர்கள் கருதினர். எந்த நாளில் எவராவது ஒருவர் தமக்கு துன்பம் இழைக்கவில்லையோ அந்த நாளேஅவர்களுக்கு மிகக் கடினமான நாளாக இருந்தது.

இது குறித்துப் பின்வருமாறு பதிவு செய்யப்பட்டுள்ளது:

ஒரு நாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மக்காவின் வீதிகளிலே பிரச்சாரத்திற்காக கிளம்பினார்கள். ஆனால் அந்த நாளில் ஏதோ ஒரு திட்டத்திற்கேற்ப, எவருமே அவர்களுடன் பேசவில்லை. எந்த அடிமையும் அவர்களுக்கு எவ்வித தொல்லையும் கொடுக்கவில்லை. எந்த சுதந்திரமானவரும் அவர்களுக்கு எவ்வித தொல்லையும் கொடுக்கவில்லை. இதனால் அன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருத்தத்தினாலும் கவலையினாலும் மவுனமாக படுத்து விட்டார்கள். அப்போது இறைவன் அவர்களுக்கு ஆறுதலளித்து, “கூறுவீராக: உம்முடைய சமுதாயத்தை மீண்டும் மீண்டும் எச்சரித்துக் கொண்டேயிருப்பீராக. அவர்களின் அலட்சிய மனப்பான்மையினை பொருட்படுத்த வேண்டாம்” என்றான்.

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு மக்கள் துன்பத்தைக் கொடுக்காமல் இருந்ததே வருத்தமாக இருந்தது. உலகிற்கு நேர்வழி காட்டுவதற்காக தோற்றுவிக்கப்பட்ட இறைத்தூதரிடம் மக்கள் பேசாமல் இருப்பதையும் அத்தூதருடைய பிரச்சாரத்தை செவியேற்கத் தயாராக இல்லாமல் இருப்பதையும் அத்தூதரால் எவ்வாறு சகித்துக் கொண்டிருக்க இயலும்? இத்தகு பயனற்ற வாழ்வு அவருக்கு துன்பத்தைக் கொடுக்கக்கூடியதே ஆகும்.

எனவே, தாங்கள் தாயிஃப் நகரத்திற்குச்சென்று அங்குள்ள மக்களுக்கு இறைத் தூதை எடுத்துக் கூற வேண்டுமென உறுதியான முடிவெடுத்துக் கொண்டார்கள். இறைத்தூதர்களின் பணியே அக்கம் பக்கத்திலுள்ள பல்வேறு சமுதாயங்களிடம் சென்று பிரச்சாரம் செய்வதுதான்.

ஹஸ்ரத் மூஸா நபி (அலை) அவர்களும் அவ்வாறு பணியாற்றினார்கள். ஒரு சமயம் ஃபிர்அவ்னுடைய சமுதாயத்திற்கு பிரச்சாரம் செய்தார்கள் என்றால், அடுத்த சமயம் இஸ்ஹாக்கின் சமுதாயத்திற்கும், இன்னொரு சமயம் மதியன் நாட்டு மக்களுக்கும் பிரச்சாரம் செய்தார்கள்.

ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்களும் பிரச்சாரம் செய்யும் ஆர்வத்தில் சில சமயம் கலிலேய மக்களுக்கும், சிலவேளையில் ஜோர்தான் மக்களுக்கும், சிலபொழுது ஜெருசலேம் மக்களுக்கும், சில சந்தர்ப்பங்களில் மற்றவிடங்களிலுள்ள மக்களுக்கும் போதிக்க நேர்ந்தது.

மக்கத்தினர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனையினை கேட்க மறுத்து விட்டது மட்டுமல்லாமல் அவர்களை அடிக்கவும் உதைக்கவும் அவர்களுடன் பேசாதிருக்கவும் முடிவு செய்து விட்டபோது அவர்கள் தாயிஃப் நகரத்தை நோக்கிச் சென்றார்கள்.

தாயிஃப் மக்காவிற்கு தென்கிழக்கில் சுமார் 60 மைல் தொலைவிலுள்ள ஒரு நகரம். இங்குள்ள பழங்களாலும் வேளாண்மையாலும் இந்த நகரம் புகழ் பெற்றிருந்தது. இந்த நகரத்தில் வாழ்ந்து வந்த மக்கள் சிலை வணக்கத்தில் மக்கத்தினர்களை விட குறைந்தவர்கள் அல்லர்.

கஃபத்துல்லாஹ்வில் வைக்கப்பெற்றிருந்த சிலைகள் உட்பட லாத் என்ற பெயரில் புகழ்பெற்ற ஒரு சிலை தாயிஃபின் முக்கியத்துவத்திற்கு காரணமாக விளங்கியது. இச்சிலையினை தரிசிப்பதற்காக தூரமான இடங்களிலிருந்தெல்லாம் அரபு மக்கள் வந்து கொண்டிருந்தனர். தாயிஃப் மக்களின் பெரும்பாலான உற்றார் உறவினர்கள் மக்காவில் வாழ்ந்து வந்தனர். தாயிஃபிற்கும் மக்காவிற்கும் இடையிலுள்ள பசுமையான பல இடங்களில் மக்கத்தினர்களுக்கு சொந்தமான சொத்துகளும் இருந்தன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாயிஃபிற்கு சென்றபோது அவர்களை சந்திப்பதற்காக அங்குள்ள தலைவர்கள் வரத் தொடங்கினர். ஆனால் எவருமே உண்மையை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. பொதுமக்களும் தம் தலைவர்களை பின்தொடர்ந்து உண்மையை ஒப்புக் கொள்ள ஆயத்தமாகவில்லை. இறைவனின் தூதுச் செய்தியினை அவர்கள் எல்லாரும் இழிவாகக் கருதினர். உலகையே நோக்கமாகக் கொண்டவர்களின் பார்வையில் பொருள் வசதிகளோ உதவி செய்பவர்களோ இல்லாத நபி இழிவானவராகவே கருதப்படுகின்றார். ஆயுதங்களுக்கும் போர்ப்படைகளின் குரலுக்கும் செவி சாய்ப்பதைத்தான் அவர்கள் தெரிந்திருந்தனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாயிஃபுக்குச் சென்று பிரச்சாரம் செய்தபோது அவர்களின் வாதம் குறித்து அம்மக்கள் தெரிந்தே இருந்தனர். ஆனால் அவர்களுடன் படை வீரர்களோ ஒரு கூட்டமோ இல்லாது செய்தை மட்டும் தங்களுடன் வைத்துக் கொண்டு தாயிஃபின் கீர்த்திவாய்ந்த பகுதிகளில் அவர்கள் பிரச்சாரம் செய்து கொண்டிருப்பதைக் கண்ட அந்த அகக்குருடர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஒரு நபியாகக் கருதவில்லை. மாறாக, இழிவானவராகவும் பழிக்கப்பட்டவராகவும் கருதினர். இவருக்கு தொல்லைகள் கொடுத்து இன்னல்கள் விளைவிப்பது சமுதாயத் தலைவர்களின் பார்வையில் தமக்கு மதிப்பை தேடித்தரலாம் என அவர்கள் எண்ணினர்.

இதனால் அவர்கள் ஒருநாள் ஒன்றுகூடினர். தம்முடன் நாய்களையும் கொண்டு வந்தனர். சிறுவர்களைத் தூண்டி விட்டனர். கற்களை தமது மடிகளில் நிரப்பிக் கொண்டனர். பின்னர் எவ்வித இரக்கமுமின்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின்மீது கற்களை எறியத் தொடங்கினர். இவ்வாறு அவர்களை நகரத்திற்கு வெளியே தள்ளிவிட்டனர். கற்கள் எறியப்பட்டதால் அவர்களின் கால்களில் இரத்தக்காயம் ஏற்பட்டது. அவர்களைப் பாதுகாத்துக் கொண்டே ஸெய்தும் கடினமாகக் காயமடைந்தார். எனினும் அந்த அநியாயக்காரர்களின் மனம் குளிர்ச்சியடையவில்லை. பின்னரும் அவ்வநியாயக்காரர்கள் அவர்களைப் பின்தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தனர். நகரத்திலிருந்து பல மைல் தொலைவிலுள்ள மலைப்பாங்கான இடங்களை அடைந்தபின்னரே பின்தொடர்வதை நிறுத்தினர்.

அம்மக்கள் அவர்களை பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்த போது அவர்களின்மீது இறைவன் கோபம் கொண்டு விடக்கூடாதே என்ற அச்சத்தினால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விண்ணை நோக்கி மிகவும் உருக்கமாக இறைவனிடம், "என் இறைவா! இந்த மக்களை நீ மன்னித்து விடுவாயாக. தாம் என்ன காரியம் செய்து கொண்டிருக்கின்றனர் என்பது இவர்களுக்கு தெரியவில்லை" என்று துஆ செய்தார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காயமடைந்து களைப்படைந்தவர்களாகவும் அந்த மக்களால் விரட்டியடிக்கப்பட்ட வர்களாகவும் ஒரு திராட்சை தோட்டத்தின் நிழலில் தஞ்சம் புகுந்தார்கள். அத்தோட்டம் மக்காவின் இரு தலைவர்களுக்குச் சொந்தமானது. அவ்விரு தலைவரும் அப்போது அத்தோட்டத்திலேயே இருந்தனர். பத்து ஆண்டுகளாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எதிர்ப்பதிலேயே தமது வாழ்நாளைக் கழித்த நீண்ட கால கொடிய விரோதிகளான அவர்கள் அப்போது மக்காவைச் சேர்ந்த ஒருவரை தாயிஃப் மக்கள் காயப்படுத்தி விட்டனரே என்று ஒருவேளை உணர்ச்சிவசப்பட்டு இருக்கலாம். அல்லது நன்மையின் உணர்வு ஒருகால் அவ்விருவரின் உள்ளத்தில் தலைதூக்கிய நேரமாக அந்த நேரம் இருந்திருக்கலாம். எனவேதான், அத்தலைவர்கள் ஒரு தட்டில் திராட்சைகளை நிரப்பி தமது அடிமை அத்தாஸிடம், 'இந்த திராட்சைகளை எடுத்துச் சென்று அப்பயணிகளுக்குக் கொடு' என்றார்கள்.

அத்தாஸ் என்பவர் நினிவே என்ற ஊரைச் சேர்ந்த ஒரு கிறித்தவர். இவர் அந்த திராட்சைகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன் சமர்ப்பிக்கவே, 'அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் நான் இவற்றை வாங்கிக் கொள்கின்றேன்' என்று மொழிந்து கொண்டே அத்திராட்சைகளை அவர்கள் வாங்கிய போது, அடிமை அத்தாஸிற்கு கிறித்தவத்தின் நினைவு மீண்டும் உள்ளத்தில் புத்துணர்வு பெற்றது. இதனால் அவர் ஹீப்ரு மொழி பேசும் ஓர் இறைத்தூதர் தமக்கு முன்னால் உட்கார்ந்திருக்கிறார் என்று உணர்ந்து கொண்டார்.

'நீங்கள் எந்த ஊரை சேர்ந்தவர்கள்' என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம் வினவியதற்கு, 'நினிவே நாட்டைச் சேர்ந்தவன்' என்று அவர் பதிலளித்தபோது ,'நினிவேயைச் சேர்ந்தவரும் மத்தேயுவுடைய மகனுமாகிய அந்த நல்ல மனிதர் - யூனுஸ் (அலை) அவர்கள் என்னைப்போன்று இறைவனுடைய ஒரு நபி ஆவார்கள்'என்று அவர்கள் கூறிவிட்டு, தங்களுடைய இஸ்லாம் மார்க்கம் குறித்து அவருக்கு பிரச்சாரம் செய்ய தொடங்கி விட்டார்கள். அத்தாஸின் திகைப்பு சில நிமிடங்களுக்குள் வியப்பாக மாறிவிட்டது. இந்த வியப்பு நம்பிக்கையாக மாறி விட்டது. சிறிது நேரத்திலேயே அயலாராக அந்த அடிமை கண்ணீர் ததும்பிய கண்களுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கட்டி அணைத்துக் கொண்டார். பின்னர் அவர்களின் கைகளிலும் கால்களிலும் அவர் முத்தமிடத் தொடங்கினார். அத்தாஸுடன் பேசி முடித்த பிறகு அவர்கள் பின்வருமாறு இறைவனிடம் துஆ செய்தார்கள்:

'என் இறைவா! எனது பலவீனங்களையும் எனது பொருள் வளமின்மையையும் மக்களின் பார்வையில் நான் இழிவாகக் கருதப்படுவதையும் உன்னிடமே முறையிடுகின்றேன். நீ ஏழைகள், பலவீனர்கள் ஆகியவர்களின் இறைவனும் என் இறைவனுமாவாய். நீ என்னை எவர்களின் கைகளில் விட்டுவிடப் போகின்றாய்? என்னை இங்குமங்குமாக துரத்தி அடிக்கின்ற அயலார்களின் கைகளில் விட்டுவிடப் போகின்றாயா? அல்லது என் ஊரில் என்னை மிகைத்துக் கொண்டிருக்கின்ற பகைவரின் கையில் விட்டு விடப்போகின்றாயா? என்மீது உனக்கு கோபம் இல்லையென்றால் அந்த பகைவர்களைப் பற்றி நான் கவலையடைய மாட்டேன். உனது கருணை என்னுடன் இருக்கிறது. உனது சாந்தம் எனக்கு மிகவும் விசாலமானது. உனது முகத்தின் ஒளியில் நான் புகலிடம் தேடுகின்றேன். உலகிலிருந்து இருளை விரட்டியடிப்பதும் இவ்வுலகிலும் மறு உலகிலும் சாந்தியை வழங்குவதும் உனது செயல்களேயாகும். உனது கோபமும் உனது தண்டனையும் என்மீது இறங்காதிருக்கட்டுமாக. நீ என்மீது திருப்தி கொள்வதற்காகவே என்மீது சினம் கொள்கிறாய். உன்னைத் தவிர்த்து உண்மையான எந்த வல்லமையும் உண்மையான எந்தப் புகலிடமும் இல்லை'.

இவ்வாறு இறைவனிடம் துஆ செய்து விட்டு அவர்கள் மக்காவை நோக்கி பயணமானார்கள். பயணத்தின் இடையில் நக்லா என்ற இடத்தில் தங்கி சில நாட்கள் ஓய்வெடுத்துக் கொண்டு மீண்டும் அவர்கள் மக்காவை நோக்கி பயணமானார்கள்.

ஆனால் அரபு நாட்டின் நடைமுறைக்கேற்பே சண்டையின் காரணத்தினால் மக்காவை விட்டுச் சென்ற பின்னர் அவர்கள் மக்காவின் குடிமகனாக இருக்க முடியாது. இப்பொழுது அவர்களை மக்காவிற்குள் வர அனுமதிப்பதும் அனுமதிக்காமல் இருப்பதும் மக்கத்தினர்களின் விருப்பத்தைப் பொருத்தது.

எனவே அவர்கள் மக்காவின் ஒரு தலைவர் மத்அம் பின் அதீ என்பவருக்கு, ‘நான் மக்காவிற்குள் நுழைய விரும்புகின்றேன். அரபு நாட்டின் விதிமுறைக்கேற்ப மக்காவினுள் நுழைய எனக்கு நீங்கள் அனுமதி தருகின்றீர்களா?’ என்ற தூதை அனுப்பினார்கள்.

மத்அம் என்பவர் கடும் பகைவராக இருந்தாலும், நல்லியல்பைக் கொண்ட ஒரு மனிதராக இருந்தார். எனவே, தூதுச் செய்தி கிடைத்த அதே வேளையில் அவர் தமது ஆண் மக்களையும் உறவினர்களையும் தம்முடன் அழைத்துக் கொண்டு ஆயுதங்களுடன் கஃபாவின் முற்றத்தில் நின்று கொண்டு மக்காவிற்குள் அவர்கள் வருவதற்கு தாம் அனுமதிப்பதாக அவர்களுக்கு தூது அனுப்பவே, அவர்கள் மக்காவிற்கு வந்து கஃபாவை சுற்றி வந்தார்கள். இதன் பிறகு மத்அம் தமது மக்களுடனும் உறவினர்களுடனும் வாள்களைக் கையில் ஏந்தியவர்களாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அவர்களது வீடுவரை பாதுகாப்பாக அழைத்துச் சென்றார்.

இது புகலிடம் அளித்தல் அன்று. ஏனென்றால் இதன் பின்னரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின்மீது தொடர்ந்து அநீதிகள் இழைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அப்போதெல்லாம் மத்அம் எவ்வித பாதுகாப்பும் கொடுக்க வில்லை. மத்அம் தாம் வழங்கிய அனுமதி காரணமாக நபி (ஸல்) அவர்கள் மக்காவிற்குள் நுழைய வழிவகுத்தார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இப்பயணத்தில் ஒப்பற்ற தியாகத்தையும் தங்களின் கொள்கையில் உறுதியாக நிலைத்து நிற்கும் முன்மாதிரியையும் காட்டியுள்ளார்கள் என இஸ்லாத்தின் பகைவர்கள்கூட அவர்களின் தாயிஃப் பயணம் குறித்து ஒப்புக் கொள்கின்றனர். சர் வில்லியம் மூர் ‘முஹம்மத்’ என்னும் தமது நூலில், ‘முஹம்மது அவர்களின் தாயிஃப் பயணத்தில் மிகவும் உயர்வானதும் வீரம் நிறைந்ததுமான ஒரு தன்மை காணப்படுகின்றது. சமுதாயத்தினர் அவரை இழிவுக்கண் கொண்டு பார்த்தனர். அவரை விரட்டியடித்தனர். இவ்வாறு தனி மனிதராகவே அவர் இறைவனின் பெயரால் வீரத்துடன் நினிவேயின் யோனா தீர்க்கதரிசி (யூனுஸ் நபி) போன்று சிலைகளை வணங்கும் ஒரு நகரத்தை பாவமன்னிப்பின் பக்கமும் இறை தூதின் பக்கமும் அழைப்பதற்காகச் சென்றார். இந்நிகழ்ச்சியானது அவர் தம்மை முழுக்க முழுக்க இறைவனால் அனுப்பப்பட்டவர் என்று கருதியிருந்தார் என்ற எண்ணத்தின்மீது வலுவான ஒளியைப் பொழியக்கூடியதாக இருந்தது’ ***(லைஃப் ஆப் முஹம்மது - 1923 பதிப்பு, பக்கம் 112,113)*** என்று வரைந்துள்ளார்.

மக்கத்தினர் அவர்களுக்கு தொல்லைகள் கொடுத்தல், பரிகாசம் செய்தல் என்ற வாயில்களை மீண்டும் திறந்தனர். இதனைத் தொடர்ந்து இறைத்தூதருக்கு தமது ஊரே நரகத்தின் தோற்றமாக அமைந்து விட்டது. எனினும் இத்தகு நிலையில்கூட நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீரத்தோடும் தீரத்தோடும் அந்த மக்களுக்கு இறைப் போதனைகளை வழங்கிக் கொண்டே இருந்தார்கள். மக்காவின் வீதிகளிலெல்லாம் இறைவன் ஒருவனே இறைவன் ஒருவனே என்னும் ஒலிகள் மேலோங்கிக் கொண்டே சென்றன. அன்பு, நேசம், பாசம், நல்லெண்ணத்தின் அடிப்படையில் அவர்கள் மக்காவாசிகளுக்கு சிலை வணக்கத்திற்கு எதிராக அறிவுரைகள் நிகழ்த்திக் கொண்டேயிருந்தார்கள்.

மக்கள் விரண்டோடினால் அவர்கள் அம்மக்களுக்குப் பின்னாலேயே செல்வார்கள். மக்கள் முகந்திருப்பிக் கொண்டால் கூட அவர்கள் போதித்துக் கொண்டேயிருப்பார்கள். இதனால் உண்மையானது படிப்படியாக அம்மக்களின் உள்ளங்களில் பதிந்து கொண்டேயிருந்தது.

அபிஸீனியாவிற்கு இடம்பெயர்ந்து சென்று திரும்பிய பின்னர் மீண்டும் அங்கு செல்லாமல் மக்காவிலேயே தங்கியிருந்த அந்த சில முஸ்லிம்கள் தத்தமது உறவினர்கள் நண்பர்கள் தோழர்கள் அறிமுகமானவர்கள் அண்டை அயலார்கள் ஆகியவர்களுக்கு பிரச்சாரம் செய்து கொண்டேயிருந்தனர்.

சிலருடைய உள்ளம் நம்பிக்கையினால் ஒளிபெற்று விட்டதனால் வெளிப்படையாக தமது மார்க்கத்தை அறிவித்து விட்டு தமது இஸ்லாமிய சகோதரர்களுடன் தாமும் இன்னல்களை

அனுபவிப்பதில் பங்கேற்றுக் கொண்டனர். பெரும்பாலார் இஸ்லாத்தின் ஒளியையும் உண்மையையும் கண்டு கொண்டாலும் அதனை ஏற்றுக் கொள்ளும் நற்பேறு அவர்களுக்குக் கிடைக்க வில்லை. இறைவனுடைய ஆட்சி உலகிற்கு வரும் நாளை அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

## மதீனாவாழ் மக்கள் இஸ்லாத்தை தழுவுதல்

இதே வேளையில் இறைவனிடமிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு 'உங்களுடைய ஹிஜ்ரத்திற்குரிய (ஊரைத் துறந்து செல்வதற்குரிய) நேரம் வந்து கொண்டிருக்கிறது' என்று மீண்டும் மீண்டும் செய்தி கிடைத்துக் கொண்டிருந்தது. அவர்கள் ஹிஜ்ரத் செல்ல வேண்டிய இடம் கிணறுகளும் பேரீத்தம் தோட்டங்களும் அமைந்திருக்கும் ஒரு நகரமாகும் என்பது அவர்களுக்கு தெளிவாகி விட்டது.

தாங்கள் ஹிஜ்ரத் (இடம்பெயர்ந்து) செல்ல வேண்டிய இடம் அநேகமாக யமாமாவாக இருக்கலாம் என்று நினைத்தார்கள். ஆயினும், விரைவில் இவ்வெண்ணம் அவர்களின் உள்ளத்தி லிருந்து அகற்றப்பட்டு விட்டது.

இறைவனின் முன்னறிவிப்பிற்கேற்ப தங்களின் ஹிஜ்ரத்திற்காக விதிக்கப்பெற்றிருக்கும் நகரம் எதுவாயினும் இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு அது தன்னை அர்ப்பணம் செய்யும் என்று எதிர்பார்க்கத் தொடங்கினார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் ஹஜ் செய்ய வேண்டிய காலம் வந்தது. அரபு நாட்டின் நான்கு திசைகளிலுமுள்ள மக்கள் மக்காவுக்கு ஹஜ் செய்வதற்காக திரண்டு வரத் தொடங்கினர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களின் வழக்கத்திற்கேற்ப மக்கள் கூடி நிற்கும் இடங்களுக்குச் சென்று அம்மக்களுக்கு ஏகத்துவப் போதனை செய்து வந்தார்கள். இறைவனுடைய ஆட்சி வரப்போகின்றது என்ற நற்செய்தியினையும் கூறி வந்தார்கள். அநீதியிழைத்தல், தீதுசெய்தல், குழப்பம் விளைவித்தல், விஷமத்தனம் செய்தல் முதலியவற்றிலிருந்து மக்கள் தவிர்ந்து கொள்ள அறிவுரை வழங்கி வந்தார்கள்.

சிலர் அவர்களின் போதனைகளை செவியேற்று தமது வியப்பை வெளிப்படுத்தி விட்டுப் பிரிந்து சென்றனர். அப்போதனைகளை கேட்டுக் கொண்டிருந்த மற்றுஞ் சிலரை மக்கத்தினர் அங்கிருந்து விரட்டினர். ஏற்கனவே மக்கத்தினரின் கருத்துகளை செவியேற்றிருந்த இன்னுஞ்சிலர் ஏளனமாகச் சிரித்து விட்டு அவர்களை பிரிந்து சென்றனர். இந்நிலையில் மினா என்னும் பள்ளத்தாக்கில் இங்குமங்குமாக அவர்கள் நடந்து கொண்டிருந்த போது மதீனாவாசிகள் ஏழு பேரைக் கண்டு,'நீங்கள் எந்த கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள்?' என அவர்களிடம் விசாரித்ததற்கு, 'நாங்கள் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள்' என்று அவர்கள் பதிலளிக்க, 'யூதர்களுடன் உடன்படிக்கை செய்திருக்கும் அந்த கோத்திரமா?' என்று வினவியதற்கு, 'ஆம்' என்றனர்.

'நீங்கள் சிறிது நேரம் அமைதியாக உட்கார்ந்து நான் சொல்லும் கருத்துக்களை கேட்பீர்களா?' என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வினவினார்கள். அந்த ஏழு பேரும் ஏற்கனவே அவர்களைப் பற்றி கேள்விப்பட்டிருந்ததால் அவர்களின் வாதம் குறித்து தெரிந்து கொள்ளும் ஆர்வம் அவர்களின் உள்ளத்தில் உண்டாயிற்று. எனவே அந்த ஏழுபேரும் அவர்களின் விருப்பத்திற்கிணங்கி அமைதியாக உட்கார்ந்து அவர்களின் கருத்துக்களை கேட்கலாயினர்.

அப்போது அவர்கள் அம்மக்களிடம், 'இறைவனுடைய ஆட்சி விரைவில் நிறுவப்பட இருக்கிறது. அந்த ஆட்சியில் சிலைகளெல்லாம் உலகிலிருந்து அழிக்கப்பட்டு விடும். உலகில் ஏகத்துவம் நிலைநாட்டப்படும். நன்மையும் தக்வாவும் (இறைவனுக்கு அஞ்சி அவனுடைய கட்டளைகளின்படி நடக்கும் பண்பு) மீண்டும் ஒரு தடவை உலகில் நிலைநாட்டப்படவிருக்கின்றன என்ற விஷயங்களை விளக்கிவிட்டு இத்தகு மகத்தான ஆட்சியினை ஏற்றுக்கொள்ள மதீனாவாசிகள் ஆயத்தமாக உள்ளனரா?' என்று கேட்டார்கள்.

இக்கருத்தினைக் கேட்ட அவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு, 'தங்களுடைய போதனைகளை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் இஸ்லாத்திற்குப் பாதுகாப்பளிக்க மதீனா ஆயத்தமாக உள்ளதா இல்லையா? என்பதுதான் இப்போது கவனத்திற்கு கொள்ளத்தக்கது. நாங்கள் எங்கள்

ஊருக்குச் சென்று எங்கள் சமுதாயத்தினரிடம் இது குறித்து தெரிவிப்போம். பின்னர் அடுத்த ஆண்டு எங்கள் சமுதாயத்தினரின் முடிவு குறித்து தங்களிடம் நாங்கள் தெரிவிப்போம்' என்றனர்.

அவர்கள் தமது ஊருக்குத்திரும்பியதும் தமது உறவினர் களிடத்தும் நண்பர்களிடத்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளை எடுத்தியம்பத் தொடங்கினர். அப்போது மதீனாவில் அவ்ஸ், கஸ்ரஜ் என்னும் இரண்டு அரபுக் கோத்திரத்தினரும் பனூ குரைலா, பனூ நழீர், பனூ கைன்கா என்னும் மூன்று யூத கோத்திரத்தினரும் வாழ்ந்து வந்தனர்.

அவ்ஸ் கோத்திரத்தினருக்கும் கஸ்ரஜ் கோத்திரத்தாருக்கும் இடையே பகைமை நிலவியது. பனூ குரைலா பனூ நழீர் ஆகிய இரு யூத கோத்திரத்தினரும் அவ்ஸ் கோத்திரத்தாருடன் சேர்ந்து கொண்டனர். பனூ கைனுகா இனத்தினர் கஸ்ரஜ் இனத்தாருடன் சேர்ந்து கொண்டனர். பல ஆண்டுகள் நிகழ்ந்த போருக்குப் பிறகு தமக்கிடையில் சமாதானம் செய்து கொள்ள வேண்டுமென்ற உணர்வு அவர்களுக்குள் எழுந்தது. இறுதியாக தமக்கிடையில் நடத்திய ஆலோசனைக்கேற்ப கஸ்ரஜ் கோத்திரத்தாரின் தலைவராக இருந்த அப்துல்லாஹ் பின் உபைய் பின் ஸலூல் என்பவரை மதீனா முழுவதற்கும் மன்னராக ஏற்றுக் கொள்ள வேண்டுமென முடிவெடுத்தனர்.

யூதர்களுடன் கொண்டிருந்த தொடர்பினால் அவ்ஸ் கஸ்ரஜ் ஆகிய இரு கோத்திரத்தவர்களும் பைபிளின் முன்னறிவிப்புகளைக் கேள்விப்பட்டிருந்தனர். தமது தொல்லைகளையும் இன்னல் களையும் பற்றி யூதர்கள் கூறும்போது அதன் இறுதியில் மூஸா நபி (அலை) அவர்களைப் போன்ற ஓர் இறைத்தூதர் தோன்றப் போகிறார்கள். அதற்குரிய நேரம் அண்மையில் வந்து கொண்டிருக்கிறது. அந்த இறைத்தூதர் தோன்றியதும் நாம் மீண்டும் ஒரு தடவை உலகை வெற்றி கொள்வோம். எங்களின் பகைவர்கள் அழிக்கப்படுவர் என்று கூறி வந்தனர்.

ஹாஜிகளாகிய அந்த ஏமு பேர்களிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்ளின் வாதத்தைப் பற்றி மதீனாவாழ் மக்கள் தெரிந்து கொண்டபோது உண்மை அவர்களுக்குப் புரிந்து விட்டது. இதனால் தம்மிடம் யூதர்கள் அறிவித்துக் கொண்டிருந்த அதே நபிதான் இவர் என்று தெரிகின்றது என்று கூறினர்.

எனவே, பெரும்பாலான இளைஞர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகள் உண்மைதான் என்று அறிந்து கொண்டனர். யூதர்களின் மூலம் கேள்விப்பட்ட முன்னறிவிப்புகள் அவர்களின் நம்பிக்கைக்கு மேலும் வலுவூட்டின.

பின்னர் அடுத்த ஆண்டு ஹஜ்ஜின்போது மதீனாவாழ் மக்கள் மக்காவிற்கு வந்தனர். அவர்களுள் பன்னிரெண்டுபேர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்ளின் மார்க்கத்தை தழுவிட வேண்டுமென்ற நோக்கத்தில் அங்கிருந்து இம்முறை பயணமாயினர். அவர்களுள் பத்து பேர் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். இருவர் அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள்.

அந்தப் பன்னிரெண்டு பேரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மினாவில் சந்தித்து அவர்களின் கையில் பைஅத் - உடன்படிக்கை செய்து (இஸ்லாத்தில் இணைந்து) தாங்கள் இறைவனைத் தவிர வேறெவரையும் வேறெதையும் வணங்க மாட்டோம்; திருடமாட்டோம்; தீமை செய்யமாட்டோம்; எங்கள் பெண் குழந்தைகளை கொல்லமாட்டோம்; ஒருவர் மற்றொருவரின் மீது பொய்க்குற்றச்சாட்டை சுமத்தமாட்டோம்; இறைத்தூதரின் ஏனைய நற்போதனைகளுக்கு மாற்றம் செய்ய மாடடோம் என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

தங்கள் ஊருக்குத் திரும்பிச் சென்ற இவர்கள் தங்களின் சமுதாயத்தினருக்கு மேலும் தீவிரமாக இஸ்லாத்தைப் பரப்பத் தொடங்கி விட்டனர். மதீனாவின் வீடுகளிலிருந்து சிலைகள் அகற்றப்பட்டு வெளியே தூக்கி எறியப்பட்டன. சிலைகளுக்கு தலை சாய்த்தவர்கள் இப்போது தலை நிமிர்ந்து நிற்கலாயினர். இப்போது மக்களின் நெற்றிகள் இறைவனைத்தவிர மற்றெவருக்கும் மற்றெதற்கும் பணியத் தயாராக இல்லை.

பல நூற்றாண்டுகளாக நட்பு கொண்டும் பிரச்சாரம் செய்தும் தங்களால் செய்திட முடியாத மாற்றத்தை சில நாட்களிலேயே இந்த இஸ்லாம் செய்து காட்டிவிட்டதே என்று யூதர்கள் மிகவும் வியப்படைந்தனர். ஏகத்துவப்போதனை மதீனாவாசிகளின் உள்ளத்தில் வேரூன்றிப் பதிந்து வலுவடைந்து கொண்டே சென்றது. ஒருவருக்குப்பின் ஒருவராக முஸ்லிம்களிடம் வந்து உங்கள் மார்க்கத்தை எங்களுக்குக் கற்றுக் கொடுங்கள் என்று வேண்டிக் கொண்டனர்.

ஆனால், மதீனாவின் புதிய முஸ்லிம்களோ இஸ்லாமிய போதனைகளை முழுமையாகத் தெரிந்தவர்கள் அல்லர். நூற்றுக்கணக்கானவர்களுக்கும் ஆயிரக்கணக்கானவர்களுக்கும் இஸ்லாத்தைப்பற்றி விரிவாக எடுத்துச் சொல்ல இயலும் அளவுக்கு அம்முஸ்லிம்களின் எண்ணிக்கையும் அவ்வளவு அதிகமாக இருக்கவில்லை. இதனால் அம்முஸ்லிம்கள் மக்காவிற்கு ஒருவரை அனுப்பி தங்களுக்கு ஒரு முபல்லிக் (இஸ்லாமிய கொள்கைப் பரப்புநரை) அனுப்பித்தருமாறு வேண்டினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்அப்பு (ரலி) என்னும் தோழரை மதீனாவில் இஸ்லாமிய கொள்கையினைப் பரப்புவதற்காக அனுப்பி வைத்தார்கள். இவர்கள் அபிஸீனியாவிற்கு ஹிஜ்ரத் சென்று திரும்பி வந்தவர்களும் மக்காவிற்கு வெளியில் சென்று இஸ்லாத்தைப் பரப்பிய முதல் முபல்லிக் - இஸ்லாமிய கொள்கைப் பரப்புநரும் ஆவார்கள்.

## இஸ்ரா (ஆத்மீக இரவுப்பயணம்)

இந்த நாட்களில் வருங்காலம் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை ஒரு மகத்தான நற்செய்தியினை இறைவன் அறிவித்தான். கஷ்ஃப் என்னும் ஆன்மீகக் காட்சியில் அவர்கள் ஜெருசலேம் சென்றிருப்பதாகவும் இறைத்தூதர்கள் அவர்களைப் பின்பற்றித் தொழுவதாகவும் அவர்களுக்கு காட்டப்பட்டது. அந்த ஆன்மீகக் காட்சியில் அவர்கள் ஜெருசலேமைக் கண்டதன் விளக்கம் வருங்காலத்தில் ஓரிறை வணக்கத்திற்குரிய தலைமையகமாக மதீனா விளங்கும் என்பதாகும். அவர்களுக்குப் பின்னால் நின்று இறைத்தூதர்கள் தொழுததன் விளக்கம் பல்வேறு மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மார்க்கத்தை தழுவுவார்கள் என்பதுமாகும்.

இந்த சந்தர்ப்பம் மக்காவிலுள்ள முஸ்லிம்களுக்கு மிகவும் கடினமானதாக இருந்தது. முஸ்லிம்களின்மீது இழைக்கப்படட இன்னல்கள் சிகரத்தை அடைந்து விட்டன. எனவே மேற்கூறப்பட்ட ஆன்மீகக் காட்சியினை வெளியிட்டதானது மக்காவாசிகளுக்கு மேலும் சிரித்து பரிகாசம் செய்வதற்கான ஒரு புதிய வாய்ப்பாக அமைந்து விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண்ட ஆன்மீகக் காட்சியினைக் குறித்து மக்காவாசிகள் ஒவ்வொரு கூட்டத்திலும் எடுத்துக்கூறி நகைக்கத் தொடங்கினர்.

ஆனால் புதிய ஜெருசலேத்திற்கு அடித்தளம் அமைந்து விட்டதும் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள சமுதாயங்கள் செவி கொடுத்து இந்த இறை தூதரின் குரலைக் கேட்பதற்கு கவனத்தோடு எழுந்து நிற்பதும் எவருக்குத் தெரியும்?

## ரோமானியர்களின் வெற்றி குறித்து முன்னறிவிப்பு

இதே நாள்களில் கெய்சருக்கும் கிஸ்ராவுக்கும் இடையில் பயங்கரமான போர் மூண்டது. இதில் கிஸ்ராவுக்கு வெற்றி கிடைத்தது. சிரியாவிலும் பாலஸ்தீனத்திலும் ஈரானியப் படைகள் பரவிவிட்டன. ஜெருசலேம் அழிக்கப்பட்டது. இறுதியாக ஈரானியப் படைகள் யூனான், ஆசியா மைனர் ஆகிய இடங்கள் வரை சென்றடைந்தன. பாஸ்ஃபோரஸின் பள்ளத்தாக்கு முகப்பில் கான்ஸ்டான்டி நோபிளிலிருந்து பத்து மைல்களுக்கு அப்பால் ஈரானியத் தளபதிகள் தமது பாசறைகளை அமைத்துக் கொண்டனர். மக்காவாசிகள் இந்நிகழ்ச்சி குறித்து மகிழ்ச்சி விழா கொண்டாடத் தொடங்கினர். இறைவனின் தீர்ப்பு வெளியாகி விட்டதென்றும் சிலை வணங்கிகளான ஈரானியர்கள் வேதத்தைப் பின்பற்றிய கிறித்தவர்களை தோற்கடித்து விட்டனர் என்றும் கூறினர்.

அப்போது இறைவனிடமிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பின்வரும் செய்தி அறிவிக்கப்பட்டது. “ரோமானியப் படைகள் அரபு நாட்டிற்குப் பக்கத்திலுள்ள நாடுகளில் தோல்வியடைந்து விட்டன. எனினும் அவர்களுடைய இத் தோல்விக்கு பிறகு சில வருடங்களுக்குள் அவர்களுக்கு வெற்றி கிடைக்கும். உலகில் இறைவனுடைய ஆதிக்கமே முன்னரும் நிலைபெற்றிருந்தது. இனிமேலும் அதுவே நிலைபெற்றிருக்கும். அந்த வெற்றியின்போது நம்பிக்கை கொண்டவர்களும் இறைவனின் உதவியால் மகிழ்ச்சியடைந்திடுவர். இறைவன் எவர்களைத் தேர்ந்தெடுக்கின்றானோ அவர்களுக்கு அவன் உதவி புரிகின்றான். அவன் மிகுந்த மகத்துவத்திற்குரியவனும் மிகுந்த அருள்புரிபவனும் ஆவான். இது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும்.

அல்லாஹ் தன் வாக்குறுதியை மீறுவதில்லை. ஆயினும் பெரும்பாலார் இறைவனுடைய வல்லமைகளைத் தெரியாதவர்களாகவே இருக்கின்றனர்.'' *(திருக்குர்ஆன் 30:3-7)*

இச்செய்தி அறிவிக்கப்பட்டு சில ஆண்டுகள் கழிந்த உடனேயே இறைவன் இந்த முன்னறிவிப்பை நிறைவேற்றி விட்டான். ஒருபக்கம் ரோமானியர்கள் ஈரானியர்களைத் தோற்கடித்து தமது நாட்டை சுதந்திர நாடாக ஆக்கிக் கொண்டனர். ஏற்கனவே அறிவிக்கப்பட்டதுபோன்று மறுபக்கம் இதே நாட்களில் மக்கத்தினர்களுக்கு எதிராக முஸ்லிம்களுக்கு வெற்றிகள் கிடைக்கத் தொடங்கின. இதே வேளையில் மக்கத்தினர்களோ முஸ்லிம்களின் கருத்துக்களைக் கேட்பதிலிருந்து ஏனைய மக்களைத் தடுத்தும் முஸ்லிம்களின்மீது அநீதியிழைக்குமாறு அவர்களைத் தூண்டியும் இஸ்லாத்திற்கு முடிவு கட்டி விடலாம் என்று நினைத்துக் கொண்டும் இருந்தனர். இறைவனுடைய வசனமோ தொடர்ந்து இஸ்லாத்தின் வெற்றிகளைக் குறித்து செய்திகளை வழங்கிக் கொண்டிருந்தது. மக்கத்தினர்களின் அழிவு காலம் மிகவும் அண்மையில் வந்து கொண்டிருக்கிறது என்றும் அது அறிவித்துக் கொண்டிருந்தது.

எனவே, இதே நாட்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பின்வரும் இறையறிவிப்பை மிகுந்த கம்பீரத்தோடு அறிவித்தார்கள்:

''முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது இறைவனிடமிருந்து தமக்கு ஏதாவது அடையாளம் ஏன் கொண்டு வருவதில்லை என்று மக்கத்தினர் கூறுகின்றனர். அவர்களை(முஹம்மது நபியை)க் குறித்து இதற்கு முன் தோன்றிய நபிமார்களின் முன்னறிவிப்புகள் இந்த மக்கத்தினருக்கு போதுமான அடையாளங்களாக இல்லையா? இஸ்லாத்தைப் பற்றி முழுமையாக அறிவிப்பதற்கு முன்னாலேயே மக்கத்தினரை நாம் அழித்து விட்டால் எங்களுடைய இறைவா நீ ஏன் எங்களுக்கு ஒரு தூதரை அனுப்பவில்லை? அவ்வாறு நீ அனுப்பி இருந்தால் நாங்கள் இழிவிற்கும் அவமானத்திற்கும் ஆளாவதற்கு முன் உனது போதனைகளைப் பின்பற்றி நடந்திருப்போமே என்று மக்கத்தினர்களால் சொல்ல முடிந்திருக்கும். நீர் கூறுவீராக: ஒவ்வொருவரும் தமக்குரிய நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கட்டும். எனவே, நீங்களும் அந்த நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருங்கள். சான்றுகளை முழுமையாகக் காட்டி நிரூபிக்கப்பட்டதும் இறைவன் காட்டிய நேர்வழியில் நடந்து செல்வது யார் என்பதை நீங்கள் நிச்சயமாகப் புரிந்து கொள்வீர்கள்'' *(திருக்குர்ஆன் 20:134-136)*

ஒவ்வொரு நாளும் இறைவனுடைய புதிய அறிவிப்பு அருளப்பட்டுக் கொண்டிருந்தது. ஒவ்வொரு நாளும் அவ்வறிவிப்பு இஸ்லாத்தின் வெற்றியைக் குறித்தும் நிராகரிப்பாளர்களின் தோல்வியைக் குறித்தும் செய்திகளை வழங்கிக் கொண்டிருந்தது.

மக்கத்தினர் ஒரு பக்கம் தமது வலிமையையும் மேன்மையையும் கண்டனர். மறுபக்கம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பலவீனத்தையும் அவர்களின் தோழர்களின் பலவீனத்தையும் கண்டனர். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட அறிவிப்பில் இறைவனுடைய உதவிகளையும் முஸ்லிம்களின் வெற்றிகளையும் பற்றிய செய்திகளை அவர்கள் படித்துக் கொண்டிருந்தனர்.

இதனால் வியப்பிற்காளான தமக்குத்தான் பைத்தியம் பிடித்து விட்டதா? அல்லது முஹம்மது(நபிகள் நாயகம் (ஸல்) அவர்களு)க்குத்தான் பைத்தியம் பிடித்து விட்டதா என்று யோசித்தனர்.

நம்முடைய அநீதிகளினாலும் நம்முடைய வரம்பு மீறிய செயல்களினாலும் முஸ்லிம்கள் இப்போது நம்பிக்கையிழந்து நம்மிடம் வந்து சேர வேண்டுமென்ற எண்ணத்தையும் முஹம்மது (நபிகள் நாயகம் (ஸல்) அவர்களு)க்கும் அவர்களின் தோழர் களுக்கும் தமது வாதங்களில் சந்தேகங்கள் உருவாக வேண்டுமென்ற எண்ணத்தையும் மக்கத்தினர்கள் கொண்டிருந்தனர்.

ஆனால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ இவ்வாறு அறிவித்துக் கொண்டேயிருந்தார்கள்.

''மக்கத்தினர்களே! உங்களுடைய எண்ணங்கள் சரியானவையல்ல. நீங்கள் காண்பவற்றைக் கொண்டும், இதுவரை உங்களுடைய பார்வைகளிலிருந்து மறைந்திருப்பவற்றைக் கொண்டும் நான் ஆணையிட்டுக் கூறுகின்றேன். இந்தக் குர்ஆன் மிகவும் மதிப்பிற்குரிய ஒரு தூதரின் வாய்வழியாக

உங்களுக்குக் கூறப்படுகிறது. இது ஒரு கவிஞருடைய வசனமன்று. ஆனால் உங்களுடைய உள்ளத்தில் குறைவாகவே நம்பிக்கை ஏற்படுகின்றது. இது குறி சொல்லும் ஒருவனின் வசனமன்று. ஆனால் பரிதாபம் என்னவென்றால் நீங்கள் குறைவாகவே அறிவுரையைப் பெறுகின்றீர்கள். இது எல்லா உலகங்களையும் படைத்த இறைவனிட மிருந்து இறக்கப்பட்டதாகும். எல்லா உலகங்களையும் படைத்த இறைவனாகிய நாம் உங்களிடம் சொல்லிக் கொள்கிறோம். இவர் ஒரு வசனத்தையாவது பொய்யாக இயற்றி அது நம்மிடமிருந்து அருளப்பட்டது என்று கூறியிருந்தால் நாம் இவருடைய வலக்கரத்தைப் பிடித்து இவருடைய உயிர் நாடியைத் துண்டித்திருப்போம். நீங்கள் யாவரும் ஒருங்கிணைந்து இவரைக் காப்பாற்ற விரும்பினாலும் அந்த தண்டனையிலிருந்து இவரைக் காப்பாற்ற உங்களால் முடியாது. ஆனால், இந்தக் குர்ஆன் இறையச்சம் கொண்டவர்களுக்கு ஓர் அறிவுரையாகும். இந்தக் குர்ஆனை பொய்யாக்குபவர்களும் உங்களில் இருப்பதை நாம் அறிவோம். இதன் போதனை இதனை மறுப்பவர்களின் உள்ளத்தில் துயரத்தை உருவாக்கிக் கொண்டிருப்பதையும் நாம் அறிவோம். இதனால் அவர்கள் இப்போதனை நம்மிடம் இருந்திருக்கக் கூடாதா என்று கூறுகின்றனர். இந்தக் குர்ஆனில் சொல்லப்பட்ட செய்திகள் எல்லாம் சொல்லுக்குச் சொல் நிறைவேறியே தீரும் என்பதையும் நாம் அறிவோம். எனவே, முஹம்மத் (ஸல்) அவர்களே! இந்த மக்களின் எதிர்பார்ப்புகளை பொருட்படுத்த வேண்டாம். மிகவும் மேன்மைக்குரிய உங்கள் இறைவனுடைய பெயரின் மகத்துவத்தை விளக்கிக் கொண்டேயிருங்கள்." *(திருக்குர்ஆன் 69:39-53)*

இறுதியாக, மூன்றாவது ஹஜ்ஜின் காலமும் வந்தது. மிகவும் அதிகமானவர்களைக் கொண்ட முஸ்லிம்களின் குழு ஒன்று மதீனாவிலிருந்து மக்காவிற்கு வந்தது. மக்கத்தினர்களின் எதிர்ப்பின் காரணமாக மதீனாவாசிகள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தனியாகச் சந்திக்க விழைந்தனர்.

மதீனாவிற்கே ஹிஜ்ரத் - இடம் பெயர்ந்து செல்ல வேண்டும் என்று இறைவன் விதித்திருக்கின்றானோ என்ற எண்ணம் இப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்டது. எனவே, அவர்கள் நம்பத்தகுந்த தங்களுடைய உறவினர்களிடத்தில் தங்களுடைய எண்ணங்களை வெளியிட்டார்கள். அவ்வுறவினர்கள் அவர்களிடம் தாங்கள் அவ்வாறு செய்ய வேண்டாம். மக்கத்தினர்கள் பகைவர்களாக இருப்பது உண்மைதான். ஆயினும் இங்கு தங்களுடைய உறவினர்களுள் மாபெரும் செல்வாக்குப் பெற்றவர்கள் உள்ளனர். மதீனாவில் என்ன நடக்குமென்று என்ன தெரியும்? அங்கு தங்களுடைய உறவினர்களால் தங்களுக்கு உதவி செய்ய முடியுமோ முடியாதோ யாருக்குத் தெரியும் என்று கூறத் தொடங்கினர்.

ஆனால் மதீனாவுக்கு ஹிஜ்ரத் - இடம் பெயர்ந்து செல்வது இறைவனுடைய தீர்ப்பு என்பதை அவர்கள் நன்கு புரிந்து கொண்டதால் தங்களுடைய உறவினர்களின் கூற்றுக்களை புறக்கணித்து விட்டு மதீனாவுக்குச் செல்ல முடிவு செய்து விட்டார்கள்.

ஒருநாள் நள்ளிரவுக்குப் பின் அகபா என்னும் பள்ளத்தாக்கில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் மதீனாவின் முஸ்லிம்களும் ஒன்று கூடினர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அவர்களின் சிறிய தந்தை அப்பாஸ் (ரலி) அவர்களும் உடனிருந்தார்கள். இம்முறை மதீனாவிலிருந்து வந்த முஸ்லிம்களின் எண்ணிக்கை எழுபத்து மூன்று. *(ஆதாரம் : இப்னு ஹிஷாம் தொகுதி 1 பக்கம் 154)* இவர்களுள் அறுபத்தி இரண்டு பேர் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களும் பதினோரு பேர் அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களுமாவர். இக்குழுவில் வந்த இரு பெண்களுள் பனீ நஜ்ஜா கோத்திரத்தைச் சேர்ந்த உம்மே அம்மாரா என்னும் பெண் ஆவார்.

முஸ்அப் (ரலி) அவர்களின் மூலமாக மதீனா மக்களுக்கு இஸ்லாத்தின் விளக்கங்கள் கிடைத்ததனால் அவர்கள் இஸ்லாத்தின் மீது உறுதியான நம்பிக்கைக் கொண்டிருந்தனர். இதற்குப் பின்னர் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அவர்கள் வருங்காலத்தின் இஸ்லாத்தின் தூண்களாக விளங்கப் போகிறார்கள் என்பதை நிரூபித்தன. இதற்கு உம்மே அம்மாரா அவர்கள் ஓர் உதாரணம்.

மதீனா முஸ்லிம்களுடன் இணைந்திருந்த உம்மே அம்மாரா (ரலி) அவர்கள் தமது குழந்தைகளின் உள்ளத்தில் இஸ்லாத்தின் மீது அளவற்ற பற்றை உருவாக்கி விட்டார்கள். இவர்களின் மகன் ஹபீப் (ரலி) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பின்னர் நடந்த ஒரு போரில் முஸைலமா கத்தாபுடைய படைவீரர்களால் சிறைப்பிடிக்கப்பட்டார்கள்.

முஸைலமா என்பவன் அவர்களை அழைத்து 'முஹம்மது அல்லாஹ்வின் தூதர் என்று நீ சாட்சி கூறுகின்றாயா?' எனக் கேட்ட போது 'ஆம்' என்று ஹபீப் அவர்கள் பதிலளித்தார்கள். பிறகு, 'நான் அல்லாஹ்வின் தூதர் என்று நீ சாட்சி பகர்கின்றாயா?' என்று முஸைலமா என்பவன் கேட்டதற்கு 'இல்லை' என்று பதில் அளித்தார்கள். இதனால் அவர்களின் ஓர் உறுப்பை துண்டித்து விடுமாறு முஸைலமா கட்டளையிட்டான். பின்னர் 'முஹம்மது அல்லாஹ்வின் தூதர் என நீ சாட்சி கூறுகிறாயா?' என்று அவர்களிடம் வினவியதற்கு 'ஆம்' என்றார்கள். பிறகு, 'நான் அல்லாஹ்வின் தூதர் என்று நீ சாட்சி பகர்கின்றாயா?' என்று கேட்டதற்கு 'இல்லை' என்று ஹபீப் அவர்கள் பதிலளிக்க அவர்களுடைய மற்றொரு உறுப்பையும் துண்டித்து விடுமாறு அவன் கட்டளையிட்டான். இவ்வாறு ஒவ்வொரு உறுப்பையும் துண்டித்ததன் பிறகு 'நான் அல்லாஹ்வின் தூதர் என்று நீ சாட்சி பகர்வாயாக' என்று வினவிக் கொண்டே இருந்தான். ஹபீப் அவர்களோ 'மாட்டேன்' என்று பதிலளித்துக் கொண்டே இருந்தார்கள். இவ்வாறாக, அவர்களின் எல்லா உறுப்புகளும் துண்டிக்கப்பட்டன.

இறுதியாக, இவ்வாறு அவர்கள் துண்டு துண்டாக வெட்டப் பட்டு தமது நம்பிக்கையை பிரகடனம் செய்து கொண்டே இறைவனை அடைந்தார்கள். ஹபீப் அவர்களின் தாயார் உம்மே அம்மாரா (ரலி) அவர்கள் கூட நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பல்வேறு போர்களில் பங்கேற்றுள்ளார்கள்.

ஆகவே, மதீனாவிலுருந்து வந்த அந்தக் குழுவினர் பற்று மிக்கவர்களாகவும் உறுதியான நம்பிக்கையுள்ளவர்களாகவும் இருந்தனர். அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் செல்வத்தைப் பெறுவதற்காக வரவில்லை. மாறாக, ஈமானைப் பெறுவதற்காக மட்டுமே வந்தார்கள். அது அவர்களுக்கு மிகுதியாக கிடைத்தது.

அப்பாஸ் (ரலி) அவர்கள் மதீனாவிலிருந்து வந்த முஸ்லிம்களை விளித்து, 'கஸ்ரஜ் கோத்திரத்தினரே! எனது இந்த மகன் எங்களுடைய சமுதாயத்தில் மதிப்புமிக்கவராவார். இவருடைய சமுதாய மக்கள் முஸ்லிம்களாகட்டும்; அல்லது முஸ்லிம்கள் அல்லாதவர்களாகட்டும். இவரைப் பாதுகாத்து வருகின்றனர். ஆனால் இவர் இப்போது உங்களிடம் வர முடிவு செய்துள்ளார்.

கஸ்ரஜ் கோத்திரத்தினரே! இவர் உங்களிடம் வந்தால் எல்லா அரபு மக்களும் உங்களுக்கு எதிரிகளாகி விடுவர். நீங்கள் உங்களுடைய பொறுப்பை உணர்ந்து கொண்டும், இவருடைய மார்க்கத்தை பாதுகாப்பதில் ஏற்படவிருக்கின்ற பயங்கரமான ஆபத்துக்களை புரிந்து கொண்டும், இவரை அழைத்துச் செல்ல விரும்பினால் மகிழ்ச்சியோடு அழைத்துச் செல்லுங்கள். இல்லையென்றால் இந்த எண்ணத்தை கைவிட்டு விடுங்கள்' என்றார்கள்.

இக்குழுவிற்கு தலைவராக இருந்த அல்பரா என்பவர், 'தாங்கள் கூறியவற்றை நாங்கள் புரிந்து கொண்டோம். எங்களுடைய எண்ணத்தில் நாங்கள் உறுதியானவர்களாக இருக்கின்றோம். எங்களுடைய உயிர்கள் இறைவனுடைய நபியின் பாதங்களில் அர்ப்பணம். இப்பொழுது தீர்மானிக்க வேண்டியது இந்த நபியின் விருப்பமாகும். இவர்களின் ஒவ்வொரு தீர்மானத்தையும் நாங்கள் ஏற்றுக் கொள்வோம்' என்றார்.

இது கேட்டு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மக்களுக்கு இஸ்லாத்தின் போதனையை விளக்கினார்கள். இறைவனுடைய ஏகத்துவத்தை நிலைநாட்டுவது பற்றிய போதனையைச் செய்தார்கள். அவர்களுடைய மனைவிகளையும் குழந்தைகளையும் பாதுகாப்பது போன்று இஸ்லாத்தைப் பாதுகாக்க அவர்கள் வாக்குறுதி அளித்தால் அவர்களுடன் தாங்கள் செல்லத் தயார் என்றார்கள். அவர்கள் தங்களுடைய உரையை முடிப்பதற்கு முன் மதீனாவின் (இக்குழுவிலுள்ள) எழுபத்தி மூன்று உயிர்த்தியாகிகளும் ஒன்றுபட்டு, 'நாங்கள் வாக்குறுதி அளிக்கின்றோம்; நாங்கள் வாக்குறுதி அளிக்கின்றோம்' என்று உரத்த குரலில் முழங்கினார்கள். இப்பொழுது அவர்களுக்கிருந்த ஆர்வத்தில் மக்கத்தினர்களின் விஷமத்தனங்களைப் பற்றிய எண்ணமே அவர்களுக்கு ஏற்பட வில்லை. அவர்களின் முழக்கங்கள் அப்பகுதியில் எதிரொலிகளை உண்டாக்கின.

அப்பாஸ் (ரலி) அவர்கள், அவர்களை எச்சரித்து, 'மவுனமாக இருங்கள்; மவுனமாக இருங்கள். மக்கத்தினர்களுக்கு இந்நிகழ்ச்சி எதுவும் தெரிந்து விடக் கூடாது' என்றார்கள். ஆனால்,

இப்பொழுது அவர்களுக்கு உறுதியான நம்பிக்கை ஏற்பட்டு விட்டதனால் அவர்களின் பார்வையில் மரணம் என்பது அற்பமானதாய் விட்டது.

அப்பாஸ் (ரலி) அவர்களின் கூற்றைக் கேட்டு அக்குழுவினரின் தலைவர், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாங்கள் பயந்தவர்கள் அல்லர். தாங்கள் எங்களுக்கு அனுமதி தாருங்கள். இப்பொழுதே மக்கத்தினர்களுடன் போரிட்டு அவர்கள் தங்களுக்கு இழைத்த அநீதிகளுக்கு பழிவாங்கிட நாங்கள் ஆயத்தமாய் உள்ளோம்' என்றார்கள். இதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'அவர்களை எதிர்த்துப் போரிட இறைவன் எனக்கு இதுவரை கட்டளையிட வில்லை' என்றார்கள். இதன் பின்னர் மதீனாவாசிகள் அவர்களிடம் பைஅத் - உடன்படிக்கை செய்தனர். இவ்வாறு (அப்போதைய) அமர்வு நிறைவுற்றது.

இந்நிகழ்ச்சியின் இரகசியச் செய்தி மக்கத்தினர்களுக்கு கிடைக்கவே அவர்கள் மதீனாவின் தலைவர்களிடம் சென்று முறையீடு செய்தனர். அப்துல்லாஹ் இப்னு உபைய் இப்னு ஸலூல் என்பவன் மதீனாவின் குழுவிற்குத் தலைவனாக இருந்தான். இந்நிகழ்ச்சி குறித்து அவனுக்கே தெரியாததால் அவன் அவர்களுக்கு ஆறுதல் கூறி முற்றிலும் பொய்யான வதந்திகளையே அவர்கள் கேள்விப்பட்டிருப்பதாகவும் அவ்வாறான நிகழ்ச்சி நிகழவில்லை என்றும் ஏனென்றால், தன்னிடம் கலந்தாலோசிக்காமல் எந்த காரியத்தையும் மதீனாவின் மக்களால் செய்ய இயலாது என்றும் கூறினான்.

ஆனால், இப்பொழுது மதீனாவின் மக்களுடைய உள்ளங்களில் ஷய்த்தானுக்குப் பதிலாக இறைவனுடைய ஆட்சி நிலைநாட்டப் பெற்று விட்டது என்பது அவனுக்கு எவ்வாறு தெரியும்? இதன் பின்னர் மதீனாவின் குழுவினர் தமது ஊருக்குத் திரும்பி விட்டனர்.

## மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செல்லுதல்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களின் தோழர்களும் மதீனாவிற்கு ஹிஜ்ரத் - இடம்பெயர்ந்து செல்வதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டனர். மக்காவிலிருந்து ஒவ்வொரு குடும்பமாக மறையத் தொடங்கிற்று. இப்பொழுது இறைவனின் ஆட்சியை எதிர்நோக்கிக் கொண்டிருந்த முஸ்லிம்கள் தைரியம் பெற்று விட்டனர்.

சில சமயம் ஒரு இரவிலேயே மக்காவின் ஒரு தெருவிலுள்ள எல்லா வீடுகளும் பூட்டப்பட்டிருந்தன. மறுநாள் காலை மக்கா நகரில் உள்ளவர்கள் அத்தெரு அமைதியாக இருப்பது பற்றி விசாரித்தபோதுதான் அத்தெருவிலுள்ள எல்லாரும் மதீனாவிற்கு சென்று விட்டனர் என்று அவர்கள் தெரிந்து கொண்டனர். மக்கத்தினர் களுக்குள்ளேயே பரவிக் கொண்டிருந்த இஸ்லாத்தின் இத்தகு ஆழமான விளைவுகளைக் கண்ட அவர்கள் வியப்படைந்து விட்டனர்.

இவ்வாறு பெரும்பாலான முஸ்லிம்கள் மக்காவை விட்டு வெளியேறி விட்டனர். முஸ்லிம்களாக மாறிய சில அடிமைகளும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் மக்காவில் தங்கியிருந்தனர்.

இப்பொழுது தமது வேட்டைக்குரியவர்கள் தம் கரங்களை விட்டும் வெளியேறிக் கொண்டிருப்பதைக் கண்ட மக்கா தலைவர்கள் மீண்டும் ஒருமுறை ஒன்றுகூடி ஆலோசனை செய்து விட்டு 'இப்போது முஹம்மதை கொன்று விடுவதுதான் சரியான ஒரே வழி' என்ற முடிவிற்கு வந்தனர்.

இறைவனது சிறப்பான ஏற்பாட்டினால் அவர்களைக் கொன்று விட முடிவு செய்திருந்த நாளும், அவர்கள் இடம்பெயர்ந்து செல்லவிருந்த நாளும் ஒரே நாளாக அமைந்து விட்டது; அவர்களைக் கொலை செய்வதற்காக அவர்களின் வீட்டின் முன் மக்கத்தினர் ஒன்றுதிரண்டிருந்தபொழுது, அவர்கள் அந்த இரவின் இருளில் மதீனாவிற்கு ஹிஜ்ரத் - இடம்பெயர்ந்து செல்லும் நோக்கத்துடன் தங்கள் வீட்டிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தார்கள். தாங்கள் எடுத்திருக்கும் முடிவைப் பற்றிய செய்தி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கிடைத்திருக்கும் என மக்கத்தினர் களுக்கு கட்டாயம் ஐயம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த மக்களுக்கு முன்னாலேயே அவர்களைக் கடந்து சென்றபோது இவர் முஹம்மது அல்ல; வேறொருவர் என்றே எண்ணிக் கொண்டனர். எனவே, தாங்கள் இங்கு வந்திருக்கும் நோக்கங்கள் பற்றிய செய்தி முஹம்மது (ஸல்) அவர்களுக்கு தெரிந்து விடக்கூடாதே என்பதற்காக அவர்களைத் தாக்குவதற்குப்

பதில் முண்டியடித்துக் கொண்டு அவர்கள் தங்களை கண்டு கொள்ளாத விதத்தில் மறைந்துக் கொண்டனர்.

அந்த இரவுக்கு முந்தைய பகலில்தான் தங்களுடன் ஹிஜ்ரத் செல்வதற்காக ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுக்கு செய்தி அனுப்பப்பட்டிருந்தது. எனவே, அவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு இணைந்து விட்டார்கள். இருவரும் சந்தித்து சிறிது நேரத்தில் மக்காவிலிருந்து பயணமானார்கள்.

அவ்விருவரும் மக்காவிலிருந்து மூன்று அல்லது நான்கு மைல்கள் தொலைவிலுள்ள மலைக்குன்று ஒன்றின்மேல் அமைந்திருந்த தவ்ர் என்னும் குகையில் அடைக்கலம் புகுந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து வெளியேறிவிட்டார்கள் என்ற செய்தி மக்கத்தினர்களுக்கு தெரிந்ததும், ஒரு படையினைத் திரட்டி அவர்களைப் பின்தொடரச் செய்தனர். அப்படையினர் தம்முடன் ஒரு வழிகாட்டியையும் அழைத்துச் சென்றனர். அவர்கள் எல்லாரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலடியின் தடையங்களை பின்பற்றிக் கொண்டே அந்தத் தவ்ர் குகையை அடைந்து விட்டனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களும் ஒளிந்திருந்த அக்குகையின் வாசலை சென்றடைந்த அந்த வழிகாட்டி, ‘ஒன்று, முஹம்மது இக்குகையினுள் இருக்க வேண்டும்; அல்லது இங்கிருந்து விண்ணிற்குச் சென்றிருக்க வேண்டும்’ என்று உறுதியாகக் கூறினான்.

இவனது இக்கூற்றைக் கேட்டு, கலக்கமடைந்த ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், ‘பகைவன் நம்மை மிகவும் நெருங்கி வந்து விட்டான். எந்த நொடிப்பொழுதிலும் குகைக்குள் நுழைந்து விடுவான்’ என்று மெல்லிய குரலில் கூறினார்கள். இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ***‘லா தஹ்ஸன் இன்னல்லாஹ மஅன’*** - ‘அபூபக்கர் அவர்களே! நீங்கள் அஞ்ச வேண்டாம். இறைவன் நம்முடன் இருக்கின்றான்’ என்றார்கள். *(புகாரி - மனாகிபுல் முஹாஜிரீன் என்ற பாடம்)* ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் ‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனது உயிருக்காக நான் அஞ்சவில்லை. ஏனென்றால் நான் ஒரு சாதாரண மனிதன். நான் கொல்லப்பட்டால், ஒரேயொரு மனிதன் மட்டுமே கொல்லப்பட்டவனாவான். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களுடைய உயிருக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்து விட்டால் உலகில் ஆத்மீகம் அழிந்து மார்க்கம் என்ற பெயரே உலகிலிருந்து மறைந்து விடுமே என்றுதான் நான் அஞ்சுகின்றேன்’ என்றார்கள். இதற்கு அவர்கள், ‘துயரப்பட வேண்டாம். இங்கு நாம் இருவர் மட்டுமல்ல; மூன்றாவதாக இறைவனும் நம்முடன் இருக்கிறான்’ என்றார்கள்.

இறைவன் இஸ்லாத்தை வளர்த்து அதற்கு முன்னேற்றத்தை வழங்கும் காலம் இப்போது நெருங்கி வந்து விட்டது. மக்கத்தினர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த காலக்கெடுவும் முடிவடைந்து விட்டது. எனவே மக்கத்தினர்களின் கண்களின்மீது இறைவன் திரைபோட்டு விட்டதனால் அவர்கள் தமது வழிகாட்டியைப் பழித்துப் பரிகசிக்கத் தொடங்கினர். அவர்கள் அவனிடம் ‘இந்த திறந்த வெளியில்தான் பாதுகாப்பிற்காக தஞ்சம் புக வேண்டுமா? இது அதற்கேற்ற இடமன்று. மேலும் இவ்விடத்தில் அதிகமான பாம்புகளும், தேள்களும் வசிக்கின்றன. அறிவுள்ள எவனும் இவ்விடத்தை பாதுகாப்பிற்காக தேர்ந்தெடுத்துக் கொள்ளவேமாட்டான்’ என்றார்கள்.

இவ்வாறு கூறிய அவர்கள் அக்குகையினுள் எட்டிப் பார்க்காமல் அவ்வழிகாட்டியைப் பார்த்து நகைத்து விட்டு வந்த வழியே திரும்பிச் சென்று விட்டனர்.

அவ்விருவரும் இரண்டு நாட்கள் அக்குகையினுள்ளேயே தங்கியிருந்த பின்னர் ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி இரவில் அக்குகையின் பக்கம் இரு ஒட்டகங்கள் கொண்டு வரப்பட்டன. மிக வேகமாகச் செல்லக்கூடிய இந்த இரண்டு ஒட்டகங்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களின் தோழரும் பயணம் மேற்கொண்டனர். ஓர் ஒட்டகத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் வழிகாட்டி ஒருவரும் சவாரி செய்தனர். மற்றொரு ஒட்டகத்தில் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களும் அவர்களின் ஊழியர் ஆமிர் பின் ஃபுஹைரா அவர்களும் சவாரி செய்தனர்.

மதீனாவிற்குப் புறப்படுவதற்கு முன்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் முகத்தை மக்காவின் பக்கம் திருப்பிக் கொண்டு எந்தத் தூய்மையான நகரில் தாங்கள் பிறந்து வளர்ந்தார்களோ, எங்கு தாங்கள் நபியாக எழுப்பப்பட்டார்களோ, எங்கு ஹஸ்ரத் இஸ்மாயீல் நபி (அலை) அவர்களின் காலத்திலிருந்தே தங்களின் மூதாதையர்கள் வாழ்ந்து வந்தார்களோ அத்தகு நகரத்தை கடைசியாகப் பார்த்து மிக்க வருத்தத்துடன் அதனை நோக்கி ‘மக்கா நகரமே! நான் உன்னை எல்லா இடத்தை விடவும் மிக அதிகமாக நேசிக்கின்றேன். ஆனால் உன் மக்கள் தாம் என்னை இங்கு வாழ விடவில்லை’ என்றார்கள்.

அப்போது ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களும் மிகுந்த வருத்தத்தோடு, ‘மக்கத்தினர்களாகிய இவர்கள் தங்கள் நபியை வெளியேற்றி விட்டார்கள். ஆகவே, இப்போது இவர்கள் கட்டாயம் அழிந்து போவார்கள்’ எனக் கூறினார்கள்.

*(ஸுர்கானீ தொகுதி 1 பக்கம் 328 - முஸ்னத் அஹ்மத் மற்றும் திர்மிதியை ஆதாரமாகக் கொண்டு)*

## நபிகள் நாயகத்தைப் பிடிக்கச் சென்ற ஸுராகாவும் அவரைப்பற்றிய முன்னறிவிப்பும்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் மக்கத்தினர்கள் தோல்வியடைந்தபோது முஹம்மது அல்லது அபூபக்கரை உயிருடனோ கொன்றுவிட்டோ வருபவருக்கு நூறு ஒட்டகங்கள் பரிசாக வழங்கப்படும் என்று அவர்கள் பிரகடனம் செய்தார்கள்.

இப்பிரகடனச் செய்தியை மக்காவிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் வாழ்ந்து வந்த கோத்திரங்களுக்குத் தெரிவிக்கப் பட்டது. இதனைக் கேட்ட ஸுரக்கா பின் மாலிக் என்னும் காட்டரபி தலைவர் ஒருவர், இப்பரிசைப் பெற்றிட வேண்டுமென்ற பேராசையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பிடித்துக் கொண்டுவரப் புறப்பட்டு விட்டார்.

தேடிச் சென்ற அவர், மதீனாவிற்குச் செல்லும் பாதையில் அவர்களைக் கண்டார். இரு ஒட்டகங்களையும் அவற்றில் சவாரி செய்பவர்களையும் கண்டு, அவர்கள் இருவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களின் தோழருமாகத்தான் இருக்கவேண்டுமெனக் கருதிய அவர், தமது குதிரையை அவர்களைப் பின்தொடர்ந்து வேகமாக விரட்டினார். ஆனால் பாதையில் குதிரை கடினமாகத் தடுமாறியதால் ஸுரக்கா கீழே விழுந்து விட்டார். ஸுராகா பின்னர் முஸ்லிமாகி விட்டார். அவர் தமது சம்பவத்தை தாமே இவ்வாறு கூறுகிறார்: ‘நான் குதிரையில் இருந்து கீழே விழுந்ததும், அரபு மக்களின் வழக்கிற்கேற்ப நான் எனது அம்புகளை எடுத்துச் சகுனம் பார்த்தேன். சகுனம் தீயதாக இருந்தது. எனினும் பரிசின் பேராசையினால், நான் மீண்டும் குதிரையின்மீது சவாரி செய்து அவர்களுக்குப் பின்னால் விரைந்து சென்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களின் ஒட்டகத்தின்மீது சவாரி செய்துகொண்டு, கம்பீரமாகச் சென்று கொண்டிருந்தார்கள். அவர்கள் என் பக்கமாகத் திரும்பிப் பார்க்கவேயில்லை. ஆனால் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் (நபிகள் நாயகத்திற்கு எந்தத் தீங்கும் ஏற்பட்டு விடக்கூடாதே என்ற அச்சத்தால்) அடிக்கடி முகத்தைத் திருப்பி என்னைப் பார்த்தார்கள்.

இரண்டாவது தடவை நான் அவர்களை நெருங்கிய போது, எனது குதிரை மீண்டும் கடினமாக இடறியதால் நான் கீழே விழுந்து விட்டேன். இதனால் நான் எனது அம்புகளை எடுத்து மீண்டும் சகுனம் பார்த்தேன். இம்முறையும் கெட்ட சகுனத்தையே காட்டியது. குதிரையின் கால்கள் மணலில் ஆழமாகப்புதைந்து விட்டதால், அக்கால்களை வெளியே எடுப்பது கூடச் சிரமமாக இருந்தது. இதனைக்கண்ட நான், இவ்விருவரும் இறைவனின் பாதுகாப்பில் உள்ளனர் என்று அப்போது புரிந்து கொண்டேன். எனவே அவர்களை அழைத்து, நில்லுங்கள்; என்னுடைய பேச்சைக் கேளுங்கள் என்றேன். அவர்கள் என்னிடம் வந்தபோது, நான் அவர்களிடம், தங்களைப் பிடித்துக் கொண்டு செல்லும் எண்ணத்தில் வந்தேன். ஆனால் இப்போது நான் எனது எண்ணத்தை மாற்றிக் கொண்டேன். இப்போது நான் திரும்பிச் செல்கின்றேன். ஏனென்றால், இறைவன் தங்களுடன் இருக்கின்றான் என்பதில் எனக்கு உறுதி ஏற்பட்டு விட்டது என்று கூறினேன்.

இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மிக்க நன்று; திரும்பிச் செல்க; ஆனால் எங்களைப் பற்றி எவரிடமும் தெரிவிக்கக்கூடாது என்றார்கள். அப்போது என்னுள்ளத்தில், இவர் உண்மையான மனிதராகக் காணப்படுகின்றார். ஆகவே என்றாவது ஒருநாள் இவர் கட்டாயம் வெற்றி பெற்றிடுவார் என்ற எண்ணம் தோன்றியது. இத்தகு எண்ணம் தோன்றியதும் நான் அவர்களிடம், தங்களுக்கு வெற்றி கிடைத்து, தாங்கள் தலைவராக திகழும் காலத்தில் எனது பாதுகாப்பிற்காக எனக்கொரு அமைதிப்பத்திரம் எழுதித் தாருங்கள் என்று வேண்டிக் கொண்டேன்.

எனக்கு அமைதிப்பத்திரம் எழுதித் தருமாறு ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களின் பணியாளர் ஆமிர் பின் ஃபுஹைராவுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பணித்தார்கள். இதன்படி அவர் அதனை எழுதிக் கொடுத்தார். *(புகாரி - ஹிஜ்ரத்துந்நபி (ஸல்) என்ற பாடம்)*

ஸுராகா திரும்பிச் செல்ல ஆயத்தமானவுடன் அவரின் வருங்கால நிலைமைகளைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறைவன் அறிவித்து விட்டான். அவர்கள் அவற்றை அவரிடம் கூறிவிட்டு, ஸுராகாவே! உமது கைகளில் கிஸ்ராவின் (ஈரான் நாட்டு மன்னரின்) பொற்காப்புகள் அணிவிக்கப்படும். அப்போது உமக்கு எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படும் என்று கேட்டார்கள். ஸுராகா வியப்படைந்து, ஈரான் நாட்டு மன்னர் கிஸ்ரா பின் ஹர்மஸின் பொற்காப்புகளையா? என்று வினவியதற்கு, 'ஆம்' என்றார்கள். *(ஸீரத்துல் ஹல்பிய்யா, பாகம் 2 பக்மக் 50)*

அவர்களின் இந்த முன்னறிவிப்பு பதினாறு அல்லது பதினேழு வருடங்களுக்குப் பின்னர் சொல்லுக்குச் சொல் நிறைவேறியது. ஸுராகா இஸ்லாத்தை தழுவி மதீனாவிற்கு வந்து விட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மறைவிற்குப் பின்னர் முதலில் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களும், அடுத்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் கலீஃபாக்களாகத் திகழ்ந்தார்கள். இஸ்லாத்தின் வளர்ச்சியையும் மேன்மையையும் கண்ட ஈரானியர்கள் முஸ்லிம்களின்மீது போர் தொடுத்தனர். முஸ்லிம்களை நசுக்குவதற்குப் பதிலாக அவர்கள் தாமே நசுக்கப்பட்டனர். ஈரானின் தலைநகர் வீழ்ந்ததால் அதன் கருவூலங்கள் முஸ்லிம்கள் வசமாயின. ஈரானிய அரசுப் பொருள்களுள் ஈரானிய வழக்கிற்கேற்ப, கிஸ்ரா தமது அரச பீடத்தில் வீற்றிருக்கும்போது அணிந்து கொண்டிருந்த பொற்க்காப்புகளும் இருந்தன.

ஸுராகா முஸ்லிமாக மாறிய பின்னர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்தின் போது தமக்கு நிகழ்ந்த இந்த நிகழ்ச்சியினைக் குறித்து முஸ்லிம்களிடம் மிகுந்த பெருமிதத்தோடு கூறிக்கொண்டிருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரை விளித்து, ஸுராகாவே! உமது கரங்களில் கிஸ்ராவின் பொற்காப்புகள் அணிவிக்கப்படும்போது உமக்கு எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படும் என்று கூறியதை முஸ்லிம்கள் தெரிந்தேயிருந்தனர்.

போரில் கிடைத்தப் பொருட்களைக் கொண்டு வந்து, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் முன் வைக்கப்பட்டதும், அவற்றுள் கிஸ்ராவின் பொற்காப்புகளை அவர்கள் கண்டபோது, அவர்களின் கண்களுக்கு முன்னால், ஏற்கனவே நடந்த நிகழ்ச்சிகளெல்லாம் காட்சியளித்தன. இறைத் தூதர் தங்களுடைய தாயகத்தைத் துறந்து மதீனாவிற்குச் செல்ல நேர்ந்த அந்தப் பலவீனமான ஒரு காலம், அவர்களைக் கொன்றோ, உயிருடனோ எவ்வகையிலாயினும் பிடித்துக் கொண்டு வந்து மக்கத்தினர்களிடம் ஒப்படைத்து விட்டால் நூறு ஒட்டகங்களுக்குத் தாம் அதிபதியாகி விடலாம் என்று நினைத்த ஸுராகாவும் மற்றவர்களும் அவர்களைப் பின்தொடர்ந்து குதிரைகளில் விரைந்து செல்லல், அப்போது அவர்கள் ஸுராகா விடம், உமது கரங்களில் கிஸ்ராவின் பொற்காப்புகள் அணிவிக்கப் படும்போது உமக்கு எந்த அளவு மகிழ்ச்சி ஏற்படும் என்று கூறுதல் இவையெல்லாம் அவர்கள் கண்முன் காட்சியளித்தன. எவ்வளவு பெரிய முன்னறிவிப்பு? மறைவாக இருந்த செய்தி எந்த அளவு தெளிவாயிற்று? என்று வியந்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், தங்களுக்கு முன்னால் கிஸ்ராவின் பொற்காப்புகளைக் கண்டதும் இறைவனது வல்லமையும் அவர்களின் கண்முன் தோற்றமளித்தது. ஸுராகாவை அழைத்து வருமாறு கட்டளையிட்டார்கள். அவர் அழைத்துக் கொண்டு வரப்பட்டதும், அவர்தம் கரங்களில் கிஸ்ராவின் பொற்காப்புகளை அணியுமாறு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவருக்குக் கட்டளை யிட்டார்கள். இதுகேட்டு ஸுராகா, இறைதூதரின் கலீஃபா அவர்களே! தங்கம் அணிவது

முஸ்லிம்(ஆண்)களுக்கு விலக்கப் பட்டுள்ளதே எனக் கூறியதற்கு, ஆம்; விலக்கப்பட்டுள்ளது தான். ஆயினும் இத்தகு சந்தர்ப்பங்களுக்காக அல்ல. மேன்மைக்குரிய இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உமது கைகளில் தங்கக்காப்புகள் அணிவிக்கப்பட்டிருப்பதாகக் காட்டினான். எனவே, நீர் இன்று இந்தப் பொற்க்காப்புகளை அணிய வேண்டும்; அல்லது நான் உமக்குத் தண்டனை வழங்குவேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஷரீஅத் சட்டத்தின் காரணத்தால் தான் ஸுராகா ஆட்சேபித்தார். இல்லையேல், அவரும் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு நிறைவேறுவதைப் பார்கக் விருப்பங்கொண்டவராகத்தான் இருந்தார். எனவே ஸுராகா அந்தப் பொற்காப்புகளைகத் தமது கைகளில் அணிந்து கொண்டார். மகத்தான முன்னறிவிப்பு நிறைவேறியதை முஸ்லிம்கள் தமது கண்களால் கண்டனர்.

மக்காவிலிருந்து ஓர் அகதியாக வெளியேறிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அரசராக ஆகிவிட்டார்கள். இப்போது அவர்கள் உலகிலிருந்து மறைந்து விட்டிருந்தாலும் அவர்களைப் பின்தொடர்ந்தவர்கள் அவர்களின் முன்னறிவிப்பு நிறைவேறியதைக் கண்டார்கள்!

## நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவில் குடியேறுதல்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸுராகாவை வழியனுப்பி வைத்து விட்டு சில மைல்கள் தூரத்தைக் கடந்து சென்று மதீனாவை அடைந்தார்கள். மதீனாவாழ் மக்கள் மிகவும் பொறுமை யற்றவர்களாக அவர்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். மக்காவில் தோன்றிய அந்தச் சூரியன், மதீனாவாசிகளின்மீது உதயமாயிற்று! இது அவர்களுக்கு கிடைக்கப்பெற்ற மிகவும் சிறப்பு வாய்ந்த மாபெரும் நற்பாக்கியமாகும்!!

மக்காவிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புறப்பட்ட செய்தி கிடைத்த நாளிலிருந்தே அன்னாரை எதிர்பார்த்து மதீனாவாழ் மக்கள் காத்திருந்தனர். அவர்களது குழு ஒவ்வொரு நாளும் மதீனாவிலிருந்து வெளியில் பல மைல்கள் தூரம் வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தேடுவதற்காக சென்றார்கள். காலையில் சென்றவர்கள் ஏமாற்றம் அடைந்து மாலையில் திரும்புவார்கள்.

இறுதியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு அருகில் வந்த போது, முதலில் (மதீனாவிற்குப் பக்கத்திலுள்ள ஒரு சிற்றூராகிய) குபாவில் தங்கிச் செல்ல தீர்மானித்தார்கள். யூதர் ஒருவர், அவர்களின் ஒட்டகங்கள் வருவதைக் கண்டதும், இந்தக் குழு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களினுடையதுதான் எனப் புரிந்து கொண்டார். எனவே, அவர் ஒரு மேட்டின் மீது ஏறி நின்று கொண்டு, கைலாவிற்குரிய மக்களே! (கைலா என்பது மதீனாவாசிகளுக்குரிய ஒரு பள்ளத்தாக்கு) நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர் வந்து விட்டார் என்று உரத்த குரலில் கூறினார். இக்குரலைக் கேட்டவுடனேயே மதீனாவிலுள்ள ஒவ்வொருவரும் குபாவை நோக்கி விரைந்தோடினர்.

இந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எளிமையை எடுத்துக் காட்டும் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. மதீனாவிலுள்ள பெரும்பாலான மக்கள் அவர்களின் தோற்றத்தைக் கண்டவர்களல்லர். குபாவிற்கு வெளியிலுள்ள ஒரு மரத்தடியில் அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். மதீனாவிலிருந்து விரைந்தோடிய வந்த மக்கள், அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிக்க எளிமையோடு உட்கார்ந்திருந்ததால் அவர்களைத் தெரிந்து கொள்ளாதவர்கள் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களைக் கண்டு, இவர்கள்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என நினைத்துக் கொண்டு, மிகுந்த மரியாதையோடு அவர்களின் பக்கமாக முகந்திருப்பிக் கொண்டு உட்கார்ந்து கொண்டனர். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் வயதில் குறைந்தவர்களாயினும் அவர்களின் தாடியில் சில வெள்ளை முடிகள் முளைத்திருந்தன. மேலும் அவர்களின் ஆடை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆடையை விடவும் சற்று உயர்ந்ததாக இருந்தது. இதனால் அவர்கள் இவர்கள்தாம் நபி என்று நினைத்துக் கொண்டனர்.

ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் இதனைக் கண்டபோது, மக்களுக்கு தவறான எண்ணம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது எனத் தெரிந்து கொண்டார்கள். உடனே அவர்கள் தமது மேலங்கியை

விரித்துப் பிடித்துக் கொண்டு, ‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களின்மீது வெயில் படுகின்றதனால், நான் தங்களின்மீது நிழல் விழுமாறு செய்கின்றேன்’ என்றார்கள். (புகாரி) நுட்பமான இம்முறையில், மக்களுக்கு ஏற்பட்ட தவறான எண்ணத்தை அவர்கள் களைந்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குபாவில் பத்து நாட்கள் தங்கியிருந்த பின்னர், மதீனாவாசிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மதீனாவிற்கு அழைத்துச் சென்றனர். அவர்கள் மதீனாவிற்குள் நுழைந்தபோது, அங்குள்ள ஆண்கள் பெண்கள் சிறுவர் ஆகிய எல்லாரும் வீடுகளிலிருந்து வெளியேறி தெருக்களில் வந்து மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்றனர். பெண்களும் சிறுவர்களும் பின்வரும் கவிதையைப் பாடினர்.

*தலஅல் பத்ரு அலைனா*
*மின்ஸனிய்யாத்தில் விதாயி*
*வஜபஷ் ஷுக்கு அலைனா*
*மாதாஆ லில்லாஹி தாயி*
*எய்யுஹல் மப்வூஸு ஃபீனா*
*ஜிஃத்த பில்அம்ரில் முத்தாயி*

பதினான்காவது இரவின் நிலா, விதாஃ என்னும் வளைவி லிருந்து எங்கள்மீது உதயமாயிற்று. இறைவன்பால் மக்களை அழைக்கும் ஒருவர் உலகில் உள்ளவரை, இப்பேருதவிக்கு இறைவனுக்கு நன்றி செலுத்துவது நம்மீது கடமையாகும். இறைவனால் எங்களிடத்தில் அனுப்பப்பட்ட தூதர் அவர்களே! தங்களின் கட்டளைக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு நடப்போம்!

*(ஸுர்கானீ தொகுதி 1, பக்கம் 35)*

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எத்திசையி லிருந்து மதீனாவிற்குள் நுழைந்தார்களோ, அத்திசை கிழக்குத் திசையன்று. ஆனால் பதினான்காவது இரவின் நிலாவோ, கிழக்குத் திசையிலிருந்து தோன்றுகின்றது. ஆகவே அக்கவிதையின் மூலம் மதீனாவிலுள்ள மக்கள் கொண்ட கருத்து இவ்வாறாகும்.

‘ஆத்மீக நிலாவே அசல் நிலாவாகும். இத்தகு நிலா இல்லாமல் இதுவரை நாம் இருளில் இருந்தோம். ஆனால் இப்பொழுது நமக்காக ஆத்மீக நிலா ஒன்று தோன்றியுள்ளது. இந்த ஆத்மீக நிலா எத்திசையிலிருந்து தோன்றியதோ, அத்திசையிலிருந்து விண்ணிலுள்ள நிலா தோன்றுவதில்லை.’

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவில் நுழைந்த நாள் திங்கட்கிழமையாகும். அவர்கள் தவ்ரு என்னும் குகையிலிருந்து வெளியேறிய நாளும் திங்கட்கிழமையேயாகும். அவர்களின் கையால் மக்கா வெற்றி கொள்ளப்பெற்ற நாளும் திங்கட்கிழமையேயாகும். இம்மூன்று நிகழ்ச்சிகளும் திங்கட் கிழமைகளிலேயே நிகழ்ந்ததென்பது மிகவும் வியப்பிற்குரியதே யாகும்.

அவர்கள் மதீனாவிற்குள் நுழைந்ததும், தனது இல்லத்திலேயே அவர்கள் தங்க வேண்டுமென மதீனாவிலுள்ள ஒவ்வொருவரும் விரும்பினர். அவர்கள் ஏறி வந்த ஒட்டகம் எந்தெந்த வீதிகளைக் கடந்து சென்றதோ, அந்தந்த வீதிகளிலுள்ள பல்வேறு குடும்பத்தினரும் தத்தமது வீட்டின் முன் நின்று கொண்டு, ‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இது எங்கள் வீடு. இது எங்கள் பொருள். இவை எங்கள் உயிர்கள். இவையெல்லாம் தங்களுக்கு தொண்டு செய்வதற்கு ஆயத்தமாயுள்ளன. அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களைப் பாதுகாக்கும் தகுதி எங்களுக்கே உள்ளது. ஆகவே தாங்கள் எங்களோடு தங்கிவிடுங்கள் என்று வேண்டிக் கொண்டிருந்தனர். மற்றுஞ்சிலர் மிகுந்த ஆர்வத்தால் முன்னேறி வந்து அவர்களை ஒட்டகத்திலிருந்து இறங்கச் செய்து தமது வீட்டிலேயே தங்க வைத்து விடவேண்டும் என்பதற்காக அவர்களின் ஒட்டகத்தின் கயிற்றைப் பிடித்துக் கொண்டனர். ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ எனது ஒட்டகத்தை விட்டுவிடுங்கள். இன்று இது இறைவனால் கட்டளையிடப் பெற்றுள்ளது. எனவே மேன்மைக்குரிய இறைவனின் நாட்டத்திற்கேற்ப, இது எங்கு நிற்க வேண்டுமோ அங்குதான் நிற்கும் என்று கூறிவிட்டார்கள்.

இறுதியாக மதீனாவின் ஒரு முனையிலுள்ள பனூ நஜ்ஜார் என்னும் கோத்திரத்தைச் சேர்ந்த அனாதைகளுக்குரிய ஒரு நிலத்திற்கு அருகில் சென்று அந்த ஒட்டகம் நின்று விட்டது. நாம் இங்கேயே

தங்க வேண்டுமென்பதே இறைவனின் நாட்டமாகத் தெரிகின்றது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிவிட்டு, இந்த நிலம் எவருக்குச் சொந்தமானது என்று வினவினார்கள். அந்த நிலம் சில அனாதைகளுக்குச் சொந்தமானதா யிருந்தது. அந்த அனாதைகளின் பொறுப்பாளர் முன் வந்து, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அனாதைகளாகிய இன்னார், இன்னாருக்குரிய நிலமாகிய இது, தங்களுக்கு அர்ப்பணம் என்றார். இதற்கு அவர்கள், எவருடைய பொருளையும் எம்மால் இலவசமாகப் பெற்றுக் கொள்ள இயலாது என்றார்கள். இறுதியாக அதற்கு ஒரு விலை நியமிக்கப் பெற்றது. பின்னர் அவ்விடத்தில் ஒரு மஸ்ஜிதும் தங்களுக்காக வீடுகளும் கட்டிக் கொள்ள அவர்கள் தீர்மானித்தார்கள்.

## ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்களின் வீட்டில் தங்கியிருத்தல்

இதன் பின்னர், மிகவும் அருகில் இருக்கும் வீடு யாருடையது? என்று அவர்கள் வினவியதற்கு, அபூஅய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் முன்வந்து, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னுடைய வீடே மிகவும் அருகில் உள்ளது. அது தங்களுக்குப் பணிசெய்திட ஆயத்தமாயுள்ளது எனக் கூறியதும் நீங்கள் வீட்டிற்குச் சென்று எமக்காக ஓர் அறையினை ஒதுக்கித் தருக என்றார்கள். அபூஅய்யூப் (ரலி) அவர்களின் வீடு மாடி வீடாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மாடி வீட்டை அவர்கள் ஒதுக்கினார்கள். ஆனால் தங்களைச் சந்திக்க வருபவர்களுக்கு சிரமம் ஏற்படும் என எண்ணியதால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கீழ் வீட்டைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்.

அன்ஸார் (உதவியாளர்கள் என்னும் மதீனாவிலுள்ள மக்)களுக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின்மீது மிக்க அதிகமான அன்பு ஏற்பட்டது. இதனை ஒரு நிகழ்ச்சி தெளிவுபடுத்துகின்றது:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் விருப்பத்திற் கேற்ப, கீழ் வீட்டிலேயே அவர்கள் தங்கிக் கொள்வதை ஹஸ்ரத் அபூஅய்யூப் (ரலி) அவர்கள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள். எனினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கீழ்வீட்டில் துயில் கொள்ளும்போது, நாம் மேல் வீட்டில் துயில் கொள்வோமாயின், நாம் அவமரியாதை காட்டியவர்களாவோம் என்ற எண்ணத்தால், அவர்களும் அவர்களின் துணைவியாரும் இரவு முழுவதும் கண்விழித்துக் கொண்டேயிருந்தனர். அதே இரவில் ஒரு பாத்திரத்திலுள்ள தண்ணீர் கொட்டி விட்டது. அத்தண்ணீர் கீழே ஒழுகி விடாதிருப்பதற்காக, அபூ அய்யூப் (ரலி) அவர்கள் ஓடோடிச் சென்று தங்கள் போர்வையினை அதில் போட்டு நனைத்தெடுத்து அவ்விடத்தை உலர்த்தினார்கள். காலையில் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து இரவில் நடந்தவற்றை எடுத்துக் கூறியதும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேல்வீட்டிற்குச் செல்ல சம்மதித்தார்கள். பின்னர் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் ஒவ்வொரு நாளும் உணவு தயாரித்து அவர்களுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சாப்பிட்ட பின்னர், வரும் எஞ்சிய உணவை அவ்வீட்டிலுள்ள எல்லாரும் சாப்பிட்டனர். சில நாட்கள் கழிந்த பிறகு, அவர்களுக்கு விருந்தளிப்பதில் நாங்களும் பங்குகொள்வோம் என்று ஏனைய அன்ஸாரிகளும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களின் சொந்த வீட்டிற்கான ஏற்பாட்டினைச் செய்து முடிக்கும்வரை அவர்களின் வீட்டிற்கு மதீனாவிலுள்ள முஸ்லிம்களுள் ஒவ்வொருவரும் முறை வைத்து உணவு அனுப்பிக் கொண்டேயிருந்தனர்.

## ஹஸ்ரத் நபிகள் நாயகத்தின் பணியாளர் அனஸ் (ரலி) அவர்களின் சாட்சி

மதீனாவிலுள்ள விதவைப் பெண் ஒருவருக்கு எட்டு அல்லது ஒன்பது வயதடைந்த அனஸ் என்னும் ஒரே மகன் இருந்தார். அவள் அவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கொண்டு வந்து, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களுக்குப் பணிசெய்திட என்னுடைய இந்த மகனை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று வேண்டிக் கொண்டாள். அவள் அவர்களின் மீது கொண்டிருந்த அன்பின் காரணத்தால் தன் மகனை தியாகம் செய்தாள். எனினும் தன் மகன் தியாகத்திற்கு அன்று; நிரந்தரமான வாழ்விற்காக அந்த மகன் ஏற்றுக்கொள்ளப்பெற்றார் என்பதை அவள் எவ்வாறு தெரிந்திருக்க முடியும்?

அனஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடனிருந்ததால் இஸ்லாத்தின் மாபெரும் அறிஞராக திகழ்ந்தார்கள். படிப்படியாக மாபெரும் செல்வந்தராகவும் மாறி விட்டார்கள். அவர்கள் நூறு ஆண்டுகளைவிடவும் அதிகமான வயதைப் பெற்றார்கள். இஸ்லாமிய ஆட்சியில் மிக்க மரியாதை யோடு நடத்தப் பெற்றார்கள். இத்தகு அனஸ் (ரலி) அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள்:

எனது சிறு வயதிலேயே நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பணிசெய்யும் பேற்றினைப் பெற்றேன். அவர்களின் ஆயுள் முழுவதும் அவர்களுடன் வாழ்ந்தேன். அவர்கள் எப்போதாவது என்னிடம் கடிந்து கொண்டதோ எப்போதாவது என்னை அதட்டியதோ என் சக்திக்கு அப்பாற்பட்ட பணியைச் செய்யுமாறு சொன்னதோ கிடையாது. *(முஸ்லிம் - பாகம் 2, கிதாபுல் ஃபளாயில்)*

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவில் வாழ்ந்து வந்த நாட்களில் அவர்களுக்குப் பணிபுரியும் வாய்ப்பு அனஸ் (ரலி) அவர்களுக்கு மட்டுமே கிடைத்திருந்தது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறந்த பண்புகள் குறித்து அனஸ் (ரலி) அவர்களின் சாட்சி மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

## மக்காவிலிருந்து குடும்பத்தினரை அழைத்து வரச் செய்தலும் மஸ்ஜிதே நபவிக்காக அடிக்கல் நாட்டுதலும்

சிறிது காலத்திற்குப் பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தம்மால் விடுதலை செய்யப்பட்ட ஸெய்து என்பவரை தங்களின் குடும்பத்தினரை அழைத்து வருவதற்காக மக்காவிற்கு அனுப்பி வைத்தார்கள். மக்காவைத் துறந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்றது திடீரென்று நிகழ்ந்ததால் மக்காவாசிகள் சற்று பதற்றமடைந்து இருந்தனர். இதனால் சிறிது காலம் வரை முஸ்லிம் களுக்கு அநீயிழைப்பதை தவிர்த்தனர். இந்நிலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குடும்பத்தினரும் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களின் குடும்பத்தினரும் மக்காவிலிருந்து செல்வதற்கு அவர்கள் தடை செய்யவில்லை. இதனால் இவ்விரு குடும்பத்தினரும் நலமாக மதீனா வந்தடைந்தனர். இக்காலக் கட்டத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏற்கனவே தம்மால் விலைக்கு வாங்கப்பட்ட நிலத்தில் முதலில் பள்ளிவாசல் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்கள். பின்னர் தங்களுக்காகவும் தங்களின் தோழர்களுக்காகவும் வீடுகளைக் கட்டினார்கள். இவற்றைக் கட்டி முடித்திட ஏறத்தாழ ஏழு மாதகாலம் பிடித்தது.

*1) புகாரி - பாபு ஹிஜிரத்துன்னபி (ஸல்) 2) ஸுர்கானீ பாகம் 1 பக்கம் 369)*

## இறைவனுக்கு இணை வைத்துக் கொண்டிருந்த மதீனாவின் கோத்திரங்கள் இஸ்லாத்தைத் தழுவுதல்

ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மதீனாவில் குடியேறிய சில நாட்களுக்குள் இறைவனுக்கு இணை வைத்துக் கொண்டிருந்த மதீனாவின் பல்வேறு கோத்திரங்களுள் பெரும்பாலார் முஸ்லிம்களாகி விட்டனர். எனினும், இவர்களுள் சிலர் முழு மனத்துடன் முஸ்லிம்களாகவில்லை. வெளிப்படையாக உண்மை முஸ்லிம்களுடன் இணைந்து கொண்டனர். இவ்வாறு முதல் தடவையாக முஸ்லிம்களுக்குள் நயவஞ்சகர்களின் ஒரு கூட்டத்தினரும் நுழைந்து விட்டனர். நாளடைவில் இவர்களுள் சிலர் உண்மையான நம்பிக்கைக் கொண்டு விட்டனர். மற்றுஞ்சிலர் தொடர்ந்து உண்மையான முஸ்லிம்களுக்கு எதிராக சதித்திட்டங்கள் வகுத்துக் கொண்டேயிருந்தனர். மதீனாவில் இன்னும் சிலர் வெளிப்படையாகக்கூட இஸ்லாத்தைத் தழுவாமல் இருந்தனர். ஆனால், இவர்களால் மதீனாவில் இஸ்லாத்தின் மகத்தான வலிமையினைக் கண்டு சகித்துக்கொண்டிருக்க முடியவில்லை. இதனால் இவர்கள் மதீனாவைத் துறந்து மக்காவிற்குச் சென்று விட்டனர்.

இவ்வாறாக, மதீனா உலகிலேயே ஏக இறைவனை மட்டும் வணங்கும் முதல் நகரமாக விளங்கியது. உண்மையிலேயே அக்காலத்தில் உலகில் இந்த நகரத்தைத் தவிர வேறெந்த நகரமோ சிற்றூரோ ஒரே இறைவனை மட்டும் வணங்கக்கூடியதாக இருந்ததில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களின் தோழர்களும் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்ற சில நாட்களுக்குள் இவர்களின்மூலமாக மேன்மைக்குரிய இறைவன் ஒரு நகரத்தை எல்லாம் வல்ல இறைவனாகிய தன்னை முழுமையாக வணங்கக்கூடியதாக உருவாக்கி விட்டான். இந்த நகரத்தில்

எந்த சிலை வணக்கமும் செய்யப்படவில்லை. வெளிப்படையான சிலை வணக்கமும் செய்யப்படவில்லை. மறைமுகமான சிலை வணக்கமும் செய்யப்படவில்லை. இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிக்க மகிழ்ச்சியினை தந்தது. அவர்களின் தோழர்களுக்கு இது மாபெரும் வெற்றியாகக் காட்சியளித்தது. ஆனால் இந்த மாற்றத்தால் இப்பொழுது முஸ்லிம்களுக்கு அமைதி கிடைத்து விட்டது என்று நினைத்து விடக் கூடாது. மதீனாவிலுள்ள அரபு மக்களுள் நயவஞ்சகர்களின் ஒரு கூட்டம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயிருக்கு உலை வைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது. அங்குள்ள யூதர்களும் சதித்திட்டங்கள் வகுத்துக் கொண்டிருந்தனர். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இத்தகு பயங்கரமான சூழ்நிலையினை உணர்ந்து மிக்க விழிப்புணர்வோடு இருந்தார்கள். தங்களுடைய தோழர்களையும் மிக்க விழிப்புணர்வோடு இருக்க வலியுறுத்தி வந்தார்கள். ஆரம்பத்தில் சில நாட்களாக அவர்கள் இரவு முழுவதும் விழித்துக்கொண்டேயிருக்கவும் நேர்ந்தது.

ஒரு தடவை அவ்வாறான நிலையில் இரவில் விழித்திருக்க நேர்ந்ததால் மிகவும் களைப்படைந்த போது இப்போது மிகவும் நம்பிக்கைக்குரிய ஒருவர் காவல் புரிந்தால் நான் துயில் கொள்வேன் என்று அவர்கள் கூறிய சற்று நேரத்தில் ஆயுதங்களின் ஓசையினைக் கேட்டு யார்? என்று வினவியதற்கு அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஸஃது பின் வக்காஸ் ஆகிய நான் தங்களுக்கு காவல் புரிந்திட வந்துள்ளேன் என பதில் குரல் வந்ததும் அவர்கள் நிம்மதியாக துயில் கொண்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவில் குடியேறியிருப்பது தங்கள்மீது மாபெரும் பொறுப்பைச் சுமத்தியிருப்பதையும் மதீனாவிலுள்ள பகைவர்களின் தாக்குதல்களி லிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களை பாதுகாப்பது தங்களின் கடமை என்பதையும் அன்ஸார் என்னும் உதவியாளர்கள் உணர்ந்தேயிருந்தனர். எனவே அவர்கள் தங்களுக்கிடையில் செய்து கொண்ட தீர்மானத்திற்கேற்ப பல்வேறு குடும்பத்தினர்களுக் கிடையில் முறை வைத்து ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் சிலரை தேர்ந்தெடுத்து அவர்களின் வீட்டை காவல் புரிந்து வந்தனர்.

ஆகவே, மக்கா வாழ்க்கைக்கும் மதீனா வாழ்க்கைக்கும் இடையில் ஒரேயொரு வேறுபாடுதான் இருந்தது. இப்பொழுது முஸ்லிம்களால் இறைவன் பெயரால் தோற்றுவிக்கப்பெற்ற மஸ்ஜிதில் இடையூறு எதுவுமின்றி ஐந்து நேரத் தொழுகைகளை தொழுதுவர முடிந்தது. இதுவே அந்த வேறுபாடு.

## முஸ்லிம்களுக்கு மீண்டும் இன்னல்கள் செய்ய மக்கத்தினர்கள் செய்த முயற்சிகள்

இரண்டு அல்லது மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் மக்கத்தினர்களின் கவலையும் பதற்றமும் தீர்ந்தன. அவர்கள் ஒரு புதிய முறையில் முஸ்லிம்களுக்கு தொல்லைகள் கொடுக்க திட்டங்கள் வகுக்கலாயினர். மக்காவிலும் மக்காவின் சுற்றுப் புறத்திலும் வாழ்ந்துவரும் முஸ்லிம்களுக்கு மட்டும் இன்னல்கள் செய்து கொண்டிருப்பதால் தமக்கு தமது குறிக்கோளில் வெற்றி கிடைக்க முடியாதென்றும் மதீனாவிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வெளியேற்றினால்தான் தம்மால் இஸ்லாத்தை ஒழித்துக்கட்ட முடியும் என்றும் தமக்கிடையில் செய்த ஆலோசனைக்குப் பிறகு அவர்கள் உணர்ந்து கொண்டனர்.

எனவே, இவ்வாலோசனைக்கேற்ப மக்கத்தினர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா வருவதற்கு முன்னால் மதீனாவாழ் மக்களின் மன்னராக தேர்ந்தெடுக்கப்பட்ட அப்துல்லாஹ் பின் உபைய் இப்னு ஸலூல் என்பவருக்கு கடிதம் மூலம் பின்வரும் விஷயத்தை தெரிவித்தனர்:

'நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்குச் சென்று விட்டதனால் மக்கத்தினர்களுக்கு மிகுந்த வருத்தம் ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கும் அவர்களின் தோழர்களுக்கும் மதீனாவாழ் மக்கள் தஞ்சம் கொடுத்திருக்கக்கூடாது. ஆனால், நீங்கள் எங்களைச் சேர்ந்த மனிதருக்கு (ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு) உங்களுடைய வீடுகளில் தஞ்சம் அளித்திருப்பதனால் ஒன்று மதீனாவாழ் மக்களாகிய நீங்கள் அவருடன் யுத்தம் செய்யுங்கள். அல்லது உங்கள் நகரத்திலிருந்து அவரை வெளியேற்றி விடுங்கள். இல்லையாயின் நாங்கள் எல்லாரும் ஒன்றிணைந்து மதீனாவின்மீது தாக்குதல் நடத்தி மதீனாவின் யுத்தத்திற்குத் தகுதியுள்ள எல்லா ஆடவரையும் கொலை செய்து

பெண்களை அடிமைகளாக்கிக் கொள்வோம் என்று நாங்கள் இறைவன்மேல் ஆணையாக அறிவித்து விடுகின்றோம்.’

இக்கடிதம் கிடைத்ததும் அப்துல்லாஹ் பின் உபைய் பின் ஸலூலுக்கு தீய எண்ணம் ஏற்பட்டு விட்டது. அவன் மற்ற நயவஞ்சகர்களுடன் நாம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இங்கு வாழ்ந்து வர அனுமதித்தால் நமக்கு ஆபத்துகள் வரும். எனவே, நாம் அவர்களுடன் யுத்தம் செய்து மக்கத்தினர்களை மகிழ்விக்க வேண்டும் எனறு ஆலோசனை நடத்தினான்.

இவ்விஷயம் குறித்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தகவல் கிடைத்தது. உடனே அவர்கள் அப்துல்லாஹ் பின் உபைய் பின் ஸலூல் இடம் சென்று உம்முடைய இந்தச் செயல் உமக்கே பாதகமானதாக மாறிவிடும். ஏனென்றால், மதீனாவிலுள்ள பெரும்பாலானவர்கள் முஸ்லிம்களாகி விட்டனர். இஸ்லாத்திற்காக தங்கள் உயிர்களையே தியாகம் செய்ய ஆயத்தமாய் உள்ளனர் என்பது உமக்குத் தெரியும். ஆகவே, நீ அவ்வாறு செய்தால் அவர்கள் முஹாஜிர் (ஹிஜ்ரத் செய்தவர்) களுடன் இணைந்து கொள்வர். நீரும் உம்மைச் சேர்ந்தவர்களும் எங்களுடன் போர் தொடுத்தால் நீங்கள் யாவரும் முழுமையாக அழிந்து விடுவீர்கள் என்று அவர்களுக்கு விளக்கினார்கள். அப்துல்லாஹ் பின் உபைய் பின் ஸலூலுக்கு தனது தவறு தெரிந்து விட்டது. இதனால் அந்த எண்ணத்திலிருந்து அவன் தவிர்ந்து கொண்டான்.

## அன்ஸார்களுக்கும் முஹாஜிர்களுக்கும் இடையில் சகோதரத்துவம்

இந்நாட்களிலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தினை வலிமை வாய்ந்ததாக ஆக்குவதற்காக இன்னொரு திட்டம் வகுத்தார்கள். இதன்படி அவர்கள் எல்லா முஸ்லிம்களையும் ஒருங்கிணைத்து அவர்களுள் இரண்டு இரண்டு மனிதர்களுக்கிடையே ஒருவரை மற்றொருவருக்கு சகோதரர் ஆக்கினார்கள். அன்ஸார்கள் இந்த சகோதரத்துவத்தை மிகுந்த மகிழ்ச்சியுடன் மனப்பூர்வமாக வரவேற்று ஒவ்வொரு அன்ஸாரும் தமது சகோதரரை தமது வீட்டிற்கு அழைத்துச் சென்று தமது உடைமைகளில் சரிபாதியினை அவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக அவ்வுடைமைகளை அவருக்கு காட்டலாயினர்.

அவர்களுள் ஒரு அன்ஸார் தமது முஹாஜிர் சகோதரரிடம் நான் எனது இரு மனைவியருள் ஒருவருக்கு தலாக் (மணவிலக்கு) கொடுத்து விடுகின்றேன். நீங்கள் அவரை மணமுடித்துக் கொள்ளுங்கள் என்று வற்புறுத்தியதன் மூலம் அவர் இந்த சகோதரத்துவத்தின் சிகரத்திற்கே சென்று விட்டார். ஆனால், முஹாஜிர்களோ அவர்களின் நேசத்திற்கு நன்றி தெரிவித்து விட்டு அவர்களின் உடைமைகளிலிருந்து பங்கு பெற மறுத்து விட்டனர். என்றாலும், இவ்விஷயத்தில் அன்ஸார்கள் வற்புறுத்திக் கொண்டே இருந்தனர்.

எனவே, அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இந்த முஹாஜிர்கள் எங்களுக்கு சகோதரர்களாகி விட்டதனால் எங்களுடைய சொத்தில் இவர்கள் எப்படி பங்காளி ஆகாமல் இருக்க முடியும்? இவர்களுக்கு விவசாயம் தெரியாது. இவர்கள் வணிகர்களாவர். இவர்கள் எங்கள் நிலங்களிலிருந்து பங்குபெறமாட்டார்களாயின் அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானங்களில் இவர்கள் கட்டாயம் பங்குதாரர் களாக்கப்பட வேண்டும் என்று மிகுந்த பணிவோடு வேண்டிக் கொண்டனர்.

இதற்கு முஹாஜிர்கள் அவர்களுடன் பங்குதாரர்களாக விரும்பாது தமது மூதாதையர்கள் செய்த வணிகத்தை மேற்கொண்டு மிகக் குறுகிய காலத்திற்குள் அவர்களுன் பெரும்பாலார் பொருள் வசதி பெற்றவர்களாகி விட்டனர். எனினும் அன்ஸார்கள் தமது உடைமைகளை பகிர்ந்தளிக்க வேண்டுமென வற்புறுத்திக் கொண்டே இருந்தனர்.

எனவே, மரணமடைந்து விட்ட சில அன்ஸார்களின் சந்ததிகள் அரபு நாட்டின் வழக்கிற்கேற்ப தமது முஹாஜிர் சகோதரர்களுக்கு மரணமடைந்தவர்களின் சொத்திலிருந்து பங்கு வழங்கினர். திருக்குர்ஆன் மூலம் இத்தகைய வழக்கம் தடை செய்யப்பட்டதை யடுத்து இது நிறுத்தப்பட்டது.

## முஹாஜிர்கள் அன்ஸார்கள் யூதர்கள் ஆகியவர்களுக்கிடையில் உடன்படிக்கை

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா முஸ்லிம் களையும் சகோதரர்களாக்கியது மட்டுமல்லாமல் மதீனாவில் வாழ்ந்து வந்த அனைவருக்குமிடையில் ஓர் உடன்படிக்கையினை செய்து வைத்தார்கள். அவர்கள் யூதர்களின் தலைவர்களையும் அரபு மக்களின் தலைவர்களையும் ஒருங்கிணைத்து அவர்களிடம் இங்கு இதற்கு முன் இரு வகுப்பினர் மட்டுமே இருந்தனர். ஆனால் இப்போது மூன்று வகுப்பினர் உள்ளனர். அதாவது முதலில் யூதர்களும் மதீனாவிலுள்ள அரபு மக்களும்தான் இங்கு வாழ்ந்தனர். ஆனால், இப்பொழுது யூதர்கள் மதீனாவின் அரபு மக்கள், மக்காவிலிருந்து வந்த முஹாஜிர்கள் ஆகிய மூன்று வகுப்பினராகி விட்டனர். எனவே, இந்த மூன்று வகுப்பினருக்கிடையில் ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும் எனக் கூறினார்கள். இதற்கேற்ப அவர்களுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட தீர்மானத்துடன் ஓர் உடன்படிக்கை எழுதப்பட்டது. இவ்வுடன்படிக்கையின் சொற்கள் பின்வருமாறு இருந்தது:

ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நம்பிக்கைக் கொண்டவர்கள் மற்றும் இவர்களுடன் மகிழ்ச்சியோடு இணைந்து கொள்ளும் அனைத்து மக்கள் ஆகியவர்களுக்கிடையிலுள்ள உடன்படிக்கையாகும் இது.

மக்கத்து முஸ்லிம்கள் எவராது கொலை செய்யப்பட்டால் இக்கொலைக்கு மக்கத்து முஸ்லிம்களே பொறுப்பாளர்களாவர். இவர்களே தமது கைதிகளை விடுவிக்க வேண்டும். மதீனாவிலுள்ள பல்வேறு முஸ்லிம் கோத்திரங்களும் இவ்வாறே அவ்விஷயங்களில் தமது கோத்திரத்தினர்களுக்கு பொறுப்பாளர்களாவர்.

எவராவது கிளர்ச்சி செய்தாலோ பகைமையை உருவாக்கினாலோ அமைப்பில் பிரிவினையை உண்டாக்கினாலோ அவர் தங்களின் சொந்த மகனாகவே இருந்தாலும் சரியே இவ்வுடன்படிக்கைக்குட்பட்ட அனைவரும் அவருக்கு எதிராக சண்டையிட வேண்டும்.

நிராகரிக்கும் ஒருவர் முஸ்லிம் ஒருவரின் கையால் கொலை செய்யப்பட்டால் அந்த நிராகரிப்பவரின் முஸ்லிம் உறவினர்கள் அந்த முஸ்லிமை பழிக்குப்பழி வாங்க மாட்டார்கள். எந்த முஸ்லிமுக்கு எதிராகவும் அத்தகைய நிராகரிப்பாளருக்கு உதவி செய்ய மாட்டார்கள்.

எந்த யூதரும் நம்முடன் இணைந்து கொண்டால், அவருக்கு நாம் எல்லாம் சேர்ந்து உதவி செய்வோம். யூதர்களுக்கு எவ்வகையான துன்பமும் கொடுக்கப்பட மாட்டாது. இவர்களுக்கு எதிராக எந்த எதிரிக்கும் உதவி செய்யப்படமாட்டாது.

நம்பிக்கைக்கொள்ளாத எவரும் தமது வீட்டில் மக்கத்தினர் களுக்கு தஞ்சம் அளிக்கமாட்டார். அவர்களின் சொத்தையும் தம்மிடம் அமானிதமாக வைத்துக் கொள்ளவும் மாட்டார். நிராகரிப்பாளர்களுக்கும் நம்பிக்கைக் கொண்டவர்களுக்கும் இடையில் உள்ள போரில் எவ்வகையிலும் தலையிடவும் மாட்டார்.

எவராது ஒரு முஸ்லிமை அநியாயமாகக் கொன்று விட்டால், அவருக்கு எதிராக எல்லா முஸ்லிம்களும் ஒன்றுபட்டு போர் செய்வர். இறைவனுக்கு இணை வைக்கும் ஒரு எதிரி மதீனாவைத் தாக்கினால் யூதர்கள் முஸ்லிம்களுடன் ஒத்துழைப்பர். கணிசமான ஒரு பகுதி செலவையும் ஏற்றுக் கொள்வர்.

மதீனாவின் பல்வேறு இனத்தவர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்ட யூத இனத்தவர்களின் உரிமைகள் முஸ்லிம்களின் உரிமைகள் போன்றவையேயாகும்.

யூதர்கள் தமது மார்க்கத்தை பின்பற்றுவர்; முஸ்லிம்கள் தமது மார்க்கத்தைப் பின்பற்றுவர். யூதர்களுக்கு கிடைக்கும் உரிமைகளே அவர்களைப் பின்பற்றுபவர்களுக்கும் கிடைக்கும். மதீனாவாழ் மக்களுள் எவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அனுமதியின்றி எந்தப் போரையும் தொடங்கக் கூடாது. ஆயினும், இந்த நிபந்தனையினால் எவரும் நியாயத்தின் அடிப்படையில் பழிக்குப்பழி வாங்குவதிலிருந்து தடைசெய்யப்படமாட்டார்கள்.

யூதர்கள் தமது அமைப்பிற்குரிய செலவுகளை தாமே செய்து கொள்வர். முஸ்லிம்கள் தமது செலவுகளை தாமே செய்து கொள்வர். ஆனால், போரில் அவர்கள் இரு வகுப்பாருமே இணைந்து செயலாற்றுவர்.

இந்த உடன்படிக்கையில் இணைந்துள்ள அனைவருக்குமே மதீனா மதிப்பிற்குரிய ஓர் இடமாகும். மதீனா நகர மக்களுக்கு ஆதரவு அளிக்கும் வேற்று மக்களுடனும் இந்நகர மக்களுடன் நடந்து கொள்வது போன்றே நடந்து கொள்ளப்படும். ஆனால், எந்தப் பெண்ணையும் அவளுடைய உறவினரின் சம்மதமின்றி தமது வீடுகளில் வைத்துக் கொள்ள மதீனாவாழ் மக்களுக்கு அனுமதி கிடையாது.

பிரச்சனைகளையும் குழப்பங்களையும் தீர்த்து வைப்பதற்காக இறைவனிடமும் அவனுடைய தூதரிடமும் அவை சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த உடன்படிக்கையில் இணைந்திருப்பவர்கள் மக்கத்தினருடனும் அவர்களுடன் உடன்படிக்கை செய்து நேசம் கொண்டிருக்கும் இனத்தவர்களுடனும் எந்த உடன்படிக்கையும் செய்து கொள்ள உரிமை கிடையாது. ஏனென்றால் இந்த உடன்படிக்கையில் இணைந்திருப்பவர்கள் மதீனாவின் எதிரிகளுக் கெதிராக இவ்வுடன்படிக்கையின் மூலம் ஒன்றுபட்டு விட்டனர். தனியாகப் போர் செய்ய முடியாததைப் போன்றே தனியாக சமாதானமும் செய்து கொள்ள முடியாது. எனினும் போரில் கலந்து கொள்ளுமாறு எவரும் கட்டாயப்படுத்தப் படமாட்டார். ஆயினும் யாராவது ஒருவர் அநீதியான செயலைச் செய்தால் அவர் தண்டனைக்குரியவராவார். நிச்சயமாக இறைவன் நல்லவர்களுக்கும் நேர்மையானவர்களுக்கும் பாதுகாவலனாக உள்ளான். முஹம்மது இறைவனுடைய தூதர் ஆவார்கள். ***(இப்னு ஹிஷாம் பாகம் 1 பக்கம் 178)***

இது அவ்வுடன்படிக்கையின் சாராம்சமாகும். இவ்வுடன் படிக்கையில் நாணயத்தையும் நேர்மையினையும் உண்மை யினையும் விட்டுவிடக்கூடாதென்றும் அநீதியிழைத்தவனே தனது அநீதிக்குப் பொறுப்பாளன் ஆவான் என்றும் மீண்டும் வலியுறுத்தப் பட்டுள்ளது. யூதர்களுடனும் இஸ்லாத்தைத் தழுவாத மதீனாவாழ் மக்களுடனும் அன்பு நேசம் பரிவுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் அவர்களும் சகோதரர்கள் போன்று, கருதப்படுவர் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தரப்பிலிருந்து தீர்மானிக்கப்பெற்றுள்ளது என்பதும் அவ்வுடன்படிக்கையிலிருந்து தெரிகிறது. எனவே, பின்னர் யூதர்களுடன் எந்த அளவு பிணக்குகள் ஏற்பட்டனவோ அவற்றிற்கு முழு பொறுப்பும் அந்த யூதர்களையே சாரும்.

## மக்கத்தினர்கள் மீண்டும் புதிதாக இன்னல்கள் செய்தல்

ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று இரண்டு மூன்று மாதங்களுக்குப் பின்னர் மக்கத்தினர்களின் பதற்றம் நீங்கியதும் இஸ்லாத்திற்கு மாற்றமாக அவர்கள் மீண்டும் ஒரு புதிய எதிர்ப்பை தோற்றுவித்தனர். ஆகவே, இதே நாட்களில் மதீனாவின் தலைவர்களுள் ஒருவரும் அவ்ஸ் கோத்திர மக்களின் தலைவருமான ஸஅத் பின் முஆது (ரலி) அவர்கள் பைத்துல்லாஹ் (கஅபா)வைத் தவாஃப் (சுற்றி வருதல்) செய்வதற்காக மக்காவிற்கு சென்றபோது, அவர்களைக் கண்ட அபூஜஹில் அவர்களிடம் மிகுந்த கோபத்துடன் மதம் மாறிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு புகலிடம் அளித்ததன் பின்னர் (மதீனாவாசிகளாகிய) உங்களால் அமைதியாக கஅபாவை தவாஃப் செய்ய (சுற்றி வர) இயலும் என நீங்கள் நினைக்கிறீர்களா? அவரைக் காப்பாற்றுவதற்கும் அவருக்கு உதவி செய்வதற்கும் உங்களுக்கு வலிமை உள்ளது என நீங்கள் எண்ணுகிறீர்களா? இறைவன்மீது ஆணையாக! இந்த வேளையில் உம்முடன் அபூஸுஃப்யான் மட்டும் வராமல் இருந்தால் உம்மால் உமது குடும்பத்தினரிடம் தப்பித்துச் செல்ல இயலாது போயிருக்கும் என்று கூறியதற்கு ஸஅத் பின் முஆது (ரலி) அவர்கள் அவனிடம் அல்லாஹ் மீது ஆணையாக! நீர் எம்மை கஅபாவை தவாஃப் செய்ய விடாது தடுத்தால் பின்னர் நீர் சிரியாவிற்குச் செல்லும் வழியில் உமக்கும் அமைதி கிடைக்க முடியாது என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளும் என்றார்கள்.

இந்த நாட்களில் மக்காவின் பெருந்தலைவனான வலீத் பின் முகீரா நோய்வாய்ப்பட்டான். தனது மரணம் நெருங்கி விட்டதென அவன் உணர்ந்தான். ஒருநாள் மக்காவின் பெரும் பெரும் தலைவர்கள் அவன் இருக்கும் இடம் வந்து அமர்ந்திருந்தனர். அப்போது அவன் தம்மை அறியாமலேயே அழத் தொடங்கினான். இதனால் மக்காவின் தலைவர்கள் வியப்படைந்து நீங்கள்

ஏன் அழுகிறீர்கள் என்று அவனிடம் வினவியதற்கு அத்தலைவனான வலீத் நான் மரணத்திற்குப் பயந்து அழுகின்றேன் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? இறைவன் மீது ஆணையாக! நிச்சயமாக அவ்வாறன்று. முஹம்மதுடைய மார்க்கம் பரவிவிடக்கூடாதே என்றும் மக்கா அவர்களுடைய கைவசம் சென்றுவிடக்கூடாதே என்றும்தான் எனக்குக் கவலையாக இருக்கின்றது என்றான். இதற்கு அபூஸுஃப்யான் என்பவர் அதற்காக நீங்கள் கவலைப்பட வேண்டாம். நாங்கள் உயிரோடு இருக்கும்வரை அவ்வாறு நடக்காது என்பதற்கு நாங்களே பொறுப்பாளர்கள் என பதிலளித்தார்.

மேற்கூறப்பெற்ற நிகழ்ச்சிகளிலிருந்து மக்கத்தினர்கள் இழைத்து வந்த அநீதிகளில் ஏற்பட்ட இடைவெளி தற்காலிகமானதே ஆகும் என்பது நிரூபணமாகிறது. மீண்டும் அநீதியிழைக்குமாறு அச்சமுதாயம் தூண்டிவிடப்பட்டது. மரணமடையப் போகும் தலைவர்கள் மரணப்படுக்கையில் இருந்து கொண்டே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எதிர்க்குமாறு பிறரிடம் சத்தியமும் சபதமும் வாங்கிக் கொண்டிருந்தனர். மதீனாவாழ் மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக போர் செய்யுமாறு அழைக்கப்பட்டார்கள். இதனை அவர்கள் மறுத்தால் மக்கத்தினர்களும் அவர்களுடன் நேச உடன்படிக்கை செய்திருக்கும் இனத்தினர்களும் போர்ப்படைகளைக் கொண்டு வந்து மதீனாவின் மீது தாக்குதல் நடத்தி மதீனாவிலுள்ள ஆண்களைக் கொன்று பெண்களை அடிமைகளாக்கப்போவதாக பயமுறுத்தப்பட்டார்கள்.

## நபிகள் நாயகத்தின் தற்காப்பு நடவடிக்கை

எனவே இத்தகைய சூழ்நிலைகளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவில் மௌனமாக உட்கார்ந்திருந்து, அதன் பாதுகாப்பிற்காக எவ்வித ஏற்பாடும் செய்யாமலிருந் திருப்பார்களேயானால் நிச்சயமாக அவர்களே அதன் விளைவு களுக்கு மாபெரும் பொறுப்பாளியாகி இருப்பார்கள். எனவே மக்கத்தினர்களின் நடவடிக்கைகளைப் பற்றிய விஷயம் தங்களுக்கு கிடைத்துக்கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் தங்கள் தோழர்களை சிறு சிறு குழுக்களாக அமைத்து மக்காவின் சுற்றுப்புறங்களுக்கு அவர்களை அனுப்பி வைக்கத் தொடங்கினார்கள். இதனால் சில வேளைகளில் அவர்களுக்கும் மக்கா இனத்தவர் களுக்கும் இடையில் அல்லது அவர்களுக்கும் மக்காவின் சில கூட்டத்தினர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டதும் உண்டு. ஒருவரையொருவர் சந்தித்ததன் பின்னர் போர் மூண்டுவிடும் சூழ்நிலை ஏற்பட்டதுண்டு.

இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புறம் இருந்து போருக்கான தூண்டுதலாக இருந்தது என்று கிறித்தவ எழுத்தாளர்கள் வரைந்துள்ளனர். ஆனால் மக்காவில் பதிமூன்று ஆண்டு காலம் வரை முஸ்லிம்களின் மீது அநீதியிழைக்கப்பட்டது. மதீனா வாழ் மக்களை முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டிவிட முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பிறகு மதீனாவின் மீது தாக்குதல் நடத்தப் போவதாக பலமுறை பயமுறுத்தப்பட்டது. இத்தகு நிகழ்ச்சிகள் நிகழ்ந்திருக்கும் சூழ்நிலைகளில் அவர்கள் தற்காப்பிற்காக குழுக்களை அனுப்பியது போருக்கு வழி வகுத்ததாகும் என்று கூற முடியுமா? மக்காவில் பதிமூன்று ஆண்டுகாலமாக இழைக்கப்பட்ட இன்னல் களுக்குப் பின்னரும்கூட முஸ்லிம்களுக்கும் மக்கத்தினர்களுக்கும் இடையில் போரை தோற்றுவிப்பதற்கு வேறெதாவது அதிகமான காரணம் தேவை என கருதக்கூடிய விதி எங்காவது உள்ளதா?

இன்று மிகவும் உயர்வான நாகரிகத்தைப் பெற்றவை என மேற்கத்திய நாடுகள் கருதுகின்றன. மக்காவில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளுள் பாதியாவது இன்றைய மேற்கத்திய மக்களுக்கு நடந்திருந்தால் அவர்கள் போர் தொடுக்க அதுவே சரியான காரணமாக கருதியிருப்பார்கள்.

ஒரு சமுதாயத்தை ஒழித்துக் கட்டுமாறு அல்லது தமது நாட்டிலிருந்து வெளியேற்றுமாறு மற்றொரு நாட்டிலுள்ள மக்களை ஓர் அரசு கட்டாயப்படுத்தினால் அவ்வரசுடன் போர் பிரகடனம் செய்யும் உரிமை அச்சமுதாயத்திற்கு இல்லையா? முஸ்லிம்கள் மதீனாவிற்கு இடம் பெயர்ந்து சென்றுவிட்ட பின்னர் அவர்கள் மக்கத்தினர் மீது போர் தொடுக்க இதைவிட (மக்காவிலிருந்து வெளியேற்றப்பட்டதை விட) வேறு காரணங்கள் தேவையில்லை. முஸ்லிம்கள் மக்கத்தினர்களுடன் போர் பிரகடனம் செய்வதற்கு மக்கா வாழ்க்கையின் போது நிகழ்ந்த நிகழ்ச்சிகளே அவர்களுக்கு முழு உரிமையினை வழங்கிவிட்டன.

எனினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவ்வாறு செய்யாமல் பொறுமையினை மேற்கொண்டு, எதிரிகளின் சதித் திட்டங்களை பற்றி தெரிந்து கொள்ளும் எல்லைக்குள் மட்டுமே தங்களுடைய முயற்சிகளை கட்டுப்படுத்திக் கொண்டார்கள். ஆனால் மக்கத்தினர்கள் தாம் மதீனாவிலுள்ள அரபு மக்களை முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டினர். முஸ்லிம்களை ஹஜ் செய்ய விடாமல் தடுத்தனர். ஷாமில் (சிரியாவில்) வணிகம் செய்வதற்காக சென்ற அவர்களின் குழுக்கள் தமது வழக்கமான வழியை விட்டு விட்டு மதீனாவின் சுற்றுப்புறத்தில் உள்ள கோத்திரத்தார் இருக்கும் வழியாக சென்று அவர்களை மதீனாவாழ் முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டத் தொடங்கினர். மதீனாவின் அமைதி அச்சுறுத்தலுக்கு ஆளாகியது. இவ்வாறான சூழ்நிலைகளில் மக்கத்தினர்கள் பதினான்கு ஆண்டுகளாக தொடர்ந்து முஸ்லிம்களிடம் விடுத்து வந்த போர் சவாலை மதீனாவின் பாதுகாப்பிற்காக அவர்கள் ஏற்றுக் கொள்வது அவர்களின் கடமையாக இருந்ததென்றால் அந்த சவாலை ஏற்றுக் கொண்டதன்மீது ஆட்சேபனை செய்ய உலகில் எவருக்கும் உரிமை கிடையாது.

## மதீனாவில் இஸ்லாமிய ஆட்சிக்கான அடிப்படை

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வெளியே உள்ள சூழ்நிலைகளைப் பற்றி தெரிந்து கொண்டே இருந்த அதே வேளையில் மதீனாவைச் சேர்ந்த மக்களை ஆன்மீகரீதியாக சீர்திருத்துவதில் அவர்கள் கவனக் குறைவாக இருக்கவில்லை. ஏற்கனவே கூறப்பட்டது போன்று மதீனாவிலுள்ள இணை வைப்பவர்களுள் பெரும்பாலார் உண்மையான பற்றுடனும் அவர்களுள் சிலர் நயவஞ்சகத்துடனும் இஸ்லாத்தைத் தழுவினர். எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மக்களிடையே இஸ்லாமிய ஆட்சி முறையினை நிலைநாட்டத் தொடங்கி விட்டார்கள்.

இதற்கு முன்னர் அரபு மக்களின் நடைமுறைக்கு ஏற்ப மக்கள் தமக்கிடையே சண்டையிட்டுக் கொண்டு வாள் முனையில் தமது உரிமைகளுக்குரிய தீர்ப்புகளை செய்து கொண்டிருந்தனர். இப்போது முறைப்படி நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர். இவர்களின் தீர்ப்பை பெறாமல் எவராலும் தமது உரிமையை மற்றவரிடமிருந்து பெற இயலாது.

இதற்கு முன்னர் மதீனாவாழ் மக்கள் கல்வியின்பால் கவனம் செலுத்தியதில்லை. இப்போது படித்தவர்கள் படிக்காதவர்களுக்கு கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

அநீதியிழைத்தல், வரம்பு மீறுதல், நேர்மையின்மை முதலியவை தடுத்து நிறுத்தப்பட்டன. பெண்களின் உரிமைகள் நிலைநாட்டப்பட்டன. இஸ்லாமிய ஷரீஅத்தின் சட்டத்திற்கு ஏற்ப பொருள் வசதி படைத்த எல்லாரின்மீதும் வரிகள் நிர்ணயிக்கப்பட்டு அவை ஏழை எளியவர்களுக்காக செலவிடப்பட்டன. நகரத்தின் பொது முன்னேற்றத்திற்காகவும் அவை பயன்படுத்தப்பட்டன.

தொழிலாளர்களின் உரிமைகளுக்கு பாதுகாப்பு வழங்கப் பட்டது. உறவினர்கள் இல்லாதவர்களுக்கு முறையான கல்வி கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. கொடுக்கல் வாங்கலை எழுதிக் கொள்ள வேண்டுமென்றும் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டுமென்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அடிமைகள் மீது கடினமாக நடந்து கொள்வதை வன்மையாகத் தடை செய்யப்பட்டது. தூய்மைக்குரிய அடிப்படைகளைப் பற்றியும் உடல்நலம் பேணுவதற்குரிய அடிப்படைகளைப் பற்றியும் வலியுறுத்திக் கூறப்பட்டன. மக்கள்தொகை கணக்கெடுப்புத் தொடங்கப்பட்டது. வீதிகளையும் சாலைகளையும் விரிவுபடுத்து வதற்குரிய கட்டளைகள் இயற்றப்பட்டன. குடும்ப வாழ்க்கை நகர வாழ்க்கை ஆகிய இரண்டிற்கும் உரிய எல்லா அடிப்படைகளும் இயற்றப்பட்டன. இவற்றையெல்லாம் முறையாக செயல்படுத்து வதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அரபு மக்கள் முதல் முறையாக ஓர் அமைப்பையும் நாகரிகத்தையும் கொண்ட சமுதாய அடிப்படைகளை தெரிந்து கொண்டனர்.

இங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அரபு மக்களுக்காக இயற்றிய சட்ட விதி அக்காலத்திற்கு மட்டுமன்று. எக்காலத்திற்கும் உரியதாக அது விளங்கியது. அது அவர்களுக்காக மட்டுமன்று. உலகிலுள்ள எல்லா சமுதாயங்களுக்கும் அது கண்ணியம், மேன்மை, அமைதி, முன்னேற்றம் ஆகியவற்றிற்கு காரணமாக விளங்கியது.

அதே வேளையில் மக்கத்தினர்கள் இஸ்லாத்திற்கு எதிராகப் போர் செய்ய பலமான ஏற்பாடுகளைச் செய்வதில் ஈடுபட்டிருந்தனர். இதன் விளைவாக பத்ர் போர் ஏற்பட்டது.

## குரைஷியர்களின் வணிகக் குழுவின் வருகையும் பத்ர் போரும்

ஹிஜ்ரத்திற்குப் பிறகு பதிமூன்றாம் மாதத்தில் சிரியாவில் இருந்து வணிகக்குழு ஒன்று அபூஸுஃப்யான் தலைமையில் வந்து கொண்டிருந்தது. அக்குழுவினைப் பாதுகாக்க வேண்டும் என்னும் நொண்டிச்சாக்கில் மக்கத்தினர்கள் வலிமைமிக்க ஒரு படையை மதீனாவிற்கு அனுப்பி வைக்கத் தீர்மானித்தனர்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் இதுபற்றிய செய்தி கிடைத்து விட்டது. 'பகைவர்களின் அநீதிக்கு அவர்களின் ஆயுதங்களைக் கொண்டே பதில் கொடுக்க வேண்டிய நேரம் இப்பொழுது வந்து விட்டது' என இறைவனிடமிருந்து அவர்களுக்கு வஹீ (இறையறிவிப்பு) வந்தது.

இதனால் அவர்கள் மதீனாவிலுள்ள சில தோழர்களை அழைத்துக் கொண்டு புறப்பட்டார்கள். அவர்கள் மதீனாவிலிருந்து புறப்பட்ட அந்த நேரம் வரை சிரியாவிலிருந்து வரும் வணிகக் குழுவினருடன் போர் நடைபெறுமா? அல்லது மக்காவிலிருந்து வரும் படையுடன் போர் நடைபெறுமா? என்பது தெரியாதிருந்தது. எனவே, மதீனாவிலிருந்து அவர்களுடன் 300 பேர் புறப்பட்டனர்.

வணிகக் குழு என்றால் வணிகப் பொருட்கள் ஏற்றப்பட்ட ஒட்டகங்கள்தாம் என எவரும் நினைத்துக் கொள்ள வேண்டாம். மாறாக, மக்கத்தினர் அந்த வணிகக்குழுவின் பாதுகாப்பிற்காக அக்குழுக்களுடன் வலிமைமிக்க படைவீரர்களையும் அனுப்புவர். ஏனென்றால் அவர்கள் அக்குழுக்களின்மூலம் முஸ்லிம்களை பயமுறுத்தவும் விரும்பினர். எனவேதான், இவ்வணிகக் குழுவிற்கு முன்னர் இரண்டு வணிகக் குழுக்களைப் பற்றிய செய்தி வரலாற்றில் இடம்பெற்றுள்ளது.

அவற்றுள் ஒன்றின் பாதுகாப்பிற்காக 200 வீரர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். மற்றொன்றின் பாதுகாப்பிற்காக 300 வீரர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆகவே, இவ்வாறான சூழ்நிலைகளில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 300 வீரர்களுடன் ஆயுதங்களில்லாத மக்காவினுடைய வணிகக் குழுவினரிடம் கொள்ளையடிப்பதற்காக புறப்பட்டார்கள் என்று கிறிஸ்தவ நூலாசிரியர்கள் சொல்வது பிறரை ஏமாற்றுவதற்கேயாகும். இவ்வணிகக்குழு மிகவும் அதிகமானவர்களைக் கொண்டிருந்ததால் இதற்கு முன்பு சென்று இரண்டு வணிகக்குழுக்களின் பாதுகாப்பிற்காக சென்ற படையின் எண்ணிக்கையினையும் கவனத்திற்கொண்டு பார்த்தால் 400 முதல் 500 வரையிலான ஆயுதங்கள் ஏந்திய பாதுகாப்பு வீரர்கள் கட்டாயம் இதில் இடம்பெற்றிருப்பர்.

இவ்வளவு பெரிய பாதுகாப்புப் படையை எதிர்ப்பதற்காக தங்களிடம் போதுமான போர்க்கருவிகள்கூட இல்லாமல் 300 பேரை மட்டும் கொண்ட இஸ்லாமிய படை முன்னோக்கிச் சென்றதென்றால் அது கொள்ளையடிப்பதற்காகத்தான் சென்றது எனக் கூறுவது காழ்ப்புணர்ச்சியும் மிகவும் அநியாயமான வரம்புமீறிய கூற்றேயாகும் என்றுதான் சொல்ல முடியும்.

அந்த ஒரு குழுவை மட்டும் எதிர்ப்பதற்காக இஸ்லாமியப் படை சென்றதென்று வைத்துக்கொண்டாலும்கூட அது போர் செய்வதற்காகத்தான் சென்றது என்று தான் கூற முடியும். அதுவும் தற்காப்பிற்கேயாகும்.

ஏனென்றால், மதீனாவின் படை வலிமையற்றதாக இருந்தது. முஸ்லிம்களுக்கு தீங்கிழைக்குமாறு மக்காவின் வணிகக் குழுக்களை தூண்டியதன்மூலம் அவர்கள் தீங்கிழைப்பதற்கான அடிப்படைகளை உண்டு பண்ணினர். இவ்வாறு விளைந்திட இருந்த குழப்பத்தினை அகற்றுவதற்காகவும் இஸ்லாமியப் படை முன்னேறிச் சென்றது.

ஆயினும், திருக்குர்ஆனிலிருந்து தெரிவது போன்று வணிகக் குழுக்களுடன் போர் தொடுக்கப்பட மாட்டாது. எனினும் மக்காவிலிருந்து வந்த படையுடன்தான் போர் தொடுக்கப்படும் என்பதே இறை நாட்டமாக இருந்தது. முஸ்லிம்களின் தூய்மையான பற்றினையும் அவர்களின் நம்பிக்கையினையும் வெளிப்படுத்திக் காட்டுவதற்காகத்தான் எதனுடன் போர் நடைபெறும் என்பது முன்கூட்டியே வெளியிடப்படவில்லை. முஸ்லிம்கள் முழுமையான ஆயத்தம் செய்து கொள்ளாமல் மதீனாவிலிருந்து புறப்பட்டு சிறிது தொலைவு சென்ற போதுதான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் தோழர்களிடம், 'மக்காவின் படையுடன் போர் நிகழும்' என்பதே இறை நாட்டமாகும் என்று கூறினார்கள்.

படை குறித்து மக்காவிலிருந்து கிடைத்த செய்திகளிலிருந்து அந்த படை வீரர்களின் எண்ணிக்கை ஓராயிரத்தை விடவும் அதிகமாயுள்ளது என்றும் அவர்கள் எல்லாருமே போர் பயிற்சி பெற்றவர்கள் என்றும் தெரிய வந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் வந்தவர்களோ 313 பேரே ஆவர். இவர்களுள் பெரும்பாலானவர்கள் போர்க்கலையை அறியாதவர்களாயிருந்தனர். அதே சமயத்தில் இவர்களிடம் போர் ஆயுதங்களும் முழுமையாக இல்லாமல் இருந்தது. இவர்களுள் அதிகமானவர்கள் கால்நடை யாகவோ ஒட்டகங்களின்மீது சவாரி செய்தோ சென்றனர். இவர்களிடம் இருந்தது ஒரு குதிரை மட்டுமே ஆகும்.

போர்த்தளவாடங்களை போதுமான அளவிற்குப் பெற்றிராத இந்த சிறிய படை மூன்று மடங்கைவிடவும் அதிக எண்ணிக்கையையும் அனுபவமிக்க போர்ப்பயிற்சியையும் பெற்ற பகைவர்களுடன் போரிடுவது மிகவும் பயங்கரமான ஒரு விஷயம்தான். எனவேதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த மனிதரையும் அவருடைய விருப்பத்திற்கு மாற்றமாக போரில் ஈடுபட வேண்டும் என்று கட்டாயப்படுத்த விரும்பவில்லை.

ஆகவே, அவர்கள் தங்களுடைய தோழர்களிடம் இப்பொழுது வணிகக் குழுவைப்பற்றிய கேள்வி எதுவும் கிடையாது. மக்கத்துப்படையை மட்டுமே எதிர்த்துப் போராட வேண்டியதுள்ளது. எனவே, இது குறித்து உங்களுடைய ஆலோசனையை என்னிடம் கூறுங்கள் எனக் கேட்டதற்கு முஹாஜிர்களுள் (ஹிஜ்ரத் செய்தவர்கள்) ஒருவர் பின் ஒருவராக எழுந்து 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! பகைவன் நம் வீடுகளைத் தாக்க வருகின்றான் என்றால் நாம் அவனுக்கு அஞ்சி ஒடுங்குபவர்கள் அல்ல. நாம் அவனை எதிர்க்க ஆயத்தமாகவே உள்ளோம்' என்றனர். ஒவ்வொருவரின் பதிலையும் கேட்ட அவர்கள் என்னிடம் உங்கள் ஆலோசனையைக் கூறுங்கள்; என்னிடம் உங்கள் ஆலோசனையைக் கூறுங்கள் எனக் கேட்டுக் கொண்டேயிருந்தார்கள்.

மதீனாவாசிகள் அந்த நேரம் வரை எந்தக் கருத்தையும் கூறாமல் மௌனமாகவே இருந்தனர். ஏனென்றால் தாக்க வருகின்ற படையினர் முஹாஜிர்களின் உறவினர்கள் ஆவர். எனவே, தங்களுடைய ஆலோசனையினால் முஹாஜிர்களின் மனதிற்கு வருத்தம் ஏற்படக்கூடும் என்று பயந்தனர். என்னிடம் உங்கள் ஆலோசனையைக் கூறுங்கள் என்று மீண்டும் மீண்டும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கவே அன்ஸாரி களாகிய மதீனாவாசிகளின் தலைவர் ஒருவர் எழுந்து 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஆலோசனைதான் தங்களுக்கு கிடைத்துக் கொண்டிருக்கிறதே. எனினும் தாங்கள் மீண்டும் மீண்டும் ஆலோசனையைக் கேட்டுக் கொண்டேயிருக்கின்றீர்கள். அப்படி யாயின், மதீனாவாழ் மக்களாகிய எங்களின் ஆலோசனையை எதிர்பார்ப்பதே தங்களின் நோக்கமாக இருக்கலாம் என நினைக்கின்றோம்' என்றார்.

இதற்கு அவர்கள், 'ஆம்' என்றதும் அத்தலைவர் அளித்த பதிலில், "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஒருவேளை தாங்கள் எங்களுடைய ஆலோசனையைக் கேட்பதற்குக் காரணம் ஒன்று இருக்கலாம் என நினைக்கிறேன். அதாவது, தாங்கள் மதீனாவிற்கு வருவதற்கு முன்னால் தங்களுக்கும் எங்களுக்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் இருந்தது. தாங்கள் மதீனாவில் இருக்கும்போது தங்களையோ முஹாஜிர்களையோ எவனாவது தாக்கினால் நாங்கள் தங்களைப் பாதுகாப்போம் என்பதே அவ்வொப்பந்தம்.

ஆனால், இந்த நேரத்தில் தாங்கள் மதீனாவிலிருந்து வெளியே வந்துள்ளீர்கள். எனவே இந்த உடன்படிக்கை அநேகமாக இப்போதைய சூழ்நிலைகளில் நிலைத்திருக்காது. அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இந்த உடன்படிக்கை எந்த நேரத்தில் நிகழ்ந்ததோ அந்த நேரம் வரை எங்களுக்கு தங்களின் உண்மை முழுமையாகத் தெரியாமல் இருந்தது. ஆனால், தற்போது தங்களின் அந்தஸ்தும் மேன்மையும் மகத்துவமும் முழுமையாகத் தெரிந்து விட்ட இந்த நேரத்தில் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அந்த உடன்படிக்கையைப் பற்றிய கேள்விக்கே இடமில்லை. 'நீரும் உமது இறைவனும் சென்று விரோதிகளுடன் போர் புரிந்து கொண்டே இருங்கள். நாங்கள் இங்கேயே உட்கார்ந்திருப்போம்' என்று ஹஸ்ரத் மூஸா நபி (அலை) அவர்களிடம் அவர்களைப் பின்பற்றியவர்கள் கூறியதுபோன்று நாங்கள் தங்களிடம் கூற மாட்டோம். மாறாக, நாங்கள் தங்களின்

வலப்பக்கத்திலிருந்தும் போர்புரிவோம். இடப்பக்கத்திலிருந்தும் போர் புரிவோம். முன்னாலிருந்தும் போர் புரிவோம். பின்னாலிருந்தும் போர் புரிவோம். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களுக்குப் பாதிப்பை உண்டாக்குவதற்காக வருகின்ற பகைவன் எங்களின் உயிரை மாய்த்து விட்டு எங்களின் பிணங்களைக் கடந்து செல்லாத வரை அவனால் தங்களை ஒருபோதும் நெருங்கவே முடியாது. அல்லாஹ்வின் தூதர் அவர்களே! போர் ஒரு சாதாரண செயல்தான். அதைவிட அதிகமாகச் செய்ய நாங்கள் தயாராக இருக்கின்றோம். இங்கிருந்து கடல் வெகு தூரத்தில் இல்லை. தாங்கள் உத்தரவிட்டால் நாங்கள் எத்தயக்கமுமின்றி எங்கள் குதிரைகளை கடலில் ஓட்டிச் சென்று விடுவோம்" என்று கூறினார். ***(இப்னு ஹிஷாம் தொகுதி 2 பக்கம் 12)***

இத்தகு தியாகத்தின் முன்மாதிரிக்கும் இத்தகு தூய்மையான பற்றின் முன்மாதிரிக்கும் நிகரான ஒரு முன்மாதிரியை இதற்கு முன்னுள்ள எந்த நபியாலும் காட்ட முடியாது. ஹஸ்ரத் மூஸா நபி (அலை) அவர்களைப் பின்பற்றியவர்கள் என்ன கூறினார்கள் என்பதை அவர்கள் தாங்களாகவே எடுத்தியம்பி விட்டனர்.

ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்களைப் பின்பற்றியவர்கள் பகைவர்களின் எதிரில் காட்டிய முன்மாதிரியினைக் குறித்து புதிய ஏற்பாடாகிய இன்ஜீல் சாட்சி பகர்கின்றது. அவர்களின் சீடர்களுள் ஒருவர் அற்பமான பணத்தைப் பெற்றுக் கொண்டு தமது குருவைக் காட்டிக் கொடுத்தார். மற்றொருவரோ அவர்களை சபித்து விட்டார். எஞ்சிய பத்து சீடர்களோ அவர்களை விட்டுவிட்டு இங்குமங்கும் வெருண்டோடி விட்டனர்.

ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழர்கள் ஒன்றரை ஆண்டுகளே அவர்களுடன் இருந்தனர். அவர்கள் தங்கள் உதட்டை அசைத்தாலே போதும். அத்தோழர்கள் கடலில் குதிப்பதற்கும்கூட ஆயத்தமாக இருக்கும் அளவிற்கு மிகவும் உறுதியான நம்பிக்கைக் கொண்டு விட்டனர்.

நம்பிக்கையில் பலவீனமானவர்கள் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்படுவதற்காகவே அவர்களிடம் ஆலோசனை கேட்கப் பட்டது. ஆனால், முஹாஜிர்களும் அன்ஸாரிகளும் ஒருவரை யொருவர் முந்திக்கொண்டு தூய்மையான பற்றிற்குரிய முன்மாதிரி யினையும் உறுதியான நம்பிக்கைக்குரிய முன்மாதிரியினையும் காட்டினர்.

இரு வகுப்பாருமே இறைவனின் வாக்குறுதிகளுக்கேற்ப எண்ணிக்கையில் எதிரிகளை விடவும் மூன்றில் ஒரு பகுதியினராகவே இருந்தும் கூட போர்க்கருவிகளைப் பொருத்தவரையில் எதிரிகளிடம் இருந்ததைவிடவும் தங்களிடம் பல மடங்கு குறைவாக இருந்தாலும்கூட இஸ்லாத்தின்மீதுள்ள பற்றின் காரணமாகவும், இறை வாக்குறுதியின் மீதுள்ள அவர்களின் நம்பிக்கையினாலும் எதிரிகளிடம் எக்காரணத்தைக் கொண்டும் புற முதுகைக் காட்ட மாட்டோம் என உறுதிபடக்கூறி போர்க்களத்தில் மகிழ்ச்சியோடு உயிரை அர்ப்பணித்து விடவும் ஆயத்தமாக இருப்பதாக தெரிவித்த தாலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னேறிச் சென்றார்கள்.

அவர்கள் பத்ர் என்னும் இடத்தை அடைந்த போது தோழர் ஒருவரின் ஆலோசனைக்கேற்ப எதிரிகளின் அருகில் சென்று அங்குள்ள ஒரு நீரூற்றிக்குப் பக்கத்தில் இஸ்லாமியப் படை பாசறை அமைத்தது. இவ்வாறு அவர்கள் நீரூற்றை ஒட்டி பாசறை அமைத்தாலும் முஸ்லிம்களுக்குக் கிடைத்த அந்த இடம் மணற்பாங்கான இடமாக இருந்ததால் அதில் போர் நிகழ்த்துவது பெரும் பாதிப்பை உண்டாக்கக்கூடியது என்று தெளிவாகத் தெரிந்தது. இதனால் தோழர்கள் பதற்றமடைந்தனர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரவு முழுவதும் துஆ செய்து கொண்டே இருந்தார்கள். இறைவனிடம் அவர்கள், 'என்னுடைய இறைவா! முழு உலகிலும் இவர்கள் மட்டுமே உன்னை வணங்கக்கூடியவர் களாய் உள்ளனர். என்னுடைய இறைவா! இன்று இந்த போரில் இவர்கள் கொல்லப்பட்டால் உலகில் உனது பெயரைக் கூறுபவர் எவருமே எஞ்சியிருக்கமாட்டார்' என்று மீண்டும் மீண்டும் மன்றாடிக் கொண்டே இருந்தார்கள். ***(சுர்கானீ தொகுதி 1 பக்கம் 419)***

இறைவன் அவர்களின் பிரார்த்தனைகளை ஏற்றுக் கொண்டான். இரவில் நல்ல மழை பெய்தது. இதன் விளைவாக முஸ்லிம்கள் பாசறை அமைத்திருந்த இடம் மணற்பாங்கானதாக இருந்ததனால் மழையின் காரணமாக நன்றாகப் பதிந்து விட்டது. நிராகரிப்பாளர்கள் கைப்பற்றியிருந்த

இடம் களிமண் போன்ற நிலமாக இருந்ததனால் மழையின் காரணமாக அவ்விடம் மிகவும் வழுக்கிவிடக்கூடியதாக மாறி விட்டது.

அநேகமாக மக்காவின் நிராகரிப்பாளர்கள் முஸ்லிம்கள் வருவதற்கு முன்னேரே அவ்விடத்தைத் தேர்ந்தெடுத்து பாசறை அமைத்ததற்குக் காரணம் கெட்டியான மண் நிலமாக அது இருந்ததால் அதில் போர் செய்வது மிக்க எளிதாகவும் அனுகூலமாகவும் இருக்கலாம் என்பதும் முஸ்லிம்கள் இருந்த இடத்தை விட்டு விட்டதற்குக் காரணம் முஸ்லிம்கள் அங்கே பாசறை அமைப்பார்கள்; அவர்கள் அங்கிருந்து போர் நிகழ்த்தும்போது அவர்களின் கால்கள் மணலிற்குள் புதைந்து விடும் என்பதுமே ஆகும்.

ஆனால், இறைவன் அதே இரவில் ஒரு திடீர் மாற்றத்தை உண்டாக்கி விட்டான். மணற்பாங்கான இடம் நன்றாக பதிந்து உறுதிவாய்ந்த இடமாகவும் உறுதிவாய்ந்த இடம் வழுக்கிவிடக் கூடிய இடமாகவும் மாறி விட்டன. மேலும் அதே இரவில் இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நற்செய்தியினை வழங்கி உங்களுடைய பகைவர்களுள் இன்னார் இன்னார் கொல்லப்படுவர்; இன்ன இன்ன இடத்தில் கொல்லப்படுவர் என்று அறிவித்தான். போரில் நிகழ்ந்ததும் அவ்வாறே. அதாவது இறைவன் கூறிய அதே இடங்களில்தான் அப்பகைவர்கள் கொல்லப் பட்டனர். படைகள் ஒன்றையொன்று எதிர்த்து அணிவகுத்து நின்றபோது நபித்தோழர்கள் காட்டிய தூய்மையான பற்றின் முன்மாதிரியினைக் குறித்து பின்வரும் நிகழ்ச்சி மிகத் தெளிவாக அறிவிக்கின்றது:

இஸ்லாமியப் படையில் அனுபவம் பெற்ற சில தளபதிகள் இருந்தனர். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் என்பவர் அவர்களுள் ஒருவராவார். இவர் மக்காவின் தலைவர்களுள் ஒருவராக விளங்கினார். இவர் கீழ்க்கண்டவாறு கூறுகின்றார்:

இன்று என்மீது அதிகமான பொறுப்புகள் உள்ளன என நான் நினைத்தேன். இந்த எண்ணத்துடன் நான் எனது வலப்பக்கமும் இடப்பக்கமும் பார்த்தபோது எனது இரு புறத்திலும் மதீனாவின் இரு சிறுவர்கள் நிற்பதைக் கண்டதும் நான் தளர்ந்து விட்டேன். அப்போது நானே என்னிடம் வீரம் செறிந்த தளபதி பகைவர்களின் அணிகளுக்குள் தைரியமாகப் புகுந்து போரிட வேண்டுமாயின் அவருடைய வலப்பக்கமும் இடப்பக்கமும் வலிமைமிக்கவர்கள் இருப்பது அவசியமாகும். ஆனால் எனது இரு புறங்களிலும் நிற்பவர்களோ போர் அனுபவமில்லாத மதீனாவின் இரு சிறுவர்கள் ஆவர். எனவே, இன்று எனது போர்த்திறமையினை என்னால் எவ்வாறு காட்ட முடியும் என்று சொல்லிக் கொண்டேன்.

இவ்வாறான எண்ணங்கள் என் மனதிற்குள் தோன்றிக் கொண்டிருந்த அதே வேளையில் எனது ஒரு பக்கத்தில் நின்று கொண்டிருந்த சிறுவன் தனது முட்டுக் கையால் எனது விலாவில் தட்டினான். நான் அவன் பக்கம் கவனம் செலுத்தியபோது அவன் எனது காதில் ‘எனது சிறிய தந்தையாரே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அபூஜஹில் மிகவும் துன்புறுத்திக் கொண்டிருந்ததாக நாங்கள் கேள்வியுற்றோம். ஆகவே, நான் இன்று அவனை எதிர்த்து போரிட வேண்டும் என்று எனது உள்ளம் விரும்புகின்றது. எனவே, அவன் யார் என்று நீங்கள் எனக்குக் காட்டுங்கள்’ எனக் கேட்டான்.

நான் அச்சிறுவனுக்கு பதில் சொல்லி முடிப்பதற்கு முன்னர் எனது மறு புறத்திலுள்ள சிறுவன் தனது முட்டுக் கையால் என்னை இடித்தான். நான் அவன் பக்கம் கவனம் செலுத்தியபோது அவனும் மெதுவாக அதே கேள்வியை என்னிடம் கேட்டான்.

நான் அவ்விருவரின் மகத்தான வீரத்தையும் தீரத்தையும் கண்டு வியப்புற்று மெய் மறந்து நின்று விட்டேன். ஏனென்றால் அனுபவம் பெற்ற ஒரு தளபதியாக இருந்த என்னால்கூட எதிர்த்தரப்பிலுள்ள படைத்தளபதியை தனியாகத் தாக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை. நான் அவர்களின் கேள்விக்கு எனது விரலை உயர்த்திக் காட்டி அதோ தலையிலிருந்து கால்வரை கவசம் அணிந்து பகைவர்களின் அணிகளுக்குப் பின்னால் நிற்கின்றானே அவன்தான் அபூஜஹில். அவனுக்கு முன்னால் இரண்டு தளபதிகள் உறுவிய வாளுடன் நிற்பதைப் பாருங்கள் என்றேன்.

நான் எனது விரலை மடக்குவதற்கு முன் அவ்விரு சிறுவர்களும் இரையைக் கண்ட பருந்து வேகமாகப் பாய்ந்து செல்வதைப் போன்று உரத்த குரல் எழுப்பிக் கொண்டே நிராகரிப் பாளர்களின் அணிகளுக்குள் புகுந்து விட்டனர். அவர்களின் திடீர் தாக்குதலினாலும் எதிர்பாராததாக

இருந்ததனாலும் எவருடைய வாளும் அவர்களை எதிர்த்து தாக்க இயலாது போய் விட்டது. அம்பு செல்கின்ற வேகத்தில் அவர்கள் அபூஜஹ்லை நெருங்கி விட்டனர். அவருடைய இரு பாதுகாவலர்கள் அவ்விரு சிறுவர்களையும் எதிர்த்து தாக்கினர். ஒருவனுடைய தாக்குதல் பயனற்றதாக ஆகி விட்டது. மற்றொருவனின் தாக்குதலால் ஒரு சிறுவனின் கை துண்டிக்கப்பட்டு விட்டது. ஆனால், அவ்விரு சிறுவர்களுள் எவருமே அத்தாக்குதலைப் பொருட்படுத்தாமல் அபூஜஹ்லை மட்டுமே கவனத்திற் கொண்டு கடுமையாக அவனை தாக்கியதால் அவன் கீழே விழுந்து விட்டான். பின்னர் அவர்கள் அவனை மிகக் கடினமாகத் தாக்கியதால் படுகாயமடைந்தான். எனினும், வாள் வீச்சுக்கலையினை அவர்கள் நன்கறியாததால் அவர்களால் அவனை கொல்ல இயலவில்லை.

இந்த நிகழ்ச்சியிலிருந்து மக்கத்தினர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின்மீது இழைத்து வந்த அநீதிகள் பக்கத்தில் இருந்து பார்த்தவர்களுக்கு எவ்வளவு கொடுமையானதாக காணப்பட்டன என்பதை தெரிந்து கொள்ளலாம். இப்போதுகூட அவ்வநீதிகளை வரலாற்றில் படித்துத் தெரிந்து கொள்ளும் நல்லியல்பு கொண்ட ஒருவரது உள்ளம் மிக்க வேதனையால் துடித்து மயிர் சிலிர்க்கச் செய்யும்.

ஆனால், மதீனாவாழ் மக்களோ எவர்கள் தங்கள் கண்களாலேயே அந்த அநீதிகளைக் கண்டனரோ அவர்களின் வாய் மூலமே அந்த அநீதிகளைக் கேட்டனர். அவர்கள் ஒரு பக்கம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய சமாதானமான வாழ்க்கையைக் கண்டனர். மறுபக்கம் மக்கத்தினர்களின் மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்ட சம்பவங்களைக் கேட்டனர். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் சாந்தமானதும் மென்மையானதுமான இயல்பின் காரணமாக அந்த அநீதிகளுக்கு பதில் கொடுக்கவில்லை எனவும், (மக்கத்தினர்களாகிய) அவர்களின் அநீதிகளுக்கு பதில் கொடுக்கப்படவில்லையெனவும், அநீதிகளுக்குப் பதில் கொடுக்கப் படவில்லையென்றால் அதற்குக் காரணம் முஸ்லிம்கள் பலவீனமானவர்களாக இருந்தனர் என்பதன்று; மாறாக, அதற்குக் காரணமே அவர்களுக்கு பதிலடி கொடுப்பதற்கு இறைவன் புறமிருந்து முஸ்லிம்களுக்கு அனுமதி இல்லாதிருந்தது என்பதை அவர்கள் நமக்கு முன்வந்தால் நாம் அவர்களுக்கு தெரிவிப்போம் என்ற ஏக்கத்தால் அவர்களின் உள்ளம் நிரம்பியது.

முஸ்லிம்களின் உள்ளங்களின் நிலை எவ்வாறு இருந்தது என்பதை இன்னொரு விஷயத்திலிருந்தும் கணித்துக் கொள்ளலாம். போர் தொடங்குவதற்கு முன்னர் முஸ்லிம்களின் எண்ணிக்கை எத்தனை என்பதை மதிப்பிட்டுத் தெரிந்து கொள்வதற்காக நாட்டுப் புறத்தலைவன் ஒருவனை அபூஜஹ்ல் அனுப்பி வைத்தான்.

அவன் அதனைத் தெரிந்து திரும்பி வந்து ‘முஸ்லிம்கள் சற்றேறக்குறைய 300 அல்லது 325 பேர் இருப்பார்கள் என்று தெரிவித்தான். உடனே அபூஜஹ்லும் அவனது நண்பர்களும் மகிழ்ச்சியடைந்து இப்போது முஸ்லிம்கள் நம்மிடமிருந்து எங்கு தப்பிச் செல்வர் எனக் கூறினர்.

ஆனால், அந்த நாட்டுப்புறத் தலைவனோ மக்கத்தினர்களே நீங்கள் அவர்களுடன் போர் செய்யக்கூடாது என்பதே நான் உங்களுக்குக் கூறும் அறிவுரையாகும். ஏனென்றால், நான் முஸ்லிம்களுள் எத்தனை மனிதர்களைக் கண்டேனோ அத்தனை மனிதர்களும் ஒட்டகங்களின்மீது சவாரி செய்யும் மனிதர்களல்லர். மாறாக, மரணங்களே சவாரி செய்வதாக எனக்குத் தெரிகின்றது என்றான். அதாவது, அவர்களுள் ஒவ்வொருவரும் மரணமடை வதற்காக போர்க்களத்திற்கு வந்துள்ளனர். உயிரோடு திரும்பிச் செல்வதற்காக வரவில்லை. எவர் மரணத்தை தமக்கு எளிதாக்கிக் கொண்டு அம்மரணத்தைச் சந்திப்பதற்கு ஆயத்தமாகி விடுகின்றாரோ அவரை எதிர்த்துப் போரிடுவது சாதாரண விஷயமன்று எனக் கூறினான்.

## ஒரு மகத்தான முன்னறிவிப்பு நிறைவேறுதல்

போரைத் தொடங்குவதற்கான நேரம் வந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துஆ செய்து கொண்டிருந்த இடத்திலிருந்து வெளியே வந்தபோது,

எதிரிகளின் படை தோல்வியடைந்து புறமுதுகுக் காட்டி போர்க்களத்தை விட்டுச் சென்று விடும் என்று கூறினார்கள். அவர்கள் கூறிய இத்தொடர் திருக்குர்ஆனின் ஒரு முன்னறிவிப்பு ஆகும். இந்த

போர் பற்றிய முன்னறிவிப்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் இருந்தபோது அருளப்பட்ட தாகும். மக்காவில் நிராகரிப்பாளர்களின் பெரும் அநீதிகளுக்கு முஸ்லிம்கள் இலக்காகிக் கொண்டிருந்ததனால் அவர்கள் மக்காவைத் துறந்து பல்வேறு ஊர்களுக்குச் சென்று கொண்டிருந்த போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு திருக்குர்ஆனின் பின்வரும் வசனங்களை இறைவன் அருளினான்.

நிச்சயமாக ஃபிர்அவ்னின் சமுதாயத்தினரிடமும் எச்சரிப்பாளர்கள் வந்தனர். ஆனால் அவர்கள் எம் அடையாளங்கள் எல்லாவற்றையும் பொய் எனக் கூறினர். எனவே நாம் அவர்களை வல்லமையும் அதிகாரமும் உள்ளவன் பிடிப்பது போன்று பிடித்து விட்டோம்.

உங்களைச் சேர்ந்த நிராகரிப்பாளர்கள் அவர்களை விட சிறந்தவர்களா? அல்லது வேதங்களில் (தண்டனையிலிருந்து) உங்களுக்கு விதிவிலக்கு உள்ளதா? நாங்கள் வெற்றி பெறக்கூடிய படையினராக இருக்கின்றோம் என்று அவர்கள் கூறுகின்றனரா?

அந்தப் படைகள் விரைவில் தோற்கடிக்கப்படும். அவர்கள் புறமுதுகு காட்டி விரண்டோடுவர். அதுமட்டுமன்று; அந்த நேரம் அவர்களு(டைய அழிவு)க்கு குறிப்பிடப்பட்ட நேரமாகும். மேலும் அந்த நேரம் மிகுந்த பேராபத்தானதும் மிக்க கசப்பானதுமாகும்.

நிச்சயமாக குற்றவாளிகள் (பகிரங்கமான) வழிகேட்டிலும் பைத்தியத்திலும் இருக்கின்றனர். அவர்கள் முகங்குப்புற நெருப்பிற்கு இழுத்துச் செல்லப்படும் நாளில் (அவர்களிடம்) நீங்கள் நரகத் தண்டனையை சுவைத்துப் பாருங்கள் எனக் கூறப்படும். ***(திருக்குர்ஆன் 54 : 42-49)***

இந்த வசனங்கள் அதிகாரம் அல் கமரின் ஒரு பகுதியாகும். இஸ்லாத்தின் எல்லா அறிவிப்புகளுக்கும் ஏற்ப இந்த அதிகாரம் மக்காவில் அருளப்பட்டதாகும். இஸ்லாமிய அறிஞர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபி என்று வாதம் செய்த ஐந்தாம் ஆண்டிற்கும் பத்தாம் ஆண்டிற்கும் இடையிலுள்ள காலத்தில் இது அருளப்பட்டதென்று கூறியுள்ளனர். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவைத் துறந்து மதீனாவுக்குச் செல்வதற்கு குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே இது அருளப்பட்டது. இன்னும் சொல்லப்போனால் அநேகமாக எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் அருளப்பட்டதாகும் இது. ஐரோப்பிய அறிஞர்களும் இக்காலக் கணிப்பை உண்மைப்படுத்தியுள்ளனர். எனவே, நோல்டெக் (NOLDEKE) என்பவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபி என்று வாதம் செய்து ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த அதிகாரம் அருளப்பட்டதென்று கூறியுள்ளார்.

அடுத்து, ரெவரெண்டு வெர்ரி (WHERRY) என்பவர் எனது கருத்திற்கேற்ப இந்த அதிகாரம் அருளப்பட்ட காலத்தை விட சற்று முன்னதாகவே அருளப்பட்டதென்று நோல்டெக் கூறியுள்ளார் என்று வரைந்து விட்டு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவைத் துறந்து மதீனாவுக்குச் செல்வதற்கு ஆறு அல்லது ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வதிகாரம் அருளப்பட்டதென்று தனது மதிப்பீட்டைத் தெரிவித்துள்ளார். இவரது மதிப்பீட்டிற்கேற்ப இந்த அதிகாரம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபி என்று வாதித்த ஆறாம் அல்லது ஏழாம் ஆண்டில் அருளப்பட்டதாகும். எப்படியிருந்தபோதிலும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவிற்குச் செல்வதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே இந்த அதிகாரம் அருளப்பட்டதென்று முஸ்லிம்களின் பகைவர்கள்கூட ஏற்றுக் கொண்டுள்ளனர். பின்னர் நிகழவிருந்த போரைப் பற்றியும் நிராகரிப்பாளர்களின் முடிவைப் பற்றியும் இவ்வதிகாரத்தில் மிகத்தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போர் தொடங்குவதற்கு முன்னரே இவ்வசனங்களைப் படித்துக் காட்டி இறைவனது வாக்குறுதி நிறைவேறும் காலம் வந்து விட்டது என்று முஸ்லிம் களுக்கு விளக்கினார்கள்.

எனவே, ஏசாயா தீர்க்கதரிசி முன்னறிவித்த காலமும் *(ஏசாயா 21:13-17)* போர் தொடங்குவதற்கு ஆறு அல்லது ஏழு ஆண்டுகளுக்கு முன்னரே திருக்குர்ஆன் முன்னறிவித்த காலமும் வந்தபோது இப்போருக்கு முஸ்லிம்கள் ஆயத்தமாக இல்லாமல் இருந்தும்கூட போர் செய்யக்கூடாது என்று நிராகரிப்பாளர்களுக்கு அவர்களின் சில நண்பர்கள் ஆலோசனை கூறியும்கூட போர் தொடங்கப்பட்டு விட்டது.

பெரும்பாலானவர்கள் போர்ப்பயிற்சி பெறாதவர்களாகவும் போதுமான அளவிற்கு போர் ஆயுதங்கள் இல்லாதவர்களாகவும் இருந்த 313 முஸ்லிம்கள், ஓராயிரத்தை விடவும் அதிகமானவர் களாகவும் போர்ப்பயிற்சி பெற்றவர்களாகவும் இருந்த நிராகரிப் பாளர்களை எதிர்த்து நின்றனர்.

போர் தொடங்கி ஒரு சில மணி நேரத்திற்குள் நிராகரிப் பாளர்களின் பெரும்பெரும் தலைவர்கள் கொல்லப்பட்டனர். ஏசாயா தீர்க்கதரிசி முன்னறிவித்ததுபோன்று கேதாருடைய மகிமையெல்லாம் அற்றுப் போயிற்று.

மக்காவின் படையினர் தங்களின் இறந்தவர்களையும் கைதிகளையும் தங்களுக்கு பின்னால் விட்டு விட்டு புறமுதுகு காட்டி மக்காவை நோக்கி வெருண்டோடினர். பிடிபட்ட கைதிகளுள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தந்தையாருடைய சகோதரர் அப்பாஸ் (ரலி) அவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மக்காவில் உறுதுணையாக இருந்து ஒத்துழைப்பு வழங்கி வந்த இவர்களை மக்கத்தினர்கள் கட்டாயப்படுத்தி தங்களுடன் போர் செய்ய அழைத்து வந்தனர். இவ்வாறே கைதிகளுள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மருமகனான அபுல் ஆஸ் அவர்களும் இருந்தார். போரில் கொல்லப்பட்டவர்களுள் மக்காவின் படைத்தளபதியும் இஸ்லாத்தின் பெரும் விரோதியுமாகிய அபூஜஹ்லும் ஒருவராவார்.

## பத்ர் போரின் கைதிகள்

இந்த வெற்றியினைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பதினான்கு ஆண்டுகளாக தொடர்ந்து வெளியிட்டு வந்த முன்னறிவிப்புகளும் இது குறித்து இதற்கு முன்னர் தோன்றிய நபிமார்கள் செய்த முன்னறிவிப்புகளும் நிறைவேறி யதற்காக அவர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். அதே வேளையில் மக்காவிலுள்ள பகைவர்களின் பயங்கரமான முடிவைக் கண்டு வருத்தமும் அடைந்தார்கள். அவர்களின் இடத்தில் இன்னொருவர் இருந்திருந்தால் இத்தகு வெற்றியினைக் கண்டு மகிழ்ச்சியினால் துள்ளிக் குதித்திருப்பார்.

ஆனால், மக்காவின் கைதிகள் கயிறுகளால் கட்டப்பட்டு அவர்கள் முன் கடந்து சென்றபோது அவர்களின் கண்களிலிருந்தும் அவர்களுடைய நம்பிக்கைக்குரிய தோழர் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களின் கண்களிலிருந்தும் கண்ணீர் வரத்தொடங்கியது.

இரண்டாம் கலீஃபாவாகத் திகழ்ந்த ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அப்போது அங்கு வந்தார்கள். இந்த வெற்றியினால் ஏற்பட்ட மகிழ்ச்சிக்குரிய இந்த நேரத்தில் அவர்கள் அழுது கொண்டிருப்பதைக் கண்டு வியப்படைந்து அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இப்பொழுது எதற்காக அழ வேண்டும். அழ வேண்டியதற்கான காரணம் ஏதும் இருப்பின் தாங்கள் என்னிடம் கூறுங்கள். நானும் அழுகின்றேன். என்னால் அழ முடியா விட்டாலும் குறைந்த அளவு நானும் தங்களுடன் இதில் பங்கேற்பதற்காக அழுபவனைப்போன்ற நிலையை ஏற்படுத்திக் கொள்கிறேன் என்று கூறியதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனுக்குக் கீழ்ப்படியாததனால் இன்று மக்காவாசி களுக்கு ஏற்பட்டிருக்கும் நிலை என்னவென்று நீங்கள் பார்க்கின்றீர் களல்லவா? என்றார்கள்.

ஏசாயா தீர்க்கதரிசி அவர்கள் தங்கள் முன்னறிவிப்புகளில் பலமுறை குறிப்பிட்டதுபோன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நேர்மைக்கும் நியாயத்திற்கும் நுட்பமான ஒரு சான்று இந்த சந்தர்ப்பத்தில் கிடைத்துள்ளது.

மதீனாவுக்குத் திரும்பிக் கொண்டிருந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரவில் ஓரிடத்தில் உறங்கச் சென்றபோது அவர்களால் உறங்க முடியாததைக் கண்ட நபித்தோழர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தந்தையாரின் சகோதரர் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் கயிறுகளால் கட்டப்பட்டிருப்ப தால் தூங்க முடியவில்லை; இவர்களிடமிருந்து முனகல் சப்தம் வந்துகொண்டிருப்பதால் இவர்கள் படும் துன்பத்தை நினைத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தூக்கம் வரவில்லை என்று முடிவு செய்தார்கள். எனவே அவர்கள் தங்களுக்குள் ஆலோசனை செய்து ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் கட்டப்பட்டிருந்த கயிறுகளை தளர்த்தினார்கள். இதனால் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் தூங்கி விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் தூக்கம் வந்து விட்டது. சிறிது நேரத்திற்குப் பின்னர் அவர்கள்

திடீரென்று திடுக்கிட்டு கண் விழித்து அப்பாஸ் ஏன் மௌனமாகி விட்டார்கள்? அவர்களது முனகல் சப்தம் ஏன் வரவில்லை என்று கேட்டார்கள். பெருந் துன்பத்தினால் அவர்கள் மயக்கமடைந்து விட்டார்களோ என்ற எண்ணம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்டது. அப்பொழுது நபித்தோழர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களின் கவலையைக் கண்டு அவர்கள் கட்டப்பட்டிருந்த கயிறுகளை நாங்கள் தளர்த்தி விட்டோம் என்றனர்.

இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இது சரியன்று, இத்தகு அநீதி ஏற்படக்கூடாது. அப்பாஸ் (ரலி) அவர்கள் என் உறவினராக இருப்பது போன்று ஏனைய கைதிகளும் மற்றவர்களின் உறவினர்களாகவே இருக்கின்றனர். எனவே, அவர்கள் எல்லாரும் நிம்மதியாகத் தூங்குவதற்காக எல்லாருடைய கயிறுகளையும் தளர்த்திக் கட்டுங்கள். இல்லையென்றால், அப்பாஸ் அவர்களையும் இறுக்கமாகக் கட்டிவிடுங்கள் என்றார்கள். இதுகேட்டு நபித்தோழர்கள் எல்லாக் கயிறுகளையும் தளர்த்தி, அவர்களைக் காவல் புரியவேண்டிய பொறுப்புகளையும் தாங்களே ஏற்றுக்கொண்டனர்.

கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்களுள் படித்த ஒவ்வொரு வருக்கும் உரிய விடுதலைக்கான ஈட்டுத் தொகையாக மதீனாவிலுள்ள பத்துச் சிறுவர்களுக்கு கல்வி கற்றுக்கொடுக்க வேண்டுமென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தீர்மானித்தார்கள். ஈட்டுத்தொகை கொடுக்க முடியாதவர்களை, ஈட்டுத்தொகை பெறாமலேயே விடுதலை செய்து விட்டார்கள். ஈட்டுத்தொகை கொடுக்க முடிந்தவர்களிடமிருந்து பொருத்தமான ஈட்டுத் தொகையை பெற்று அவர்களை விடுதலை செய்து விட்டார்கள்.

இவ்வாறு செய்து, கைதிகளை அடிமைகளாக்கும் பழைய பழக்கத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒழித்துக் கட்டிவிட்டார்கள்.

## உஹுது போர்

நிராகரிப்பாளர்களின் படைவீரர்கள் பத்ர் போர்க்களத்தி லிருந்து வெருண்டோடியபோது, தாங்கள் அடுத்த ஆண்டு மீண்டும் மதீனாவின்மீது தாக்குதல் நடத்தி தங்களுக்குக் கிடைத்த தோல்விகளுக்காக முஸ்லிம்களைப் பழிவாங்கப் போவதாக பகிரங்கமாக அறிவித்தார்கள்.

எனவே, அவர்கள் அடுத்த ஆண்டில் மீண்டும் மதீனாவின் மீது தாக்குதல் நடத்துவதற்காக முழுமையான ஆயத்தம் செய்தார்கள். பத்ர் போருக்குப் பின்னர் மிக அதிகமாக கோபங் கொண்டிருந்த மக்காவாசிகள், எவருடைய உறவினர்கள் மரணமடைந்தாலும் அதற்காக அழ அவருக்கு அனுமதி கிடையாது என்றும் வாணிபம் செய்துவிட்டுத் திரும்பும் குழுக்களின் வருமானங்கள் அடுத்த ஆண்டுப் போருக்காகப் பாதுகாத்து வைக்கப்படும் என்றும் அறிவித்தனர். ஆகவே, அவர்கள் பெருமளவில் ஆயத்தம் செய்து கொண்டு, அபூஸுஃப்யானின் தலைமையில் மூவாயிரத்திற்கும் அதிகமான போர் வீரர்களைக் கொண்ட ஒரு படையைக் கொண்டு மதீனாவைத் தாக்கினர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் தோழர்களிடம், நாம் மதீனா நகரத்தில் இருந்து கொண்டே அவர்களை எதிர்க்கலாமா? அல்லது வெளியே சென்று எதிர்க்கலாமா? என்று கலந்து ஆலோசித்தார்கள். அவர்கள் மதீனாவிலிருந்தே போர் செய்ய விரும்பினார்கள். முதலில் போர் தொடுப்பவர்கள் எதிரிகளாகவே இருக்க வேண்டும் என்பதற்காகவும் முஸ்லிம்களை எதிரிகள் அவர்களது வீட்டில் தாக்க வரும்போது அவர்களை எளிதாக எதிர்கொள்ளலாம் என்பதற்காகவும் தாக்குதலைத் தொடங்க எதிரிகளை விட்டுவிடலாம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கருதினார்கள். ஆனால் பத்ர் போரில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைக்காததால், இறைவழியில் உயிர் தியாகம் செய்வதற்கான வாய்ப்பு தங்களுக்கும் கிடைக்க வில்லையே என்று வருந்திக் கொண்டிருந்த முஸ்லிம் இளைஞர்கள் இறைவழியில் உயிர் தியாகம் செய்வதற்கான வாய்ப்பு தங்களுக்கு ஏன் அளிக்கப்படுவதில்லை? என்று பிடிவாதமாகக் கூறியதால், வெளியில் சென்று போர் செய்ய வேண்டுமென்ற அவர்களின் கோரிக்கையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

கலந்தாலோசனை செய்தபோது அவர்கள் கண்ட ஒரு கனவையும் எடுத்துரைத்தார்கள்:

நான் ஒரு கனவில், சில பசுக்களைக் கண்டேன்; எனது வாளின் முனை உடைந்து விட்டதாகவும் அந்தப் பசுக்கள் அறுக்கப்படுவதாகவும் பின்னர் நான் என் கையை வலிமை வாய்ந்த பாதுகாப்பானதுமான ஒரு கவசத்திற்குள் நுழைத்திருப்பதாகவும் ஒரு செம்மறிக் கடாவின் மீது சவாரி செய்வதாகவும் கண்டேன் என்றார்கள்.

அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் இக்கனவிற்கு என்ன பொருள் செய்துள்ளீர்கள் என்று நபித்தோழர்கள் வினவியதற்கு,பசுக்கள் அறுக்கப்படுவதன் விளக்கம், என் தோழர்களுள் சிலர் போரில் கொல்லப்படுவார்கள் என்பதாகும்; வாளின் முனை உடைந்து விட்டதன் விளக்கம், என் உறவினர்களுள் மிகவும் முக்கியம் வாய்ந்த ஒருவர் கொல்லப்படுவார் அல்லது இப்போரில் எனக்கே ஏதேனும் துன்பம் ஏற்படலாம் என்று தெரிகிறது. கவசத்திற்குள் என் கையை நுழைப்பதன் விளக்கம், நாம் மதீனாவிலிருந்து எதிர்ப்பதே மிகவும் பொருத்தமானதாக இருக்கும் எனத் தெரிகிறது. செம்மறிக் கடாவின்மீது சவாரி செய்வதன் விளக்கம் நிராகரிப்பாளர்களின் படைத் தளபதியின் மீது நாம் வெற்றி பெறுவோம். அதாவது அவர்களின் தளபதி முஸ்லிம்களின் கையால் கொல்லப்படுவான் எனத் தெரிகிறது என்று அவர்கள் பதிலளித்தார்கள்.

இந்தக் கனவின் மூலம் முஸ்லிம்கள் மதினாவிலிருந்து எதிர்ப்பதே மிகவும் நன்றாகும் என்று அவர்களுக்கு தெளிவுபடுத்தப் பட்டது என்றாலும் இக்கனவின் விளக்கம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சொந்த விளக்கமாக இருந்ததாலும் இது இறையறிவிப்பின் மூலம் செய்யப்பட்ட விளக்கமாக இல்லாமல் இருந்ததாலும் பெரும்பான்மையினரால் தெரிவிக்கப்பட்ட கருத்தை ஏற்றுக்கொண்ட அவர்கள் மதீனாவிற்கு வெளியே சென்று போர் செய்ய முடிவு செய்தார்கள்.

அவர்கள் வெளியேறியபோது, அந்த இளைஞர்கள் வருத்தமடைந்து அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களுடைய ஆலோசனையே சரியானது. மதீனாவிலிருந்து கொண்டே எதிரிகளை நாம் எதிர்க்க வேண்டும் என்றனர். இதற்கு அவர்கள் இறைவனுடைய நபி கவசம் அணிந்துவிட்டால், அதனை களைவ தில்லை. இப்பொழுது என்ன நேர்ந்தாலும் சரியே. நாம் முன்னேறிக் கொண்டேதான் இருப்போம். நீங்கள் பொறுமையை மேற்கொண்டால் இறைவனுடைய உதவி உங்களுக்குக் கிடைக்கும் என்று கூறிவிட்டு, ஓராயிரம் படைவீரர்களுடன் அவர்கள் மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள்.

சிறிது தூரம் சென்றதன் பின்னர், இரவைக் கழிப்பதற்காக கூடாரம் அமைத்துத் தங்கினார்கள். அவர்கள் எதிரிகளை சந்திப்பதற்கு முன்னர் தங்கள் போர் வீரர்கள் சிறிது ஓய்வெடுத்துக் கொண்டு தத்தமது பொருள்கள் முதலியவற்றை ஆயத்தம் செய்வதற்கான வாய்ப்பை அவ்வீரர்களுக்கு அளிப்பது அவர்களின் வழக்கமாக இருந்தது.

காலைத் தொழுகை வேளையில் அவர்கள் சுற்றிப் பார்த்த பொழுது, சில யூதர்களும், தாங்கள் உடன்படிக்கை செய்திருந்த கோத்திரத்தினர்களுக்கு உதவி செய்யப் போவதாகப் பாசாங்கு செய்து கொண்டு வந்திருந்தது அவர்களுக்குத் தெரிந்தது. யூதர்களின் சதித்திட்டங்கள் பற்றி அவர்களுக்குத் தெரிந்திருந்ததால் அந்த யூதர்களைத் திருப்பி அனுப்பிவிடுமாறு அவர்கள் கூறினார்கள்.

இதனால் நயவஞ்சகர்களின் தலைவனாக இருந்த அப்துல்லாஹ் பின் உபய்யிப்னு ஸலூல் என்பவன், இப்பொழுது நடக்கப்போவது போர் அன்று. இது அழிவின் வாயிலில் நுழைவ தாகும். ஏனென்றால் தங்களுக்கு உதவி செய்ய வந்திருப்பவர்களே போர் செய்யக்கூடாதென்று தடுக்கப்படுகின்றனர் என்று கூறியவாறு தன்னைப் பின்பற்றும் முன்னூறு பேரையும் அழைத்துக் கொண்டு திரும்பிச் சென்று விட்டான்.

இதன் விளைவாக இஸ்லாமியப் படையில் எழுநூறு வீரர்களே எஞ்சியிருந்தனர். இவர்களின் எண்ணிக்கை, நிராகரிப் பாளர்களின் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பகுதியை விடவும் குறைவாகவே இருந்தது. போர் ஆயுதங்களைப் பொருத்த வரையில் இஸ்லாமியப் படை மிகவும் பலவீனமானதாக இருந்தது. ஏனென்றால், நிராகரிப்பாளர்களுள் எழுநூறு பேர் கவசம் அணிந்தவர்களாக இருந்தனர். முஸ்லிம்களுள் நூறு பேர் மட்டுமே கவசம் அணிந்தவர்களாக இருந்தனர். நிராகரிப்பாளர்களுள் இருநூறு பேர் குதிரைப்படை வீரர்களாக இருந்தனர். ஆனால், முஸ்லிம்களிடம் இரண்டு குதிரைகளே இருந்தன.

இறுதியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹுது என்னுமிடத்திற்குச் சென்று அங்குள்ள ஒரு கணவாயில் பாதுகாப்பிற்காக ஐம்பது போர் வீரர்களை நியமித்து அவர்களின் தலைவரிடம் இந்தக் கணவாய் மிக முக்கியமாகப் பாதுகாக்கப்பட வேண்டிய ஓர் இடமாகும். நாங்கள் கொல்லப்பட்டாலும் சரியே. நாங்கள் வெற்றி பெற்றாலும் சரியே. எந்த நிலையிலும் நீங்கள் இந்த இடத்திலிருந்து நகர்ந்து விடவே கூடாது என்று வலியுறுத்திக் கூறினார்கள்.

***(இப்னு ஹிஷாம் தொகுதி 2, பக்கம் 78)***

இதன் பின்னர் அவர்கள் எஞ்சிய 650 பேருடன் பகைவர்களை எதிர்ப்பதற்குப் புறப்பட்டார்கள். இப்பொழுது இவர்களின் எண்ணிக்கை பகைவர்களின் எண்ணிக்கையில் சற்றேறக்குறைய ஐந்தில் ஒரு பகுதியாகவே இருந்தது. போர் தொடங்கிற்று. இறைவனின் பேருதவியினால் 650 முஸ்லிம்களை எதிர்த்துப் போர் செய்த மக்காவின் போர்ப்பயிற்சி பெற்ற மூவாயிரம் போர் வீரர்களும் வெருண்டோடினார்கள்.

## தோல்வியாக மாற்றப்பட்ட வெற்றி

முஸ்லிம்கள் அவர்களைப் பின்தொடர்ந்து விரட்டிச் சென்றனர். பின்புறக் கணவாயில் பாதுகாப்பிற்காக அமர்த்தப்பட்டு இருந்தவர்கள் தங்கள் தலைவரிடம் இப்பொழுது பகைவர்கள் தோற்கடிக்கப்பட்டு விட்டனர். எனவே, எங்களையும் போரின் பயனைப் பெற்றுக் கொள்ள விட்டு விடுங்கள் என்றனர். அவர்களின் தலைவர் அவர்களைத் தடுத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளையை அவர்களுக்கு நினைவுபடுத்தினார். ஆனால், அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வலியுறுத்திக் கூறியது உண்மைதான்; எனினும் பகைவர்கள் வெருண்டோடிய பின்னரும் நீங்கள் இங்கேயே தொடர்ந்து நின்று கொண்டிருக்க வேண்டும் என்பதன்று அதன் கருத்து என்று கூறி விட்டு அந்தக் கணவாயை விட்டுவிட்டு மிகுந்த ஆர்வத்துடன் போர்க்களத்திற்குச் சென்றனர்.

வெருண்டோடிய படையில் பின்னர் இஸ்லாத்தின் மாபெரும் தளபதியாகத் திகழ்ந்த காலித் பின் வலீத் என்பவர் தமது கூரிய கண்களால் பாதுகாப்பற்றிருந்த அந்தக் கணவாயையும் சிலர் மட்டும் தமது தலைவருடன் அங்கு நிற்பதையும் கண்டார். அவர் நிராகரிப்பாளர்களது படையின் மற்றொரு தளபதி அம்ர் இப்னுல் ஆஸை அழைத்து இதோ பின்னால் உள்ள கணவாயைப் பாருங்கள் என்றார். அம்ர் அந்தக் கணவாயைப் பார்த்ததும் தமது வாழ்விற்குக் கிடைக்கவிருக்கும் மிகச் சிறந்த வாய்ப்பாக அதனைக் கருதினார்.

அவ்விரு தளபதிகளும் வெருண்டோடிக் கொண்டிருந்த தமது படைகளை நிறுத்தி சரிசெய்து கொண்டு இஸ்லாமியப் படையின் ஒருபக்கமாக சுற்றிச் சென்று மலையின்மீது ஏறிக் கொண்டனர். அங்குள்ள கணவாயில் பாதுகாப்பிற்காக நின்று கொண்டிருந்த சில முஸ்லிம்களைக் கொன்று விட்டு பின்புறமிருந்து இஸ்லாமியப் படையைத் தாக்கினர். வெருண்டோடிக் கொண்டிருந்த நிராகரிப்பாளர்களின் எஞ்சிய படையினர்கள் அவர்களின் வெற்றி முழக்கங்களைக் கேட்டு போர்க்களத்திற்குத் திரும்பினர்.

இந்த தாக்குதல் திடீரென நிகழ்ந்ததாலும் நிராகரிப்பாளர்களை தொடர்ந்து விரட்டிச் சென்றதனால் முஸ்லிம்கள் பல பகுதிகளிலும் சிதறி விட்டதாலும் அவர்களை எதிர்த்துப் போரிடுவதற்கு முறையான இஸ்லாமியப் படை எதுவும் அங்கு இருக்கவில்லை. தனித்தனியாக ஒருசில முஸ்லிம் வீரர்கள் போர்க்களத்தில் காணப்பட்டனர். இவர்களுள் சிலரையும் அவர்கள் கொன்று விட்டனர். இங்கு ஏதோ தவறு நிகழ்ந்திருக்கிறது என்று எண்ணி வியப்படைந்த எஞ்சிய சிலர் பின்பக்கமாக ஓடினர். நபித்தோழர்களுள் சிலர் விரைந்து சென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி வளையமாக நின்று கொண்டனர். அவர்களைச் சூழ்ந்து நின்றவர்கள் இருபது பேர்களுக்கு மேல் இருக்கமாட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நின்ற இடத்தை நோக்கி நிராகரிப்பாளர்கள் கடுமையாகத் தாக்கினார்கள். அவர்களைப் பாதுகாத்துக் கொண்டிருந்த நபித்தோழர்கள் ஒருவர் பின் ஒருவராகக் கொல்லப்பட்டனர். வாள்களால் போர் செய்தவர்கள் மட்டுமின்றி அம்புகளால் போர் செய்தவர்கள் உயரமான குன்றுகளில் நின்று கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி சரமாரியாக அம்புகளை எய்தனர்.

அப்பொழுது குரைஷியர்களைச் சார்ந்தவராகவும் மக்காவைத் துறந்து மதீனாவுக்குச் சென்ற முஹாஜிர்களைச் சார்ந்தவராகவும் இருந்த தல்ஹா (ரலி) அவர்கள் எதிரிகள் எல்லாரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தை நோக்கி அம்புகள் எய்து கொண்டிருப்பதைக் கண்டு தங்களின் கையை அவர்களின் முகத்திற்கு முன்னால் நீட்டியவாறு நின்று கொண்டார்கள். அவர்களின் முகத்தை நோக்கி எறியப்பட்ட அம்புகள் எல்லாம் தல்ஹா (ரலி) அவர்களின் கையில் பாய்ந்தன. ஆனால், வீரம் நிறைந்த நம்பிக்கைக்குரிய அந்த நபித்தோழர் தமது கையை சிறிதும் அசைக்கவில்லை! இவ்வாறாக, அம்புகளால் தாக்கப்பட்ட அவர்களின் கை கடினமான காயத்திற்குள்ளாகி முற்றிலும் பயனற்றதாகி விட்டது.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் இஸ்லாத்தின் நான்காம் கிலாஃபத்தின் காலத்தில் முஸ்லிம்களுக்கிடையே உள்நாட்டுக் கலகம் நிகழந்தபோது ஒரு பகைவன் தல்ஹா (ரலி) அவர்களைப் பார்த்து முடவர் தல்ஹாவே என்று இழிவாகக் கூறினான். இது கேட்டு நபித்தோழர் ஒருவர் ஆம், முடவர்தாம். ஆனால், அவர் தம் கைகளை எங்கு இழந்தார் என்று உமக்குத் தெரியுமா? தல்ஹா (ரலி) அவர்களின் இந்தக் கை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தை எதிரிகளின் அம்புகளிலிருந்து பாதுகாத்ததினால் துண்டிக்கப்பட்டது என்றார்.

உஹுதுப் போருக்குப் பின்னர் ஒருவர் தல்ஹா (ரலி) அவர்களிடம் தங்கள் கையில் அம்புகள் பாய்ந்தபோது தங்களுக்கு வலி ஏற்பட்டதில்லையா? தங்கள் வாயிலிருந்து கதறல் எழுந்த தில்லையா? என்று வினவியதற்கு தல்ஹா (ரலி) அவர்கள் மிகுந்த வலியும் ஏற்பட்டது. கதறி அழ வேண்டும் என்று மனமும் விரும்பியது. ஆனால் என் வாயிலிருந்து கதறல் ஒலி எழுவதனால் என் கை அசைந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தில் எதிரிகளின் அம்புகள் பாய்ந்து விடக்கூடாதே என்பதற்காகவே நான் கதறாமல் இருந்தேன் என்று பதலளித்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி நின்ற இந்த சிலரால் அந்தப் பெரும் படையை எவ்வளவு நேரம் எதிர்க்க முடியும்? நிராகரிப்பாளர்களது ஓர் அணியினர் முன்னேறி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சூழ்ந்து நின்றவர்களை பின்வாங்கச் செய்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன்னந்தனியாக ஒரு சுவரைப் போன்று அங்கு நின்றார்கள். அப்பொழுது வேகமாக வந்த ஒரு கல் அவர்களின் நெற்றியைத் தாக்கியதால் ஆழமான காயம் ஏற்பட்டது. இன்னொரு கல் அவர்களின் தலைக்கவசத்தில் விழுந்ததால் அதிலிருந்த வளையம் அவர்களின் கன்னத்தைக் கிழித்து உள்ளே சென்றது. அம்புகள் அவர்களைத் தொடர்ந்து தாக்கியதால் அவர்கள் மயக்கமுற்று சுற்றி நின்று போர் செய்தவாறு கொல்லப்பட்ட அவர்களின் தோழர்களது உடல்களுக்கிடையே விழுந்து விட்டார்கள். ***(இப்னு ஹிஷாம் தொகுதி 2 பக்கம் 84)*** இதன் பின்னர் மற்றும் சில நபித்தோழர்கள் அவர்களின் உடலைப் பாதுகாத்துக் கொண்டிருந்தபோது கொல்லப்பட்டார்கள். இவர்களின் சடலங்கள் அவர்களது உடலின் மேல் விழுந்தன.

அவர்களின் உடல் அந்தச் சடலங்களுக்குக் கீழே கிடப்பதைக் கண்ட நிராகரிப்பாளர்கள் அவர்கள் கொல்லப்பட்டு விட்டதாகக் கருதினர். எனவே மக்கத்துப் படையினர் தங்கள் அணிகளை சரி செய்வதற்காக பின்வாங்கிச் சென்றனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சூழ்ந்து நின்றவர்களும் நிராகரிப்பாளர்களின் படையினரால் தாக்கப்பட்டு பின்வாங்கியவர்களுமாகிய நபித்தோழர்களுள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் இருந்தார்கள். போர் செய்பவர்கள் எவரும் போர்க்களத்தில் இல்லாமலிருப்பதைக் கண்ட இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொல்லப்பட்டு விட்டதாக உறுதி கொண்டார்கள். பின்னொரு காலத்தில் ரோமானிய மன்னருடனும் பாரசீக மன்னருடனும் ஒரே நேரத்தில் மிகுந்த வீரத்துடன் போராடியவரும் என்றும் பதற்றமடையாத உள்ளத்தையும் அஞ்சா நெஞ்சத்தையும் கொண்டிருந்தவருமான அந்த மாபெரும் மனிதரான ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு கல்லின்மீது அமர்ந்து கொண்டு குழந்தையைப் போன்று அழத்தொடங்கி விட்டார்கள்.

இந்த நேரத்தில் நபித்தோழர்களுள் ஒருவரான மாலிக் (ரலி)■ அவர்கள் இரவிலிருந்து எதுவும் சாப்பிடாமல் பசியுள்ளவராக இருந்ததால் இஸ்லாமியப் படைக்கு வெற்றி கிடைத்திருந்தபோது சில பேரீச்சம்பழங்களை எடுத்துக் கொண்டு அவற்றை சாப்பிட்டு பசியாறிக் கொள்வதற்காக போர்க்களத்தில் இருந்து வெளியே சென்று விட்டார்கள்.

அந்த வெற்றியின் மகிழ்ச்சியில் அவர்கள் இங்குமங்குமாக நடந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் போர்க்களத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அழுது கொண்டிருப்பதைக் கண்டு மிகவும் வியப்படைந்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் தங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? இஸ்லாத்தின் வெற்றியைக் கண்டு தாங்கள் மகிழ்ச்சியடைய வேண்டுமா? அல்லது அழ வேண்டுமா? என்று வியப்புடன் கேட்டதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், மாலிக் அவர்களே! நீங்கள் வெற்றியைக் கண்டவுடன் போர்க்களத்தில் இருந்து பின்னால் சென்றிருப்பீர்கள் என்றும் இங்கு என்ன நடந்ததென்று உங்களுக்குத் தெரியாது என்றும் நினைக்கிறேன். நிராகரிப்பவர்களின் படை மலை அடிவாரத்திலிருந்து சூழ்ந்து கொண்டு இஸ்லாமியப் படையைத் தாக்கியது. முஸ்லிம்கள் கலைந்து சிதறி விட்டதால் இவர்களுள் எவராலும் அவர்களை எதிர்க்க முடியாது போயிற்று. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களுடைய சில தோழர்களுடன் அவர்களை எதிர்த்துப் போர் செய்து மரணமடைந்து விட்டார்கள் என்று பதிலளித்தார்கள்.

இது கேட்டு மாலிக் (ரலி) அவர்கள் உமர் அவர்களே! உண்மையிலேயே இவ்வாறு நிகழ்ந்துள்ளதென்றால், தாங்கள் இங்கு உட்கார்ந்து கொண்டு ஏன் அழுது கொண்டிருக்கிறீர்கள்? நம்மால் நேசிக்கப்பட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த உலகிற்குச் சென்று விட்டார்களோ அதே உலகிற்கு நாமும் செல்ல வேண்டும் என்று கூறிவிட்டு, தாம் சாப்பிடுவதற்காக தமது கையில் வைத்திருந்த அந்தக் கடைசி பேரீச்சம்பழத்தைப் பார்த்து, பேரீச்சம்பழமே! மாலிகிற்கும் சொர்க்கத்திற்கும் இடையில் உன்னைத் தவிர வேறு எது தடையாக இருக்கிறது? என்று கூறி, அதை வீசி எறிந்து விட்டு வாளை எடுத்துக் கொண்டு பகைவர்களின் படையினுள் பாய்ந்து சென்றார்கள். மூவாயிரம் எதிரிகளை எதிர்த்துப் போராட ஒருவரால் எப்படி முடியும்? எனினும் ஒரே இறைவனை வணங்கும் ஒருவர் பலரைவிட மிகவும் உயர்ந்தவராகவே விளங்குகின்றார். மாலிக் (ரலி) அவர்கள் மிகுந்த வீரத்துடன் போர் செய்வதைக் கண்ட பகைவர்கள் மிகவும் வியப்படைந்தனர். ஆனால், இறுதியாக அவர்கள் பலத்த காயமடைந்து கீழே விழுந்து விட்டார்கள். கீழே விழுந்தாலுங்கூட எதிரிகளை தொடர்ந்து தாக்கினார்கள்.

இதனால் மக்காவாசிகளான நிராகரிப்பாளர்கள் அவர்களை மிகவும் கொடூரமாக எதிர்த்துத் தாக்கினார்கள். போர் முடிந்த பிறகு அவர்களின் உடல் எழுபது துண்டுகளாகக் கிடந்தது. அதனால் அவர்களின் உடலைக் கண்டு பிடிக்க முடியாமலிருந்தது. இறுதியில் அவர்களின் சகோதரி, அவர்களின் ஒரு விரலைக் கண்டு இது என் சகோதரரின் உடல் என்றார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சூழ்ந்து நின்றவர்களும் நிராகரிப்பவர்களின் பெருங்கூட்டத்தின் திடீர் தாக்குதலால் பின்னுக்குத் தள்ளப்பட்டவர்களுமாகிய நபித் தோழர்கள், நிராகரிப்பாளர்கள் பின்வாங்கிச் சென்றவுடன், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சூழ்ந்து ஒருங்கிணைந்து, அவர்களின் உடலைத் தூக்கினார்கள்.

அபூ உபைதா பின் அல் ஜர்ராஹ் என்னும் நபித்தோழர் ஒருவர் தமது பற்களால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கன்னத்தில் பதிந்திருந்த வளையத்தை பலமாக இழுத்து வெளியே எடுத்தார்கள். இதனால் அவர்களின் இரு பற்கள் உடைந்து விட்டன.

இதன் பின்னர் சிறிது நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உணர்வு வந்து விட்டது. முஸ்லிம்களை மீண்டும் ஒருங்கிணையுமாறு செய்ய நபித்தோழர்கள், போர்க் களத்தின் நான்கு புறத்திற்கும் ஆள்களை விரைவாக அனுப்பினார்கள். சிதறடிக்கப்பட்ட படை மீண்டும் ஒருங்கிணையத் தொடங்கிற்று. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களை அழைத்துக் கொண்டு மலை அடிவாரத்திற்குச் சென்றார்கள்.

அங்கு சிறிய அளவில் எஞ்சியிருந்த இஸ்லாமியப் படையைக் கண்ட அபூஸுஃப்யான், மிகவும் உரத்த குரலில் நாங்கள் முஹம்மது அவர்களைக் கொன்று விட்டோம் என்று முழங்கினார். அப்போது பகைவர்கள் உண்மை நிலையினைத் தெரிந்து கொண்டு தாக்குதல் நடத்தாமலிருப்பதற்காகவும் காயமடைந்த முஸ்லிம்கள் மீண்டும் பகைவர்கள் தாக்குதல்களுக்கு ஆளாகாமல் இருப்பதற் காகவும் அபூஸுஃப்யானின் அந்த முழக்கத்திற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பதிலளிக்கவில்லை.

தமது முழக்கத்திற்கு இஸ்லாமியப் படையிலிருந்து எந்தப் பதிலும் கிடைக்காமலிருந்ததனால், தமது எண்ணம் சரியானதுதான் என்று அபூஸுஃப்யான் உறுதிகொண்டார். எனவே, அவர் நாங்கள் அபூபக்கரையும் கொன்று விட்டோம் என்று முழங்கினார். இதற்கும் எந்தப் பதிலும் கொடுக்க வேண்டாம் என்று ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்.

பின்னர் அபூஸஃப்யான் நாங்கள் உமரை கொன்று விட்டோம் என்று முழங்கினார். மீண்டும் அபூஸுஃப்யான் நாங்கள் மூவரையும் கொன்று விட்டோம் என்று முழங்கினார். தீரம் மிகுந்தவராக விளங்கிய ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அப்போது, அந்த முழக்கத்திற்குப் பதிலாக, இறைவனின் அருளால் நாங்கள் உயிருடனும் இருக்கின்றோம். உங்களை எதிர்க்க ஆயத்தமாகவும் இருக்கின்றோம் என்று கூற விரும்பினார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் முஸ்லிம்களுக்குத் துன்பத்தைக் கொடுத்து விடாதீர்கள்; மவுனமாக இருங்கள் என்று கூறி அவர்களைப் பதில் கூறாமல் இருக்கச் செய்தார்கள்.

இப்பொழுது நிராகரிப்பாளர்களுக்கு, இஸ்லாத்தைத் தோற்றுவித்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் அவர்களின் வலக்கையாகவும் இடக்கையாகவும் இருந்த இருவரையும் தாங்கள் கொன்று விட்டதாக உறுதி ஏற்பட்டது. எனவே அபூஸுஃப்யானும் அவருடைய நண்பர்களும் மிகுந்த மகிழ்ச்சியுடன், உஃலு ஹுபுல்; உஃலு ஹுபுல் நமது கண்ணியத்திற்குரிய ஹுபுல் சிலை வாழ்க! நமது கண்ணியத்திற்குரிய ஹுபுல் சிலை வாழ்க!! இன்று அந்தச் சிலை இஸ்லாத்தை முற்றாக அழித்து விட்டது என்று முழங்கினார்கள்.

காயமடைந்த முஸ்லிம்களை நிராரிப்பாளர்களின் படை மீண்டும் கடுமையாகத் தாக்கி, விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிற்கு மிகக் குறைவாக இருந்த முஸ்லிம்களைக் கொன்று விடக் கூடாதே என்பதற்காக, தாங்கள் மரணமடைந்து விட்டதாக அறிவிக்கப் பட்டதற்கும் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் மரணமடைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டதற்கும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மரணமடைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டதற்கும் பதில் ஏதும் கூறாமல் மவுனமாக இருக்குமாறு அறிவுரை கூறிக் கொண்டிருந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஒரே இறைவன் என்ற கொள்கையின் கண்ணியம் கேள்விக்குரியதாகி அவனுக்கு இணைவைத்தல் என்னும் ஷிர்க்கின் முழக்கம் அந்தப் போர்க்களத்தில் செய்யப்பட்டபோது, அவர்களின் ஆன்மாவுக்கு அமைதியின்மை ஏற்பட்டது.

எனவே அவர்கள், தங்கள் தோழர்களைப் பார்த்து மிகுந்த கோபத்துடன், இதற்கு நீங்கள் ஏன் பதில் கூறாமல் இருக்கின்றீர்கள்? என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாங்கள் என்ன பதில் கூற வேண்டும்? என்று அந்தத் தோழர்கள் வினவியதற்கு

*அல்லாஹு அஃலா - வ அஜல்லு; அல்லாஹு அஃலா - வ ஜல்லு* - அல்லாஹ் மட்டுமே மிகவும் உயர்வானவன்; அவன் மட்டுமே எல்லா வல்லமைகளையும் உடையவன்; அல்லாஹ் மட்டுமே மிகவும் உயர்வானவன்; அவன் மட்டுமே எல்லா வல்லமைகளையும் உடையவன் என்று பதில் கூறுங்கள். ***(சீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 2, பக்கம் 270)*** மேலும், ஹுபுல் சிலையின் மகத்துவம் உயர்ந்து விட்டதென்று நிராகரிப்பாளர்களாகிய நீங்கள் கூறுவது பொய். இணை துணையில்லாத அல்லாஹ்வே மகத்துவத்திற்குரியவன் என்று பதில் கூறுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இவ்வாறு அவர்கள் தாங்கள் உயிருடன் இருக்கும் செய்திகளைப் பகைவர்களுக்குத் தெரிவித்தார்கள். வீரம் செறிந்த இந்த பதிலைக் கேட்ட நிராகரிப்பாளர்களின் படைக்குப் பெரும் நடுக்கம் ஏற்பட்டு விட்டது.

இந்தப் பதிலால், அவர்களின் நம்பிக்கைகளெல்லாம் மண்ணோடு மண்ணாகி விட்டன. அவர்களுக்கு முன், விரல் விட்டு எண்ணும் அளவிற்கு மிகக்குறைவானர்களும் காயமடைந்தவர்களுமாகிய முஸ்லிம்கள் நின்றனர். போர் நியதிகளின் அடிப்படையில் பார்த்தால் மிகவும் எளிதாக அந்த முஸ்லிம்களை தாக்கிக் கொன்றிருக்கலாம்.

இவ்வாறிருந்துங்கூட, அவர்கள் மீண்டும் தாக்குதல் நடத்தத் துணிவு கொள்ள முடியாதவர்களாகி விட்டனர். அவர்களுக்குக் கிடைத்த சிறிதளவு வெற்றியில் பூரிப்படைந்து, மக்காவுக்குத் திரும்பிச் சென்று விட்டனர்.

மேற்போக்காகப் பார்க்கும்போது உஹுதுப் போரில் முஸ்லிம்களுக்கு கிடைத்த வெற்றி தோல்வியாக மாறியது. ஆனால் உண்மையிலேயே இந்தப் போர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைக்கு மாபெரும் ஓர் அடையாளமாக விளங்குகின்றது.

இந்தப் போரில் அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப, முஸ்லிம்களுக்கு முதலில் வெற்றி கிடைத்தது. அடுத்து அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப, அவர்களின் சிறிய தந்தையார் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் இந்தப் போரில் கொல்லப்பட்டார்கள். பின்னர் அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப இந்தப் போரின் தொடக்கத்திலேயே நிராகரிப்பாளர்களது படைத்தளபதி கொல்லப் பட்டார். இதன் பின்னர் அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப, அவர்களும் காயமடைந்து, அவர்களுடைய தோழர்களுள் பலரும் *ஷஹீது* (உயிர் தியாகி) ஆனார்கள்.

இவை மட்டுமின்றி முஸ்லிம்களுக்கு அவர்களுடைய மகத்தான பற்றையும் நம்பிக்கையையும் மிகத் தெளிவாகக் காட்டும் ஓர் அரிய வாய்ப்பு கிடைத்தது. இத்தகு பற்றுக்கும் நம்பிக்கைக்கும் ஓர் எடுத்துக்காட்டை வரலாற்று ஏடுகளில் எங்கும் காண முடியாது. இவற்றை எடுத்துக்காட்டும் சில நிகழ்ச்சிகள் இதற்குமுன் விளக்கப் பட்டுள்ளன. இன்னொரு நிகழ்ச்சியும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிகழ்ச்சியிலிருந்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழமையானது, நபித்தோழர்களின் உள்ளங்களில் எந்த அளவிற்கு உறுதியான நம்பிக்கையை உருவாக்கியது என்பது நன்கு புலனாகும். பகைவர்கள் பின்வாங்கிச் சென்ற வேளையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களுடைய சில தோழர்களுடன் மலை அடிவாரத்திற்குச் சென்றபோது, போர் நடந்த இடத்திற்குச் சென்று காயமுற்றுக் கிடந்தவர்களைக் கவனிக்குமாறு அவர்களுள் சிலருக்குக் கட்டளையிட்டார்கள்.

அவர்களைத் தேடிச் சென்ற நபித்தோழர் ஒருவர், போர்க்களத்தில் காயமடைந்து கிடந்த மதீனாவைச் சேர்ந்த ஒரு முஸ்லிமிடம் சென்ற போது, அவரது நிலை மிகவும் வருந்தத்தக்க தாக இருந்ததையும் அவரது உயிர் பிரியும் நிலையில் இருந்ததையும் கண்டு அவரிடம் அஸ்ஸலாமு அலைக்கும் (உங்களுக்குச் சாந்தி உண்டாவதாக) என்று கூறினார். அவர் நடுங்கிக் கொண்டிருந்த தமது கையை உயர்த்தி நபித்தோழருடைய கையைப் பிடித்துக் கொண்டு எவராவது ஒரு சகோதரர் இங்கு வந்து என்னைச் சந்திப்பார் என்று நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன் என்றார்.

நபித்தோழர் அவரிடம், உங்களது நிலை மிகவும் வருந்தத் தக்கதாக இருக்கிறதே, நீங்கள் உங்கள் உறவினர்களுக்குத் தெரிவிக்க விரும்பும் தூதுச் செய்தி ஏதாவது இருக்கிறதா என்று கேட்டார்.

மரணமடையும் நிலையிலிருந்த அவர், ஆம்; இருக்கிறது. நீங்கள் என் சார்பாக என்னுடைய ஸலாமை என் குடும்பத்தினர் களுக்குக் கூறுங்கள். நான் சிறிது நேரத்தில் மரணமடைந்து விடுவேன். ஆனால் நான் எனக்குப் பின்னால் இறைவனால் ஒப்படைக்கப்பட்ட - மிகவும் மதிக்கத்தக்க - புனிதமான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உங்களுக்கிடையே விட்டுச் செல்கிறேன். எனவே என் சகோதரர்களே! என் குடும்பத்தினர்களே! அவர்கள் இறைவனுடைய உண்மையான தூதர் ஆவார்கள். ஆகவே நீங்கள் அவர்களைப் பாதுகாப்பதில் உங்கள் உயிர்களைக் கூட அர்ப்பணிக்கத் தயங்கமாட்டீர்கள் என்றும் என் வாழ்வின் இறுதிப் போதனையாகிய இதனை நினைவில் கொள்வீர்கள் என்றும் நான் நம்புகிறேன் என்றார்.

மரணமடைகின்ற நிலையிலிருக்கும் ஒருவருடைய உள்ளத்தில், தமது உறவினர்களுக்குத் தெரிவிப்பதற்கு ஆயிரக்கணக்கான செய்திகள் தோன்றும்.

ஆனால், நபித்தோழர்களாகிய இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழமையில் இருந்ததனால், இவர்களுக்குத் தங்கள் குழந்தைகளைப் பற்றிய ஞாபகமோ, தங்கள் மனைவிமார்களைப் பற்றிய ஞாபகமோ, செல்வங்களைப் பற்றிய ஞாபகமோ சிறிதும் இல்லாதிருக்கும்

அளவிற்குத் தன்னலமற்றவர் களாக விளங்கினர். இவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி மட்டுமே ஞாபகமிருந்தது.

ஏனென்றால், உலகின் ஈடேற்றமே அவர்களுடன் தொடர்பு கொண்டதாகும். நம்முடைய மரணத்திற்குப் பின்னர் நம்முடைய குழந்தைகள் உயிருடனிருந்தால், அவர்களால் அப்படியொன்றும் பெரும் சாதனைகள் புரிந்துவிட முடியாது.

ஆனால், உலகின் ஈடேற்றத்திற்குரிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பாதுகாப்பதில் தங்களின் உயிர்களை அர்ப்பணம் செய்தால் நம்முடைய குடும்பம் அழிந்து விட்டாலும் உலகம் உயிர் பெற்றதாகி விடும். ஷய்த்தானின் பிடியில் சிக்கிக் கிடக்கும் மனிதன் ஈடேற்றம் பெறுவான். நம் குடும்பங்களின் வாழ்வை விடப் பல்லாயிரக்கணக்கான மடங்கு அதிக மதிப்புள்ளது, மனித குலத்தின் வாழ்வும் அதன் ஈடேற்றமுமாகும் என்பதை இவர்கள் நன்கு தெரிந்திருந்தனர்!

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காயமடைந்து கிடந்தவர்களையும் போரில் உயிர்த்தியாகம் செய்தவர்களையும் ஒன்றுதிரட்டினார்கள். காயமடைந்திருந்தவர்களுக்கு மருத்துவம் செய்யப்பட்டது. உயிர்த்தியாகிகளை நல்லடக்கம் செய்வதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டது.

இந்த நேரத்தில், அநியாக்காரர்களான நிராகரிப்பாளர்கள், கொலை செய்யப்பட்ட சில முஸ்லிம்களின் மூக்கையும் காதுகளையும் அறுத்திருந்தது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குத் தெரிய வந்தது. மூக்கு, காது துண்டிக்கப்பட்டவர் களுள் அவர்களின் சிறிய தந்தையார் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுமிருந்தார்கள்.

இக்காட்சியைக் கண்டு அவர்களுக்குப் பெருந்துயரம் ஏற்பட்டது. தகாத செயல்கள் என்று நாம் கருதியவற்றை நிராகரிப்பாளர்கள், இவ்வாறு கீழ்த்தரமாகப் பழிவாங்குவதன் மூலம் தங்களுக்கு ஏற்ற செயல்களாக்கி விட்டனர் என்று அவர்கள் கூறினார்கள்.

அப்போது இறைவனிடமிருந்து அவர்களுக்கு, நிராகரிப்பாளர்கள் செய்பவற்றைச் செய்யவிட்டு விடுவீராக. நீர் என்றென்றும் அருள் செய்வதையும் நீதியாக நடப்பதையும் மேற்கொள்வீராக என்று இறையறிவிப்பு வந்தது.

## உஹுதுப் போருக்குப் பின் மதீனா மக்கள் காட்டிய தியாக உணர்வு

உஹுதுப் போர் முடிந்து இஸ்லாமியப் படை மதீனாவை வந்தடைவதற்கு முன்னர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள் என்றும் இஸ்லாமியப் படை சிதறிப் போய்விட்டது என்றும் மதீனாவுக்குத் தவறான செய்தி கிடைத்தது. மதீனாவின் பெண்களும் சிறுவர்களும் பைத்தியம் பிடித்தவர்கள் போன்று மிக வேகமாக உஹுதுப் போர்க்களம் நோக்கி விரைந்தனர். இவர்களுள் பெரும்பாலாருக்கு வழியிலேயே உண்மையான செய்தி கிடைத்துத் திரும்பி விட்டனர். ஆனால் பனூதீனார் கோத்திரத்தைச் சார்ந்த ஒரு பெண் பைத்தியம் பிடித்தவர் போன்று விரைந்து சென்று உஹுதுப் போர்க்களத்தை அடைந்தாள்.

அந்தப் பெண்ணின் கணவரும், சகோதரரும், தந்தையும் உஹுதுப் போரில் கொல்லப்பட்டனர். மற்றும் சில அறிவிப்புகளில், அவர்களுடைய ஒரு மகனும் கொல்லப்பட்டதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. அவள் பைத்தியம் பிடித்தவள் போன்று உஹுதுப் போர்க்களம் நோக்கிச் சென்று கொண்டிருந்த நேரத்தில், அவளுடைய தந்தை கொல்லப்பட்ட செய்தி அவளிடம் கூறப்பட்ட போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வாறு இருக்கிறார்கள்? என்பதை எனக்குத் தெரிவியுங்கள் என்று வினவினாள்.

இந்த செய்தியை அறிவித்தவருக்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உயிரோடு நலமாகத் திரும்பிக் கொண்டிருப்பது தெரியுமாதலால் அவர், அவர்களின் நலம் குறித்துத் தெரிவிக்காமல், அவளுடைய சகோதரர், கணவர், மகன் ஆகியவர்கள் கொல்லப்பட்ட செய்தியை அவளிடம் கூறிக் கொண்டிருந்தார். ஆனால் அவளோ, **'*மாஃபஅல ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்* - நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்ன காரியம் செய்து விட்டார்கள்?'** என்றே வினவிக் கொண்டிருந்தாள்.

வெளிப்படையாகப் பார்க்கும் பொழுது, அவள் கூறிய இந்தச் சொற்றொடர் தவறானதாகத் தெரியலாம். இதனால்தான் வரலாற்றாசிரியர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு என்ன நேர்ந்து விட்டது என்பதே இத்தொடரின் கருத்து என்று வரைந்துள்ளார்கள்.

ஆனால் உண்மையிலேயே இந்தச் சொற்றொடர் தவறானதன்று. மாறாக, பெண்களின் மொழி வழக்கிற்கேற்ப முற்றிலும் சரியானதே யாகும். பெண்களின் உணர்வுகள் மிகவும் தீவிரமானவையாக உள்ளன. சில சமயங்களில் அவர்கள் மரணமடைந்தவர்களை உயிருள்ளவர்களாகக் கருதி அவர்களிடம் பேசுகின்றனர். சில பெண்களின் கணவர்கள் அல்லது ஆண் மக்கள் மரணமடைந்து விட்டால், அவர்களை நோக்கி, நீங்கள் எங்களை எவர்களிடம் விட்டுச் செல்கின்றீர்கள்? மகனே! வயதாகி விட்ட என்னை விட்டு விட்டு எங்கே சென்று விட்டாய்? என்பன போன்ற வாக்கியங்களைக் கூறுகின்றனர்.

ஆழ்ந்த வருத்தத்தின் காரணமாக மனித இயல்பின் ஒரு நுட்பமான வெளிப்பாடாகும் அது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரண செய்தியைக் கேட்ட அந்தப் பெண்ணிற்கும் அவ்வாறான நிலை ஏற்பட்டது. அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்பதை அவள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. மறுபுறம் அந்தச் செய்தியை மறுக்கவும் அவளால் முடியவில்லை.

எனவே, ஆழ்ந்த வருத்தத்தின் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்ன காரியம் செய்து விட்டார்கள். அதாவது நம்பிக்கைக்குரிய இத்தகு உயர்வான தலைவர், எங்களுக்குப் பிரிவின் பெருந்துன்பங்களை அளிக்க எவ்வாறு விருப்பம் கொண்டு விட்டார்கள்? என்று கூறிக் கொண்டிருந்தாள். தமது தந்தை, சகோதரர், கணவன் ஆகியவர்கள் மரணமடைந்தது பற்றி அவள் சிறிதும் பொருட்படுத்தாமலிருந்ததை அந்த நபித் தோழர் கண்டபோது, அவளது உண்மையான உணர்வுகளை அவர் புரிந்து கொண்டு அவளிடம், ‘நீங்கள் விரும்புவது போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவன் அருளால் உயிருடன் நலமாக இருக்கிறார்கள்’ என்றார்.

அப்படியானால் அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை எனக்குக் காட்டுங்கள் என்று அவள் கேட்டதற்கு, அவர்கள் இருக்கும் இடத்தைச் சுட்டிக் காட்டி, அவர்கள் அதோ இருக்கிறார்கள். அங்கே செல்லுங்கள் என்று அவர் கூறியதும், அவள் மிக விரைவாக அவர்களிடம் சென்று, அவர்களின் மேலாடையைப் பிடித்து முத்தமிட்டு, இவ்வாறு கூறினாள்:

‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என் தாயும் தந்தையும் தங்களுக்கு அர்ப்பணம்; தாங்கள் நலமாக இருக்கும்போது, வேறெவரின் மரணத்தைப் பற்றியும் நான் பொருட்படுத்தமாட்டேன்’ என்று கூறினாள்.

மேற்கூறப்பட்டது போன்று இந்தப் போரில் முஸ்லிம் ஆண்களும் பெண்களும் தங்கள் நம்பிக்கையின் முன்மாதிரியையும் தங்கள் பற்றின் முன்மாதிரியையும் எடுத்துக் காட்டினார்கள்.

கிறிஸ்தவ எழுத்தாளர்கள் மரியம் மகதலேனாவும் அவளுடைய தோழிகளும் காலை நேரத்தில் பகைவர்களுக்குத் தெரியாமல் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் கல்லறைக்குச் சென்று காட்டிய வீரத்தைக் குறித்து மகிழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஆனால், பனூ தீனார் கோத்திரத்தைச் சேர்ந்த இந்தப் பெண் காட்டிய பற்றுக்கு இதனை ஒப்பிட முடியுமா? நான் அவர்களிடம் கேட்கின்றேன்; “கிறிஸ்தவர்களே! இங்கு வந்து, என் அன்பிற்குரிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தூய்மையான பற்று கொண்டவர்களும் அவர்களுக்காகத் தியாகம் செய்தவர்களும் எவ்வாறான நிலைகளில் அன்னாருக்கு உதவியளித்தார்கள்? எவ்வாறான நிலைமைகளில் அவர்களெல்லாம் ஏகத்துவம் என்னும் கொடியை எவ்வாறு உயரச் செய்தார்கள்? என்பதைப் பாருங்கள்”.

இத்தகு தியாகத்திற்கு இன்னொரு எடுத்துக்காட்டும் வரலாற்றில் வரையப்பட்டுள்ளது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போரில் உயிர்த்தியாகம் செய்தவர்களை நல்லடக்கம் செய்து விட்டு மதீனாவுக்குத் திரும்பியபோது, பெண்களும் சிறுவர்களும் நகரத்திற்கு வெளியே அவர்களை வரவேற்பதற்காகப் புறப்பட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமர்ந்திருந்த ஒட்டகத்தின் கயிற்றை மதீனாவின் தலைவர் ஸஃது பின் மஆது (ரலி) அவர்கள் பிடித்துக் கொண்டு, நாங்கள் ஹஸ்ரத் நபிகள் (ஸல்) அவர்களை நலமாக எங்கள் வீட்டிற்குக் கொண்டு வந்து விட்டோம் என்று மிகுந்த பெருமிதத்தோடும் உற்சாகத்தோடும் உலகிற்குப் பகிரங்கமாக அறிவிப்பது போல் பீடுநடை போட்டுக் கொண்டு மிக விரைவாக முன்னோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்!

அப்போது நகருக்குப் பக்கத்தில், தமது வயது முதிர்ந்த பார்வை குறைந்த தாயார் வந்து கொண்டிருப்பதை அவர்கள் கண்டார்கள். உஹுதுப் போரில் அவளுடைய ஒரு மகன் அம்ரு பின் மஆது என்பவரும் கொல்லப்பட்டிருந்தார். தமது தாயாரைக் கண்டு, ஸஃது பின் மஆது (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இதோ என் தாயார் வந்து கொண்டிருக்கிறார்கள் என்று கூறியதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர் முன்னோக்கி வரட்டும் என்றார்கள்.

அந்த முதியவள் முன்னேறிச் சென்று, தனது பலவீனமான கண்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றம் தெரிகிறதா என்று இங்கும் அங்கும் பார்த்தாள். இறுதியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அடையாளம் கண்டு, மிக்க மகிழ்ச்சி அடைந்தாள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவளிடம், தாயே! உமது மகன் போரில் உயிர்த்தியாகம் செய்ததற்காக உமக்கு எனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறியதற்கு, எங்கள் எஜமானரே! தாங்கள் நலமாக இருப்பதை நான் கண்டு விட்டேனாதலால் என்னுடைய எல்லா துன்பத்தையும் பொரித்துச் சாப்பிட்டு விட்டேன் என்று அவள் கூறினாள்.

“துன்பத்தைப் பொரித்துச் சாப்பிட்டு விட்டேன்” என்ற தொடர், மிகவும் வியக்கத்தக்கதாகவும் அன்பிற்குரிய மிக ஆழமான உணர்ச்சியினை எடுத்துக்காட்டக் கூடியதாகவும் அமைந்துள்ளது!

துன்பமானது மனிதனைச் சாப்பிட்டு விடுகின்றது. ஆனால் தனது முதிர்ந்த வயதில் தனக்கு ஊன்றுகோலாக இருந்த மகனை இழந்த அந்தப் பெண்ணோ மிகுந்த வீரத்துடன், என் மகனை இழந்ததனால் ஏற்படும் கவலையானது என்னை எப்படிச் சாப்பிட முடியும்? நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள் என்றால், நான் அந்தக் கவலையைச் சாப்பிட்டு விடுவேன். என் மகனின் மரணம் என்னைச் சாப்பிடுவதற்குக் காரணமாக இருக்காது. மாறாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக அவன் தனது உயிரைத் தியாகம் செய்துள்ளான் என்ற எண்ணமானது, எனக்கு மேலும் வலுவூட்டுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது என்று கூறினாள்!

மதீனாவாழ் மக்களே! என் உயிர் உங்களுக்கு அர்ப்பணம். நீங்கள் எவ்வளவு அதிகமான நன்மையைப் பெற்று விட்டீர்கள்!

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நலமாக மதீனாவைச் சென்றடைந்தார்கள். இந்தப் போரில் முஸ்லிம்களுள் பலர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர் என்றாலும் இந்த உஹுதுப் போரில் முஸ்லிம்களுக்குத் தோல்வி ஏற்பட்டது என்று கூற முடியாது.

நான் முன்னர் விளக்கிய நிகழ்ச்சிகளைக் கவனத்திற் கொள்ளும் போது, இந்தப் போர் மாபெரும் வெற்றியாக இருந்தது. உலக இறுதிநாள் வரை முஸ்லிம்கள் இந்தப் போரை நினைவு கூர்ந்து தங்கள் நம்பிக்கையை அதிகமாக்கிக் கொண்டேயிருப்பார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவுக்குச் சென்று, முஸ்லிம்களுக்குப் பயிற்சியளித்தல், போதனை செய்தல், உள்ளங்களை தூய்மைப்படுத்துதல் ஆகிய தங்களுடைய பணியைத் தொடர்ந்து செய்யத் தொடங்கினார்கள். ஆனால் இப்பணிகளை இப்போது அவர்களால் எளிதாகச் செய்ய முடியாதிருந்தது.

ஏனென்றால், உஹுதுப் போருக்குப் பின்னர் யூதர்களுக்கு முன்பைவிட அதிகமாகத் துணிச்சல் ஏற்பட்டு விட்டது. நயவஞ்சகர்கள் மேலும் அதிகமாக தலைதூக்கத் தொடங்கி விட்டனர். மனித வலிமையினாலேயே இஸ்லாத்தை ஒழித்துக் கட்டி விடலாம் என்று அவர்கள் கருதினர். எனவே யூதர்கள், பல வகையிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் துன்புறுத்தத் தொடங்கினர். கீழ்த்தரமான கவிதைகள் புனைந்து, அவற்றின் மூலம் அவர்களையும் அவர்களின் குடும்பத்தினரையும் இழிவுபடுத்தினர்.

ஒரு தடவை ஒரு சச்சரவுக்குத் தீர்ப்பு வழங்குவதற்காக அவர்கள், யூதர்களின் கோட்டைக்குச் செல்ல நேர்ந்த போது, அவர்கள் உட்கார்ந்திருக்கும் இடத்தில் மேற்பகுதியிலிருந்து ஒரு பெரிய அம்மியை விழச்செய்து அவர்களை கொன்றுவிட வேண்டும் என்று அந்த யூதர்கள் சதித்திட்டம் தீட்டினர். ஆனால் இறைவன் அவர்களுக்குச் சரியான நேரத்தில் அதனைப் பற்றி அறிவித்து விட்டான். உடனே அவர்கள் அங்கிருந்து எதுவும் கூறாமல் சென்று விட்டார்கள். பின்னர் யூதர்கள் தங்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

முஸ்லிம் பெண்கள், வீதிகளில் இழிவுபடுத்தப்பட்டனர். ஒரு தடவை இதனால் ஏற்பட்ட தகராறில் ஒரு முஸ்லிம் கொல்லப் பட்டார். மற்றொரு தடவை அந்த யூதர்கள் ஒரு முஸ்லிம் சிறுமியின் தலையில் கல்லால் அடித்து நசுக்கி விட்டார்கள். அந்தச் சிறுமி துடிதுடித்து மரணமடைந்தாள்.

இக்காரணங்களினால் அந்த யூதர்களுடனும் முஸ்லிம்கள் போர் தொடுக்க வேண்டியதாயிற்று. ஆனால் அரபு மக்களின் வழக்கத்திற்கும் யூதர்களின் வழக்கத்திற்கும் ஏற்ப முஸ்லிம்கள் அவர்களைக் கொல்லவில்லை. மாறாக, அவர்கள் மதீனாவி லிருந்து வெளியேறிவிட வேண்டும் என்ற ஒரே நிபந்தனையுடன் அவர்களை விட்டு விட்டார்கள்.

எனவே, யூதர்களின் இரு கோத்திரங்களுள் ஒரு கோத்திரத்தினர் சிரியாவை நோக்கிச் சென்று விட்டனர். மற்றொரு கோத்திரத்தின் ஒரு பகுதியினர் சிரியாவுக்கும் இன்னொரு பகுதியினர் மதீனாவுக்கு வடக்கிலுள்ள கைபர் என்னும் நகரத்திற்கும் சென்று விட்டனர். அரபு நாட்டில் இந்த நகரம் யூதர்களுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவும் மிக்க வலுவான கோட்டை களைக் கொண்டதாகவும் இருந்தது.

## மது அருந்தக் கூடாதென்ற கட்டளையும் அதன் பயனும்

உஹுதுப் போருக்கும் அதற்குப் பிறகு நிகழவிருந்த போருக்கும் இடையிலுள்ள காலக்கட்டத்தில் முஸ்லிம்களுக்கு இஸ்லாம் வழங்கிய நற்பயனுக்குத் தெளிவானதோர் எடுத்துக்காட்டை அதாவது இஸ்லாத்தில் மதுவிலக்குச் சட்டத்தினால் ஏற்பட்ட நற்பயனை உலகம் கண்டு வியந்தது.

இஸ்லாம் தோன்றுவதற்கு முன் அரபு மக்களின் நிலைகள் பற்றி முன்னர் நாம் விளக்கிய போது, அவர்கள் மது அருந்தும் பழக்கமுடையவர்களாக இருந்தனர் என்று கூறினோம்.

கண்ணியமான ஒவ்வொரு அரபு குடும்பத்திலும் ஒரு நாளிற்கு ஐந்து தடவை மது அருந்தப்பட்டது. மது அருந்திய போதையில் உணர்வை இழந்து விடுவது அவர்களிடம் சர்வ சாதாரணமானதாக இருந்தது. இதனால் அவர்கள் சிறிதும் வெட்க உணர்வு கொண்டதில்லை. மாறாக, அதனை அவர்கள் ஒரு நல்ல செயலாகவே கருதினர். எந்த விருந்தினர் வந்தாலும் மதுவைப் பரிமாறுவது, இல்லதரசியின் கடமையாக இருந்தது. இத்தகு அழிவிற்குரிய பழக்கத்தை அந்த மக்களிடமிருந்து அகற்றுவது சாதாரணமான எளிய காரியமல்ல. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்குச் சென்ற நான்காம் ஆண்டில், மது அருந்துவது விலக்கப்பட்டுள்ளது என்ற கட்டளை அவர்களுக்கு அருளப்பட்டது. இந்தக் கட்டளை அறிவிக்கப்பட்டதும் முஸ்லிம்கள் மது அருந்துவதை முழுமையாக விட்டு விட்டார்கள்.

இது குறித்து நபிமொழியில் இவ்வாறு வந்துள்ளது; மது அருந்தக் கூடாது என்ற இறையறிவிப்பு அருளப்பட்ட போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு தோழரை அழைத்து, இந்தப் புதிய கட்டளையை மதீனாவின் வீதிகளில் அறிவித்து விடுங்கள் என்று கட்டளையிட்டார்கள்.

அப்போது மதீனாவைச் சேர்ந்த ஒரு முஸ்லிமுடைய வீட்டில், மது அருந்துபவர்களின் கூட்டம் கூடியிருந்தது. இதில் கலந்து கொள்ள அதிகமானோர் அழைக்கப்பட்டிருந்தனர். எல்லாரும் மது அருந்திக் கொண்டிருந்தனர். ஒரு பெரிய பானையிலுள்ள மதுவை அருந்தி விட்டு, மற்றொரு பானையிலுள்ள மதுவை அருந்த ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர். மது போதையில் பலர் உணர்வை இழந்து விட்டனர். மற்றும் பலர் உணர்வை இழக்கும் நிலைக்கு நெருங்கிக் கொண்டிருந்தனர்.

இவ்வாறான நிலையில், “ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப, மது அருந்துவதைத் தடை செய்துள்ளார்கள்” என்று ஒருவர் அறிவிப்புச் செய்ததை

அவர்கள் செவியுற்றனர். அப்போது அவர்களுள் ஒருவர் எழுந்து, இந்த அறிவிப்பு, மது அருந்தக்கூடாது என்ற கட்டளை எனத் தெரிகின்றது. சரியாகத் தெரிந்து கொண்டு வருகிறேன். சற்றுப் பொறுங்கள் என்றார். இதற்கிடையே இன்னொருவர் எழுந்து, மது நிரம்பியிருந்த பானையைத் தமது கம்பால் ஓங்கி அடித்து நொறுக்கி விட்டு, முதலில் கட்டளைக்குக் கட்டுப்படுங்கள்; பின்னர் விசாரித்துப் பாருங்கள்; நாம் இவ்வாறான ஓர் அறிவிப்பைச் செவியேற்றது, நமக்குப் போதும். நாம் மதுவும் அருந்திக் கொண்டு, விசாரணைகளும் நடத்திக் கொண்டிருப்பது நமக்குப் பொருத்தமான தல்ல. மாறாக, மதுவை வீதிகளில் ஓடச்செய்து விட்டுப் பின்னர் அந்த அறிவிப்பைப் பற்றி விசாரிப்பதே நமது கடமையாகும்" என்றார். *(புகாரி - கிதாபுல் அஷ்ரிபா)*

இந்த முஸ்லிமின் கருத்தே சரியானது. ஏனென்றால், மது அருந்துவது தடை செய்யப்பட்டு விட்டதென்றால், அதற்குப் பிறகு தொடர்ந்து மது அருந்திக் கொண்டிருந்தால், அவர்கள் குற்றம் இழைத்தவர்களாகிவிடுவர். மது அருந்துவது தடை செய்யப்பட வில்லை என்றால், அதனை வீதிகளில் ஓடச் செய்வதென்பது, தாங்கிக் கொள்ள முடியாத அளவிற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதல்ல.

இந்த அறிவிப்பிற்குப் பின்னர் முஸ்லிம்களிடமிருந்து மது அருந்தும் பழக்கம் முற்றிலுமாக நீங்கி விட்டது. மகத்தான இந்த புரட்சியை உருவாக்க சிறப்பான எந்த முயற்சிக்கும் கடினமான எந்தப் பயிற்சிக்கும் அவசியம் ஏற்பட்டதில்லை. அந்த கட்டளையை செவியேற்றவர்களும் உடடினயாக அது செயல்படுத்தப்பட்டதை கண்டவர்களுமாகிய முஸ்லிம்கள் எழுபது, எண்பது ஆண்டுகள் வரை உயிருடன் இருந்தனர்.

ஆனால், அந்தக் கட்டளைக்குப் பின்னர் அதற்கு மாற்றம் செய்த எந்த முஸ்லிமும் அவர்களுள் இருந்ததில்லை. ஏதோ ஒருவர் அந்தக் கட்டளைக்குப் பின்னரும் மது அருந்தினார் என்றால் அதற்குக் காரணம், அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து நேரடியாக பயன் பெறாததேயாகும்.

இஸ்லாத்தின் இந்தக் கட்டளையை மது அருந்துவதற்கு தடை விதித்த அமெரிக்காவின் ஓர் இயக்கத்துடனும் அதற்காக அங்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுடனும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது அல்லது ஐரோப்பிய நாட்டில் பல ஆண்டுகளாக அதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுடனும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகத் தெளிவாக தெரிவது என்னவென்றால், அரபு மக்களிடம் வேரூன்றியிருந்த இந்த நாகரிகக் குறைபாட்டை அவர்களிடமிருந்து களைவதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஓர் அறிவிப்பு மட்டும் போதுமானதாக இருந்தது.

ஆனால், இஸ்லாத்திற்கு வெளியிலோ மது அருந்துவதை தடுப்பதற்கு சட்டங்கள் இயற்றப்பட்டன. காவலர்களும் இராணுவமும் மற்றும் வரி இலாகாக்களின் அலுவலர்களும் இணைந்து மது அருந்துவதின் சாபக்கேட்டை அகற்றுவதற்காக ஒன்றுபட்டு முயற்சிகளை மேற்கொண்டும்கூட அவர்கள் தோல்வியையே கண்டனர். அவர்களுக்கு தங்கள் தோல்வியை ஒப்புக் கொள்ள வேண்டியதும் நேர்ந்தது. இறுதியில் மது அருந்துவதற்கே வெற்றி கிடைத்தது. அவர்களால் அதனை அகற்ற முடிந்ததில்லை.

நம்முடைய இந்தக் காலம் முன்னேற்றமான காலம் என்று கூறுகின்றனர். ஆனால் இந்தக் காலத்தை இஸ்லாத்தின் ஆரம்பக் காலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்த இரண்டு காலங்களுள் எது முன்னேற்றமான காலம்? நம்முடைய இந்தக் காலம் முன்னேற்றமானதா? இத்தகு மாபெரும் புரட்சியைத் தோற்றுவித்த இஸ்லாத்தின் ஆரம்பகாலம் முன்னேற்றமானதா? என்பதை அறிந்து நாம் வியப்படைகின்றோம்.

## உஹுதுப் போருக்குப்பின் நிராகரிக்கும் கோத்திரங்களின் சதித்திட்டங்கள்

உஹுதுப் போர் நிகழ்ச்சிகள் எளிதில் மறைந்துவிட முடியாதவையாக இருந்தன. மக்காவாசிகள் இந்தப் போரை இஸ்லாத்திற்கு எதிராக தங்களுக்கு கிடைத்த முதல் வெற்றியாகக் கருதினார்கள்.

அவர்கள் இந்த செய்தியை அரபு நாடு முழுவதும் பரப்பினார்கள். அரபு கோத்திரங்களை இஸ்லாத்திற்கு எதிராகத் தூண்டுவதற்கும் முஸ்லிம்களை எளிதில் பணியச் செய்து விடலாம் என்ற உறுதியை அவர்களிடம் ஏற்படுத்துவதற்கும் இந்தச் செய்தியை பயன்படுத்தினார்கள். முஸ்லிம்கள் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்களின் வலிமையல்ல. மாறாக, அவர்களின் முன்னேற்றத்தின் காரணம் அரபுக் கோத்திரங்களின் கவனக்குறைவேயாகும். அரபு மக்கள் எல்லாரும் ஒன்றுபட்டு முயற்சி செய்தால், முஸ்லிம்களைத் தோற்கடிப்பது கடினமானதல்ல என்ற கருத்தை அவர்கள் பரப்பினார்கள்.

இதன் விளைவாக முஸ்லிம்களுக்கு மாற்றமான எதிர்ப்பு தீவிரமடைந்தது. ஏனைய அரபுக் கோத்திரங்கள் மக்கத்தினர்களை விட மிக அதிகமாக முஸ்லிம்களுக்கு தொல்லை கொடுப்பதில் பங்கேற்கத் தொடங்கினர். சில கோத்திரங்கள் பகிரங்கமாகத் தாக்கத் தொடங்கினர். மற்றும் சில கோத்திரங்கள் மறைமுகமாக முஸ்லிம்களுக்குத் தீங்கு செய்யத் தொடங்கின.

ஹிஜிரி நான்காவது ஆண்டில் அளல், காரா *(புகாரி - கிதாபுல் மகாஸி)* என்னும் இரண்டு அரபுக் கோத்திரங்களைச் சார்ந்தவர்கள் தங்கள் பிரதிநிதிகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அனுப்பி எங்கள் கோத்திரங்களில் அதிகமானவர்கள் இஸ்லாத்தை விரும்புகின்றனர். எனவே, இஸ்லாத்தை நன்கு தெரிந்த சிலர் அவர்களிடையே வாழ்ந்து அவர்களுக்கு இந்தப் புதிய மார்க்கத்தை போதிப்பதற்காக அனுப்பப்பட வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர்.

உண்மையில், இது இஸ்லாத்தின் கொடிய பகைவர்களாகிய பனூலிஹ்யான் கோத்திரத்தினர் செய்த சதித்திட்டமாகும். முஸ்லிம்கள் அழைத்து வரப்படும்போது தாங்கள் அவர்களைக் கொன்று தங்கள் தலைவர் ஸுஃப்யான் பின் காலித் என்பவருக்காக பழிக்குப்பழி வாங்க வேண்டும் என்பது அவர்களின் நோக்கமாக இருந்தது.

எனவே, அவர்கள் அளல், காரா என்ற இரு கோத்திரங்களின் பிரதிநிதிகள் தங்களுடன் சில முஸ்லிம்களை அழைத்து வந்தால் அவர்களுக்கு மாபெரும் வெகுமதிகள் கொடுப்பதாக வாக்களித்து அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள்.

அவ்விரு கோத்திரங்களின் பிரதிநிதிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து வேண்டிக் கொண்டபோது அவர்கள் அந்தப் பிரதிநிதிகளின் பேச்சை நம்பி அந்த மக்களுக்கு இஸ்லாத்தின் கொள்கைகளையும் அடிப்படைச் சட்டங்களையும் போதிப்பதற்காகப் பத்து முஸ்லிம்களை அவர்களுடன் அனுப்பி வைத்தார்கள். இக்குழுவினர் பனூலிஹ்யானுக்குரிய நிலப் பகுதியை அடைந்ததும் அந்தப் பிரதிநிதிகள் பனூலிஹ்யானுக்கு தகவல் கொடுத்து முஸ்லிம்களை சிறைப்பிடித்துக் கொள்ளுங்கள் அல்லது கொன்று விடுங்கள் என்று தூது அனுப்பினார்கள். இந்தத் தீய திட்டத்தின்படி பனூலிஹ்யானின் ஆயுதம் தாங்கிய இருநூறு போர் முஸ்லிம்களை பின்தொடர்ந்து செல்லப் புறப்பட்டார்கள். இறுதியில், *ரஜீஹ்* என்ற இடத்தில் அவர்களைச் சூழ்ந்து கொண்டனர். அந்தப் பத்து முஸ்லிம்களுக்கும் இருநூறு பகைவர்களுக்குமிடையில் சண்டை ஏற்பட்டது. முஸ்லிம்களின் உள்ளம் நம்பிக்கை என்னும் ஒளியால் நிரம்பியிருந்தது. பகைவர்களுக்கோ அந்த ஒளி அறவே இல்லாமல் இருந்தது. அந்தப் பத்து முஸ்லிம்களும் உயரமான ஒரு மேட்டின்மேல் ஏறிக்கொண்டு அந்த இருநூறு பகைவரையும் போருக்கு அழைத்தனர்.

பகைவர்கள் அவர்களை ஏமாற்றி சிறைப்பிடிக்க விரும்பி நீங்கள் கீழே இறங்கினால் நாங்கள் உங்களை எதுவும் செய்யாமல் விட்டு விடுவோம் என்றனர். ஆனால் அந்த முஸ்லிம்களின் தலைவர் நிராகரிப்பாளர்களின் வாக்குறுதிகளை நாங்கள் நன்றாகத் தெரிந்து கொண்டோம் என்று கூறிவிட்டு முகத்தை வானத்தை நோக்கி உயர்த்திக் கொண்டு இறைவா! நீ எங்கள் நிலைமையைப் பார்த்துக் கொண்டிருக்கிறாய். உன் தூதருக்கு எங்கள் நிலைமையைப் பற்றி அறிவித்து விடுவாயாக என்று பிரார்த்தனை செய்தார்.

முஸ்லிம்களின் இந்தச் சிறிய குழுவினர் தங்களுடைய பேச்சைக் கேட்கமாட்டார்கள் என்று நிராகரிப்பாளர்களுக்குத் தெரிந்ததும் அவர்கள் அந்த முஸ்லிம்களைத் தாக்கினர். முஸ்லிம்கள் தோல்வியைப் பற்றி அச்சமின்றி தங்களுள் ஏழு பேர் ஷஹீதாகும்வரை அவர்களுடன் நீண்ட நேரம் போர் செய்து கொண்டிருந்தனர்.

மரணத்திலிருந்து தப்பிய எஞ்சிய மூவரிடம் நீங்கள் இந்த மேட்டிலிருந்து கீழே இறங்கி வந்தால் நாங்கள் உங்கள் உயிரைக் காப்பாற்றுவோம் என்று நிராகரிப்பாளர்கள் மீண்டும் வாக்குறுதி அளித்தனர். ஆனால் அம்மூவரும் அவர்களின் வாக்குறுதிகளை நம்பி கீழேயிறங்கியபோது அவர்கள் தங்களுடைய விற்கயிறுகளால் அம்மூவரையும் இறுக்கமாகக் கட்டிவிட்டனர்.

இதற்கு அவர்களுள் ஒருவர் நீங்கள் அளித்த வாக்குறுதிகளில் செய்த முதல் வாக்குமீறலாகும் இது. இதற்குப் பிறகு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்பதை இறைவனே அறிவான் என்று கூறிவிட்டு அவர்களுடன் செல்ல மறுத்துவிட்டார்.

நிராகரிப்பாளர்கள் அவரை அடித்து இழுத்துச் செல்லத் தொடங்கினர். ஆனால் இறுதியில் அவருடைய எதிர்ப்பையும் உறுதியையும் கண்டு நம்பிக்கையிழந்த அவர்கள் அவரை அங்கேயே கொன்றுவிட்டு எஞ்சிய இருவரையும் தம்முடன் அழைத்துச் சென்று மக்காவின் குரைஷியர்களிடம் அடிமைகளாக விற்று விட்டனர்.

அவர்களுள் ஒருவர் குபைப் (ரலி) அவர்கள்; மற்றொருவர் ஸய்து (ரலி) அவர்கள். பத்ர் போரில் தனது தந்தையைக் கொன்றதற்கு பழிவாங்குவதற்காக குபைப் (ரலி) அவர்களை வாங்கியவன் அவர்களைக் கொல்ல எண்ணினான்.

ஒரு நாள் குபைப் (ரலி) அவர்கள் தமது தேவைக்காக சவரக்கத்தியை கேட்டுப் பெற்றிருந்தார்கள். அது அவர்கள் கையிலிருந்த நேரத்தில் அந்த வீட்டிலுள்ளவர்களின் ஒரு குழந்தை விளையாடிக் கொண்டே அவர்களிடம் சென்று விட்டது. குபைப் (ரலி) அவர்கள் அக்குழந்தையைத் தூக்கி தமது மடியில் உட்கார வைத்தார்கள்.

அந்தக் குழந்தையின் தாய் இதனைக் கண்டதும் மிகுந்த அச்சத்துடன் குபைப் (ரலி) அவர்கள் இப்பொழுது குழந்தையை கொன்று விடுவார்கள் என்று உறுதிகொண்டாள். ஏனென்றால் குபைப் (ரலி) அவர்களை இன்னும் சில நாட்களில் அவர்கள் கொலை செய்யவிருந்தனர். மேலும், அந்த நேரத்தில் அக்குழந்தைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அவர்களின் கையில் சவரக்கத்தி இருந்தது.

குபைப் (ரலி) அவர்கள் குழந்தையின் தாயின் முகத்திலிருந்து அவளுடைய கவலையைப் புரிந்து கொண்டு நான் உமது குழந்தையைக் கொன்று விடுவேன் என்று நினைக்கின்றீரா? ஒருபோதும் அவ்வாறு நினைக்க வேண்டாம். அத்தகு தீய செயலை ஒருகாலும் என்னால் செய்ய இயலாது. முஸ்லிம்கள் ஏமாற்றுபவர்கள் இலர் என்றார்கள்.

அந்தப் பெண் குபைப் (ரலி) அவர்களின் நேர்மையான இந்த நற்செயலைக்கண்டு மிகவும் வியந்து இதனை அவள் எப்போதும் தன் நினைவில் வைத்திருந்தாள். குபைப் (ரலி) அவர்களைப் போன்ற கைதி எவரையும் நாங்கள் கண்டதில்லை என்று அவள் எப்போதும் கூறிக்கொண்டேயிருந்தார்.

ஒருநாள் மக்கத்தினர் குபைப் (ரலி) அவர்களைக் கொன்று விழாக் கொண்டாடுதவற்காக ஒரு திடலுக்கு அழைத்துச் சென்றனர். அவர்களை கொலை செய்யும் நேரம் வந்தபோது இரண்டு ரக்கஅத் தொழ எனக்கு வாய்ப்பளியுங்கள் என்று அவர்கள் கேட்டார்கள். குரைஷியர்கள் இதனை ஏற்றுக் கொண்டனர்.

குபைப் (ரலி) அவர்கள் மக்கள் எல்லாருக்கும் முன்னால் இவ்வுலகில் இறுதியாக தமது இறைவனை வணங்கினார்கள். அவர்கள் தொழுகையை நிறைவேற்றியதும் நான் இன்னும் சிறிது அதிக நேரம் தொழ விரும்பினேன். ஆனால், நான் மரணத்திற்குப் பயப்படுகிறேன் என்று நீங்கள் கருதிவிடுவீர்களோ என்று நினைத்து அதனை விரைவில் முடித்துக் கொண்டேன் என்றார்கள்.

பின்னர் அமைதியாகத் தமது தலையை கொலை செய்பவன் முன்னால் வைத்தவாறு கீழ்க்காணும் கவிதையைப் பாடினார்கள்:

“நான் முஸ்லிமாக இருக்கின்ற நிலையில் கொல்லப்பட விருப்பதால் என் உடல் எந்தப் பக்கமாக விழப்போகிறது என்பது பற்றி எனக்கு சிறிதும் கவலையில்லை. இறைவன் பாதையில் என் மரணம் நிகழ்வதால் நான் ஏன் கவலைப்பட வேண்டும்? அவன் நாடினால் துண்டு துண்டாக

ஆக்கப்படும் என் உடலின் ஒவ்வொரு பகுதியிலும் அவன் அருளை இறக்குவான்" *(புகாரி)*. குபைப் (ரலி) அவர்கள் இந்தக் கவிதையை பாடி முடிப்பதற்குள் மரணத் தண்டனையை நிறைவேற்றுபவன் வாளால் வெட்டினான். அவர்களின் தலை தரையில் விழுந்தது.

இந்த விழாவைக் கொண்டாடுவதற்காக கூடியிருந்தவர் களுள் ஸஃது பின் ஆமிர் என்பவரும் இருந்தார். இவர் பின்னர் இஸ்லாத்தை தழுவினார். குபைப் (ரலி) அவர்கள் கொல்லப்பட்டது பற்றி இவருக்கு முன்னால் பேசப்பட்டபோதெல்லாம் இவர் மயக்கமடைந்ததாக கூறப்பட்டுள்ளது.

மற்றொரு கைதியாகிய ஸய்த் (ரலி) அவர்களும் கொல்லப் படுவதற்காக வெளியே கொண்டு செல்லப்பட்டார்கள். இதனைக் கண்டு களிப்பதற்காக வந்தவர்களுள் மக்காவின் தலைவர் அபூ ஸுஃப்யானும் ஒருவராக இருந்தார்.

இவர் ஸய்த் (ரலி) அவர்களிடம் வந்து உமக்குப் பதிலாக உமது இடத்தில் முஹம்மத் அவர்கள் இருப்பதையும் நீர் உமது வீட்டில் நிம்மதியாக இருப்பதையும் நீர் விரும்புகின்றீரா என்று கேட்டதற்கு, ஸய்த் மிகுந்த கோபத்துடன், 'அபூஸுஃப்யான்! நீர் என்ன கூறுகிறீர்? இறைவன் மேல் ஆணையாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கால்களில் முள் ஒன்று தைத்து விடுவதை விட நான் மரணமடைவதே எனக்குச் சிறந்ததாகும்' என்று பதிலளித்தார்கள். *(இப்னு ஹிஷாம் - தொகுதி 2 பக்கம் 122)*

இந்த தியாக உணர்வைக் கண்டு அபூ ஸுஃப்யான் மிகுந்த வியப்படைந்தார். உடனே அவர் ஸய்த் (ரலி) அவர்களை ஆச்சரியத்துடன் பார்த்து தாழ்ந்த குரலில் முஹம்மத் அவர்களை அவர்களின் தோழர்கள் நேசிப்பது போன்று வேறெவரும் எவரையும் நேசிப்பதை நான் கண்டதேயில்லை என்பதற்கு இறைவனே சாட்சி என்றார்.

## குர்ஆனை மனனம் செய்திருந்த எழுபது பேர் கொல்லப்பட்ட நிகழ்ச்சி

சற்றேறக்குறைய இதே நாட்களில் நஜ்திலுள்ள சிலர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து தங்களுக்கு இஸ்லாத்தைக் கற்றுக் கொடுப்பதற்கு சில முஸ்லிம்களை தங்களுடன் அனுப்புமாறு வேண்டினர். அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்பவில்லை.

ஆனால் அப்போது மதீனாவில் இருந்த அபூபரா, நஜ்திலிருந்து வந்துள்ள இந்தக் கோத்திரத்தின் சார்பாக நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்றும் அவர்கள் எந்தத் தீங்கும் செய்யமாட்டார்கள் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் உறுதிமொழி கூறியதால் அவர்கள் திருக்குர்ஆனை மனனம் செய்திருந்த எழுபது முஸ்லிம்களை இந்தப் பணிக்காக தேர்ந்தெடுத்தார்கள்.

இந்தக் குழுவினர் பீர் மவூனா என்ற இடத்தை அடைந்ததும் இவர்களுள் ஹராம் பின் மல்ஹான் (ரலி) அவர்கள் அபூபராவின் சகோதரர் மகனாகிய ஆமிர் கோத்திரத்தின் தலைவரிடம் இஸ்லாத்தின் தூதைத் தெரிவிப்பதற்காக சென்றார்கள்.

அந்தக் கோத்திரத்தினர் வெளிப்படையாக ஹராம் (ரலி) அவர்களை நல்ல முறையில் வரவேற்றார்கள். ஆனால், அவர்கள் அந்தத் தலைவரின் முன் உரையாற்றிக் கொண்டிருந்தபோது ஒருவன் பின்னாலிருந்து ஈட்டியால் அவர்களைக் குத்தினான். இதனால் அவர்கள் அந்த இடத்திலேயே ஷஹீதானார்கள்.

ஈட்டி அவர்களின் கழுத்தை ஊடுருவிச் சென்றபோது அவர்கள், 'அல்லாஹ் மிகப் பெரியவன்; கஃபாவின் இறைவன் மேல் ஆணையாக! நான் எனது குறிக்கோளை அடைந்து விட்டேன்' எனக் கூறினார்கள். இவ்வாறாக வஞ்சகத்தால் ஹராம் (ரலி) அவர்களைக் கொன்ற பிறகு இஸ்லாத்தை கற்றுக் கொடுக்கச் சென்ற எஞ்சியுள்ள குழுவினரையும் தாக்குமாறு அந்தக் கோத்திரத்தினர்களை அவர்களின் தலைவர்கள் தூண்டினார்கள். ஆனால், அவர்கள் எங்களுடைய தலைவர் அபூபரா பொறுப்பேற்றுக் கொண்டிருப்பதால் நாங்கள் அந்தக் குழுவினரைத் தாக்க முடியாது என்றனர். இதற்கு அந்தத் தலைவர்கள் முஸ்லிம்களை அழைத்து வந்த இரு கோத்திரத்தாரின் உதவியுடன் முஸ்லிம் போதகர்க் குழுவினரைத் தாக்கினார்கள்.

அப்போது அந்த முஸ்லிம்கள் நாங்கள் போதிப்பதற்காகவும் இஸ்லாத்தை கற்றுக் கொடுப்பதற்காகவுமே வந்துள்ளோம்; போர் செய்ய வரவில்லை என்று கூறினார்கள். இது அறவே பயனளிக்க வில்லை. நிராகரிப்பாளர்கள் முஸ்லிம்களை கொல்லத் தொடங்கி விட்டனர்.

இறுதியாக, மூவரைத் தவிர மற்றெல்லாரும் இறைவழியில் கொல்லப்பட்டனர். அம்மூவருள் ஒருவர் முடவராக இருந்தார். இவர் போர் நிகழ்வதற்கு முன் ஓர் உயர்ந்த குன்றின்மேல் ஏறி விட்டார். மற்றும் இருவர் ஒட்டகங்களை மேய்ப்பதற்காக காட்டிற்குச் சென்றிருந்தனர். அவ்விருவரும் திரும்பி வந்தபோது தங்களுடைய அறுபத்தாறு தோழர்களும் திடலில் மரணமடைந்து கிடப்பதைக் கண்டனர். அவ்விருவரும் தங்களுக்குள் ஆலோசனை செய்தனர். நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று இந்த நிகழ்ச்சியைப் பற்றி தெரிவிக்க வேண்டும் என்றார் ஒருவர்.

மற்றவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் நம் குழுவிற்குத் தலைவராக நியமிக்கப்பட்டவர் கொல்லப்பட்டு விட்டதால் நான் இந்த இடத்தை விட்டு நகரமாட்டேன் என்று கூறி தனியாக நிராகரிப்பாளர்களைத் தாக்கியவாறு மரணமடைந்தார். இன்னொருவர் சிறைப்பிடிக்கப்பட்டார். ஆனால் பின்னர் ஒரு கோத்திரத்தின் தலைவர் செய்த சத்தியத்திற்காக அவர் விடுதலை செய்யப்பட்டார்.

ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுக்கு அடிமையாக இருந்து பின்னர் அவர்களால் விடுதலை செய்யப்பட்ட ஆமிர் பின் ஃபுஹைரா என்பவர் கொல்லப்பட்டவர்களுள் ஒருவர். இவர்களை ஜப்பார் பின் சல்மா என்பவர் கொலை செய்தார். இவர் பின்னர் இஸ்லாத்தைத் தழுவினார்.

'ஆமிரை கொலை செய்ததே, நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்குக் காரணமாக இருந்தது' என்று இவர் கூறிக் கொண்டிருந்தார். நான் ஆமிரைக் கொலை செய்தபோது, 'அல்லாஹ்வின் மேல் ஆணையாக! நான் (ஆமிர்) எனது குறிக்கோளை அடைந்து விட்டேன்' என்று அவர் கூறியதை நான் கேட்டேன்.

இதன் பின்னர் நான் ஒருவரிடம் ஒரு முஸ்லிம் மரணத்தின் வாசலில் நிற்கும்போது அவர் இவ்வாறு ஏன் கூறுகிறார் என்று கேட்டதற்கு முஸ்லிம்கள் அல்லாஹ்வின் பாதையில் மரணம் அடைவதை அருட்கொடையாகவும் வெற்றியாகவும் கருதுகின்றனர் என்று அவர் பதிலளித்தார்.

இந்தப் பதிலைக் கேட்டு மிகுந்த வியப்பிற்காளான ஜப்பார் பின் சல்மா முறைப்படி இஸ்லாத்தைப் படித்து தெரிந்து கொள்ள முற்பட்டார். இறுதியில் முஸ்லிமாகி விட்டார்.

*(அஸத்துல் கஃபா, இப்னு ஹிஷாம் பக்கம் 127)*

சற்றேறக்குறைய எண்பது முஸ்லிம்கள் தீமை நிறைந்த சதித் திட்டத்தினால் கொல்லப்பட்ட இந்த இரண்டு நிகழ்ச்சிகளைப் பற்றிய மிகவும் வருந்தத்தக்க செய்தி மதீனாவுக்குக் கிடைத்தது. கொல்லப்பட்டவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல. திருக்குர்ஆனை மனனம் செய்தவர்களாவர்.

அவர்கள் எந்தத் தவற்றையும் செய்ததில்லை. எவருக்கும் தொல்லை கொடுத்ததில்லை. அவர்கள் எந்தப் போரிலும் கலந்து கொண்டதில்லை. ஆனால், பகைவர்கள் அல்லாஹ்வின் பெயராலும் மதத்தின் பெயராலும் பொய்யுரைத்து ஏமாற்றி தங்கள் பிடியில் அவர்களைச் சிக்க வைத்தனர்.

இந்த நிகழ்ச்சிகளிலிருந்து ஐயத்திற்கிடமின்றி நிராகரிப் பாளர்களுக்கு இஸ்லாத்தின்மீது கடுமையான பகைமை இருந்ததென்று நிரூபணமாகின்றது. இதற்கு மாறாக, இஸ்லாத்தின் மீது முஸ்லிம்களுக்கு இருந்த ஆர்வம் உறுதிப்பாடு அதிகமாகவும் நிரந்தரமானதாகவும் இருந்தது.

## பனூ முஸ்தலிக் போர்

உஹுதுப் போருக்குப் பின்னர் மக்காவில் கடினமான பஞ்சம் ஏற்பட்டது. மக்கத்தினர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த பகைமையையும் அவர்களுக்கு எதிராக மக்களுக்கிடையே வெறுப்பைப் பரப்புவதற்காக நாடு முழுவதிலும் செய்து வந்த சதித்திட்டங்களையும் அறவே பொருட்படுத்தாமல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடினமான துன்பத்திற்குரிய இந்த நேரத்தில் மக்காவிலுள்ள ஏழைகளுக்கு உதவி செய்வதற்காக பணம் திரட்டி அவர்களுக்கு வழங்கினார்கள்.

ஆனால், இத்தகு பேருதவியையும் கூட மக்கத்தினர் எண்ணிப்பார்க்கவுமில்லை. அவர்களின் பகைமை சிறிதளவுகூட தணியவுமில்லை. மாறாக, அவர்கள் மேலும் அதிகமாக பகைமை பாராட்டினார்கள்.

முஸ்லிம்களிடம் முன்னர் அனுதாபம் காட்டிய கோத்திரங்களைச் சார்ந்தவர்களும் பகைவர்களாகி விட்டனர். அந்தக் கோத்திரங்களுள் பனூ முஸ்தலிக் கோத்திரமும் ஒன்றாக இருந்தது. முஸ்லிம்களிடனுள்ள அவர்களின் தொடர்புகள் முன்னர் நன்றாக இருந்தன. ஆனால், இப்போது மதீனாவைத் தாக்குவதற்கான ஆயத்தம் செய்யத் தொடங்கினர்.

அவர்களின் இந்த ஆயத்தம் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தெரிந்தபோது உண்மை நிலையை தெரிந்து கொண்டு வருமாறு சிலரை அவர்கள் அனுப்பி வைத்தார்கள். இவர்கள் பின்னர் திரும்பி வந்து ஏற்கனவே கிடைத்த தகவல்களை உண்மைப்படுத்தினர். இதனைத் தொடர்ந்து இந்தப் புதிய தாக்குதலை தாங்களே சென்று எதிர்க்க வேண்டுமென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முடிவு செய்தார்கள்.

எனவே, அவர்கள் ஒரு படையை ஆயத்தம் செய்து கொண்டு பனூ முஸ்தலிக் கோத்திரத்தை நோக்கிச் சென்றார்கள். இஸ்லாமியப்படை பகைவர்களை சந்தித்தபோது அந்தப் பகைவர்கள் போர் செய்யாமலேயே பின்வாங்கிச் செல்வதற்கான முயற்சியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேற்கொண்டார்கள். ஆனால், பகைவர்கள் இதனை மறுத்துவிடவே போர் நிகழ்ந்தது. சில மணி நேரத்திற்குள் பகைவர்களுக்கு தோல்வி ஏற்பட்டு விட்டது.

மக்காவின் நிராகரிப்பாளர்கள் முஸ்லிம்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்கு துணிந்திருந்தனர். முஸ்லிம்களுடன் நட்பு கொண்டிருந்த கோத்திரங்களைச் சார்ந்தவர்களும் பகைவர்களாகிக் கொண்டிருந்தனர். முஸ்லிம்களிடையில் இருந்த நயவஞ்சகர்கள் இந்த சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களின் சார்பாக இருந்து போரில் பங்கேற்கத் துணிவு கொண்டனர். அநேகமாக இவ்வாறு முஸ்லிம் களுக்கு பாதிப்பை உண்டாக்க தங்களுக்கு வாய்ப்பு கிடைக்கலாம் என்று அந்த நயவஞ்சகர்கள் எண்ணினர்.

ஆனால், பனூ முஸ்தலிக்குடன் நடந்த போர் சில மணி நேரங்களுக்குள் முடிந்து விட்டது. இதனால் இந்தப் போரின்போது முஸ்லிம்களுக்கு தீங்கிழைக்க நயவஞ்சகர்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூமுஸ்தலிக்கின் நகரத்தில் சில நாட்கள் தங்கியிருக்க முடிவு செய்தார்கள். அவர்கள் அங்கு தங்கியிருந்த நாட்களில் மக்காவைச் சேர்ந்த ஒரு முஸ்லிமுக்கும் மதீனாவைச் சேர்ந்த ஒரு முஸ்லிமுக்குமிடையில் கிணற்றுத் தண்ணீர் இறைப்பது தொடர்பாக தகராறு ஏற்பட்டது.

மக்காவாசி அடிமையாக இருந்து விடுதலையானவர். இவர் மதீனாவாசியை அடித்து விட்டு முஹாஜிர்களாகிய மக்காவாசிகளை அழைத்தார். அடிபட்டவர் அன்ஸாரிகளாகிய மதீனாவாசிகளை அழைத்தார். இவ்வாறாக, பதற்றம் பரவியது. ஆனால் என்ன நடந்தது என்று எவரும் விசாரிக்க முயற்சி செய்யவில்லை. இரு பக்கத்திலுமுள்ள வாலிபர்கள் வாள்களை உருவினர்.

இவ்வாறான சந்தர்ப்பத்தை இறைவனே ஏற்படுத்தியதாகக் கருதிய அப்துல்லாஹ் பின் உபைய் இப்னு ஸலூல் என்பவன் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்ற விரும்பி மதீனாவாசிகளிடம் இந்த முஹாஜிர் (மக்காவிலிருந்து மதீனாவுக்கு வந்த அகதி) களுக்காக நீங்கள் காட்டிய அளவு கடந்த தயவு நீங்கள் அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொண்டது ஆகியவற்றின் காரணமாக உங்கள்மீது அவர்களின் ஆதிக்கம் நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்றான்.

அவனுடைய உரையின் விளைவாக அநேகமாக அவன் விரும்பியது நடந்து கடினமான சண்டை ஏற்படும் என்று அவன் எண்ணினான். ஆனால், அவ்வாறு எதுவும் நிகழவில்லை. தீமை நிறைந்த தனது உரையைப் பற்றிய அவனது கணிப்பு தவறாகப் போயிற்று. அன்ஸாரிகளாகிய மதீனாவாசிகளுக்கு தனது உரை நல்ல பயனளித்து விட்டதென்று கருதிய அவன் "நாம் மதீனாவை அடைந்ததும் மாபெரும் மரியாதைக்குரியவர். மிக அதிகமான இழிவிற்குரியவரை வெளியேற்றி விடுவார்" என்று கூறினான். *(புகாரி)*

இவ்வாறு கூறி தன்னை மாபெரும் மரியாதைக்குரியவர் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மிக்க இழிவிற்குரியவர் என்றும் அவன் கருதினான். (**நவூதுபில்லாஹி மின்ஹா** - இத்தகு தீமையிலிருந்து அல்லாஹ்விடம் நாம் பாதுகாப்புக் கோருகிறோம்)

இந்த வார்த்தை அவனது வாயிலிருந்து வெளியானதும் நம்பிக்கையாளர்கள் அதன் உண்மையை புரிந்து கொண்டு இது சாதாரணமான வார்த்தையல்ல. நம்மை வழிதவறச் செய்யும் ஷய்த்தானின் வார்த்தையாகும் என்றனர். இதனைத் தொடர்ந்து ஒரு வாலிபர் எழுந்து தமது சிறிய தந்தையார் மூலம் இந்தச் செய்தியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குத் தெரிவித்து விட்டார். அவர்கள் அப்துல்லாஹ் பின் உபைய் இப்னு ஸலூலையும் அவனது நண்பர்களையும் அழைத்து என்ன நடந்தது என்று விசாரித்தார்கள். அப்துல்லாஹ்வும் அவனது நண்பர்களும் முற்றிலும் மறுத்து இந்த நிகழ்ச்சிக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்று கூறிவிடவே அவர்கள் எதுவும் சொல்லாமல் மவுனமாக இருந்து விட்டார்கள். எனினும் உண்மை வெளிப்பட்டுப் பரவத் தொடங்கிற்று.

சில நாட்களுக்குள் அப்துல்லாஹ் பின் உபைய் இப்னு ஸலூலின் மகன் அப்துல்லாஹ் என்பவரும் இந்த உண்மையைப் பற்றிக் கேள்விப்பட்டார். உடனே அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என் தந்தை தங்களை இழிவுபடுத்தியுள்ளார். இதற்குரிய தண்டனை மரண தண்டனையேயாகும். தங்களுடைய தீர்ப்பும் இதுவேயானால் நான் என் தந்தையை கொன்று விட எனக்குத் தாங்கள் கட்டளை இடுவதை நான் விரும்புகிறேன். தாங்கள் வேறெவருக்காவது கட்டளையிட்டு அவரது கையால் என் தந்தை கொல்லப்பட்டால் தந்தைக்காக நான் அவரைக் கொலை செய்து பழிக்குப்பழி வாங்கி இதனால் நான் அல்லாஹ்வின் அதிருப்திக்கு ஆளாகி விடலாம் என்றார்.

ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவ்வாறான எண்ணம் எனக்கு அறவேயில்லை. நான் உமது தந்தையுடன் மென்மையாகவும் பரிவுடனும் நடந்து கொள்வேன் என்றார்கள் *(இப்னு ஹிஷாம் தொகுதி 2 பக்கம் 169).* அப்துல்லாஹ் தமது தந்தையின் வஞ்சகம் கொடுமையான வார்த்தை ஆகியவற்றை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மென்மை, பரிவு ஆகியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்தபோது அவரது நம்பிக்கை மேலும் அதிகமாகி விட்டது. தம் தந்தையின் மீதிருந்த கோபமும் அதே அளவில் அதிகமானது.

இஸ்லாமியப்படை மதீனாவுக்குப் பக்கத்தில் சென்ற போது, அவர் அதன் முன் சென்று நின்று கொண்டு தம் தந்தையின் பாதையைத் தடுத்து விட்டு தம் தந்தையிடம் "நீர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக உபயோகித்த அந்த வார்த்தைகளை திரும்பப் பெறாதவரை நான் உம்மை மதீனாவிற்குள் நுழையவிடமாட்டேன். இறைத்தூதர் இழிவானவர். நீர் மரியாதைக்குரியவர் என்ற வார்த்தைகள் எந்த வாயிலிருந்து வெளியானதோ அதே வாயினால் இறைத்தூதர் மரியாதைக் குரியவர். நீர் இழிவானவர் என்ற வார்த்தைகளை நீர் சொல்லியாக வேண்டும். நீர் இதனைச் சொல்லாதவரை உம்மை ஒருபோதும் முன்னால் செல்ல விடமாட்டேன்" என்றார்.

இதுகேட்டு அப்துல்லாஹ் பின் உபைய் இப்னு ஸலூல் திகைப்பிற்கும் நடுக்கத்திற்கும் ஆளாகி, 'என் மகனே! நான் உம்முடன் ஒன்றுபட்டக் கருத்துக் கொண்டுள்ளேன். இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மரியாதைக்குரியவர். நான் இழிவானவன்' என்று கூறினான். இதன் பிறகே அந்த வாலிபர் அப்துல்லாஹ் தம் தந்தையை செல்ல அனுமதித்தார்.

(தர்காத்தே கபீர் லி இப்னி ஸஅத் தொகுதி 2 பக்கம் 46)

## மதீனாவின்மீது முழு அரபு நாட்டின் தாக்குதலும் அகழ்ப்போரும்

போர் செய்தல், குழப்பம் விளைவித்தல், கொலை செய்தல், கொலை செய்வதற்கு சதித்திட்டங்கள் தீட்டுதல் ஆகியவற்றின் காரணமாக மதீனாவிலிருந்து வெளியேற்றப்பட்ட யூதர்களின் இரண்டு கோத்திரங்களைப் பற்றி ஏற்கனவே நாம் கூறியுள்ளோம்.

அவர்களுள் பனூ நளீர் என்ற கோத்திரத்தின் ஒரு பகுதியினர் சிரியாவிற்குச் சென்று குடியேறிவிட்டனர். மற்றொரு பகுதியினர் மதீனாவிற்கு வடக்குத் திசையிலுள்ள கைபர் என்ற ஒரு

நகரத்திற்குச் சென்று குடியேறிவிட்டனர். கைபர் அரபு நாட்டிலுள்ள யூதர்களின் மாபெரும் ஒரு தலைமையகமாகவும் உறுதிவாய்ந்த அரண்களால் நான்கு புறமும் சூழப்பட்ட ஒரு நகரமாகவும் விளங்கியது.

அங்கு சென்ற பனூ நளீர் முஸ்லிம்களுக்கு எதிராக எல்லா அரபு மக்களையும் தூண்டி விடத் தொடங்கினர். மக்கத்தினர் இதற்கு முன்னரே முஸ்லிம்களுக்கு எதிரிகளாக இருந்தனர். எனவே, இவர்களை மேலும் அதிகமாகத் தூண்டுவதற்கு தேவையில்லாமல் இருந்தது.

அரபுக் கோத்திரங்களுள் மாபெரும் மதிப்பைப் பெற்றிருந்த கத்ஃபான் என்னும் நஜ்து நாட்டின் கோத்திரத்தினர்களும் அவ்வாறே மக்கத்தினர்களுடன் கொண்டிருந்த நட்பின் காரணமாக இஸ்லாத்துடன் பகைமை கொண்டிருந்தனர்.

இப்பொழுதும் யூதர்கள் மக்காவிலுள்ள குரைஷியர் களையும் கத்ஃபான் கோத்திரத்தினர்களையும் முஸ்லிம்களிடம் வெறுப்பு கொள்ளுமாறு செய்து விட்டு பனூ ஸுலைம் பனூ அஸத் என்னும் வலிமைமிக்க இரண்டு கோத்திரத்தினர்களையும் முஸ்லிம் களுக்கு எதிராக தூண்டத் தொடங்கினர்.

இவ்வாறே மக்காவிலுள்ள நிராகரிப்பாளர்களுடன் ஒத்துழைக்குமாறு தங்களுடன் நேச உடன்படிக்கை செய்திருந்த பனூ ஸஃது என்னும் கோத்திரத்தினரையும் அந்த யூதர்கள் ஆயத்தப் படுத்தினர்.

இவ்வாறு விரிவான ஆயத்தங்கள் செய்த பின்னர் அரபு நாட்டிலுள்ள வலிமைமிக்க எல்லாக் கோத்திரங்களாலும் முஸ்லிம் களுக்கெதிராக ஒருங்கிணைவதற்கான அடித்தளம் போடப்பட்டது.

இந்த ஒருங்கிணைப்பில் மக்காவாசிகள் மக்காவின் சுற்றுப் புறத்திலிருந்த கோத்திரங்கள் நஜ்து நாட்டிலுள்ள ஒரு கோத்திரம் மதீனாவிற்கு வடக்குப் பக்கத்திலுள்ள கோத்திரங்கள் யூதர்கள் ஆகியவர்களெல்லாம் சேர்ந்திருந்தனர்.

இந்தக் கோத்திரங்களெல்லாம் ஒன்று திரண்டு மதீனாவைத் தாக்குதவற்கு மிகவும் வலிமை வாய்ந்த ஒரு படையை ஆயத்தம் செய்தன. கி.பி. 627 ஆம் ஆண்டு பிப்ரவரி, மார்ச் மாதங்களில் - ஹிஜ்ரி ஐந்தாம் ஆண்டு ஷவ்வால் மாதத்தில் இது நிகழ்ந்தது. *(இப்னு ஹிஷாம் தொகுதி 2 பக்கம் 138)*

இந்தப்படை பத்தாயிரம் முதல் இருபத்து நான்காயிரம் வீரர்களைக் கொண்டதாக இருந்தது என்று பல்வேறு வரலாற்றாசிரியர்கள் கணித்துள்ளனர்.

ஆனால் அரபு மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு விட்டதனால் அவர்களின் படை வீரர்கள் பத்தாயிரம் பேராக மட்டும் இருந்திருக்க முடியாது. நிச்சயமாக அந்தப்படை இருபத்து நான்காயிரம் வீரர்களை கொண்டதாக இருந்ததென்ற கணிப்பே மிகவும் சரியானதாக இருக்க வேண்டும். அவ்வாறில்லா விட்டாலும் நிச்சயமாக அந்தப் படையில் சற்றேறக்குறைய பதினெட்டாயிரம் அல்லது இருபதாயிரம் வீரர்களாவது இருந்திருக்க வேண்டும் என்பது மிகவும் தெளிவானதேயாகும்.

மதீனா சாதாரணமான ஒரு நகரம் தான். இந்த நகரத்தை எதிர்த்து அரபு நாடு முழுவதும் இணைந்து தாக்கியதென்றால், அது சாதாரணமான தாக்குதலாக இருந்திருக்க முடியாது. மதீனாவிலுள்ள ஆண்கள், வயோதிகர், சிறுவர் ஆகியவர்களையும் சேர்த்து கணக்கிட்டாலும்கூட மொத்தத்தில் மூவாயிரம் பேர்தாம் இருந்திருக்க முடியும்.

இத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது பகைவர்களின் படையில் இருபதாயிரத்திலிருந்து இருபத்து நான்காயிரம் வீரர்கள் இருந்திருப்பர். இதுமட்டுமல்லாமல் இந்தப் படையிலுள்ளவர்கள் அனைவருமே போர்ப்பயிற்சி பெற்றவர்களாகவும் இளைஞர் களாகவும் இருந்தனர்.

ஏனென்றால் நகரத்தில் இருந்து கொண்டே அதனைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்படும்போது அந்தப் பாதுகாப்பில் சிறுவர்களும் முதியவர்களும்கூட பங்கேற்றுக் கொள்கின்றனர். ஆனால் ஒரு படை தொலைவிலுள்ள இடத்திற்குச் சென்று தாக்குதல் நடத்த வேண்டுமானால் அந்தப் படையில் வாலிபர்களும் வலிமைவாய்ந்த வீரர்களும் மட்டுமே இருப்பர்.

எனவே, நிராகரிப்பாளர்களின் படையில் இருபதாயிரம் பேர் அல்லது இருபத்து நான்காயிரம் பேர் என்ற கணிப்புகளில் எது சரியாக இருப்பினும் அவர்கள் எல்லாருமே வலிமைவாய்ந்த

வாலிபர்களாகவும் போர்ப்பயிற்சியும் போர் செய்வதில் அனுபவமும் பெற்ற வீரர்களாகவும் இருந்ததில் சிறிதும் ஐயமில்லை. ஆனால், மதீனாவில் குழந்தைகள் முதியவர்கள் உட்பட ஆண்கள் மூவாயிரம் பேர் தாம் இருந்தனர்.

இவற்றைக் கவனத்தில் கொள்ளும்போது மதீனாவின் படையில் மூவாயிரம் பேர் இருந்தனர் எனக் கருதப்பட்டால் பகைவர்களின் படையில் நாற்பதாயிரம் பேர் இருந்தனர் எனக் கருதப்பட வேண்டும். பகைவர்களின் படையில் இருபதாயிரம் பேர் இருந்தனர் எனக் கருதப்பட்டால் மதீனாவின் படையில் ஆயிரத்து ஐநூறு வீரர்கள் மட்டுமே இருந்தனர் என கணித்துக் கொள்ள வேண்டும்.

பகைவர்களின் இத்தகு படை திரட்டப்பட்டு மதீனாவைத் தாக்குவதற்கான ஆயத்தங்கள் செய்யப்படுவது பற்றிய செய்தி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கிடைத்த போது அவர்கள் தங்கள் தோழர்களை ஒன்றுதிரட்டி இவ்வாறான நிலையில் நாம் என்ன செய்ய வேண்டும்? என்று ஆலோசனை செய்தார்கள்.

அந்தத் தோழர்களுள் பாரசீக நாட்டைச் சார்ந்தவர்களில் முதன் முதலாக இஸ்லாத்தைத் தழுவிய ஹஸ்ரத் சல்மான் ஃபார்ஸீ (ரலி) அவர்களிடம் உங்கள் நாட்டில் இவ்வாறான சந்தர்ப்பத்தில் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கின்றனர் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வினவிய போது அவர்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நகரத்திற்கு பாதுகாப்பில்லாமலும் படைவீரர்கள் குறைவாகவும் இருக்கும்போது எங்கள் நாட்டினர் நகரைச் சுற்றி அகழ்த் தோண்டி அந்த நகரத்தினுள் இருந்து கொண்டு பகைவர்களை எதிர்த்து தற்காப்புப் போர் நடத்துவர் என்றார்கள். ஹஸ்ரத் சல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்களின் இந்த ஆலோசனை ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பிடித்திருந்தது.

மதீனாவின் ஒரு திசை குன்றுகளால் அமைந்திருந்தது. மற்றொரு திசையில் ஒன்றுடன் ஒன்று இணைந்த வீடுகளைக் கொண்ட தெருக்கள் அமைந்திருந்தன. இவற்றின் சில தெருக்களின் வழியாக மட்டும் பகைவர்கள் வரத்தக்கதாக அமைந்திருந்தது. மூன்றாவது திசையில் சில தோட்டங்களும் சில வீடுகளும் சிறிது தூரத்தில் யூதர்களின் ஒரு கோத்திரத்தினராகிய பனூ குரைலாவின் கோட்டைகளும் இருந்தன. இந்தக் கோத்திரத்தினர் முஸ்லிம் களுடன் நேச உடன்படிக்கை செய்திருந்ததால் இந்தத் திசையும் பாதுகாப்பானதாகக் கருதப்பட்டது. நான்காவது திசை திறந்த வெளியாக இருந்தது. பகைவர்கள் இந்தத் திசையிலிருந்து தாக்குவதற்கு அதிக வாய்ப்பிருந்தது. எனவே, பகைவர்கள் திடீரென்று நகரத்தினுள் புகுந்துவிட முடியாதவாறு இந்தத் திறந்த வெளியில் அகழ்த்தோண்ட வேண்டுமென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முடிவு செய்தார்கள்.

ஆகவே, அவர்கள் அகழ் தோண்டுவதற்காக பத்து பத்து கெஜம் அளவு கொண்ட நிலத்தை பத்துப்பத்துப் பேரிடம் ஒப்படைத்தார்கள். இவ்வாறாக, நீண்டதோர் அகழ் தோண்டப் பட்டது.

இதனைத் தோண்டிக் கொண்டிருக்கும் போது மக்களால் அறவே தகர்க்க முடியாத ஒரு பெரும் கற்பாறை அந்தப் பூமியில் இருந்தது. இதனைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் நபித்தோழர்கள் அறிவித்தபோது அவர்கள் அங்குச் சென்று தங்கள் கையில் கோடரியை எடுத்து மிக வேகமாக அந்தக் கற்பாறையை அடித்தார்கள். கோடரி அந்தக் கற்பாறையில் பட்டதும் அதிலிருந்து ஒளி கிளம்பியது. அப்போது அவர்கள் ***அல்லாஹு அக்பர்*** (அல்லாஹ் மிகப்பெரியவன்) என்றார்கள். பின்னர் இரண்டாவது முறை கோடரியால் அதனை அடித்தார்கள். மீண்டும் கல்லிலிருந்து ஒளி கிளம்பியது. இப்போதும் அவர்கள் அல்லாஹு அக்பர் என்றார்கள். பின்னர் மூன்றாவது முறை அவர்கள் கோடரியால் அதனை அடித்தார்கள். மீண்டும் அந்தக் கல்லிலிருந்து ஒளி கிளம்பியதோடு அது உடைந்தும் விட்டது. இப்போதும் அவர்கள் ***அல்லாஹு அக்பர்*** என்றார்கள்.

இதனைப் பார்த்த நபித்தோழர்கள் அவர்களிடம் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் மூன்று தடவை அல்லாஹு அக்பர் என்று ஏன் கூறினீர்கள் என்று கேட்டதற்கு இந்தக் கற்பாறையில் கோடரி பட்டதும் மூன்று தடவை கிளம்பிய ஒளியில் இஸ்லாத்தின் வருங்கால முன்னேற்றங்களைப் பற்றி இறைவன் எனக்குக் காட்டினான். முதல் முறையில் வெளியான ஒளியில் ரோமானியப் பேரரசிலுள்ள சிரியாவின் அரண்மனைகள் காட்டப்பட்டு அதன் சாவிகள் எனக்கு வழங்கப்பட்டன. இரண்டாவது வெளியான ஒளியில் பாரசீகப் பேரரசிலுள்ள நகரங்களின் வெள்ளை மாளிகைகள் எனக்குக் காட்டப்பட்டு அந்தப் பேரரசின் சாவிகள் எனக்கு வழங்கப்பட்டன. மூன்றாவது முறை

வெளியான ஒளியில் ஸன்ஆவின் வாயில் எனக்குக் காட்டப்பட்டு எமன் அரசின் சாவிகள் எனக்கு வழங்கப்பட்டன. எனவே நீங்கள் இறைவனின் வாக்குறுதிகளின்மீது உறுதியான நம்பிக்கைக் கொள்ளுங்கள். பகைவர்களால் உங்களுக்கு எந்தக் கெடுதியும் செய்ய முடியாது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். *(சீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 2, பக்கம் 243)*

இந்த அளவு குறைவானவர்களால் நீளமான ஓர் அகழைப் போர் நியதிகளுக்கேற்ப தோண்ட முடியாதிருந்தாலும் மேலும் அந்த அகழைக் கடந்து விடுவது பகைவர்களுக்குச் சாத்தியமானதாகவே இருந்ததென்றாலும், திடீரென்று அவர்களால் நகரத்திற்குள் நுழைந்து விட முடியாத அளவிற்கு அந்த அகழ் பயனளித்தது.

பின்னர் நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் இதனையே நிரூபித்தன. பகைவர்களும் மதீனாவின் சூழ்நிலைகளைக் கவனத்திற்கொண்டு, திறந்த வெளியாக இருந்த இந்தத் திசையிலிருந்தே தாக்குதல் தொடுக்கத் தீர்மானித்திருந்தனர்.

எனவே பகைவர்களது மாபெரும் படை இதே திசையி லிருந்து மதீனாவிற்குள் நுழைய முன்னேறி வந்தது. இது குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதும் அவர்கள், நகரத்தின் பிற பகுதிகளை பாதுகாப்பதற்காகச் சிலரை நியமித்து விட்டு, எஞ்சியிருந்தவர்களாகிய சற்றேறக்குறைய ஆயிரத்து இருநூறு பேரைத் தங்களுடன் அழைத்துக் கொண்டு, பகைவர்களை எதிர்கொள்ளச் சென்றார்கள்.

## அகழ்ப்போரின்போது இஸ்லாமியப் படை வீரர்கள் எத்தனை பேர் இருந்தனர்?

இந்த அகழ்ப்போரில் கலந்து கொண்ட இஸ்லாமியப் படை வீரர்களின் எண்ணிக்கை தொடர்பாக வரலாற்றாசிரியர்களுக் கிடையே பெரும் கருத்து வேறுபாடு உள்ளது.

இஸ்லாமியப் படையில் மூவாயிரம் வீரர்கள் இருந்தனர் என்று சிலரும் இதில் ஆயிரத்து இருநூறு வீரர்கள் இருந்தனர் என்று வேறு சிலரும், இதில் எழுநூறு வீரர்கள் இருந்தனர் என்று சிலரும் எழுதியுள்ளனர். வெளிப்படையாகப் பார்க்கும்போது இந்தப் பெரும் கருத்து வேறுபாட்டிற்குத் தகுந்த விளக்கமளிப்பது சிரமமான தென்று தெரிகின்றது. வரலாற்றாசிரியர்களால் இந்தக் கருத்து வேறுபாட்டிற்குத் தீர்வு காண முடியவில்லை.

ஆனால், நான் இதன் உண்மையைத் தெரிந்து கொண்டேன். இந்த மூன்று அறிவிப்புகளும் சரியானவையேயாகும். இதற்கு முன்னர் கூறப்பட்டது போன்று, உஹுதுப் போரில் நயவஞ்சகர்கள் திரும்பிச் சென்றதன் பின்னர் முஸ்லிம் படைவீரர்கள் எழுநூறு பேர் மட்டுமே இருந்தனர். உஹுதுப் போர் நடந்து இரண்டே ஆண்டு களுக்குப் பின்னர் இந்த அகழ்ப்போர் நிகழ்ந்தது. இடைப்பட்ட இந்த காலக்கட்டத்தில் பெரியதொரு எந்தக் கோத்திரமும் இஸ்லாத்தைத் தழுவி மதீனாவிற்கு வந்து குடியேறவில்லை.

எனவே, எழுநூறு போர் வீரர்கள் திடீரென்று மூவாயிரம் போர் வீரர்களாகி விடுவது, சாத்தியாமானதன்று. அதே வேளையில் உஹுதுப் போருக்கும் அகழ்ப்போருக்கும் இடைப்பட்ட இரண்டு ஆண்டுகளில் முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை என்று கூற முடியாது.

இந்த நிலையில், போர் செய்வதற்குத் தகுதியான முஸ்லிம்கள், உஹுதுப் போரில் எத்தனைப் பேர் இருந்தனரோ அத்தனைப் பேர் தாம் இந்தப் போரிலும் இருந்தனர் என்பது பொருத்தமானதன்று.

எனவே, இவ்விரு ஆய்வுகளுக்குப் பின்னர், இந்த அகழ்ப் போரின் போது, போர் செய்யத் தகுதியான முஸ்லிம்கள் ஆயிரத்து இருநூறு பேர் இருந்தனர் என்ற அறிவிப்பே சரியானதென்று தெரிகிறது.

அவ்வாறாயின் இந்தப் போரில் மூவாயிரம் பேர் இருந்தனர் என்று சிலரும், எழுநூறு பேர் இருந்தனர் என்று வேறு சிலரும் ஏன் எழுதியுள்ளனர் என்ற கேள்விக்குப் பதில் என்னவென்றால், இவ்விரண்டு அறிவிப்புகளும் தனித்தனியான சூழ்நிலைகளின் அடிப்படையில் செய்யப்பட்டவையாகும்.

இந்தப் போர் மூன்று சூழ்நிலைகளைக் கொண்டதாக இருந்தது. முதல் சூழ்நிலையில், பகைவர்கள் மதீனாவை வந்தடைவதற்கு முன், அகழ் தோண்டப்பட்டுக் கொண்டிருந்தது. தோண்டப்பட்ட மண்ணை வேறு இடத்திற்கு அகற்றும் பணியைச் சிறுவர்களும் செய்திருக்கலாம்; இதில் பல பெண்களும் உதவி செய்திருக்கலாம். எனவே அகழ் தோண்டப்பட்டுக் கொண்டிருந்த வரை முஸ்லிம் படையின் எண்ணிக்கை மூவாயிரமாக இருந்தது. இந்த எண்ணிக்கையில் குழந்தைகளும் அடங்குவர்; முஸ்லிம் பெண்கள் காட்டிய ஆர்வத்தைப் பார்க்கும் போது சில பெண்களும் இந்த எண்ணிக்கையில் சேர்க்கப்பட்டிருந்தனர் என்று நம்மால் சொல்ல முடியும். இவர்கள் அகழ்த் தோண்டும் பணியினைச் செய்ய வில்லையென்றாலும் ஏனைய எளிய பணிகளில் பங்கேற்றிருப்பர்.

இது எனது சொந்தக் கருத்து மட்டுமன்று. வரலாறும் எனது இந்தக் கருத்தை உண்மைப்படுத்துகின்றது. அகழ்த் தோண்டப்பட்ட நேரத்தில் சிறுவர்கள் எல்லாரும் ஒன்று திரட்டப்பட்டனர். எல்லா ஆண்களும் குழந்தைகளும் அகழ் தோண்டும் பணியை அல்லது அதில் உதவி செய்யும் பணியை மேற்கொண்டனர். பின்னர் பகைவர்கள் வந்து போர் தொடுக்கத் தொடங்கிய போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பதினைந்து வயதுக்குக் குறைவான ஆண்கள் எல்லாரும் சென்றுவிடுமாறு கட்டளையிட்டார்கள். பதினைந்து வயதுடையவர்கள், விரும்பினால் இங்கு இருக்கலாம் அல்லது சென்று விடலாம் என்று அவர்களுக்கு அனுமதியளித்தார்கள் என்று வரலாற்றில் வரையப்பட்டுள்ளது. ***(ஸீரத்துல் ஹல்பிய்யா, தொகுதி 2 பக்கம் 344)***

இதிலிருந்து அகழ் தோண்டப்பட்ட நேரத்தில் முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததென்றும் போர் தொடங்கிய நேரத்தில், சிறுவர்கள் திரும்பிச் செல்லுமாறு கட்டளையிடப் பட்டதால், அவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததென்றும் தெரிகிறது.

எனவே மூவாயிரம் பேர் இருந்தனர் எனக் கூறப்பட்டுள்ள அறிவிப்புகள் அகழ் தோண்டப்பட்ட நேரத்தில் இருந்தவர்களைப் பற்றியதாகும். இந்த நேரத்தில் சிறுவர்களும் பங்கேற்றனர். நான் இதனை ஏனைய போர்களுடன் ஒப்பிட்டுத் தெரிந்து கொண்டபடி, சில பெண்களும் பங்கேற்றனர்.

ஆனால் போர் தொடங்கி, போர் செய்வதற்கேற்ற வயதைக் கொண்ட ஆண்கள் மட்டும் இருந்த போது, அந்தப் படையில் ஆயிரத்து இருநூறு பேர் இருந்தனர். (இது இரண்டாவது சூழ்நிலையாகும்.)

இந்தப் போரில் எழுநூறு வீரர்கள் இருந்தனர் என்ற அறிவிப்பிற்கான விளக்கம் என்னவென்றால், இப்னு இஸ்ஹாக் என்ற வரலாற்றாசிரியர் இதனை அறிவித்துள்ளார். இவர் மிகவும் நம்பத்தக்க வரலாற்றாசிரியராவார். இவர் மிகவும் நம்பத் தகுந்தவர் என்று இப்னு ஹஸம் போன்ற மாபெரும் அறிஞர்களும் குறிப்பிட்டுள்ளனர். எனவே இவரது அறிவிப்பும் சரியானதேயாகும்.

வரலாற்றை மிக ஆழமாக ஆராய்ந்து பார்க்கும் போது தெரிவதாவது, போர் நிகழ்ந்து கொண்டிருந்த வேளையில் பனூ குரைலா என்ற கோத்திரத்தினர், நிராகரிப்பாளர்களின் படையுடன் சேர்ந்து, மதீனாவைத் தாக்க திட்டமிட்டிருந்தனர். இவர்களின் இரகசியம் வெளிப்பட்டதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எந்தத் திசையில் பனூ குரைலா கோத்திரத்தினர் இருந்தனரோ அந்தத் திசையையும் பாதுகாப்பது அவசியமாகும் எனக் கருதினார்கள்.

பனூ குரைலா கோத்திரத்தினர், முஸ்லிம்களுடன் நேச உடன்படிக்கை செய்திருந்ததால் தாங்கள் இருக்கும் திசையிலிருந்து அவர்கள் பகைவர்களை மதீனாவிற்குள் நுழைய விடமாட்டார்கள் எனக் கருதி முதலில் அந்தத் திசை பாதுகாப்பின்றி விடப்பட்டிருந்தது.

வரலாற்றிலிருந்து தெரிவது போன்று, பனூ குரைலாவின் துரோகம் பற்றித் தெரிந்த போது, முதலில் அவர்கள் மீதிருந்த நம்பிக்கையினால், அவர்களின் கோட்டைகள் இருந்த பகுதியில் வைக்கப்பட்டிருந்த முஸ்லிம் பெண்கள், இந்தச் சமயத்தில் பாதுகாப்பற்றவர்களாகி விட்டனர். எனவே இப்பொழுது அந்தப் பெண்களைப் பாதுகாப்பது அவசியமாகும் என்று கருதிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், முஸ்லிம்களின் இரண்டு படைப் பிரிவுகளை ஆயத்தம் செய்து, பெண்கள் தங்கியிருந்த இரண்டு பகுதிகளிலும் அந்தப் படைகளை நியமித்தார்கள்.

அதாவது தங்கள் தோழர்களாகிய இருநூறு சஹாபிகளை, முஸ்லிமா பின் அஸ்லம் (ரலி) அவர்களுடன் அனுப்பி ஓரிடத்திலும், மற்றும் முன்னூறு சஹாபிகளை ஸய்து பின் ஹாரிஸா (ரலி) அவர்களுடன் அனுப்பி மற்றோரிடத்திலும் நியமித்து விட்டு, பெண்கள் பாதுகாப்பாக இருக்கின்றனர் என்பதைத் தெரிவிப்பதற்காக அவ்வப்போது உரத்த குரலில் **அல்லாஹுு அக்பர்** - அல்லாஹ் மிகப் பெரியவன் என்று கூறிக்கொண்டே இருங்கள் என்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள்.

இந்த வரலாற்று நிகழ்ச்சியிலிருந்து இந்தப் போரில் எழுநூறு போர் வீரர்கள் இருந்தனர் என்று இப்னு இஸ்ஹாக் என்ற வரலாற்றாசிரியர் கூறியதும் சரியானதே.

ஏனென்றால் ஆயிரத்து இருநூறு போர் வீரர்களுள் ஐநூறு பேர், பெண்களைப் பாதுகாப்பதற்காக அனுப்பப்பட்டு விட்டன ரென்றால், எஞ்சிய போர் வீரர்கள் எழுநூறு பேரேயாவர். இவ்வாறாக அகழ்ப்போர் வீரர்களின் எண்ணிக்கையைத் தொடர்பாக வரலாற்றில் காணப்பட்ட பெரும் கருத்து வேறுபாட்டிற்குத் தீர்வு கிடைத்து விட்டது.

எனவே, இத்தகு பயங்கரமான துன்பத்திற்குரிய நேரத்தில் அகழைப் பாதுகாப்பதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் எழுநூறு பேரே இருந்தனர்.

ஐயத்திற்கிடமின்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அகழைத் தோண்டினார்கள். ஆனால் பகைவர்களின் மாபெரும் படை இந்த அகழைக் கடந்து மதீனாவிற்குள் வந்து விடாமல் தடுத்து நிறுத்துவதென்பது, மிகக் குறைவாக இருந்த இஸ்லாமியப் படைக்குச் சாத்தியமில்லாததாகவே இருந்தது. என்றாலும் இறைவனது உதவியில் முழுமையான நம்பிக்கை வைத்திருந்த இந்தச் சிறிய படை, அகழுக்குப் பின்னால் இருந்து கொண்டு மிகுந்த நம்பிக்கையுடனும் உறுதிப்பாட்டுடனும் பகைவர்களின் மாபெரும் படையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. பெண்களும் சிறுவர்களும் ஒருங்கிணைக்கப்பட்டுத் தனித்தனியான இடங்களில் அமர்த்தப்பட்டனர்.

பகைவர்கள் அந்த அகழை வந்தடைந்தபோது, அரபு மக்களாகிய அவர்களுக்கு இது முற்றிலும் புதியதோர் ஏற்பாடாக இருப்பதைக் கண்டு மிகவும் வியப்படைந்தார்கள். இவ்வாறான போருக்கு அவர்கள் அறவே தயாராக இருக்கவில்லை. எனவே, அவர்கள் அந்த அகழுக்கு முன்னால் தங்களுடைய கூடாரங்களை அமைத்து மதீனாவிற்குள் நுழைவதற்கான வழிகளைப் பற்றி சிந்தித்தார்கள்.

## பனூ குரைலாவின் சதித்திட்டம்

மதீனாவின் ஒரு பெரும் பகுதி அகழால் பாதுகாக்கப் பட்டிருந்தது. மறுபுறங்களில் குன்றுகள் உறுதியானக் கட்டடங்கள் தோட்டங்கள் முதலானவை அமைந்திருந்தன. இதனால் திடீரென மதீனாவைத் தாக்கமுடியாதிருந்தது.

எனவே, எதிரிகள் தங்களுக்குள் ஆலோசனை செய்து மதீனாவிலிருந்த யூதர்களின் மூன்றாவது கோத்திரமாகிய பனூ குரைலாவை எப்படியாவது தங்களுடன் இணைத்துக் கொண்டு இதன் மூலம் மதீனாவிற்குள் நுழைவதற்கான வழியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென தீர்மானித்தார்கள்.

எனவே, நிராகரிப்பாளர்களின் படைத்தளபதி அபூ ஸுஃப்யான் என்பவர் மதீனாவிலிருந்து வெளியேற்றப்பட்ட பனூ நளீர் கோத்திரத்தின் தலைவராகவும் தமது சதித்திட்டங்களால் அரபு நாடு முழுவதையும் ஒன்றுதிரட்டி மதீனாவைத்தாக்க வந்திருந்தவரு மாகிய ஹய்யிபின் அக்தப் என்பவரிடம் நீங்கள் பனூ குரைலா கோத்திரத்தினரை உங்களுடன் இணைத்துக் கொள்ளுங்கள் என்று கூறி இந்தப் பணியை அவரிடம் ஒப்படைத்தார்.

அவர் யூதர்களின் கோட்டைக்குச் சென்று பனூ குரைலாவின் தலைவர்களைச் சந்திக்க விரும்பினார். முதலில் அந்தத் தலைவர்கள் அவரைச் சந்திக்க மறுத்து விட்டனர். ஆனால் அவர் அந்தத் தலைவர்களிடம் நிலைமைகளை விளக்கியவாறு முஸ்லிம்களை அழிப்பதற்காக இப்பொழுது அரபு நாடு முழுவதும் திரண்டு வந்திருக்கிறது. எந்த விதத்திலும் இந்த மதீனாவால் அரபு நாடு முழுவதையும் எதிர்த்துப் போரிட முடியாது. இப்பொழுது முஸ்லிம்களை எதிர்த்து நிற்பது சாதாரணப் படையன்று. மாறாக, இது அலைமோதுகின்ற பெருங்கடலாகும் என்று கூறினார். இவற்றைக் கேட்டு அவர்கள் சதித்திட்டத்தில் இறங்கி உடன்படிக்கையை முறிக்க ஆயத்தமாகி விட்டனர்.

பின்னர் அவர்கள், நிராகரிப்பாளர்களின் படை, முன்புற மிருந்து அகழைக் கடக்க முயற்சி செய்ய வேண்டும். அவர்கள் அதனைக் கடந்து விடுவதில் வெற்றி பெறும்போது மறுபுறமிருந்து பனூ குரைலா கோத்திரத்தினர் முஸ்லிம் பெண்களும் சிறுவர்களும் இருந்த பகுதியை அதாவது, பனூ குரைலாவின் மீதிருந்த நம்பிக்கையினால் பாதுகாப்பின்றி விடப்பட்டிருந்த பகுதியை தாக்க வேண்டும். இவ்வாறு செய்தால் முஸ்லிம்களின் எதிர்ப்புச் சக்தி முழுமையாக முறியடிக்கப்பட்டு விடும். சிறிது நேரத்தில் முஸ்லிம் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் எல்லாரையும் கொன்று குவித்து விடலாம் என்று தங்களுக்குள் திட்டம் வகுத்தனர்.

இந்தத் திட்டத்தில் அவர்களுக்கு சிறிது வெற்றியாவது கிடைத்திருப்பின் தங்களைப் பாதுகாப்பதற்கான எந்த வாய்ப்பும் முஸ்லிம்களுக்கு கிடைக்காது என்பது நிச்சயம்.

பனூ குரைலா கோத்திரத்தினர் முஸ்லிம்களுடன் நேச உடன்படிக்கை செய்திருந்தனர். எனவே, அவர்கள் வெளிப்படையாக போரில் பங்கேற்காமல் இருந்தாலும் கூட அவர்களின் சார்பாக எவரும் மதீனாவைத் தாக்க முடியாது என்றே முஸ்லிம்கள் நம்பினார்கள். இதனால்தான் அவர்களுக்குரிய பகுதி முற்றிலும் பாதுகாப்பின்றி விடப்பட்டிருந்தது.

பனூ குரைலா கோத்திரத்தினரும் நிராகரிப்பாளர்களும் நிலைமைகளைப் பரிசீலனை செய்து பனூ குரைலா கோத்திரத்தினர், நிராகரிப்பாளர்களுடன் இணைந்து விட்டால், அந்தக் கோத்திரத்தினர் இருந்து வரும் மதீனாவின் அந்தப் பகுதியை பாதுகாப்பதற்கான எந்த ஏற்பாட்டையும் முஸ்லிம்கள் செய்து விடாதிருக்கும் பொருட்டு, அந்தக் கோத்திரத்தினர் நிராகரிப்பாளர்களுக்கு வெளிப்படையாக உதவி செய்யக்கூடாது என்று தீர்மானித்தனர்.

இது மிகவும் பயங்கரமான சதித்திட்டமாக இருந்தது. முஸ்லிம்களை கவனமற்றவர்களாக்கி நிராகரிப்பாளர்களின் படை இஸ்லாமியைப் படையை மிகக் கடுமையாக தாக்கவிருந்த அந்த நேரத்தில் பனூ குரைலா கோத்திரத்தினர் முஸ்லிம்களின் பகைவர் களுடன் இணைந்து கொள்வதென்பது பனூ குரைலா கோத்திரத் தினரின் கோட்டைகள் அமைந்திருந்த மதீனாவின் அந்தப் பகுதியை முஸ்லிம்களால் அறவே பாதுகாக்க முடியாததாக ஆக்கியிருக்கும்!

முஸ்லிம்களை இரண்டு புறங்களிலிருந்து தாக்குவதற்கான வாய்ப்பு உருவானதற்குப் பிறகு மக்காவாசிகளின் படை அகழைத் தாக்கத் தொடங்கி விட்டது. ஆரம்பத்தில் சில நாட்களாக தாங்கள் எவ்வாறு அந்த அகழை கடந்து செல்வது என்று அவர்களுக்கு சிறிதும் புரியாமல் இருந்தது. ஆனால், ஒரு சில நாட்களுக்குப் பிறகு அவர்கள் ஒரு திட்டம் வகுத்தார்கள்.

அந்தத் திட்டத்தின்படி அம்பு எய்பவர்கள் உயரமான இடங்களில் நின்று கொண்டு அகழைப் பாதுகாப்பதற்காக சிறிது சிறிது இடைவெளி விட்டு அமர்த்தப்பட்டிருந்த முஸ்லிம் படைப் பிரிவுகள் மீது அம்பெய்யத் தொடங்கி விட்டனர். சரமாரியாக அம்பெய்யப்பட்டதால் முஸ்லிம்கள் பின்வாங்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளானபோது திறமை வாய்ந்த குதிரை சவாரி வீரர்கள் அகழைத் தாண்ட முயன்றனர்.

இவ்வாறு தொடர்ந்து தாக்குதவதன் மூலம் காலாற்படைகள் மிக அதிகமான எண்ணிக்கையில் அகழைக் கடந்து விடுதவற்கு ஏதாவதொரு வழி கிடைக்கும் என கருதப்பட்டது. சில நேரங்களில் முஸ்லிம்களுக்கு சிறிதளவு ஓய்வு பெறுவதற்குக்கூட வாய்ப்பு கிடைக்காத அளவிற்கு அந்தத் தாக்குதல்கள் தொடர்ந்து மிக மும்முரமாக நடந்தன.

ஒருநாள் தங்களுடைய சில தொழுகைகளை அந்த நேரங்களில் முஸ்லிம்களால் நிறைவேற்ற முடியாத அளவிற்கு தாக்குதல் மிகக் கடினமாக நடந்தது. இதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகுந்த வருத்தம் ஏற்பட்டது. எனவே, அவர்கள் இந்த நிராகரிப்பாளர்கள் எங்கள் தொழுகைகளை நாங்கள் நிறைவேற்ற முடியாமல் ஆக்கி விட்டார்கள். இதற்காக இறைவன் அவர்களுக்கு தண்டனையளிப்பானாக என்று கூறினார்கள். *(புகாரி - கிதாபுல் மகாஸி)*

பகைவர்களின் தாக்குதல்கள் எந்த அளவு கடினமானவையாக இருந்தன என்பதை காட்டுவதற்காகவே நான் இந்த நிகழ்ச்சியினை கூறினேன். அதே சமயத்தில் இந்த நிகழ்ச்சி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நற்பண்புகளை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

இறைவணக்கமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உலகில் எல்லாவற்றையும்விட மிகப்பிரியமானதாக இருந்தது என்று இதிலிருந்து புலனாகின்றது.

பகைவர்கள் நான்கு புறங்களிலிருந்தும் மதீனாவைச் சுற்றி வளைத்து முற்றுகையிட்டிருந்தனர். மதீனாவிலுள்ள ஆண்களின் உயிர்களுக்கு மட்டுமின்றி பெண்களின் உயிர்களுக்கும், சிறுவர்களின் உயிர்களுக்கும் ஆபத்து ஏற்பட்டிருந்தது. பகைவர்கள் எந்தப் புறத்திலிருந்தும் மதீனாவிற்குள் நுழைந்து விடக்கூடாதே என்று ஒவ்வொரு வினாடியும் மதீனாவில் உள்ளவர்கள் பயந்து கொண்டிருந்தனர். இத்தகு மிகப் பயங்கரமான நேரத்திலும்கூட இறைவணக்கங்கள் அந்தந்த நேரத்திலேயே மிகச்சிறந்த முறையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்றே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் விரும்பினார்கள்.

முஸ்லிம்களின் வணக்கம் யூதர்கள் கிறித்தவர்கள் இந்துக்கள் ஆகியவர்களைப் போன்று வாரத்தில் ஏதாவதொரு நாளில் நிறைவேற்றப்படுவதில்லை. மாறாக, முஸ்லிம்கள் ஒரு நாளில் ஐந்து தடவை இறைவனை வணங்குகின்றனர்.

மேற்கூறப்பெற்ற மிகவும் பயங்கரமான நேரத்திலோ ஒருவருக்கு ஒருநாளில் ஒரு தடவை கூட தொழுகையை நிறைவேற்றுவது மிகக் கடினமானதாகவே இருக்கும் போது ஒருநாளில் ஐந்து நேரங்களிலும் மேலும் மிகச் சிறந்த முறையில் நிதானமாகவும் தொழுகைகளை கூட்டாக நிறைவேற்றுவதென்பது எவ்வளவு கடினமானதாக இருக்கும் என்பதை கூறவும் வேண்டுமோ?

ஆனால், இத்தகு மிகவும் பயங்கரமான நாள்களிலும்கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த ஐந்து வேளைத் தொழுகைகளையும் அந்தந்த நேரத்திலேயே நிறைவேற்றி வந்தார்கள். பகைவர்களின் மிக மிகக் கடினமானத் தாக்குதலின் காரணமாக ஒருநாள் அவர்களால் தங்கள் இறைவனை நிதானமாகவும் அமைதியாகவும் குறிப்பிட்ட நேரத்தில் வணங்கி அவன் பெயரை நினைவு கூற முடியாமற் போனதற்காக அவர்களுக்கு பெருந்துன்பம் ஏற்பட்டது.

அந்த நேரத்தில் முன்புறமிருந்து பகைவர்கள் தாக்கிக் கொண்டிருந்தனர். பின்புறமிருந்து பனூ குரைலா கோத்திரத்தினர்கள் வாய்ப்பு கிடைக்கும்போது முஸ்லிம்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தாத விதத்தில் தாங்கள் மதீனாவிற்குள் நுழைந்து பெண்களையும் குழந்தைகளையும் கொன்றுவிட வேண்டும் என்று சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

எனவே, ஒருநாள் பனூ குரைலா கோத்திரத்தினர்கள் முஸ்லிம் பெண்களும் குழந்தைகளும் தனியாகவே இருக்கின்றார்களா அல்லது அவர்களின் பாதுகாப்பிற்கு போதுமான எண்ணிக்கையில் போர் வீரர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்களா என்பதனை தெரிந்து கொள்வதற்காக ஓர் ஒற்றனை அனுப்பினார்கள்.

பகைவர்களால் பெரும் ஆபத்திற்கு ஆளாகவிருந்த குறிப்பிட்ட சில குடும்பத்தினர்கள் குறிப்பிட்ட ஓரிடத்தில் ஒன்றாக அமர்த்தப்பட்டிருந்தனர். குறிப்பிட்ட இந்த இடத்திற்கு அந்த ஒற்றன் வந்து இங்குமங்குமாக சுற்றித்திரிந்து முஸ்லிம் போர் வீரர்கள் எங்காவது மறைந்திருக்கிறார்களா என்று நான்கு புறங்களிலும் நோட்டமிடத் தொடங்கினான்.

இவ்வாறு இரகசியமாக நோட்டமிட்டுக் கொண்டிருந்த அந்த ஒற்றனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உறவினர் ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் கண்டுவிட்டார்கள். தற்செயலாக அப்போது ஒரு முஸ்லிம் ஆண் மட்டுமே அங்கிருந்தார். அந்த ஒருவர்கூட நோயாளியாக இருந்தார்.

ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் அவரிடம் இந்த மனிதர் பெண்கள் இருக்கும் பகுதியில் நீண்ட நேரமாக சுற்றிக் கொண்டு திரிகிறார். வேறெங்கும் செல்லாமல் நான்கு புறமும் பார்த்துக் கொண்டு சுற்றித்திரிகிறார். எனவே ஐயத்திற்கிடமின்றி இவர் ஒற்றரேயாவார். பகைவர்கள் இங்குள்ள நிலைமைகளைத் தெரிந்து கொண்டு இங்கு தாக்குதல் நடத்தி விடுதவற்கு முன் நீங்கள் இவரை எதிர்த்துத் தாக்குங்கள் என்றார்கள். ஆனால், நோயாளியான அந்த நபித்தோழர் அவ்வாறு செய்ய மறுத்து விட்டார்.

அப்பொழுது ஸஃபிய்யா (ரலி) அவர்கள் தாங்களாக ஒரு பெரிய கம்பை எடுத்துக் கொண்டு அந்த மனிதரை எதிர்த்தார்கள். மற்ற பெண்களின் உதவியுடன் அவரை கொன்று விடுவதில் வெற்றி கண்டு விட்டார்கள்.

பின்னர், விசாரித்துப் பார்த்தபோது அவர் யூதர்களாகிய பனூ குரைலாவின் ஒற்றராக இருந்தார் எனத் தெரிந்தது. இதனால் முஸ்லிம்கள் இப்பொழுது மதீனாவின் இந்தப் பக்கமும் பாதுகாப்பின்றி இருப்பதைத் தெரிந்து மேலும் பதற்றமடைந்தனர்.

மதீனாவின் முன்புறத்திலிருந்து பகைவர்கள் மிகக் கடினமானத் தாக்குதல்கள் நடத்தவிருந்ததால் முழு முஸ்லிம் படைகளும் அவர்களை எதிர்கொள்ள தேவைப்பட்ட போதிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தப் படையின் ஒரு பகுதியினை பெண்களையும் சிறுவர்களையும் பாதுகாக்க அனுப்ப முடிவு செய்தார்கள்.

இதற்கு முன்னர் வரையப்பட்டிருப்பது போன்று ஆயிரத்தி இருநூறு போர் வீரர்களுள் ஐநூறு பேரை பெண்களைப் பாதுகாப்பதற்காக நகரத்திற்குள் அவர்கள் நியமித்தார்கள். அகழைப் பாதுகாப்பதற்காகவும் பதினெட்டாயிரம் அல்லது இருபதாயிரம் போர் வீரர்களைக் கொண்ட படையை எதிர்ப்பதற்காகவும் எழுநூறு முஸ்லிம் போர் வீரர்கள் மட்டுமே எஞ்சியிருந்தனர்.

இந்த நிலையைக் கண்டு பதற்றமடைந்த சில முஸ்லிம்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நிலைமைகள் மிகவும் பயங்கரமானவையாகி விட்டன. இப்பொழுது வெளிப்படையாகப் பார்க்கும்போது மதீனா காப்பாற்றப்படுவதற்கான எந்த வழிவகையும் தென்படவில்லை. தாங்கள் இந்த நேரத்தில் குறிப்பாகவும் சிறப்பாகவும் இறைவனிடம் பிரார்த்தனை செய்வீர்களாக! நாங்கள் எந்தப் பிரார்த்தனையைச் செய்தால் நமக்கு இறைவனுடைய அருள் கிடைக்குமோ அந்த பிரார்த்தனையை எங்களுக்கும் கற்றுத் தருவீர்களாக என்று வேண்டினார்கள்.

இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீங்கள் பதற்றமடைய வேண்டாம். நீங்கள் இறைவனிடம் உங்களுடைய பலவீனங்களை மறைத்து விடுமாறும் உங்களுடைய உள்ளங்களை வலிமைவாய்ந்தவையாக ஆக்குமாறும் பதற்றத்தை அகற்றி விடுமாறும் பிரார்த்தனை செய்யுங்கள் என்று கூறிவிட்டு, பின்னர் தாங்களும் இறைவனிடம் “திருக்குர்ஆனை எனக்கு அருளியவனும் அடியார்களிடம் மிக விரைவில் கணக்கைத் தீர்த்துக் கொள்பவனுமாகிய இறைவா! ஒன்றுதிரண்டு இங்கு வந்திருக்கின்ற பகைவர்களின் இந்தப் படை வீரர்களுக்கு தோல்வியைக் கொடுப்பாயாக! இறைவா! நான் மீண்டும் உன்னிடம் வேண்டிக் கொள்கிறேன். நீ அவர்களுக்கு தோல்வியைக் கொடுத்து அவர்கள்மீது எங்களுக்கு வெற்றியை வழங்குவாயாக! அவர்களுடைய தீய நோக்கங்களையெல்லாம் நிலைகுலையச் செய்வாயாக!” *(புகாரி)*. மேலும் அவர்கள் “மனமுறுகி பிரார்த்தனை செய்பவர்களின் பிரார்த்தனையை ஏற்றுக் கொள்பவனே! பதற்றத்திற்காளாகி இருப்பவர்களின் முறையீடு களுக்குப் பதிலளிப்பவனே! என் கவலையையும் என் துன்பத்தையும் என் பதற்றத்தையும் அகற்றுவாயாக! ஏனென்றால் நிச்சயமாக நீயே எனக்கும் என் தோழர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் துன்பங்களை அறிபவனாக இருக்கின்றாய்!” *(சீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 2, பக்கம் 353)* என்று பிரார்த்தனை செய்தார்கள்.

## நயவஞ்சகர்களும் நம்பிக்கையாளர்களும்

இந்த சந்தர்ப்பத்தில் நயவஞ்சகர்களுக்கு தங்கள் சமுதாயத்தில் தன்மான உணர்வையும் தங்கள் நகரத்தையும் தங்களுடைய பெண்களையும் சிறுவர்களையும் காப்பாற்ற வேண்டுமே என்ற எண்ணம் வரவில்லை.

அதே சமயத்தில் தங்கள் சமுதாயத்திற்கு முன் அவர்கள் இழிவடைவதையும் விரும்பாததனால் சாக்குப்போக்குக் கூறி படையிலிருந்து விரண்டோட நினைத்தனர்.

இது குறித்து திருக்குர்ஆனில் இவ்வாறு வந்துள்ளது:

“......மேலும் அவர்களுள் ஒரு பிரிவினர் எங்கள் வீடுகள் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்றன எனக்கூறி நபியிடம் அனுமதி கோரினார்கள். ஆனால், அவை (உண்மையில்) பாதுகாப்பற்ற நிலையில் இருக்கவில்லை. அவர்கள் தப்பியோடவே விரும்பினார்கள்.” (33 : 14)

அதாவது அவர்களுள் ஒரு பிரிவினர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து இப்பொழுது யூதர்களும் பகைவர்களாகி விட்டார்கள். எனவே, அவர்கள் இருக்கும் திசையிலிருந்து மதீனாவைப் பாதுகாப்பதற்கான எந்த வழிவகையும் இல்லை. எங்கள் வீடுகள் அந்தப் பகுதியில் பாதுகாப்பற்றவையாக இருக்கின்றன. எனவே, நாங்கள் எங்கள் வீடுகளைப் பாதுகாப்பதற்காக போர்க்களத்திலிருந்து நாங்கள் திரும்பிவிட எங்களுக்கு அனுமதி தாருங்கள் என்று கேட்டனர்.

ஆனால், அவர்களின் வீடுகள் பாதுகாப்பற்றவையாக இருக்கின்றன என்ற அவர்களின் கூற்று முற்றிலும் பொய்யான தாகும். ஏனென்றால் இறைவன் மதீனாவைப் பாதுகாக்கின்றான். எனினும் அச்சத்தின் காரணமாக அவர்கள் போர்க்களத்திலிருந்து வெருண்டோட விரும்புகின்றனர்.

அடுத்து இந்த சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட நிலையினைப் பற்றி திருக்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது:

“அவர்கள் உங்களிடம் உங்களுக்கு மேலிருந்தும் உங்களுக்கு கீழேயிருந்தும் வந்த நேரத்தையும் (உங்கள்) கண்கள் பதற்றமடைந்த நேரத்தையும் (உங்கள்) இதயங்கள் உங்கள் தொண்டைகளை அடைந்த நேரத்தையும் நீங்கள் அல்லாஹ்வைக் குறித்து சந்தேகமான எண்ணங்களைக் கொண்ட நேரத்தையும் (நினைத்துப் பாருங்கள்).

அந்த நேரத்தில் நம்பிக்கைக் கொண்டவர்கள் பெரும் சோதனைக்கு ஆளாக்கப்பட்டு கடுமையான அதிர்ச்சிக்குள்ளாக்கப் பட்டனர்.

மேலும், அல்லாஹ்வும் அவனது தூதரும் ஏமாற்றத்தைத் தவிர வேறெதையும் எங்களிடம் வாக்குறுதி அளிக்கவில்லை என்று நயவஞ்சகர்களும் உள்ளங்களின் நோய் உடையோரும் கூறிய நேரத்தையும் (நினைத்துப் பாருங்கள்).

மேலும் அவர்களுள் ஒரு பிரிவினர் யஸ்ரிப் (மதீனா) மக்களே! (எதிரிகளை எதிர்த்து) உங்களால் நிற்க முடியாது. எனவே, நீங்கள் திரும்பி விடுங்கள் எனக் கூறிய நேரத்தையும் (நினைத்துப் பாருங்கள்)”. (33 : 11-14)

நயவஞ்சகர்களைப் பற்றியும் நம்பிக்கையில் பலவீனமான வர்களைப் பற்றியும் கூறியதன் பின்னர் நம்பிக்கையாளர்களைப் பற்றி இறைவன் இவ்வாறு கூறுகின்றான்:

“நம்பிக்கைக் கொண்டவர்கள் தாக்குதல் தொடுத்த படைகளைக் கண்டபோது அல்லாஹ்வும் அவனது தூதரும் நம்மிடம் வாக்குறுதியளித்தது இதுவேயாகும். அல்லாஹ்வும் அவனது தூதரும் முற்றிலும் உண்மையையே கூறினர் என்று கூறினார்கள். இது அவர்களுக்கு நம்பிக்கையையும் கட்டுப்பாட்டையும் வளரச் செய்தது.

நம்பிக்கைக் கொண்டவர்களுள் தாங்கள் அல்லாஹ்விடம் செய்திருந்த வாக்குறுதியினை உண்மைப்படுத்திய மனிதர்கள் உள்ளனர். அவர்களுள் சிலர் (தாங்கள் போர் செய்து மரணமடைய வேண்டும் என்ற) தங்கள் எண்ணத்தை நிறைவேற்றி உள்ளனர். அவர்களுள் மற்றுஞ்சிலர் (இன்னும் அதனை) எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் (தங்கள் எண்ணத்தில்) சிறிதும் மாற்றம் ஏற்படுத்தவில்லை.” (33 : 23, 24)

## இஸ்லாத்தில் இறந்து போன சடலத்திற்கு மதிப்பளித்தல்

அகழுக்கப்பாலிருந்து தாக்கிக் கொண்டிருந்த பகைவர்களுள் சிலர் சில வேளைகளில் அந்த அகழைத் தாண்டி விடுவதில் வெற்றி அடைந்து கொண்டும் இருந்தனர். ஒரு நாள் நிராகரிப்பாளர்களின் மாபெரும் தளபதிகளுள் சிலர் அந்த அகழைத்தாண்டி மறுபுறம் வருவதில் வெற்றி பெற்று விட்டனர். ஆனால், முஸ்லிம்கள் அவர்களை எதிர்த்து மிகக் கடினமாகத் தாக்கினர். இதனால் அவர்கள் திரும்பிச் செல்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லாது போயிற்று.

அப்போது அகழைத் தாண்டி வந்த நிராகரிப்பாளர்களுள் நவ்ஃபல் என்ற பெயரைக் கொண்ட ஒரு பெருந்தலைவர் கொல்லப்பட்டார். இவருடைய உயிரற்ற சடலம் இழிவுபடுத்தப் பட்டால் அரபு நாட்டில் தங்களுடைய மரியாதைக்கு பங்கம் ஏற்பட்டு விடுமே என்று நிராகரிப்பாளர்கள் எண்ணும் அளவிற்கு அவர் பெருந்தலைவராக இருந்தார்.

எனவே அவர்கள் அவரது சடலத்தை தங்களிடம் ஒப்படைத்து விட்டால் தாங்கள் பத்தாயிரம் திர்ஹம் தருவதற்கு தயாராக இருப்பதாக ஒரு தூதுச் செய்தியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அனுப்பினார்கள்.

தாம் முஸ்லிம் தலைவர்களை, ஏன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையாரின் மூக்கையும் காதையும் உஹுதுப் போரில் துண்டித்தது போன்று இன்று முஸ்லிம்கள் நம்முடைய இந்தத் தலைவரின் மூக்கையும் காதையும் துண்டித்து நம்முடைய சமுதாயத்தை இழிவுபடுத்தி விடுவார்களோ என்று அவர்கள் எண்ணினர்.

ஆனால், முஸ்லிம்களின் கொள்கைகளோ முற்றிலும் வேறு வகையானவையாகும். உயிரற்ற சடலங்களை இழிவுபடுத்த இஸ்லாம் அனுமதிப்பதில்லை. எனவேதான், நிராகரிப்பாளர்களின் தூதுச் செய்தியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கிடைத்தபோது நாங்கள் இந்த சடலத்தை வைத்து செய்யப் போவதென்ன? இந்தச் சடலம் எங்களுக்கெதற்கு? இதனை வைத்து நாங்கள் பயன்பெறப் போவதில்லை. இதற்காக நாங்கள் உங்களிடம் எந்தத் தொகையும் வாங்கமாட்டோம். நீங்கள் உங்களுடைய இந்த சடலத்தை மிக்க மகிழ்ச்சியோடு எடுத்துச் செல்லுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிவிட்டார்கள்.

## முஸ்லிம்கள் மீது கூட்டணிப்படைகளின் தாக்குதல்

நிராகரிப்பாளர்கள் இந்த நாள்களில் முஸ்லிம்கள் மீது நடத்திய மிகக் கடினமான தாக்குதல் பற்றி மூர் என்பவர் கீழ்க்காணுமாறு வரைந்துள்ளார்:

“மறுநாள் கூட்டணிப்படைகள் எல்லாம் ஒருங்கிணைந்து முஸ்லிம்களைத் தாக்குதவற்கு ஆயத்தமாகியதை முஹம்மது அவர்கள் கண்டார்கள். அந்தப் படையின் தாக்குதல்களைத் தடுத்து நிறுவத்துவதற்கு ஒவ்வொரு நிமிடமும் மிகுந்த விழிப்புடனும் மிக அதிகமான எச்சரிக்கையுடனும் இருப்பது அவசியமாயிற்று.

சில நேரத்தில் அந்தப் படைகள் ஒருங்கிணைந்து தாக்கின. சில நேரத்தில் பல அணிகளாகப் பிரிந்து சுற்றுப்புறக் காவல் எல்லைகளைத் தாக்கின. ஏதவாது ஒரு காவல் எல்லை பலவீனமாக இருப்பதை பகைவர்கள் கண்டால் அதனைத் தாக்குதவற்கு தங்கள் படைகளையெல்லாம் ஒன்றுதிரட்டினர். இடைவிடாமால் அம்பெய்த வாறு அந்த பகைவர்கள் அகழைக் கடந்து செல்ல முயன்றனர்.

காலித் மற்றும் அம்ர் போன்று பிரசித்தி பெற்ற படைத் தளபதிகளின் கீழுள்ள படை வீரர்கள் ஒருவர் பின் ஒருவராக மதீனாவிற்குள் நுழைவதற்காக மிகுந்த வேகத்துடன் தாக்கினர்.

ஒரு தடவை முஹம்மது அவர்களின் கூடாரத்தையே பகைவர்கள் சூழ்ந்து கொண்டனர். ஆனால் முஸ்லிம்கள் உயிருக்குத் துணிந்து செய்த எதிர்த்தாக்குதலும் சரமாரியான அம்பெய்தலும் பகைவர்களைப் பின்வாங்கச் செய்தது. நாள் முழுவதும் இந்தத் தாக்குதல் நடந்தது.

அகழைப் பாதுகாக்கும் பணியில் முஸ்லிம் படை வீரர்கள் அனைவருமே ஈடுபட வேண்டியிருந்தது. ஓய்வு எடுப்பதற்கான வாய்ப்பு அவர்களுக்கு அறவே கிடைக்கவில்லை. இரவிலும் கூட காலிதை தளபதியாகக் கொண்ட படைப்பிரிவுகள் தொடர்ந்து தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தன. இதனால் இரவில்கூட முஸ்லிம்கள் தங்கள் எல்லைகளைக் காவல் காப்பதில் ஓய்வின்றி முழுமையாக ஈடுபட வேண்டிய கட்டாயத்திற்குள்ளானார்கள்.

எனினும் பகைவர்களின் எந்த முயற்சியும் அவர்களுக்கு பயனளிக்கவில்லை. அந்த அகழைப் பெரும்பாலான படை வீரர்களால் ஒருபோதும் கடந்து செல்ல முடிந்ததில்லை.

இரண்டு நாட்களாக போர் நடந்து கொண்டிருந்தும்கூட போர் வீரர்களால் ஒருவரையொருவர் நேரடியாக வீழ்த்தும் வாய்ப்பை பெற முடியவில்லை. இருபத்தி நான்கு மணி நேரம் நடந்த போரில் கூட்டணிப் படைகளில் மூன்று பேரே கொல்லப் பட்டனர். முஸ்லிம்களுள் ஐந்து பேரே கொல்லப்பட்டனர்.

இப்போரில் அவ்ஸ் கோத்திரத்தின் தலைவரும் மிகச் சிறந்ததொரு நபித்தோழருமாகிய ஸஅத் பின் மஆது (ரலி) அவர்கள் படுகாயமுற்றார்கள்.

இந்தப் போரில் நடந்த தாக்குதல்களினால் ஓரிடத்தின் அகழின் விளிம்புகள் உடைந்து விட்டன. எனவே, இப்பக்கத்திலிருந்து தாக்குதல் நடத்துவது பகைவர்களுக்கு மிகவும் சாத்தியமானதாகி விட்டது.

அப்பொழுது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துணிச்சலும் முஸ்லிம்களின் அக்கறையும் கண்காணிப்பும் மிகவும் வியக்கத்தக்கவையாக இருந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குளிர் மிகுந்த அந்த இரவில் பலமுறை எழுந்து அகழின் விளிம்புகள் உடைந்திருந்த இடத்திற்குச் சென்று அங்கு காவல் புரிந்து கொண்டிருந்தார்கள்.

இது குறித்து ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்குச் சென்று காவல் புரிந்தவாறு களைத்தும் குளிரால் தளர்ந்தும் விடும் போது திரும்பி வந்து சிறிது நேரம் போர்வையைப் போர்த்திக் கொண்டு படுத்திருப்பார்கள். சற்று அவர்களின் உடலில் சூடேறியதும் உடைந்த அந்தப் பகுதியில் காவல் புரிவதற்காக அவர்கள் மீண்டும் சென்று விடுவார்கள்.

இவ்வாறு தொடர்ந்து விழித்துக் கொண்டிருந்ததால் ஒரு நாள் அவர்கள் மிகவும் தளர்ச்சியடைந்து விட்டார்கள். ஓரிரவில் அவர்கள் இப்பொழுது பற்றுமிக்க ஒரு முஸ்லிம் வந்து என்னை இப்பணியிலிருந்து விடுவித்தால் நான் அமைதியாக சற்றுத் தூங்க விரும்புகிறேன் என்றார்கள்.

அதே நேரத்தில் கூடாரத்திற்கு வெளியிலிருந்து ஸஅது பின் வக்காஸ் (ரலி) அவர்களின் குரல் கேட்டது. நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டதற்கு, நான் தங்களுக்கு காவல்புரிய வந்துள்ளேன் என்றார்கள்.

இதற்கு அவர்கள், எனக்குக் காவல் புரிய வேண்டிய அவசியமில்லை. அகழின் விளிம்புகள் உடைந்திருக்கும் இடத்திற்குச் சென்று முஸ்லிம்கள் பாதுகாப்பாக இருக்கும் பொருட்டு அங்கு காவல் புரியுங்கள் என்று கூறினார்கள்.

இதன்படி ஸஅத் பின் வக்காஸ் (ரலி) அவர்கள் அங்கு காவல் புரிவதற்காக சென்று விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்று அமைதியாகத் தூங்கினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதன்முதலாக மதீனாவிற்குச் சென்றிருந்தபோது ஏற்பட்ட மிகவும் பயங்கரமான சூழ்நிலையிலும் ஸஅத் பின் வக்காஸ் (ரலி) அவர்களே காவல் புரிய வந்திருந்தார்கள் என்பதும் ஒரு வியப்பிற்குரிய விஷயமாகும்.

அகழ்ப்போர் நடந்து கொண்டிருந்த இந்த நாட்களில் ஒரு தடவை சிலரது ஆயுதங்களின் ஓசையைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யார் என்று வினவியபோது நான் தான் என்று இபாதா பின் பஷீர் கூறியதும் உங்களுடன் வேறு எவரும் இருக்கின்றாரா? என்று கேட்டதற்கு தங்களுடைய கூடாரத்தைக் காவல் புரிவதற்காக நபித்தோழர்களைக் கொண்ட ஒரு குழு இங்கு வந்துள்ளது என்றார்கள்.

இது கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனுக்கு இணை வைப்பவர்கள் இப்பொழுது அகழைக் கடப்பதற்கு முயன்று கொண்டிருக்கின்றனர். எனவே, நீங்கள் அங்கு சென்று அவர்களுடன் போரிடுங்கள். எனது கூடாரத்தைக் காவல்புரிய வேண்டாம் என்றார்கள்.

## பனூ குரைலா கோத்திரத்தினரும் இணை வைப்பவர்களும் ஒன்றுசேர்ந்து தாக்குதல் நடத்த எடுத்த முயற்சியும் அதில் அவர்கள் அடைந்த தோல்வியும்

மேற்கூறப்பட்டது போன்று யூதர்களாகிய பனூ குரைலா கோத்திரத்தினர் மறைமுகமாக மதீனாவுக்குள் நுழைய முயன்றனர். இதில் அவர்களின் ஒற்றன் ஒருவன் கொல்லப்பட்டான். தங்களுடைய சதித்திட்டம் வெளிப்பட்டது பற்றி யூதர்களுக்குத் தெரிந்ததும் அவர்கள் மிகுந்த துணிச்சலுடன் இணை வைப்பவர்களான அரபு மக்களுக்கு உதவி செய்யத் தொடங்கி விட்டனர்.

மதீனாவின் பின்புறம் குறுகிய திடலாக இருந்தது. அங்கு முஸ்லிம் படை வீரர்களும் இருந்தனர். இதனால் அந்தப் பக்கத்திலிருந்து கூட்டாகப் பெருந்தாக்குதல் நடத்த முடியாதிருந்தது.

எனவே, சில நாட்களுக்குப் பிறகு யூதர்களின் படைகளும் இணைவைப்பவர்களின் படைகளும் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் திடீரென்று முஸ்லிம்களைத் தாக்க வேண்டுமென்று அவ்விரு சாராரும் தீர்மானித்தனர். ஆனால், அப்போது வியக்கத்தக்க விதத்தில் இறைவனின் உதவி கிடைத்தது.

அதாவது, கத்ஃபான் கோத்திரத்தைச் சேர்ந்த நுஅய்ம் என்பவர் மனத்தளவில் முஸ்லிமாக இருந்தார். அவரும் நிராகரிப்பாளருடன் வந்திருந்தார். ஆனால், எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்போது நான் முஸ்லிம்களுக்கு உதவி செய்வேன் என்று அவர் முடிவு செய்திருந்தார்.

தம்மால் தனியாக எதுவும் செய்ய முடியாதிருந்த அவர் நிராகரிப்பாளர்களுடன் யூதர்கள் சேர்ந்து விட்டதையும் இப்பொழுது வெளிப்படையாகப் பார்க்கும் போது முஸ்லிம்களின் பாதுகாப்பிற்கு எந்த வழிவகையும் இல்லாதிருந்ததையும் கண்டு மிகவும் கவலைக் குள்ளாகி எவ்வகையிலாவது இந்த மோசமான நிலைமையை அகற்றுவதற்கு நான் ஏதேனும் செய்தாகவேண்டும் என்ற தீர்க்கமான முடிவிற்கு வந்து விட்டார்.

இரு சாராரும் இணைந்து ஒருநாளில் தாக்குதல் நடத்த வேண்டுமென்று அரபு மக்களும் யூதர்களும் முடிவு செய்தபோது அவர் யூதர்களிடம் சென்று அவர்களின் தலைவர்களைச் சந்தித்து அரபுப்படை விரண்டோடி விட்டால் முஸ்லிம்கள் உங்களை என்ன செய்வார்கள் என்பதையும் நீங்கள் முஸ்லிம்களுடன் உடன்படிக்கை செய்துள்ளீர்கள். உடன்படிக்கை செய்து விட்டு அதனை முறிப்பதனால் உங்களுக்குக் கிடைக்கும் தண்டனையையும் நீங்கள் சற்று நினைத்துப் பாருங்கள் என்றார்.

இதுகேட்டு அவர்களின் உள்ளத்தில் அச்சம் ஏற்பட்டது. அப்படியானால் நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று அவர்கள் கேட்டார்கள்.

இதற்கு நுஅய்ன் என்பவர் கூட்டாகத் தாக்குதல் நடத்துவதற்கு அரபு மக்கள் உங்களிடம் கோரிக்கை விடுத்தால் நீங்கள் அவர்களிடம் உங்களுள் எழுபது பேரை எங்களிடம் பிணையாளி களாக அனுப்புங்கள். அவர்கள் எங்களுடைய கோட்டைகளைப் பாதுகாக்க வேண்டும். நாங்கள் மதீனாவில் பின்புறத்திலிருந்து தாக்குவோம் என்று கூறுங்கள் என்றார்.

பின்னர் அவர் அங்கிருந்து திரும்பி அரபு மக்களின் தலைவர்களைச் சந்தித்து அவர்களிடம் இந்த யூதர்கள் மதீனாவில் வாழ்ந்து வருகின்றனர். போரின் மிக முக்கியமான நேரத்தில் இவர்கள் உங்களுக்கு துரோகம் செய்து விட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்? முஸ்லிம்களை மகிழ்விப்பதற்காகவும் தங்களுடைய குற்றத்தை முஸ்லிம்கள் மன்னித்து விட வேண்டும் என்பதற்காகவும் உங்களுடைய ஆண்களை பிணையாளிகளாக அனுப்புமாறு இவர்கள் உங்களிடம் வேண்டி அவர்களை முஸ்லிம்களிடம் ஒப்படைத்து விட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

எனவே, இவர்கள் உறுதியாக நிலைத்திருப்பார்களா நிலைத்திருக்கமாட்டார்களா என்பதை நீங்கள் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். அடுத்து உங்களுடன் முறையாக இணைந்து தாக்குதல் நடத்த வருமாறு உடனடியாக இவர்களுக்கு அழைப்பு விடுங்கள் எனக் கூறினார்.

அரபு மக்களின் தலைவர்கள் இந்த ஆலோசனையே சரியானது எனக் கருதி மறுநாளே யூதர்களுக்கு அனுப்பிய தூதுச் செய்தியில் கூட்டாகத் தாக்குதல் நடத்த நாங்கள் விரும்புகின்றோம். எனவே, நீங்கள் உங்கள் படைகளுடன் நாளை தாக்குதல் நடத்த வேண்டும் என்று கூறினர்.

பனூ குரைலா கோத்திரத்தினராகிய யூதர்கள் முதலாவதாக நாளை எங்களுக்கு ஸப்பாத் (சனிக்கிழமை ஓய்வு) நாளாக இருக்கிறது. எனவே அந்த நாளில் எங்களால் போர் செய்ய முடியாது. இரண்டாவதாக நாங்கள் மதீனாவில் வாழ்ந்து வருகிறோம். நீங்கள் மதீனாவிற்கு வெளியில் வாழ்ந்து வருகின்றீர்கள். நீங்கள் போர் செய்வதை விட்டுவிட்டுச் சென்று விட்டால் எங்கள் நிலை என்னவாகும்? எனவே, நீங்கள் எங்களுக்கு எழுபது பேரை பிணையாளிகளாக தந்தால் நாங்கள் போரில் கலந்து கொள்வோம் என்றனர்.

நிராகரிப்பாளர்களின் உள்ளத்தில் ஏற்கனவே சந்தேகம் ஏற்பட்டிருந்தது. இதனால் அவர்கள் யூதர்களின் கோரிக்கையை மறுத்து நீங்கள் எங்களுடன் இணைவது உண்மையானால் இவ்வகையான கோரிக்கைக்கு அவசியமில்லை என்றனர்.

இந்த நிகழ்ச்சியினால் யூதர்களின் உள்ளத்திலும் ஐயப்பாடுகள் ஏற்பட்டன. ஐயப்பாடுகள் ஏற்பட்டு விட்டால் தளர்வு ஏற்பட்டு விடும் என்பது விதியாகும்.

இந்த ஐயப்பாடுகளுடனேயே நிராகரிப்பாளர்களின் படையினர் இரவில் ஓய்வெடுப்பதற்காக தங்கள் கூடாரங்களுக்குச் சென்றனர். அப்போது இறைவன் வியக்கத்தக்க இன்னொரு உதவியையும் செய்தான். அதாவது அந்த இரவில் மிகக் கடினமான புயற்காற்று வீசியது. அது கூடாரங்களைச் சேதப்படுத்தியது. அடுப்புகளின்மீதிருந்த சமையற் பாத்திரங்களை வீழ்த்தியது. சில கோத்திரங்களின் எரிந்து கொண்டிருந்த நெருப்புகள் அணைந்து விட்டன.

அரபு நாட்டின் இணை வைப்பவர்களிடம் ஒரு பழக்கம் இருந்து வந்தது. அவர்கள் இரவு முழுவதும் தொடர்ந்து நெருப்பு எரிந்து கொண்டிருக்குமாறு செய்வர். இதனை அவர்கள் நல்ல சகுனம் எனக் கருதினர். ஒருவருடைய நெருப்பு அணைந்து விட்டால் அந்த நாள் தமக்கு கெட்ட நாள் எனக்கருதி தமது கூடாரத்தை பிரித்து எடுத்துக் கொண்டு போர்க்களத்திலிருந்து பின்னால் சென்று விடுவார்.

எனவே, எந்தக் கோத்திரங்களின் நெருப்புகள் அந்தப் புயற்காற்றால் அழிந்து விட்டனவோ அந்தக் கோத்திரங்கள் எல்லாம் அந்தப் பழக்கத்திற்கேற்ப பின்னால் சென்று ஒருநாள் தாமதித்து விட்டு பிறகு போர்ப்படையுடன் சேர்ந்து கொள்ளலாம் என நினைத்து தங்கள் கூடாரங்களை பிரித்து எடுத்துக் கொண்டு சென்று விட்டனர்.

பகலில் ஏற்பட்ட தகராறுகளினால் படைத்தளபதிகளின் உள்ளத்தில் ஐயப்பாடுகள் ஏற்பட்டிருந்தன. பின்னால் சென்றுவிட்ட கோத்திரங்கள், ஒருகால் யூதர்கள், முஸ்லிம்களுடன் சேர்ந்து கொண்டு சதி செய்திருப்பார்கள். இதனால் தான் அக்கம் பக்கங்களி லிருந்த கோத்திரங்கள் வெருண்டோடிக் கொண்டிருக்கின்றன என்று நினைத்தனர். மற்றவர்கள் முஸ்லிம்கள் இரவில் தாக்கினார்கள் என்று எண்ணி தாங்களும் அவசர அவசரமாக தங்களுடைய கூடாரங் களைச் சுருட்டிக் கொண்டு போர்க்களத்திலிருந்து வெருண்டோடத் தொடங்கினர்.

தமது கூடாரத்தில் அமைதியாகப் படுத்திருந்த படைத் தளபதிகளுள் ஒருவராகிய அபூஸுஃப்யானுக்கும் இந்த நிகழ்ச்சி பற்றிய செய்தி கிடைத்தது. உடனே அவர் பதற்றத்துடன் எழுந்து கட்டப்பட்டிருந்த தனது ஒட்டகத்தின் கயிற்றை அவிழ்க்காமலேயே அதன் மீது ஏறிச்செல்ல முற்பட்டார்.

இதனைக் கண்ட அவருடைய நண்பர்கள் கட்டப்பட்டிருக்கும் ஒட்டகத்தின் மீது சவாரி செய்ய முற்பட்ட அவரது அறியாமையை சுட்டிக்காட்டினர். பின்னர் அதன் கயிறு அவிழ்க்கப்பட்டதும் அவரும் போர்க்களத்திலிருந்து வெருண்டோடினார்.

சற்றேறக்குறைய 20 அல்லது 25 ஆயிரம் நிராகரிப்பாளர் களின் படை வீரர்கள் பாசறை அமைத்திருந்த திடல் அந்த இரவின் கடைசிப்பகுதியில் ஒரு காடு போன்று வெறிச்சோடி கிடந்தது.

இறைவன் தனது அறிவிப்பின் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உமது பகைவர்களை நாம் விரட்டியடித்து விட்டோம் என்று அறிவித்தான். எனவே அவர்கள் பகைவர்களின் நிலைமையைத் தெரிந்து கொள்வதற்காக ஒருவரை அனுப்ப விரும்பி தங்களுக்கு அக்கம்பக்கத்தில் அமர்ந்திருந்த தங்கள் தோழர்களை அழைத்தார்கள்.

அது கடுங்குளிர் காலமாக இருந்தது. முஸ்லிம்களிடம் ஆடைகள் கூட போதுமான அளவிற்கு இருக்கவில்லை. கடுங்குளிரால் அவர்கள் நடுங்கிக் கொண்டிருந்தனர். அவர்களின் நாவுகள் விறைத்துப் போயிருந்தன.

இது குறித்து நபித்தோழர்கள் சிலர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குரலை நாங்கள் கேட்டோம். அதற்குப் பதில் குரல் கொடுக்கவும் விரும்பினோம். ஆனால் எங்களால் கடுங்குளிரின் காரணமாக பேச முடியவில்லை என்று கூறியுள்ளனர்.

ஹஸ்ரத் ஹுதைஃபா (ரலி) அவர்கள் மட்டுமே, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாங்கள் தங்களின் கட்டளையை நிறைவேற்றுவதற்கு இதோ ஆயத்தமாக இருக்கின்றோம் என்று கூறியதற்கு, நீங்கள் இங்கு இருங்கள்; வேறொருவர் வேண்டும்; வேறு யார் இருக்கின்றார்? என்று அவர்கள் கேட்டார்கள். அந்த சந்தர்ப்பத்திலும் நபித்தோழர்கள் விழித்துக் கொண்டுதானிருந்தனர் என்றாலும் கடுங்குளிரின் காரணமாக அவர்களால் பதிலளிக்க முடியவில்லை.

மீண்டும் ஹஸ்ரத் ஹுதைஃபா (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இதோ நான் இருக்கின்றேன் என்றார்கள். இப்பொழுது அவர்கள், ஹஸ்ரத் ஹுதைஃபாவிடம், இறைவன் எனக்கு உமது பகைவர்களை நாம் விரட்டியடித்து விட்டோம் என்று அறிவித்துள்ளான். எனவே நீங்கள் சென்று, பகைவர்களின் நிலைமை என்னவானதென்று அறிந்து வாருங்கள் என்று கூறி அவர்களை அனுப்பினார்கள்.

ஹஸ்ரத் ஹுதைஃபா (ரலி) அவர்கள், அகழை நோக்கிச் சென்றார்கள். அங்குப் போர்க்களத்தில் எதிரிப் படைவீரர்கள் எவரும் இல்லாமல், அது முற்றிலும் வெறிச்சோடிக் கிடந்ததைக் கண்டு திரும்பி வந்து,

***அஷ்ஹது அ(ன்)ல்லாயிலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு*** - அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் வணக்கத்திற்குரியவர் இல்லை என்றும் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் அவனுடைய தூதருமாவார்கள் என்றும் நான் சாட்சி கூறுகிறேன் என்று முழங்கிவிட்டு, பகைவர்கள் எல்லாரும் போர்க்களத்திலிருந்து வெருண்டோடி விட்டார்கள் என்று கூறினார்கள்!

பின் பொழுது விடிந்ததும் முஸ்லிம்கள் தங்கள் கூடாரங்களைப் பிரித்தெடுத்துவிட்டுத் தத்தமது வீடுகளை நோக்கிச் சென்றனர்.

## பனூ குறைலா கோத்திரத்தினர் செய்த சதிச் செயலுக்குக் கிடைத்த தண்டனை

இருபது நாட்களாக நடந்த போருக்குப் பிறகு முஸ்லிம் களுக்கு நிம்மதி கிடைத்தது. எனினும் பனூ குறைலா கோத்திரத் தினரின் விவகாரம் தீர்க்கப்பட வேண்டியிருந்தது. அவர்கள் செய்த சதிச் செயல் மன்னிக்கத்தக்கதன்று.

எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தங்கள் வீட்டிற்குத் திரும்பியதும், தங்கள் தோழர்களிடம், நீங்கள் இப்பொழுது ஓய்வு எடுக்க வேண்டாம்; இன்று மாலைக்குள் பனூ குறைலா கோத்திரத்தினரின் கோட்டைக்குச் சென்று விடுங்கள் என்றார்கள். பிறகு அவர்கள், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம், நீங்கள் பனூ குறைலாவிடம் சென்று, உடன்படிக்கைக்கு மாற்றமாக அவர்கள் ஏன் இந்தச் சதிச் செயலில் ஈடுபட்டார்கள் என்று விசாரித்து வாருங்கள் என்று கூறினார்கள்.

பனூ குறைலாவினர், தாங்கள் செய்த சதிச் செயலுக்காக வெட்கித் தலைகுனிந்து மன்னிப்புக் கேட்பதற்கோ சாக்குப் போக்குக் கூறுவதற்கோ பதிலாக, ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களையும் அவர்களுடன் சென்றவர்களையும் திட்டினர்; அடுத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் அவர்களின் குடும்பப் பெண்களையும் திட்டித் தீர்த்து விட்டு, முஹம்மது என்றால் யாரென்று எங்களுக்குத் தெரியாது. எங்களுக்கு அவர்களுடன் எந்த உடன்படிக்கையும் கிடையாது என்று பதிலளித்தனர்.

அவர்களின் இந்தப் பதிலைக் கேட்டு விட்டு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் திரும்பிய போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சில தோழர்களுடன் அந்த யூதர்களின் கோட்டைகளை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது யூதர்கள், கீழ்த்தரமாக வசைமாரிப் பொழிந்து கொண்டிருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மனைவிமார்களையும் அவர்களின் பெண் குழந்தைகளையும் பற்றித் தகாத வார்த்தைகளைக் கூறிக் கொண்டிருந்தனர்.

இத்தகு வசைமாரிகளையும் தகாத சொற்களையும் கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குத் துன்பம் ஏற்படும் என்றெண்ணிய ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் ஏன் சிரமம் எடுத்துக் கொள்கிறீர்கள்? இந்தச் சண்டைச்சச்சரவை நாங்களே கவனித்துக் கொள்கிறோம்; தாங்கள் திரும்பிச் சென்று விடுங்கள் என்று பணிவாக வேண்டினார்கள்.

இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யூதர்கள் வசைமாரிப் பொழிந்து கொண்டிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன் அந்த வசைமொழிகள் என் காதில் விழக்கூடாதே என்று நீங்கள் விரும்புகிறீர்கள் என்று கூறியதற்கு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், "ஆம்; அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் விரும்புவது அதுவே" என்று கூறினார்கள்.

இதுகேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அதனால் என்ன? அவர்கள் வசைமாரிப் பொழிகின்றார்கள் என்றால், அவர்களின் நபியாக விளங்கிய ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு இதைவிடவும் அதிகமான துன்பங்களை அவர்கள் கொடுத்துள்ளனர் என்று கூறிவிட்டு, அவர்களின் கோட்டைகளை நோக்கிச் சென்று விட்டார்கள். ஆனால் யூதர்கள் வாயில்களை மூடிவிட்டுக் கோட்டைகளுக்குள் இருந்து கொண்டு முஸ்லிம்களுடன், போரிடத் தொடங்கி விட்டனர்; இந்தப் போரில் யூதப் பெண்களும் கலந்து கொண்டனர்.

கோட்டைச் சுவருக்கடியில் சில முஸ்லிம்கள் உட்கார்ந் திருந்தனர். ஒரு யூதப் பெண் கோட்டைக்கு மேலிருந்து கல்லெறிந்து ஒரு முஸ்லிமைக் கொன்று விட்டாள். சில நாட்கள் முற்றுகைக்குப் பிறகு தங்களால் மேலும் எதிர்க்க முடியாது என்று யூதர்கள் உணர்ந்தனர்.

இதனால் அவர்களின் தலைவர்கள், தங்கள் நண்பராகவும் அவ்ஸ் கோத்திரத்தின் ஒரு தலைவராகவும் விளங்கிய மதீனாவைச் சேர்ந்த அபூ லுபாபா என்பவருடன் தாங்கள் கலந்தாலோசனை செய்தவதற்காக அவரைத் தங்களிடம் அனுப்புமாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தூது அனுப்பினார்கள். எனவே அவர்கள், அவரை அனுப்பினார்கள்.

யூதர்கள் அவரிடம், நாங்கள் ஆயுதங்க்ளைத் தூக்கி எறிந்து விட்டு, முஹம்மது (ஸல்) அவர்களின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற அவர்களின் கோரிக்கையை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமா என்று கேட்டனர்.

இதற்கு அபூ லுபாபா, ஆம் என்று வாயளவில் கூறி விட்டு, நீங்கள் கொல்லப்படுவீர்கள் என்பதற்கு அறிகுறியாகத் தமது கழுத்தில் கை வைத்துச் சைகைக் காட்டினார்கள். அந்த நேரம் வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களுடைய எந்தத் தீர்ப்பையும் வெளியிடவில்லை. ஆனால் அபூ லுபாபா என்பவர் அவர்கள் செய்த குற்றத்திறத்குத் தண்டனை கொலை செய்வதைத் தவிர வேறு எதுவாக இருக்க முடியும் என்று நினைத்து,சிறிதும் சிந்திக்காமல் அவர்களிடம் தெரிவித்த அந்தச் சைகையானது, இறுதியில் அவர்களின் அழிவிற்குக் காரணமாகி விட்டது.

பனூ குரைலா கோத்திரத்தினராகிய அந்த யூதர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தீர்ப்பை ஏற்றுக் கொண்டிருப்பின், ஏனைய யூதக் கோத்திரங்களைப் போன்று, அவர்களும் அதிகபட்ச தண்டனையாக மதீனாவிலிருந்து நாடு கடத்தப்பட்டிருப்பார்கள்.

ஆனால் தங்களின் துர்பாக்கியத்தால் அவர்கள், முஹம்மது (ஸல்) அவர்களின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள நாங்கள் தயாராக இல்லை. எங்களுடன் நேசங் கொண்டுள்ள அவ்ஸ் கோத்திரத்தின் தலைவர் ஸஃது பின் மஆது (ரலி) அவர்களின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்றனர்.

ஆனால் அந்த நேரத்தில் யூதர்களுக்கிடையே கருத்து வேற்றுமை தோன்றி விட்டது. அவர்களுள் சிலர், நம்முடைய சமுதாயத்தினர் சதிச் செயலில் ஈடுபட்டனர்; முஸ்லிம்கள் நடந்து கொண்ட முறையிலிருந்து, அவர்களின் மார்க்கம் உண்மையானது என்று நிரூபணமாகி விட்டது என்று கூறி, தங்களது மதத்தைத் துறந்து இஸ்லாத்தைத் தழுவி விட்டனர்.

யூத சமுதாயத்தின் தலைவர்களுள் ஒருவராகிய அம்ரு பின் ஸஃதி என்பவர், தமது சமுதாயத்தினரைப் பழித்துரைத்து, நீங்கள் சதிமோசம் செய்து, உடன்படிக்கையை முறித்துள்ளீர்கள்; இப்பொழுது நீங்கள் முஸ்லிம்களாகி விட வேண்டும்; அல்லது ஜிஸ்யா செலுத்தச் சம்மதிக்க வேண்டும் என்றார். இதற்கு யூதர்கள், நாங்கள் முஸ்லிம் களாகவும் மாறமாட்டோம்; ஜிஸ்யா வரியும் செலுத்தமாட்டோம்; இதைவிட நாங்கள் கொல்லப்படுவதே சிறந்தது என்றனர்.

பிறகு அவர்களிடம் அவர், நான் உங்களை விட்டு விலகிக் கொள்கிறேன் என்று கூறிவிட்டு கோட்டையை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தபோது, முஹம்மது பின் மஸ்லமா என்பவரைத் தளபதியாகக் கொண்ட முஸ்லிம்களின் ஒரு படைப்பிரிவு அவரைக் கண்டு, நீங்கள் யார்? என்று கேட்டதற்கு, அவர் தம்மைப் பற்றிக் கூறினார்.

இதுகேட்டு முஹம்மது பின் மஸ்லமா, நீங்கள் நலமாகச் செல்லுங்கள் என்று அவரிடம் கூறிவிட்டு, இறைவா! கண்ணியமானவர் களின் தவறுகளை மறைக்கும் நற்செயலைச் செய்வதிலிருந்து ஒருபோதும் என்னை விலக்கி வைத்துவிடாதிருப்பாயாக என்று இறைவனை வேண்டினார்.

*(ஆதாரம்: ஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 2, பக்கம் 363)*

இதன் கருத்தாவது, இந்த மனிதர், தாம் செய்த செயலிற் காகவும் தம் சமுதாயம் செய்த செயலிற்காகவும் கழிவிரக்கம் கொள்கின்றார்; இதனால் மனிதப் பண்பு அடிப்படையில் அவரை மன்னித்து விடுவது, எங்களுக்கும் கட்டாயமாகி விட்டது. எனவே நான் அவரைச் சிறைபடுத்தாமல் விட்டுவிட்டேன். இறைவா! என்றென்றும் இத்தகு நற்செயல்களைச் செய்வதற்கான வாய்ப்பை எனக்குத் தந்தருள்வாயாக என்று அவர் இறைவனிடம் பிரார்த்தனை செய்தார்.

இந்த நிகழ்ச்சி குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குத் தெரிந்தபோது, அந்த மனிதரை விட்டு விட்டதற்காக முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களைக் கண்டிக்கவில்லை. மாறாக இச்செயலுக்காக அவர்களைப் பாராட்டினார்கள்.

## பனூ குறைலாவினர் தாங்களாகவே நியமித்த நடுவர் ஸஃது செய்த தீர்ப்பு தவ்ராத் வேதத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது

மேற்கூறப்பட்டவை தனி நபர் நிகழ்ச்சிகளாகும். ஒரு கோத்திரத்தினர் என்ற முறையில் பனூ குறைலாவினர் தங்களுடைய பிடிவாதத்தில் நிலைத்திருந்தனர். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நடுவராக ஏற்றுக் கொள்ள மறுத்து ஸஃது பின் மஆது (ரலி) அவர்கள் தாம் தீர்ப்பளிக்க வேண்டும் என்று பிடிவாதம் செய்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களின் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, போரில் காயமடைந்திருந்த ஸஅது பின் மஆது (ரலி) அவர்களிடம், பனூ குறைலாவினர் உங்களுடைய தீர்ப்பை ஏற்றுக் கொள்கின்றனர். எனவே நீங்கள் வந்து தீர்ப்பு வழங்குங்கள் என்று அறிவித்தார்கள்.

அவர்கள் இதனை அறிவித்ததும் பனூ குறைலாவுடன் நீண்டகாலமாக நேசங்கொண்டிருந்த அவ்ஸ் கோத்திரத்தினர், ஸஃதுவிடம் விரைந்து சென்று, கஸ்ரஜ் கோத்திரத்தினர், தங்களுடன் நேசங்கொண்டிருந்த யூதர்களை எப்போதும் தண்டனையிலிருந்து காப்பாற்றினார்கள். ஆதலால் இன்று நீங்களும் நம்முடன் நேசங் கொண்டுள்ள கோத்திரத்தினருக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தத் தொடங்கினர்.

ஸஅது (ரலி) அவர்கள் காயமடைந்திருந்ததால், வாகனத்தில் அமர்ந்து பனூ குறைலா கோத்திரத்தினரை நோக்கிப் புறப்பட்டார்கள். அவர்களின் சமுதாய மக்கள், அவர்களின் வலப்புறமும் இடப் புறமுமாக விரைந்து சென்று, பனூ குறைலாவினருக்கு மாற்றமாக நீங்கள் தீர்ப்பு வழங்கி விடாதீர்கள் என்று வலியுறுத்திக் கூறிக் கொண்டிருந்தனர்.

ஆனால் ஸஅது (ரலி) அவர்கள், தீர்ப்பளிக்கும் பணி எவரிடம் ஒப்படைக்கப்படுகின்றதோ அவர் நம்பிக்கைக்குரியவ ராவார். அவர் நியாயமாகத் தீர்ப்பு வழங்க வேண்டும். எனவே நான் நியாயமாகத் தீர்ப்பு வழங்குவேன் என்று மட்டுமே பதிலளித்தார்கள்.

ஸஅது (ரலி) அவர்கள் யூதர்களின் கோட்டையை அடைந்த போது பனூ குறைலாவினர், ஒரு கோட்டைச் சுவரில் நின்று கொண்டு ஸஅது (ரலி) அவர்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். முஸ்லிம்கள் மறுபுறம் உட்கார்ந்திருந்தனர். அந்தக் கோட்டைக்கருகில் சென்ற ஸஅது (ரலி) அவர்கள், முதலில் தங்கள் சமுதாயத்தினரிடம், நான் வழங்கப்போகும் தீர்ப்பை நீங்கள் ஏற்றுக் கொள்வதாக வாக்குறுதியளிக்கின்றீர்களா? என்று கேட்டதற்கு நிச்சயமாக நாங்கள் ஏற்றுக் கொள்வோம் என்றனர்.

பின்னர் ஸஅது (ரலி) அவர்கள், பனூ குறைலாவினரை நோக்கி, நான் வழங்கும் தீர்ப்பை நீங்களும் ஏற்றுக் கொள்வதாக வாக்குறுதியளிக்கின்றீர்களா? என்று கேட்டதற்கு, நிச்சயமாக நாங்களும் ஏற்றுக் கொள்வோம் என்றனர்.

பிறகு வெட்கத்துடன் தங்கள் முகத்தை மறுபுறம் திருப்பி பார்வையை கீழ்நோக்கி வைத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமர்ந்திருந்த பக்கம் சைகை காட்டியவாறு, இந்தப் பக்கம் அமர்ந்திருப்பவர்களும் அவ்வாறு வாக்குறுதி அளிக்கின்றீர்களா? என்று கேட்டதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆம் என்று பதிலளித்தார்கள்! இதன் பிறகு ஸஅது (ரலி) அவர்கள் பைபிளின் கட்டளைக்கேற்பத் தீர்ப்புக் கூறினார்கள். *(ஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 2, பக்கம் 360,365)*

பைபிளில் கீழ்க்காணுமாறு எழுதப்பட்டுள்ளது: "ஓர் ஊருக்கு விரோதமாய் யுத்தம் பண்ண நீ நெருங்கும் போது, அந்த ஊருக்குச் சமாதானம் கூற வேண்டும். அவர்கள் சமாதானத்திற்கு ஏதுவான பதில் கொடுத்து வாசலைத் திறந்தால் அதிலுள்ள ஜனங்கள், எல்லாரும் கப்பம் கட்டி உனக்கு வேலை செய்யக்கடவர்கள்.

அவர்கள் உன்னோடு சமாதானத்துக்கு இணங்காமல் யுத்தம் பண்ணுவார்களானால், நீ அதை முற்றுகையிட்டு உன் தேவனாகிய கர்த்தர் அதை உன்கையில் ஒப்புக்கொடுக்கும் போது அதிலுள்ள புருஷர் யாவரையும் பட்டயத்தால் வெட்ட வேண்டும். ஸ்திரீகளையும் குழந்தைகளையும் மிருகங்களையும் ஊரிலுள்ள யாவற்றையும் கொள்ளைப் பொருள் அனைத்தையும் உனக்கே வைத்துக்கொள்.

உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு ஒப்புக் கொடுக்கும் உன் சத்துருக்கனின் கொள்ளைப் பொருளை இவ்விதம் அனுபவிப்பாய்.

இந்த ஜாதிகளைச் சேராதவைகளும் உனக்கு வெகு தூரத்திலுள்ளவைகளுமான சகல ஊர்களுக்கும் இப்படியே செய்ய வேண்டும்.

உன் கடவுளாகிய கர்த்தர் உனக்குச் சுதந்திரமாகக் கொடுக்கிற ஏத்தியர், ஏமோரியர், கானானியர், பெரிசியர், ஏவியர், எபூசியர் என்னும் ஜாதிகளின் ஊர்களிலோ சுவாசமுள்ளதொன்றையும் உயிரோடு வைக்காதே; உன் கடவுளாகிய கர்த்தர் உனக்குக் கட்டளை யிட்டபடியே அவர்களை சாபத்திற்குட்படுத்தி சங்கரிக்க வேண்டும்.

இல்லாவிட்டால் தங்கள் தெய்வங்களைத் தொழுவதில் அவர்கள் செய்கிற சகல அருவருப்புகளின் படியேயும் நீங்களும் செய்ய உங்களுக்குக் கற்றுக் கொடுப்பார்கள்;

இப்படியாக நீங்கள் உங்கள் கடவுளாகிய கர்த்தருக்கு விரோதமாய் பாவஞ்செய்ய நேரிடும்." *(உபாகமம் 20:10-18)*

பைபிளின் இந்தத் தீர்ப்பிலிருந்து தெரிவதாவது, யூதர்கள் வெற்றி பெற்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோற்றிருந்தால் பைபிளின் இந்தத் தீர்ப்பிற்கேற்ப, முதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட எல்லா முஸ்லிம்களும் கொல்லப் பட்டிருப்பார்கள்.

யூதர்களின் முற்கால வரலாற்றிலிருந்து நிரூபணமாவது போன்று, முஸ்லிம் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எல்லாரையும் ஒரே நேரத்தில் கொன்றுவிட வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

ஒருகால் அவர்கள் முஸ்லிம்களுக்கு மாபெரும் சலுகை செய்திருந்தால் பைபிளின் உபாகமத்தில் கூறப்பட்ட அந்தத் தீர்ப்பிற்கேற்பவே, வெகுதூரத்திலுள்ள சமுதாயங்களுடன் அவர்கள் நடந்து கொண்டது போன்று முஸ்லிம்களுடனும் நடந்திருப்பார்கள். அதாவது யூதர்கள் முஸ்லிம் ஆண்கள் எல்லாரையும் கொன்று விட்டு, முஸ்லிம் பெண்களையும் குழந்தைகளையும் அவர்களின் உடைமைகளையும் கொள்ளையடித்துக் கொண்டிருப்பார்கள்.

பனூ குரைலா கோத்திரத்தினருடன் நேசங்கொண்டவராகவும் அவர்களின் நண்பர்களுள் ஒருவராகவும் இருந்த ஹஸ்ரத் ஸஅது (ரலி) அவர்கள், நிச்சயமாக யூதர்களின் உயிரைக் காப்பாற்றுகின்ற இஸ்லாமிய ஷரீஅத்திற் (மார்க்கச் சட்டத்திற்) கேற்ப, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள அவர்கள் மறுத்து விட்டதைக் கண்டபோது, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள், ஏற்கனவே உபாகமத்தில் இவ்வாறான சந்தர்ப்பங்களுக்காக வழங்கிய தீர்ப்பையே யூதர்களுக்கு வழங்கினார்கள்.

இந்தத் தீர்ப்பிற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ முஸ்லிம்களோ பொறுப்பாளிகளல்ல; மாறாக, தவ்ராத்தும் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களும் அன்னிய சமுதாயங்களுடன் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அவ்வாறு நடந்து கொண்ட அந்த யூதர்களுமே அதற்குப் பொறுப்பாளிகள் ஆவார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளிற்காக அழைக்கப்பட்டவர்கள், அதனை நிராகரித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள நாங்கள் ஆயத்தமாக இல்லை; மாறாக, ஹஸ்ரத் ஸஅது (ரலி) அவர்களின் தீர்ப்பைத்தான் நாங்கள் ஏற்றுக் கொள்வோம் என்றனர்.

ஹஸ்ரத் ஸஅது (ரலி) அவர்கள், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் தீர்ப்பிற்கேற்ப தீர்ப்பு வழங்கினார்கள். இது இவ்வாறிருக்க, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யூதர்களுக்கு அநீதியிழைத்துள்ளார்கள் என்று இன்றைய கிறித்தவ உலகு கூச்சலிடுகிறது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எந்தச் சந்தர்ப்பத்திலும் அநீதியிழைத்ததில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த அருளின் காரணமாக பகைவர்கள் நூற்றுக்கணக்கான முறை தண்டனையிலிருந்து தப்பித்துக் கொண்டனர். ஒவ்வொரு தடவையும் பகைவர்களை அவர்கள் மன்னித்தருளினார்கள். இவற்றையெல்லாம் கிறித்தவ எழுத்தாளர்கள் ஏன் கண்டு கொள்வதில்லை?

இந்தச் சந்தர்ப்பத்தில் மட்டுமே பகைவர்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தீர்ப்பை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம்; இன்னொரு மனிதரின் தீர்ப்பை ஏற்றுக் கொள்வோம் என்று பிடிவாதம் செய்தனர். அந்த மனிதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் நான் வழங்கும் தீர்ப்பைத் தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வாக்குறுதி வாங்கி விட்டார். இதன் பின்னரே அவர் தீர்ப்பளித்தார். உண்மையில் அவர் சுயமாகத் தீர்ப்பளிக்கவில்லை. மாறாக, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் தீர்ப்பையே திரும்பவும் எடுத்துரைத்தார். தாங்கள் எவருடைய சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் என்று யூதர்கள் வாதிக்கின்றார்களோ அவருடைய (ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடைய) தீர்ப்பையே ஹஸ்ரத் ஸஅது (ரலி) அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

எனவே, எவராவது அநீதியிழைத்துள்ளார் என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தீர்ப்பை ஏற்க மறுத்த யூதர்களே தங்களுக்கு அநீதியிழைத்துக் கொண்டனர். இது அநீதி என்றால் மூஸா அநீதி இழைத்தவர் என்றோ, இல்லையேல் தவ்ராத்தில் இந்தப் போதனையை அளித்த மூஸாவின் இறைவன் அநீதியிழைத்தவன் என்றோ கிறித்தவ எழுத்தாளர்கள் முடிவு செய்ய வேண்டும்.

அகழ்ப்போர் முடிவடைந்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இறைவனுக்கு இணை வைப்பவர்கள், இன்று முதல் நம்மைத் தாக்கமாட்டார்கள். நம்மைத் தாக்கிய மக்களுக்கு இனி இஸ்லாமே பதிலடி கொடுக்கும் என்று கூறினார்கள். பின்னர் நிகழ்ந்ததும் அவ்வாறே.

*(ஆதாரம்: புகாரி - கிதாபுல் மகாஸி)*

அகழ்ப்போரில் நிராகரிப்பாளர்களுக்கு பெரிய பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. அவர்களுள் சிலர் கொல்லப்பட்டனர். எனவே அவர்கள் அடுத்த வருடம் மீண்டும் ஆயத்தம் செய்து கொண்டு தாக்குதல் நடத்தியிருக்கலாம். இருபதாயிரத்திற்குப் பதிலாக நாற்பது அல்லது ஐம்பதாயிரம் போர் வீரர்களைக்கூட அவர்களால் கொண்டு வந்திருக்க முடியும். இன்னும் அதிமானவர் களைத்திரட்ட அவர்கள் நினைத்திருந்தால் ஒரு இலட்சம் அல்லது ஒன்றரை இலட்சம் போர் வீரர்களைத் திரட்டுவதுகூட அவர்களுக்குச் சிரமமானதன்று.

ஆனால் அவர்கள் இருபத்தோரு ஆண்டுகள் இஸ்லாத்திற்கு மாற்றமாகத் தொடர்ந்து செய்த முயற்சிகளுக்குப் பின்னர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடனேயே இறைவன் இருக்கின்றான்; கடவுள்கள் என நினைத்திருந்த தங்களுடைய சிலைகளை பொய்யானவையே; உலகைப் படைத்தவன் ஒரே இறைவன்தான் என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்பட்டது. அவர்களின் உடல்கள் நன்றாக இருந்தாலும் அவர்களின் உள்ளங்கள் நொறுங்கி விட்டன. வெளிப்படையில் அவர்கள், தங்கள் சிலைகளுக்கு முன்னால் தலைசாய்த்து வணங்குபவர்காளாக் காணப்பட்டனர். ஆனால் அவர்களின் உள்ளங்களில் லாயிலாஹ இல்லல்லாஹு - அல்லாஹ்வைத்தவிர வேறெவரும் வணக்கத்திற் குரியவர் இல்லை என்னும் ஒலி எழும்பிக் கொண்டிருந்தது!

## முஸ்லிம்களது வெற்றியின் தொடக்கம்

இந்தப் போரிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இன்று முதல் நிராகரிப்பாளர்கள் நம்மைத் தாக்கமாட்டார்கள். அதாவது முஸ்லிம்களின் சோதனைகளெல்லாம் முடிந்து விட்டன. இப்பொழுது அவர்களின் வெற்றிக்குரிய காலம் தொடங்கி விட்டது என்று கூறினார்கள்.

இதுவரை நிகழ்ந்த போர்களெல்லாம், ஒன்று நிராகரிப் பாளர்கள் மதீனாமீது படையெடுத்தனர். அல்லது அவர்களின் தாக்குதல்களை முறியடிப்பதற்காக முஸ்லிம்கள் மதீனாவிலிருந்து புறப்பட்டனர்.

ஆனால், முஸ்லிம்கள் தாங்களாகவே ஒருபோதும் போரைத் தொடங்க முயன்றதில்லை. போர் விதிகளின்படி ஒரு போர் தொடங்கி விட்டால், அதன் முடிவு இருவிதமாக இருக்கும். ஒன்று சமாதானம் ஏற்பட்டு விடும் அல்லது ஒரு பிரிவினர் ஆயுதங்களை கீழே போட்டு விட்டு சரணடைந்து விடுவர்.

ஆனால் அந்த நேரம்வரை நிகழ்ந்த எந்தப் போரிலும் சமாதானம் ஏற்படவில்லை அல்லது ஒரு பிரிவினர் தங்களுடைய ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டு, சரணடையவுமில்லை.

பண்டைக்கால வழக்கத்திற்கேற்ப ஒரு போருக்கும் அடுத்த போருக்கும் இடையில் சிறது காலம் போர் நடக்காமல் இருந்ததென்றாலும், போர் முடிவடையாமல் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டுதானிருந்தது. எனவே முஸ்லிம்கள் விரும்பி இருந்தால், அந்தப் பகைவர்களைத் தாக்கி, அவர்கள் தங்கள் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டு சரணடையுமாறு அவர்களைக் கட்டாயப்படுத்தி யிருக்கலாம். இந்த உரிமை அந்த முஸ்லிம்களுக்கு இருந்தது. ஆனால் முஸ்லிம்கள் அவ்வாறு செய்யவில்லை.

இதற்கு மாறாக இடைக்காலப் போர் நிறுத்தத்தின்போது, நிராகரிப்பாளர்கள் சமாதானத்திற்கு வந்து போரை நிறுத்தி விடலாம் என்ற எண்ணத்தில் முஸ்லிம்கள் போர் தொடுக்காமல் மவுனமாக இருந்தார்கள். ஆனால் நீண்ட காலம்வரை நிராகரிப்பாளர்கள் சமாதானம் செய்து கொள்ளவும் முன்வரவில்லை; அவர்கள் தங்கள் ஆயுதங்களை முஸ்லிம்களிடம் ஒப்படைத்து விட்டுச் சரணடையவு மில்லை. மாறாகத் தங்கள் எதிர்ப்பையும் வெறியையும் தீவிரப் படுத்தினார்கள்.

எனவே, இப்பொழுது போர் தொடர்பாக இறுதி முடிவு எடுப்பதற்கான நேரம் வந்தது. நாட்டில் அமைதியை நிலைநாட்டு வதற்காக ஒன்று இரு பிரிவினர்களுக்கிடையே சமாதானம் ஏற்பட வேண்டும். அல்லது இரண்டு பிரவினர்களுள் ஒரு பிரிவினர் சரணடைய வேண்டும்.

எனவே அகழ்ப்போருக்குப் பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நாம் இப்பொழுது இரண்டு முடிவுகளுள் ஒன்றினை எடுத்தே ஆக வேண்டும். ஒன்று நமக்கும் நிராகரிப் பாளர்களுக்கும் இடையில சமாதானம் ஏற்பட வேண்டும். அல்லது நம்மில் ஒரு பிரிவினர் சரணடைய வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

இஸ்லாத்தின் வெற்றியைக் குறித்து ஏற்கனவே இறைவனிட மிருந்து அறிவிப்பு வந்து விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் வாழ்ந்து வந்த காலத்திலேயே இஸ்லாத்தின் வெற்றி பற்றி அறிவித்து விட்டார்கள். எனவே ஒரு பிரிவினர் சரணடைய வேண்டுமென்றால் நிராகரிப்பாளர்களே சரணடைய வேண்டும் என்பது வெளிப்படை.

சமாதானம் செய்து கொள்வது தொடர்பாக தெரிந்து கொள்ள வேண்டுவதாவது, சமாதானம் செய்து கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை போரில் வெற்றி அடைந்தவர்களும் விடுக்கலாம். தோல்வியடைந்தவர்களும் விடுக்கலாம். தோல்வி யடைந்த பிரிவினர் சமாதானக் கோரிக்கையை விடுத்தால் அதன் பொருள் அவர்கள் தங்கள் நாட்டின் அல்லது தங்கள் வருவாயில் சிறியதொரு பகுதியை நிரந்தரமாகவோ தற்காலிகமாகவோ வெற்றியடைந்த பிரிவினருக்கு வழங்க வேண்டும். அல்லது வேறு சில நிலைமைகளில் வெற்றியடைந்தவர்கள் விதிக்கும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

வெற்றியடைந்த பிரிவினரிடமிருந்து சமாதானக் கோரிக்கை விடுக்கப்பட்டால் அதன் பொருள் நாங்கள் உங்களை முற்றிலுமாக நசுக்கி விட விரும்பவில்லை. மாறாக, நீங்கள் சிலவற்றில் எங்களுக்குக் கட்டுப்பட்டு நடந்தால் அல்லது எங்கள் ஆட்சிக்கு உட்பட்டு இருப்பதை நீங்கள் ஏற்றுக் கொண்டால் நாங்கள் உங்களுடைய முழுச் சுதந்திரத்தையோ ஓரளவு சுதந்திரத்தையோ நிலைத்திருக்கச் செய்வோம்.

மக்காவின் நிராகரிப்பாளர்களுக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் இடையில் நிகழ்ந்த போர்களில் மீண்டும் மீண்டும் நிராகரிப்பாளர்களுக்கே தோல்வி ஏற்பட்டது.

ஆனால், இந்தத் தோல்வியினால் அவர்களுக்கு ஏற்பட்ட இழப்பு அவர்களின் தாக்குதல் தோல்வியடைந்தன என்பதேயாகும். எதிர்க்கும் வலிமை முழுமையாக முறியடிக்கப்படுவதே உண்மையான தோல்வியாகும். தோல்வியடைவதென்பது உண்மையான தோல்வியாக கருதப்படுவதில்லை. போர் தொடுத்தவர்களின் தாக்குதல்கள் தோல்வியடைந்தனவென்றாலும், அவர்கள் மீண்டும் தாக்குதல் நடத்தித் தங்கள் குறிக்கோளை அடைந்து விடுவார்கள் என்பதே அதன் கருத்தாகும்.

எனவே, போர் விதிகளுக்கேற்ப மக்காவாசிகள் முற்றாகத் தோற்கடிக்கப்படவில்லை. எனினும், இதுவரை அவர்கள் தொடுத்த தாக்குதல்களில் அவர்களால் தங்கள் குறிக்கோளை அடைய முடிந்ததில்லை. இதுவே அவர்களின் நிலையாக இருந்தது.

இதற்குகெதிரில் போரைக் கவனத்திற்கொண்டு பார்க்கும் போது முஸ்லிம்களின் தற்காப்பு வலிமை முறிக்கப்படவில்லை என்றாலும் இரண்டு காரணங்களின் அடிப்படையில் அவர்கள் தோல்வியடைந்தவர்கள் எனக்கூறத்தக்கவர்களாக இருந்தனர்.

முதற்காரணம் அவர்கள் மிகமிகச் சிறுபான்மையினராக இருந்தனர். இரண்டாவது காரணம் அவர்கள் அந்த நேரம் வரை எந்தத் தாக்குதல் நடவடிக்கையிலும் ஈடுபட்டதில்லை. அதாவது, அவர்கள் தாங்களாகவே எந்தத் தாக்குதலையும் தொடங்கிய தில்லை. இவ்வாறான தாக்குதலில் அவர்கள் ஈடுபட்டிருந்தால் இப்பொழுது அவர்கள் தங்களை நிராகரிப்பாளர்களின் செல்வாக்கி லிருந்து விடுதலை அடைந்தவர்கள் என்று கருதினர் என்று நாம் நினைக்கலாம்.

இவ்வாறான நிலைமைகளில் முஸ்லிம்களிடமிருந்து சமாதானக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தால் இப்பொழுது அவர்கள் தற்காப்பிலிருந்து சலிப்படைந்து சோர்ந்து விட்டார்கள் என்றும் அவர்கள் எதையாவது கொடுத்து விட்டு தப்பித்துக் கொள்ள விரும்புகின்றார்கள் என்றுமே பொருள்படும்.

இவ்வாறான நிலைமைகளில் முஸ்லிம்கள் சமாதானக் கோரிக்கையை விடுத்தால் அதன் விளைவு மிகவும் பயங்கரமான தாகவும் தங்களை அழித்துவிடுதவற்குச் சமமானதாகவும் இருக்கும். மேலும் நியாமற்ற தங்களுடைய தாக்குதல் நடவடிக்கைகளில் தோல்வி அடைந்ததனால் அரபு நாட்டின் நிராகரிப்பாளர்களிடம் ஏற்பட்டிருந்த சோர்வு இந்த சமாதானக் கோரிக்கையினால் புத்துணர்வு பெற்று புதிய ஆசைகளையும் ஆவல்களையும் கொண்டதாக மாறியிருக்கும். முஸ்லிம்கள் மதீனாவை அழிவில் இருந்து காப்பாற்றியும்கூட தங்களுடைய இறுதி வெற்றியில் நம்பிக்கையிழந்து விட்டார்கள் என்றே கருதப்படும். இவற்றை யெல்லாம் அறிவுள்ளவர்களால் புரிந்து கொள்ள முடியும்.

எனவே, எந்த வகையிலும் முஸ்லிம்களால் சமாதானக் கோரிக்கையை விடுக்க முடியாதிருந்தது. எனினும், ஒரு பிரிவினர் சமாதானக் கோரிக்கையை விடுக்க முடியும் என்றால் மக்கா வாசிகளால் அதனை செய்திருக்க முடியும். ஆனால் அரபு நாட்டில் நடுநிலை வகிக்கும் எந்த சமுதாயமும் எஞ்சியிருக்கவில்லை. ஒருபுறம் மதீனா தனியாகவும் மறுபுறம் அரபு நாடுகள் எல்லாம் ஒன்றுபட்டும் இருந்தன.

எனவே, செயல்ரீதியாக சமாதானக் கோரிக்கையை விடுக்க முடிந்தவர்கள் நிராகரிப்பாளர்களேயாவர். ஆனால் அவர்களிடம் இருந்து சமாதானத்திற்கான எந்தக் கோரிக்கையும் வரவில்லை.

இந்த நிலைமைகள் நூறாண்டு காலம் வரையிலும்கூட இப்படியே இருந்திருப்பின் போர் விதிகளுக்கேற்ப அரபு நாட்டில் உள்நாட்டுப் போர் நிகழ்ந்து கொண்டிருக்கும்.

ஆகவே, மக்காவாசிகளிடமிருந்து சமாதானக் கோரிக்கை விடுக்கப்படாமலும் அரபு நாட்டின் நிராகரிப்பாளர்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதை மதீனாவாசிகள் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள தயாராக இல்லாமலும் இருந்தபோது எஞ்சியிருந்தது ஒரே ஒரு வழிதான். அதாவது நிராகரிப்பாளர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து செய்த தாக்குதலை முஸ்லிம்கள் முற்றாக முறியடித்து விட்டதால் ஒன்று நிராகரிப்பாளர்கள் சமாதானம் செய்து கொள்ள வேண்டும். அல்லது முஸ்லிம்களின் ஆட்சிக்குட்பட்டு நடக்க வேண்டும். இதனைக் கட்டாயப்படுத்தும் ஒரே வழிதான் இப்போது முஸ்லிம்களுக்கு எஞ்சியுள்ளது.

இதே வழியைத்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். வெளிப்படையாகப் பார்க்கும் போது இந்த வழி போருக்கு வழிவகுப்பதாகவே காணப்பட்ட தென்றாலும் உண்மையிலேயே சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு இதைத் தவிர வேறெந்த வழியும் இல்லாதிருந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவ்வாறு செய்யாமல் இருந்திருப்பின் பண்டை காலத்தில் இவ்வாறான நிலைமைகளில் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக தொடர்ந்து போர்கள் நடந்ததைப் போன்று இஸ்லாத்தின் ஆரம்ப காலமாகிய அந்தக் காலத்திலும் நூறு ஆண்டுகள் வரையிலும் கூட தொடர்ந்து போர் நடந்திருக்கும். அரபு நாட்டினரின் பல போர்கள் முப்பது ஆண்டுகள் என்றும் நாற்பது ஆண்டுகள் என்றும் தொடர்ந்து நடந்துள்ளன.

இதற்குக் காரணம் போரை முடிவிற்குக் கொண்டுவர எந்த வழிவகையும் தேர்ந்தெடுக்கப்படாததேயாகும். அத்தகைய போர்கள் பல ஆண்டுகளாக தொடர்ந்து நடந்தனவென்று தெரிகிறது. நான் கூறியதுபோன்று போரை முடிவிற்குக் கொண்டு வர இரண்டு வழிகளே உள்ளன. அதாவது, வெற்றி பெற்ற அணி மற்ற அணியை சரணடையச் செய்ய வேண்டும். அல்லது அவர்களை சமாதான உடன்படிக்கை செய்ய கட்டாயப்படுத்த வேண்டும்.

ஐயத்திற்கிடமின்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிலேயே இருந்து கொண்டு தாங்களாகத் தாக்குதல் நடத்தாமல் இருந்திருக்க முடியும். ஆனால், அரபு நாட்டின் நிராகரிப்பாளர்கள் போரைத் தோற்றுவித்து விட்டனர். இதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாக்குதல் நடத்தாமல் இருந்திருப்பின் அதன் பொருள் போர் முடிவடைந்து விட்டதாகாது. மாறாக, போருக்கான வாயில் நிரந்தரமாக திறந்து வைக்கப்பட்டு விட்டது என்பதே அதன் பொருளாகும்.

அரபு நாட்டின் நிராகரிப்பாளர்கள் விரும்பும்போது எந்த காரணமும் உருவாகாத நிலையில் மதீனாவைத் தாக்கியிருப்பார்கள். அக்காலத்தின் வழக்கிற்கேற்ப அவர்கள் இதில் நியாயமானவர்கள் என்றே கருதப்பட்டிருப்பார்கள். ஏனென்றால், அக்காலத்தில் போரில் சிறிது கால இடைவெளி ஏற்படுவது போர் முடிவடைந்து விட்டதாகக் கருதப்படுவதில்லை. மாறாக, இடைப்பட்ட அந்தக் காலமும் போர்க்காலமாகவே கருதப்படும்.

இப்போது சிலருடைய உள்ளத்தில், உண்மையான ஒரு மார்க்கம் போர் தொடுக்கலாமா? என்னும் ஒரு கேள்வி எழலாம்.

## போர் பற்றிய யூத, கிறிஸ்தவ சமயங்களின் போதனைகள்

நான் இங்கு இந்தக் கேள்விக்கும் பதிலளிப்பதை அவசியம் எனக் கருதுகின்றேன். போர் தொடர்பாக மதங்கள் பல்வேறு போதனைகளை அளித்துள்ளன. போரைக் குறித்து ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் செய்த போதனையை நான் மேலே குறிப்பிட்டுள்ளேன்.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் பலாத்காரமாக கன்ஆன் நகரத்திற்குள் நுழைந்து அங்குள்ள சமுதாயங்களைத் தோற்கடித்து அந்தப் பகுதியில் தங்களின் சமுதாயத்தை குடியமர்த்துமாறு அவர்களுக்கு கட்டளையிடப்பட்டதென்று தவ்ராத் (பழைய ஏற்பாடு) கூறுகின்றது. ***(உபாகமம் 20:10-18)***

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் இந்தப் போதனையை அளித்தார்கள். ஹஸ்ரத் யோசுவா (அலை) அவர்களும் ஹஸ்ரத் தாவூத் (அலை) அவர்களும் ஏனைய யூத சமுதாய நபிமார்களும் இந்தப் போதனைக்கேற்ப தொடர்ந்து செயலாற்றினார்கள். யூதர்களும் கிறித்தவர்களும் அவர்களையெல்லாம் இறைத் தூதர்கள் என்றும் தவ்ராத்தை இறை வேதம் என்றும் நம்புகின்றனர்.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் இந்தப் போதனையை அளித்து இதற்கேற்ப அந்த சமுதாயத்தின் ஏனைய நபிமார்கள் செயலாற்றி இருந்தும்கூட யூதச் சமுதாயத்தில் இறுதியாகத் தோன்றிய ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் போரைக் குறித்து குறிப்பிடும்போது அநீயிழைத்தவர்களை எதிர்க்க வேண்டாம். மாறாக, “உன்னை வலக்கன்னத்தில் அறைகிறவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டு” என்று போதித்துள்ளார்கள். *(மத்தேயு 5 : 39)*

கிறித்தவர்கள் இதனைச் சான்றாக எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் போர் செய்ய வேண்டாமென்று சமுதாயங்களைத் தடுத்துள்ளார்கள் என்று வாதிக்கின்றனர்.

ஆனால், பைபிளின் புதிய ஏற்பாட்டில் இந்தப் போதனைக்கு மாற்றமான போதனைகளும் இடம்பெற்றிருப்பதை நாம் காண்கின்றோம். எடுத்துக்காட்டாக, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உலகிற்கு சமாதானத்தைக் கொண்டு வருவதற்காக நான் வந்தேன் என்று நினைக்க வேண்டாம். சமாதானத்தை அன்று வாளையே கொண்டு வருவதற்காக வந்தேன் என்று கூறியுள்ளார்கள். *(மத்தேயு 10:34)* அடுத்து “அவர் அவர்களிடம் இப்பொழுதோ பணப்பையுடையவன் அதை எடுத்துக் கொள்ளட்டும். தோற்பை உடையவனும் அப்படியே செய்யட்டும். வாள் இல்லாதவன் தன் மேலாடையை விற்று ஒன்றை வாங்கிக் கொள்ளட்டும்” என்றும் அவர்கள் கூறியுள்ளார்கள். *(லூக்கா 22:36)*

இறுதியிலுள்ள இந்த இரண்டு போதனைகளும் முன்னுள்ள போதனைக்கு முற்றிலும் முரண்பட்டவையாகும். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் போர் செய்வதற்காக வந்தார்கள் என்றால், ஒரு கன்னத்தில் அடி வாங்கிக் கொண்டு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டுவதற்கு என்ன பொருள்? எனவே, ஒன்று இந்த இரண்டு வகையான போதனைகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை யாகும். அல்லது இவ்விரு போதனைகளுள் ஏதாவது ஒன்றிற்கு வெளிப்படையான பொருள் கொள்ளாமல் பொறுத்தமான வேறொரு விளக்கம் தர வேண்டும்.

ஒரு கன்னத்தில் அடிவாங்கிக் கொண்டு மறு கன்னத்தையும் காட்டவேண்டுமென்று போதனை நடைமுறைக்கு ஏற்புடையதா? இல்லையா? என்ற ஆராய்ச்சிக்கு நான் வரவில்லை. கிறித்தவப் போரைப் பற்றியே நான் இங்கு கூற விரும்புகிறேன்.

முதலாவதாக, கிறித்தவ சமுதாயம் தனது முழு வரலாற்றிலும் போரிலிருந்து தவிர்ந்து கொண்டதேயில்லை. கிறித்தவர்கள் முதன்முதலில் ரோமானியாவில் வெற்றி பெற்ற போதும் அவர்கள் தற்காப்புப் போர்களிலும் ஆக்கிரமிப்புப் போர்களிலும் ஈடுபட்டனர். இன்றைய உலகில் வலிமைமிக்க சக்தியாக அவர்கள் திகழ்கின்றனர். இக்காலத்திலும்கூட அவர்கள் தற்காப்புப் போர்களிலும் ஆக்கிரமிப்புப் போர்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதில் ஒரு வித்தியாசமும் உள்ளது. போரில் வெற்றி பெறும் பிரிவினரைப் பற்றி அவர்கள் கிறித்தவ நாகரிகத்திற்கு கட்டுப்பட்டவர்களாவர் என்று கூறிவிடுகின்றனர். போரில் வெற்றி பெறுபவர்களின் செயல்முறைக்குப் பெயர்தான் இக்காலத்தில் கிறித்தவ நாகரிகமாய் இருக்கிறது. இச்சொல்லிற்குரிய சரியான பொருள் இப்பொழுது அங்கு காணப்படவில்லை.

இரண்டு கிறித்தவ சமுதாயத்தினர் தமக்குள் போர் செய்யும் போது கிறித்தவ நாகரிகத்தை ஆதரிப்பவர்கள் தாங்களே என்று ஒவ்வொரு சமுதாயத்தினரும் வாதிக்கின்றனர். ஏதாவது சமுதாயத்தினர் வெற்றி பெறும் போது,வெற்றி பெற்ற இந்த சமுதாயத்தினரின் செயல்முறைதான் கிறித்தவ நாகரிகமாகும் என்று கூறப்படுகிறது.

எப்படியிருந்தபோதிலும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் காலத்திலிருந்து இன்றுவரை கிறித்தவ உலகு தொடர்ந்து போர் செய்து கொண்டுதான் இருக்கிறது. அது இனியும் போர் செய்து கொண்டுதான் இருக்கும் என்பதற்கான அறிகுறிகளும் தென்படுகின்றன.

எனவே கிறித்தவ உலகின் தீர்ப்பைப் பொறுத்தவரை “நீங்கள் உங்களுடைய ஆடைகளை விற்று வாளை வாங்கிக் கொள்ளுங்கள்”, “உலகிற்கு சமாதானத்தை கொண்டு வருவதற்காக நான் வந்தேன் என்று நினைக்க வேண்டாம். சமாதானத்தை அன்று, வாளையே கொண்டு வருவதற்காக வந்தேன்” என்ற போதனையே அதன் அசல் போதனை என்று தெளிவாகத் தெரிகின்றது.

‘நீ ஒரு கன்னத்தில் அடி வாங்கி விட்டு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டு’ என்ற போதனை, ஒன்று ஆரம்பக் கிறித்தவ உலகு மிகவும் பலவீனமாக இருந்தபோது சந்தர்ப்ப சூழ்நிலைக்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும்; அல்லது கிறித்தவர்களுக்கு இடையிலுள்ள தனி நபருக்காக மட்டும் இந்த போதனை இருக்க வேண்டும்; அரசுகளுக்கும் சமுதாயங்களுக்கும் இந்த போதனை பொருத்தமானதன்று.

இரண்டாவதாக, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் அசல் போதனை போர் செய்ய வேண்டும் என்பதன்று. மாறாக, சமாதானத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதே அவர்களின் அசல் போதனையாகும் எனக்கருதப்பட்டாலுங்கூட இந்தப் போதனைக்கு மாற்றமாக செயல்படுபவர், இறை நேசராக முடியாது என்ற கருத்து கிடைக்கவில்லை.

ஏனென்றால் கிறித்தவ உலகு இன்றுவரை ஹஸ்ரத் மூஸா (அலை), ஹஸ்ரத் யோசுவா (அலை), ஹஸ்ரத் தாவூது (அலை) ஆகியவர்களை இறைநேசர்கள் என்றே கூறுகிறது. இது மட்டுமல்லாமல் கிறிஸ்தவக் காலத்திலுங்கூட தமது சமுதாயத்திற்காக தமது உயிரையே ஆபத்திற்குள்ளாக்கி பகைவர்களுடன் போர் செய்த கிறித்தவ சமுதாயத் தலைவர்கள் பல்வேறு காலத்திலுள்ள போப் (Pope)களின் தீர்ப்பிற்கேற்ப இன்று புனிதமானவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

## போர் பற்றிய இஸ்லாத்தின் போதனை

போர் பற்றி அவ்விருவகைப் போதனைகளுக்கும் மாற்றமான தொரு போதனையை இஸ்லாம் வழங்கியுள்ளது.

அதாவது, ஆக்கிரமிக்கும் எண்ணத்துடன் நீ ஒரு நாட்டிற்குள் நுழைந்து அந்த நாட்டின் சமுதாயத்தைக் கொன்று விடு என்று மூஸா நபி (அலை) அவர்கள் கூறியது போன்றும் இஸ்லாம் கூறவில்லை.

எவராவது உனது ஒரு கன்னத்தில் அறைந்தால் நீ உனது மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டு என்று ஒருபுறமும், தன்னைச் சார்ந்தவர்களின் காதில் இரகசியமாக நீங்கள் உங்கள் ஆடைகளை விற்றாவது போர் வாள்களை வாங்கிக் கொள்ளுங்கள் என்று இன்னொரு புறமும் முரண்பட்டுக் கிடக்கின்ற இன்றைய கிறித்தவம் கூறுவதுபோன்றும் இஸ்லாம் கூறவில்லை.

இவ்விரண்டு போதனைகளுக்கு மாற்றமாக மனித இயல்பிற்கு முற்றிலும் ஏற்றதாகவும் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதற்கு ஒரே வழியாகவும் இருக்கின்ற போதனையையே இஸ்லாம் எடுத்துரைக்கின்றது.

அந்தப் போதனையாவது, நீ எவரையும் வலிய சென்று தாக்காதே; ஆனால் ஒருவர் உன்னைத் தாக்கும்போது, நீ அதனை முறியடிக்காமல் இருந்தால், அது குழப்பத்தை அதிகப்படுத்துவதற்கு காரணமாகவும் ஒழுங்கையும் அமைதியையும் அது கெடுத்து விடுவதாகவும் இருந்தால் நீ அவரது தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க வேண்டும்.

இந்தப் போதனையால் மட்டுமே உலகில் அமைதியும் சாந்தியும் ஏற்பட முடியும். இந்தப் போதனையின்படியே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செயலாற்றினார்கள். மக்காவில் அவர்கள் தொடர்ந்து துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந் தார்கள். அவர்கள் அவற்றை எதிர்த்துப் போரிடவில்லை.

ஆனால் அவர்கள் மக்காவிலிருந்து இடம்பெயர்ந்து மதீனாவிற்குச் சென்றபோது, பகைவர்கள் அங்கேயும் சென்று அவர்களை துன்புறுத்தினர். அப்போது இறைவன், பகைவர்கள் ஆக்கிரமிக்கும்

நடவடிக்கையில் ஈடுபட்டு இஸ்லாத்தை அழிக்க விரும்புகின்றனர். எனவே, உண்மையையும் நேர்மையையும் நிலைநாட்டுவதற்காக நீங்கள் அவர்களை எதிர்த்துப் போரிடுங்கள் என்று அவர்களுக்குக் கட்டளையிட்டான். திருக்குர்ஆனில் இது குறித்து பல்வேறு கட்டளைகள் அருளப்பட்டுள்ளன. அவை:

1. "எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ அவர்களுக்கு (போரிட) அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும் நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான்.

'எங்களின் இறைவன் அல்லாஹ்' என்று சொன்னதற்காக மட்டும், அநியாயமாக அவர்களின் வீடுகளிலிருந்து விரட்டப் படுபவர்களுக்கும் (போரிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது). மேலும் அல்லாஹ் சில மனிதர்களுக்கு மற்றவர்களைக் கொண்டு பதிலடி கொடுக்க வைக்கவில்லையாயின், கிறித்தவ கோவில்களும், யூத ஆலயங்களும், வணங்கும் இடங்களும், அல்லாஹ்வின் பெயர் அதிகமாக நினைவு கூறப்படும் பள்ளிவாயில்களும் தரைமட்டம் ஆக்கப்பட்டிருக்கும். மேலும் அல்லாஹ், அவனு(டைய மார்க்கத்து)க்கு உதவுபவர்களுக்கு நிச்சயமாக உதவுவான். நிச்சயமாக அல்லாஹ் சக்திவாய்ந்தவனும் மிகைத்தவனுமாவான்.

(நாட்டைத் துறந்து சென்ற முஸ்லிம்களாகிய) அவர்களுக்கு நாம் உலகில் வலிமையினை வழங்கினால், அவர்கள் தொழுகையினை நிலைநாட்டுவார்கள். ஸகாத்தும் கொடுப்பார்கள். நல்லவற்றைச் செய்யுமாறு ஏவி தீயவற்றைத் தடுப்பார்கள். எல்லாச் செயல்களின் முடிவும் அல்லாஹ்விடம் உள்ளது." ***(திருக்குர்ஆன் 22:40-42)***

போர் செய்ய முஸ்லிம்களுக்கு அனுமதியளித்து அருளப்பட்ட இந்த வசனங்களில், இஸ்லாமியப் போதனையின் அடிப்படையில், ஒரு சமுதாயம் நீண்ட காலம் வரை இன்னொரு சமுதாயத்தின் அநீதிகளுக்குட்பட்டிருந்து, அநீதி இழைக்கும் சமுதாயம் அந்தச் சமுதாயத்திற்கு எதிராகக் காரணமின்றிப் போர்ப் பிரகடனம் செய்து, அதன் மார்க்கத்தில் தலையிட்டால் மட்டுமே போர் செய்வதற்கு அனுமதிக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

அடுத்து அந்த வசனங்களில் அநீதி இழைக்கப்பட்ட அந்தச் சமுதாயத்தினர்க்கு வலிமை கிடைக்கும்போது, அவர்கள் மதச்சுதந்திரம் வழங்க வேண்டும்; இறைவன் அவர்களுக்கு வெற்றியினை வழங்கினால் அவர்கள் மற்றெல்லா மதங்களையும் பாதுகாத்து வர வேண்டும்; அவனது புனித இடங்களுக்குரிய மதிப்பையும் மரியாதையையும் தங்கள் கவனத்தில் கொண்டிருக்க வேண்டும். அவர்கள் அந்த வெற்றியினைத் தங்கள் வலிமைக்கும் மகிமைக்கும் மட்டும் உரியதாக்கிக் கொள்ளக் கூடாது. எனினும் ஏழைகளின் உயர்வுக்காகவும் நாட்டின் நன்மைக்காகவும் தீமை களையும் குழப்பங்களையும் ஒழித்துக் கட்டுவதற்காகவும் அவர்கள் தங்கள் வலிமைகளைப் பயன்படுத்த வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இக்கருத்துகளெல்லாம் அந்த வசனங்களில் மிகச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

போர் செய்வதற்கு முஸ்லிம்கள் அனுமதிக்கப்பட்டதற்கான காரணமும் அதில் கூறப்பட்டுள்ளது; இது இப்பொழுது அவர்கள் போர் செய்தால் அதற்குக் காரணம் போர் செய்ய வேண்டுமென்று அவர்கள் நிர்ப்பந்தப்படுத்தப்படுவதேயாகும். இல்லையென்றால், ஆக்கிரமிப்புப் போர் செய்வதற்கு இஸ்லாத்தில் அனுமதியில்லை.

அடுத்து, அந்த வசனங்களின் தொடக்கத்திலேயே முஸ்லிம் களுக்கு வெற்றி கிடைக்கும்; ஆனால் அவர்கள் அந்த வெற்றியைப் பெற்று நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் போது, தங்களுடைய நிலைகளையும் செல்வங்களையும் வளப்படுத்திக் கொள்வதற்குப் பதிலாக, ஏழைகளுக்கு உதவி செய்வதையும் அமைதியை நிலைநாட்டுவதையும் குழப்பத்தை அகற்றுவதையும் சமுதாயத்தையும் நாட்டையும் முன்னேறச் செய்வதற்கான முயற்சியினை மேற்கொள்வதையும் தங்கள் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

2. "உங்களிடம் போர் செய்வோருடன் நீங்களும் அல்லாஹ்வின் பாதையில் போர் செய்யுங்கள். ஆனால் வரம்பு மீறாதீர்கள். வரம்பு மீறுபவர்களை அல்லாஹ் ஒருபோதும் நேசிப்பதில்லை.

(வலிய வந்து போர் செய்கின்ற) அவர்களை எங்குக் கண்டாலும் கொன்று விடுங்கள். அவர்கள் உங்களை எங்கிருந்து வெளியேற்றினார்களோ அங்கிருந்து நீங்களும் அவர்களை வெளியேற்றி விடுங்கள். கலகம், கொலையை விட மிகவும் கொடியது. புனிதப் பள்ளியின் பக்கத்தில் அவர்கள் உங்களுடன் போர் செய்யாத வரை நீங்கள் அவருடன் அங்கு போர் செய்யாதீர்கள். (அங்கு) அவர்கள் உங்களுடன் போர் செய்தால் நீங்கள் அவர்களைக் கொன்று விடுங்கள். இந்த நிராகரிப்பாளர்களுக்கு இதுவே தண்டனையாகும்.

பின்னர் அவர்கள் விலகிக் கொண்டால், அல்லாஹ் நிச்சயமாக மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான்.

கலகம் இல்லாதொழிந்து மார்க்கமென்பது அல்லாஹ்வுக் குரியதாகவே ஆகும் வரையிலும் நீங்கள் அவர்களுடன் போர் செய்யுங்கள். பின்னர் அவர்கள் விலகிக் கொண்டால், அநீதியிழைப்பவர்களைத் தவிர வேறெவரின்மீதும் பகைமை பாராட்டாதீர்கள்.” *(திருக்குர்ஆன் 2:191-194)*

இவ்வசனங்களில் கூறப்பட்ட விளக்கங்களின்படி, முதலாவதாக, அல்லாஹ்விற்காக மட்டுமே போர் நடைபெற வேண்டும். அதாவது சுயநலத்திற்காகவோ பேராசைக்காகவோ நாட்டை வெற்றி கொள்ள வேண்டுமென்பதற்காகவோ தனது செல்வாக்கை அதிகரித்துக் கொள்வதற்காகவோ போர் செய்யக் கூடாது.

இரண்டாவதாக, ஆக்கிரமிப்புப் போர் செய்பவர்களுடன் மட்டுமே போர் செய்யலாம்.

மூன்றாவதாக, உங்களுடன் போர் செய்பவர்களுடன் மட்டுமே போர் செய்ய உங்களுக்கு அனுமதி உள்ளது. அதாவது, எவர்கள் முறைப்படி போர் வீரர்களாக இல்லாமலும் போரில் பங்கேற்காமலும் இருக்கின்றனரோ அவர்களைக் கொல்லுவதோ அவர்களுடன் போர் செய்வதோ கூடாது.

நான்காவதாக, முதலில் பகைவர்களே தாக்குதலைத் தொடுத்திருந்தாலுங்கூட நிலப்பரப்புகள், போர்க்கருவிகள் போன்றவற்றில் அவர்கள் அந்தப் போரை எந்த அளவிற்குக் கட்டுப்படுத்தியுள்ளார்களோ அந்த அளவிற்குள்ளேயே நின்று போரிட வேண்டுமே தவிர, எவ்வகையிலும் வரம்பு மீறக் கூடாது.

ஐந்தாவதாக, போர்ப்படையுடன் மட்டுமே போர் செய்ய வேண்டும். பகைமை கொண்டுள்ள சமுதாயத்தினர்களுள் ஆங்காங்கு தனிமையில் காணப்படுபவர்களை எதிர்ப்பது கூடாது.

ஆறாவதாக, போர் நடக்கும் போது மத வழிபாடுகளும் மார்க்கக் கடமைகளும் நிறைவேற்றப்படுவது தடைகள் ஏற்படாதவாறு கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். எந்த இடத்தில் போர் செய்தால் தங்களுடைய மத வழிபாடுகளுக்கு இடையூறு ஏற்படுமோ அந்த இடத்தில் பகைவர்கள் போர் செய்யவில்லை யானால் முஸ்லிம்களும் அந்த இடத்தில் போர் செய்யக் கூடாது.

ஏழாவதாக, பகைவர்கள் தாங்களாகவே மதவழிபாட்டு இடங்களைப் போர்க்களங்களாக்கிக் கொண்டால், வேறு வழியில்லாததால் நீங்கள் அங்கு போர் செய்யலாம். இல்லை யென்றால் நீங்கள் அவ்வாறு செய்யக் கூடாது.

இந்த வசனத்தில், வணங்குமிடங்களைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் போர் செய்யக் கூடாது என்றும் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது!

எனவே வணங்குமிடங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில்கூடப் போர் செய்யக் கூடாது என்றால், வணங்குமிடங்களைத் தாக்குவதோ அவற்றை தகர்த்து அழிப்பதோ அறவே கூடாது என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

ஆனால் பகைவர்கள் தாங்களாகவே வணங்குமிடங்களைப் போர் செய்வதற்கான கோட்டைகளாக்கிக் கொண்டால், அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அவர்களே பொறுப்பாளிகளாவர். முஸ்லிம்கள் எவ்வகையிலும் பொறுப்பாளிகளாகமாட்டார்கள்.

எட்டாவதாக, பகைவர்கள் மதவழிபாட்டிடங்களில் போரைத் தொடங்கியதன் பின்னர் அதன் பயங்கரமான விளைவுகளைப் புரிந்துகொண்டு அந்த வழிபாட்டிடங்களிலிருந்து விலகி, மற்றோரிடத்தைப் போர்க்களமாக்கிக் கொண்டால், பகைவர்கள் முதலில் இவ்விடங்களில்தான் போரைத் தொடுத்தனர் என்று காரணங்கூறி, முஸ்லிம்கள் அவர்களின் மதவழிபாட்டிடங் களுக்குப் பாதிப்பை உண்டாக்கக் கூடாது. மாறாக, உடனடியாக அவ்விடங்களுக்குரிய மதிப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டு தங்கள் தாக்குதலின் போக்கை அவ்விடங்களிலிருந்து மாற்றிக் கொள்ள வேண்டும்.

ஒன்பதாவதாக, மார்க்கத்தலையீட்டை ஒழித்துக்கட்டி, மார்க்க விவகாரம், அவரவருடைய சுயவிருப்பத்திற்குரியதாக ஆக்கப்பட்டு அரசியல் விவகாரங்களைப் போன்று மார்க்கத்தில் எந்தத் தலையீடும் செய்யப்படாதிருக்கும் வரை போரை நடத்த வேண்டும்.

இதனைப் பகைவர்கள் ஏற்றுப் பிரகடனப்படுத்தி இதன்படி செயலாற்றத் தொடங்கினால், முதலில் அவர்களே தாக்குதலைத் தொடுத்திருப்பினும் அவர்களுடன் போர் செய்யக் கூடாது.

3. நீர் நிராகரிப்பவர்களிடம் கூறுவீராக: அவர்கள் விலகிக் கொண்டால் முந்தைய குற்றங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படும். அவர்கள் மீண்டும் (அதே தீய செயல்களின் பக்கம்) திரும்புவார் களாயின் முன்னோர்களின் நடைமுறை சென்றுள்ளது. (அதாவது, முன்னுள்ளவர்கள் பெற்ற தண்டனையையே இவர்களும் பெறுவார்கள்).

மேலும் குழப்பம் அறவே இல்லாமலாகி மார்க்கமானது முற்றிலும் அல்லாஹ்வுக்கே உரியதாகும்வரை நீங்கள் (நிராகரிக்கின்ற) அவர்களுடன் போர் செய்து கொண்டேயிருங்கள். அவர்கள் விலகிக் கொள்வார்களாயின் நிச்சயமாக அல்லாஹ் அவர்களின் செயல்களை பார்த்துக் கொண்டிருக்கின்றான்.

மேலும் அவர்கள் புறக்கணித்து விட்டால் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குப் பாதுகாவலன் என்பதனை தெரிந்து கொள்ளுங்கள். அவன் மிகச் சிறந்த பாதுகாவலனும் மிகச் சிறந்த உதவியாளனுமாவான். *(திருக்குர்ஆன் 8:39-41)*

திருக்குர்ஆனின் இந்த வசனங்கள் அரபு நாட்டிலுள்ள நிராகரிப்பாளர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் முதன் முதலாக முறைப்படி நடைபெற்ற பத்ர் போர் பற்றி கூறப்பட்டதன் பின்னர் அருளப்பட்டவையாகும்.

அந்த நிராகரிப்பாளர்கள் எந்தக் காரணமுமின்றி முஸ்லிம்களைத் தாக்கினார்கள். மதீனாவின் சுற்றப்புறங்களில் குழப்பத்தை ஏற்படுத்தினார்கள். இந்தப் போரில் முஸ்லிம்கள் வெற்றி பெற்றார்கள். பகைவர்களுள் பெரும் பெரும் தலைவர்கள் கொல்லப்பட்டனர்.

இவ்வாறெல்லாம் நிகழ்ந்தும் கூட திருக்குர்ஆன், இப்பொழுது கூட நீங்கள் போர் செய்வதிலிருந்து விலகிக் கொண்டால் நாங்கள் போரை நிறுத்திக் கொள்வோம். வலுக் கட்டாயமாக மதமாற்றம் செய்யப்படக் கூடாது என்பதையும் மார்க்க விவகாரத்தில் எந்தத் தலையீடும் இருக்கக் கூடாது என்பதையும்தான் நாங்கள் விரும்புகின்றோம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவிக்குமாறு கூறியுள்ளது.

4. அவர்கள் சமானதாத்திற்கு இணங்கினால் (தூதரே!) நீரும் சமாதானத்திற்கு இணங்குவீராக. அல்லாஹ்விடமே நீர் நம்பிக்கை வைப்பீராக. (அவர்கள் பின்னர் எப்போதாவது ஏமாற்றி விடுவார்களோ என்று நீர் அஞ்சவேண்டாம்). நிச்சயமாக அவன் (பிரார்த்தனைகளை) மிகக் கேட்பவனும் நன்கு அறிபவனுமாவான்.

பின்னர் உம்மை ஏமாற்றிவிட அவர்கள் எண்ணினால் நிச்சயமாக அல்லாஹ் உமக்கு வெற்றியைத் தருவதற்குப் போதுமானவன் (என்பதை நீர் நினைவில் கொள்வீராக). அவனே தன் உதவியினைக் கொண்டும் நம்பிக்கைக் கொண்டவர்களைக் கொண்டும் உமக்கு உறுதியளித்தான். *(திருக்குர்ஆன் 8:62,63)*

இவ்வசனங்களில் பகைவர்கள் சமாதானம் செய்து கொள்ள முன் வந்தால் நிலைமை எவ்வாறிருப்பினும் முஸ்லிம்கள் அவர்களுடன் சமாதானம் செய்து கொள்ள வேண்டும்.

சமாதானத்திற்குரிய அடிப்படை நியதிகளை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளாமல் வெளிப்படையாக மட்டும் அவர்கள் ஏற்றுக் கொண்டிருந்தால் இதில் அவர்களின் எண்ணம் தீயதாகவே இருக்கிறது. பின்னர் அவர்கள் வலிமையைப் பெற்று மீண்டும் தாக்கவே விரும்புவார்கள் என்று நினைத்துக் கொண்டு சமாதானம் செய்து கொள்ள மறுக்கக் கூடாது எனக் கூறப்பட்டுள்ளது.

உண்மையிலேயே இந்த வசனங்களில் பின்னர் நிகழவிருந்த ஹுதைபியா சமாதான உடன்படிக்கை பற்றி முன்னறிவிக்கப் பட்டுள்ளது. அதாவது இனி வரப்போகின்ற ஒரு சந்தர்ப்பத்தில் பகைவர்கள் உங்களுடன் சமாதானம் செய்து கொள்ள விரும்பும் போது பகைவர்கள் இதில் அநீதியிழைத்துள்ளனர் என்றோ பின்னர் அவர்கள் இந்த உடன்படிக்கையை முறித்து விடுவார்கள் என்றோ கருதி முஸ்லிம்களே நீங்கள் அந்தச் சமாதானத்தை நிராகரித்து விடாதீர்கள். ஏனென்றால் இதுவே நன்மைக்குரியது. மேலும் நீங்கள் அவர்களின் சமாதானக் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதிலேயே உங்களுக்கு பயன் இருக்கிறது என்று கூறப்பட்டுள்ளது.

5. நம்பிக்கைக் கொண்டவர்களே! நீங்கள் இறைவழியில் போர் செய்வதற்காக புறப்படும் போது நீங்கள் உங்கள் பகைவர் களுக்கு சான்றுகளுடன் உண்மையை நிரூபித்து விட்டீர்களா என்பதையும் அவ்வாறு நிரூபிக்கப்பட்டதன் பின்னரும் அவர்கள் போர் தொடுக்கவே ஆயத்தமாக இருக்கின்றனரா என்பதையும் நீங்கள் நன்கு விசாரனை செய்து கொள்ளுங்கள். ஒரு குழுவினர் அல்லது இருவர் உங்களிடம் நான் உங்களுடன் சமாதானம் செய்து கொள்கிறேன் என்று கூறினால் நீ ஏமாற்றுகிறாய். உன்னிடமிருந்து நாங்கள் அமைதியாக இருக்க முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கில்லை என்று கூறாதீர்கள். நீங்கள் அவ்வாறு கூறினால் இறைவழியில் போர் செய்பவர்களாகமாட்டீர்கள். மாறாக, இவ்வுலக வாழ்க்கைக்கான பொருளை விரும்புபவர்களாவீர்கள்.

ஆகவே, நீங்கள் அவ்வாறு செய்யக் கூடாது. ஏனென்றால் இறைவனிடம் மார்க்கம் இருப்பதுபோன்று உலகப் பொருட்களும் மிக மிக அதிகமாகவே அவனிடம் இருக்கின்றன. அசல் குறிக்கோள் எவரையும் கொல்வதல்ல என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். நாளை அவன் நேர்வழியைப் பெறுவானா? பெற மாட்டானா? என்பது உங்களுக்குத் தெரியாது. நீங்களும் இதற்கு முன்னர் இஸ்லாமிய மார்க்கத்திலிருந்து விலகியே இருந்தீர்கள். ஆனால் இறைவன் உங்களுக்கு அருள் செய்து இந்த மார்க்கத்தை தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பினை உங்களுக்கு வழங்கினான். எனவே, அவசரப்பட்டு எவரையும் கொன்று விடாதீர்கள். எனினும் உண்மை நிலையைப் பற்றி விசாரனை செய்து கொள்ளுங்கள். நீங்கள் செய்து கொண்டிருப்பதை அல்லாஹ் நன்கு அறிபவனாவான் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

போர் தொடங்கி விட்டாலும்கூட பகைவர்களின் நோக்கம் ஆக்கிரமிப்பு போர் தொடுப்பதுதானா என்பதை நீங்கள் நன்கு விசாரனை செய்து கொள்ள வேண்டும். ஏனென்றால் ஆக்கிரமிப்பு போர் தொடுப்பது அவர்களது நோக்கமாக இல்லாமல் ஏதாவதொரு பயத்தின் காரணமாக அவர்கள் போர் ஆயத்தம் செய்து கொண்டிருக்கலாம்.

எனவே நீங்கள் முதலில் பகைவர்களின் நோக்கம் ஆக்கிரமிப்புப் போரை தொடுப்பதுதானா என்பதை நன்கு விசாரனை செய்து அறிந்து கொள்ளுங்கள். அதுவே அவர்களின் நோக்கம் என்று தெரிந்தால் நீங்கள் அவர்களை எதிர்க்கச் செல்லுங்கள்.

போர் தொடுப்பது எங்கள் நோக்கமல்ல. அச்சத்தின் காரணமாகவே நாங்கள் போருக்கான ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறோம் என்று அவர்கள் கூறினால் உங்களுடைய போர் ஆயத்தம், நீங்கள் எங்களைத் தாக்க விரும்புகிறீர்கள் என்பதையே தெரிவிக்கிறது; எனவே, உங்களிடமிருந்து எவ்வித தீங்கும் எங்களுக்கு ஏற்படாது பாதுகாப்பாக இருப்போம் என்று நாங்கள் எவ்வாறு கருத முடியும் என்று நீங்கள் கூறக்கூடாது.

எனினும் நீங்கள் அவர்கள் கூறுவதை ஏற்றுக் கொண்டு முதலில் அவர்களின் நோக்கம் ஆக்கிரமிப்பு செய்வதாகவே இருந்திருப்பினும் பின்னர் அதில் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம் என்று நீங்கள் கருத வேண்டும். உள்ளத்தில் மாற்றம் ஏற்படுகிறது என்பதற்கு நீங்களே உயிருள்ள சாட்சிகளாக

இருக்கின்றீர்கள். நீங்கள் முதலில் இஸ்லாத்தின் பகைவர்களாக இருந்தீர்கள். ஆனால் இப்பொழுது நீங்கள் இஸ்லாத்தின் வீரர்களாகத் திகழ்கின்றீர்கள்.

6. அடுத்து பகைவர்களுடன் உடன்படிக்கை செய்து கொள்வது பற்றி இறைவன் கீழ்க்காணுமாறு கூறுகின்றான்:

“ஆயினும் இணை வைப்பவர்களுள் உங்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டு பின்னர் எவ்வழியிலும் உங்களுடனுள்ள உடன்படிக்கையினை முறிக்காமலும் உங்களுக்கு எதிராக எவருக்கும் உதவி செய்யாமலும் இருப்பவர்களின் உடன்படிக்கையினை நீங்கள் அவர்களுடைய (உடன்படிக்கைக்குரிய) கால எல்லை வரை முழுமையாக நிறைவேற்றுங்கள். (அவர்களை நாட்டிலிருந்து வெளியேற்றாதீர்கள்). நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவர்களை நேசிக்கின்றான்.” (9:4)

7. போரில் ஈடுபட்டிருக்கும் பகைவர்களுள் இஸ்லாத்தின் உண்மையை தெரிந்து கொள்ள விரும்புபவரைப் பற்றி இறைவன் பின்வருமாறு கூறுகின்றான்:

“(போரில் ஈடுபட்ட) இணை வைப்பவர்களுள் எவராவது உம்மிடம் அடைக்கலம் கோரினால் அவர் அல்லாஹ்வின் வசனமாகிய திருக்குர்ஆனின் கருத்துக்களை கேட்கும் வரை நீர் அவர்களுக்கு அடைக்கலம் வழங்குவீராக. பின்னர் அவரை அவருடைய பாதுகாப்பான இடத்தில் சேர்த்து விடுவீராக”.(9:6)

8. போர்க் கைதிகள் பற்றி இறைவன் பின்வருமாறு கூறுகின்றான்:

“நாட்டில் (முறையான) போர் செய்து இரத்தம் சிந்தாதவரை சிறைப்பிடிப்பதென்பது எந்த நபிக்கும் ஏற்றதல்ல.”(8:68)

போர் நிகழாத காலங்களில் கூட பகைவர்களின் ஆட்களை சிறைப்பிடிக்கும் வழக்கம் இஸ்லாம் தோன்றிய அந்தக் காலம் வரையில் மட்டுமின்றி அதற்குப் பிறகு பல நூற்றாண்டுகள் வரை உலகில் இருந்து வந்தது. இந்த வழக்கத்தை இஸ்லாம் விரும்பாமல் இதனைத் தடை செய்து விட்டது. போர்க்களத்தில் கலந்து கொண்டு போர் செய்த பின்னர் சிறைப்பிடிக்கப்படுபவர்களே போர்க் கைதிகளாவர் என்று இஸ்லாம் கூறுகின்றது.

9. அடுத்து அந்தக் கைதிகளைப் பற்றி இறைவன், “சிறைப்பிடிக்கப்பட்ட போர்க்கைதிகள் மீது நீங்கள் கருணை காட்டி அல்லது போர் ஈட்டுத் தொகை பெற்று அவர்களை விடுதலை செய்து விடுங்கள்.” (47:5) என்று கூறுகின்றான்.

10. போர் ஈட்டுத்தொகை கொடுக்க முடியாத போர்க் கைதிகளைப் பற்றி அல்லது எந்தக் கைதிகளின் உறவினர்கள் அவர்களின் சொத்துக்களை கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காக அவர்கள் கைதிகளாகவே விரும்புகிறார்களோ அந்தக் கைதிகளைப் பற்றி இறைவன்:

“உங்கள் (போர்க்கைதிகளாகிய) அடிமைகளுள் விடுதலை பத்திரத்தை விரும்புபவர்களுக்கு நீங்கள் ஏதேனும் நன்மையினைக் கண்டால் (விடுதலைப்பத்திரத்தை) எழுதிக் கொடுத்து விடுங்கள். அல்லாஹ் உங்களுக்கு வழங்கிய செல்வத்திலிருந்து அவர்களுக்கு சிறிது வழங்(கி விடுதலை அடைவதற்கான வாய்ப்பை உண்டாக்) குங்கள்” (24:34) என்று கூறுகின்றான்.

இதன் கருத்தாவது, உங்களுடைய போர்க் கைதிகளுள் எவர்கள்மீது நீங்கள் கருணை காட்டி அவர்களை விட முடியாமல் இருக்கின்றீர்களோ மேலும் அவர்களின் சமுதாயத்தினர்கள் அவர்களுக்கான போர் ஈட்டுத் தொகையைக் கொடுத்து அவர்களை விடுதலையடையச் செய்யாமல் இருக்கின்றார்களோ அவர்கள் உங்களிடம் நீங்கள் எங்களுக்கு விடுதலையளியுங்கள்; நாங்கள் எங்களுடைய தொழில் திறமையினால் பணம் சம்பாதித்து எங்களுக்குரிய அபராதத் தொகையினைச் செலுத்தி விடுவோம் என்று அவர்கள் கோரினால், அதே வேளையில் அவர்கள் சுதந்திரமாகச் சம்பாதிக்கத் தகுதியுள்ளவர்களாகவும் இருந்தால், நீங்கள் அவர்களுக்கு விடுதலை கொடுத்து விட வேண்டும். இதுமட்டுமல்லாமல் அவர்களின் இந்த முயற்சியில் நீங்களும் பங்கேற்க வேண்டும்.

இறைவன் உங்களுக்கு வழங்கியதிலிருந்து ஒரு சிறு தொகையினை அவர்களின் விடுதலைக்காக செலவு செய்து விடுங்கள். அதாவது, போர்ச்செலவில் அவர்களுக்கான பங்கில் சிறியதொரு பகுதியை அவர்களின் எஜமானர்கள் விட்டுவிட வேண்டும். அல்லது பல முஸ்லிம்கள் ஒன்றுசேர்ந்து அந்தக் கைதிகளுக்கு பண உதவி செய்து அவர்களை விடுதலையடையச் செய்ய வேண்டும்.

மேற்கூறப்பட்ட அந்த நிலைமைகளிலும் அந்த விதிமுறைகளுக் கேற்பவுமே இஸ்லாம் போர் செய்ய அனுமதி வழங்குகிறது.

அடுத்து, திருக்குர்ஆனின் மேற்கூறப்பெற்ற வசனங்களின் அடிப்படையிலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு மேலும் சில போதனைகளைச் செய்துள்ளார்கள். அவை:

1. நிலைமை எவ்வாறிருப்பினும் போரில் கொல்லப் பட்டவர்களை இழிவுபடுத்துவதற்கோ அவர்களின் உறுப்புகளைத் துண்டிப்பதற்கோ முஸ்லிம்களுக்கு அனுமதியில்லை.
   *(முஸ்லிம் பாகம் 2 - கிதாபுல் ஜிஹாத்)*
2. முஸ்லிம்கள் ஒருபோதும் போரில் ஏமாற்றக் கூடாது. *(முஸ்லிம்)*
3. எந்தக் குழந்தையையும் எந்தப் பெண்ணையும் கொல்லக் கூடாது. *(முஸ்லிம் பாகம் 2 - கிதாபுல் ஜிஹாத்)*
4. பாதிரிமார்கள் மதக்குருக்கள் ஏனைய மதத் தலைவர்கள் ஆகியவர் களைக் கொல்லக்கூடாது. *(தஹாவி)*
5. முதியோர்களையும் பெண்களையும் கொல்லக் கூடாது. முஸ்லிம்கள் சமாதானம் செய்து கொள்வதையும் பேருதவி செய்வதையும் எப்போதும் கவனத்திற் கொண்டிருக்க வேண்டும். *(அபூதாவூது பாகம் 1 - கிதாபுல் ஜிஹாது)*
6. முஸ்லிம்கள் போர் செய்ய சென்றிருக்கும்போது தங்கள் பகைவர்களின் நாட்டில் அச்சத்தை ஏற்படுத்தவும் கூடாது. பொதுமக்களிடம் கடினமாக நடந்து கொள்ளவும் கூடாது.
   *(முஸ்லிம் - கிதாபுல் ஜிஹாது)*
7. போருக்குச் செல்லும்போது மக்களுக்கு இடையூறு ஏற்படும் இடங்களில் முகாமிடக் கூடாது. மக்களுக்கு சிரமம் ஏற்படும் வகையில் போர்ப்படையினர்கள் சாலையில் செல்லக் கூடாது.
8. போரில் பகைவர்களின் முகத்தில் காயத்தை ஏற்படுத்தக் கூடாது. *(புகாரி, முஸ்லிம்)*
9. போர் நடக்கும் காலத்தில் பகைவர்களுக்கு மிகக் குறைந்த அளவு பாதிப்பு ஏற்படுமாறு முயற்சி செய்தல் வேண்டும். *(அபூதாவூது)*
10. சிறைப்பிடிக்கப்படும் போர்க் கைதிகளின் நெருங்கிய உறவினர்கள் ஒருவரை மற்றவரை விட்டுப் பிரித்து வைக்கக் கூடாது. *(அபூதாவூது பாகம் 2 - கிதாபுல் ஜிஹாது)*
11. தங்கள் நலனை விடவும் மேலாக கைதிகளின் நலனை கவனத்திற் கொள்ள வேண்டும்.
    *(திர்மதி - அப்வாபுஸ் ஸய்ர்)*
12. வெளிநாட்டுத் தூதர்களுக்கு மதிப்பும் மரியாதையும் அளிக்க வேண்டும். அவர்கள் தவறிழைத்தாலும்கூட கண்டும் காணாதது போன்று அவர்களிடம் நடந்து கொள்ள வேண்டும்.
    (அபூதாவூது - கிதாபுல் ஜிஹாது)
13. எந்தவொரு முஸ்லிமாவது ஒரு கைதியிடம் கடினமாக நடந்து கொண்டால் ஈட்டுத்தொகை எதுவுமின்றி அந்தக் கைதியை விடுதலை செய்து விட வேண்டும்.
14. கைதியின் பொறுப்பை ஏற்ற முஸ்லிம் தாம் உண்ணும் உணவு போன்றதையும் தாம் அணியும் உடைகள் போன்றவற்றையுமே அந்தக் கைதிக்கும் வழங்க வேண்டும். *(புகாரி)*

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்தக் கட்டளை களை மிகவும் வலியுறுத்திக் கூறி விட்டு இந்தக் கட்டளைகளை மீறி நடப்பவர் தன்னலத்திற்காக போர் செய்பவரேயாவார். அவர் இறைவனுக்காக போர் செய்பவராகமாட்டார் என்றார்கள். *(அபூதாவூது பாகம் 1 - கிதாபுல் ஜிஹாது)*

இந்தக் கட்டளைகளின் அடிப்படையிலேயே ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் பகைவர்களின் கட்டடங்களை இடித்துத் தகர்க்கக்கூடாதென்றும் கனி கொடுக்கும் மரங்களை வெட்டக் கூடாதென்றும் கட்டளையிட்டுள்ளார்கள். (முஅத்தா இமாம் மாலிக்)

இஸ்லாம் போரைத் தடுப்பதற்காக மிகச் சிறந்த செயல் திட்டங்களை மேற்கொண்டுள்ளது என்பதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகச் சிறந்த முறையில் அந்தப் போதனைகளை செயல்படுத்திக் காட்டி முஸ்லிம்களை அவற்றின் படியே செயலாற்ற வைத்தார்கள் என்பதும் மேற்கூறப்பட்ட கட்டளைகளிலிருந்து நன்கு புலனாகின்றன.

போர் பற்றிய மூஸா நபியின் போதனை நியாயமானதென்று இக்காலத்தில் எவராலும் கூற முடியாது. இக்காலத்தில் அது செயல்முறைக்கு ஏற்றதும் அல்ல. இவ்வாறே, ஈஸா நபியின் போதனையும் இக்காலத்தில் செயல்முறைக்கு ஏற்றதன்று. அவர்களின் போதனையின்படி கிறிஸ்தவ உலகம் எப்போதுமே செயலாற்றியதில்லை.

அதே வேளையில் இஸ்லாத்தின் போதனை மட்டுமே செயல்முறைக்கு ஏற்றது. அவை போதிக்கப்பட்டதுமல்லாமல் அவற்றை போதித்தவராலேயே நடைமுறைப்படுத்தியும் காட்டப் பட்டது. இதன்படி செயலாற்றப்பட்டால் மட்டுமே உலகில் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்ட முடியும்.

இக்காலத்தில் காந்திஜி போர்க்காலத்திலுங்கூட போர் செய்யக் கூடாது என்ற கருத்தினை உலகின் முன் வைத்தார். ஆனால், அவர் செய்த போதனையின்படி உலகில் ஒருபோதும் செயலாற்றப்படவில்லை. அதன்படி செயலாற்றப்பட்டிருந்தால் அதனால் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளையும் நம்மால் கணித்திருக்க முடியும்.

காந்திஜியின் வாழ்நாளிலேயே காங்கிரஸுக்கு ஆட்சி கிடைத்து விட்டது. ஆனால் காங்கிரஸ் அரசு போர்ப்படைகளை கலைத்து விடவில்லை. மாறாக, பிரிட்டிஷ் அரசால் பணியிலிருந்து அகற்றப்பட்ட (இந்திய நாட்டுப் படையின்) அதிகாரிகளை மீண்டும் போர்ப்படையின் பணியில் அமர்த்த திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது. *(இந்நூல் 1947ல் எழுதப்பட்டது)*

இந்தியாவில் காங்கிரஸ் அரசு ஏற்பட்டு ஏழு நாட்களுக்குள் வஸீரிஸ்தான் பகுதியில் நிராயுதபாணிகளாக இருந்த மக்கள்மீது விமானங்கள் மூலம் சரமாரியாகக் குண்டுகள் போடப்பட்டன.

காந்திஜியே இத்தகு அநீதியிழைத்தவர்களுக்கு ஆதரவு தெரிவித்து அவர்களை விட்டுவிட வேண்டும் என்று தொடர்ந்து அரசை வலியுறுத்திக் கொண்டிருந்தார்.

இதிலிருந்து நிரூபணமாவது என்னவென்றால் அவரது போதனையின்படி அவராலும், அவரைப் பின்பற்றியவர்களாலும் செயலாற்ற முடியவில்லை. சமுதாயங்களுக்கிடையிலும் நாடுகளுக் கிடையிலும் ஏற்படுகின்ற போர்களில் பகுத்தறிவுக்குப் பொருத்தமான எந்தப் போதனையின்படி வெற்றிகரமாக செயலாற்ற முடியுமோ அந்தப் போதனையை அவரால் உலகிற்கு சமர்ப்பிக்க இயலவில்லை.

வாயால் அந்தப் போதனையைக் கூறிக் கொண்டு அதற்கு மாற்றமாக செயலாற்றியதானது அந்தப் போதனையின்படி செயலாற்ற இயலாது என்பதையே காட்டுகிறது.

எனவே, இக்காலம் வரை உலகிற்கு கிடைத்த அனுபவத்தாலும் மனிதனது பகுத்தறிவிற்கு எட்டிய வரையிலும் சிந்தித்துப் பார்க்கும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தேர்ந்தெடுத்து உலகிற்கு வழங்கிய போதனை மட்டுமே சரியானது என்று திட்டவட்டமாகத் தெரிகின்றது.

***அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லய்த்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக்க ஹமீதும் மஜீத்.***

## அகழ்ப் போருக்குப் பின்னர் நிராகரிப்பாளர்கள் மீண்டும் முஸ்லிம்களைத் தாக்குதல்

அகழ்ப்போரில் தோல்வியடைந்து திரும்பிய நிராகரிப் பாளர்கள் தளர்வடைந்து மனம் குன்றி விட்டனர் என்றாலும் தாங்கள் பெரும்பான்மையினர் என்ற கர்வமும் முஸ்லிம்கள் சிறுபான்மை யினர் என்ற எண்ணமும் அவர்களிடம் எஞ்சியிருந்தன. ஆங்காங்கு காணப்படும் முஸ்லிம்களை தனித்தனியாகப் பிடித்து கொன்று விடுதவன் மூலம் தங்களுக்கு ஏற்பட்ட இழிவிற்குப் பழிவாங்கிக் கொள்ளலாம் என்று அவர்கள் கருதினர்.

அகழ்ப்போரில் தோல்வியடைந்து சிறிது காலத்திற்குப் பிறகு மதீனாவிற்குச் சுற்றுப் புறங்களிலுள்ள நிராகரிப்பாளர்களின் கோத்திரங்கள் முஸ்லிம்களைத் திடீர் திடீரென தாக்கத் தொடங்கி விட்டனர்.

ஃபஸாரா இனத்தைச் சார்ந்த சில ஒட்டகச் சவாரிகள் மதீனாவிற்குப் பக்கதில் திடீர் தாக்குதல் நடத்தி அங்கு முஸ்லிம்களின் ஒட்டகங்களை மேய்த்துக் கொண்டிருந்தவரைக் கொன்று விட்டு அவருடைய மனைவியையும் ஒட்டகங்களையும் கடத்திக் கொண்டு ஓடி விட்டனர். கடத்தப்பட்ட பெண் எப்படியோ அவர்களிடமிருந்து தப்பித்துக் கொண்டாள். ஆனால், ஒட்டக மந்தையின் ஒரு பிரிவைத் திருடிக் கொண்டு ஓடுவதில் அந்தப் பகைவர்கள் வெற்றி பெற்று விட்டனர்.

இந்த நிகழ்ச்சி நடந்து ஒரு மாத்திற்குப் பிறகு மதீனாவிற்கு வடக்கில் கத்ஃபான் இனத்தைச் சார்ந்தவர்கள் முஸ்லிம்களின் ஒட்டக மந்தைகளை கடத்த முயன்றனர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) என்பவரின் தலைமையில் பத்து குதிரை வீரர்களை அங்குள்ள நிலைமைகளை தெரிந்து கொள்வதற்காகவும் அந்த மந்தைகளை பாதுகாப்பதற்காகவும் அனுப்பி வைத்தார்கள்.

ஆனால் அந்தப் பகைவர்கள் அப்போதிருந்த சூழ்நிலையை பயன்படுத்தி அவர்களைக் கொன்று விட்டார்கள். முஹம்மது பின் மஸ்லமா என்பவரையும் தாங்கள் கொன்று விட்டதாக நினைத்து தூக்கி எறிந்து விட்டுச் சென்று விட்டனர். ஆனால், அவர் அப்போது மயக்கமடைந்திருந்தார். அந்தப் பகைவர்கள் சென்ற பிறகு அவருக்கு மயக்கம் தெளிந்தது. பின்னர் அவர் மதீனாவிற்கு வந்து அங்கு நிகழ்ந்தவற்றை விவரித்து என்னுடன் வந்தவர்கள் எல்லாரும் கொல்லப்பட்டு விட்டனர். நான் மட்டும் பிழைத்துக் கொண்டேன் என்றார்.

இதனை அடுத்து சில நாட்களுக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ரோமானிய அரசுக்கு அனுப்பிய ஒரு தூதரை ஜுர்ஹம் இனத்தவர் தாக்கி அவரது உடைமைகளை கொள்ளையடித்து விட்டனர்.

அடுத்து, ஒரு மாதத்திற்குப் பிறகு ஃபஸாரா இனத்தினர் முஸ்லிம்களின் ஒரு வாணிபக் குழுவினரை தாக்கி அவர்களின் பொருட்களையெல்லாம் கொள்ளையடித்து விட்டனர்.

இந்தத் தாக்குதல்கள் மார்க்கப் பகைமையினால் ஏற்பட்டவை யாகத் தெரியவில்லை. ஏனென்றால், பனூ ஃபஸாரா இனத்தினர் வழிப்பறிக் கொள்ளையர்களாக இருந்தனர். இவர்கள் மற்ற சமுதாயத்தவர்களிடம் கொள்ளையடித்து அவர்களை கொலை செய்து வந்தனர். அகழ்ப் போர் நிகழ்வதற்குக் காரணமாக இருந்த கைபர் பகுதியிலிருந்த யூதர்கள் தாங்கள் அடைந்த தோல்விக்கு பழிவாங்குவதற்காக சுற்றுப் புறங்களிலுள்ள கோத்திரங்களை முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டிக் கொண்டிருந்தனர். மேலும் அவர்கள் ரோமானிய அரசின் எல்லைப் பகுதியிலுள்ள அதிகாரி களையும் கோத்திரங்களையும் முஸ்லிம்களுக்கெதிராக தூண்டிக் கொண்டிருந்தனர்.

அரபு நாட்டின் நிராகரிப்பாளருக்கு மதீனாவைத் தாக்குதவற்கு தைரியம் இல்லையென்றாலும் அவர்கள் யூதர்களுடன் சேர்ந்து அரபு நாடு முழுவதிலும் முஸ்லிம்களுக்கு தொல்லைகள் கொடுத்து கொள்ளை கொலைகளில் ஈடுபட்டு வந்தனர்.

ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த நேரம் வரை நிராகரிப்பாளர்களுடன் இறுதிப் போர் செய்வதற்கு முடிவு செய்யவில்லை. இதற்குக் காரணம் இந்தக் குழப்பம் சுமூகமாக

முடிவடைந்து விட்டால் நன்றாக இருக்குமே என்று நினைத்து அவ்வாறு அது முடிவடைவதையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

## ஆயிரத்து ஐநூறு நபித்தோழர்களுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவுக்குப் பயணம்

இந்தக் காலக்கட்டத்தில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண்ட ஒரு கனவு பற்றி திருக்குர்ஆனில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

'அல்லாஹ் விரும்பினால், நிச்சயமாக நீங்கள் அமைதி யுடனும் (உங்களுள் சிலர்) தங்கள் தலைகளைச் சிரைத்துக் கொண்டவர்களாகவும் (மற்றுஞ்சிலர் தங்கள்) முடிகளைத் கத்தரித்துக் கொண்டவர்களாகவும் (காபா என்னும்) புனிதப் பள்ளியில் நுழைவீர்கள். நீங்கள் எவருக்கும் அஞ்சமாட்டீர்கள். ஆனால் நீங்கள் அறியாததை அவன் அறிந்துள்ளான்'. (48:28) அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புனிதப் பள்ளியில் நுழைவதாகக் கண்ட கனவு நிறைவேறுவதற்கு முன்னர் இன்னொரு வெற்றியினையும் இறைவன் வழங்கவிருக்கிறான்.

அவர்கள் கண்ட கனவில், சுமூகமாகவும் சமாதானத்துடனும் மக்கா வெற்றி கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தக் கனவிற்கு விளக்கம் அளிக்கையில், அநேகமாக நாம் மக்காவுக்குச் சென்று காபாவைச் சுற்றி வரும் வழிபாட்டைச் செய்ய வேண்டும் என்று இறைவன் கட்டளையிடுகின்றான் என்றே கருதினார்கள்.

கண்ட கனவிற்குரிய பொருளைப் புரிந்து கொள்வதில் ஏற்பட்ட இந்தத் தவற்றினால் இவ்வகையான அடிப்படை அமைய வேண்டியிருந்ததால், இறைவன் அவர்களுக்கு இந்தத் தவற்றைப் பற்றி அறிவிக்கவில்லை.

எனவே அவர்கள் தங்கள் தோழர்களிடம் இதனைப் பற்றி அறிவித்து, அவர்களையும் தங்களுடன் வருமாறு அழைத்து, நாம் காபாவைச் சுற்றி வரும் எண்ணத்துடன் தான் செல்கின்றோம்; அங்குச் சென்று பகைவர்களின் அதிருப்திக்குக் காரணமாகும் எத்தகு எதிர்ப்பும் ஆர்ப்பாட்டமும் செய்தல் கூடாது என்று கூறினார்கள்.

இதன் அடிப்படையில், கி.பி. 628 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களின் இறுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆயிரத்து ஐநூறு தோழர்களுடன் மக்காவுக்குப் புறப்பட்டார்கள்.

*(அகழ்ப்போர் நிகழ்ந்து ஓராண்டுக்குப் பிறகு மொத்தம் ஆயிரத்து ஐநூறு பேர் அவர்களுடன் சென்றதானது, இதற்கு ஓராண்டிற்கு முன்னர் அகழ்ப்போரின்போது, இந்த எண்ணிக்கையை விடக் குறைவான போர் வீரர்களே இருந்திருப்பார்கள் என்று அறிவிக்கிறது. ஏனென்றால் ஓராண்டில் முஸ்லிம்கள் அதிகரித் திருப்பார்களே தவிர குறைந்திருக்கமாட்டார்கள். எனவே அகழ்ப்போரில் ஈடுபட்டுள்ள முஸ்லிம்களின் எண்ணிக்கை மூவாயிரம் என்று சில வரலாற்றாசிரியர்கள் எழுதியிருப்பது தவறேயாகும். அந்தப் போரின் போது ஆயிரத்து இருநூறு முஸ்லிம் போர் வீரர்களே இருந்தனர் என்பதே சரியானதாகும்.)*

பகைவர்கள் முஸ்லிம்களுக்குத் தீங்கிழைக்க முற்பட்டால், அது குறித்து முஸ்லிம்களுக்குத் தகுந்த நேரத்தில் தகவல் தருவதற்காக, ஹஜ் குழுவினர்களுக்கு முன்பாகச் சற்றுத் தொலைவில் இருபது பேர் குதிரைகளில் சென்றனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் தோழர்களுடன் மக்காவிற்குச் சென்று ஹஜ் செய்யப்போவது பற்றிய தகவல் மக்கத்தினர்களுக்குக் கிடைத்தது. மக்காவிற்குச் சென்று காபாவைச் சுற்றி வர விரும்பும் எவரையும் தடை செய்யக்கூடாது என்பது மக்கத்தினர்களின் மதக்கோட்பாடாக இருந்தது. எனவே முஸ்லிம்கள் காபாவைச் சுற்றி வருவதற்காக மட்டுமே மக்காவிற்கு வந்துள்ளனர் என்பதையும் எந்த வகையிலும் எதிர்ப்புத் தெரிவிப்பதற் காகவோ சண்டையிடுவதற்காகவோ தாங்கள் வரவில்லை என்பதையும் அவர்களிடம் தெளிவாக அறிவித்து விட்டார்கள்.

இவ்வாறெல்லாம் இருந்தும்கூட மக்கத்தினர்கள், மக்காவை ஒரு கோட்டை போன்று ஆக்கி விட்டார்கள். மக்காவின் சுற்றுப் புறங்களில் வாழ்ந்து வந்த கோத்திரங்களையும் தங்கள் உதவிக்கு

அழைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவை நெருங்கியதும், மக்கத்துக் குரைஷியர்கள் புலித் தோல்களை அணிந்து, தங்களுடைய மனைவியர்களையும் மக்களையும் அழைத்துக் கொண்டு, முஸ்லிம்கள் தங்களைக் கடந்து மக்காவிற்குள் செல்ல அனுமதிக்கக் கூடாது என்று சபதம் செய்து கொண்டுள்ளார்கள் என்ற செய்தி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கிடைத்தது.

அரபு சமுதாயத்தினர் மரணத்தைச் சந்திக்க முடிவு செய்து விட்டால், அவர்களின் தலைவர்கள் புலித்தோல்களை அணிந்து கொள்வார்கள். இவ்வாறு செய்வது அவர்களின் மரபு. இவ்வாறு செய்தவன் பொருள், இது சிந்தித்துச் செயல்படுவதற்கான நேரம் அன்று. நாங்கள் இப்பொழுது வீரத்தையும்துணிவையும் காட்டி எங்கள் உயிரை விட ஆயத்தமாகி விட்டோம் என்பதாகும்.

அந்தச் செய்தி கிடைத்து சிறிது நேரத்திலேயே மக்கத்துப் படைகளின் முன்னணிப் படைகள் முஸ்லிம்களுக்கு முன் வந்து நின்றன. இப்பொழுது வாள் வலிமையினால் பகைவர்களைத் தோற்கடித்தால் மட்டுமே அந்த இடத்திலிருந்து முன்னேறிச் செல்ல முடியும் என்ற நிலை ஏற்பட்டது.

எப்படியிருந்தபோதிலும் தாங்கள் போர் செய்யக் கூடாதென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முடிவு செய்திருந்ததால், காட்டின் வழிகளைத் தெரிந்திருந்த அறிவுள்ள ஒரு வழிகாட்டி ஒருவரைத் தேர்ந்தெடுத்து, முஸ்லிம்களைக் காட்டின் வழியாக அழைத்துச் சென்று மக்காவரை கொண்டு செல்லுமாறு அவரைப் பணித்தார்கள்.

இந்த வழிகாட்டி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் அவர்களின் தோழர்களையும் அழைத்துக் கொண்டு, மக்காவிற்குப் பக்கத்திலுள்ள ஹுதைபிய்யா என்னும் இடத்திற்கு வந்து சேர்ந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒட்டகம் அங்கு நின்று விட்டது மட்டுமல்லாமல் மேலும் முன்னேறிச் செல்ல மறுத்து விட்டது. அப்பொழுது நபித்தோழர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களின் ஒட்டகம் களைத்து விட்டது. தாங்கள் இதற்குப் பதிலாக மற்றோர் ஒட்டகத்தின் மேல் அமர்ந்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இல்லை; இது களைத்து விடவில்லை. மாறாக நாம் இங்கேயே தங்க வேண்டும் என்பதே இறைவனுடைய விருப்பமாகத் தெரிகிறது. நான் இங்கேயே தங்கி, மக்கத்தினர்கள் நம்மை ஹஜ் செய்ய அனுமதிக்குமாறு எல்லா முறைகளிலும் நான் அவர்களைக் கேட்டுக் கொள்வேன். அவர்கள் ஏதேனும் நிபந்தனையை விதித்தாலும் நான் அதனை ஏற்றுக் கொள்வேன் என்றார்கள்.

அந்த நேரம் வரை மக்கத்தினர்களின் படை மக்காவிலிருந்து தொலைவிலுள்ள ஓரிடத்தில் நின்றுகொண்டு, முஸ்லிம்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விரும்பியிருந்தால் எந்தத் தாக்குதலும் நடத்தாமல் மக்காவிற்குள் நுழைந்திருக்க முடியும்.

ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மக்கத்தினர்களின் அனுமதியுடனேயே காபாவைச் சுற்றி வர வேண்டும் என்றும் மக்கத்தினர்கள் தாங்களாகவே போர்த் தொடுத்து, நம்மைக் கட்டாயப்படுத்தினால் மட்டுமே நாம் போர் செய்ய வேண்டும் என்றும் ஏற்கனவே முடிவு செய்திருந்தார்கள்.

இதனால்தான் மக்காவிற்குச் செல்லும் சாலை திறந்திருந்தும் கூட ஹுதைபிய்யா என்னும் இடத்தில் அவர்கள் முகாம் போட்டு விட்டார்கள். அவர்கள் ஹுதைபிய்யாவில் முகாம் போட்டுள்ளார்கள் என்ற செய்தி சிறிது நேரத்திலேயே மக்கத்துப் படையினருக்குக் கிடைத்தது. உடனே அவர்கள் விரைவாகப் பின்னுக்குச் சென்று மக்காவிற்குப் பக்கத்தில் தங்கள் படைப்பிரிவுகளை நிறுத்தினர்.

முதலாவதாகப் பதீல் என்னும் பெயரைக் கொண்ட தலைவர் ஒருவர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்துவற்காக அனுப்பப்பட்டார். அவர் அவர்களிடம் வந்தபோது, நான் தவாஃப் செய்வதற்காக (காபாவைச் சுற்றி வருவதற்காக) மட்டுமே வந்துள்ளேன். ஆனால் மக்கத்தினர்கள் எங்களை போருக்குக் கட்டாயப்படுத்தினால் நாங்கள் போர் செய்ய வேண்டியது வரும் என்று கூறினார்கள்.

இதன் பின்னர் மக்காவின் போர்த்தளபதி அபூஸுஃப்யானின் மருமகன் உர்வா என்பவர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து எந்தவித மரியாதையுமின்றி, தாங்கள் மிகக் கெட்டவர்களாகிய இந்தக் கூட்டத்தனரைத் தங்களுடன் அழைத்து வந்துள்ளீர்கள். மக்கத்தினர்கள் இவர்களை எந்த வகையிலும் தங்கள் நகரத்திற்குள் நுழையவிடமாட்டார்கள் என்றார்.

இவ்வாறாக ஒருவர் பின் ஒருவராகத் தூதர்கள் வந்து கொண்டிருந்தனர். இறுதியில் மக்கத்தினர்கள், என்ன விளைவு ஏற்பட்டாலும் சரியே, இந்த ஆண்டில் நாங்கள் உங்களைத் தவாஃப் செய்ய விடமாட்டோம். ஏனென்றால் இதில் எங்களுக்கு இழிவு ஏற்படும். ஆனால் தாங்கள் அடுத்த ஆண்டில் வந்தால் நாங்கள் உங்களுக்கு அனுமதி வழங்குவோம் என்று தூதுச் செய்தி அனுப்பினர்.

மக்காவின் சுற்றுப்புறங்களிலுள்ள மக்கள் மக்கத்தினர் களிடம், இந்த முஸ்லிம்கள் தவாஃப் செய்வதற்காகத்தான் வந்திருக்கிறார்கள். நீங்கள் அவர்களைத் தடுப்பது முறையன்று என்று வலியுறுத்திக் கூறினார்கள். ஆனால் மக்கத்தினர்கள் தங்கள் பிடிவாதத்தில் உறுதியாக நின்றனர். இதனைக் கண்ட பிற கோத்திரங்களைச் சார்ந்த மக்கள் மக்கத்தினர்களிடம் உங்களுடைய இந்தப் பிடிவாதம் நீங்கள் தீமை செய்வதைத்தான் நோக்கமாகக் கொண்டிருக்கிறீர்கள்; சமாதானத்தையல்ல என்பதையே காட்டுகிறது. எனவே நாங்கள் உங்களுக்கு ஒத்துழைப்பு தரத் தயாராக இல்லை என்றனர்.

இது கேட்டு பயந்து விட்ட மக்கத்தினர்கள் தாங்கள் முஸ்லிம்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ளும் முயற்சியில் இறங்கப்போவதாக இணக்கம் தெரிவித்தனர். இந்தச் செய்தி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கிடைத்ததும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை மக்கத்தினர்களுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக அனுப்பினார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மக்காவுக்குச் சென்ற போது, அங்கு அவர்களுக்கு மிக அதிகமான உறவினர்கள் இருந்ததால், அவர்களின் உறவினர்கள் அவர்களைச் சூழ்ந்து கொண்டு, தாங்கள் மட்டும் தவாஃப் செய்து கொள்ளுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அடுத்த ஆண்டில் வந்து தவாஃப் செய்து கொள்ளட்டும் என்றார்கள். இதற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், என் எசமானர் இன்றி நான் மட்டும் தவாஃப் செய்ய முடியாது என்றார்கள்.

அவர்கள் மக்காவின் தலைவர்களுடன் நீண்ட நேரம் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருந்ததால், மக்காவிலுள்ள சிலர் தீய எண்ணங்கொண்டு, அவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள் என்ற செய்தியைப் பரப்பி விட்டார்கள். இந்தச் செய்தி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் கிடைத்தது.

உடனே அவர்கள் தங்கள் தோழர்களை ஒருங்கிணைத்து, எல்லாச் சமுதாயங்களிலும் அரசு தூதரின் உயிருக்கு ஆபத்து ஏற்படாமல் பாதுகாக்கப்படுகிறது. உஸ்மான் அவர்களை மக்கத்தினர்கள் கொன்று விட்டார்கள் என்ற செய்தியினை நீங்கள் கேள்விப்பட்டுள்ளீர்கள். இந்தச் செய்தி உண்மையானதென்றால், நாம் வலுக்கட்டாயமாக மக்காவிற்குள் நுழைவோம். (அதாவது மக்காவிற்குள் நாம் சுமூகமாக நுழைய வேண்டும் என்ற நம்முடைய முதல் நோக்கம், எந்த நிலைமைகளின் அடிப்படையில் அமைந்திருந்ததோ அந்த நிலைமைகள் மாறி விட்டன. எனவே நாம் இப்பொழுது அந்த நோக்கத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் அல்ல.) ஆகவே நாம் இங்கிருந்து முன்னேறிச் செல்ல வேண்டு மானால், ஒன்று நாம் மக்காவை வென்றே திரும்ப வேண்டும். அல்லது நம்மில் ஒவ்வொருவரும் போர்க்களத்தில் மடிய வேண்டும். இவ்வாறு சபதம் செய்து கொள்ள ஆயத்தமாக இருப்பவர்கள், என்னிடம் பைஅத் (உறுதிமொழி) செய்யுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவித்ததும் அவர்களுடன் சென்றிருந்த ஆயிரத்து ஐநூறு பயணிகளும் ஆயிரத்து ஐநூறு போர் வீரர்களாக மாறிவிட்டனர். அவர்கள் ஒவ்வொருவரும் மிகுந்த உற்சாத்துடன் முண்டியடித்துக் கொண்டு மற்றவர்களுக்கு முன்னதாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கையில் பைஅத் செய்ய ஆர்வத்துடன் சென்றனர்.

இந்தப் பைஅத் இஸ்லாமிய வரலாற்றில் பெரும் முக்கியத்துவம் வகிக்கிறது. இது மரத்தின் உறுதிமொழி என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் இந்த பைஅத் வாங்கப்பட்டபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு மரத்தின் கீழ் அமர்ந்திருந்தார்கள். இந்த பைஅத்தில் கலந்து

கொண்டவர்கள் எல்லாரும் தங்கள் வாழ்நாள் முழுவதும் இதனைப் பற்றி பெருமிதத்தோடு பேசிக் கொண்டிருந்தனர்.

அந்த ஆயிரத்து ஐநூறு பேரில் ஒருவர்கூட இந்த உறுதிமொழியினை எடுத்துக் கொள்ளத் தவறவில்லை. பகைவர்கள், தங்களுடைய தூதர் ஒருவரைக் கொன்று விட்டார்கள் என்றால், இன்று இரண்டில் ஒன்றை கட்டாயம் செய்தேயாக வேண்டும். ஒன்று, இன்று மாலைக்குள் மக்காவை வென்று விட வேண்டும். அல்லது போர்க்களத்தில் மாண்டுவிட வேண்டும் என்ற உறுதிமொழியை அவர்கள் அனைவரும் எடுத்துக் கொண்டார்கள்.

முஸ்லிம்கள் இந்த உறுதிமொழியை எடுத்து முடித்ததும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் திரும்பி வந்து விட்டார்கள். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் மக்கத்தினர் இந்த ஆண்டு நம்மை ஹஜ் செய்ய அனுமதிக்கமாட்டார்கள். ஆனால் அவர்கள் அடுத்த ஆண்டு அனுமதி தர இசைந்துள்ளார்கள். இதற்காக ஓர் உடன்படிக்கை செய்ய தங்களுடைய பிரதிநிதிகளை அவர்கள் நியமித்துள்ளனர் என்றார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் வந்து சிறிது நேரத்திற்குப் பிறகு, ஸுஹைல் என்பவர் உடன்படிக்கை செய்து கொள்வதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார். அந்த உடன்படிக்கை பின்வருமாறு எழுதப்பட்டது:

## ஹுதைபிய்யா சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகள்

இறைவன் பெயரால் சமாதானத்திற்கான பின்வரும் நிபந்தனைகள், அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மது அவர்களுக்கும் ஸுஹைல் பின் அம்ரு என்பவருக்கும் இடையில் இயற்றப் பட்டுள்ளன:

“பத்து ஆண்டுகளுக்குப் போர் நிறுத்தம் செய்யப்படுகிறது. முஹம்மது (ஸல்) அவர்களுடன் இணைந்து கொள்ள விரும்புபவர் அல்லது அவர்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ள விரும்புபவர் அவ்வாறு செய்து கொள்ளலாம்.

குரைஷியர்களுடன் இணைந்து கொள்ள விரும்புபவர் அல்லது உடன்படிக்கை செய்து கொள்ள விரும்புபவரும் அவ்வாறு செய்து கொள்ளலாம்.

ஒருவர், தமது தந்தை உயிருடன் இருக்கும் போது அல்லது சிறிய வயதுடையவராக இருக்கும்போது, அவர் தமது தந்தையிடம் அல்லது தமது பொறுப்பாளரிடம் அனுமதி பெறாமல் முஹம்மது அவர்களிடம் வந்தால், அவர் அவருடைய தந்தையிடம் அல்லது பொறுப்பாளரிடம் திருப்பி அனுப்பப்படுவார்.

ஆனால் முஹம்மது அவர்களைச் சார்ந்தவர்களுள் எவரும் குரைஷியர்களிடம் சென்றால், அவர் திருப்பி அனுப்பப்பட மாட்டார்.

முஹம்மது அவர்கள் இந்த ஆண்டில் மக்காவிற்குள் வராமல் திரும்பிச் சென்று விடுவார்கள். எனினும் அடுத்த ஆண்டில் முஹம்மது அவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் மக்காவிற்கு வந்து, மூன்று நாள்கள் தங்கி, காபாவைச் சுற்றி வரலாம். இந்தக் காலக்கட்டத்தில் குரைஷியர்கள் மக்கா நகருக்கு வெளியிலிருக்கும் மலைக்குன்றிற்குச் சென்று விடுவார்கள். ஆனால் முஹம்மது அவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் மக்காவிற்குள் நுழையும் போது ஒவ்வொரு பயணியும் தம்மிடம் உறையிலிட்ட வாளைத் தவிர வேறெந்த ஆயுதமும் அவர்களிடம் இருக்கக் கூடாது.” *(புகாரி)*

இந்த உடன்படிக்கையின் போது வியப்பிற்குரிய இரண்டு நிகழ்ச்சிகள் நடந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நிபந்தனைகளை குறித்து முடிவு செய்து உடன்படிக்கையை எழுதத் தொடங்கியபோது, அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் என்று எழுதி ஆரம்பிக்குமாறு கூறினார்கள்.

ஸுஹைல் என்பவர் இதற்கு மறுப்புத் தெரிவித்து, அல்லாஹ் யார் என்று எங்களுக்குத் தெரியும். ஆனால் அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாக இருப்பவன் யார் என்பது எங்களுக்குத் தெரியாது. இந்த உடன்படிக்கை எங்களுக்கும் உங்களுக்குமிடையில் நிகழ்ந்து

கொண்டிருக்கிறது. இதில் இரண்டு சாராரின் மதநம்பிக்கைகளுக்கு மதிப்பளிப்பது அவசியமாகும் என்று கூறினார்.

அவர் கூறியதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏற்றுக்கொண்டு, அல்லாஹ்வின் பெயரால் நாங்கள் இந்த உடன்படிக்கையை இயற்றுகின்றோம் என்று தொடங்கி, சமாதான உடன்படிக்கைக்குரிய இந்த நிபந்தனைகள் மக்கத்தினர்களுக்கும் அல்லாஹ்வின் தூதர் முஹம்மதுக்கும் இடையில் நிகழ்வதாகும் என்று எழுதுமாறு கூறினார்கள்.

இதற்கும் ஸுஹைல் என்பவர் மறுப்புத் தெரிவித்து, நாங்கள் உங்களை அல்லாஹ்வின் தூதர் என்று ஏற்றுக் கொள்பவர்களாக இருந்தால், உங்களுடன் ஏன் போர் செய்கின்றோம்? என்று கூறினார்.

அவர் தெரிவித்த இந்த மறுப்பையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏற்றுக்கொண்டு, அல்லாஹ்வின் தூதர் முஹம்மது என்று எழுதுவதற்குப் பதிலாக அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மது என்று எழுதச் சொன்னார்கள்.

மக்கத்தினர்கள் கூறுபவற்றையெல்லாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பதைக் கண்ட நபித்தோழர்களின் உள்ளத்தில் மிகுந்த துக்கமும் வருத்தமும் ஏற்பட்டன; அவர்கள் கடுங்கோபம் கொண்டவர்களாகக் காணப் பட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாம் உண்மையாளர்கள் இல்லையா? என்று கேட்டதற்கு ஐயத்திற்கிடமின்றி நாம் உண்மையாளர்களே என்று பதிலளித்தார்கள். பின்னர் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாம் காபாவைச் சுற்றி வருவோம் என்று இறைவன் தங்களுக்கு அறிவிக்கவில்லையா? என்று கேட்டதற்கு ஆம்; அவன் அறிவித்தான் என்று அவர்கள் பதிலளித்தார்கள். இதுகேட்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அப்படியானால் தாங்கள் ஏன் இந்த உடன்படிக்கையைச் செய்தீர்கள் என்று கேட்டதற்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உமர் அவர்களே! நாம் அமைதியுடன் இறை இல்லமாகிய கஅபாவைச் சுற்றி வருவோம் என்று இறைவன் என்னிடம் கூறினான். ஆனால் நாம் இதே ஆண்டில் அதனைச் செய்வோம் என்று அவன் கூறவில்லை. எனினும் நான் இதே ஆண்டில் நடைபெறலாம் என்று கருதினேன் என்றார்கள். அதை செவியுற்ற உமர் (ரலி) அவர்கள் மவுனமாகி விட்டார்கள்.

அவ்வாறே மற்றும் சில நபித்தோழர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், மக்கத்தினர்களிலிருந்து எந்த வாலிபராவது முஸ்லிமாகி விட்டால், அவர் அவரது தந்தையிடமோ பொறுப்பாளரிடமோ அனுப்பப்படுவார். ஆனால் முஸ்லிம் ஒருவர் மக்கத்தினர்களிடம் சென்றால், அவரைத் திருப்பி அனுப்ப வேண்டுமென்ற கட்டாயம் மக்கத்தினர்களுக்கில்லை என்ற நிபந்தனை ஏன் ஏற்றுக்கொள்ளப்பட்டது? என்று ஆட்சேபனை செய்தார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இதில் எந்த இழப்பும் இல்லை. ஏனென்றால் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கின்ற ஒவ்வொருவரும், அதனை உண்மை என்று தெரிந்தே ஏற்றுக் கொள்கின்றார். சடங்கு சம்பிரதாய முறையில் எவரும் முஸ்லிமாவதில்லை. எனவே இஸ்லாத்தைத் தெரிந்து ஏற்றுக் கொள்பவர் எங்கிருந்தாலும் இஸ்லாத்தின் கொள்கையை எடுத்துரைத்து, அதனைப் பரப்புவதற்குக் காரணமாக இருப்பார். ஆனால் ஒருவர் இஸ்லாத்தை விட்டு விலகிச் செல்கின்றாரென்றால் அவரை நம்மிடையே வைத்துக் கொண்டு நாம் என்ன செய்வது? எவர் நமது மார்க்கத்தைப் பொய்யானதென்று கருதுகின்றாரோ அவரால் நமக்கு எந்தப் பயனும் கிடையாதென்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த பதில், இஸ்லாத்திலிருந்து மதம் மாறியவர்களுக்குரிய தண்டனை, அவர்களைக் கொலை செய்வதேயாகும் என்ற இன்றைய கருத்து தவறானது என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. இஸ்லாத்திலிருந்து மதம் மாறியவர்களுக்குரிய தண்டனை அவர்களை கொலை செய்வதாக இருந்திருப்பின், மதம் மாறிய ஒவ்வொருவரையும், அந்தக் குற்றத்திற்குரிய தண்டனையை அவர்களுக்கு வழங்குவதற்காக அவர்களைத் திருப்பி அனுப்பிவிட வேண்டும் என்றே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வலியுறுத்திக் கூறியிருப்பார்கள்.

இந்த உடன்படிக்கை எழுதி முடிக்கப்பட்டு, அதில் கையெழுத்திடப்பட்ட அதே வேளையில், இந்த உடன்படிக்கையின் படிச் செயலாற்றப்படும் என்பதை நிலைநாட்டிக் காட்டுவதற்கான ஓர் ஏற்பாட்டினை இறைவன் செய்தான்.

அதாவது மக்கத்தினர்களின் சார்பாக உடன்படிக்கை செய்து கொண்டிருந்த ஸுஹைலின் மகன் அபூஜந்தல் என்ற வாலிபர் கயிற்றால் கட்டப்பட்டு காயங்களால் இன்னல்களுக்குள்ளாகி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன் வந்து கீழே வீழ்ந்து அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் உள்ளத்தால் முஸ்லிமாக இருக்கிறேன். நான் இஸ்லாத்தைத் தழுவியதனால் என் தந்தை என்னைப் பல்வேறு வகையில் துன்புறுத்திக் கொண்டிருக்கிறார். என் தந்தை இங்கு வந்துள்ளார். நான் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தங்களிடம் வந்துள்ளேன் என்றார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதற்குப் பதிலளிப்பதற்கு முன்னரே அவரது தந்தை, உடன்படிக்கை செய்தாகி விட்டது. இந்த வாலிபரை என்னுடன் திருப்பி அனுப்பிவிட வேண்டும் என்று கூறினார்.

அப்போது அபூஜந்தலின் பரிதாப நிலையைக் கண்டு முஸ்லிம்கள் பெருந்துன்பமடைந்தார்கள். தமது தந்தையின் கையாலேயே தமக்கு இழைக்கப்படும் மாபெரும் அநீதிகளைச் சகித்துக் கொண்டிருக்கும் தங்களுடைய இஸ்லாமிய சகோதரர் ஒருவர், திரும்பிச் செல்வதை அவர்களால் காணவியலாத நிலையில் உறையிலிருந்து வாள்களை உருவியவர்களாகத் தங்களுக்கு மரணமே வந்தாலும் சரியே, தங்களுடைய அந்தச் சகோதரர் மீண்டும் அத்தகு துன்பத்திற்குரிய இடத்திற்குச் செல்ல அனுமதிக்கக் கூடாதென்ற முடிவிற்கு முஸ்லிம்கள் வந்து விட்டனர்.

அபூஜந்தலுங்கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனக்கு ஏற்பட்டுள்ள துன்பமான இந்த நிலையைத் தாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், அநீதியிழைக்கும் அவர்களிடம் இதன் பின்னரும் என்னை ஒப்படைத்து விட்டால், அவர்கள் மேலும் அதிகமாக அநீதியிழைப்பார்கள். இதனைத் தாங்கள் சகித்துக் கொள்வீர்களா? என்று கேட்டார்.

இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைத் தூதர்கள் உடன்படிக்கைகளை ஒருபோதும் முறிப்பதில்லை. அபூஜந்தலே! நாங்கள் உடன்படிக்கை செய்து விட்டோம். நீங்கள் பொறுமையைக் கடைபிடித்து, இறைவனை நம்பியிருங்கள். அவனே உங்களுக்கும் உங்களைப் போன்ற மற்ற வாலிபர்களுக்கும் உதவி செய்து விடுதலைக்கான ஏற்பாட்டைச் செய்வான் என்று கூறினார்கள்.

இந்த உடன்படிக்கைக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவுக்குச் சென்று விட்டார்கள். அவர்கள் அங்குச் சென்றதும், மக்காவைச் சார்ந்த இன்னொரு வாலிபராகிய அபூபஸீர் என்பவர் அவர்களைப் பின்தொடர்ந்து மிக விரைவாக மதீனாவிற்கு வந்து விட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அந்த வாலிபரையும் உடன்படிக்கைக் கேற்ப திரும்பிச் செல்லுமாறு கட்டாயப்படுத்தினார்கள்.

இதற்குக் கட்டுப்பட்டு அவர் திரும்பிச் சென்று கொண்டிருந்த போது வழியில் அவருக்கும் அவரைப் பிடித்துக் கொண்டு சென்றவர்களுக்கும் இடையே சண்டை ஏற்பட்டு விட்டது. அவர் அவர்களுள் ஒருவரைக் கொன்று விட்டு ஓடிவிட்டார். மக்கத்தினர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து இது குறித்து முறையிட்டார்கள். அப்போது அவர்கள், நாங்கள் உங்களுடைய அந்த வாலிபரை உங்களிடம் ஒப்படைத்து விட்டோம். இப்பொழுது அவர் எங்கிருந்தாலும் நாங்கள் அவரைப் பிடித்துக் கொண்டு வந்து மீண்டும் உங்களிடம் ஒப்படைப்பது எங்கள் பொறுப்பல்ல என்று கூறினார்கள்.

அடுத்து சில நாட்களுக்குப் பிறகு ஒரு பெண் மக்காவி லிருந்து மதீனாவிற்கு தப்பி வந்தாள். அவளுடைய உறவினர்கள் மதீனாவிற்கு வந்து அவளைத் திருப்பி அனுப்புமாறு வேண்டினார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடன்படிக்கை யிலுள்ள நிபந்தனையில் ஆண்கள்

மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளனர்; பெண்கள் குறிப்பிடப்படவில்லை. எனவே நாங்கள் பெண்களைத் திருப்பி அனுப்பமாட்டோம் என்று கூறினார்கள்.

## மன்னர்களுக்கு எழுதப்பட்ட கடிதங்கள்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுதைபிய்யா விலிருந்து மதீனாவுக்குச் சென்ற பிறகு இஸ்லாத்தை உலகின் எல்லாப் பகுதிகளுக்கும் பரப்ப விரும்பினார்கள். அவர்கள் தங்களுடைய இந்த விருப்பத்தைத் தங்கள் தோழர்களிடம் கூறிய போது, அரசவைகளைப் பற்றித் தெரிந்த நபித்தோழர்களுள் சிலர் அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! முத்திரையிடப் படாத கடிதங்களை மன்னர்கள் ஏற்றுக் கொள்வதில்லை என்று கூறினார்கள்.

எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு முத்திரையைச் செய்து, அதில் 'முஹம்மது ரஸூலுல்லாஹ்' என்னும் சொற்களைப் பதிக்குமாறு கூறினார்கள். இறைவனுக்கு மதிப்பளிக்கும் வகையில் அதன் மேற்பகுதியில் 'அல்லாஹ்' என்னும் சொல்லையும் அதன் கீழ் 'ரஸூல்' என்னும் சொல்லையும் அதற்குக் கீழே 'முஹம்மது' என்னும் சொல்லையும் பதிக்குமாறு அவர்கள் கட்டளையிட்டார்கள்.

கி.பி. 628 ஆம் ஆண்டு, முஹர்ரம் மாதத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுதிய கடிதங்களை எடுத்துக் கொண்டு நபித்தோழர்களுள் பலர், பல்வேறு நாடுகளை நோக்கிப் புறப்பட்டார்கள்.

அவற்றுள் ஒரு கடிதம் ரோமானிய மன்னர் ஹெராகிளிய ஸுக்கும், மற்றொரு கடிதம் ஈரான் மன்னருக்கும், இன்னொரு கடிதம் மன்னர் கெய்சரின் ஆட்சிக்குட்பட்டிருந்த எகிப்திய மன்னருக்கும், அபீஸீனிய மன்னர் நஜ்ஜாஷிக்கும் எழுதப்பட்டன. இவ்வாறே இன்னும் பல அரசர்களுக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடிதங்கள் எழுதினார்கள்.

## ரோமானிய மன்னர் ஹெராகிளியஸுக்கு எழுதிய கடிதம்

நபித்தோழர் திஹ்யா (ரலி) அவர்கள் மூலம் ரோமானிய கெய்சர் மன்னருக்குக் கடிதம் அனுப்பப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம், நீங்கள் முதலில் அரபு இனத்தைச் சார்ந்த பஸாராவிவிலுள்ள ஆளுநரிடம் சென்று, அவர் மூலம் இந்தக் கடிதத்தைக் கெய்சர் மன்னருக்குக் கொடுங்கள் என்றார்கள்.

திஹ்யா கல்பி (ரலி) அவர்கள், கடிதத்தை எடுத்துக் கொண்டு பஸாரா ஆளுநரிடம் சென்ற போது, எதிர்பாராதவிதமாக அதே நாட்களில் கெய்சர் மன்னர் சிரியா நாட்டிற்குச் சுற்றுப்பயணம் வந்திருந்தார். திஹ்யா கல்பி (ரலி) அவர்களை ஆளுநர் மன்னரிடம் அனுப்பி வைத்தார். அவரது அறிமுகத்தோடு அவர்கள், கெய்சரிடம் வந்த போது, அரசவை அதிகாரிகள் அவர்களிடம், கெய்சரிடம் செல்பவர்கள் அவருக்குத் தலைகுனிந்து வணக்கம் செய்ய வேண்டும் என்று கூறினார்கள். திஹ்யா கல்பி (ரலி) அவர்கள் அவ்வாறு செய்ய முடியாதென்று, மறுத்து விட்டு, முஸ்லிம்களாகிய நாங்கள் எந்த மனிதரையும் வணங்க மாட்டோம் என்றார்கள். பின்னர் அவர்கள் மன்னரை வணங்காமலேயே அவர் முன் சென்று அந்தக் கடிதத்தைச் சமர்ப்பித்தார்கள்.

அந்தக் கடிதத்தை மொழிபெயர்ப்பாளரிடம் கொடுத்துப் படித்துக் காட்டுமாறு மன்னர் கூறினார். பின்னர் அரபு நாட்டு (வணிக) குழுவினர் இந்த நகரத்தில் இருந்தால், இந்தக் கடிதத்தை அனுப்பியவரின் (முஹம்மது அவர்களின்) நிலைமைகளைப்பற்றி நான் அவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்வதற்காக அவர்களை என்னிடம் அழைத்து வாருங்கள் என்று கட்டளையிட்டார்.

ஏற்கனவே அபூஸுஃப்யான் என்பவர் ஒரு வாணிபக் குழுவினருடன் அப்போது அங்கு வந்திருந்தார். அரசவை அதிகாரிகள் அவரையும் அந்தக் குழுவினரையும் மன்னரிடம் அழைத்து வந்தார்கள். அபூஸுஃப்யான் எல்லாருக்கும் முன்னால் நிற்குமாறும் அவரது கூட்டாளிகளை அவருக்குப் பின்னால் நிற்குமாறும் செய்யுங்கள் என்று மன்னர் கட்டளையிட்டார். அடுத்து அந்தக் குழுவினரிடம் அபூஸுஃப்யான் எந்த செய்தியிலாவது பொய் உரைத்தால் அவரது கூட்டாளிகள்

உடனடியாக அதனைத் தெரிவித்து விடவேண்டும் என்று கூறிய மன்னர் அபூஸுஃப்யானிடம் கீழ்க்காணும் கேள்விகளை கேட்டார்: (மன்னர் கேட்ட கேள்விகளும் அபூஸுஃப்யான் அளித்த பதில்களும்)

கேள்வி : நபி என்று வாதிப்பவரும் எனக்குக் கடிதம் எழுதி யிருப்பவருமாகிய அவரைப் பற்றி உமக்குத் தெரியுமா? அவரது குடும்பம் எவ்வாறானது?

பதில் : அவர் சிறந்த குடும்பத்தைச் சார்ந்தவர்; என் உறவினர் களுள் ஒருவர்.

கேள்வி : அரபு நாட்டில் இதற்கு முன்னர் எவராவது தம்மை நபி என்று வாதித்துள்ளாரா?

பதில் : அவ்வாறு எவரும் வாதித்ததில்லை.

கேள்வி : அவர் தம்மை நபி என்று வாதிப்பதற்கு முன்னர் அவர் பொய் உரைத்ததாக நீங்கள் அவர் மீது குற்றம் சாட்டி யிருக்கிறீர்களா?

பதில் : இல்லை.

கேள்வி : அவரது மூதாதையர்களுள் எவராவது மன்னராக இருந்திருக்கிறாரா?

பதில் : இல்லை.

கேள்வி : அவரது சிந்தனையும் கருத்தும் எவ்வாறனவை?

பதில் : நாங்கள் ஒருபோதும் அவரது சிந்தனையிலும் கருத்திலும் எந்தக் குறைபாட்டையும் கண்டதில்லை.

கேள்வி : அவரது கூட்டத்தில் முரடர்களும் வலிமைமிக்கவர்களும் சேருகிறார்களா? அல்லது ஏழை எளியவர்கள் சேருகிறார்களா?

பதில் : அவரிடத்தில் ஏழை எளியவர்களும் வாலிபர்களும் சேருகிறார்கள்.

கேள்வி : அவர்கள் குறைந்து கொண்டிருக்கின்றனரா? அல்லது பெருகிக் கொண்டிருக்கின்றனரா?

பதில் : அவர்கள் நாளுக்குநாள் பெருகிக் கொண்டே இருக்கின்றனர்.

கேள்வி : அவர்களுள் எவராவது அவரது மார்க்கத்தை தீயதாகக் கருதி அதிலிருந்து விலகியிருக்கின்றனரா?

பதில் : இல்லை.

கேள்வி : அவர் எப்போதாவது தமது வாக்குறுதிக்கு மாற்றம் செய்துள்ளார்களா?

பதில் : அவர் இன்றுவரை தமது வாக்குறுதிக்கு மாற்றம் செய்ததில்லை. ஆனால், இப்பொழுது நாங்கள் அவருடன் ஒரு புதிய உடன்படிக்கை செய்துள்ளோம். இதில் அவர் எவ்வாறு நடந்துகொள்ளப்போகிறார் என்பது இனிதான் தெரியும்.

கேள்வி : உங்களுக்கும் அவருக்கும் இடையே எப்போதாவது போர் நடந்துள்ளதா?

பதில் : ஆம், நடந்துள்ளது.

கேள்வி : அப்படியானால், அந்தப் போர்களின் விளைவு என்னவானது?

பதில் : சில நேரத்தில் நாங்கள் வெற்றி பெறுகிறோம்; சில நேரத்தில் அவர் வெற்றி பெறுகிறார். ஒரு தடவை பத்ர் போர் நிகழ்ந்தது. அதில் நான் பங்கேற்காததால், அவர் வெற்றி பெற்று விட்டார். மற்றொரு உஹுதுப் போர் நிகழ்ந்தது. அதில் நான் போர்த் தளபதியாக இருந்தேன். நாங்கள் அவரது படையினரின் வயிற்றைக் கீறினோம். அவர்களது காது, மூக்குகளை அறுத்தோம்.

கேள்வி : அவர் உங்களுக்கு என்ன கட்டளையிடுகின்றார்?

பதில் : இறைவனை வணங்குங்கள்; அவனுக்கு வேறவரையும் - வேறெதனையும் இணை வைக்காதீர்கள் என்று அவர் கூறுகிறார். எங்கள் மூதாதையர்கள் வணங்கிக் கொண்டிருந்த சிலைகளை நாங்கள் வணங்கக் கூடாதென்று அவர் தடுக்கின்றார். நாங்கள் ஒரே இறைவனை மட்டும் வணங்க வேண்டும்; உண்மை பேச வேண்டும்; தீய செயல்களி லிருந்து விலகிக் கொள்ள வேண்டும் என்று அவர் போதனை செய்கின்றார். நாங்கள் நற்பண்புகளுடன் நடந்து கொள்ள வேண்டும்; வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருள்களை பாதுகாத்து திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்று அவர் கூறுகிறார்.

இந்த உரையாடலுக்குப் பிறகு ரோமானிய மன்னர் கெய்சர், முஹம்மது (ஸல்) அவர்கள் உண்மையிலேயே ஒரு நபி தான் என்று தீர்க்கமான முடிவிற்கு வந்து விட்டார். எனவே, அவர் அந்தக் குழுவினரிடம் பின்வருமாறு கூறினார்:

நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். நான் உங்களிடம் அவர் எத்தகு குடும்பத்தைச் சார்ந்தவர் என்று கேட்டதற்கு, அவர் மிகச் சிறந்த குடும்பத்தைச் சார்ந்தவர் என்று நீங்கள் கூறினீர்கள். நபிமார்கள் அவ்வாறே விளங்குகின்றனர்.

பின்னர் நான் உங்களிடம், இதற்கு முன்னர் எவராவது தம்மை நபி என்று வாதித்துள்ளாரா? என்று கேட்டதற்கு, அவ்வாறு எவரும் வாதித்ததில்லை என்றீர்கள். நான் இந்தக் கேள்வியைக் கேட்டதற்குக் காரணம், அண்மைக் காலத்தில் இவருக்கு முன்னர் எவராவது அவ்வாறு வாதித்திருந்தால், இவரும் அவரைப் போல் நடித்து தம்மை நபி என்று வாதித்திருக்கிறார் என்று நான் நினைப்பதற்கு வழியிருக்கிறது என்பதேயாகும்.

அடுத்து நான் உங்களிடம்,அவர் தம்மை நபி என்று வாதிப்பதற்கு முன்னர் அவர் பொய்யுரைத்ததாக அவர்மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளதா? என்று கேட்டதற்கு, இல்லை என்றீர்கள். எவர் மனிதர்களைப் பற்றி பொய்யுரைப்பதில்லையோ அவர் இறைவனைப் பற்றி பொய்யுரைக்கமாட்டார். எனவே, அவர் உண்மையாளர் என்று நான் புரிந்து கொண்டேன்.

இதன்பிறகு நான் உங்களிடம், அவரது மூதாதையர்களுள் எவராவது மன்னராக இருந்தாரா? என்று கேட்டதற்கு நீங்கள், இல்லை என்றீர்கள். எனவே நான், தமது மூதாதையர்களின் நாட்டை திரும்பப் பெறுவதற்காக அவர் தம்மை நபி என்று கூறவில்லை என்பதை புரிந்து கொண்டேன். பிறகு உங்களிடம், முரடர்களும் வலிமைமிக்கவர்களும் அவரோடு சேருகிறார்களா? அல்லது ஏழைகளும் எளியவர்களும் சேருகிறார்களா? என்று நான் கேட்டதற்கு, பலவீனமானவர்களும் ஏழை எளியவர்களுமே சேருகிறார்கள் எனப் பதிலளித்தீர்கள். நபிமார்களை பெரும்பாலும் ஏழை எளியவர்களே ஏற்றுக் கொள்கின்றனர். முரடர்களும் கர்வம் கொண்டவர்களும் அவர்களை ஏற்றுக் கொள்வதில்லை.

பின்னர் நான் உங்களிடம், அவர்கள் பெருகிக் கொண்டிருக் கிறார்களா? அல்லது குறைந்து கொண்டிருக்கிறார்களா? என்று கேட்டதற்கு நீங்கள், அவர்கள் பெருகிக் கொண்டிருக்கிறார்கள் என்றீர்கள். ஆம், இதே நிலைதான் எல்லா நபிமார்களையும் அவரைப் பின்பற்றியவர்களுக்கும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர்கள் முழு வெற்றியைப் பெறும் வரை அவர்கள் பெருகிக் கொண்டுதானிருப்பார்கள்.

அடுத்து நான் உங்களிடம், எவராவது அவரது மார்க்கத்தை வெறுத்து அதிலிருந்து விலகியிருக்கின்றனரா? என்று கேட்டதற்கு, இல்லை என்றீர்கள். ஆம், நபிமார்களைப் பின்பற்றியவர்களின் நிலை அவ்வாறுதானிருக்கும். வேறெதாவது காரணத்தால் ஒருவர் விலகலாம். ஆனால் அந்த மார்க்கத்தைத் தீயதாகக் கருதி எவரும் விலகுவதில்லை.

இதன் பிறகு நான் உங்களிடம், உங்களுக்கும் அவருக்கும் இடையே எப்போதாவது போர் நிகழ்ந்துள்ளதா? அதன் முடிவு என்னவாக இருந்தது? என்று கேட்டதற்கு, சில நேரத்தில் நீங்களும், சில நேரத்தில் அவரும் வெற்றி பெறுவதாகக் கூறினீர்கள். ஆம், இதே நிலைதான் நபிமார்களுக்கு ஏற்படுகிறது. ஆரம்பத்தில் அவர்களை பின்பற்றியவர்களுக்கு துன்பங்கள் ஏற்படுகின்றன. ஆனால் இறுதியில் அவர்களே வெற்றி பெறுகின்றனர்.

இதன் பின்னர் நான் உங்களிடம், அவர் உங்களுக்கு என்ன போதிக்கிறார்? என்று வினவியதற்கு, ஏக இறைவனையே வணங்க வேண்டும் என்றும் உண்மை பேச வேண்டும் என்றும் நற்பண்புகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் நம்பிக்கைக்குரியவர்களாக இருக்க வேண்டும் என்றும் அவர் உங்களுக்கு போதிக்கிறார் என்று விடையளித்தீர்கள்.

இவ்வாறே நான் உங்களிடம், அவர் எவரையாவது, எப்போதாவது ஏமாற்றியதுண்டா? என்று கேட்டதற்கு நீங்கள், இல்லை என்றீர்கள். ஆம், இத்தகு உயர்வான, மிகச்சிறந்த பண்புகள் நல்லவர்களுக்கு உரியனவையாகும்.

எனவே, அவர் தம்மை நபி என்று வாதிப்பதில் உண்மை யாளரேயாவார் என்று நான் கருதுகிறேன். இக்காலத்திலேயே அந்த நபி தோன்றுவார் என்பதை நானே எதிர்பார்த்ததுதான்; ஆனால் அவர்கள் அரபு மக்களிடையே தோன்றுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

நீங்கள் எனக்களித்த பதில்கள் உண்மையானவை என்றால் அவருடைய செல்வாக்கும் ஆதிக்கமும் இந்த நாடுகளில் பரவும் என்று நான் கருதுகிறேன். (புகாரி)

கெய்சர் மன்னர் தெரிவித்த கருத்துக்களைக் கேட்டு அவரது அவையினர் கொதித்தெழுந்தனர். அவர்கள் அவரிடம் தாங்கள் ஒரு கிறித்தவராக இருந்து கொண்டு, ஓர் அந்நிய சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் உண்மையாளர் என்று ஏற்றுக்கொள்கிறீர்களே என்று கூறி, கண்டனக் குரல் எழுப்பினர். இந்த நிலையில் அரசவை அதிகாரிகள் உடனடியாக அபூஸுஃப்யானையும் அவரது குழுவினரையும் அவையிலிருந்து வெறியேற்றி விட்டனர்.

## மன்னர் ஹெராகிளியஸுக்கு
## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுதிய கடிதத்தின் வாசகம்

'அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்,

இறைவனது அடியாரும் அவனது தூதருமாகிய முஹம்மது ரோமாபுரியை ஆள்பவராகிய ஹெராகிளியஸுக்கு எழுதும் கடிதம்.

நேரான வழியினைப் பின்பற்றுபவர்களுக்கு இறைவனிட மிருந்து சாந்தி உண்டாவதாக!

மன்னரே! நான் உம்மை இஸ்லாத்திற்கு அழைக்கிறேன். நீர் இறைவன் மீதும் அவனது தூதராகிய என்மீதும் நம்பிக்கைக் கொண்டு முஸ்லிமாகி விட வேண்டும். நீர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் இறைவன் உம்மை எல்லாக் குழப்பங்களிலிருந்தும் சோதனைகளிலிருந்தும் காப்பாற்றுவான். (ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின்மீதும் அல்லாஹ்வின் தூதராகிய என்மீதும் நீர் நம்பிக்கைக் கொண்டதற்காக) அவன் உமக்கு இரு மடங்கு வெகுமதிகளை வழங்குவான்.

ஆனால் நீர் இதனை ஏற்காது நிராகரித்து விட்டால் அந்தப் பாவத்தையும் உமது ஆட்சிக்குட்பட்டவர்கள் நம்பிக்கைக் கொள்ளாத அந்தப் பாவத்தையும் நீரே சுமக்க வேண்டியது வரும். (இந்தக் கடிதத்தின் இறுதியில் கீழ்க்காணும் திருக்குர்ஆன் வசனம் குறிப்பிடப்பட்டிருந்தது.)

'வேதத்தையுடையவர்களே! எங்களுக்கும் உங்களுக்கும் இடையில் ஒன்றுபட்ட ஒரு கருத்தின்பால் வாருங்கள். (அதாவது) நாம் அல்லாஹ்வையன்றி வேறவரையும் வணங்கமாட்டோம். அவனுக்கு வேறெதனையும் இணை வைக்கமாட்டோம். மேலும் நாம் அல்லாஹ்வைத் தவிர எந்த அடியானுக்கும் அவர் இறை பண்புகளுக்கு ஒப்புமையுடைய பண்புகளை உடையவராக கருதும் அளவுக்கு அதிகமாக மதிப்பளிக்கமாட்டோம். முஹம்மது ரஸூலுல்லாஹ் மற்றும் அவர்களின் தோழர்களே! வேதத்தை யுடையவர்கள் இந்த ஒற்றுமை அழைப்பை ஏற்க மறுத்து விட்டால் அவர்களிடம் நாங்கள் இறைவனுக்கு கட்டுப்பட்டவர்களாவோம் எனக் கூறி விடுக. (ஆதாரம் : புகாரி, சுர்கானி தொகுதி 3 பக்கம் 336)

இந்தக் கடிதம் மன்னரிடம் சமர்ப்பிக்கப்பட்டபோது அரசவையினர்களுள் சிலர் இந்தக் கடிதத்தை கிழித்து எறிந்து விட வேண்டும். ஏனென்றால் இதில் மன்னர் இழிவுபடுத்தப்பட்டுள்ளார். இதன் மேற்பகுதியில் ரோமானிய அதிபதி என்று எழுதப்படாமல் ரோமானிய ஆளுநர் என்று எழுதப்பட்டுள்ளது என்று கூறினர். ஆனால், மன்னர் கடிதத்தைப் படித்துப் பார்ப்பதற்கு முன்னர் கிழித்தெறிவது அறிவற்ற செயலாகும். ரோமானிய ஆளுநர் என்று அவர் எழுதியிருப்பதே சரியானதாகும். உண்மையிலேயே அதிபதி இறைவனேயாவான். நான் ஆளுநர்தான் என்று கூறினார் என சில வரலாற்று நூல்களில் எழுதப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சி குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தகவல் கிடைத்ததும் அவர்கள் ரோமானிய மன்னர் தேர்ந்தெடுத்த முறையின் காரணமாக அவரது அரசு காப்பாற்றப் படும். அவருடைய சந்ததியினர் ரோமாபுரியை நீண்ட காலம் ஆட்சி செய்வர் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த முன்னறிவிப்பு நிறைவேறியது. பின்னர் நடந்த போர்களில் அதிகமான நாடுகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மற்றொரு முன்னறிவிப்பிற்கேற்ப ரோமானிய மன்னரிடமிருந்து கைப்பற்றப்பட்டனவென்றாலும் மேற்கூறப்பெற்ற அந்த நிகழ்ச்சியில் இருந்து அறுநூறு ஆண்டுகள் வரை அவரது குடும்பத்தினரின் ஆட்சியே கான்ஸ்டான்டினோபிளில் நிலைத்திருந்தது. ரோமானிய ஆட்சியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கடிதம் நீண்ட காலம் வரை பாதுகாக்கப்பட்டு வந்தது.

ஒரு தடவை முஸ்லிம் மன்னர் மன்ஸூர் கலாதூனுடைய அயல்நாட்டுத் தூதுவர்கள் சிலர் அக்கால ரோமானிய மன்னரிடம் சென்றபோது அவர்களிடம் காட்டுவதற்காக மன்னர் ஒரு சிறிய பெட்டியைக் கொண்டு வரச் சொல்லி என் முன்னோர்களுள் ஒரு பாட்டனாருக்கு உங்களுடைய நபியிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அது இன்று வரை எங்களால் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்று கூறினார்.

## ஈரான் மன்னருக்கு எழுதப்பட்ட கடிதம்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் (பாரசீக) ஈரான் மன்னருக்கு எழுதிய கடிதம் அப்துல்லாஹ் பின் ஹுதாஃபா என்பவர் மூலம் அனுப்பப்பட்டது. இதன் வாசகம் பின்வருமாறு:

அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனு மாகிய அல்லாஹ்வின் பெயரால்,

அல்லாஹ்வின் தூதர் முஹம்மது, ஈரான் மன்னர் கிஸ்ராவுக்கு எழுதும் மடல்.

முழுமையான நேர்வழியினைப் பின்பற்றி அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர் மீதும் நம்பிக்கைக் கொண்டு ஏக இறைவனாகிய அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரியவரோ அவனுக்கு இணையானவரோ இல்லையென்றும் முஹம்மது அவனது அடியாரும் தூதரும் ஆவார் என்றும் சாட்சி கூறுபவருக்கு அல்லாஹ்விடமிருந்து சாந்தி உண்டாவதாக!

மன்னரே! இறைவனின் கட்டளைக்கேற்ப நான் உம்மை இஸ்லாத்திற்கு அழைக்கிறேன். ஏனென்றால் நான் மக்கள் எல்லாரையும் எச்சரித்து, நிராகரிப்பாளர்களுக்கு உண்மைகளை எடுத்துக்கூறி நிரூபிக்க வேண்டும் என்பதற்காக, நான் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டு, எல்லா மக்களுக்கும் இறைத் தூதராக அனுப்பப்பட்டுள்ளேன்.

நீர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். இதனை ஏற்றுக் கொண்டால் நீர் எல்லாக் குழப்பத்திலிருந்தும் பாதுகாக்கப்படுவீர். இதனை நீர் நிராகரித்து விட்டால் நெருப்பை வணங்கிக் கொண்டிருப்பவர்களான உமது மக்களின் பாவங்களையும் நீரே சுமக்க வேண்டியது வரும்.

இந்தக் கடிதத்தைக் கொண்டு சென்ற அப்துல்லாஹ் பின் ஹுதாஃபா அவர்கள், 'நான் கிஸ்ராவின் அரசவையை அடைந்ததும் உள்ளே செல்ல அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டேன். அனுமதி வழங்கப்பட்டது. நான் முன்னேறிச் சென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கடிதத்தை மன்னர் கிஸ்ராவிடம் சமர்ப்பித்த போது அவர் அதனைப் படித்துக் காட்டுமாறு மொழி பெயர்ப்பாளரை பணித்தார். மொழிபெயர்ப்பாளர் அதனைப் படித்துக் காட்டியதும் மன்னர் கிஸ்ரா சீற்றமடைந்து அதனைக் கிழித்து விட்டார். நான் அங்கிருந்து திரும்பி வந்து இந்தச் செய்தியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தெரிவித்தேன். இதற்கு அவர்கள் நம்முடைய கடிதத்துடன் கிஸ்ரா எவ்வாறு நடந்து கொண்டாரோ அவ்வாறே இறைவன் அவரது ஆட்சியுடனும் நடந்து கொள்வான் என்று கூறினார்கள்' என்றார்.

மன்னர் கிஸ்ரா இந்தத் தீயச் செயலை செய்ததற்கு ஒரு காரணமும் இருந்தது. அதாவது, ரோமானிய ஆட்சியிலிருந்து வெருண்டோடி ஈரான் அரசிடம் தஞ்சம் புகுந்திருந்த யூதர்கள் ரோமானிய அரசுக்கு எதிரான சதித்திட்டங்களில் மன்னர் கிஸ்ராவுக்கு ஒத்துழைப்பு கொடுத்து வந்ததால் அவரிடம் செல்வாக்குப் பெற்றிருந்தனர். இந்த யூதர்கள் மூலம் அரபு நாட்டின் யூதர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக மன்னர் கிஸ்ராவை தூண்டிக் கொண்டிருந்தனர். அவர்கள் கூறிய புகார்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தக் கடிதம் உண்மைப்படுத்துவதாக மன்னர் கருதியது மட்டுமல்லாமல் அவர்கள் தமது நாட்டைக் கைப்பற்ற நினைப்பதாகவும் எண்ணி அந்தக் கடிதத்தைக் கிழித்தெறிந்தார்.

இதன் பிறகு உடனடியாக மன்னர் கிஸ்ரா தமது ஆட்சிக்குட் பட்டிருந்த யமன் நாட்டு ஆளுநருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் குரைஷிக் கோத்திரத்தைச் சார்ந்த ஒருவர் தம்மை நபி என்று வாதித்துக் கொண்டிருக்கிறார். அவர் தமது வாதத்தை மிகவும் தீவிரப்படுத்திக் கொண்டிருக்கிறார். நீர் உடனடியாக இரு வீரர்களை அவரிடம் அனுப்பி அவரைக் கைது செய்து என்னிடம் கொண்டு வர ஆணையிடுவீராக! என்று குறிப்பிட்டிருந்தார்.

இதற்கேற்ப அப்போது மன்னர் கிஸ்ராவின் கீழ் யமன் நாட்டு ஆளுநராக இருந்த பாதான் என்பவர் படை அதிகாரி ஒருவரையும் அவருடன் இன்னொரு வீரரையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அனுப்பி வைத்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி அவ்வீரர்களிடம் கொடுத்து அனுப்பினார். அதில் அவர் இந்தக் கடிதம் கிடைத்தவுடன் இந்த வீரர்களுடன் தாங்கள் மன்னர் கிஸ்ராவின் அவைக்குச் சென்று விடுங்கள் என்று குறிப்பிட்டிருந்தார்.

அந்தப் படை அதிகாரி முதலில் மக்காவை நோக்கிச் சென்றார். அவர் தாயிஃப் நரகத்தை நெருங்கிய போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவில் வாழ்ந்து வருவதைத் தெரிந்து அங்கிருந்து மதீனாவிற்குச் சென்றார். அங்கு அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தங்களை கைது செய்து தம்மிடம் கொண்டு வருமாறு மன்னர் கிஸ்ரா யமன் ஆளுநர் பாதானுக்கு கட்டளையிட்டிருக்கிறார். தாங்கள் இந்தக் கட்டளையை நிராகரித்து விட்டால் அவர் தங்களையும் தங்கள் சமுதாயத் தினரையும் அழித்து விடுவார். மேலும் தங்கள் நாட்டையும் அழிவிற்குள்ளாகி விடுவார். எனவே தாங்கள் எங்களுடன் வந்து விடுங்கள் என்றார்.

இதனைக் கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நன்று; மீண்டும் நாளை என்னைச் சந்தியுங்கள் என்று கூறினார்கள். அன்றிரவு அவர்கள் இறைவனிடம் பிரார்த்தனை செய்தார்கள். அப்போது இறைவன் உம்மிடம் மரியாதையின்றி நடந்துகொண்ட கிஸ்ராவுக்கு தண்டனை கொடுப்பதற்காக நாம் அவனுடைய மகனை அவன் மீது ஆதிக்கம் செலுத்துமாறு செய்து விட்டோம். எனவே இந்த ஆண்டு ஜமாஅத்துல் அவ்வல் மாதம் 10 ஆம் நாள் திங்கட் கிழமையன்று அவனுடைய மகன் அவனைக் கொன்று விடுவான் என்று அறிவித்தான்.

மற்றுஞ்சில அறிவிப்புகளில் இன்றிரவு மன்னனை அவனுடைய மகன் கொன்று விட்டான் என்று கூறியதாகக் காணப்படுகிறது. அந்த இரவு ஜமாஅத்துல் அவ்வல் மாதம் 10 ஆம் நாள் இரவாகவே இருந்திருக்கலாம்.

மறுநாள் காலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவ்விருவரையும் அழைத்து இறைவனுடைய அந்த முன்னறிவிப்பை அவர்களிடம் கூறினார்கள். இதன் பின்னர் அவர்கள் யமன் நாட்டு ஆளுநர் பாதானுக்கு ஜமாஅத்துல் அவ்வல் மாதம் 10 ஆம் நாள் மன்னன் கிஸ்ரா கொலை செய்யப்படுவான் என்று இறைவன் எனக்கு அறிவித்துள்ளான் என்று கடிதம் எழுதினார்கள்.

இந்தக் கடிதம் யமன் நாட்டு ஆளுநருக்குக் கிடைத்ததும் அவர் உண்மையிலேயே அவர் நபியாக இருந்தால் நிச்சயமாக அவ்வாறு நிகழ்ந்துவிடும். அவ்வாறு நிகழவில்லையென்றால் அவருக்கும் அவருடைய நாட்டிற்கும் நன்மையல்ல என்றார்.

சில நாட்களுக்குப் பிறகு ஈரான் நாட்டுக் கப்பல் ஒன்று யமன் நாட்டுத் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தது. ஈரான் மன்னரின் ஒரு கடிதம் ஆளுநரிடம் கொடுக்கப்பட்டது. அதன் முத்திரையைக் கண்ட யமன் ஆளுநர் மதீனாவிலுள்ள நபி கூறியது உண்மையாகி விட்டது என்பதை உணர்ந்தார். ஏனெனில் அக்கடிதத்திலிருந்த முத்திரை வேறொரு மன்னருடையதாக இருந்தது. அதில் கீழ்வருமாறு எழுதப்பட்டிருந்தது:

'ஈரான் மன்னர் ஷேர்தயாவினால் யமன் ஆளுநர் பாதானுக்கு இக்கடிதம் எழுதப்படுகிறது. நான் என் தந்தையாகிய முன்னாள் கிஸ்ராவைக் கொன்று விட்டேன். ஏனென்றால் அவர் இரத்தக்களரியை ஏற்படுத்தி விட்டார். நாட்டிலுள்ள கண்ணியமானவர் களைக் கொன்றார். நாட்டு மக்களுக்கு அநீதியிழைத்துக் கொண்டிருந்தார். எனது இந்தக் கடிதம் உமக்குக் கிடைத்ததும் எனக்குக் கட்டுப்பட்டு நடக்குமாறு எல்லா அதிகாரிகளிடத்திலும் உறுதிமொழி வாங்கி விடுவீராக. இதற்கு முன்னர் அரபு நாட்டிலுள்ள ஒரு நபியை சிறைப்பிடிக்குமாறு என் தந்தை உமக்கு அனுப்பிய கட்டளை ரத்து செய்யப்பட்டதாகக் கருதுவீராக' எனக் குறிப்பிட்டிருந்தார். *(தபரி பாகம் 3, ஹிஷாம் பக்கம் 46)*

ஆளுநர் பாதான் இந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்தார். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையைப் புரிந்துகொண்டு அவரும் அவருடைய பல நண்பர்களும் இஸ்லாத்தை ஏற்றனர். தாங்கள் முஸ்லிம்களாகி விட்டது குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தகவலும் அனுப்பினார்.

## அபீசீனிய மன்னர் நஜ்ஜாஷிக்கு எழுதப்பட்ட கடிதம்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மன்னர் நஜ்ஜாஷி என்பவருக்கு எழுதிய கடிதத்தை அம்ரு பின் உமய்யா தம்ரீ (ரலி) அவர்க்ள மூலம் அனுப்பினார்கள். அந்த வாசகம் பின்வருமாறு:

‘அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்,

அல்லாஹ்வின் தூதர் முஹம்மது, அபிஸீனிய மன்னர் நஜ்ஜாஷிக்கு எழுதும் கடிதம்,

மன்னரே! உமக்கு இறைவனது சாந்தி கிடைத்துக் கொண்டிருக்கிறது. (நீர் முஸ்லிம்களுக்குப் புகலிடம் அளித்துள்ளீர். உமது இந்தச் செயல் இறைவனிடம் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். எனவே நீர் இறைவனின் பாதுகாப்பில் இருக்கின்றீர்.) நான் உமக்கு முன்னால் அந்த இறைவனைப் புகழ்கின்றேன். அவனையன்றி வேறெவரும் வணக்கத்திற்குரியவர் இலர். அவனே உண்மையான அரசன். அவன் எல்லா வகையிலும் தூய்மையானவன்; எந்தக் குறைபாடும் இல்லாதவன்; எல்லாக் குறைபாடுகளிலிருந்தும் மற்றவர்களைத் தூய்மையாக்குபவன். அவன் தன் அடியார்களுக்கு அமைதியை வழங்கி அவர்களைப் பாதுகாக்கின்றான்.

மரியத்தின் மகன் ஈஸா ஓர் இறைத் தூதர். அவருடைய தாயார் தமது வாழ்வை இறைவனுக்காக அர்ப்பணித்திருந்தார். இறைவன் மரியத்திடம் ஏற்கனவே அளித்திருந்த வாக்குறுதிகளை ஈஸா நிறைவேற்றக் கூடியவராக இருந்தார் என்று நான் சாட்சி பகர்கிறேன்.

இணையில்லாத அந்த ஏக இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளுதல், அவனுக்குக் கட்டுப்பட்டு நடத்தல் ஆகியவற்றில் நமக்கிடையே உடன்படிக்கை செய்து கொள்ள வருமாறு நான் உம்மை அழைக்கிறேன். நீர் எனக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். என்னைத் தோற்றுவித்த இறைவன் மீது நீர் நம்பிக்கை கொள்ள வேண்டும். ஏனென்றால் நான் அவனுடைய தூதராவேன். எனவே நான் உம்மையும் உம்முடைய படைகளையும் இறைவனுடைய மார்க்கத்தில் இணைத்துக் கொள்ளுமாறு அழைக்கிறேன்.

நான் இதன் மூலம் என் பொறுப்பை நிறைவேற்றி விட்டேன். இறைவனுடைய தூதை உமக்குத் தெரிவித்து விட்டேன். மிகுந்த பற்றுடன் உண்மையை உமக்கு விளக்கி விட்டேன். எனவே நீர் எனது பற்றுக்கு மதிப்பளிப்பீராக. இறைவன் காட்டிய நேரான வழியைப் பின்பற்றுபவருக்கு அவனது சாந்தி உண்டாவதாக!’

அந்தக் கடிதம் மன்னர் நஜ்ஜாஷிக்குக் கிடைத்ததும், அவர் மிகுந்த மரியாதையுடன் அதனைத் தமது கண்களில் ஒற்றிக் கொண்டார். அடுத்து அவர் தமது அரியணையிலிருந்து கீழே இறங்கி நின்று, யானைத் தந்தத்திலான ஒரு பெட்டியைக் கொண்டு வாருங்கள் என்றார்; உடனே அது கொண்டு வரப்பட்டது. அவர் அந்தக் கடிதத்தை மிகுந்த மரியாதையுடன் அந்தப் பெட்டியில் வைத்து விட்டு, இந்தக் கடிதம் எவ்வளவு காலம் பாதுகாக்கப்படுமோ அவ்வளவு காலம் அபிஸீனிய அரசும் பாதுகாக்கப்படும் என்றார்.

மன்னர் நஜ்ஜாஷியின் இந்த நம்பிக்கை வீண்போகவில்லை. ஓராயிரம் ஆண்டுகளாகக் கடல் அலைகளைப் போன்று முழு உலகிலும் இஸ்லாம் பரவிக் கொண்டிருந்தது. அபிஸீனிய நாட்டின் வலப்பக்கத்தையும் இடப்பக்கத்தையும் இஸ்லாமியப் படைகள் கடந்து சென்றன. ஆனால் அபிஸீனியாவின் மன்னர், முஸ்லிம் அகதிகளுடன் ஏற்கனவே மிக நல்ல முறையில் நடந்து கொண்டதனாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கடிதத்திற்கு அவர் மிகுந்த மதிப்பளிப்பதனாலும் இஸ்லாமியப் படைகள் அபிஸீனியாவிற்குள் நுழையவே இல்லை!

ரோமானிய மன்னர் கெய்சர் போன்ற மன்னர்களின் அரசுகள் தூள் தூளாக்கப்பட்டன. பாரசீக மன்னர் கிஸ்ரா போன்ற மன்னர்களின் அரசுகள் அடையாளமின்றி அழிந்தன. சீன அரசுகளும் இந்திய அரசுகளும் மறைந்தன.

ஆனால் அபிஸீனியாவின் சின்னஞ்சிறிய அரசு பாதுகாக்கப்பட்டது. இதற்குக் காரணம், அந்நாட்டு மன்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆரம்பகாலத் தோழர்களுடன் மிக நல்ல முறையில் நடந்து கொண்டதும், அவர்களின் கடிதத்திற்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும் அளித்ததும் ஆகும். ஒரு சாதாரண உதவிக்குக் கைமாறாக அபிஸீனிய நாட்டினருடன் முஸ்லிம்கள் நடந்து கொண்ட முறையாகும் இது. ஆனால் ஒரு கன்னத்தில் அடிவாங்கி விட்டு மறு கன்னத்தையும் காட்டுவோம் என்று வாதிக்கும் கிறித்தவச் சமுதாயங்கள், தங்களுடைய மதத்தைச் சார்ந்தவர்களும் தங்களுடைய நடைமுறைகளைக் கொண்டவர் களுமாகிய அபிஸீனிய மன்னருடனும் அவருடைய சமுதாயத்துடனும் இக்காலத்தில் நடந்து கொண்ட முறை உலகிற்கு தெரிந்ததேயாகும். அவர்கள் அபிஸீனிய நகரங்களில் குண்டு மழைப் பொழிந்து அந்த நகரங்களைத் தகர்த்து விட்டார்கள். அந்த நாட்டு மன்னரும் அவருடைய துணைவியாரும் அவருடைய மக்களும் தங்கள் நாட்டைத் துறந்து அயல் நாடுகளில் பல ஆண்டுகளாகப் புகலிடம் தேடி அலைய வேண்டியதாயிற்று.

அபிஸீனிய மக்களுடன் முஸ்லிம்கள் நடந்து கொண்ட முறையையும் கிறித்தவர்கள் நடந்து கொண்ட முறையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புனிதத் தன்மை மிகவும் உயர்வானது என்பதை நன்கு தெரிந்து கொள்ளலாம். மேலும் தற்கால முஸ்லிம்கள் உண்மையான மார்க்கத்திலிருந்து வெகுதூரம் விலகிச் சென்று விட்டனர். இவ்வாறிருந்துங்கூட இன்றுவரை அந்த முஸ்லிம்களின் எண்ணங்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புனிதத் தன்மையின் சக்தியானது, நன்மையின் பாலும் நன்றி பாராட்டுவதன் பாலும் ஈர்த்துக் கொண்டிருக்கிறது.

## எகிப்து மன்னர் முகவ்கிசுக்கு எழுதப்பட்ட கடிதம்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நான்காவதாக எகிப்து மன்னர் முகவ்கிசுக்கு கடிதம் எழுதினார்கள். இந்தக் கடிதத்தை ஹாதிப் பின் அபீ பல்தஆ (ரலி) அவர்கள் மூலம் அனுப்பினார்கள். இதன் வாசகம் பின்வருமாறு:

அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்,

அல்லாஹ்வின் தூதர் முஹம்மது, எகிப்து மன்னர் முகவ்கிசுக்கு எழுதும் கடிதம்.

மன்னரே! நான் உம்மை இஸ்லாத்திற்கு அழைக்கிறேன். நீர் இறைவன் மீதும் அவனது தூதராகிய என்மீதும் நம்பிக்கை கொண்டு முஸ்லிமாகி விட வேண்டும். நீர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால், இறைவன் உம்மை எல்லாக் குழப்பங்களிலிருந்தும், சோதனை களிலிருந்தும் காப்பாற்றுவான். (ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மீதும் அல்லாஹ்வின் தூதராகிய என்மீதும் நீர் நம்பிக்கை கொண்டதற்காக) அவன் உமக்கு இருமடங்கு வெகுமதிகளை வழங்குவான்.

ஆனால் நீர் இதனை ஏற்காது நிராகரித்து விட்டால், அந்தப் பாவத்தையும் உமது ஆட்சிக்கு உட்பட்டிருக்கும் எகிப்தியர்கள் நம்பிக்கை கொள்ளாத பாவத்தையும் நீரே சுமக்க வேண்டி வரும்.

(இந்தக் கடிதத்தின் இறுதியில் கீழ்க்காணும் திருக்குர்ஆன் வசனம் குறிப்பிடப்பட்டிருந்தது.)

வேதத்தையுடையவர்களே! எங்களுக்கும் உங்களுக்கும் இடையில் ஒன்றுபட்ட ஒரு கருத்தின்பால் வாருங்கள். (அதாவது) நாம் அல்லாஹ்வையன்றி வேறெவரையும் வணங்க வேண்டாம்; அல்லாஹ்வை விட்டு விட்டு நம்முள் சிலர், வேறு சிலரைக் கடவுள்களாக ஆக்கிக் கொள்ளமாட்டோம். ஆனால் அவர்கள் புறக்கணித்து விட்டால், நீங்கள் அவர்களிடம், நாங்கள் (இறைவனுக்குக்) கட்டுப்பட்டு நடப்பவர்களாக இருக்கின்றோம் என்பதற்கு நீங்கள் சாட்சிகளாக இருங்கள் என்று கூறுங்கள். (திருக்குர்ஆன் 3:65)

இந்தக் கடிதத்தைக் கொண்டு சென்ற ஹாதிப் (ரலி) அவர்கள் எகிப்தை அடைந்தபோது, மன்னர் முகவ்கிஸ் தமது நாட்டின் தலைநகரத்தில் இருக்கவில்லை. அப்போது அவர் அலெக்ஸாண்டரி யாவில் இருந்ததால், ஹாதிப் (ரலி) அவர்கள் அங்குச் சென்றார்கள். அங்கு அந்த மன்னர் கடற்கரையில் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

ஹாதிப் (ரலி) அவர்கள் ஒரு படகில் பயணம் செய்து அவ்விடத்திற்குச் சென்றார்கள். அவ்விடத்தைச் சுற்றிலும் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. அவர்கள் அக்கடிதத்தை மூடி வைத்துக் கொண்டு தூரத்திலிருந்து சப்தம் கொடுத்தார்கள்.

அப்போது மன்னர், அவர்களைத் தம்மிடம் அழைத்துக் கொண்டு வருமாறு கட்டளையிட்டார். பின்னர் அந்தக் கடிதத்தைப் படித்து விட்டு, ஹாதிப் (ரலி) அவர்களிடம், அவர் உண்மையான நபியாக இருந்தால், தமது பகைவர்கள் அழிந்து விடுவதற்காக அவர் ஏன் பிரார்த்தனை செய்வதில்லை? என்று மன்னர் கேட்டார்.

ஹாதிப் (ரலி) அவர்கள் அந்த மன்னரிடம், நீங்கள் மரியத்தின் மகன் ஈஸாவின் மீதும் நம்பிக்கை கொண்டிருக்கிறீர்கள். அவர்களுக்கு அவர்களின் சமுதாயத்தினர் தொல்லைகள் கொடுத்தனர். ஆனால் அவர்கள், அந்தச் சமுதாயத்தினர் அழிந்துவிட வேண்டு மென்று பிரார்த்தனை செய்யவில்லையே; அது ஏன் என்று கேட்டார்கள்.

இதனைக் கேட்ட மன்னர், நீர் அறிவுள்ள ஒருவரிடமிருந்து வந்திருக்கின்ற அறிவுள்ள தூதுவராக இருக்கின்றீர்; நீர் அருமையானதொரு பதிலைத் தந்து விட்டீர் என்றார். அப்போது ஹாதிப் (ரலி) அவர்கள், மன்னரே! உமக்கு முன்னர் இங்கு ஒரு மன்னன் இருந்தான். அவன், அதாவது ஃபிர்அவ்ன், தன்னை மாபெரும் கடவுள் என்று கூறினான். இதனால் இறைவன் அவனுக்கு தண்டனை வழங்கினான். எனவே நீர் பெருமை கொள்ள வேண்டாம். இறைவனுடைய இந்த நபியின் மீது நம்பிக்கை கொள்வீராக. இறைவன் மேல் ஆணையாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் எந்த அளவிற்குத் தெளிவாக முன்னறிவிப்புகள் செய்துள்ளார்களோ, அந்த அளவிற்குத் தெளிவாக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப் பற்றி ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் முன்னறிவிப்புகள் செய்யவில்லை! நீங்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின்பால் யூதர்களை அழைப்பது போன்று, நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின்பால் உங்களை அழைக்கின்றோம். ஒவ்வொரு நபிக்கும் ஒரு சமுதாயம் உண்டு. அந்தச் சமுதாயம் அந்த நபிக்குக் கட்டுப்பட்டு நடப்பது கட்டாயக் கடமையாகும். ஆகவே அந்த நபியின் காலத்தில் நீங்கள் இருப்பதால், அவரை ஏற்றுக் கொள்வது உங்கள் கடமையாகும். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப் பின்பற்றக்கூடாது என்று எங்களுடைய மார்க்கம் தடை செய்யவில்லை. மாறாக, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மீதும் நம்பிக்கைக் கொள்ள வேண்டும் என்று நாங்கள் மற்றவர்களுக்குக் கட்டளையிடுகின்றோம் என்றார்கள்.

இது கேட்டு மன்னர் முகவ்கிஸ், அந்த நபியின் நிலைகள் பற்றி நான் கேள்வியுற்றேன். அவர் எந்தத் தீமையையும் செய்யுமாறு கட்டளையிடுவதோ நல்லதை செய்யக்கூடாதென்று தடை செய்வதோ இல்லை என்று நான் தெரிந்து கொண்டேன். அவர் மந்திரவாதிகளையும் குறி சொல்பவர்களையும் போன்றவரல்லர் என்பதையும் நான் அறிந்து கொண்டேன். அவருடைய சில முன்னறிவிப்புகள் நிறைவேறியிருப்பது பற்றியும் நான் கேள்வியுற்றேன் என்று கூறினார்.

இதன் பின்னர் அந்த மன்னர் யானைத் தந்தத்தினாலான சிறிய பெட்டியை கொண்டுவரச் சொல்லி அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கடிதத்தை வைத்து அதில் முத்திரையிட்டு அதனைப் பாதுகாப்பாக வைக்குமாறு தமது அடிமைப் பெண்ணிடம் ஒப்படைத்து விட்டார். அடுத்து அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பின்வருமாறு கடிதம் எழுதினார்:

'அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்,

எகிப்து மக்களின் மன்னர் முகவ்கிஸ், அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மதுக்கு எழுதும் கடிதம்,

தங்களுக்கு இறைவனிடமிருந்து சாந்தி உண்டாவதாக! தங்கள் கடிதத்தைப் படித்தேன். தாங்கள் அதில் குறிப்பிட்டிருந்ததை யும் தாங்கள் என்னை எவற்றின்பால் அழைத்தீர்களோ அவற்றையும் நான்

ஆராய்ந்து பார்த்தேன். இஸ்ராயீலின் (யூத நபிமார்களின்) முன்னறிவிப்புகளுக்கு ஏற்ப இந்த காலத்தில் ஒரு நபி தோன்றுவார் என்று ஏற்கனவே நான் அறிந்திருக்கின்றேன். அவர் சிரியாவில் தோன்றுவார் என்பது எனது கணிப்பாக இருந்தது. நான் தங்களின் தூதரிடம் மிகுந்த மரியாதையுடன் நடந்து கொண்டேன். நான் அவருக்கு ஓராயிரம் தீனார் பணமும், ஐந்து ஜோடி ஆடைகளும் வெகுமதியாக வழங்கியுள்ளேன். இரண்டு எகிப்திய மங்கையர் களை பரிசாக தங்களுக்கு அனுப்புகிறேன். எகிப்து சமுதாயத்தினர் இந்த மங்கையர்களை பெரிதும் மதிக்கின்றனர். அவர்களுள் ஒரு மங்கையின் பெயர் மாரியா. மற்றொருவரின் பெயர் ஸீரீன். எகிப்திய ஆடைகளுள் மிகவும் உயர்தரமான ஆடைகளையும் சவாரி செய்வதற்காக ஒரு கோவேறுக் கழுதையையும் தங்களுக்கு அனுப்புகிறேன். இறுதியாக, தங்களுக்கு இறைவனிடமிருந்து சாந்தி உண்டாவதாக என்று மீண்டும் பிரார்த்தனை செய்கின்றேன்'.

இந்தக் கடிதத்திலிருந்து மன்னர் முகவ்கிஸ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கடிதத்திற்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும் அளித்தார். எனினும், அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை எனத் தெரிகிறது.

## பெஹ்ரைன் நாட்டுத் தலைவருக்கு எழுதப்பட்ட கடிதம்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஐந்தாவதாக, பெஹ்ரைனின் தலைவர் முன்திர் தய்மிக்குக் கடிதம் அனுப்பினார்கள். இந்தக் கடிதம் அலா பின் ஹஸ்ரமி (ரலி) அவர்கள் மூலம் அனுப்பப்பட்டது. இந்தக் கடிதத்தின் வாசகம் பாதுகாக்கப்படவில்லை. அது அந்தத் தலைவருக்குக் கிடைத்ததும் அவர் நம்பிக்கைக் கொண்டு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கடிதம் எழுதினார். அதில் நானும் என்னுடைய பல நண்பர்களும் தங்கள் மீது நம்பிக்கைக் கொண்டுள்ளோம். இன்னும் சிலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. எனது நாட்டில் சில யூதர்களும், நெருப்பை வணங்கும் மஜூஸிகளும் வாழ்ந்து வருகின்றனர். நான் அவர்களிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்து தாங்கள் எனக்கு கட்டளையிடுமாறு வேண்டுகிறேன் என்று குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுதிய பதில் கடிதத்தில், நீர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது எமக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. என்னிடமிருந்து வரும் தூதர்களின் கட்டளை களை நீர் பின்பற்றி நடக்க வேண்டும். ஏனென்றால் அவர்களைப் பின்பற்றி நடப்பவர் என்னைப் பின்பற்றி நடப்பவராவார். உம்மிடம் வந்த எனது தூதர் உம்மைப் பற்றி பெரிதும் புகழ்ந்து பாராட்டினார். நீர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது பற்றியும் கூறினார். உமது சமுதாயத்திற்காக நான் இறைவனிடம் பிரார்த்தித்தேன். எனவே, நீர் முஸ்லிம்களிடையே இஸ்லாமிய நடைமுறைகளை செயல்படுத்தி அவர்களின் செல்வங்களை பாதுகாத்து வருவீராக. தமது வீட்டில் நான்கு மனைவியர்களைவிட அதிகமாக வைத்துக் கொள்ள எவருக்கும் அனுமதி வழங்கக் கூடாது. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் இதற்கு முன்னர் செய்திருந்த பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்பட வேண்டும். நற்செயல்களை செய்வதில் நீர் நிலைத்திருந்தால் நீர் உமது ஆட்சிப் பொறுப்பி லிருந்து விலக்கப்படமாட்டீர். அங்குள்ள யூதர்களுக்கும் நெருப்பை வணங்கும் மஜூஸிகளுக்கும் ஒரு வரி மட்டும் விதிக்க வேண்டும். அவர்களுக்கு வேறெந்த கோரிக்கையும் வைக்கக் கூடாது என்று குறிப்பிட்டார்கள்.

இதன் பின்னர், உமான் நாட்டு மன்னர், யமாமா நாட்டுத் தலைவர், கஸ்ஸான் நாட்டு மன்னர், ஏமன் நாட்டு பனீ நஹ்து, ஹம்தான் ஆகிய இரு கோத்திரங்களின் தலைவர்கள், பனீ அளீம் கோத்திரத்தின் தலைவர், ஹஸ்ரமீ கோத்திரத்தின் தலைவர் ஆகியவர்களுக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடிதம் எழுதினார்கள். அவர்களுள் பெரும்பாலார் இஸ்லாத்தை ஏற்று முஸ்லிம்களாகி விட்டனர்.

நாட்டு மன்னர்களும் தலைவர்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கோரி அவர்கள் அனைவருக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடிதங்கள் எழுதியது இறைவன் மீது அவர்களுக்கிருந்த வியக்கத்தக்க முழுமையான நம்பிக்கையையும், தாங்கள் ஒரு சமுதாயத்திற்கு

மட்டுமன்றி உலகிலுள்ள எல்லாச் சமுதாயங்களுக்கும் இறைத்தூதராக அனுப்பப்பட்டிருந்ததை மிகத் தெளிவாக அறிந்திருந்தார்கள் என்பதையும் காட்டுகிறது.

எந்த மன்னர்களுக்கும் தலைவர்களுக்கும் கடிதங்கள் எழுதப்பட்டனவோ அவர்களுள் பலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர்; அவர்களுள் சிலர் பணிவுடனும் மரியாதையுடனும் கடிதங்களை ஏற்றுக் கொண்டனர். ஆனால் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. இன்னுஞ் சிலர் அவற்றிற்கு சாதாரணமான மதிப்பளித்தனர்; மற்றுஞ்சிலரோ அவற்றைப் பெற்றுத் தற்பெருமையையும் ஆணவமும் காட்டினர்.

ஆனால் அவர்களுள் ஒவ்வொரு மன்னரும் சமுதாயத்தினரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கடிதங்களுடன் எவ்வாறு நடந்து கொண்டனரோ அவ்வாறே அந்த மன்னர் களுடனும் அந்தச் சமுதாயங்களுடனும் நடந்து கொள்ளப்பட்டது என்பதில் சிறிதும் ஐயமில்லை. இதற்கு உலக வரலாறும் சாட்சி பகர்ந்து கொண்டிருக்கிறது.

## கைபர் கோட்டையின் வீழ்ச்சி

யூதர்களும் அரபு நாட்டு நிராகரிப்பாளர்களும் தங்கள் சுற்றுப்புறங்களில் வாழ்ந்து வந்த கோத்திரங்களை முஸ்லிம்களுக்கு எதிராகத் தூண்டிக் கொண்டிருந்தனர் என்பதை முன்பே குறிப்பிட்டிருந்தோம். இப்பொழுது முஸ்லிம்களை அழிப்பதற்கோ, படையெடுத்துச் சென்று மதீனாவைத் தாக்குவதற்கோ தங்களுக்கு வலிமையில்லை என்று தெரிந்து கொண்ட யூதர்கள், ஒருபுறம் ரோமானிய அரசின் தென் எல்லைப் பகுதியில் வாழ்ந்து வந்த கிறித்தவ அரபுக் கோத்திரங்களை முஸ்லிம்களுக்கெதிராகத் தூண்டிவிடத் தொடங்கினர். மறுபுறம் ஈராக்கில் வாழ்ந்து வந்த தங்கள் மதத்தைச் சார்ந்தவர்களுக்கு முஸ்லிம்களுக்கெதிராக மன்னர் கிஸ்ராவைத் தூண்டிவிட வேண்டுமென்று கோரி கடிதங்கள் எழுதத் தொடங்கினர்.

யூதர்களின் இந்தத் தீய நடவடிக்கையினால் முஸ்லிம் களுக்கெதிராகச் செயல்படத் துணிந்துவிட்ட மன்னர் கிஸ்ரா, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கைது செய்யுமாறு யமன் மாநில ஆளுநருக்குக் கட்டளையிட்டார். ஆனால் இறைவன் தனது அருளால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் காப்பாற்றி, மன்னர் கிஸ்ராவின் சூழ்ச்சியையும் யூதர்களின் சூழ்ச்சியையும் முறியடித்து விட்டான் என்பதையும் முன்பே குறிப்பிட்டிருந்தோம்.

இறைவனது அருள் இல்லாதிருந்திருப்பின், பௌதீகமான வற்றைக் கவனத்திற்கொண்டு பார்க்கும் போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் ஒருபுறம் மன்னர் கிஸ்ராவையும் மறுபுறம் மன்னர் கெய்ஸரையும் எவ்வாறு எதிர்க்க முடியும்? எனவே இதிலிருந்து இறைவனே மன்னர் கிஸ்ராவைக் கொன்று விட்டு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படக்கூடாது என்று அந்த மன்னரின் மகன் கட்டளையிடுமாறு செய்ய வைத்தான் என்று தெளிவாகத் தெரிகிறது. இந்த அற்புதத்தைக் கண்ட யமன் மாநில அதிகாரிகள் நம்பிக்கைக் கொண்டு இஸ்லாத்தைத் தழுவினர். எந்த படையெடுப்புமின்றி யமன் மாநிலம், இஸ்லாமிய ஆட்சிக்குட்பட்டு விட்டது.

யூதர்கள் தாங்களாகவே உருவாக்கிய இந்த நிலைகள், மதீனாவிலிருந்து அவர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்று கட்டாயப்படுத்தின. ஏனென்றால் அவர்கள் மதீனாவுக்குப் பக்கத்தில் வாழ்ந்து வந்தால், நிச்சயம் மேலும் சூழ்ச்சிகளைச் செய்து வன்முறைக்கும் இரத்தக் களறிகளுக்கும் காரணமானவர்களாகி விடுவார்கள்.

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுதைபிய்யா சமாதான உடன்படிக்கை செய்து விட்டுத் திரும்பி சற்றேறக்குறை ஐந்து மாதங்களுக்குப் பிறகு, மதீனாவிற்குச் சிறிது தொலைவிலும் அதற்கெதிராக எளிதில் சூழ்ச்சி செய்ய ஏற்ற வகையிலும் அமைந்திருந்த கைபரிலிருந்து யூதர்களை வெளியேற்றி விட முடிவு செய்தார்கள்.

கி.பி. 628 ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆயிரத்து அறுநூறு நபித்தோழர்களுடன் கைபரை நோக்கிச் சென்றார்கள். கைபர் மிக்க வலுவாகவும், பாதுகாப்பாகவும் அமைந்திருந்த நகரமாகும். அதனைச் சுற்றி நான்கு திசைகளிலும் காணப்பட்ட

குன்றுகளின் மேல் கோட்டைகள் அமைந்திருந்தன. இத்தகு வலிமை வாய்ந்த நகரத்தை இந்த அளவு குறைந்த படைவீரர்களைக் கொண்டு வெற்றி பெறுவது அவ்வளவு எளிதன்று. அதனைச் சுற்றியிருந்த சிறிய ஊர்கள், சிறிய போர்களின் மூலம் வெற்றி கொள்ளப்பட்டன.

ஆனால், அங்கிருந்த யூதர்கள் திரண்டு சென்று நகரத்தின் மையப்பகுதியிலிருந்த கோட்டைக்குள் சென்றுவிடவே, அதனை வெற்றி கொள்வதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள், பயனளிக்காமல் போய்விடும்போல் தோன்றியது. அப்போது ஒருநாள் இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அந்த நகரத்தை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் வெற்றிகொள்ள வேண்டுமென்று விதிக்கப்பட்டுள்ளது என்று அறிவித்தான்.

எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மறுநாள் காலையில், இறைவனும் அவனது தூதரும் முஸ்லிம்களும் நேசிக்கும் ஒருவரிடம் நான் இஸ்லாத்தின் கொடியை வழங்குவேன்; அவர் மூலம் இந்தக் கோட்டை வெற்றி கொள்ளப்படும் என்று இறைவன் விதித்துள்ளான் என்று அறிவித்தார்கள்.

இதன் பிறகு அடுத்த நாள் காலையில் அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை அழைத்து, இஸ்லாத்தின் கொடியை அவர்களிடம் ஒப்படைத்தார்கள். இவர்கள் நபித்தோழர்களின் போர் வீரர்களை அழைத்துச் சென்று அந்தக் கோட்டையைத் தாக்கினார்கள். யூதர்கள் உறுதி வாய்ந்த அந்தக் கோட்டைக்குள் மிகவும் பாதுகாப்பாக இருந்துங்கூட, இறைவன் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கும் ஏனைய நபித்தோழர்களுக்கும் அந்த நாளில் மிகுந்த வலிமையை வழங்கியதால், அன்று பொழுது சாய்வதற்கு முன்னரே அந்தக் கோட்டை வெற்றிகொள்ளப்பட்டது.

இதன் பின்னர் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி எல்லா யூதர்களும் அவர்களின் மனைவி மக்களும் கைபரை விட்டுவிட்டு, மதீனாவிலிருந்து வெளியேறி மிகத் தொலைவிற்கு சென்றுவிட வேண்டும். அவர்களின் எல்லாப் பொருள்களையும் முஸ்லிம்கள் பறிமுதல் செய்து கொள்வார்கள். இதற்கு மாறாகப் பொய்யுரைத்து அங்குள்ள பொருளை அல்லது சொத்தை இரகசியமாக எடுத்துச் செல்பவர், இந்த உடன்படிக்கைக்கு முரண்பட்டுச் சதிசெய்த தண்டனைக்குரியவராவார்.

## வியக்கத்தக்க மூன்று நிகழ்ச்சிகள்

இந்தப் போரில் வியக்கத்தக்க மூன்று நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. அவற்றுள் ஒன்று இறைவன் காட்டிய அற்புதத்தையும், மற்ற இரண்டும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்ந்த பண்புகளையும் எடுத்துக் காட்டுகின்றன.

அந்த அற்புதமானது, இந்தப் போருக்குப் பின்னர் கைபரின் தலைவர் கினானா என்பவரின் மனைவி ஸஃபிய்யா விதவையாகி விட்டார். அவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருமணம் செய்து கொண்டபோது அவருடைய முகத்தில் நீண்ட வடுக்கள் இருப்பதைக் கண்டு, ஸஃபிய்யாவே! உங்கள் முகத்தில் இந்த வடுக்கள் எவ்வாறு ஏற்பட்டன? என்று வினவினார்கள்.

இதற்கு அவர் ‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஒரு நாள் நான் கண்ட கனவில், சந்திரன் என் மடியில் வந்து விழுந்தது. இந்தக் கனவை நான் மறுநாள் எனது கணவரிடம் கூறினேன். அவர் இது அதிசயமான கனவாக இருக்கிறது. உமது தந்தை கற்ற அறிஞராக இருக்கிறார். அவரிடம் சென்று இந்தக் கனவை கூறு என்றார். எனவே நான் எனது தந்தையிடம் இந்தக் கனவைக் கூறினேன். இதனைக் கேட்டவுடன் அவர் வேகமாக என் முகத்தில் அறைந்து விட்டு, தகுதியற்றவளே! நீ அரபு நாட்டின் மன்னரை திருமணம் செய்து கொள்ள விரும்புகிறாயா? என்று கேட்டதாகக் கூறினாள்.

*(ஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 3, பக்கம் 50)*

இவ்வாறு அவர் கூறியதற்குக் காரணம், அரபு மக்களின் சமுதாயச் சின்னம் சந்திரன் ஆகும். கனவில் ஒருவர் தனது மடியில் சந்திரன் விழுவதுபோல் கண்டால், அரபு நாட்டு மன்னருடன் அவருக்குத் தொடர்பு ஏற்பட்டு விட்டது என்பது அதன் விளக்கமாகும். சந்திரன் பிளந்து விட்டதாகவோ கீழே விழுந்து விட்டதாகவோ ஒருவர் கனவு கண்டால் அரபு ஆட்சியில் பிளவு ஏற்பட்டு விட்டது. அல்லது அந்த ஆட்சி அழிந்து விட்டது என்பது விளக்கமாகும்.

இந்தக் கனவு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைக்கு அடையாளமாகும். இறைவன் தனது அடியார்களுக்கு மறைமுகமான செய்திகளை அறிவித்துக் கொண்டிருக்கின்றான் என்பதற்கும் இது ஒரு எடுத்துக்காட்டாகும். மறைவான செய்திகளை நம்பிக்கைக் கொண்டவர்களுக்கு மிகுதியாகவும், நம்பிக்கைக் கொள்ளாதவர்களுக்கு குறைவாகவும் இறைவன் அறிவிக்கின்றான். ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் இதற்கு முன்னர் யூதப் பெண்ணாகத்தான் இருந்தார்கள். இறைவன் அவர்களுக்கு முற்றிலும் மறைவான செய்தியை அறிவித்தான். அதற்கேற்ப இவர்களின் கணவர், உடன்படிக்கைக்கு மாற்றம் செய்ததனால் மரண தண்டனைக்கு ஆளாகி கொல்லப்பட்டார். ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் முதலில் ஒரு நபித்தோழரிடம் கைதியாக சென்றிருந்தார்கள். அவர்களின் அந்தஸ்திற்கேற்ப அவர்களுடனேயே வாழ வேண்டும் என நபித்தோழர்கள் எண்ணினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஃபிய்யா அவர்களை மணம் முடித்து மனைவி என்ற அந்தஸ்தை வழங்கினார்கள். இறைவன் அறிவித்த அந்தக் கனவு இவ்வாறு முழுமையான நிறைவேறியது.

குறிப்பிடத்தக்க இரண்டாவது நிகழ்ச்சி பின்வருமாறு நிகழ்ந்தது:

கைபர் முற்றுகையிடப்பட்ட நாட்களில் ஒரு யூதத் தலைவரின் ஆடுகளை மேய்த்து வந்த ஒருவர் முஸ்லிமாகி விட்டார். அவர், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இப்பொழுது என்னால் அந்த யூதர்களிடம் செல்ல முடியாது. அந்த யூதருடைய இந்த ஆடுகள் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொருள்களாக இருக்கின்றன. இப்பொழுது நான் அவற்றை என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார். இதற்கு அவர்கள், இந்த ஆடுகளின் முகங்கள் அந்த கோட்டையை நோக்கி இருக்குமாறு செய்து, அவற்றை விரட்டி விடுங்கள், இறைவன் அவற்றை அவற்றின் உரிமையாளரிடம் சேர்த்து விடுவான் என்று கூறினார்கள். எனவே அவர் அவ்வாறு செய்தார். ஆடுகள் அந்தக் கோட்டைக்குப் பக்கத்தில் சென்றன. கோட்டையில் உள்ளவர்கள் அவற்றை அங்கிருந்து உள்ளே கொண்டு சென்றனர்.

இந்த நிகழ்ச்சியில் இருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்பி ஒப்படைக்கப்பட்ட பிறரின் பொருள்களை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற நியதியில் எந்த அளவுக்கு கண்டிப்பாக தாங்களும் செயலாற்றி, மற்றவர்களையும் செயல்பட வைத்தார்கள் என்பது புலனாகிறது.

போரின் போது போர் செய்பவர்களின் செல்வங்களை எடுத்துக் கொள்வது தவறல்ல என்று இன்றும் கூடக் கருதப்படுகிறது. நாகரிகமான காலம் என்று கூறப்படுகின்ற இந்தக் காலத்தில் எதிரிகளின் படைக்குரிய விலங்குகள் தங்களுக்குக் கிடைத்து அவற்றை அதே சமயத்தில் அந்த எதிரிகளிடமே திருப்பிக் கொடுக்கப்பட்ட நிகழ்ச்சி எப்போதாவது நிகழ்ந்திருக்கிறதா?

அந்த ஆடுகள் போர் செய்து கொண்டிருக்கும் பகைவர்களின் பொருள்களாக இருந்தன; அவை முற்றுகையிடப்பட்ட அந்த கோட்டைக்குத் திருப்பி அனுப்பப்படுவதால், பகைவர்களின் பல மாத உணவுக்குரியவையாகி விடுகின்றன; இந்த உணவுப் பொருள்களை நம்பி, இன்னும் நீண்ட காலத்திற்கு அந்த முற்றுகையைப் பகைவர்களால் சமாளிக்க முடியும். இவ்வாறிருந்துங்கூட, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய அந்த முஸ்லிமின் நாணயத்திற்குக் களங்கம் ஏற்பட்டு விடக் கூடாதென்பதற்காக அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த அந்த ஆடுகளைக் கோட்டைக்குத் திருப்பி அனுப்பிவிடச் செய்தார்கள்.

மூன்றாவதாக நிகழ்ந்த நிகழ்ச்சியாவது, யூதப் பெண் ஒருத்தி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிராணிகளின் எந்தப் பாகத்திலுள்ள இறைச்சியை அதிகமாக விரும்புவார்கள்? என்று நபித்தோழர்களிடம் கேட்டாள். முன்னஞ்சந்து இறைச்சியை அவர்கள் அதிகம் விரும்புவார்கள் என்று நபித்தோழர்கள் கூறினார்கள்.

இது கேட்டு அவள் ஓர் ஆட்டை அறுத்து, இறைச்சித் துண்டுகளைச் சூடான கற்களில் வாட்டி அவற்றிலும், குறிப்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதிகமாக விரும்பி உண்ணக்கூடிய முன்னஞ்சந்து இறைச்சிகளிலும் கொடிய விஷத்தைக் கலந்துவிட்டாள்.

பொழுதடைந்த பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மாலைத் தொழுகையை நிறைவேற்றி விட்டுத் தங்களுடைய கூடாரத்திற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தபோது, தங்களுடைய கூடாரத்திற்குப் பக்கத்தில் ஒரு பெண் அமர்ந்திருப்பதைக் கண்டு, பெண்ணே! எதற்காக இங்கு வந்திருக்கிறாய்? என்று வினவியதற்கு, அவள் அவர்களிடம், அபுல் காசிம் அவர்களே! நான் தங்களுக்காக ஓர் அன்பளிப்பு கொண்டு வந்திருக்கிறேன் என்றாள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு நபித்தோழரிடம், இவள் தரும் பொருளை வாங்கிக் கொள்ளுங்கள் என்றார்கள். இதன் பின்னர் அவர்கள் உணவு உண்ண அமர்ந்தார்கள். அந்த உணவுடன் அந்த பெண் அளித்த பொரித்த முன்னஞ்சந்து இறைச்சியும் வைக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து அவர்கள் ஒரு துண்டு சாப்பிட்டார்கள். நபித்தோழர்களுள் பஷீர் பின் பர்ரா பின் மஃரூர் என்பாரும் ஒரு துண்டு சாப்பிட்டார்கள். ஏனைய நபித்தோழர்களும் அந்த இறைச்சியைச் சாப்பிடத் தொடங்கியபோது, அதனைச் சாப்பிடாதீர்கள். ஏனென்றால் இறைச்சியில் விஷம் கலந்திருக்கிறதென்று இந்தக் கை எனக்கு அறிவித்து விட்டது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இது குறித்து இறைவன் அவர்களுக்கு அறிவித்தான் என்பதன்று அதன் பொருள். மாறாக இது அரபு மக்களின் மொழி வழக்காகும். எனவே இதன் பொருள், இந்த இறைச்சியைச் சுவைத்துப் பார்த்ததும், இதில் விஷம் கலந்திருப்பது எனக்குத் தெரிந்து விட்டது என்பதாகும். திருக்குர்ஆனிலும் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் காலத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை விளக்கும் போது, ஒரு சுவரைக் குறித்து அது சரிந்து கீழே விழ விரும்புகிறது என வந்துள்ளது. இதன் பொருள் சரிந்து கீழே விழுவதற்கான அறிகுறிகள் அந்த சுவற்றில் ஏற்பட்டு விட்டன என்பதேயாகும். எனவே இங்கும் அந்தக் கை கூறியது என்று பொருள் கொள்ளக் கூடாது. எனினும் அந்த இறைச்சியை சுவைத்துப் பார்த்ததினால் எனக்குத் தெரிந்தது என்பதே அதன் கருத்து. இந்தக் கருத்தை இதனை அடுத்து வருகின்ற வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன.

அப்போது பஷீர் பின் பர்ராஃ (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தங்களுக்கு மதிப்பளித்த இறைவன் மேலும் ஆணையாகக் கூறுகிறேன். அந்த இறைச்சித் துண்டில் விஷம் கலந்திருந்தது எனக்கு தெரிந்தது. அதனைத் தூக்கி எறிந்து விடவேண்டுமென்று என் உள்ளம் விரும்பியது. ஆனால் நான் அவ்வாறு செய்தால், தங்களுக்கு வருத்தம் ஏற்பட்டு தாங்கள் உண்பதை நிறுத்தி விடுவீர்களே என்று நினைத்தேன். அப்போது எனது உள்ளம் இதில் நஞ்சு கலந்திருக்கிறது. இதனை அல்லாஹ்வின் தூதர் சாப்பிடாமல் இருக்க வேண்டுமே என்று நினைத்துக் கொண்டிருந்தபோது தாங்கள் அதனைச் சாப்பிட்டீர்கள். நானும் தங்களைப் பின்பற்றி அதனை உண்டேன் என்றார்கள்.

இதனை அடுத்து சில நேரத்திற்குப் பிறகு பஷீர் பின் பர்ராஃ (ரலி) அவர்களின் உடல் நலம் கெட்டு விட்டது. சில அறிவிப்புகளில், அவர்கள் அங்கேயே அப்போதே மரணமடைந்து விட்டார்கள் என்றும் மற்றுஞ் சில அறிவிப்புகளில் அவர்கள் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்து பின்னர் மரணமடைந்தார்கள் என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தப் பெண்ணை அழைத்து வரச்சொல்லி, நீ இந்த இறைச்சியில் விஷத்தைக் கலந்திருக்கிறாய் என்று கூறினார்கள். இதனைத் தங்களுக்கு அறிவித்தது யார் என்று அவள் கேட்டாள். இறைச்சித் துண்டைத் தங்களின் கையில் வைத்திருந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்தக் கை அறிவித்தது என்று கூறினார்கள். தனது இரகசியம் அவர்களுக்குத் தெரிந்த விட்டதைப் புரிந்து கொண்ட அவள், தானே விஷத்தைக் கலந்ததாக ஒப்புக் கொண்டாள். அப்போது அவர்கள் அவளிடம், வெறுக்கத்தக்க இந்தச் செயலைச் செய்யுமாறு உன்னைத் தூண்டியது எது? என்று கேட்டதற்கு, என் சமுதாயத்துடன் தாங்கள் போர் செய்தீர்கள். என் உறவினர்கள் இந்தப் போரில் கொல்லப்பட்டனர். எனவே நான் தங்களை விஷம் வைத்து கொல்ல எண்ணினேன். நீங்கள் பொய்யர் என்றால் நீங்கள் இறந்திருப்பீர்கள். தாங்கள் உண்மையிலேயே இறை தூதராக இருந்தால், இறைவன் தங்களைக் காப்பாற்றி விடுவான் என்றும் தாங்கள் என்னை மன்னித்து விடுவீர்கள் என்றும் நான் எண்ணினேன் என்று பதிலளித்தாள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவள் கூறியதைக் கேட்டு அவளை மன்னித்து விட்டார்கள்.

*(ஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 3 பக்கம் 61)*

நிச்சயமாக மரண தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்த அவளுக்கு அந்தத் தண்டனையை கொடுக்கவில்லை. அந்த நிகழ்ச்சி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தங்களையும் தங்கள் தோழர்களையும் கொல்ல முனைந்தவர்களை எவ்வாறு மன்னித்தருளிக் கொண்டிருந்தார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது. ஒருவர் உயிருடனிருப்பது, வருங்காலத்தில் உண்மையிலேயே மிக அதிகமான குழப்பங்களுக்குக் காரணமாக இருக்கும் என்று தெரிந்தால் மட்டுமே அவருக்கு மரண தண்டனை அளிப்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழக்கமாக இருந்தது.

## கஅபாவைச் சுற்றி வரும் நிகழ்ச்சி

ஏற்கனவே செய்யப்பட்ட உடன்படிக்கையின்படி, ஹிஜிரி ஏழாம் ஆண்டு கி.பி.629 பிப்ரவரி மாதம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கஅபாவைச் சுற்றி வருவதற்காகச் செல்லவிருந்தார்கள். அதற்கென்று குறிப்பிடப்பட்டிருந்த காலம் வந்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரண்டாயிரம் தோழர்களுடன் கஅபாவைச் சுற்றி வருவதற்காகப் புறப்பட்டார்கள். மக்காவுக்குப் பக்கத்திலுள்ள ஒரு தங்குமிடமாகிய மர்ருல் லஹ்ரான் என்னும் இடத்தை அடைந்தபோது ஹுதைபிய்யா உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தபடி, கனமான போர்க் கருவிகளையும் கவசங்களையும் அங்குக் குவித்து வைத்து விட்டு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் தோழர்களுடன் உறையிலிட்ட வாள்களை மட்டும் எடுத்துக் கொண்டு மக்காவின் ஹரம் ஷரீஃபில் நுழைந்தார்கள்.

சொந்த நாட்டிலிருந்து வெளியேறி ஏழாண்டுகளுக்குப் பின் முஹாஜிர்கள் (மக்காவிலிருந்து மதீனாவுக்குக் குடிபெயர்ந்து சென்றவர்கள்) மீண்டும் மக்காவிற்குள் நுழைவது, சாதாரணமான ஒரு நிகழ்ச்சியன்று. ஆதலால் அவர்களின் உள்ளம் ஒருபுறம் மக்காவில் நீண்ட காலமாகத் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை நினைத்து இரத்தம் வடித்துக் கொண்டும், மறுபுறம் தங்களுக்கு கஅபாவைச் சுற்றிவர வாய்ப்பளித்த இறைவனின் அருளை நினைத்து மகிழ்ச்சியடைந்து கொண்டும் இருந்தது.

மக்காவாசிகள் அங்கிருந்து வெளியேறி மலையுச்சிகளில் நின்றுகொண்டு முஸ்லிம்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர். இன்று இறைவன் தங்களுக்கு மீண்டும் மக்காவிற்குள் நுழைய வாய்ப்பளித்தானல்லவா? என்பதைப் பறைசாற்றித் தெரிவிக்க முஸ்லிம்களின் உள்ளம் விரும்பியது. எனவே அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள், அப்போது போர்க்களக் கவிதைகளைப் பாடத் தொடங்கி விட்டார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களைத் தடுத்து, இவ்வாறான கவிதைகளைப் பாடாதீர்கள். இறைவனைத் தவிர வேறெவரும் வணக்கத்திற் குரியவர் இலர்; அந்த இறைவனே தன் தூதருக்கு உதவி புரிந்து, நம்பிக்கைக் கொண்டவர்களை அழிவு என்னும் பாதாளத்திலிருந்து வெளியேற்றி அவர்களுக்கு உயர்வு வழங்கினான்; அந்த இறைவனே அவர்களின் முன்னாலேயே பகைவர்களை விரட்டியடித்தான் என்று கூறுங்கள் என்றார்கள்.

கஅபாவைச் சுற்றி வருதல், ஸஃபா, மர்வா என்னும் இரண்டு குன்றுகளுக்கிடையே விரைந்து ஓடுதல் ஆகியவற்றை நிறைவேற்றியதன் பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தங்கள் தோழர்களுடன் மூன்று நாள் மக்காவில் தங்கியிருந்தார்கள்.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களின் மைத்துனி மைமூனா, மக்காவில் இருந்தார். விதவையாயிருந்த இவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மறுமணம் புரிந்துகொள்ள வேண்டு மென்று ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் விரும்பினார்கள். இதனை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

நான்காம் நாளன்று மக்கத்தினர்கள் உடன்படிக்கைக்கேற்ப மக்காவிலிருந்து புறப்படுமாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கேட்டுக் கொண்டதும் அவர்கள், தங்களின் எல்லாத் தோழர்களிடமும் உடனே மக்காவை விட்டு வெளியேறி, மதீனாவுக்குப் புறப்படுமாறு கட்டளையிட்டார்கள்.

மக்கத்தினர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, அப்பொழுது தாங்கள் மணந்து கொண்ட ஹஸ்ரத் மைமூனா (ரலி) அவர்கள், பிறகு தங்களுடைய பொருள்களை ஏற்றிக் கொண்டு வரும் வாகனங்களுடன் வரட்டும் என்று மக்காவிலேயே அவர்களை விட்டுவிட்டுத் தங்களுடைய ஒட்டகத்தில் ஏறி, ஹரம் எல்லையைக் கடந்து ஓரிடத்தில் தங்கினார்கள். மாலையில் அங்கு அழைத்து

வரப்பட்ட அவர்களின் துணைவியார் ஹஸ்ரத் மைமூனா (ரலி) அவர்கள், அன்றிரவு அந்தக் காட்டுப் பகுதியிலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து சேர்ந்தார்கள்.

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பலதார மணம் செய்தது தொடர்பாக எழுதப்பட்ட ஆட்சேபனைக்குப் பதில்

இப்பொழுது நான் எழுதிக் கொண்டிருக்கும் இந்த அளவு சுருக்கமான வரலாற்றில் மேற்கூறப்பட்ட அந்த நிகழ்ச்சியை விரிவாக விவரிப்பது ஏற்புடையதன்று. எனினும் அந்த நிகழ்ச்சி யிலுள்ள ஒரு செய்தியினை இங்குக் குறிப்பிட நான் கடமைப் பட்டிருக்கிறேன். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பல மனைவிமார்கள் இருந்தார்களென்றும் அவர்களின் பலதார மணம் அவர்கள் சிற்றின்பப் பிரியராக இருந்தார்கள் என்பதையே காட்டுகிறது என்றும் அவர்களின் மீது ஆட்சேபணை செய்யப்படுகிறது.

ஆனால் அவர்கள் தங்கள் மனைவிமார்களுடன் கொண்டிருந்த தொடர்பை நாம் பார்க்கும்போது, அது மிக உயர்ந்ததாகவும் எந்தக் களங்கமுமின்றி மிகத் தூய்மையானதாகவும் ஆத்மீகமானதாகவும் இருந்ததை நாம் நன்கு தெரிந்து கொள்வது மட்டுமல்லாமல், அதுபோன்ற தொடர்பை ஒரு மனைவியை மட்டும் கொண்டிருந்த எவரும் தமது மனைவியுடன் கொண்டதில்லை என்பதையும் நாம் நன்கு தெரிந்து கொள்கிறோம்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தங்கள் மனைவி மார்களுடன் கொண்டிருந்த தொடர்பு, சிற்றின்பத்தை அடிப்படை யாகக் கொண்டு இருந்திருந்தால், நிச்சயமாக அவர்களின் மனைவி மார்களின் உள்ளம், ஆழ்ந்த ஆன்மீக உணர்வைக் கொண்டதாக இருந்திருக்காது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது இந்த மனைவிமார்கள் கொண்டிருந்த மகத்தான அன்பும் பற்றும் அவர்களிடமிருந்து பெற்ற மிக உயர்வான பண்பும் அவர்களின் மறைவுக்குப் பின் நிகழ்ந்த பல்வேறு வரலாற்று நிகழ்ச்சிகளிலிருந்து நிரூபிக்கப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாக, மேற்கூறப்பட்ட அந்தச் சாதாரண நிகழ்ச்சியையே எடுத்துக் கொள்ளுங்கள். ஹஸ்ரத் மைமூனா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் திருமணம் செய்துகொண்டு முதல் தடவையாக ஹரம் எல்லைக்கப்பால் ஒரு கூடாரத்தில் சந்தித்தார்கள். அவர்களுக்கிடையிலான அந்தத் தொடர்பு உடல்ரீதியானதாக இருந்திருப்பின், மேலும் அவர்கள் தங்கள் மனைவிமார்களுள் சிலருக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்திருப்பின் மைமூனா (ரலி) அவர்கள், அந்த நிகழ்ச்சியைத் தங்கள் வாழ்நாளின் மிகச் சிறந்த நிகழ்ச்சியாகக் கருதாமல், அதனை மறந்திருப்பார்கள்.

ஆனால் ஹஸ்ரத் மைமூனா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மறைவுக்குப் பிறகு ஐம்பது ஆண்டுகாலம் வாழ்ந்தார்கள். மொத்தம் எண்பதாண்டு காலம் வாழ்ந்து மரணமடைந்தார்கள். ஆனால் மிகுந்த வாழ்த்துக்குரிய அந்தத் தொடர்பை அவர்களால் தங்கள் வாழ்நாள் முழுவதும் மறக்கவே முடிந்ததில்லை.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மறைவிற்குப் பிறகு ஐம்பது ஆண்டுகளைக் கொண்ட ஒரு நீண்ட காலம் வரை வாழ்ந்து விட்ட ஹஸ்ரத் மைமூனா (ரலி) அவர்களுக்குத் தங்களுடைய வாலிபப் பருவ உணர்வுகள் தணிந்து போயிருக்கும். தங்களுடைய எண்பதாவது வயதை அடைந்திருந்த அந்தக் காலத்தில் அவர்கள், தங்களைச் சுற்றிலுமிருந்த அண்டை அயலார் களிடம், நான் மரணமடைந்ததும் மக்காவுக்கு வெளியில் எந்த இடத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூடாரம் இருந்ததோ - எந்த இடத்தில் நான் அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டேனோ - அந்த இடத்தில் என்னை நல்லடக்கம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

உலகில் எவ்வளவோ வியக்கத்தக்க உண்மையான நிகழ்ச்சிகளும் நிகழ்ந்துள்ளன; எத்தனையோ கற்பனைக் கதைகளும் உள்ளன. ஆனால் அந்த நிகழ்ச்சிகளிலிருந்தும் கதைகளிலிருந்துங் கூட, ஹஸ்ரத் மைமூனா (ரலி) அவர்களிடம் காணப்பட்ட அந்த அன்பிற்கும் பற்றிற்கும் நிகரான ஒரு நிகழ்ச்சியை எடுத்துக் காட்ட முடியுமா?

## காலிது பின் வலீதும், அம்ரு பின் ஆஸும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுதல்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கஅபாவை சுற்றி வலம் வந்து திரும்பியதும், மக்காவிலுள்ள குறிப்பிடத்தக்க இருவர் இஸ்லாத்தைத் தெரிந்து அதனை ஏற்றுக் கொண்டனர். அவ்விருவரும் இஸ்லாத்தின்மீது தொடுக்கப்பட்ட போர்களின் தொடக்கத்திலிருந்து அந்த நேரம் வரை நிராகரிப்பாளர்களுள் பெரும் ஆற்றல்மிக்க படைத்தளபதிகளைச் சார்ந்தவர்களாக இருந்தனர். அவ்விருவரும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பிறகு, இஸ்லாமிய வரலாற்றில் அவர்களின் பெயர்கள் நிலைத்திருக்கும் வகையில் தங்களை இஸ்லாத்தின் மிகவும் புகழ்பெற்ற தளபதிகள் என்று நிரூபித்துக் காட்டினர்.

அவர்களுள் ஒருவரின் பெயர் காலிது பின் வலீது; பின்னர் இவர் மாபெரும் ரோமானிய அரசின் அடித்தளங்களைத் தகர்த்து அதன் மாநிலங்களை ஒன்றன்பின் ஒன்றாக வெற்றி கொண்டு அவற்றை இஸ்லாமிய ஆட்சியுடன் இணைத்தார்! அவர்களுள் இன்னொருவரின் பெயர் அம்ரு பின் ஆஸ். இவர் எகிப்தை வென்று அதனை இஸ்லாமிய ஆட்சியுடன் இணைத்தார்!

## மூத்தா போர்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கஅபாவுக்குச் சென்று திரும்பி வந்தபோது யூதர்களின் தூண்டுதலாலும் நிராகரிப்பாளர்களின் தூண்டுதலாலும் சிரியா நாட்டின் எல்லைப் பகுதியிலுள்ள அரபு இனக் கிறித்தவர்கள், மதீனாவைத் தாக்குவதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருப்பதாக அவர்களுக்குத் தகவல்கள் கிடைத்துக் கொண்டிருந்தன. எனவே அவர்கள், இந்தத் தகவல்கள், எந்த அளவிற்கு உண்மையானவை என்பதைத் தெரிந்து வருமாறு பதினைந்து பேரைக் கொண்ட ஒரு குழுவினரைச் சிரியா எல்லைக்கு அனுப்பி வைத்தார்கள்.

அவர்கள் சிரியா நாட்டு எல்லையை அடைந்ததும், ஒரு படை திரண்டு கொண்டிருப்பதைக் கண்டார்கள். அவர்கள் திரும்பி வந்து இந்தச் செய்தியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தெரிவிப்பதற்குப் பதிலாக, அவர்கள் மிகுந்த துணிச்சலுடன் முன்னேறிச் சென்று அந்தப் படையினர்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி எடுத்துரைக்கத் தொடங்கி விட்டனர். ஏனென்றால் இஸ்லாத்தைப் பற்றி எடுத்துரைப்பதில் மிகுந்த ஆர்வங்கொண்டிருப்பது உண்மையான நம்பிக்கையாளர்களின் அடையாளமாக இருந்தது. பகைவர்களால் தூண்டிவிடப்பட்டு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நகரத்தைத் தாக்கி அதனை வெற்றி கொள்ள விரும்பிய அந்த கிறித்தவர்கள், நபித்தோழர்கள் செய்த ஏகத்துவப் போதனையால் எந்தப் பயனும் பெறவில்லை. அந்தக் கிறித்தவர்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி நபித்தோழர்கள் போதிக்கத் தொடங்கியதும், அவர்கள் நான்குத் திசைகளிலிருந்தும் நபித்தோழர்களின்மீது அம்பெய்யத் தொடங்கி விட்டனர்.

தாங்கள் தெரிவித்த கருத்துகளுக்குப் பதிலாக அந்தக் கிறித்தவர்கள் தங்கள் மீது அம்பெய்து கொண்டிருப்பதைக் கண்ட அவர்கள் வெருண்டோடவோ ஆயிரக்கணக்கானவர்களைக் கொண்ட அந்தக் கூட்டத்திலிருந்து தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவோ முயலவில்லை. மாறாக, அந்தப் பதினைந்து பேரும் மிக்க உறுதியுடன் ஆயிரக்கணக்கானவர்களை எதிர்த்து நின்று அங்கேயே ஷஹீதானார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றொரு படையை அனுப்பி இத்தகு மிகக்கொடிய செயலைச் செய்த அவர்களுக்குத் தண்டனை வழங்க விரும்பினார்கள். ஆனால் சிரியா எல்லையில் திரண்டு கொண்டிருந்த அந்தப் படையினர் அங்கிருந்து சிதறிச் சென்று விட்டதாக அந்தச் சமயத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குத் தகவல் கிடைத்ததால், அந்த விருப்பத்தைச் சிறிது காலத்திற்கு ஒத்திவைத்து விட்டார்கள்.

அதே வேளையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ரோமானிய அரசர் கெய்சருக்கு அல்லது ரோமானிய அரசு சார்பாக பஸ்ராவில் நியமிக்கப்பட்டிருந்த ஓர் அதிகாரியாகிய கஸ்ஸான் கோத்திரத் தலைவருக்கு, சிரியாவிலுள்ள சில கோத்திரங்கள் இஸ்லாமியப் பகுதியின்மீது தாக்குதல்

நடத்துவதற்கு ஆயத்தங்கள் செய்து கொண்டிருக்கின்றன; அவர்கள் எந்தக் காரணமுமின்றி பதினைந்து முஸ்லிம்களைக் கொன்று விட்டனர் என்று கடிதம் எழுதினார்கள்.

இந்தக் கடிதம் ஒரு நபித்தோழராகிய அல்ஹர்ஸ் என்பவர் மூலம் அனுப்பப்பட்டது. சிரியாவை நோக்கிச் சென்று கொண்டிருந்த அவர், வழியில் மூத்தா என்னும் ஓரிடத்தில் தங்கினார். அங்குச் கெய்சர் மன்னரால் நியமிக்கப்பட்டிருந்த அதிகாரிகளுள் ஒருவராகிய கஸ்ஸான் கோத்திரத்தலைவன் ஷுராஹிபில் என்பவன் அவரைச் சந்தித்து, நீங்கள் எங்கே போகிறீர்கள்? நீங்கள் முஹம்மது அவர்களின் தூதரா? என்று கேட்டான். இதற்கு அவர், ஆம் என்று கூறியதும், அவன் அவரைக் கைது செய்து, கயிற்றால் கட்டி அடித்துக் கொன்று விட்டான்.

இந்த நிகழ்ச்சி பற்றி வரலாற்றில் விரிவாக எழுதப்பட வில்லையென்றாலும், எந்தப் படையினர் இதற்கு முன்னர் பதினைந்து நபித்தோழர்களைக் கொன்றனரோ அந்தப் படையினரின் தலைவர்களுள் ஒருவனாக அவன் இருந்திருப்பான் என்று இந்த நிகழ்ச்சி தெரிவிக்கிறது. எனவேதான் அவன் அவரிடத்தில், நீங்கள் முஹம்மது அவர்களின் தூதரா என்று கேட்டதிலிருந்து, முஹம்மது (ஸல்) அவர்கள் மன்னர் கெய்சரிடம், உமது பகுதியிலுள்ள மக்கள் எங்கள் பகுதியிலுள்ள மக்களைத் தாக்கு கின்றனர் என்று முறையீடு செய்து விடக்கூடாதே என்றும் இதனால் மன்னர் தம்மை விசாரணை செய்து விடக்கூடாதே என்றும் அவன் பயந்தான் என்று புலனாகிறது. அந்தத் தூதுச் செய்தி மன்னருக்குக் கிடைக்காமலும் விசாரணை நடக்காமலும் இருப்பதில்தான் தனக்கு நன்மையிருக்கிறது என்று அவன் கருதினான் என்றும் புலனாகிறது. ஆனால் அவனுடைய தீய எண்ணங்களை இறைவன் நிறைவேற்ற வில்லை. ஹர்ஸ் (ரலி) அவர்கள் கொல்லப்பட்ட செய்தி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கிடைத்து விட்டது.

இதற்கு முன்னரும் இப்பொழுதும் அவர்கள் செய்த அந்தக் கொடிய செயல்களுக்குத் தண்டனை வழங்குவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மூவாயிரம் பேரைக் கொண்ட ஒரு படையை ஆயத்தமாக்கினார்கள். அடிமையாயிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் விடுவிக்கப்பட்டவரும் மக்கா வாழ்க்கை என்னும் பகுதியில் விரிவாக விபரிக்கப்பட்டவருமாகிய ஸய்து பின் ஹாரிஸ் (ரலி) அவர்களின் தலைமையில் அந்தப் படையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிரியாவுக்கு அனுப்பி வைத்தார்கள். மேலும் இந்தப் படைக்கு ஸய்து பின் ஹாரிஸ் தளபதியாக இருப்பார். அவர் கொல்லப்பட்டால், ஜாஃபர் பின் அபீதாலிப் தளபதியாக இருப்பார். அவரும் கொல்லப் பட்டால், அப்துல்லாஹ் பின் ரவாஹ் தளபதியாக இருப்பார். அவரும் கொல்லப்பட்டால், முஸ்லிம்கள் தங்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்துத் தங்கள் தளபதியாக்கிக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் கட்டளையிட்டார்கள்.

அப்போது அந்தக் கூட்டத்தில் ஒரு யூதரும் அமர்ந்திருந்தார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அபுல் காசிம் (நபிகள் நாயகம்) அவர்களே! தாங்கள் உண்மையாளராக இருந்தால், இம்மூவரும் நிச்சயமாகக் கொல்லப்படுவார்கள். ஏனென்றால் இறைவன் தனது நபிமார்களின் வாயிலிருந்து வெளிவரும் வார்த்தைகளை நிறைவேற்றி விடுகின்றான் என்று கூறிவிட்டு, அங்கிருந்த ஸய்து பின் ஹாரிஸ் அவர்களைப் பார்த்து, நான் உங்களிடம் உண்மையாகவே ஒன்றைக் கூறி விடுகின்றேன்; முஹம்மது (ஸல்) அவர்கள் இறைவனின் உண்மையான நபி என்றால், நீங்கள் ஒருபோதும் உயிருடன் திரும்பி வரமாட்டீர்கள் என்றார். இதற்கு ஸய்து அவர்கள், நான் திரும்பி வந்தாலும் வராவிட்டாலும் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இறைவனின் உண்மையான தூதரேயாவார்கள் என்று பதிலளித்தார்கள்.

மறுநாள் காலையில் அந்தப் படை புறப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களின் தோழர்களும் அந்தப் படையை வழியனுப்பி வைக்கச் சென்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்நாளில் அவர்களின் தலைமையில்லாமல், இவ்வளவு பெரிய படை எந்த முஸ்லிம் தளபதியின் தலைமையிலும் மிக முக்கியமான பணிக்காகச் சென்றதில்லை.

அந்தப் படையை வழியனுப்புவதற்காக அதனுடன் சென்று கொண்டிருந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தப் படையினர்க்கு அறிவுரைகள் கூறிக்கொண்டே சென்றார்கள்.

இறுதியாக மதீனாவுக்கு வெளியே ஓரிடத்தில் எந்த இடத்திலிருந்து அவர்கள் தங்களின் ஹிஜ்ரத்தின்போது மதீனாவிற்குள் நுழைந்தார்களோ, மேலும் பொதுவாக எந்த இடத்திலிருந்து மதீனாவாசிகள் தங்கள் விருந்தினர்களை வழியனுப்பிக் கொண்டிருந்தனரோ அந்த இடத்தில் - அவர்கள் நின்று, அந்தப் படையினர்களுக்குப் பின்வருமாறு அறிவுரைகள் கூறினார்கள்:

'நீங்கள் எப்போதும் இறையச்சத்துடன் நடந்து கொள்ளுங்கள். உங்களுடனுள்ள முஸ்லிம்களிடம் மிக நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். நீங்கள் இறைவனை நினைவு கூர்ந்தவாறு போர்க்களம் சென்று, உங்களுக்கும் இறைவனுக்கும் பகைவர் களாகிய சிரியாவிலுள்ளவர்களுடன் போர் புரியுங்கள். நீங்கள் சிரியாவை அடைந்ததும் அங்கு வணங்குமிடங்களில் அமர்ந்து இறைவனை தியானம் செய்து கொண்டிருப்பவர்களை நீங்கள் காண்பீர்கள். நீங்கள் அவர்களிடம் எந்தக் குறுக்கீடும் செய்யக் கூடாது; அவர்களைத் துன்புறுத்தக் கூடாது; பகைவர்களின் நாட்டிலுள்ள எந்தப் பெண்ணையும் கொல்லக்கூடாது; எந்தச் சிறுவரையும் கொல்லக் கூடாது; எந்த முதியவரையும் கொல்லக் கூடாது; எந்த மரத்தையும் வெட்டக் கூடாது; எந்தக் கட்டடத்தையும் இடிக்கக் கூடாது'.

இவ்வாறு அறிவுரை கூறிவிட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கிருந்து திரும்பினார்கள். இஸ்லாமியப் போர்ப்படை சிரியாவை நோக்கிப் புறப்பட்டது. கிறிஸ்தவர்களை எதிர்த்துப் போரிடப் புறப்பட்ட முஸ்லிம்களின் முதற்போர்ப் படையாகும் இது. இந்தப் படை சிரியாவின் எல்லைப் பகுதியை அடைந்தபோது மன்னர் கெய்சர் அங்கு வந்திருப்பதும் அவருடன் ஒரு இலட்சம் ரோமானியப் போர் வீரர்களும் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் அரபு இனக் கிறிஸ்தவப் போர் வீரர்களும் இருப்பதும் இஸ்லாமியப் படைக்குத் தெரிய வந்தது.

இதனால் முஸ்லிம்கள் தாங்கள் சென்று கொண்டிருந்த வழியில் தங்கி, இந்தச் செய்திகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அறிவிக்க விரும்பினார்கள். ஏனென்றால் இந்தச் செய்திகள் கிடைத்ததும் அவர்கள் இன்னும் அதிகமான உதவிகளை அனுப்ப நினைத்தால், இங்கு அனுப்பி விடலாம். அல்லது ஏதாவது கட்டளையிட வேண்டியிருந்தால், அது குறித்து இங்குத் தகவல் அனுப்பலாம் என்பதற்காக அங்குத் தங்க நினைத்தார்கள்.

இது குறித்து ஆலோசணை நடந்து கொண்டிருந்தபோது, அப்துல்லாஹ் பின் ரவாஹ் (ரலி) அவர்கள் மிகுந்த தீரத்துடன் எழுந்து நின்று, மக்களே! நீங்கள் இறைவழியில் உயிர்த்தியாகம் செய்வதற்காக உங்கள் வீடுகளிலிருந்து புறப்பட்டீர்கள். நீங்கள் எதற்காகப் புறப்பட்டீர்களோ, இப்பொழுது அதற்குத் தயங்கு கின்றீர்கள். நாம் இதுவரை நம்முடைய எண்ணிக்கை, நம்முடைய பெரும்பான்மை, நம்முடைய வலிமை ஆகியவற்றின் காரணமாகப் பகைவர்களுடன் போர் செய்து கொண்டிருக்கவில்லையே. இறைவன் தனது அருளால் நமக்கு வழங்கிய மார்க்கத்திற்கு உதவி செய்வதற்காகவே நாம் இதுவரை பகைவர்களுடன் போர் செய்து கொண்டிருந்தோம். இப்பொழுது நம்முடைய பகைவர்கள் அதிகமாக இருந்தால், இருக்கட்டுமே. எப்படியிருந்தபோதிலும் நமக்கு இரண்டு நன்மைகளுள் ஒன்று நிச்சயமாகக் கிடைக்கத்தான் போகிறது. ஒன்று, நாம் இந்தப் போரில் வெற்றியடைவோம். அல்லது நாம் இறைவழியில் உயிர்த்தியாகம் செய்தவர்களாவோம் என்று கூறினார்கள்.

மக்கள் அவர்கள் கூறியவற்றைக் கேட்டு, அப்துல்லாஹ் பின் ரவாஹ் (ரலி) அவர்கள் முற்றிலும் சரியானதை கூறியுள்ளார்கள் என்றார்கள்.

இதன் பிறகு உடனே படை புறப்படுமாறு கட்டளையிடப் பட்டது. அவர்கள் முன்னேறிச் சென்றபோது ரோமானியப்படை அவர்களை நெருங்கி வந்து கொண்டிருந்தது. இதனைக் கண்ட முஸ்லிம்கள், மூத்தா என்னுமிடத்தில் தங்களின் படை அணிவகுப்பை செய்து கொண்டனர். உடனே போர் தொடங்கிற்று.

போர் தொடங்கி சிறிது நேரத்தில் முஸ்லிம்களின் தளபதியாக இருந்த ஸய்து பின் ஹாரிஸ் (ரலி) அவர்கள், ஷஹீதானார்கள். அப்போது இஸ்லாத்தின் போர்க்கொடியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெரிய தந்தையாரின் மகன் ஜாஃபர் பின் அபீதாலிப் அவர்கள் தங்கள் கையில் எடுத்துக் கொண்டு படைக்குக் கட்டளையிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள்.

பகைவர்களின் படை பெரும் திரளாக முன்னேறிக் கொண்டிருப்பதையும் மிகக் குறைவாக இருக்கும் முஸ்லிம்களால் அவர்களின் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாதென்பதையும் கண்ட முஸ்லிம் படையின் தளபதி ஜாஃபர் பின் அபீதாலிப் அவர்கள் குதிரையிலிருந்து கீழே குதித்து, தங்கள் குதிரையின் கால்களைத் துண்டித்து விட்டார்கள்.

அவர்கள் இவ்வாறு செய்ததன் பொருள், யார் எதைச் செய்தாலும் நான் இந்தப் போர்க்களத்தை விட்டு வெருண்டோட மாட்டேன்; மாறாக நான் மரணத்தை விரும்புவேன்; ஆனால் இங்கிருந்து வெருண்டோடுவதை விரும்பமாட்டேன் என்பதாகும். ஆள் இல்லாத குதிரைகள் இங்குமங்குமாக ஓடிச் சென்று படையில் குழப்பத்தை ஏற்படுத்திவிடாக் கூடாதென்பதற்காக அரபு மக்கள் அவற்றின் கால்களை துண்டித்து விடுவது அவர்களின் பழக்கமாகும்.

சிறிது நேரம் போர் செய்த பிறகு ஜாஃபிர் பின் அபிதாலிப் (ரலி) அவர்களின் வலக்கை துண்டிக்கப்பட்டது. அப்போது அவர்கள் இடக்கையால் அந்தக் கொடியைப் பிடித்துக் கொண்டார்கள். பின்னர் அவர்களின் இடக்கையும் துண்டிக்கப்பட்டபோது, அவர்கள் தங்களுடைய இரு கைகளின் எஞ்சிய பகுதிகளால் அந்தக் கொடியை தங்கள் நெஞ்சோடு அணைத்துப் பிடித்துக் கொண்டு, அவர்கள் ஷஹீதாகும்வரை போர்க்களத்தில் நின்று கொண்டிருந் தார்கள்.

அப்போது அப்துல்லாஹ் பின் ரவாஹ் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கேற்ப, அந்தக் கொடியைப் பிடித்துக் கொண்டார்கள். இவர்களும் பகைவர் களுடன் போர் செய்து கொண்டிருக்கையில் ஷஹீதானார்கள்.

அந்த நேரத்தில் முஸ்லிம்கள் ஆலோசனை செய்து தங்களுள் ஒருவரைத் தங்கள் தளபதியாக நியமித்துக் கொள்வதற்குச் சிறிதும் அவகாசம் அவர்களுக்குக் கிடைக்க வில்லை. பகைவர்கள் மிக அதிகமானவர்களாக இருந்ததால் முஸ்லிம்கள் போர்க்களத்தி லிருந்து பின்வாங்கி விடுவார்கள் போல் தோன்றியது. அப்போது காலித் பின் வலீது (ரலி) அவர்கள், நண்பர் ஒருவரின் வேண்டுகோளுக் கிணங்கி, அந்தக் கொடியைப் பிடித்துக் கொண்டு பொழுதடையும்வரை பகைவர்களை எதிர்த்துப் போர் செய்து கொண்டிருந்தார்கள்.

மறுநாள் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் களைப்படைந்தும் காயமடைந்துமிருந்த தங்கள் படையை அழைத்துக் கொண்டு பகைவர்களை எதிர்த்துப் போரிட ஆயத்தமானார்கள். அன்று அவர்கள் விவேகமான ஒரு செயலைச் செய்தார்கள். அதாவது படையின் முற்பகுதியைப் பிற்பகுதிக்கும், பிற்பகுதியை முற்பகுதிக்கும், வலப்பகுதியை இடப்பகுதிக்கும், இடப்பகுதியை வலப்பகுதிக்குமாக மாற்றி விட்டார்கள். அதன்பிறகு முஸ்லிம் களுக்கு மேலும் உதவிகள் கிடைத்து விட்டனவென்று பகைவர்கள் நினைக்கும் வகையில் முழக்கங்களை எழுப்பினார்கள். இதனால் அச்சமுற்ற பகைவர்கள் போர்க்களத்திலிருந்து பின்வாங்கிச் சென்று விட்டார்கள். காலித் பின் வலீது (ரலி) அவர்கள், இஸ்லாமியப் படையைக் காப்பாற்றித் திருப்பிக் கொண்டு வந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறைவன் தனது அறிவிப்பின் மூலம் இந்த நிகழ்ச்சியைப் பற்றி அதே நாளில் அறிவித்து விட்டான். உடனே அவர்கள் ஒரு பொது அறிவிப்பின் மூலம் எல்லா முஸ்லிம்களும் பள்ளிவாசலில் ஒன்றுகூடுமாறு செய்து விட்டு, அங்கு வந்த போது அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அப்போது அவர்கள், மக்களே! இந்தப் போருக்குச் சென்ற அந்தப் படையைப் பற்றிய செய்தியை நான் உங்களுக்குக் கூறப்போகிறேன். இங்கிருந்து சென்ற அந்தப் படை பகைவர்களுடன் போர் செய்தது.

போர் தொடங்கியதும் முதலில் ஸய்து பின் ஹாரிஸ் (ரலி) அவர்கள் ஷஹீதாகிவிட்டார்கள். நீங்கள் அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள். பிறகு போர்க்கொடியை ஜாஃபர் பின் அபீதாலிப் (ரலி) அவர்கள் எடுத்துக் கொண்டு பகைவர்களுடன் போராடினார்கள். சிறிது நேரம் போராடிய அவர்களும் ஷஹிதாகி விட்டார்கள். நீங்கள் அவர்களுக்காகவும் பிரார்த்தனை செய்யுங்கள். இதன் பிறகு அந்தக் கொடியை எடுத்துக் கொண்ட அப்துல்லாஹ் பின் ரவாஹ் (ரலி) அவர்கள், படையை மிகுந்த வீரத்துடன் போரிடச் செய்தார்கள். ஆனால் இறுதியில் அவர்களும் ஷஹீதாகி விட்டார்கள். நீங்கள் அவர்களுக்காகவும் பிரார்த்தனை செய்யுங்கள்.

அடுத்து அந்தக் கொடியை காலித் பின் வலீது (ரலி) அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். நான் அவர்களைத் தளபதியாக நியமிக்கவில்லையென்றாலும் அவர்கள் தாமாகவே தம்மைத் தளபதியாக நியமித்துக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் அல்லாஹ்வின் வாள்களுள் ஒரு வாள் ஆவார்கள். எனவே இறைவன் செய்த உதவியால் அவர்கள் இஸ்லாமியப் படையைப் பாதுகாப்பாக திருப்பிக் கொண்டு வந்துள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதனால் காலித் பின் வலீது (ரலி) அவர்கள், முஸ்லிம்களுக்கிடையே ஸய்ஃபுல்லாஹ் (அல்லாஹ்வின் வாள்) என்றழைக்கப்பட்டார்கள்.

காலிது பின் வலீது (ரலி) அவர்கள் பின்னாளில் நம்பிக்கைக் கொண்டவர்களைச் சார்ந்தவராக இருந்ததால், அவர்களைக் குறித்துச் சில நபித்தோழர்கள், கிண்டலாக அல்லது ஏதாவது சண்டை, சச்சரவின் போது நீங்கள் எங்களுக்குப் பிறகு நம்பிக்கைக் கொண்டவர்கள்தாமே என்று கூறிக் கொண்டிருந்தனர்.

ஒரு தடவை அவர்களுக்கும் அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களுக்குமிடையில் தகராறு ஏற்பட்டது. அப்துர் ரஹ்மான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் முறையீடு செய்தார்கள். அப்போது அவர்கள், காலிதே! பத்ருப் போர் நடந்த காலத்திலிருந்து இஸ்லாத்திற்குத் தொண்டு செய்பவரை நீங்கள் ஏன் துன்புறுத்துகிறீர்கள்? நீங்கள் இஸ்லாத்திற்காக உஹுது மலையளவு தங்கத்தை செலவு செய்தாலும்கூட, இறைவனிடமிருந்து அவருக்குச் சமமான வெகுமதிகளை உங்களால் பெற முடியாது என்றார்கள்.

இதற்கு காலித் அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இவர்கள் என்னைப் பழித்துப் பேசினார்கள். இதனால் நானும் பேசினேன் என்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களே! நீங்கள் காலிதை துன்புறுத்தாதீர்கள். இவர்கள் அல்லாஹ்வின் வாள்களுள் ஒரு வாள் ஆவார்கள். இறைவன் இந்த வாளை நிராகரிப்பாளர்களின் வீழ்ச்சிக்காக வழங்கியிருக்கிறான் என்றார்கள்.

காலித் பின் வலீது (ரலி) அவர்களைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த இந்த முன்னறிவிப்பு சில ஆண்டுகளுக்குப் பிறகு முழுமையாக நிறைவேறியது.

காலித் பின் வலீது (ரலி) அவர்கள் தங்களுடைய படையைத் திருப்பிக் கொண்டு வந்தபோது, அந்தப் படையுடன் செல்லாத மதீனாவிலுள்ள நபித்தோழர்கள் அந்தப்படை வீரர்களைப் பார்த்துத் தப்பி ஓடிவந்தவர்கள் என்று கூறிக் கொண்டிருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தப்பி ஓடி வந்தவர்கள் அல்ல; மீண்டும் மீண்டும் சென்று பகைவர்களைத் தாக்கும் வீரர்களாவார்கள் என்று கூறினார்கள். இவ்வாறு கூறி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், வருங்காலத்தில் முஸ்லிம் களுக்கும் சிரியா நாட்டு மக்களுக்கும் இடையில் நிகழவிருந்த போர்களைப் பற்றி முன்னறிவிப்புச் செய்தார்கள்.

## மக்கா வெற்றி

கி.பி. 629-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஹிஜிரி 8-ம் ஆண்டு, ரமலான் மாதத்தில் அரபு நாட்டில் இஸ்லாத்தை நிலைநாட்டிய இறுதிப் போருக்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மதீனாவிலிருந்து மக்காவுக்கு புறப்பட்டார்கள்.

இந்தப் போருக்கு அவர்கள் புறப்பட்டதற்குக் காரணமாவது, ஹுதைபிய்யா சமாதான உடன்படிக்கையின்படி, அரபுக் கோத்திரங்களுள் விரும்புபவர்கள், மக்காவாசிகளுடன் இணைந்து கொள்ளலாம். அவ்வாறே அவர்களுள் விருப்பமுள்ளவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து கொள்ளலாம். அடுத்துவரும் பத்து ஆண்டுகள் வரை ஒரு சாரார், இன்னொரு சாராரை எதிர்த்துப் போர் செய்ய அனுமதி கிடையாது. ஆனால் ஒரு சாரார் இன்னொரு சாராரின் மீது தாக்குதல் நடத்துவதன் மூலம், அந்த உடன்படிக்கையை முறித்துவிட்டால், போர் செய்யலாம்.

அந்த உடன்படிக்கையின்படி, பனூபக்கர் என்னும் அரபு கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் மக்காவாசிகளுடன் இணைந்து கொண்டனர். கஸாஆ என்னும் அரபு கோத்திரத்தைச் சார்ந்தவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து கொண்டனர்.

அரபு நாட்டிலுள்ள நிராகரிப்பாளர்கள், அந்த உடன்படிக்கைக்குக் கட்டுப்பட்டு நடப்பதில் போதிய கவனம் செலுத்தவில்லை. குறிப்பாக முஸ்லிம்களை எதிர்ப்பதற்காக அவர்கள் அந்த உடனபடிக்கையை அலட்சியம் செய்து வந்தார்கள். பனூபக்கர் இனத்திற்கும் கஸாஆ இனத்திற்கும் இடையில் நீண்டகாலமாகப் பகைமை இருந்து வந்தது. ஹுதைபிய்யா சமாதான உடன்படிக்கை நிகழ்ந்து சிறிது காலத்திற்குப் பிறகு பனூபக்கர் கோத்திரத்தினர் மக்கா வாசிகளுடன் கலந்தாலோசித்து, கஸாஆ கோத்திரத்தினர் அந்த உடன்படிக்கையின் காரணமாக இப்பொழுது முற்றிலும் நிம்மதியாக இருக்கின்றனர். நாமெல்லாரும் சேர்ந்து அவர்களைப் பழிவாங்குவதற்கு இதுவே பொருத்தமான நேரம் என்று முடிவு செய்தனர்.

இதன்படி குரைஷியர்களாகிய மக்காவாசிகளும் பனூபக்கரும் ஒன்று சேர்ந்து ஒருநாள் இரவில் திடீரென கஸாஆ இனத்தினரைத் தாக்கி அவர்களுள் பலரைக் கொன்றுவிட்டார்கள். குரைஷியரும் பனூபக்கரும் சேர்ந்து தங்கள் மீது இவ்வாறு தாக்குதல் நடத்தியது பற்றியும் இதன் மூலம் அவர்கள் சமாதான உடன்படிக்கையை முறித்துவிட்டது பற்றியும் உடனடியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அறிவிப்பதற்காக கஸாஆ இனத்தினர் மிக வேகமாக செல்லும் ஒட்டகங்களில் நாற்பது பேரைக் கொண்ட ஒரு குழுவினரை மதீனாவுக்கு அனுப்பிவைத்தார்கள். இவர்கள் அங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று, நமக்கிடையிலுள்ள உடன்படிக்கையின் அடிப்படையில், எங்களுக்காக அவர்களைப் பழிவாங்குவதும் மக்காவின் மீது போர் தொடுப்பதும் தங்களுடைய கடமையாகும் என்று வேண்டிக் கொண்டார்கள்.

இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களுக்கு ஏற்பட்ட துன்பம், எனக்கு ஏற்பட்ட துன்பமாகும். நமக்கிடையிலுள்ள உடன்படிக்கையில் நான் உறுதியாக இருக்கிறேன். (அப்போது மழை பெய்து கொண்டிருந்தது.) இந்த மேகத்திலிருந்து எந்த வேகத்தில் மழை பெய்துகொண்டிருக்கிறதோ அந்த வேகத்தில் உங்களுக்கு உதவி செய்வதற்காக இஸ்லாமியப் படைகள் வந்து சேரும் என்றார்கள்.

கஸாஆ கோத்திரத்தின் அந்தக் குழுவினர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றது பற்றிய செய்தி மக்காவாசிகளுக்கு தெரிந்ததும் அவர்கள் பெருங்கவலையும் பதற்றமும் அடைந்தார்கள். உடனே அவர்கள் முஸ்லிம்களின் தாக்குதலைத் தடுப்பதற்காக அபூஸுஃப்யானை மதீனாவுக்கு அனுப்பிவைத்தார்கள். அபூஸுஃப்யான் மதீனாவுக்கு வந்தடைந்து ஹஸ்ரத் நபிகள் (ஸல்) அவர்களிடம் ஹுதைபிய்யா சமாதான உடன்படிக்கையின்போது நான் கலந்து கொள்ளவில்லை. எனவே நாம் இப்பொழுது புதிதாக ஓர் உடன்படிக்கை செய்துகொள்வோம் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மௌனமாக இருந்தார்கள். அவரது வேண்டுகோளுக்கு பதில் அளிப்பது விவேகமற்றது என்று கருதினார்கள்.

அப்போது அபூஸுஃப்யான் நம்பிக்கையிழந்து, மிகுந்த பதற்றத்திற்குள்ளாகி பள்ளிவாசலில் நின்றுகொண்டு, மக்களே! நான் மக்காவாசிகளின் சார்பாக உங்களுடன் சமாதான உடன்படிக்கை யைப் புதுப்பித்துக் கொள்கிறேன் என்று அறிவித்தார். இந்த அறிவிப்பைக் கேட்ட முஸ்லிம்கள் அவருடைய அறியாமையைக் கண்டு நகைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம் அபூஸுஃப்யான் அவர்களே! உங்களுடைய அறிக்கை ஒருதலைப்பட்சமானது. நாங்கள் உங்களுடன் இவ்வாறான எந்த உடன்படிக்கையும் செய்யவில்லையே என்றார்கள்.

இதற்கு பிறகு உடனடியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நான்கு திசைகளிலுமுள்ள முஸ்லிம்களுக்குத் தூதர்கள் மூலம் செய்தி அனுப்பினார்கள். (மதீனாவுக்கு வெளியிலுள்ள) முஸ்லிம்கள் ஆயத்தமாகி விட்டதாகவும் அவர்கள் எல்லாரும் மக்காவுக்குச் செல்லும் வழியில் இணைந்து கொள்வதாகவும் அவர்களிடமிருந்து தகவல்கள் வந்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மதீனாலிலுள்ளவர்களை ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளுமாறு கட்டளையிட்டார்கள்.

கி.பி. 630 -ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் முதல் நாள், இந்தப் படை மதீனாவிலிருந்து புறப்பட்டது. வழியில் எல்லாத் திசைகளிலிருந்தும் முஸ்லிம் கோத்திரத்தினர்கள் அலையலையாகத்

திரண்டு வந்து இந்த படையுடன் சேர்ந்து கொண்டிருந்தனர். சில மைல்களைக் கடந்து சென்ற பின்னர் இந்தப்படை ஃபாரான் என்னும் காட்டில் நுழைந்தபோது, ஹஸ்ரத் ஸுலைமான் நபி (அலை) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப, இந்த படையின் எண்ணிக்கை பத்தாயிரமாகிவிட்டது.

இங்கு இந்தப்படை மக்காவை நோக்கி வீரநடைபோட்டுச் சென்று கொண்டிருந்தது. அங்கு மக்காவாசிகள், காற்று மண்டலத்தில் நிலவிய அமைதியின் காரணத்தால் மிகவும் அதிகமாக அஞ்சி நடுங்கி கொண்டிருந்தனர். இறுதியாக அவர்கள் தங்களுக்கிடையே ஆலோசனை செய்து, முஸ்லிம்கள் என்ன செய்ய நினைக்கிறார்கள் என்பதைத் தெரிந்து வருமாறு அபூஸுஃப்யானை மீண்டும் மக்காவிற்கு வெளியே அனுப்பி வைத்தார்கள். அபூஸுஃப்யான் மக்காவிலிருந்து ஒருநாள் பயண தூரத்தை அடைந்தபோது அந்தக் காட்டுப் பகுதி நெருப்பினால் ஒளிமயமாகியிருப்பதை கண்டார்.

ஒவ்வொரு பாசறைக்கும் முன்னால் தீப்பந்தம் இருக்க வேண்டுமென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டிருந்தார்கள். காட்டில் பத்தாயிரம் பேருக்காக அமைக்கப்பட்டிருந்த பாசறைகளுக்கு முன்வைக்கப்பட்டிருந்த தீப்பந்தங்களின் ஒளி மிகப் பயங்கரமாக காட்சியளித்தது. அபூஸுஃப்யான், தம்முடன் வந்த தோழர்களிடம், இது மிகவும் வியக்கத்தக்கதாக இருக்கிறதே! விண்ணிலிருந்து ஏதாவது படை இறங்கி வந்துவிட்டதா? ஏனென்றால், அரபு நாட்டின் எந்தச் சமுதாயத்திற்கும் இந்த அளவு பெரிய படை கிடையாதே என்று கேட்டார். இதற்கு அவருடைய தோழர்கள் பல்வேறு கோத்திரங்களின் பெயர்களைக் கூறியதற்கு அவர் அரபு கோத்திரங்களுள் எந்தக் கோத்திரத்திற்கும் இந்த அளவு பெரிய படை இருக்கவே முடியாது என்றார்.

அபூஸுஃப்யான் தமது தோழர்களுடன் இவ்வாறு பேசிக்கொண்டிருந்த அந்த இருளில் அபூஹன்ழலா என்றழைக்கும் சப்தம் வந்தது. (ஹன்ழலா அபூஸுஃப்யானின் ஒரு மகனாவார்) இந்தக் குரலைக் கேட்ட அவர், அப்பாஸ் அவர்களே! நீங்கள் இங்குதான் இருக்கிறீர்களா? என்று கேட்டார். இதற்கு அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் படை, இந்தப் பாசறைகளில் தங்கியிருக்கிறது. இப்பொழுது நீங்கள் எல்லாரும் மிக விரைவாக ஏற்புடைய ஒரு திட்டம் வகுக்கவில்லையானால் நிச்சயமாக நீங்கள் படுதோல்வியடைந்து பெரும் இழிவிற்குள்ளாகி விடுவீர்கள் என்று பதிலளித்தார்கள்.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், அபூஸுஃப்யானின் பழைய நணபர். இதனால் அவர்கள் அவரிடம் தம்முடன் ஒட்டகத்தில் அமர்ந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வருமாறு கூறினார்கள். பின்னர் அவர்கள் அவரது கையைப் பிடித்து இழுத்துத் தம்முடன் ஒட்டகத்தில் இருக்கச் செய்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அவரைக் கொண்டு சென்றார்கள்.

தம்முடன் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்த ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அபூஸுஃப்யானைக் கொன்று விடுவார்களோ என்ற அச்சம் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களுக்கு இருந்தது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் எல்லா முஸ்லிம்களிடமும், உங்களுள் எவராவது அபூஸுஃப்யானை சந்தித்தால், அவரைக் கொன்றுவிடக் கூடாது என்று ஏற்கனவே கூறியிருந்தார்கள்.

இவற்றையெல்லாம் கண்ட அபூஸுஃப்யானின் உள்ளத்தில் மகத்தானதொரு மாற்றம் ஏற்பட்டது. மேலும் அவர் சில ஆண்டு களுக்கு முன்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஒரே தோழருடன் மக்காவை விட்டு வெளியேறுகின்ற நிலைமையை நாம் ஏற்படுத்தினோம். ஆனால் இப்போது ஏழே ஆண்டுகள்தாம் கழிந்துள்ளன. இவ்வளவு குறுகிய காலத்தில் அவர்கள் மாபெரும் வெற்றி பெற்று பத்தாயிரம் பரிசுத்தவான்களுடன் எந்த அநீதியும் வரம்பு மீறுதலும் இன்றி நியாயமான முறையில் மக்காவின் மீது படையெடுத்துள்ளார்கள். இந்தப் படையைத் தடுத்து நிறுத்தக்கூடிய வலிமை மக்காவாசிகளுக்கு இல்லையே என்பதை எண்ணிப் பார்த்தார்.

அபூஸுஃப்யான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றபோது, இவ்வாறான எண்ணங்களின் காரணமாகவும் இவற்றால் ஏற்பட்ட அச்சம், நடுக்கம் ஆகியவற்றின் காரணமாகவும் திகைப்படைந்து வாயடைத்து நின்றுகொண்டிருந்தார். அவருடைய இந்த நிலையைக் கண்ட ஹஸ்ரத்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களிடம், அபூஸுஃப்யானை உங்களுடன் அழைத்துச் சென்று இரவில் உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள். காலையில் அவரை என்னிடம் அழைத்து வாருங்கள் என்றார்கள். இதன்படி இரவில் அபூஸுஃப்யான், ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களுடன் தங்கினார். காலையில் அவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவரிகளிடம் அழைத்து வந்த போது, அந்த நேரம் காலைத் தொழுகை நேரமாக இருந்தது.

அதிகாலையில் எழுந்து தொழுவது பற்றி மக்காவாசி களுக்கு என்ன தெரியும்? எனவே அவர் தண்ணீர் நிரம்பிய பாத்திரங்களை எடுத்துக்கொண்டு முஸ்லிம்கள் அங்குமிங்குமாகச் சென்று கொண்டிருப்பதையும், அவர்கள் வுளு என்னும் சுத்தம் செய்து கொண்டிருப்பதையும், பின்னர் அவர்கள் அணிவகுத்து நிற்பதையும் கண்டு, ஏதோ ஒரு புதுவகையான தண்டனையை அவர்கள் தனக்குத் தரத் தீர்மானித்துள்ளார்களோ என்று கருதினார்.

இதனால் அவர் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களிடம், இவர்கள் எல்லாரும் அதிகாலையில் எழுந்து என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? என்று வினவினார். அதற்கு, ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், நீங்கள் அச்சம் கொள்வதற்கு ஏதுவுமில்லை; இவர்கள் இப்பொழுது தொழுகையை நிறைவேற்றப் போகிறார்கள் என்றார்கள். இதன் பிறகு ஆயிரக்கணக்கான அந்த முஸ்லிம்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் நேராக அணிவகுத்து நிற்பதையும் அவர்கள் ருகூவு செய்யும் போது, எல்லா முஸ்லிம்களும் ருகூவு செய்வதையும் அவர்கள் ஸஜதா செய்யும்போது முஸ்லிம்கள் எல்லாரும் ஸஜ்தா செய்வதையும் அபூஸுஃப்யான் கண்டு வியந்தார்.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், பாதுகாப்புப் பணியில் நியமிக்கப்பட்டிருந்ததால், அந்தக் கூட்டுத் தொழுகையில் கலந்துகொள்ளவில்லை. ஆகவே அபூஸுஃப்யான் அவர்களிடம், இப்பொழுது இவர்கள் எல்லோரும் என்ன செய்து கொண்டிருக் கிறார்கள்? முஹம்மது (ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எதைச் செய்கிறார்களோ அதையே இவர்கள் எல்லாரும் செய்கிறார்களே! இது எனக்கு மிகவும் வியப்பாக இருக்கிறதே என்று கேட்டதற்கு, ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? இவர்கள் எல்லாரும் தொழுகையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த முஸ்லிம்களைப் பார்த்து, நீங்கள் உண்பதையும் பருகுவதையும் விட்டு விடுங்கள் என்று கட்டளையிட்டால், இவர்கள் எல்லாரும் எந்தத் தயக்கமுமின்றி உண்பதையும் பருகுவதையும் விட்டுவிடுவார்கள் என்று கூறினார்கள்.

இதனைக் கேட்ட அபூஸுஃப்யான், நான் மன்னர் கிஸ்ராவின் அவையையும் கண்டிருக்கிறேன்; மன்னர் கெய்சரின் அவையையும் கண்டிருக்கிறேன். ஆனால் முஹம்மது (ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் அவர்களுக்காக எந்த அளவு அர்ப்பணம் செய்பவர் களாக இருக்கிறார்களோ அந்த அளவு அந்த மன்னர்களின் சமுதாயங்கள் அவர்களுக்கு அர்ப்பணம் செய்பவர்களாக இல்லை என்றார். அடுத்து அவர் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களிடம் நீங்களே முஹம்மது (ஸல்) அவர்களிடம் சென்று, அவர்களின் சமுதாயத்தினராகிய மக்காவாசிகளை மன்னித்தருளுமாறு வேண்டிக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

தொழுகை முடிந்தவுடன் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அபூஸுஃப்யானை அழைத்து கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். அப்பொழுது அவர்கள் அபூஸுஃப்யானே! இறைவனைத்தவிர வேறெவரும் வணக்கத்திற் குரியவர் இல்லை என்ற உண்மையைப் புரிந்து கொள்ளும் காலம் உமக்கு இதுவரை வரவில்லையா? என்று கேட்டதற்கு அபூஸுஃப்யான் என் தாயும் தந்தையும் தங்களுக்கு அர்ப்பணம் ஆகட்டுமாக! தாங்கள் மிக்க பொறுமையாளரும் மிகுந்த சகிப்புத்தன்மையைப் பெற்றவரும் மிகவும் உயர்வான பண்புகளைக் கொண்டவரும் உறவினர்களிடம் இணக்கமாகவும் மென்மையாகவும் நடந்து கொள்பவருமாக விளங்குகின்றீர்கள். இறைவனைத் தவிர வேறெவரும் வணக்கத்திற்குரியவராக இருந்தால், அவர் எங்களுக்கும் சிறிது உதவி செய்திருப்பார்; எனவே அப்படி யொருவர் இல்லை என்பதை இப்பொழுது நான் நன்றாக புரிந்து கொண்டேன் என்றார்.

இதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூஸுஃப்யானே! நான் இறைவனின் தூதர் என்பதை நீர் புரிந்து கொள்ளும் காலம் உமக்கு இதுவரை வரவில்லையா? என்று கேட்டதற்கு அபூஸுஃப்யான், என் தாயும் தந்தையும் தங்களுக்கு அர்ப்பணமாகட்டுமாக. இது குறித்து இப்பொழுது கூட எனக்குச் சில சந்தேகங்கள் இருக்கின்றன என்றார்.

ஆனால் இது குறித்து அவர் சந்தேகம் கொண்டிருந்த அதே வேளையில், இஸ்லாமியப் படையின் நோக்கத்தைத் தெரிந்து கொள்வதற்காக அவருடனேயே மக்காவிலிருந்து வந்த அவருடைய இரண்டு தோழர்களுள் ஹகீம் பின் ஹிஸாம் என்பவர் உண்மையைப் புரிந்துகொண்டு முஸ்லிமாகிவிட்டார். இதன் பிறகு அபூஸுஃப்யானும் இஸ்லாத்தை ஏற்று முஸ்லிமானார். எனினும் அவர் மக்கா வெற்றிக்குப் பிறகே இஸ்லாத்தின் உண்மையை நன்றாக புரிந்தார் எனத் தெரிகிறது.

இஸ்லாத்தை ஏற்று நம்பிக்கை கொண்ட ஹகீம் பின் ஹிஸாம் என்பவர், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்கள் சமுதாயத்தினர் களை அழித்து விடுவதற்காகவா தாங்கள் இந்த படையைத் திரட்டிக் கொண்டு வந்திருக்கிறீர்கள்? என்று கேட்டபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தச் சமுதாயத்தினர்கள் அநீதி யிழைத்தனர்; அவர்கள் பாவம் செய்தனர்; ஹுதைபிய்யா சமாதான உடன்படிக்கையை நீங்கள் எல்லாரும் முறித்தீர்கள்; கஸாஆ இனத்தினருக்கு எதிராக அநியாயமாகப் போர் செய்தீர்கள். இறைவன் அமைதிக்குரிய இடமாக ஆக்கியுள்ள புனிதமான இடத்தில் நீங்கள் போர் செய்தீர்கள் என்று பதிலளித்தார்கள்.

பிறகு ஹகீம் பின் ஹிஸாம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் கூறுவது உண்மையே. தங்களுடைய சமுதாயத்தினர்கள் ஐயத்திற்கிடமின்றி அவற்றைச் செய்தனர். ஆனால் தாங்கள் மக்காவின் மீது படை எடுப்பதற்கு பதிலாக ஹவாஸின் சமுதாயத்தின் மீது படை எடுத்திருக்க வேண்டும் என்றார். இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அந்தச் சமுதாயம் அநீதிழைத்துள்ளது. இறைவன் தனது அருளால் மக்கா வெற்றி, இஸ்லாத்தின் வெற்றி, ஹவாஸின் சமுதாயத்திற்குத் தோல்வி இவற்றையெல்லாம் என் மூலமாக நிறைவேற்றி வைப்பான் என்று நான் அவனிடம் உறுதியாக நம்பிக்கை வைத்துள்ளேன் என்றார்கள்.

இதற்கு பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுக்குச் சகோதரராக ஆக்கியிருந்த ஹஸ்ரத் அபூருவைஹா (ரலி) அவர்களைக் குறித்துக் கூறிவிட்டு, நாம் இப்பொழுது அபூருவைஹாவிடம் நமது கொடியைக் கொடுக்கின்றோம். இவர் பிடித்திருக்கும் கொடியின் கீழ் வந்து நிற்பவர்களுக்கும் நாம் பாதுகாப்பு வழங்குவோம் என்றார்கள். அடுத்து ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம், அபூருவைஹாவின் கொடியின் கீழ் வந்து நிற்பவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படும் என்று நீங்கள் அறிவித்துக் கொண்டே இருங்கள் என்று கூறினார்கள்.

இதன் பிறகு, அபூஸுஃப்யான், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! மக்காவாசிகள் ஆயுதங்கள் எடுக்காமலிருந்தால் அவர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்குமா? என்று கேட்டார். இதற்கு அவர்கள், ஆம்! தமது வீட்டின் கதவுகளை மூடிக் கொண்டு வீட்டிற்குள் இருப்பவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என்றார்கள்.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அபூஸுஃப்யான், பெருமைப்படுத்தப்பட வேண்டு மென்ற விருப்பம் கொண்டவராவார். அவரைக் கௌரவப்படுத்தும் விதமாக ஏதேனும் செய்யப்படுமா என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மிக நன்று! அபூஸுஃப்யானின் வீட்டிற்குள் நுழைந்து விடுபவர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்படும். தமது ஆயுதங்களை எறிந்து விடுபவர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்படும். தமது வீட்டின் கதவுகளை மூடிவிட்டு அதனுள் இருப்பவர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்படும் என்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்தக் கட்டளை, மிகவும் வியக்கத்தக்க நுட்பமான கருத்தைக் கொண்டிருக்கிறது. ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள், இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதால், மக்காவாசிகள் அவர்களின் கால்களில் கயிற்றைக் கட்டி அவர்களைத் தெருக்களில் இழுத்துச் சென்றனர். மக்காவின் தெருக்களும் அதன் திடல்களும் அமைதிக்குரிய இடங்களாக அவர்களுக்கு இருந்ததில்லை. மாறாக அவை அவர்களுக்குத் துன்பங்கள் தந்து அவர்களை இழிவுபடுத்தி எள்ளி நகையாடும் இடங்களாக இருந்தன.

இவற்றையெல்லாம் கருத்திற்கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இன்று ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் உள்ளம், அந்த மக்காவாசிகளைப் பழிவாங்க வேண்டுமென்று விரும்பிக் கொண்டிருக்கும். பற்று மிக்க இந்தத் தோழருக்காக அவர்களைப் பழிவாங்குவதும், மிக்க அவசியமானதேயாகும். ஆனால் அதே சமயத்தில், நாம் அவர்களைப் பழிவாங்குவது, இஸ்லாத்தின் மகிமைக்கு ஏற்றதாக இருக்காது எனக் கருதினார்கள். எனவே அவர்கள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களைக் கொடுமைப்படுத்திய அந்தப் பகைவர்களின் கழுத்தைத் துண்டித்துப் பழிவாங்கவில்லை. மாறாக அவர்களுடைய சகோதரரின் கையில் ஒரு பெரிய கொடியை வழங்கிவிட்டு, அவருடன் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை நிற்கச் செய்து, என் சகோதரரின் கொடியின் கீழ் வந்து நிற்பவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என்று அறிவித்து கொண்டிருக்குமாறு அவர்களைப் பணித்தார்கள்! இந்த அளவிற்கு இனிமையாகவும் அழகாகவும் மக்காவாசிகள் பழிவாங்கப் பட்டார்கள்!

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் உரத்த குரலில், மக்காவாசிகளே! இதோ என் சகோதரரின் கொடியின் கீழ் வந்து நின்றால், உங்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படும் என்று அறிவித்துக் கொண்டிருந்தபோது, பழிவாங்க வேண்டும் என்ற உணர்வுகள் அவர்களின் உள்ளத்திலிருந்து மறைந்து போயிருக்கும்! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்காக எவ்வாறு பழிவாங்க வேண்டும் எனத் தீர்மானித்துள்ளார்களோ அதைவிடச் சிறந்த முறையிலும் அதைவிட அழகாகவும் வேறெவ்விதத்திலும் பழிவாங்க முடியாது என்று ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் உணர்ந்து மகிழ்ந்திருப்பார்கள்!

இந்தப் படை மக்காவை நோக்கிச் சென்றபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களுக்கு, இஸ்லாமியப் படையையும் அதன் தியாகத்தையும் அபூஸுஃப்யானும் அவருடைய தோழர்களும் பார்க்குமாறு அவர்களை ஏதாவதுதொரு வீதியின் வளைவிற்கு அழைத்துச் சென்று நிறுத்துங்கள் - என்று கட்டளையிட்டார்கள். அவ்வாறே ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் செய்தார்கள். அரபு மக்களுள் எந்தெந்தக் கோத்திரங்களின் உதவிகளை மக்கா எதிர்பார்த்துக் கொண்டிருந்ததோ அந்தக் கோத்திரங்களெல்லாம், ஒன்றன் பின் ஒன்றாக அபூஸுஃப்யானையும் அவருடைய தோழர்களையும் கடந்து சென்று கொண்டிருந்தன.

எனினும் இன்று அந்தக் கோத்திரங்கள் குஃப்ர் என்னும் நிராகரிப்பின் கொடியை ஏந்திச் செல்லவில்லை. இன்று அவர்களெல்லாம் இஸ்லாத்தின் கொடியை ஏந்திச் சென்று கொண்டிருந்தார்கள். அவர்களின் நாவுகள் எல்லாம் வல்ல இறைவனின் ஏகத்துவத்தைப் பறைசாற்றிக் கொண்டிருந்தன. மக்காவாசிகள் எதிர்பார்த்தது போன்று அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கொல்வதற்காகச் செல்லவில்லை. மாறாக அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காகத் தங்கள் இரத்தத்தின் இறுதித்துளியையும் சிந்துவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். இறைவன் ஒருவனே என்ற ஏகத்துவத்தை உலகில் பரப்பி, அதனை நிலைநாட்ட வேண்டும் என்பதே அவர்களின் உன்னத இலட்சியமாக இருந்தது.

முஸ்லிம்கள் ஒன்றன் பின் ஒன்றாக முன்னேறிச் சென்று கொண்டிருந்தபோது, ‘அஷ்ஜஅ’ கோத்திரத்ததைச் சார்ந்த படைவீரர்களும் முன்னேறிச் சென்றனர். இஸ்லாத்தின் மீது அவர்கள் கொண்டிருந்த பற்று, அதற்காகத் தங்களை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஆகியவை அவர்களின் முழக்கங்களிலிருந்தும் மிகத் தெளிவாகத் தெரிந்தன.

இதனைக் கண்ட அபூஸுஃப்யான் இவர்கள் யார் எனக் கேட்டதற்கு, இவர்கள் அஷ்ஜஅ கோத்திரத்தினர்கள் என்று ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள். இது கேட்டு அபூஸுஃப்யான் மிகுந்த வியப்போடு ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களைப் பார்த்து, அரபு மக்களுள் மற்றெல்லாரையும் விட இவர்களே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மாபெரும் பகைவர்களாக இருந்தார்கள் என்றார்.

இதற்கு ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், இது இறைவனுடைய பேரருள், அவன் விரும்பினான்; அவர்கள் இஸ்லாத்தின்மீது பற்றுக் கொண்டு முஸ்லிம்களாகி விட்டனர் என்றார்கள்.

இறுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், முஹாஜிர்கள் (மக்காவிலிருந்து குடிபெயர்ந்து சென்றவர்கள்), அன்ஸாரிகள் (அவர்களுக்கு உதவி செய்தவர்களாகிய மதீனாவாசிகள்) ஆகியவர்களின் படையை வழிநடத்திச் சென்றார்கள். இவர்கள் மட்டும் இரண்டாயிரம் பேர். இவர்கள் போர்க்கவசம் அணிந்திருந்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், இவர்களின் அணிவகுப்பைச் சரிசெய்து கொண்டும் வரிசைகளின் இடைவெளி சரிசமமாக இருக்கும் வண்ணம் நடந்து செல்லுங்கள் என்று கூறிக் கொண்டும் சென்றார்கள்.

இஸ்லாத்தின் இந்தத் தியாகிகளின் மகிழ்ச்சியும் உற்சாகமும் இவர்களின் உறுதிப்பாடும் இவர்களின் பற்றும் இவர்களது முகங்களிலிருந்து தெளிவாகத் தெரிந்து கொண்டிருந்ததைக் கண்ட அபூஸுஃப்யானுக்கு இனந்தெரியாத அச்சம் ஏற்பட்டது. இப்பொழுது அவர், இவர்கள் யார் என்று கேட்டதற்கு இவர்கள்தாம் முஹாஜிர்கள்; அன்ஸாரிகள்; இவர்களுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள் என்று ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

இவற்றையெல்லாம் கண்ட அபூஸுஃப்யான், இந்தப் படையை எதிர்க்க உலகின் எந்தச் சக்தியாலும் இயலாது என்றார். பிறகு அவர் அப்பாஸ் அவர்களே! உமது சகோதரரின் மகன் (நபிகள் நாயகம்) இன்று உலகிலேயே பலமிக்க அரசராகிவிட்டார் என்று கூறினார். இதற்கு ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் இப்பொழுதுகூட உமது மனக்கண்கள் திறக்கப்படவில்லை; இது வெறும் பௌதீக அரசல்ல; மாறாக இது நபித்துவமாகும்; முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள் என்றார்கள். இதற்கு அபூஸுஃப்யான் சரி! சரி! அவர் அல்லாஹ்வின் தூதரேயாவார்! என்று கூறினார்.

இஸ்லாமியப் படை அபூஸுஃப்யானைக் கடந்து சென்று கொண்டிருந்தபோது,அன்ஸாரிகளின் தளபதியாகிய ஸஃதுபின் உபாதா (ரலி) அவர்கள், அபூஸுஃப்யானை பார்த்து இன்று நாங்கள் வாளின் வலிமையுடன் மக்காவிற்குள் நுழைவதை இறைவன் எங்களுக்கு ஆகுமானதாக்கிவிட்டான். இன்று குரைஷியர் இழிவுபடுத்தப்படுவார்கள் என்றார்.

அபூஸுஃப்யானை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடந்து சென்று கொண்டிருந்தபோது, அவர் உரத்த குரலில், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் தங்கள் சமுதாயத்தினரைக் கொன்றுவிட அனுமதி வழங்கிவிட்டீர்களா? இப்பொழுது அன்ஸாரிகளின் தளபதி ஸஃது அவர்களும் அவர்களின் நண்பர்களும், இன்று போர் தொடுக்கப்படும்; மக்காவின் மதிப்பு இன்று எங்களை, போர்செய்வதிலிருந்து தடுத்து நிறுத்திவிட முடியாது; குரைஷியர்களை நாங்கள் இழிவுபடுத்தியே தீருவோம் என்று முழங்கினார்களே! அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் உலகிலேயே எல்லாரையும் விட மிக நல்லவராகவும், மிகுந்த கருணை காட்டுபவராகவும், உறவுகளைப் பேணுகின்றவராகவும் விளங்குகின்றீர்கள். இத்தகுமிகச் சிறந்த பண்புகளைக் கொண்ட தாங்கள் இன்று தங்கள் சமுதாயத்தினரின் அநீதிகளை மறந்து விட மாட்டீர்களா? என்று கேட்டார்.

இதற்குமுன் எந்த முஹாஜிர்கள் மக்காவின் வீதிகளில் அடித்துத் துன்புறுத்தப்பட்டார்களோ, எவர்களின் சொத்துகள் பறிக்கப்பட்டு தங்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டார்களோ அந்த முஹாஜிர்கள் கூட அபூஸுஃப்யானின் முறையீட்டையும் அவரது பணிவான வேண்டுகோளையும் கேட்டு மிகவும் பரிவுகொண்டார்கள். அவர்களின் உள்ளத்தில் மக்கவாசிகள் தொடர்பாக இரக்கமும் கருணையும் ஏற்பட்டன. இதனால் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! மக்காவாசிகள் செய்த அநீதிகளைப் பற்றி அன்ஸாரிகள் கேட்டுத் தெரிந்துள்ளார்கள். அதன் காரணமாக அன்ஸாரிகள் மக்காவாசிகளாகிய குரைஷியர் களுடன் இன்று எவ்வாறு நடந்துகொள்வார்கள் என்பதை நம்மால் கணிக்கயியலாது என்று கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூஸுஃப்யான் அவர்களே! ஸஃது சொன்னது தவறு. இன்று கருணை காட்டப்படும் நாள். இன்று இறைவன் குரைஷியர் களுக்கும், கஅபாவுக்கும் கண்ணியமளிக்கவிருக்கின்றான் என்று கூறிவிட்டு ஒருவரை அனுப்பி ஸஃதை அழைத்து வரச் செய்து அவரிடம், உங்களிடமுள்ள கொடியை உங்கள் மகன் கைஸிடம் கொடுத்து விடுங்கள், உங்களுக்குப் பதிலாக அவர் அன்ஸாரிகளின் படைக்குத் தளபதியாக இருப்பார்கள் என்றார்கள். ***(ஸீரத்துல் ஹல்பிய்யா; தொகுதி 3, பக்கம் 93)***

இவ்வாறு செய்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவாசிகளின் உள்ளத்தில் அமைதி ஏற்படுமாறு செய்தார்கள். அன்ஸாரிகளின் உள்ளத்திற்கும் வருத்தம் ஏற்படாதவாறு பார்த்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கைஸிடம் முழுமையான நம்பிக்கையும் இருந்தது. அவர் இயல்பிலேயே மிக மென்மையான இளைஞராக விளங்கினார்.

அவரைப் பற்றி வரலாற்றில் பின்வருமாறு எழுதப் பட்டுள்ளது: அவருக்கு மரணவேளை நெருங்கியபோது, பலர் நலம் விசாரிப்பதற்காக வந்தனர். சிலர் வரவில்லை. இதனால் அவர் தமது நண்பர்களிடம், எனக்குத் தெரிந்த சிலர் என்னை நலம் விசாரிக்க வரவில்லையே? இதற்கு என்ன காரணம்? என்று கேட்டபோது, அவருடைய நண்பர்கள், தாங்கள் பெரும் செல்வந்தர். மக்களுக்குப் பணக் கஷ்டம் ஏற்பட்டபோது தாங்கள் அவர்களுக்குக் கடன்கொடுத்து உதவி செய்தீர்கள். இந்த நகரத்தில் பலர் தங்களிடம் கடன்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது தங்களுக்கு பணம் தேவைப்படலாம். அவர்கள் இப்பொழுது தங்களை நலம் விசாரிக்க வந்தால், தாங்கள் அவர்களிடம் கடனை நிறைவேற்றுமாறு கேட்டுவிடுவீர்களோ என்று அவர்கள் நினைத்ததால்தான் நலம் விசாரிக்க வரவில்லை என்றார்கள். இது கேட்டு அவர் என் நண்பர்களுக்கு அநாவசியமாகத் துன்பம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நகரம் முழுவதிலும், எவர்களெல்லாம் கைஸுக்கு கடன் கொடுக்க வேண்டியதிருக்கிறதோ, அவர்கள் எல்லாருடைய கடனையும் கைஸ் மன்னித்து விட்டார் என்று என் சார்பாக பொது அறிவிப்பு கொடுத்து விடுங்கள் என்று கூறினார். இந்த அறிவிப்பைக் கேட்டு மிக அதிகமானவர்கள் அவரை நலம் விசாரிக்க வந்தனர். மிக அதிகமானவர்களின் வருகையால் அவரது வீட்டின் வாசற்படிகள் தகர்ந்துபோயின!

முஸ்லிம் படைகள் சென்றுகொணடிருந்த போது,ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், அபூஸுஃப்யானிடம், இப்பொழுது நீங்கள் உங்கள் குதிரையில் மிக விரைவாக மக்காவுக்குச் சென்று மக்காவாசிகளிடம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வந்துவிட்டார்கள். அவர்கள் இன்ன இன்ன வகையில் மக்கா வாசிகளுக்குப் பாதுகாப்பு வழங்கியுள்ளார்கள் என்று அறிவித்து விடுங்கள் எனக் கூறினார்கள்.

அபூஸுஃப்யான் தமது உள்ளத்தில், மக்காவாசிகளின் பாதுகாப்பிற்கான ஒருவழியை, தாம் ஏற்படுத்தியதில் பெரும் மகிழ்சியடைந்த அதே வேளையில், ஆரம்பத்திலிருந்தே இஸ்லாத்தின் மீது மீகுந்த வெறுப்பும் பகைமையும் கொள்ளுமாறு மக்களுக்குச் சொல்லி வந்தவரும், நிராகரிப்பவராக இருந்துங்கூட உண்மையிலேயே துணிவு மிக்கவருமாகிய அவருடைய மனைவி ஹிந்தா என்பவள் அவரை நெருங்கி அவரது தாடியைப் பிடித்துக் கொண்டு மக்காவாசிகளைக் கூவியழைத்து, இந்த அறிவற்ற கிழவரைக் கொன்றுவிடுங்கள். நீங்கள் எல்லாரும் உங்கள் உயிர்களுக்கும் உங்கள் நகரத்திற்கும் கண்ணியமளிப்பதற்காகப் புறப்படுங்கள்; பகைவர்களுடன் போரிட்டு வீர மரணமடையுங்கள் என்று உங்களுக்கு அறிவுரை கூறுவதற்கு பதிலாக, இந்தக் கிழவர் உங்களுக்குப் பாதுபாப்பு வழங்கப்படும் என்று அறிவித்துக் கொண்டிருக்கிறார் என்றாள்.

அவள் இவ்வாறு கூறியதைக் கேட்ட அபூஸுஃப்யான், அறிவற்றவளே! உன் அறிவுரைகளின் படி நடப்பதற்குரிய நேரம் இதுவல்ல; ஓடிப்போய், உன் வீட்டிற்குள் ஒளிந்துகொள். நான் அந்தப் படைகளைக் கண்ணால் கண்டு வந்துள்ளேன். அரபு நாடு முழுவதிலுமுள்ள எந்தப் படைக்கும் முஸ்லிம் படைகளை எதிர்க்கும் சக்தி கிடையாது என்று கூறிவிட்டு, உரத்த குரலில், பாதுகாப்பிற்கான நிபந்தனைகளை விளக்கி கூறினார். இது கேட்டு மக்கள் எல்லாரும் பாதுகாப்பு வழங்கப்பட்ட இடங்களுக்கும் வீடுகளுக்கும் விரைந்து சென்றார்கள்.

அநியாயமாகக் கொலைகள் செய்து குழப்பம் விளைவித்தவர்கள் என்று நிரூபிக்கபட்ட பதினொன்று ஆண்களும் நான்கு பெண்களும் போர்க் குற்றவாளிகளாக இருந்தனர். அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தப் பதினைந்து பேரும் நிராகரிப்பாளராக இருந்தனர் என்பதற்காகவோ போரில் பங்கேற்று தம்மை எதிர்த்தனர் என்பதற்காகவோ அல்லாமல் அவர்கள் மனிதத்தன்மையற்ற கொடுஞ்செயல்களைச் செய்த குற்றவாளிகளாக இருப்பதால் அவர்கள் கொல்லப்பட வேண்டும் என்று கட்டளையிட்டார்கள். ஆனால் இறுதியில் நான்கு பேர் மட்டுமே கொல்லப்பட்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு, எவரும் தாமாக முன் வந்து போர் தொடுக்காத வரை நீங்கள் போர் செய்யக் கூடாது என்று மிகவும் வலியுறுத்திக் கட்டளையிட்டார்கள். ஆனால் எந்தப் பக்கத்திலிருந்து அவர்கள் நகருக்குள் நுழைந்தார்களோ அந்தப் பகுதி மக்களுக்கு மேற்கூறப்பட்ட பாதுகாப்பு பற்றிய அறிக்கை அந்த நேரம் வரைப் போய்ச் சேரவில்லை. இதனால் அந்தப் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மக்காவாசிகள் காலித் பின் வலீது (ரலி) அவர்களைத் தாக்க தொடங்கினர். காலித் பின் வலீத் (ரலி) திருப்பித் தாக்கிய போது அவர்கள் பன்னிரெண்டு அல்லது பதிமூன்று பேர் கொல்லப்பட்டனர்.

காலித் பின் வலீது (ரலி) அவர்கள் கோபமிக்கவராக இருந்ததால், ஒருவர் விரைந்து சென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் நடந்த நிகழ்ச்சியைக் கூறி காலிதைத் தடுத்து நிறுத்தவில்லை என்றால், மக்காவாசிகள் எல்லாரையும் அவர் கொன்று குவித்துவிடுவார் என்று கூறினார். உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலித் பின் வலீது அவர்களை வரவழைத்து, நீங்கள் எவருடனும் போர் செய்யக்கூடாதென்று நான் உங்களுக்குத் தடை விதிக்கவில்லையா? என்று கேட்டதற்கு, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஆம். தாங்கள் தடை செய்திருந்தீர்கள். ஆனால் அவர்களே முதலில் எங்களைத் தாக்கினார்கள். மேலும் அவர்கள் எங்களை நோக்கி அம்பு எய்யத் தொடங்கிவிட்டார்கள். நான் சற்று நேரம் வரைப் பொறுத்திருந்து விட்டு, நாங்கள் உங்களைத் தாக்க விரும்பவில்லை; நீங்கள் எங்களை தாக்காதீர்கள் என்று கூறினேன. ஆனால் அவர்கள் தங்கள் தாக்குதலிலிருந்து விலகிக்கொள்ளப்போவதில்லை என்று எனக்குத் தெரிந்தபோது தான் நான் அவர்களைத் திருப்பித் தாக்கினேன். இறைவன் அவர்களை நான்கு திசைகளிலும் சிதறடித்து விட்டான் என்று காலித் பின் வலீது (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள்.

எப்படியிருந்த போதிலும் இந்தச் சிறு நிகழ்ச்சியைத் தவிர வேறெந்த அசம்பாவிதமும் நிகழாமலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவைக் கைப்பற்றினார்கள். அவர்கள் மக்காவிற்குள் நுழைந்தபோது, மக்கள் அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் தங்கள் வீட்டில் தங்கப்போகிறீர்களா? என்று கேட்டதற்கு, அவர்கள், எனது ஒன்று விட்ட சகோதரர் அகீல் எனக்கென்று எந்த வீட்டையாவது விட்டு வைத்திருக்கிறாரா? நான் இங்கிருந்து மதீனாவுக்கு குடிபெயர்ந்து சென்ற பிறகு என் உறவினர்கள் என் சொத்துக்களையெல்லாம் விற்றுத்தின்று விட்டார்களே. இப்பொழுது மக்காவில் எனக்கென்று எந்த உறைவிடமும் இல்லையே என்று கூறிவிட்டு நான் இப்பொழுது கைஃப் பனீ கினானா-வில் தங்கியிருக்க முடிவு செய்துள்ளேன் என்றார்கள்.

கைஃப் பனீ கினானா என்பது மக்காவிலுள்ள ஒரு திடல். இங்குதான் குரைஷியர்களும் கினானா கோத்திரத்தைச் சேர்ந்தவர்களும் இணைந்து ஹாஷிம் குடும்பத்தினரும் அப்துல் முத்தலிப் குடும்பதினரும் முஹம்மது (ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைப் பிடித்துத் தம்மிடம் ஒப்படைத்து விடவேண்டும்; அவ்விரு குடும்பத்தினரும் அவர்களுக்கு எந்த ஒத்துழைப்பும் கொடுக்க கூடாது; அவ்விரு குடும்பத்தினரும் இவ்வாறு செய்யாதவரை நாம் அந்தக் குடும்பங்களுடன் திருமணத் தொடர்போ எவ்வகையான கொடுக்கல், வாங்கலோ வைத்துக் கொள்ளக் கூடாது என்று சத்தியம் செய்து சபதம் எடுத்துக் கொண்டார்கள்.

இவ்வாறு அவர்கள் சபதம் செய்து கொண்ட பிறகே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களின் பெரிய தந்தையார் அபூதாலிப் அவர்களும் அவர்களை ஏற்று இஸ்லாத்தைத் தழுவிய அனைவரும் அபூதாலிப் (க்குச் சொந்தமான) பள்ளத்தாக்கில் தஞ்சம் புகுந்தனர். இங்கு அவர்கள் மூன்று ஆண்டுகள் கடினமாக துன்பங்களை அனுபவத்த பிறகு இறைவன் அவர்களுக்கு விடுதலையளித்தான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தாங்கள் தங்குவதற்காக இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தது மிகவும் பொருத்தமானது. மக்காவாசிகள் இதே இடத்தில்தான், முஹம்மதை நம்மிடம் ஒப்படைக்காதவரை, நாம் அவர்களின் குடும்பத்தினருடன் சமாதானம் செய்து கொள்ளப் போவதில்லை என்று சத்தியம் செய்து சபதமெடுத்துக் கொண்டார்கள்.

இன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதே திடலில் வந்திறங்கினார்கள். இதன் மூலம் மக்காவாசிகளுக்கு நான் எந்த இடத்திற்கு வர வேண்டுமென்று நீங்கள் விரும்பினீர்களோ அந்த இடத்திற்கு இன்று நான் வந்துவிட்டேன். ஆனால் என்னை அநீதிகளுக்கு இலக்காக்கும் வலிமை உங்களுக்கு இன்று இருக்கிறதா? என்பதை மக்காவாசிகளே! சற்று எண்ணிப் பாருங்கள். எந்த இடத்திற்கு நான் இழிவுபடுத்தப்பட்டவனாகவும் பழிக்கப் பட்டவனாகவும் வருவதை நீங்கள் காண விரும்பினீர்களோ, என் சமுதாயத்தினர் என்னைப் பிடித்துக் கொண்டு வந்து எந்த இடத்தில் உங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று நீங்கள் ஆசை கொண்டிருந்தீர்களோ அதே இடத்திற்கு நான் இன்று பெரும் வெற்றி வாகை சூடியவனாக வந்துள்ளேன். என் சமுதாயத்தினர் மட்டுமல்லாமல் அரபு மக்கள் எல்லாரும் இன்று என்னுடன் இருக்கின்றனர். என் சமுதாயத்தினர் என்னை உங்களிடம் ஒப்படைக்கவில்லை; மாறாக என் சமுதாயத்தினர் உங்களைத் தான் என்னிடம் ஒப்படைத்து விட்டனர் என்று கூறினார்கள்.

இறைவனுடைய ஒரு வல்லமையைப் பாருங்கள்: இந்த நாள் திங்கட்கிழமையாக இருந்தது. இதற்கு முன் இதே நாளில்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸவ்ர் குகையிலிருந்து வெளியேறி ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுடன் மதீனாவிற்குக் குடிபெயர்ந்து சென்றார்கள். மேலும் இதே நாளில்தான் ஸவ்ர் குகையின் குனிறின்மேல் நின்றுகொண்டு, மிகுந்த வருத்தத்துடன் மக்காவை நோக்கி, மக்கா நகரமே! உலகிலுள்ள எல்லா நகரங்களையும் விட நீயே எனக்கு மிகவும் பிரியமான நகரமாக விளங்குகின்றாய. ஆனால் உன் மக்கள் என்னை இங்கு வாழ விடவில்லையே என்று கூறினார்கள்.

மக்காவிற்குள் நுழைந்துகொண்டிருந்த போது ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒட்டகத்தின் கயிற்றைப் பிடித்தவாறு அவர்களுடன் பேசிக்கொண்டும் மக்கா வெற்றி குறித்து அறிவிக்கப்பட்டிருந்த திருக்குர்ஆனின் ஃபதஹ் (வெற்றி) என்னும் அதிகாரத்தை ஓதிக்கொண்டும் சென்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நேராக கஅபத்துல்லாஹ்வுக்குச் சென்று ஒட்டகத்தின் மீது இருந்துகொண்டே அதனை ஏழுமுறை தவாஃப் செய்தார்கள் (சுற்றி வந்தார்கள்). அப்போது அவர்களின் கையில் ஒரு கைத்தடி இருந்தது.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களும் அவர்களின் மகன் ஹஸ்ரத் இஸமாயீல் (அலை) அவர்களும் ஒரே இறைவனை வணங்குவதற்காக கட்டிய கஅபத்துல்லாஹ்வை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுற்றிப்பார்த்தார்கள். அங்கு வைக்கப் பட்டிருந்த முந்நூற்று அறுபது (360) சிலைகளுள் ஒவ்வொன்றின் மீதும் அவர்கள் அந்தக் கைத்தடியால் அடித்து,

***ஜா அல் ஹக்கு வ ஸஹகல் பாதிலு***
***இன்னல் பாதில காண ஸஹூகா***

என்று கூறினார்கள். இதன் பொருள், உண்மை வந்துவிட்டது. பொய் ஓடிவிட்டது. பொய்யானது ஓடிவிடக்கூடிய ஒன்றேயாகும். ***(திருக்குர்ஆன் 17:82)***

திருக்குர்ஆனின் பனீ இஸ்ராயீல் என்னும் அதிகாரத்திலுள்ள இந்த வசனம் (17:82) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்வதற்கு (குடி பெயர்ந்து செல்வதற்கு) முன் அவர்களுக்கு அருளப்பட்டதாகும். இந்த அதிகாரத்தில், அவர்கள் ஹிஜ்ரத் செய்யவேண்டியது வரும் என்பது பற்றியும் பின்னர் அவர்கள் மக்காவை வெற்றி கொள்வார்கள் என்பது பற்றியும் முன்னறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகாரம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செல்வதற்கு முன்னர் அருளப்பட்டதே என்று ஐரோப்பிய நூலாசிரியர்களும் ஒன்றுபட்டு உறுதி செய்துள்ளனர்.

இதில் விளக்கப்பட்ட கருத்தாவது:

நீர் கூறுவீராக: என் இறைவா! என்னை (வெற்றியாளனாக மீண்டும் மக்காவிற்குள்) நல்ல முறையில் நுழையச் செய்வாயாக. நற்பெயரை விட்டுச் செல்லும் முறையில் (ஹிஜ்ரத்தின் போது மக்காவிலிருந்து) என்னை வெளியேறச் செய்வாயாக, மேலும் உன்னிடமிருந்து எனக்கு உதவியாளராகவும் சாட்சியாகவும் விளங்கும் ஒருவரை நியமிப்பாயாக.

நீர் (எல்லா மக்களிடமும்) கூறுவீராக: (இப்பொழுது) உண்மை வந்து விட்டது; பொய் ஓடிவிட்டது. பொய்யானது ஓடிவிடக்கூடிய ஒன்றேயாகும். (17 : 81, 82)

இந்த வசனங்களிலுள்ள முன்னறிவிப்புகள் சொல்லுக்குச் சொல் முழுமையாக நிறைவேறின. ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் இந்த வசனங்களை ஓதிய நேரத்தில், முஸ்லிம்களின் உள்ளங்களிலும் நிராகரித்தவர்களின் உள்ளங்களிலும் என்னென்ன உணர்வுகள் பொங்கி எழுந்திருக்கும் என்பதை சொற்களால் கூறயியலாது.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் எழுப்பிய ஆலயம் அந்த நாளில் மீண்டும் ஒரே இறைவனை வணங்குவதற்காக ஆக்கப்பட்டுவிட்டது. அங்கிருந்த சிலைகள் உடைக்கப்பட்டு நிரந்தரமாக அகற்றப்பட்டு விட்டன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுபல் என்னும் சிலையின் மீது தங்கள் கைத்தடியால் அடித்ததும், அது தனக்குரிய இடத்திலிருந்து கீழே விழுந்து நொறுங்கிய போது ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள், அபூஸுஃப்யானைப் பார்த்து புன்னகை செய்தவர்களாக, அபூஸுஃப்யான் அவர்களே! உஹுதுப் போரில், முஸ்லிம்களுக்குக் கடினமான காயங்கள் ஏற்பட்டு ஒரு பக்கமாக ஒதுங்கி நின்றபோது, நீங்கள் மிகுந்த பெருமையுடன், ஹுபலின் மகிமை வாழ்க, ஹுபலின் மகிமை வாழ்க என்று முழங்கி, அந்தப் போரில் முஸ்லிம்களின் மீது ஹுபல் என்ற அந்தச் சிலையே உங்களுக்கு வெற்றியை வழங்கியது என்று அறிவித்தது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? ஆனால் இன்று அது உங்களுக்கு முன்னால் உடைந்து கிடப்பதைப் பார்க்கின்றீர்கள் எனக் கூறினார்கள்.

இதற்கு அபூஸுஃப்யான், ஸுபைர் அவர்களே! இப்பொழுது அவற்றைப் பற்றிப் பேசவேண்டாம். ஏனென்றால் இன்று எங்களுக்கு உண்மை என்னவென்று நன்கு புரிந்து விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறைவனுடன் வேறொர் இறைவனும் இருந்திருப்பின், இன்று எங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த இழிநிலை ஒருபோதும் ஏற்பட்டிருக்காது என்று கூறினார்.

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், கஅபாவின் சுவர்களில் காணப்பட்ட ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் உருவப்படத்தையும் பிற உருவப்படங்களையும் அழித்துவிடுமாறு கட்டளையிட்டுவிட்டு, கஅபாவிற்குள் சென்று, இறைவனுடைய வாக்குறுதிகள் நிறைவேறியதற்கு நன்றி செலுத்து வதற்காக இரண்டு ரகஅத் தொழுகையை நிறைவேற்றினார்கள். பிறகு வெளியில் வந்து இரண்டு ரகஅத் தொழுகையை நிறைவேற்றினார்கள்.

கஅபாவின் சுவர்களில் வரையப்பட்டிருந்த உருவப் படங்களை அழிப்பதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை நியமித்தார்கள். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களை நாமும் நபி என்று ஏற்றுக்கொணடிருக்கின்றோம் என்று நினைத்து அவர்களின் உருவப்படத்தை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அழிக்கவில்லை. அந்த உருவப்படம் அழிக்கப்படாமலிருப்பதைக் கண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உமர் அவர்களே! நீங்கள் ஏன் இந்த உருவப்படத்தை அழிக்கவில்லை? இறைவன் திருக்குர்ஆனில்,

இப்ராஹீம் யூதராகவோ கிறித்தவராகவோ இருக்கவில்லை. மாறாக ஏக இறைவனை வணங்குபவராகவும் (அவனுக்கு முற்றிலும்) கட்டுபட்டவராகவும் இருந்தார். அவர் இணை வைப்பவர்களைச் சார்ந்தவராக இருக்கவில்லை (3:68)

என்று கூறவில்லையா? எனவே இதனையும் அழித்து விடுங்கள் என்றார்கள். பிறகு அதுவும் அழிக்கப்பட்டது.

இறைவனுடைய முன்னறிவிப்புகள் நிறைவேறியதைக் கண்ட முஸ்லிம்களின் உள்ளம் அந்த நாளில் ஈமான் என்னும் நம்பிக்கையால் நிரம்பிற்று. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயரிய தன்மையில் அந்த முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட உறுதிப்பாட்டிற்கு ஓர் எல்லையே இல்லாமற் போயிற்று. இதற்கு ஓர் எடுத்துக்காட்டு ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் மகன் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களுக்காக இறைவன் அற்புதமாக வெளிப்படச் செய்த ஸம் ஸம் என்னும் நீருற்றிலிருந்து தண்ணீர் அருந்துவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனைக் கொண்டுவரச்செய்து அதிலிருந்து சிறிது தண்ணீர் அருந்தி விட்டு எஞ்சிய தண்ணீரில் அவர்கள் வுளு செய்த போது அவர்களின் உடலிலிருந்து ஒரு சொட்டுத் தண்ணீர் கூட நிலத்தில் விழாத வண்ணம்

முஸ்லிம்கள் அதனைத் தங்கள் கைகளில் ஏந்தி, அதனை அருளுக்குரியதாகக் கருதி, தங்கள் உடல்களில் தேய்த்துக் கொண்டனர்.

இறைவனுக்கு இணைவைப்பவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் முஸ்லிம்கள் வைத்திருந்த இத்தகைய பற்றைக் கண்டு, உலகில் எந்த மன்னருடைய மக்களும் அந்த மன்னரிடம் இந்த அளவு பற்று வைத்திருந்ததை நாங்கள் கண்டதில்லை என்று வியந்தனர்.

மேற்கூறப்பட்டவற்றை முடித்து விட்டு அமர்ந்திருந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன், மக்காவாசிகள் கொண்டு வரப்பட்டு நிறுத்தப்பட்ட போது அவர்கள், மக்காவாசிகளே! இறைவனுடைய முன்னறிவிப்புகள் சொல்லுக்குச் சொல் அப்படியே நிறைவேறியதை கண்டீர்கள். ஒரே இறைவனை வணங்கி வந்த ஏழை அடியார்களுக்கு நீங்கள் செய்து வந்த அநீதிகளுக்கும் தீமைகளுக்கும் பதிலாக இப்பொழுது உங்களுக்கு என்ன தண்டனை வழங்கப்பட வேண்டும் எனபதை நீங்களே சொல்லுங்கள் என்று கூறினார்கள். இதற்கு மக்காவாசிகள், ஹஸ்ரத் யூஸுஃப் (அலை) அவர்கள் தங்கள் சகோதரர்களுடன் நடந்து கொண்டது போன்று தாங்கள் எங்களுடன் நடந்து கொள்வீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம் என்றனர்.

இங்கு இறைவனின் வல்லமையைப் பாருங்கள்! திருக்குர்ஆனில் யூஸுஃப் என்னும் அதிகாரத்தில் இறைவன் ஏற்கெனவே முன்னறிவித்திருந்த அதே சொற்கள் மக்காவாசிகள் வாயிலிருந்து வெளியாயின. யூஸுஃப் தமது சகோதரர்களுடன் நடந்து கொண்டது போன்றே நீர் மக்காவாசிகளுடன் நடந்து கொள்வீர்கள் என்று இறைவன், மக்கா வெற்றிக்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்னரே அறிவித்து விட்டான்.

எனவே,ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மக்களை மன்னிப்பதில் ஹஸ்ரத் யூஸுஃப் (அலை) அவர்களைப் போன்றவர்களாவார்கள். இறைவன் அவர்களுக்குத் தங்கள் சகோதர்களின் மீது வெற்றியை வழங்கியது போன்று அவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் தங்கள் நாட்டு மக்களாகிய சகோதரர்களின் மீது வெற்றியை வழங்கியுள்ளான் என்ற உண்மையை மக்காவாசிகள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும்,

*தல்லாஹி லா தஸ்ரீப் அலைக்குமுல் யவ்ம்* - இறைவன் மேல் ஆணையாக, இன்று உங்களுக்கு எவ்வித தண்டனையும் வழங்கப்பட மாட்டாது, மேலும் எவ்வகை நிந்தனையும் செய்யப்பட மாட்டாது - என்று பகிரங்கமாக அறிவிப்புச் செய்தார்கள்.

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கஅபாவிற்குச் சென்று அங்கு செய்யப்பட வேண்டிய வணக்கங்களைச் செய்து விட்டு, தங்கள் சமுதாயத்தினருக்கு மன்னிப்பு வழங்கிக்கொண்டிருந்த போது, மதீனாவாசிகளாகிய அன்ஸார்களின் உள்ளத்தில் கவலை உருவானது. அவர்களுள் ஒருவருக்கொருவர் சைகை மூலம், இன்று அல்லாஹ்வின் தூதர் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து விடுவார்கள் போல் தோன்றுகிறது. ஏனென்றால் அவர்கள் தங்கள் நகரத்தைத் தங்கள் கையாலேயே வெற்றி கொள்ளுமாறு இறைவன் அருள் செய்து விட்டான். அவர்களின் சமுதாயத்தினர் அவர்கள் மீது நம்பிக்கை கொண்டு விட்டனர் என்று விரக்தியோடு பேசிக் கொண்டனர்!

அப்பொழுது இறைவன் வஹி மூலம் அன்ஸாரிகளின் இந்த ஐய்யப்பாடுகள் பற்றி ஹஸ்ரத் நபிகள் (ஸல்) அவர்களுக்குத் தெரிவித்தான். இதனால் அவர்கள் தங்கள் தலையை உயர்த்தி அன்ஸாரிகளைப் பார்த்து, அன்ஸாரிகளே! அல்லாஹ்வின் தூதர் முஹம்மதை தமது நகரத்தின் மீதுள்ள அன்பு வாட்டிவதைக்கிற தென்றும் அவர் தமது சமுதாயத்தினரிடம் கொண்டிருக்கும் பாசம் அவரது உள்ளத்திற்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறதென்றும் நீங்கள் நினைக்கின்றீர்கள்.

இதுகேட்டு, அன்ஸாரிகள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஆம்; அவ்வாறான எண்ணம் எங்கள் உள்ளத்தில் ஏற்பட்டது உண்மையே என்று கூறினார்கள். இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், என் பெயர் என்னவென்று உங்களுக்குத் தெரியும். நான் இறைவனின் அடியார் என்றும் அவனுடைய தூதர் என்றும் அழைக்கப்படுகிறேன். இவ்வாறிருக்கும் போது, இஸ்லாத்தைத் தழுவியவர்கள் பலவீனமானவர்களாக இருந்த நேரத்தில தங்கள் உயிர்களை வியக்கத்தக்க வகையில் அர்ப்பணம் செய்தவர்களாகிய உங்களை விட்டு விட்டு நான்

வேறோரிடத்திற்குச் செல்வதென்பது என்னால் எப்படி முடியும்? அன்ஸாரிகளே! நான் அல்லாஹ்வின் அடியாரும் அவனது தூதருமாக இருக்கின்றேன். நான் இறைவனுக்காக எனது ஊரை விட்டுச் சென்றேன். அதன் பிறகு, நான் இப்பொழுது எனது ஊருக்குத் திரும்பி வர இயலாது. நான் உங்களுடனேயே வாழ்ந்து உங்களுடனேயே மரணிப்பேன் என்று கூறினார்கள். (அதாவது நான் இங்கேயே தங்கிவிட முடியாது)

மதீனாவாசிகள் அவர்கள் கூறியவற்றைக் கேட்டு, அவர்கள் தங்கள் மீது கொண்டிருக்கும் பாசத்தையும் நேசத்தையும் கண்டு, கண்ணீர் வடித்தவர்களாக முன் வந்து அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இறைவன் மேல் ஆணையாக நாங்கள் இறைவனிடமும் அவனது தூதரிடமும் தவறான எண்ணம் கொண்டிருந்தோம். இதற்குக் காரணம், இறைத்தூதர் எங்களையும் எங்கள் நகரத்தையும் விட்டு விட்டு வேறு எங்காவது சென்று விடுவார்களோ என்ற எண்ணம் எங்கள் உள்ளத்தில் தோன்றியதை எங்களால் சகித்துக் கொள்ள இயலாதிருந்ததேயாகும் என்றனர். இது கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வும் அவனது தூதரும் உங்களை நிரபராதியாகக் கருதுகின்றனர் உங்களுடைய மாசற்ற பற்றை உண்மைப்படுத்திப் பாராட்டுகின்றனர் என்றார்கள்!

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் மதினா வாழ் மக்களுக்கும் இடையேயுள்ள அன்பையும் பாசத்தையும் எடுத்துக்காட்டும் இத்தகு உரையாடல்கள் நிகழ்ந்து கொண்டிருந்த போது, மக்காவாசிகளின் கண்கள் கண்ணீர் வடிக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் நிச்சயமாக அவர்களின் உள்ளம் இரத்தக் கண்ணீர் சிந்தியிருக்கும். அவர்கள் தங்கள் உள்ளத்தில், உலகில் இனிமேல் ஒருபோதும் தோன்ற முடியாததும் விலைமதிக்க முடியாததும் மிகவும் அற்புதமானதுமான வைரம் ஒன்றினை (நபிகள் நாயகத்தை) இறைவன் தங்களுக்கு வழங்கினான. ஆனால் தாமோ அதனைத் தங்கள் வீடுகளிலிருந்து தூக்கி எறிந்து விட்டனர். இப்பொழுது அந்த வைரம், இறைவனின் அருளாலும் அவனது உதவியாலும் மீண்டும் மக்காவிற்கு வந்தது. ஆனால் அது தனது உறுதிமொழியை நிறைவு செய்யும் வண்ணம் தனது விருப்பத்துடனும் மிகுந்த மகிழ்ச்சியுடனும் மக்காவை விட்டு விட்டு மதீனாவுக்குத் திரும்பிச் சென்று கொண்டிருக்கிறதே என்று ஏங்கி உள்ளத்தால் அழுது இருப்பார்கள்!

பல அநீதிகள் இழைத்ததற்காகவும் நியாயமற்ற முறையில் பயங்கரமான பல கொலைகள் செய்ததற்காகவும் எவர்களுக்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கியிருந்தார்களோ அவர்களுள் பெரும் பாலானவர்களைக் குறித்துச் சில முஸ்லிம்கள் செய்த பரிந்துரையின் காரணமாக அவர்களுக்கு மரண தணடனை வழங்கப்படவில்லை. அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

அவர்களுள் அபூஜஹ்லின் மகன் இக்ரிமாவும் ஒருவராவார். அவரது மனைவி மனத்தளவில் முஸ்லிமாகயிருந்தாள். அவள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இக்ரிமாவையும் தாங்கள் மன்னித்தருளுமாறு வேண்டுகிறேன் என்றாள். இதற்கு அவர்கள் சரி; நாம் அவரையும் மன்னித்து விடுகிறோம் என்றார்கள்.

இக்ரிமா மக்காவிலிருந்து வெருண்டோடி அபிசீனியா நாட்டிற்கு சென்று கொண்டிருந்தார். அவர் மனைவி, அவர் மீது கொண்டிருந்த அன்பின் காரணமாக அவரைத் தேடிச் சென்றாள். அவர் கடற்கரையில் நின்று கொண்டிருந்த ஒரு படகில் ஏறி அமர்ந்து, அரபு நாட்டை நிரந்தரமாக விட்டுச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தபோது, தலைவிரிக் கோலத்துடன் பதற்றமும் கவலையும் அடைந்த நிலையில் அங்கு வந்து சேர்ந்த அவரது மனைவி, என் சிறிய தந்தையார் மகனே, (தங்கள் கணவர்களைப் பார்த்து இவ்வாறு அழைப்பது அரபுப் பெண்களின் வழக்கமாக இருந்தது) மிகச் சிறந்த பண்புகளையும் மிகுந்த கருணை உள்ளமும் கொண்ட ஒரு மனிதரை (நபிகள் நாயகத்தை) விட்டுவிட்டு நீங்கள் எங்குச் சென்று கொண்டிருக்கிறீர்கள்? என்று கேட்டாள்.

இக்ரிமா மிகவும் வியப்படைந்து, தமது மனைவியிடம், கடும் பகைமையைக் காட்டிய என்னை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மன்னித்து விட்டார்களா என்று கேட்டதற்கு ஆம், நான் அவர்களிடம் உறுதிமொழி வாங்கிவிட்டேன். அவர்கள் உங்களை மன்னித்து விட்டார்கள் என்று அவள் கூறினாள்.

பின்னர் இக்ரிமா, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து மிக்க பணிவுடன், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! மாபெரும் பகைவனாகிய என்னைக் கூடத் தாங்கள் மன்னித்து விட்டதாக என் மனைவி கூறுகின்றாள் என்றார். இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உமது மனைவி கூறுவது உண்மையே. நாம் உம்மை மன்னித்து விட்டோம் என்றார்கள். இது கேட்டு இக்ரிமா, இந்த அளவிற்குக்கொடிய பகைவர்களைக் கூட மன்னிக்கக் கூடியவர், ஒருக்காலும் பொய்யராக இருக்க இயலாது. எனவே அல்லாஹ் ஒருவன்; அவனுக்கு இணையானது எதுவும் இல்லை என்றும் முஹம்மது (ஸல்) அவர்களே, தாங்கள் அவனுடைய அடியாரும் அவனுடைய தூதருமாவீர்கள் என்றும் நான் சாட்சி கூறுகின்றேன் என்று கூறி வெட்கித் தலைகுனிந்து நின்றார்.

அவருடைய நிலையைக் கண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவருக்கு ஆறுதல் அளிப்பதற்காக, இக்ரிமாவே! நாம் உம்மை மன்னித்து விடுவது மட்டுமல்லாமல், இன்னொன்றையும் உமக்கு வழங்கவிருக்கின்றோம். அதாவது இன்று என்னால் உமக்குத் தர முடிகின்ற எந்தப் பொருளைக் கேட்டாலும், அந்தப் பொருளை நான் உமக்குத் தருவேன் என்றார்கள். இது கேட்டு இக்ரிமா, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களைப் பல்வேறு வகையிலும் எதிர்த்துக் கொண்டிருந்த என்னை மன்னித்து விடுமாறு தாங்கள் இறைவனிடம் பிரார்த்தனை செய்வீர்களாயின், எனக்கு அதைவிட மேலான விருப்பம் எதுவும் இல்லை என்று கூறினார்.

உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனிடம், என் இறைவா! இக்ரிமா என்னிடம் காட்டிய எல்லா எதிர்ப்புகளையும் அவரது வாயிலிருந்து வெளிவந்த எல்லா வசைமாரிகளையம் மன்னித்தருள்வாயாக என்று அவருக்காகப் பிரார்த்தனை செய்து விட்டு, பின்னர் எழுந்து வந்து தங்களுடைய மேலாடையைக் கழற்றி அவருக்குப் போர்த்தி அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டு நம்மிடம் வருகின்றவருக்கு, நம் வீடு அவருடைய வீடாகவும், நம் இடம் அவருடைய இடமாகவும் இருக்கும் என்றார்கள்.

இக்ரிமா இறைவன் மீது நம்பிக்கை கொண்டு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே தங்கள் தோழர்களாகிய ஸஹாபிகளிடம் கூறிய ஒரு முன்னறிவிப்பு நிறைவேறிற்று. அவர்கள் கூறிய அந்த முன்னறிவிப்பாவது, நான் ஒரு கனவு கண்டேன். அந்தக் கனவில் நான் சுவர்க்கத்தில் இருக்கிறேன். அங்குத் திராட்சைக்குலை யொன்றைக் கண்டேன். இது யாருக்கு என்று மக்களிடம் கேட்டேன். இது அபூஜஹீலுக்கு என்று ஒருவர் பதிலளித்தார். இது எனக்கு வியப்பை அளித்தது. எனவே நான், நம்பிக்கை கொண்டவர்களைத் தவிர வேறெவரும் சுவர்க்கத்தில் நுழைவதில்லையே. அப்படியிருக்க நம்பிக்கை கொள்ளாத அபூஜஹிலுக்கு எவ்வாறு சுவர்க்கத்தில் திராட்சை வழங்கப்படவிருக்கிறது என்று எண்ணினேன்.

இன்று இக்ரிமா நம்பிக்கை கொண்டதும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அந்தத் திராட்சைக் குலை இக்ரிமாவுக்குரிய தாகும். மகனுடைய பெயருக்குப் பதிலாகத் தந்தையின் பெயரை இறைவன் கூறியுள்ளான். கனவுகளில் பெரும்பாலும் இவ்வாறு காட்டப்படுவதுண்டு என்று கூறினார்கள். ***(ஆதாரம்: ஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 3, பக்கம் 104)***

மரணதண்டனை வழங்கப்படவேண்டுமென்று விதிக்கப் பட்டவர்களுள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு மகள் ஹஸ்ரத் சைனப் (ரலி) அவர்களின் மரணத்திற்குக் காரணமாக இருந்தவரும் ஒருவராவார். அவர் பெயர் ஹப்பார். ஹஸ்ரத் சைனப் (ரலி) அவர்கள் அமர்ந்து சென்ற ஒட்டகையின் தொட்டில் கயிற்றை அவர் துண்டித்ததால் அவர்கள் அதிலிருந்து கீழே விழுந்தார்கள். இதனால் அவர்களின் கர்ப்பம் கலைந்து போயிற்று. அடுத்து சில நாட்களுக்குப் பிறகு அவர்கள் மரணமடைந்து விட்டார்கள்.

அவர் இந்த குற்றத்தை மட்டுமல்லாமல் இன்னும் பல கொடூரமான குற்றங்களைச் செய்திருந்ததால், மரணதண்டனைக் குரியவராக இருந்தார். பல குற்றங்களைச் செய்த அவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் தங்களை விட்டு வெருண்டோடி, ஈரானுக்குச் சென்று கொண்டிருந்தேன். அப்போது இறைவன் தனது நபியின் மூலம் இணைவைக்கும் நம் எண்ணங்களை அகற்றி, ஆன்மீக அழிவிலிருந்து நம்மைக் காப்பாற்றி விட்டான். எனவே நான் மற்றவர்களிடம் செல்வதற்குப்பதிலாக அவரிடம் (நபிகள் நாயகத்திடம்) சென்று, நான்

செய்த பாவங்களை ஒப்புக் கொண்டு அவரிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என்று என் மனம் கூறியது என்றார்.

இது கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹப்பார் அவர்களே! இறைவன் உங்கள் உள்ளத்தில் இஸ்லாத்தின் மீது பற்றை ஏற்படுத்தியிருக்கும் போது, நான் ஏன் உங்கள் பாவங்களை மன்னிக்க கூடாது? நிச்சயமாக நான் உங்களை மன்னித்து விட்டேன். நீங்கள் இதற்கு முன் செய்த குற்றங்களை யெல்லாம் இஸ்லாம் அழித்து விட்டது என்றார்கள்.

மிகவும் பயங்கரமான குற்றச் செயல்களைச் செய்தவர்களுள் பலர், தங்களுக்குக் கருணை காட்டுமாறு சாதாரணமாக வேண்டிக் கொண்டதன் பேரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தக் குற்றவாளிகளை மன்னித்துவிட்டார்கள். இவையெல்லாம் குறித்து இங்கு எழுதுவதாயின், இத்தொடர் மிகவும் நீண்டு விடுமாதலால் மேற்கூறப்பட்ட இவற்றுடன் முடித்துக் கொள்கிறேன்.

பெரும்பாலானவர்கள் முஸ்லிம்களுக்கு இழைத்த குற்றச் செயல்கள் மிகவும் கொடூரமானவையாக இருந்தன. எனினும் அவற்றை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிக்க பெருந் தன்மையுடனும் மிகுந்த கருணையுடனும் மன்னித்தருளினார்கள். அவற்றைக் காணும்போது கல்நெஞ்சமுள்ள மனிதராலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் புகழ்ந்து பாராட்டாமல் இருக்கவியலாது.

## ஹுனைன் போர்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிற்குள் திடீரென நுழைந்ததால், மக்காவிற்குச் சற்று தொலைவில், குறிப்பாக அதன் தெற்கில் வாழ்ந்து வந்த கோத்திரங்களுக்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவைத் தாக்கப்போகின்ற செய்தி, அவர்கள் அதில் நுழைந்த பிறகே கிடைத்தது. இந்த செய்தியைக் கேள்வியுற்றதும் அந்தக் கோத்திரங்கள் தங்கள் படைகளைத் திரட்டி முஸ்லிம்களை எதிர்ப்பதற்கு ஆயத்தமானார்கள்.

ஹவாஸின், ஸகீஃப் ஆகிய இரண்டு அரபுக் கோத்திரங் களும் குறிப்பாகத் தங்களை வீரமிக்கவர்கள் எனக் கருதிக் கொண்டிருந்தனர். இந்த இரண்டு கோத்திரங்களும் தங்களுக் கிடையில் கலந்தாலோசனை செய்து, தங்களுக்கென்று ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். அவர்களுக்கு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரின் பெயர், மாலிக் பின் அவ்ஃப். இதன் பின்னர், தங்களுடன் சேர்ந்து கொள்ளுமாறு சுற்றுப்புறங்களில் வாழ்ந்து வந்த கோத்திரங்களுக்கும் அவர்கள் அழைப்பு விடுத்தார்கள். பனூ ஸஃது பின் பகீர் என்னும் கோத்திரமும் அவற்றுள் ஒன்றாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பாலூட்டி வளர்த்த செவிலித்தாய் ஹலீமா இந்தக் கோத்திரத்தைச் சார்ந்தவரேயாவார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களின் சிறு பிராயத்தை இந்தக் கோத்திரத்தாருடனேயே கழித்து வந்தார்கள். இந்தக் கோத்திரங்களைச் சார்ந்த எல்லாரும், தங்கள் பொருள்களையும் மனைவிகளையும் குழந்தைகளையும் தங்களுடன் எடுத்துக் கொண்டு மக்காவை நோக்கிப் புறப்பட்டார்கள். நீங்கள் ஏன் இவ்வாறு பொருள்களை எடுத்துக் கொண்டு புறப்படுகிறீர்கள்? என்று அவர்களின் தலைவர்களிடம் கேட்கப்பட்ட போது, போர்க்களத்திலிருந்து தாங்கள் வெருண்டோடி விட்டால், தங்களுடைய மனைவிகளும் குழந்தைகளும் போர்க்கைதிகளாகி விடுவர்; தங்களுடைய பொருள்களும் பறிபோய்விடும் என்ற எண்ணம் போர் வீரர்களுக்கு இருக்க வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு புறப்படுகின்றோம் என்று அவர்கள் பதிலளித்தார்கள். இதிலிருந்து, அவர்கள் எந்த அளவுக்கு மனவுறுதியுடன் முஸ்லிம்களை அழித்துவிடப் புறப்பட்டார்கள் என்பதனைத் தெரிந்து கொள்ளலாம்.

இறுதியாக அந்தப்படை அவ்தாஸ் என்னும் பள்ளத்தாக்கை வந்தடைந்தது. போர் செய்வதற்குத் தேவையானவற்றைக் கவனத்திற் கொண்டு பார்க்கும் போது, இந்தப் பள்ளத்தாக்கு மிகவும் பொருத்தமான இடமாக அமைந்திருந்தது. ஏனென்றால், இங்குப் பாதுகாப்பிற்குரிய இடங்களும் இருந்தன. கால்நடைகளுக்கான உணவும் போர் வீரர்களுக்குத் தேவையான தண்ணீரும் இருந்தன. குதிரைகளை ஓட்டிச் செல்வதற்கு இந்த இடம் மிகவும் பொருத்தமாக அமைந்திருந்தது.

போர் தொடுப்பதற்காக அந்தக் கோத்திரங்கள் வந்திருக்கும் செய்தி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கிடைத்ததும், உண்மை என்னவென்று தெரிந்து வருவதற்காக தங்களுடைய ஒரு தோழர் அப்துல்லாஹ் பின் அபீ ஹதுரத் (ரலி) அவர்களை அனுப்பினார்கள். அங்குச் சென்று திரும்பிய அப்துல்லாஹ் அவர்கள் உண்மையிலேயே அந்தக் கோத்திரங்கள் தங்களுடைய படையைத் திரட்டிக் கொண்டு வந்திருக்கின்றன; அவர்கள் போர் செய்து மரணமடைய ஆயத்தமாக இருக்கின்றனர் என்று கூறினார்கள்.

அந்தக் கோத்திரங்களைச் சார்ந்தவர்கள் அம்பு எய்வதில் மிகவும் வல்லவர்களாக இருந்தனர். அவர்கள் எந்த இடத்தில் பாசறை அமைத்திருந்தார்களோ அந்த இடத்தில் குறிப்பிட்ட ஒரு பகுதியிலிருந்து மட்டுமே போரிடுவது சாத்தியமாக இருந்தது. போர் தொடுப்பவர்கள் குறிதவறாமல் தங்கள் அம்புகளை எய்து எதிரிகளைத்தாக்கக் கூடிய வகையிலும் அந்த இடம் அமைந்திருந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மாபெரும் செல்வந்தரும் வணிகரும் மக்காவின் தலைவருமாகிய ஸஃப்வான் என்பவரிடம் இந்தப் போருக்காக ஆயுதங்களும் போர் செலவிற்காகச் சிறிது பணமும் கேட்டார்கள். இதற்கு அவர், முஹம்மது அவர்களே! தங்கள் ஆட்சியின் வலிமையைக் கொண்டு தாங்கள் என் செல்வத்தைப் பறிக்க விரும்புகிறீர்களா? எனக் கேட்டார்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இல்லை; நாம் உமது செல்வத்தை பறிக்க விரும்பவில்லை. மாறாக நாம் உம்மிடம் அவற்றை இரவலாகக் கேட்கின்றோம். அவற்றைத் திரும்பத் தருவதற்கான உத்தரவாதம் தரவும் தயாராக இருக்கின்றோம் என்றார்கள்.

இதற்கு அவர், அப்படியானால் அவற்றைத் தங்களுக்குத் தருவதில் எனக்கு என்ன தயக்கம் இருக்க முடியும்? தாங்கள் அவற்றை என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு, நூறு இரும்புக் கவசங்களையும் பொருத்தமான ஆயுதங்களையும் அவர்களிடம் இரவலாகக் கொடுத்தார். அப்துல்லாஹ் பின் ராபிய்யா என்பவரிடமிருந்து 30,000 திர்ஹம் கடனாகப் பெற்றார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தங்களின் ஒன்றுவிட்ட சகோதரர் நவ்ஃபல் பின் ஹாரிஸ் இடமிருந்து மூவாயிரம் ஈட்டி இரவலாக வாங்கினார்கள்.

முஸ்லிம்படை, ஹவாஸின் படைகளை நோக்கிப் புறப்படவிருந்த போது மக்காவாசிகள், நாங்கள் முஸ்லிம்கள் இல்லை என்றாலும் இப்போது நாங்கள் இஸ்லாமிய ஆட்சிக்குட்பட்டவர்களாகி விட்டோம். எனவே நாங்களும் இந்தப் போரில் கலந்துகொள்ள வாய்ப்பளிக்க வேண்டும் என்று விரும்பிக் கேட்டுக் கொண்டார்கள். அவர்களின் விருப்பத்திற்கேற்ப வாய்ப்பளிக்கப்பட்டதும் அவர்களுள் இரண்டாயிரம் பேர் மக்காவிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் புறப்பட்டார்கள்.

செல்லும் வழியில், அரபு நாட்டின் பிரசித்தி பெற்ற ஒரு புண்ணிய இடம் இருந்தது. அந்த இடம் ஸாத் அன்வாத் என்றழைக்கப்பட்டது. புராதானமான ஓர் இலந்தை மரம் இங்கு இருந்தது. அரபு மக்கள் இதனை அருளுக்குரியதாக கருதிவந்தனர். அரபு நாட்டு வீரர்கள் போராயுதம் வாங்கினால் அதற்கு அருள் கிடைக்க வேண்டும் என்பதற்காக முதலில் ஸாத் அன்வாத் என்ற இடத்திற்குச் சென்று அதனை அந்த மரத்தில் தொங்கவிடுவது அவர்களின் பழக்கமாக இருந்தது.

நபித்தோழர்கள் அந்த இடத்தைக் கடந்து செல்லவிருந்த போது, அவர்களுள் சிலர் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எங்களுக்காகவும் தாங்கள் ஒரு ஸாத் அன்வாத்தை ஏற்படுத்தித் தாருங்கள் என்று வேண்டினர்.

இது கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ் மிகப்பெரியவன். நீங்கள் வேண்டுவது, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் சமுதாயத்தினர் வேண்டியது போன்றே இருக்கிறது; அவர்கள் எகிப்திலிருந்து கன்ஆன் நாட்டிற்குச் சென்றபோது, கன்ஆன் நாட்டிலுள்ள சமுதாயங்கள் சிலை வணக்கம் செய்வதை கண்டு மூஸா (அலை) அவர்களிடம், மூஸாவே! இவர்களின் தெய்வங்களைப் போன்று எங்களுக்கும் ஒரு தெய்வத்தை உண்டாக்கித் தருவீராக (திருக்குர்ஆன் 7:39) என்று கேட்டனர். எனவே உங்களின் இந்தக் கோரிக்கை அறிவுப் பூர்வமானதன்று. இத்தகு தவறான எண்ணங்களினால் உங்களுள் சிலர், அவ்வாறான தீய செயல்களைச் செய்து விடுவீர்களோ என்று நான் அஞ்சுகிறேன் என்று கூறினார்கள்.

இக்காலத்தில் போர்க்களத்தில் மறைவான பதுங்குமிடங்கள் ஏற்படுத்தப்படுவது போன்று, ஹவாஸின் கோத்திரத்தினரும் அவர்களுக்கு உதவ முன் வந்தவர்களும் மறைந்திருந்து திடீரென முஸ்லிம்களைத் தாக்குவதற்கு ஒரு பதுங்குமிடத்தை ஏற்படுத்தி னார்கள்.

இஸ்லாமிய படை ஹுனைன் என்னும் இடத்தை அடைந்த போது, அந்தக் கோத்திரங்கள் இஸ்லாமியப் படைக்கு முன்பாக சிறுசிறு மதில்களை அமைத்துவிட்டனர். நடுவில் ஒரு குறுகலான பாதையை முஸ்லிம்களுக்காக விட்டு வைத்திருந்தனர். அந்தப் படைவீரர்களுள் பெரும்பாலானவர்கள் அந்த மதில்களுக்குப் பின்னால் மறைந்திருந்தனர்; எஞ்சிய வீரர்கள் ஒட்டகங்கள், குதிரைகள் முதலியவற்றுடன் இஸ்லாமியப் படைக்கு முன்னால் அணிவகுத்து நின்றனர்.

முஸ்லிம்கள், தங்களுக்கு முன்னால் நிற்பவர்கள் தாம் எதிரிப் படைவீரர்கள் என்று நினைத்து முன்னேறிச் சென்று அவர்களைத் தாக்கினார்கள். முஸ்லிம்களுள் கணிசமானவர்கள் முன்னேறிச் சென்று விட்டனர். பதுங்குமிடங்களில் மறைந் திருந்தவர்கள், இப்பொழுது தம்மால் முஸ்லிம்களை நன்றாகத் தாக்க முடியும் என்பதைத் தெரிந்து கொண்டபோது, முன்னால் நின்று கொண்டிருந்த வீரர்கள் முஸ்லிம் படையின் நடுப்பகுதியைத் தாக்கிய அதே வேளையில் மறைந்திருந்தவர்கள் பக்கவாட்டிலிருந்து சரமாரியாக அம்புகளை எய்யத் தொடங்கி விட்டனர்.

இன்று தமது வீரத்தைக் காட்டுவதற்கான வாய்ப்பு தமக்கும் கிடைக்கும் எனக் கருதி இஸ்லாமிய படையுடன் சேர்ந்து கொண்ட மக்காவாசிகள், இவ்வாறு பல திசைகளிலிருந்து தொடுக்கப்பட்ட தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் பின்வாங்கி மக்காவை நோக்கி வெருண்டோடினர்.

ஆனால் முஸ்லிம்கள் இவ்வாறான தாக்குதல்களை ஏற்கனவே கண்டு, பழகியிருந்தனரென்றாலும் அவர்களின் அணியிலிருந்து மக்காவாசிகளின் இரண்டாயிரம் குதிரைகளும் ஒட்டகங்களும் மிக வேகமாக வெருண்டோடியதால், அது கண்டு அவர்களின் குதிரைகளும் ஒட்டகங்களும் மிரண்டுவிட்டன. இதனால் முழுப்படையும் மிக வேகமாகப் பின் வாங்க நேர்ந்தது.

மூன்று திசைகளிலிருந்து தொடுக்கப்பட்ட சரமாரியான தாக்குதல்களுக்கிடையே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களுடன் பன்னிரெண்டு தோழர்களுமே சிறிதும் பின்வாங்காமல் நின்றனர். அப்படியென்றால் மற்றெல்லாத் தோழர்களும் பின் வாங்கி ஓடிவிட்டனர் என்பதல்ல அதன் பொருள். எனினும் சற்றேறக்குறைய நூறு தோழர்கள் போர்க் களத்தில் நின்று கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குச் சற்றுத் தொலைவில் இருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி நின்றவர்கள் ஏறக்குறைய பன்னிரெண்டு தோழர்களே.

இது குறித்து ஒரு நபித்தோழர், நானும் என்னுடன் இருந்தவர்களும் எங்களுடைய வாகனங்களைப் போர்க்களத்தை நோக்கிச் செலுத்த எங்களால் இயன்ற அளவு முயற்சி செய்தோம். ஆனால் இரண்டாயிரம் குதிரைகளும், ஒட்டகங்களும் வேகமாக வெருண்டோடியதனால் எங்கள் குதிரைகளும் ஒட்டகங்களும் மிக அதிகமாக மிரண்டு விட்டன. அவற்றின் கடிவாளங்களைப் பிடித்து மிக வலுவாக இழுத்ததனால் எங்கள் கைகள் காயமடைந்து விட்டன. இந்த அளவு நாங்கள் முயன்றும்கூட, அவை போர்க் களத்திற்குத் திரும்ப சிறிதும் இசையவில்லை. சில தடவைகள் நாங்கள் கடிவாளங்களைப் பிடித்து மிக வேகமாக இழுத்தினால் அவற்றின் தலை அவற்றின் முதுகைக்கூட தொட்டது. பின்னர் நாங்கள் அவற்றின் மீது அமர்ந்து அவற்றைப் போர்க்களத்தை நோக்கித் திருப்பியபோது, அவை பின்னால் திரும்புவதற்குப் பதிலாக இன்னும் வேகமாக முன்னோக்கியே ஓடின. அப்போது எங்களுக்குப் பின்னாலிருக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு என்ன நிலை ஏற்படுகிறதோ என்று நினைத்து எங்கள் உ ள்ளம் வேகமாகத் துடித்துக் கொண்டிருந்தது. இந்த நிலையில் நாங்கள் எதுவும் செய்ய முடியாதவர்களாக இருந்தோம் என்று கூறியுள்ளார்.

இங்கு நபித்தோழர்களின் நிலை இவ்வாறிருந்தது. இன்னொரு பக்கத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் தோழர்களுள் சிலருடன் போர்க்களத்தில் நின்று கொண்டிருந்தார்கள். வலப்பக்கம், இடப்பக்கம், முன்பக்கம் ஆகிய மூன்று பக்கங்களிலிருந்தும் சரமாரியாக எய்யப்படும் அம்புகள் விழுந்து கொண்டிருந்தன. பின்புறம் இருந்தது குறுக்கலான ஒரு

பாதை மட்டுமே. இந்தப் பாதையில் ஏககாலத்தில் ஒரு சிலரே கடந்து செல்ல முடியும். இந்தப் பாதை வழியாகச் செல்வதைத் தவிர தப்பிப்பதற்கு வேறெந்த வழியும் இல்லாமலிருந்தது.

அப்போது ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், தங்கள் வாகனத்திலிருந்து இறங்கி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கோவேறு கழுதையின் கடிவாளத்தைப் பற்றிக் கொண்டு, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இஸ்லாமியப் படை ஒருங்கிணையும் வரைத் தாங்கள் சிறிது நேரத்திற்குப் பின்னால் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் என்றார்கள்.

இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூபக்கர் அவர்களே! எனது கோவேறு கழுதையின் கடிவாளத்தை விட்டுவிடுங்கள் என்று கூறிவிட்டு, அந்தக் கோவேறு கழுதையின் மீது அமர்ந்து சவாரி செய்து, குறுகலான அந்தப் பாதை வழியாக முன்னேறிச் சென்றார்கள். அந்தப் பாதையின் இடப்பக்கமும், வலப்பக்கமும் இருந்த பதுங்குமிடங்களிலிருந்து படை வீரர்கள் அம்பெய்து கொண்டிருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அதன் வழியாக முன்னேறிச் சென்ற போது,

*அனன் நபிய்யு லாகதிப்*
*அனப்னு அப்தில் முத்தலிப்*

நான் இறைவனுடைய நபி; நான் பொய்யனல்லன். நான் அப்துல் முத்தலிபின் மகன் (புகாரி). இப்பொழுது நான் மிகவும் ஆபத்தான இடத்திலிருந்து நின்றுகூட பகைவர்களின் தாக்குதலிலிருந்து பாதுகாக்கப்படுகின்றேனென்றால், என்னிடம் இறைத்தன்மைக்குரிய ஏதாவதோர் அம்சம் இருக்கிறது என்பதல்ல அதன் பொருள். மாறாக நான் அப்துல் முத்தலிபின் பேரனாகிய ஒரு மனிதனேயாவேன் என்பதை நினைவில் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மிகவும் உரத்த குரலைக் கொண்டிருந்த ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களை அழைத்து, அப்பாஸ் அவர்களே! நீங்கள் உரத்த குரலில் ஹுதைய்பிய்யா சமாதான உடன்படிக்கை நடைபெற்ற நாளில் மரத்தின் கீழ் நின்று பைஅத் செய்த நபிததோழர்களே! இறைத்தூதர் உங்களை அழைக்கின்றார்கள் என்று கூறுங்கள் - என்றார்கள்.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், மிகவும் உரத்த குரலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்தத் தூதுச் செய்தியைக் கூறிய அந்த நேரத்தில், நபித்தோழர்களுக்கு ஏற்பட்ட நிலை எத்தகையதாக இருந்தது என்பதை அந்த நபித்தோழர்களின் வாய்மொழியாகவே மதிப்பீடு செய்ய முடியும்.

ஏற்கனவே நான் கூறிய அதே நபித்தோழர் கீழ்வருமாறு கூறியுள்ளார்: நாங்கள் குதிரைகளையும் ஒட்டகங்களையும் போர்க்களத்திற்குக் திருப்பிக் கொண்டு செல்வதற்குக் கடினமான முயற்சியில் ஈடுபட்டிருந்த நேரத்தில், ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களின் குரல் எங்கள் காதுகளில் விழுந்தது. அப்போது நாங்கள் இவ்வுலகில் இல்லாமலிருப்பது போன்றும் கியாமத்து நாளாகிய மறுமையில் கேள்வி கணக்குக் கேட்கப்படும் நாளில் இறைவன் முன் நிற்பது போன்றும் எங்களிடம் கேள்வி கணக்குக் கேட்பதற்காக அவனுடைய மலக்குகள் என்னும் வானவர்கள் எங்களை அழைப்பது போன்றும் இருந்தது. அப்போது எங்களுள் சிலர் தமது வாள்களையும் கேடயங்களையும் கையில் எடுத்துக் கொண்டு, ஒட்டகங்களிலிருந்து கீழே குதித்து, மிரண்டு கொண்டிருந்த ஒட்டகங்கள் எங்கு வேண்டுமானாலும் செல்லட்டும் என்று அவற்றை விட்டுவிட்டனர். இன்னும் சிலர் தமது வாள்களால் தமது ஒட்டகங்களின் கழுத்தைத் துண்டித்து விட்டனர். இதன்பிறகு நாங்கள் கால்நடையாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் விரைந்து சென்றோம். ஒட்டகங்களும், பசுக்களும் தமது கன்றுகள் கத்தும் சப்தம் கேட்டு விரைந்தோடுவது போன்று அந்த நாளில் அன்ஸார் (மதீனாவாசிகளான முஸ்லிம்கள்) விரைந்தோடி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று கொண்டிருந்தார்கள்! இவ்வாறாகச் சிறிது நேரத்திற்குள் நபித்தோழர்கள், குறிப்பாக அன்ஸார், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றித் திரண்டு நின்று போர் செய்தார்கள். இதனால் பகைவர்களுக்கு படுதோல்வி ஏற்பட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய்மையான ஆன்மீக ஆற்றலுக்கு ஓர் எடுத்துக்காட்டு என்னவென்றால், ஒரு சில நாள்களுக்கு முன் அவர்களின் உயிருக்கு உலைவைக்கும்

பகைவராகவும் அவர்களை எதிர்த்துப் போரிட்ட நிரகரிப்பாளர் களின் படைகளுக்குத் தளபதியாகவும் இருந்த அபூஸுஃப்யான், ஹுனைன் போர் நடக்கும் அன்று, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தார். நிராகரிப்பாளர்களின் ஒட்டகங்கள் பின்புறமாக ஓடியபோது, அறிவுள்ளவராகவும் சாமர்த்திய சாலியாகவும் விளங்கிய அபூஸுஃப்யான், தமது குதிரையும் மிரண்டு விடலாம் என்று நினைத்து, தமது குதிரையிலிருந்து குதித்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கோவேறு கழுதையின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு, அவர்களுடன் நடந்து சென்றார்.

இது குறித்து அபூஸுஃப்யான், அப்போது உருவியவாள் என் கையில் இருந்தது. உள்ளங்களிலுள்ள இரகசியங்களை அறியும் அல்லாஹ்வின் மேல் ஆணையாகக் கூறுகிறேன்: முதலில் என்னைக் கொல்லாமல் எவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நெருங்கவே முடியாதவாறு அந்த நேரத்தில் நான் அவர்களது கோவேறு கழுதைக்குப் பக்கத்தில் நின்று கொண்டேன். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னை வியப்போடு பார்த்துக் கொணடிருந்தார்கள். இன்றிலிருந்து பத்துப்பதினைந்து நாள்களுக்கு முன்னர் என்னை (நபிகள் நாயகத்தை) கொலை செய்வதற்காக இவர் (அபூஸுஃப்யானாகிய நான்) தமது படையுடன் மக்காவிலிருந்து புறப்படவிருந்தார். ஆனால் சில நாள்களுக்குள் இறைவன் இவரிடத்தில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தி விட்டதால், மக்காவின் தளபதி இன்று சாதாரணமான ஒரு படைவீரர்போன்று எனது கோவேறு கழுதையின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு நிற்கின்றார். இன்று இவர் தமது மரணத்தின் மூலம் தமது பாவங்களை அகற்றிவிட விரும்புவதாக இவரது பார்வை தெரிவிக்கிறது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னைப் பற்றி நினைத்து அவ்வாறு வியப்புடன் என்னைப் பார்த்திருக்கலாம் என்று கூறுகிறார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அபூஸுஃப்யானை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்ட ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இதோ நிற்கின்ற அபூஸுஃப்யான் தங்களுடைய சிறிய தந்தையின் மகன்; தங்களுக்கு ஒன்று விட்ட சகோதரர். இன்று தாங்கள் இவரைக் கண்டு மகிழ்ச்சியடைவீர்களாக என்றார்கள்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இவர் எனக்குச் செய்த எல்லா கொடுமைகளையும் இறைவன் மன்னித்தருளட்டும் என்று பிரார்த்தனை செய்தார்கள். இது கேட்டு அபூஸுஃப்யான் , அந்த நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் (ஸல்) அவர்கள் என்னைப் பார்த்து சகோதரரே! என்றழைத்தார்கள், உடனே நான், எனக்கு ஏற்பட்ட மிகுந்த அன்பின் காரணமாக கோவேறு கழுதையின் அங்கவடியிலிருந்த அவர்களின் பாதத்தைத் தொட்டு முத்தமிட்டேன் என்றார்.

மக்கா வெற்றிக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுனைன் போருக்காக இரவலாக வாங்கியிருந்த போர் கருவிகளை அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைத்தது மட்டுமல்லாமல், அவற்றுடன் மேலும் அதிகமான வெகுமதி களையும் வழங்கிய போது, அந்த உரிமையாளர்கள், இவர் (நபிகள் நாயகம்) இக்காலத்திலுள்ள சாதாரண மனிதர்களைப் போன்றவ ரல்ல என்ற உண்மையை உணர்ந்தனர். இதன் காரணமாகவே ஸஃப்வான் என்பவர் அந்த நேரத்திலேயே இஸ்லாத்தை ஏற்று முஸ்லிமானார்.

இந்தப் போரின் போது, வியக்கத்தக்க இன்னொரு நிகழ்ச்சியும் வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. மக்காவில் வாழ்ந்து வந்த ஷய்பா என்பர் கஅபாவின் ஊழியத்திற்காக நியமிக்கப் பட்டவராவார். அவர், நானும் இந்தப் போரில் பங்கேற்றேன். இரு தரப்புப் படைகளும் ஒன்றோடொன்று மோதும் போது பொருத்தமான சந்தர்ப்பத்தில் முஹம்மதைக் கொன்று விட வேண்டும் என்று நான் எண்ணியிருந்தேன். அரபு மக்கள் மட்டுமல்லாமல், முழு உலகிலுமுள்ள மக்கள் எல்லாரும் முஹம்மதின் மார்க்கத்தை ஏற்றுக் கொண்டு விட்டாலுங்கூட நான் ஒரு போதும் அதனை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று நானே எனக்குக் கூறிக் கொண்டேன். போர் தீவிரமடைந்து, இரு தரப்புப் படைகளும் மும்முரமாக மோதிய போது, நான் எனது வாளை உருவிக்கொண்டு, முஹம்மதை நெருங்கிக்கொண்டிருந்தேன். அப்போது எனக்கும் அவருக்கும் இடையே நெருப்புச் சுவாலையொன்று கிளம்பியது; அது என்னை எரித்து சாம்பலாக்கப் போவது போன்று எனக்குத் தெரிந்தது.

அந்த நேரத்தில், ஷய்பாவே! என் பக்கம் வாருங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயம் (ஸல்) அவர்கள் அழைத்தார்கள். நான் அவர்களிடம் சென்றபோது, அவர்கள் தங்கள் கையால் என் நெஞ்சைத் தடவி, இறைவா! ஷய்த்தானுடைய எண்ணங்களிலிருந்து ஷய்பாவுக்கு விடுதலையளிப்பாயாக என்று பிரார்த்தனை செய்தார்கள். அவர்கள் தங்கள் கையால் என் நெஞ்சைத் தடவிய அதே நேரத்தில் என் உள்ளத்திலிருந்த எல்லாப் பகைமைகளும் வெறுப்புகளும் முற்றாக அகன்று விட்டன. அப்போதிலிருந்து அவர்கள் எனக்கு என் கண்களை விடவும் என் காதுகளை விடவும் என் மனத்தை விடவும் மிக அதிகமாகப் பிரியமானவர்களாகி விட்டார்கள். பின்னர் அவர்கள் ஷய்பாவே முன்னேறிச் சென்று, போர் செய்யுங்கள் என்று கூறினார்கள். உடனே நான் முன்னேறிச் சென்றேன். அப்போது என்னுள்ளத்தில், நான் என்னையே அர்ப்பணம் செய்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதைத் தவிர வேறெந்த விருப்பமும் இருக்கவில்லை. அந்த நேரத்தில் என் தந்தை உயிருடன் இருந்து பகைவர்களுடன் என் முன் வந்திருந்தால், நான் எனது வாளை அவரது நெஞ்சில் பாய்ச்சுவதற்குச் சிறிதும் தயங்கியிருக்க மாட்டேன் என்று கூறினார்கள். *(ஆதாரம்: சீரத் இப்னு ஹிஷாம், தொகுதி 3, பக்கம் 9)*

இந்தப் போருக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாயிஃப் நகரத்திற்குப் புறப்பட்டார்கள். இந்த நகரத்தின் மக்கள் தாம் கல்மாரி பொழிந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தங்கள் நகரத்திலிருந்து வெளியேற்றினார்கள். அவர்கள் இந்த நகரத்தைச் சில நாள்கள் முற்றுகையிட்டார்கள். ஆனால் பின்னர் சிலர், இதனை முற்றுகையிட்டு, காலத்தை வீணாக்க வேண்டிய அவசியமில்லை; அரபு நாட்டிலேயே இப்பொழுது இந்த நகரத்தால் மட்டும் என்ன செய்து விட முடியும்? எனத் தங்கள் கருத்தைத் தெரிவித்ததால், அவர்கள் அந்த முற்றுகையைக் கலைத்து விட்டுத் திரும்பி விட்டார்கள். சிறிது காலத்திற்குப் பிறகு தாயிஃப் நகர மக்களும் முஸ்லிம்களாகி விட்டனர்.

## மக்கா வெற்றிக்கும் ஹுனைன் போருக்கும் பின் நிகழ்ந்த நிகழ்ச்சி

இந்தப் போர்கள் நடந்து முடிந்த பின்னர் தோல்வி யடைந்தவர்களுக்கு விதிக்கப்பட்ட அபராதங்களிலிருந்தும் போர்க்களத்தில் கைவிடப்பட்ட பொருள்களிலிருந்தும் சேகரிக்கப் பட்டவற்றை வழக்கப்படி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாமியப் போர்வீரர்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும். ஆனால் இந்த தடவை அவர்கள் அவற்றை முஸ்லிம்களுக்கு பகிர்ந்தளிப்பதற்குப் பதிலாக மக்காவாசிகளுக்கும் அதன் சுற்றுப்புறத்தில் வாழ்ந்து வந்தவர்களுக்கும் பகிர்ந்தளித்து விட்டார்கள். அவர்களுள் பெரும்பாலனவர்கள் இதுவரை நம்பிக்கை கொள்ளாமல், நிராகரிப்பவர்களாகவே இருந்தனர். ஒரு சமுதாயம் தனது பொருளை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிப்ப தென்பது அவர்களுக்கு முற்றிலும் புதியதாகவே இருந்தது.

அந்தப் பொருள்கள் எவர்களுக்கு வழங்கப்பட்டனவோ அவர்களின் உள்ளத்தில் நற்பண்பும் இறையச்சமும் ஏற்படுவதற்குப் பதிலாக இன்னும் வேண்டும் என்ற பேராசையே அதிகமாயிற்று. இதனால் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி முண்டியடித்துக் கொண்டு மேன்மேலும் பொருள் உதவி கேட்டு அவர்களுக்குத் தொல்லை கொடுத்தார்கள். இவ்வாறு உதவி கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஒரு மரம் வரை தள்ளிக் கொண்டு சென்றார்கள். அவர்களுள் ஒருவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோள்களில் கிடந்த துணியை மூச்சுத்திணறும் அளவிற்கு முறுக்கி பிடித்திழுத்து உதவி கேட்டார்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களே! என்னிடம் ஏதாவது எஞ்சியிருந்தால், அதையும் உங்களுக்கு வழங்கியிருப்பேன். நீங்கள் என்னைக் கருமியாகவோ, கோழையாகவோ ஒருபோதும் காணமாட்டீர்கள் எனக் கூறினார்கள். பின்னர் அவர்கள் தங்கள் ஒட்டகத்திடம் சென்று, அதன் ஒரு முடியைப் பிடுங்கி உயர்த்திக் காட்டி, மக்களே! உங்கள் பொருள்களுள் இந்த முடியின் அளவிற்குக்கூட எனக்குத் தேவை யில்லை. அரபு மக்களின் நியதிப்படி, போரில் கிடைத்த பொருள்களுள் ஐந்தில் ஒரு பங்கு, அரசுக்குச் சொந்தமானதாகும். இப்பொழுது எஞ்சியிருக்கும் அதனைக்கூட நான் எனக்காகச் செலவு செய்யப்போவதில்லை. மாறாக, இதுவும் உங்களுக்காகவே செலவு செய்யப்படவிருக்கிறது. சதிமோசம் செய்பவன் மறுமை நாளில் இறைவனிடம், தான் செய்த சதிச்செயலின் காரணமாக இழிவடைவான் என்பதை நினைவில் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். *(ஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 3 பக்கம் 135)*

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆட்சி செய்ய விரும்பினார்கள் என்று மக்கள் கூறுகின்றனர். அரசர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் இவ்வாறான தொடர்புதான் இருக்கிறதா? அரசரை இவ்வாறாகத் தள்ளிச் சென்று, அவருடைய கழுத்திலுள்ள சால்வையை இழுத்துப் பிடித்து உதவி கேட்கும் தைரியம் எவருக்காவது இருக்குமா? அல்லாஹ்வின் தூதர்களைத் தவிர வேறெவரால் இத்தகு முன்மாதிரியைக் காட்ட முடியும்?

இவ்வாறு எல்லாப் பொருள்களையும் ஏழை எளியவர் களுக்குப் பகிர்ந்தளித்தும்கூட, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்தப் பங்கீடு நியாயமானதல்ல எனக்கருதிய கல்நெஞ்சமுள்ளவர்களும் இருந்தனர். இவ்வாறு கருதியவர்களுள் 'துல்குவைஸீரா' என்பவர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, முஹம்மதே! தாங்கள் இன்று என்ன செய்தீர்கள் என்பதை நான் கண்டேன் என்றார். இதற்கு அவர்கள், நீங்கள் எதைக் கண்டீர்கள்? எனக் கேட்டதற்கு, தாங்கள் இன்று செய்தது அநீதியாகும். தாங்கள் செய்த பங்கீடு நியாயமானதன்று என்று அவர் கூறினார். இதுகேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்கள் மீது பரிதாபப்படுகின்றேன். நான் நியாயம் வழங்கவில்லை என்றால், உலகில் வேறெவர் நியாயம் வழங்கிடுவார்? என்று கூறினார்கள். *(முஸ்லிம் - கிதாபுஸ் ஸகாத்)*

அப்போது நபித்தோழர்கள் உணர்ச்சி வசப்பட்டு எழுந்து நின்றனர். அந்த மனிதர் மஸ்ஜிதிலிருந்து எழுந்து சென்றபோது, நபித்தோழர்களுள் சிலர், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இந்த மனிதரைக் கட்டாயம் கொன்று விட வேண்டும். இவரைக் கொல்வதற்குத் தாங்கள் எங்களுக்கு அனுமதி தருவீர்களா? என்று கேட்டனர். இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இந்த மனிதர் நமது சட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கின்றார் என்றால் வெளிப்படையாக எந்தக் குற்றமும் செய்யாதபோது நாம் இவரை எவ்வாறு கொல்ல முடியும்? என்று கூறினார்கள்.

இதுகேட்டு நபித்தோழர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இவர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று செய்கிறார். இப்படிப்பட்டவர் தண்டனைக்குரியவர் இல்லையா? என்று கேட்டதற்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நான் மக்களிடம் அவர்களின் உள்ளத்திலுள்ள எண்ணங்களுக்கேற்ப அவர்களுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று இறைவன் எனக்குக் கட்டளையிடவில்லை; நான் அவர்களிடம் அவர்களின் வெளிப்படையான செயல்களுக்கேற்ப நடந்து கொள்ள வேண்டும் என்றே இறைவன் எனக்குக் கட்டளையிட்டுள்ளான் எனக் கூறி விட்டு, இவரும் இவரைச் சேர்ந்தவர்களும் பின்னர் ஒரு காலத்தில் இஸ்லாத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்வார்கள் என்றார்கள்.

இந்த முன்னறிவிப்பிற்கேற்ப, ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கலீஃபாவாக இருந்த காலத்தில், இவரும் இவரது கோத்திரத்தில் உள்ளவர்களும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தவர்களுக்குத் தலைவர்களாக இருந்தார்கள். கிளர்ச்சி செய்த இவர்கள் இன்றளவும் கவாரிஜ் என்றழைக்கப்படுகின்றனர்.

ஹவாஸின் கோத்திரத்துடனான பிரச்சனையை முடித்து விட்டு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவுக்குச் சென்றார்கள். அவர்கள் அங்குச் சென்றது, மதீனாவாசிகளுக்கு மீண்டும் ஒரு மகிழ்ச்சிக்குரிய நாளாக இருந்தது. இதற்கு முன்னர் இறைத்தூதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மக்கா வாசிகள் இழைத்து வந்த அநீதிகளால் சங்கடத்திற்காளாகி மதீனாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். இன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மக்காவை வெற்றி கொண்ட பின்னர், மிகுந்த மகிழ்ச்சியோடும் தங்களுடைய வாக்குறுதியை நிறைவேற்று வதற்காகவும் மீண்டும் மதீனாவுக்குச் சென்று கொண்டிருந்தார்கள்!

## தபூக் போர்

கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்த அபூஆமிர் என்பவன் யூதர்களுடனும் கிறித்தவர்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததால் ஜெபம் செய்யும் பழக்கத்தைக் கொண்டிருந்தான். இதனால் மக்கள் அவனைத் துறவி என்றழைத்தனர். ஆனால் அவன் கிறிஸ்தவனல்லன். ஹஸ்ரத் நபிகள்

நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து குடிபெயர்ந்து (ஹிஜ்ரத் செய்து) மதீனாவுக்குச் சென்ற போது, அவன் மக்காவிற்கு வெருண்டோடினான். அவர்களால் பின்னர் மக்காவும் வெற்றி கொள்ளப்பட்டதைக் கண்ட அவன் இப்பொழுது இஸ்லாத்திற்கு எதிராக கலகத்தை உருவாக்க ஏதாவது சதித்திட்டத்தை வகுக்க வேண்டும் என்று நினைத்தான். இதனால் அவன் தனது பெயரையும் கோலத்தையும் மாற்றிக் கொண்டு, மதீனாவுக்குப் பக்கத்திலுள்ள குபா என்னும் கிராமத்திற்குச் சென்று வாழ்ந்து வந்தான்.

அவன் பல ஆண்டுகளாக நகரத்திற்கு வெளியே வசித்து வந்ததாலும் அவன் தனது கோலத்தையும் ஆடைகளையும் மாற்றிக் கொண்டதாலும் பொதுவாக மதீனாவாசிகள் அவனைத் தெரிந்து கொள்ளவில்லை. எனினும் அவன் எந்த நயவஞ்சகர்களுடன் தொடர்பு கொண்டிருந்தானோ அந்த நயவஞ்சகர்கள் மட்டும் அவனைத் தெரிந்திருந்தனர். அவன் மதீனாவின் நயவஞ்சகர் களுடன் சேர்ந்து ஒரு சதித்திட்டம் தீட்டினான். அவன் அவர்களிடம், நான் சிரியா நாட்டிற்குச் சென்று கிறிஸ்தவ அரசையும் அரபுக் கிறிஸ்தவக் கோத்திரங்களையும் முஸ்லிம்களுக்கெதிராகத் தூண்டி, மதீனாவைத் தாக்க ஏற்பாடு செய்வேன். நீங்கள் இங்கு, சிரியா படைகள் மதீனாவைத் தாக்க வந்து கொண்டிருப்பதாக பகிரங்கமாக அறிவித்துக் கொண்டிருங்கள். என் திட்டம் வெற்றி பெற்றால், இரு தரப்பிற்கும் சண்டை மூண்டு விடும், என் திட்டம் வெற்றி பெறவில்லை என்றால் நீங்கள் பரப்பும் வதந்திகளின் காரணமாக முஸ்லிம்கள் சிரியாவிற்குச் சென்று தாங்களாகவே தாக்குதலைத் தொடுக்கலாம். இவ்வாறாகக் கெய்சரின் அரசுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் போர் தொடங்கிவிடும். நம் திட்டத்திற்கு வெற்றி கிடைத்துவிடும் என்றான்.

இவ்வாறு திட்டம் வகுத்த அவன் சிரியாவிற்குச் சென்றான். மதீனாவிலுள்ள நயவஞ்சகர்கள், ஒரு வாணிபக்குழு எங்களை சந்தித்து, சிரியா நாட்டுப்படை மதீனாவைத் தாக்க ஆயத்தம் செய்து கொண்டிருப்பதாகத் தெரிவித்தது என்று வதந்திகளைப் பரப்பிக் கொண்டிருந்தனர். பின்னர் மறுநாளும் அவர்கள், ஒரு வாணிபக் குழு எங்களைச் சந்தித்தனர், சிரியாவின்படை மதீனாவைத் தாக்கவிருப்பதாக அந்த குழுவினர் எங்களிடம் கூறினார்கள் என்றனர். இந்த வதந்திகள் தொடர்பாக பல நாட்களாகப் பயப்பட்டு வந்ததால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இஸ்லாமியப் படையை அழைத்துக் கொண்டு சிரியாவின் படைகளை எதிர்ப்பதற்காகச் செல்வது பொருத்தமானதாக இருக்கும் எனக் கருதினார்கள்.

இந்தக் காலக்கட்டம் முஸ்லிம்களுக்கு மிகவும் கடினமாக காலமாகவும் வறட்சி நிறைந்த ஆண்டாகவும் இருந்தது. இதற்கு முந்திய ஆண்டின் விளைச்சல் மிகக் குறைவாகவே இருந்தது. இந்த ஆண்டிலோ விளைபொருள்கள் இன்னும் விளையவில்லை. இவ்வாறான நிலையில் தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிரியாவின் படைகளை எதிர்த்துப் போரிட புறப்பட்டார்கள். அந்த நேரம் செப்டம்பர் மாத இறுதி அல்லது அக்டோபர் மாதத் தொடக்கமாக இருந்தது.

இவையெல்லாம் தங்களின் சதித்திட்டத்தால் விளைந்தவை தாம் என்பதை அந்த நயவஞ்சகர்கள் தெரிந்திருந்தனர். சிரியாவின் படை, தாக்குதல் தொடுக்கவில்லையானால், முஸ்லிம்கள் தாங்களாகவே சென்று சிரியா படையுடன் போர் தொடுப்பார்கள். இரு தரப்பினருக்குமிடையே போர் ஏற்பட்டு விட்டால், நிச்சயமாக முஸ்லிம்கள் அழிந்து விடுவார்கள் என்று நினைத்தே அந்த நயவஞ்சகர்கள் சதி செய்தார்கள்.

மூத்தா போரில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட நிலைகளையும் அவர்கள் தெரிந்திருந்தனர். அந்தப் போரில் மாபெரும் ஒரு படையை முஸ்லிம்கள் எதிர்க்க வேண்டியதிருந்தது. அதில் முஸ்லிம்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்ட பிறகே வெற்றி கிடைத்தது. இப்பொழுது அதே போன்ற இன்னொரு போர் நிகழ வேண்டுமென்றும் இதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் (நவூது பில்லாஹ் - இறைவன் பாதுகாப்பானாக) கொல்லப்பட வேண்டுமென்றும் இவற்றைத் தங்கள் கண்களால் கண்டு மகிழ வேண்டுமென்றும் அந்த நயவஞ்கர்கள் விரும்பினார்கள்.

எனவே ஒருபுறம் அந்த நயவஞ்சகர்கள் தினமும் இஸ்லாத்தின் பகைவர்கள், முஸ்லிம்களைத் தாக்கவிருக்கின்றனர்; சிரியாப்படைகள் வந்து கொண்டிருக்கின்றன என்ற செய்திகள் இன்ன இன்னவகையில் தங்களுக்குக் கிடைத்தனவென்று வதந்திகளைப் பரப்பிக் கொண்டிருந்தனர்; மறுபுறம் அவர்கள் முஸ்லிம்களிடம் சிரியாவின் மாபெரும் படையுடன் மோதுவது எளிதன்று; எனவே நீங்கள் போருக்கு போகவேண்டாம் என்று அவர்களைப் பயமுறுத்திக் கொண்டிருந்தனர்.

இவ்வாறு அவர்கள் கூறியதன் நோக்கம், முஸ்லிம்கள் சிரியாவைத் தாக்குவதற்காகச் செல்லவும் வேண்டும். ஆனால் அதே சமயத்தில் அங்குச் செல்பவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகவும் இருக்க வேண்டும். ஏனென்றால் இதனால் அவர்களின் தோல்வி நிச்சயமாகி விடும் என்பதாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நாம் சிரியாவை நோக்கிச் செல்ல வேண்டும் என்று அறிவித்ததும் முஸ்லிம்கள் மிகுந்த பற்றுடனும் ஆர்வத்துடனும் பெருமளவில் பொருள் தியாகம் செய்து கொண்டிருந்தனர். ஏழை முஸ்லிம்களிடம் போருக்கு வேண்டிய பொருள்கள் இல்லாமலிருந்தன. அரசின் கருவூலமும் காலியாகியிருந்தது. முஸ்லிம்களுள் வசதிபடைத்தவர்களால் மட்டுமே இவர்களுக்கு உதவி செய்ய முடிந்தது. இந்தப் போருக்காக முஸ்லிம்களுள் ஒவ்வொருவரும் போட்டிப் போட்டுக் கொண்டு தியாகம் செய்து கொண்டிருந்தனர்.

அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தங்கள் செல்வத்தின் ஒரு பெரும் பகுதியை அதாவது ஓராயிரம் தீனாரை (தங்க நாணயத்தை) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கொடுத்தார்கள். இவ்வாறே ஏனைய நபித்தோழர்களும் தத்தமது தகுதிக்கேற்ப இந்தப் போருக்காக நிதி கொடுத்தனர். ஏழை முஸ்லிம்களுக்கு வாகனங்களும், ஆயுதங்களும், வாள், ஈட்டி முதலியவையும் வழங்கப்பட்டன.

ஏமன் நாட்டைச் சேர்ந்த சிலர் இஸ்லாத்தைத் தழுவி ஹிஜ்ரத் செய்து மதீனாவிற்கு அகதிகளாக வந்திருந்தனர். அவர்கள் மிகவும் வறிய நிலையில் இருந்தமையால் அவர்களுள் சிலர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இந்தப் போரில் பங்கேற்க எங்களையும் தங்களுடன் அழைத்துச் செல்வீர்களாக. நாங்கள் போர்க்களம் வரைச் செல்வதற்கான ஏற்பாட்டை மட்டும் தாங்கள் செய்தால் போதும். இதைத் தவிர வேறொன்றையும் நாங்கள் தங்களிடம் கேட்கவில்லை என்றனர். இவ்வாறு நபித்தோழர்கள் இந்தப் போருக்காகத் தியாகங்கள் செய்ய மகத்தான ஆர்வம் கொண்டிருந்தனர். இவர்களைப் பற்றித் திருக்குர்ஆனில் இறைவன் பின்வாறுமாறு கூறுகின்றான்:

போர் அறிவிப்புச் செய்யப்பட்ட போது தாங்கள் ஏறிச்செல்ல ஏதாவதொரு ஏற்பாட்டினை நீர் செய்ய வேண்டு மென்பதற்காக உம்மிடத்தில் வந்தவர்களிடம் குற்றம் எதுவும் இல்லை. இதற்கு நீர், உங்களை ஏற்றிச் செல்லக்கூடியது எதுவும் என்னிடமில்லையே என்று பதிலளித்தீர். (இப்பதிலைக் கேட்டு) அவர்கள் சென்று விட்டனர். (இறை வழியில்) செலவு (செய்து, இஸ்லாத்திற்குத் தொண்டு) செய்வதற்குத் தங்களிடம் எதுவும் இல்லையே என்ற கவலையினால் அவர்களுடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது (9:92)

இவர்களுக்குத் தலைவராக இருந்த அபூமூஸா என்பவரிடம், நீங்கள் அந்த நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், என்ன வேண்டுமென்று கேட்டீர்கள் என வினவப்பட்டபோது அவர், இறைவன் மேல் ஆணையாக, ஒட்டகங்கள் வேண்டுமென்று நாங்கள் கேட்கவில்லை. குதிரைகள் வேண்டுமென்று கேட்கவில்லை. எங்களிடம் காலணிகள் இல்லாமலிருந்தது. இவ்வளவு நீண்ட பயணத்தில் காலணியின்றி எங்களால் நடந்து செல்ல முடியாது. இதனால் நாங்கள் அவர்களிடம், எங்களுக்குக் காலணிகள் மட்டும் தந்தால் போதும், நாங்கள் அவற்றை அணிந்து கொண்டு, மிக விரைவாக நடந்து சென்று, இந்தப் போரில் ஏனைய முஸ்லிம் சகோதரர்களுடன் பங்கேற்பதற்காக நாங்கள் போர்க்களத்திற்கு வந்து சேர்ந்து விடுவோம் என்று மட்டுமே கூறினோம் என்றார்.

முஸ்லிம்களின் படை சிரியாவிற்குச் சென்று போர் செய்ய வேண்டியதிருந்ததாலும் ஏற்கனவே நிகழ்ந்த மூத்தா போர் முஸ்லிம்களின் கண் முன் காட்சியளித்ததாலும் எல்லா முஸ்லிம்களின் உள்ளத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயிருக்கு எந்த ஆபத்தும் வரக்கூடாது என்ற எண்ணமே மற்றெல்லா எண்ணங்களை விடவும் முக்கியத்துவம் பெற்றதாக இருந்தது. முஸ்லிம் பெண்களுங்கூட அவர்களுக்கு எந்த ஆபத்தும் நேர்ந்து விடக் கூடாதே என்று கருதி தங்கள் கணவர்களையும் தங்கள் ஆண்மக்களையும் போர்க்களத்திற்குச் செல்லுமாறு தூண்டிக் கொண்டிருந்தனர். அவர்களைப் போருக்கு அனுப்புவதில் அந்தப் பெண்கள் எந்த அளவுக்கு பற்றும் ஆர்வமும் கொண்டிருந்தார்கள் என்பதைப் பின்வரும் ஒரு நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது:

ஒரு நபித்தோழர் ஏதோ ஒரு பணிக்காக வெளியூர் சென்றிருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், படையுடன் மதீனாவிலிருந்து புறப்பட்டுச் சென்ற பின்னர் அந்த நபித்தோழர் தமது வீட்டிற்குத் திரும்பி வந்து சேர்ந்தார். தமது மனைவியை விட்டுச் சிறிது காலம் பிரிந்திருந்த பின்னர், அன்பிற்குரிய தமது மனைவியைக் கண்டுகளிக்கும் மிகுந்த ஆசையோடு அவர் வீட்டிற்குள் நுழைந்தபோது மனைவி வீட்டின் முற்றத்தில் வீற்றிருக்கக்கண்டு, பாசத்தோடு அவளைக் கட்டித்தழுவி அன்பு காட்ட விரைந்தார். அவர்அவளை நெருங்கிய போது, அவள் தமது கைகளால் அவரைத் தள்ளிவிட்டாள். இதனால் அவர், வியப்புடன் தமது மனைவியைப் பார்த்து, இவ்வளவு காலத்திற்கு பிறகு உன்னைச் சந்திப்பதற்காக வந்த என்னிடம் ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறாய்? என்று கேட்டார். இதற்கு அவள், உங்களுக்கு வெட்கமில்லையா? அல்லாஹ்வின் தூதர் மிகவும் பயங்கரமான இடத்திற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள், இந்த நிலையில் நீங்கள் உங்கள் மனைவியுடன் கொஞ்சிக் குலாவத் துணிந்துவிட்டீர்களா? முதலில் அங்குச் சென்று உங்கள் கடமையை நிறைவேற்றுங்கள், அதன் பின்னர் இந்த அன்பைக் காட்டுங்கள் என்றாள். உடனே அந்த நபித்தோழர் வீட்டிலிருந்து வெளியேறி தமது வாகனத்தில் ஏறி விரைந்து சென்று, மதீனாவிலிருந்து மூன்று நாள் பயணதூரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்தித்தார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிறிதும் சிந்திக்காமல் வெறும் வதந்திகளின் அடிப்படையில் சிரியாவின் பெரும்படையைத் தாக்கப்புறப்பட்டு விட்டதாக நிராகரிப்பாளர்கள் கருதினர். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் பண்புகளைப் பின்பற்றுபவர்களாக விளங்கினார்கள். எனவே அவர்கள் சிரியாவுக்கு அண்மையிலுள்ள தபூக் என்னுமிடத்தை அடைந்த போது, சுற்றுப்புறங்களுக்கு ஆள்களை அனுப்பி உண்மை என்னவென்று அறிந்து வருமாறு செய்தார்கள். பலவிடங்களுக்கும் சென்று திரும்பிய இந்தத் தூதர்கள், சிரியாவின் எந்தப் படையும் இப்பொழுது போருக்குத் தயாராகிக் கொண்டிருக்க வில்லை என்ற செய்தியையே ஒன்றுபட்டு தெரிவித்தார்கள். எனவே சில நாட்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்குத் தங்கியிருந்து, அதன் சுற்றுப்புறத்திலுள்ள கோத்திரங்களுடன் உடன்படிக்கை செய்துவிட்டு, எந்தப் போருமின்றித் திரும்பினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதற்காக மேற்கொண்ட பயணம், இரண்டரை மாதங்களைக் கொண்டதாக இருந்தது.

போர் எதுவும் நடைபெறாமல், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நலமாகத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி மதீனாவிலுள்ள நயவஞ்சகர்களுக்குக் கிடைத்ததும், தம்முடைய நயவஞ்சகத் தந்திரங்களின் இரகசியம் இப்பொழுது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குத் தெரிந்திருக்கும்; அனேகமாக இப்பொழுது தண்டனையிலிருந்து தாங்கள் தப்பித்துக் கொள்ள முடியாது என்பதை அவர்கள் புரிந்து கொண்டனர். இதனால் அவர்கள் உடனடியாக மதீனாவிலிருந்து சிறிது தொலைவில், ஒவ்வொருவராக மட்டும் கடந்துச் செல்லத்தக்க ஒரு குறுகலான பாதையில் தங்கள் ஆள்கள் ஒளிந்திருக்குமாறு செய்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த இடத்தை நெருங்கிய போது, இறைவன் தனது அறிவிப்பின் மூலம் அவர்களிடம், முன்னாலுள்ள பாதையின் இருபுறங்களிலும் பகைவர்கள் மறைந்து உட்கார்ந்திருக்கின்றனர் என்று அறிவித்து விட்டான். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஒருவரை அங்கு அனுப்பிப் பார்த்துவரக் கட்டளையிட்டார்கள். அவர் தமது வாகனத்தில் மிக வேகமாக அங்குச் சென்ற போது, சிலர் மறைந்திருப்பதையும் திடீரெனத் தாக்குவதற்குத் தயாராக இருப்பதையும் கண்டார். அந்த நபித் தோழர் அங்குத் தங்களைக் கண்டுவிட்டதனால், மறைந்திருந்த அந்த நயவஞ்சதர்கள் அங்கிருந்து வெருண்டோடி விட்டனர்.

ஆனால் அவர்களைப் பிடிப்பதற்குப் பின் தொடர்ந்து செல்வது பொருத்தமானதல்ல என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கருதினார்கள்.

அவர்கள் மதீனாவை அடைந்த போது, இந்தப் போரில் பங்கேற்காத நயவஞ்சகர்கள், அதற்காகப் பல்வேறு நொண்டிச் சாக்குகள் கூறிக் கொண்டிருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

அவர்கள் அவற்றை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் நயவஞ்சகர்களின் உண்மை நிலையைப் பற்றி இப்பொழுது முஸ்லிம்களுக்குத் தெரிவிப்பது அவசியமாயிற்று. எனவே இறைவன் வஹி என்னும் தனது அறிவிப்பின் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு, நயவஞ்சகர்கள் குபா என்னுமிடத்தில் ஒரு பள்ளிவாசலைக் கட்டியதற்குக் காரணம், தொழுகை என்ற பெயரால் அங்கு இரகசியமாகக் கூடவேண்டும் என்பதும் அதில் சதியாலோசனைகள் நடத்த வேண்டும் என்பதுமேயாகும். எனவே அந்தப் பள்ளிவாசலைத் தகர்த்து விட்டு முஸ்லிம்களின் ஏனைய பள்ளிவாசல்களில் அவர்கள் தொழுது வருமாறு வலியுறுத்திக் கூறுங்கள் என்று கட்டளையிட்டான்.

அந்த நயவஞ்சகர்கள் இவ்வளவு பெரிய, பல தீங்குகளைச் செய்திருந்துங்கூட, உடல் ரீதியான தண்டனையோ பொருளாதாரத் தண்டனையோ அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தபூகிலிருந்து திரும்பியதற்குப் பிறகு தாயிஃப் நகர மக்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கட்டுப்பட்டு நடப்பதாக ஒப்புக் கொண்டனர். இதன் பின்னர் பல்வேறு அரபுக் கோத்திரங்கள் ஒவ்வொன்றாக வந்து இஸ்லாமிய ஆட்சிக்குட்பட்டு நடக்க அனுமதி கோரியது. இவ்வாறு சிறிது காலத்திற்குள் அரபு நாடு முழுவதிலும் இஸ்லாத்தின் கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது!

## ஹஜ்ஜதுல் விதாவின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு

ஹிஜிரி 9-ஆம் ஆண்டில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிற்குச் சென்று ஹஜ்ஜு செய்தார்கள். அப்போது அவர்களுக்குக் கீழ்க்காணும் திருக்குர்ஆனின் பிரபலமான வசனம் அருளப்பட்டது:

இன்று நான் உங்களுக்காக, உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கியுள்ளேன். மேலும் உங்களுக்கு என் அருளை நிறைவு செய்துள்ளேன். மேலும் உங்களுக்கு மார்க்கமாக இஸ்லாத்தை தேர்ந்தெடுத்துள்ளேன். (5:4)

அதாவது, இன்று நான் உங்களுக்காக உங்களின் மார்க்கத்தை முழுமையாக்கியுள்ளேன். மேலும் இறைவனிடமிருந்து அடியார்களுக்கு எத்தனை ஆன்மீக அருட்கொடைகள் இறங்க முடியுமோ அத்தனை ஆன்மீக அருட்கொடைகளையும் நான் உமது சமுதாயத்திற்கு வழங்கியுள்ளேன். மேலும் அல்லாஹ்வுக்கு கட்டுப்படுதலே உங்கள் மார்க்கத்திற்கு அடிப்படையாக இருக்க வேண்டும் என்று நான் தீர்மானித்து விட்டேன்.

இந்த வசனம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு, ஹஜ் செய்வதற்காக மக்கள் திரண்டிருந்த போது, அவர்கள் எல்லாருக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்தலிஃபா திடலில் இந்த வசனத்தை ஓதிக்காட்டினார்கள்.

அங்கிருந்து திரும்பியதும் ஹஜ்ஜின் விதிமுறைகளுக் கேற்ப அவர்கள் மினா திடலில் தங்கினார்கள். அது துல்ஹஜ் மாதத்தின் பதினொன்றாம் நாளாகும். அங்கு திரண்டிருந்த முஸ்லிம்களிடையே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் விடைபெறும் சொற்பொழிவு என வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. அப்போது அவர்கள்,

“மக்களே! காது கொடுத்து கேளுங்கள். இப்போது பேசுவது போன்று இந்த வருடத்திற்குப் பிறகு இந்தத் திடலில் இனி ஒருமுறை நான் பேசுவேனா என்பது எனக்குத் தெரியாது. உங்கள் உயிர்களும் உங்கள் உடைமைகளும் இறுதிநாள்வரை ஒருவருக்கொருவர் தாக்கிக் கொள்வதிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டுமென்று இறைவன் கட்டளையிட்டுள்ளான். பரம்பரைச் சொத்தில் ஒவ்வொருவருக்குமுரிய பங்கை இறைவன் விதித்துள்ளான். ஒரு வாரிசின் பங்கை பாதிக்கும் எந்த மரண சாசனமும் கூடாது. ஒரு குழந்தை எவருக்குப் பிறந்ததோ அவருடைய குழந்தையாகவே கருதப்படும். இதற்கு மாற்றமாக, குழந்தையின் பெற்றோர் குறித்து பிரச்சனையைக் கிளப்புபவர் இஸ்லாத்தின் சட்டங்களின்படி தண்டனைக் குரியவராவார். ஒருவர், இன்னொருவரின் தந்தையை பொய்யாக தனது தந்தை என்று கூறினாலோ, அல்லது ஒருவரை தம்முடைய எசமான் என பொய்யாக கூறினாலோ

அவர் இறைவனின் சாபத்திற்கும் அவனது வானவர்களின் சாபத்திற்கும் மக்களின் சாபத்திற்கும் ஆளாவார்.

மக்களே! உங்கள் மனைவிகள் மீது உங்களுக்குச் சில உரிமைகள் இருப்பது போன்று, உங்கள் மீதும் உங்கள் மனைவி களுக்கு சில உரிமைகள் இருக்கின்றன. அவர்கள் மீது உங்களுக்குள்ள உரிமையாவது, அவர்கள் உங்களுடன் கற்புள்ளவர்களாக வாழ்ந்து வரவேண்டும். மேலும் அவர்கள் தங்கள் கணவர்களிடம் சமுதாயத்தில் அவமரியாதை ஏற்படும் வகையில் நடந்து கொள்ளக்கூடாது. அவர்கள் அவ்வாறு நடந்து கொண்டால் (முறைப்படி பரிசீலனை செய்து, நடுவர்களின் தீர்ப்பிற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று திருக்குர்ஆன் கூறுவது போன்று) நீங்கள் அவர்களுக்குத் தண்டனை வழங்கலாம். ஆனால் அது கடினமான தண்டனையாக இருக்ககூடாது.

ஆனால் அவர்கள் குடும்ப கௌரவத்தையும் கணவர்களின் கௌரவத்தையும் கெடுக்கும் விதத்தில் நடந்து கொள்ளவில்லை யானால், நீங்கள் உங்கள் தகுதிக்கேற்ப அவர்களின் உணவு, உடை முதலியவற்றிற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். நீங்கள் எப்போதும் உங்கள் மனைவிகளுடன் மென்மையாகவும் நல்ல முறையிலும் நடந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் அவர்களைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை இறைவன் உங்களிடம் ஒப்படைத்துள்ளான். பெண்கள் பலவீனமானவர்கள். அவர்கள் தங்கள் உரிமைகளைத் தங்களால் பாதுகாக்க முடியாதவர்கள். நீங்கள் அவர்களை மணந்து கொண்ட போது அவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் பொறுப்பை இறைவன் உங்களிடம் ஒப்படைத்துவிட்டான். இறைவனின் கட்டளைகளுக்கேற்ப நீங்கள் அவர்களை உங்கள் வீடுகளுக்கு அழைத்து வந்துள்ளீர்கள். எனவே இறைவன் உங்களிடம் ஒப்படைத்த பொறுப்பை நீங்கள் அலட்சியம் செய்யக் கூடாது. பெண்களுக்குரிய உரிமைகளை நிறைவேற்றுவதை எப்போதும் உங்கள் கவனத்திற் கொண்டிருக்க வேண்டும்.

மக்களே! இப்போது உங்களிடம் சில போர்க் கைதிகள் இருக்கின்றனர். நீங்கள் உண்ணும் உணவையே அவர்களுக்கும் வழங்குங்கள். நீங்கள் அணியும் உடைகளைப் போன்ற உடைகளையே அவர்களுக்கும் வழங்குங்கள். உங்களால் மன்னிக்க முடியாத குற்றங்களை அவர்கள் செய்து விட்டால் நீங்கள் அவர்களை வேறொருவரிடம் விற்று விடுங்கள். ஏனென்றால் அவர்களும் இறைவனால் படைக்கப்பட்ட அடியார்களாக இருப்பதனால், அவர்களைத் துன்புறுத்துவது எவ்வகையிலும் சரியல்ல என்று நான் உங்களுக்கு அறிவுரை கூறுகிறேன்.

மக்களே! நான் கூறுபவற்றையெல்லாம் மிகவும் கவனமாக கேட்டு, நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். முஸ்லிம்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் சகோதரராவர். நீங்கள் யாவரும் சம நிலையில் உள்ள உங்களுள் எவர் எந்தச் சமுதாயத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், எந்தத் தகுதியைப் பெற்றவராக இருந்தாலும் மனிதன் என்ற வகையில் நீங்கள் யாவரும் சமமானவர்களாவீர்கள்". ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதனைக் கூறியபோது தங்களுடைய இரு கைகளையும் உயர்த்தி, இரு கைகளிலுள்ள விரல்களை இணைத்துக் காட்டி, "இரு கைககளும் எவ்வாறு சமமாக இருக்கின்றனவோ அவ்வாறே மனித இனமாகிய நீங்கள் எல்லாரும் சமத்துவமுடையவர்களாவீர்கள். ஒருவருக்கொருவர் தமது மேன்மையைப் பறைசாற்றும் உரிமை உங்களுக்கில்லை. நீங்கள் ஒருவருக்கொருவர் சகோதரர்களா வீர்கள்" என்று கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "இது என்ன மாதம் என்று உங்களுக்குத் தெரியுமா? இது என்ன நகரம் என்று உங்களுக்குத் தெரியுமா? இது என்ன நாள் என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்கள். இதற்கு மக்கள் எல்லாரும் ஆம், தெரியும். இது புனிதமான மாதம். இது புனிதமான நகரம். இன்று ஹஜ்ஜுக்குரிய நாள் என்றார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "இந்த மாதமும் இந்த நகரமும் இந்த நாளும் புனிதமானவையாக இருப்பது போன்று, இறைவன் ஒவ்வோருவருடைய உயிரையும், உடைமையையும், கண்ணியத்தையும் புனிதமானவையாக ஆக்கியுள்ளான். இந்த மாதத்தையும் இந்த நகரத்தையும் இந்த நாளையும் இழிவுபடுத்துவது கூடாதது போன்றே எந்த மனிதருடைய உயிருக்கோ, உடைமைக்கோ, கண்ணியத்துக்கோ பாதிப்பை ஏற்படுத்துவதும் கூடாது. இந்தக் கட்டளை இன்றைக்கு மட்டுமோ நாளைக்கு மட்டுமோ அல்ல. மாறாக இந்தக் கட்டளை, நீங்கள் இறைவனைச் சென்றடையும் நாள் வரைக்குமுள்ளதாகும்.

நான் இன்று உங்களிடம் கூறுபவற்றை உலகத்தின் எல்லைவரை தெரிவித்து விடுங்கள். ஏனென்றால் இன்று என்னிடமிருந்து இவற்றை நேரடியாகக் கேட்பவர்களை விட என்னிமிருந்து கேட்காதவர்கள் இவற்றை மிகச் சிறந்த முறையில் செயல்படுத்தலாம்" என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் அவர்கள் கூறினார்கள். இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கமாகும்.

சுருக்கமான இந்தச் சொற்பொழிவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மனித குலத்தின் நலத்தையும் அவர்களின் அமைதி நிறைந்த வாழ்வையும் மென்மையானவர்களும் பலவீனமானவர்களுமாகிய பெண்களின் உரிமைகளையும் எந்த அளவிற்குத் தங்கள் கவனத்திற்கொண்டிருந்தார்கள் என்பது நன்கு தெரிகின்றது.

அண்மையில் தாங்கள் மரணமடையப்போவதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உணர்ந்திருந்தார்கள். இப்பொழுது தங்களின் வாழ்நாள் மிகக் குறைவாகவே இருக்கிறது என்று இறைவன் அவர்களுக்கு ஏற்கெனவே அறிவித்திருந்தான். மனிதன் தோன்றியதிலிருந்தே ஆண்களின் அடிமைகளாகக் கருதப்பட்டுவந்த பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கவேண்டு மென்று உலகிற்குக் கட்டளையிடுவதற்கு முன் தாங்கள் இவ்வுலகிலிருந்து சென்றுவிட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விரும்பவில்லை. மக்களால் அடிமை என்ற பெயர் சூட்டப்பட்டு, பல்வேறு அநீதிகளுக்கு ஆளாக்கப்பட்டு வந்த போர்க் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு முன் இவ்வுலகிலிருந்து சென்று விட அவர்கள் விரும்பவில்லை. மக்களுள் சிலரை வானளாவ உயர்த்தி, சிலரைப் பூமியின் அடிமட்டம் வரைத் தாழ்த்திக் கொண்டிருந்தது மட்டுமல்லாமல், சமுதாயங்களுக் கிடையிலும் நாடுகளுக்கிடையிலும் நீண்ட காலப்போர் ஏற்படுவதற்குக் காரணமாகவும் இருந்த மனிதகுல வேற்றுமை களையும் ஏற்றத் தாழ்வுகளையும் அழித்து விடுவதற்கு முன் இவ்வுலகிலிருந்து சென்றுவிட அவர்கள் விரும்பவில்லை.

பெண்களிடத்திலும் ஒருவரின் கீழ்ப்பணியாற்றுபவர் களிடத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டிருந்த இந்த அளவு அனுதாபம் எல்லா மக்களிடத்திலும் அமைதியை நிலைநாட்ட அவர்கள் கொண்டிருந்த அவா. மக்கள் எல்லாரிடமும் சமத்துவத்தை நிலைநாட்ட அவர்கள் கொண்டிருந்த ஆர்வம் ஆகியவை உலகில் வேறெந்த மனிதரிடமாவது காணப்படுகிறதா?

ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் முதல் இன்று வரை எந்த மனிதராவது மனிதகுலத்தின் மீது இந்த அளவு ஆர்வத்துடன் அனுதாபம் காட்டியுள்ளாரா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர வேறெவரும் மனித குலத்தின் மீது இந்த அளவு அனுதாபம் காட்டியதில்லை.

இதனால் தான் இஸ்லாத்தில் இன்றுவரைப் பெண்கள் தங்கள் சொத்துக்களுக்குத் தாங்களே உரிமையாளர்களாக இருக்கின்றனர். ஆனால் ஐரோப்பா, இந்த உரிமையை இஸ்லாத்தின் பதிமூன்று நூற்றாண்டுகளுக்குப் பிறகு பெற்றுள்ளது. இதனாலேயே இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கின்ற ஒவ்வொருவரும் மற்றவர்களுக்குச் சமமானவராகி விடுகின்றார். இஸ்லாத்தை ஏற்றுக்கொள்பவர், அதற்கு முன்னர் எந்த அளவு இழிவான-தாழ்ந்த-சமுதாயத்தைச் சார்ந்தவராகக் கருதப்பட்டிருந்தாலும் சரி, மற்ற முஸ்லிம்களுக்கு சமமானவராகி விடுகின்றார். உரிமை வாழ்வையும் மக்களுக் கிடையே சமத்துவத்தையும் முதன் முதலாக இஸ்லாம் மட்டுமே உலகில் நிலைநாட்டியது. உலகில் வேறெந்தச் சமுதாயமும் இன்றுவரை இதற்கு நிகர் காட்டமுடியாதவாறு இஸ்லாம் இதனை நிலை நாட்டியுள்ளது. நம்முடைய பள்ளிவாசலில் ஒரு மன்னரும் மிகவும் மதிப்பிற்குரிய மதத்தலைவரும் ஒரு சாதாரண மனிதரும் சமமானவர்களேயாவர். இவர்களுக்கிடையே எவரும் எந்த வித்தியாசமும் ஏற்றத்தாழ்வும் பாராட்ட முடியாது. ஆனால் அதே வேளையில் ஏனைய, மத வழிபாட்டிடங்கள், முக்கியமனவர் களுக்கும் சாதரணமானவர்களுக்கும் இடையே வித்தியாசத்தையும் ஏற்றத்தாழ்வையும் இன்று வரை வெளிப்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றன. இவ்வாறு வித்தியாசம் பாராட்டிக் கொண்டிருக்கும் அந்தச் சமுதாயங்கள் முஸ்லிம்களை விடவும் மேலாக உரிமை வாழ்வு, சமத்துவம் ஆகியவை பற்றிய வாதத்தை உரத்த குரலில் செய்து கொண்டிருக்கிறது!

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மறைவு

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தப் பயணத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்த போது, வழியில் மீண்டும் தங்களுடைய தோழர்களுக்குத் தாங்கள் விரைவில் இறைவனிடம் செல்லவிருப்பது பற்றிக் கூறினார்கள். மேலும் அவர்கள் தங்கள் தோழர்களிடம், மக்களே! நான் உங்களைப் போன்ற மனிதன்தான். இறைவனுடைய தூதர் (வானவர்) விரைவில் என்னிடம் வரவிருக்கின்றார். நான் அவருக்குப் பதிலளிக்க வேண்டியதிருக்கிறது.

மக்களே! என்னிடம் கருணை காட்டுபவனும் நன்கு அறிபவனும் என்னுடைய எசமானனுமாகிய இறைவன் என்னிடம், நபி தமக்கு முன் தோன்றிய நபியின் பாதி வயது வரை வாழ்வார் என்று அறிவித்துள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னர் தோன்றிய ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சற்றேறக் குறைய நூற்றிருபது ஆண்டுகள் வாழ்ந்தார்கள். எனவே தங்களின் ஆயுட்காலம் சற்றேறக் குறைய அறுபது ஆண்டுகளாக இருக்கும் என்று அவர்கள் நினைத்தார்கள். அப்போது அவர்களுக்கு அறுபத்திரண்டு அல்லது அறுபத்தி மூன்று வயதாகியிருந்ததால் தங்களின் ஆயுட்காலம் தற்போது முடிவடையப் போகிறது என்று அவர்கள் கூறினார்கள். அந்த நபிமொழியின் பொருள், எல்லா நபிமார்களும் தங்களுக்கு முன்னர் தோன்றிய நபிமார்களின் பாதி வயது வரை வாழ்வார்கள் என்பதல்ல. ஏனென்றால் அந்த நபிமொழியில் அவர்கள், தங்களின் வயதையும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் வயதையும் மட்டுமே ஒப்பிட்டுக் கூறியுள்ளார்கள்.

எனவே நான் இறைவனால் அழைக்கப்பட்டு, விரைவில் அவனிடம் சென்று விடுவேன் எனக் கருதுகிறேன். என் தோழர்களே! இறைவன் முன் என்னிடம் கேள்வி கணக்குக் கேட்கப்படும். அப்போது நீங்கள் என்ன கூறுவீர்கள் என்று கேட்டதற்கு, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் மிக நன்றாக இஸ்லாத்தின் கொள்கைகளையும் போதனைகளையும் எடுத்துரைத்தீர்கள். இறைவனின் மார்க்கத்திற்கு தொண்டு செய்வதற்காகத் தாங்கள் தங்கள் வாழ்வை முழுமையாக அர்ப்பணித்தீர்கள். மனித குலத்திற்குச் செய்ய வேண்டிய நன்மைகளைத் தாங்கள் முழுமையாகச் செய்தீர்கள். தாங்கள் எங்களுக்குச் செய்த நன்மைகளுக்காக இறைவன் தங்களுக்கு மிக மிகச் சிறந்த வெகுமதிகளை வழங்க வேண்டும் என்று நாங்கள் கூறுவோம் என நபித்தோழர்கள் பதிலளித்தனர்.

அடுத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ் ஒருவனேயாவான். முஹம்மது அவனுடைய அடியாரும் தூதருமாவார். சுவர்க்கமும் உண்மையானதே, நரகமும் உண்மையானதே. நிச்சயமாக ஒவ்வொருவருக்கும் மரணம் வந்தே தீரும். மரணத்திற்குப் பின்னர் எல்லாருக்கும் நிச்சயமாக மறுமை வாழ்வு உண்டு. கியாமத் என்னும் தீர்ப்பு வழங்கும் நாள் நிச்சயமாக வரக்கூடியதாகும். அப்போது இறைவன், மரணமடைந்த மக்கள் எல்லாரையும் சமாதிகளிலிருந்து மீண்டும் உயிர்பெறச்செய்து ஒன்று திரட்டுவான் என்று நீங்கள் சாட்சி கூறுகின்றீர்களா? என்று கேட்டதற்கு, ஆம்; அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நிச்சயமாக நாங்கள் இவையெல்லாம் உண்மை என்று சாட்சி கூறுகின்றோம் என்று நபித்தோழர்கள் பதிலளித்தனர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனை நோக்கி, நான் இவர்களுக்கு இஸ்லாத்தின் கொள்கைகளை அறிவித்து விட்டேன் என்பதற்கு இறைவா! நீயும் சாட்சியாக இருப்பாயாக என்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த ஹஜ்ஜிலிருந்து திரும்பிய பிறகு முஸ்லிம்களின் ஒழுக்கங்களையும் செயல்களையும் சீர்திருத்துவதில் தொடர்ந்து ஈடுபட்டார்கள். தங்களுக்குக் திடீரென வரும் மரணச் செய்தியைத் தாங்கிக் கொள்வதற்காக முஸ்லிம்களைப் பக்குவப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் அவர்கள் மக்களுக்கு உரையாற்றுவதற்காக எழுந்து நின்று, இறைவன் இன்று என்னிடம், இறைவனது உதவிகளும் அவனிடமிருந்து கிடைக்கும் வெற்றிகளும் சென்ற காலத்தில் கிடைத்தவற்றைவிட மிக மிக அதிகமானவையாக இருக்கும். உலகின் எல்லாச் சமுதாயங்களிலிருந்தும் கூட்டங் கூட்டமாக மக்கள் இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டிருப்பார்கள். எனவே முஹம்மது (ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களே! இப்பொழுது நீங்கள் இறைவனைப் புகழ்ந்து, நீங்கள் தோற்றுவித்த மார்க்கத்தின் அடிப்படைக்கு ஏற்படும் எல்லா

இடையூறுகளையும் அவன் அகற்றி விடுமாறு அவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள். நீங்கள் இவ்வாறு பிரார்த்தனை செய்தால், நிச்சயமாக இறைவன் உங்களுடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வான் என்று அறிவித்தான் என்றார்கள்.

மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உருவகமாக இவ்வாறு கூறினார்கள்: இறைவன் தனது ஒரு அடியாரிடம் நீங்கள் எம்மிடம் வந்து விடுங்கள். அல்லது உலகை சீர்திருத்துவதற்கான பணியை இன்னும் சிறிது காலத்திற்கு நீங்கள் செய்யுங்கள். இவ்விரண்டில் எது உங்களுக்கு விருப்பமோ அதைச் செய்யுங்கள் என்றான். இதற்கு பதிலளித்த அந்த அடியார், இறைவா! நான் உன்னிடம் வந்து விடுவதையே அதிகமாக நேசிக்கிறேன் எனக் கூறினார்.

அவர்கள் இதனை அந்தச் சபையில் கூறியபோது, ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் அழுது விட்டார்கள். அப்போது நபித்தோழர்கள், இஸ்லாத்தின் வெற்றிகளைப் பற்றிய செய்தியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிக்கொண்டிருக்கும் போது, ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் அழுது கொண்டிருக்கிறார்களே என்று வியப்படைந்தார்கள். இது குறித்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த கிழவருக்கு என்ன நேர்ந்து விட்டது? மகிழ்ச்சிக்குரிய நற்செய்தியைக் கேட்டு, இவர் அழுது கொண்டிருக்கிறாரே என்று நான் கூறினேன் என்றார்கள்.

ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ, தாங்கள் கூறியவற்றை ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களே சரியாகப் புரிந்து கொண்டார்கள் என்றும் திருக்குர்ஆனின் அந்நஸர் என்னும் 110 ஆவது அதிகாரத்தில் தங்ளுடைய மரணம் பற்றிக் கூறப்பட்டிருப்பதை அவர்களே நன்கு புரிந்துள்ளார்கள் என்றும் தெரிந்துகொண்டு, அபூபக்கர் எனக்கு மிகவும் பிரியமானவர். இறைவனுக்கு அடுத்தபடியாக வேறு எவரிடமாவது அளவற்ற நேசம் கொள்வது அனுமதிக்கப்பட்டிருக்குமானால், நான் அபூபக்கரிடமே அவ்வாறு நேசம் கொண்டிருப்பேன் என்று கூறிவிட்டு, மக்களே! பள்ளிவாசலில் திறக்கப்படுகின்ற மக்களின் எல்லா வாசல்களும் இன்று முதல் அடைக்கப்பட வேண்டும். ஆனால் அபூபக்கர் அவர்களின் வாசல் மட்டும் எப்போதும் திறந்திருக்க வேண்டும் என்றார்கள்.

அந்த வாசல் மட்டும் திறந்திருக்க வேண்டும் என்று கூறப்பட்டதில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின்னர் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக இருப்பார்கள்; தொழுகையை நடத்துவதற்காகப் பள்ளிவாசலின் அந்த வாசல் வழியாக அவர்கள் வரவேண்டும் என்ற முன்னறிவிப்பு உள்ளது.

பின்னர் ஒரு காலத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக இருந்தபோது, ஒரு தடவை அவர்கள் ஓர் அவையில் அமர்ந்திருந்தார்கள். அப்போது அவர்கள் அந்த அவையினரிடம் திருக்குர்ஆனின் அந்நஸர் என்னும் 110 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்ட கருத்து என்னவென்று கேட்டார்கள். அதாவது அந்த அதிகாரம் அருளப்பட்ட நேரத்தில் தங்களால் புரிந்து கொள்ள முடியாதிருந்த ஒரு கருத்தைப் பற்றிக் கூடியிருந்த அவையினரிடம் ஒரு தேர்வு நடத்தினார்கள். அந்த அதிகாரம் அருளப்பட்ட நேரத்தில் பத்து அல்லது பதினோரு வயதுடைய சிறுவராகவும் அந்தத் தேர்வு நடந்த நேரத்தில் பதினேழு அல்லது பதினெட்டு வயதுடைய வாலிபராகவும் இருந்த ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களும் அந்த அவையில் இருந்தார்கள். அவையில் இருந்த ஏனைய நபித்தோழர்களால் அந்த அதிகாரத்தின் கருத்தைக் கூறமுடியவில்லை. ஆனால் ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் *அமீருல்மு:மினீன்* (நம்பிக்கை கொண்டவர்களின் தலைவர்) அவர்களே! அந்த அதிகாரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் பற்றிய செய்தி கூறப்பட்டிருக்கிறது. ஏனென்றால் ஒரு நபி தமது பணியை முடித்துவிட்டாரென்றால், உலகில் வாழ்வதை அவர் விரும்புவதில்லை என்றார்கள்.

இது கேட்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நீங்கள் கூறியது சரியான கருத்து. உங்களுடைய அறிவாற்றலை நான் பாராட்டுகிறேன். அந்த அதிகாரம் அருளப்பட்டபோது, அதன் கருத்தை ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) மட்டுமே புரிந்து கொண்டார்கள். ஆனால் அப்போது நாங்கள் புரிந்து கொள்ளவில்லை என்றார்கள்.

உலகில் எல்லாருக்கும் வருகின்ற அந்தக் கடைசி நேரம் வந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தங்கள் பணியை முடித்து விட்டார்கள். வஹீ என்னும் இறையறிவிப்பு

முழுமையாக அருளப்பட்டு திருக்குர்ஆனில் பதிவு செய்யப்பட்டு விட்டது. அவர்களின் தூய்மையான ஆன்மீகச் சக்தியால் ஒரு புதிய சமுதாயம், ஒரு புதிய வானம், ஒரு புதிய பூமி ஆகியவற்றுக்கான அடித்தளம் அமைக்கப்பட்டுவிட்டது.

விதைப்பவர் ஒருவர் பூமியை உழுது, பண்படுத்தி, நீர்ப்பாய்ச்சி, விதைவிதைத்து, விளைச்சலைத் தயார் செய்தார். இப்பொழுது அந்த விளைச்சலை அறுவடை செய்வதற்கான பொறுப்பு அவருடையதல்ல. அவர் ஒரு தொழிலாளியாக வந்தார். தொழிலாளியாக இருக்கும் அதே நிலையில் இவ்வுலகிலிருந்து அவர் செல்லவேண்டியதிருந்தது. ஏனென்றால் அவருக்குக் கிடைக்க வேண்டிய வெகுமதிகள் இவ்வுலகப் பொருள்கள் அல்ல. மாறாக அவருக்குக் கிடைக்க வேண்டிய மகத்தான வெகுமதி, அவரைத் தோற்றுவித்து அனுப்பிய இறைவனின் திருப்தியேயாகும்.

எனவே விளைச்சலை அறுவடை செய்யும் நேரம் வந்த போது, அவர் தமது இறைவனிடம் இப்போது இவ்வுலகிலிருந்து, அவன் தம்மை அழைத்து கொள்வதையும் பின்னர், அந்த விளைச்சலை மற்றவர்கள் அறுவடை செய்து கொள்வதையுமே விரும்பினார்கள்.

விதை விதைத்தவராகிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்போது உடல் நலமின்றி இருந்தும் கூட பள்ளிவாசலுக்குக் கஷ்டப்பட்டு சில நாட்கள் வரைத் தொழுகையை நடத்துவதற்காக வந்து கொண்டிருந்தார்கள். இறுதியாக அவர்கள், பள்ளிவாசலுக்கு வர முடியாத அளவிற்குப் பலவீனமடைந்து விட்டார்கள். இத்தகு நிலையிலுங்கூட அவர்கள் மரணமடைந்து விடுவார்கள் என்று நபித்தோழர்களால் அறவே நினைத்துப் பார்க்க முடியாதிருந்தது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தங்களுடைய மரண காலம் நெருங்கி விட்டதென்ற செய்தியைத் தங்கள் தோழர்களுக்கு மீண்டும் மீண்டும் அறிவித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள் நபித்தோழர்கள் கூடியிருந்தனர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எவரிடமிருந்தாவது தவறு நிகழ்ந்திருப்பின், மறுமையில் இறைவன் முன் வருந்த வேண்டியதேற்படாதிருக்க இவ்வுலகிலேயே அதற்குப் பரிகாரம் கிடைத்து விடுவது சிறந்தது. உங்களுள் எவருக்காவது நான் தெரியாமல் தவறு செய்திருந்தால், அதற்குரிய பரிகாரத்தை என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள். நான் அறியாமலேயே என்னிடமிருந்து எவருக்காவது துன்பம் ஏற்பட்டிருந்தால் இன்று என்னிடமிருந்து அவர் பழிவாங்கிக் கொள்ளட்டும். ஏனென்றால் மறுமையில் இறைவன் முன் அவமானமடைவதை நான் விரும்பவில்லை என்று கூறினார்கள்.

இதனைக் கேட்டு ஏனைய நபித்தோழர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வாறெல்லாம் துன்பங்களை அனுபவித்து கொண்டு, நிம்மதியான சூழ்நிலைகளை நமக்கு அளித்துக் கொண்டிருந்தார்கள். எவ்வாறு அவர்கள் பசியுடனிருந்து கொண்டு நமக்கு உணவளித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்களுடைய ஆடைகளில் ஒட்டுப்போட்டுக் கொண்டு, நமக்கு ஆடைகள் அணிவித்துக் கொண்டிருந்தார்கள். இவ்வாறெல்லாம் இருந்துங்கூட, அவர்கள் நம்முடைய உரிமைகளுக்கு மிகவும் முக்கியத்துவமளித்து, நான் அறியாமலேயே என்னிடமிருந்து எவருக்காவது துன்பம் ஏற்பட்டிருந்தால், இன்று என்னிடமிருந்து அவர் பழிவாங்கிக்கொள்ளட்டும் என்று நம்மிடம் வேண்டிக் கொண்டிருக்கிறார்களே என்று நினைத்து உள்ளத்தால் உருகிக் கொண்டிருந்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு நபித்தோழர் முன் வந்து, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஒரு தடவை தங்களால் எனக்குத் துன்பம் ஏற்பட்டது. அதாவது போர் அணிவகுப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன. தாங்கள் அணிவகுப்புகிடையே சென்றீர்கள். அப்போது தங்களுடைய முட்டுக்கை என்னுடலில் பட்டுவிட்டது. அறியாமல் கூட எவருக்காவது துன்பம் ஏற்பட்டிருந்தால், என்னிடமிருந்து அவர் பழி வாங்கிக் கொள்ளட்டும் என்று தாங்கள் கூறியதால், இப்பொழுது நான் தங்களிடம் அந்தத் துன்பத்திற்குப் பழிவாங்க விரும்புகிறேன் என்று கூறினார்.

கவலைக் கடலில் மூழ்கிக்கொண்டிருந்த நபித்தோழர்களின் நிலை உடனடியாக மாறிவிட்டது. அவர்களின் கண்களிலிருந்து இரத்தம் சொட்டத் தொடங்கிற்று. இத்தகு சந்தர்ப்பத்தில் அறிவுரை பெறுவதற்குப் பதிலாக இவ்வாறு கூறும் இந்த மனிதர் மிகக் கடினமான தண்டனைக்குரியவராவார் என்று அங்கிருந்த ஒவ்வொருவரும் நினைத்தனர். ஆனால் அவர் இதனைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த நபித்தோழரிடம், நீங்கள் கூறுவது சரியே, பழிக்குப்பழி வாங்குவது உங்கள் உரிமையாகும் என்று கூறினார்கள். பின்னர் அவர்கள், தங்கள் முதுகை அவர் பக்கமாகத்திருப்பிக் கொண்டு, இதோ உங்கள் முட்டுக்கையால் என்னை இடித்துக் கொள்ளுங்கள் என்றார்கள்.

இதற்கு அந்த நபித்தோழர், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களுடைய முட்டுக்கை இடித்தபோது, என்னுடலில் மேலாடை இல்லாமலிருந்தது. ஏனென்றால் அப்போது நான் அணிவதற்கு என்னிடம் சட்டை இருக்கவில்லை என்றார். இது கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், என் சட்டையை மேலே உயர்த்தி என் உடலில் உங்கள் முட்டுக்கையால் இடித்துப் பழிக்குப்பழி வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

உடனே அந்த நபித்தோழர், அவர்களின் சட்டையை மேலே உயர்த்தி உதடுகள் துடித்தவாறும் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியவாறும் குனிந்து, அவர்களின் வெற்றுடம்பில் முத்தமிட்டார்! இதனைக்கண்ட அல்லாஹ்வின் தூதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இது என்ன? என்று கேட்டதற்கு, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களுடைய மரணம் நெருங்கிவிட்டது என்று தாங்கள் கூறியபோது தங்களை முத்தமிட்டு நேசிப்பதற்காக வாய்ப்புகள் இனிமேல் எங்களுக்கு எப்படிக் கிடைக்கும்? போரின் போது உண்மையியேயே தங்களுடைய முட்டுக்கை என்னுடைலில் பட்டது. ஆனால் எவருடைய உள்ளத்திலாவது, அதற்குப் பழிக்குப்பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் வருமா? இன்று என்னிடமிருந்து பழிக்குப்பழி வாங்கிக் கொள்ளுங்கள் என்று தாங்கள் கூறிய போது, சரி இதையே சாக்காக வைத்து, நான் தங்களை முத்தமிட்டு நேசிக்க வேண்டும் என்ற எண்ணம் என்னுள்ளத்தில் ஏற்பட்டது என்று அந்த நபித்தோழர் பதிலளித்தார். ***(ஆதாரம் : புகாரி, கிதாபுல் மகாஸி)***

சற்று நேரத்திற்கு முன் கடுங்கோபம் கொண்டிருந்த ஏனைய நபித்தோழர்கள், இது கேட்டு இத்தகு வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்க கூடாதா? என்று ஏங்கிக்கொண்டிருந்தனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின், உடல் நலம் குறைந்து கொண்டிருந்தது; மரணம் நெருங்கிக் கொண்டிருந்தது. மதீனாவில் தோன்றிய கதிரவன் வழக்கம் போல் ஒளிவிட்டுப் பிரகாசிக்கவே செய்தது. ஆனால் நபித் தோழர்களின் பார்வையில் அதன் ஒளி மங்கிக்கொண்டே சென்றது. பொழுது புலர்ந்தது. ஆனால் அவர்களின் கண்களில் இருள் திரைகள் இடப்பட்டவாறு இருந்தன.

அல்லாஹ்வின் தூதருடைய ஆன்மா, இவ்வுலகை விட்டு விட்டுத் தன்னைப் படைத்தவனிடம் சென்றடையும் அந்த இறுதி நேரமும் வந்தது. மிகவும் சிரமப்பட்டு மூச்சு வாங்கிக்கொண்டிருந்த அவர்கள், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம், படுத்துக் கொண்டே என்னால் நன்றாக மூச்சுவாங்க முடியவில்லை. எனவே என் தலையைத் தூக்கி உங்களுடைய நெஞ்சில் சாய்த்து வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், தங்கள் கணவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தலையைத் தூக்கி, தங்கள் நெஞ்சோடு சாய்த்துப் பிடித்துக் கொண்டு, உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்கு மரண வேதனை ஏற்பட்டது. அமைதியற்ற நிலையில் உட்கார்ந்திருந்த அவர்கள், சிறிது நேரம் இந்தப் பக்கமாகவும் சிறிது நேரம் அந்தப் பக்கமாகவும் குனிந்து கொண்டு, தங்கள் நபிமார்களின் மரணத்திற்குப் பிறகு அவர்களின் சமாதிகளை வணங்குமிடமாக்கிக் கொண்ட யூதர்களையும் கிறித்தவர்களையும் இறைவன் சபிப்பானாக என்று பலமுறை கூறிக் கொண்டிருந்தார்கள். ***(ஆதாரம் : கிதாபுல் மகாஸி)***

இதுவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சமுதாயத்திற்குச் செய்த இறுதி அறிவுரையாகும். இந்த அறிவுரையின் கருத்தாவது, எல்லா நபிமார்களைவிட மகிமை மிக்கவராகவும் மாபெரும் வெற்றிபெற்றவராகவும் நீங்கள் என்னைக் காண்பீர்கள். ஆனால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். நான் இறைவனின் ஓர் அடியான் என்பதை நீங்கள் ஒருபோதும் மறந்து விடலாகாது. இறைவனுக்குரிய மதிப்பை இறைவனுக்கு மட்டுமே கொடுக்கவேண்டும். என்னுடைய சமாதியை ஒரு சமாதியாகவே இருக்குமாறு செய்யுங்கள். மேலான எந்த அந்தஸ்தையும் அதற்கு கொடுத்து விடாதீர்கள். ஏனைய சமுதாயங்கள் தங்கள் நபிமார்களின் சமாதிகளை வேண்டுமானால் வணங்குமிடங்களாக ஆக்கிக் கொள்ளட்டும்; ஏகாந்தமாக அங்கு அமர்ந்து துறவறத்தில் ஈடுபடட்டும்;

அவற்றிற்குப் படையல்களை அல்லது காணிக்கைகளை வழங்கட்டும்; ஆனால் நீங்கள் அவ்வாறெல்லாம் ஒருபோதும் செய்யக்கூடாது. நீங்கள் ஓரிறை கொள்கையை நிலைநாட்டுவதற்காகவே தோற்றுவிக்கப்பட்டுள்ளீர்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தங்கள் சமுதாயத்திற்கு இவ்வாறு அறிவுரை கூறிக்கொண்டிருந்த போது, அவர்களின் கண் இமைகள் மூடத்தொடங்கின. அப்போது அவர்கள், ***இலர் ர.:பீகில் அ.:லா, இலர் ர.:பீகில் அ.:லா*** என் மீது அன்பு கொண்ட மிகவும் மேலான நண்பனிடம் நான் செல்கிறேன்; என் மீது அன்பு கொண்ட மிகவும் மேலான நண்பனிடம் நான் செல்கிறேன் என்று கூறிக்கொண்டிருந்தார்கள். இவ்வாறு கூறிக்கொண்டிருக்கும் போது அவர்களின் ஆன்மா அவர்களின் உடலிலிருந்து பிரிந்து விட்டது.

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மறைவினால் நபித்தோழர்களுக்கு ஏற்பட்ட நிலை

நபித் தோழர்கள் பலர், தங்களுடைய பணிகளை விட்டு விட்டு மஸ்ஜிதுக்கு வந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நலம் பற்றிய நற்செய்தி தங்களுக்கு கிடைக்க வேண்டுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில், அவர்களின் மரணச்செய்தி, அந்த மஸ்ஜிதிலிருந்த நபித் தோழர்களுக்குக் கிடைத்ததும் அவர்களுக்கு மாபெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. அந்த நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் ஏதோ பணிக்காகச் சிறிது நேரம் வெளியே சென்றிருந்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மஸ்ஜிதில் இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்று மக்கள் கூறுவதை அவர்கள் கேட்டபோது, உறையிலிருந்து வாளை உருவி, இறைவன்மேல் ஆணையாக, முஹம்மது ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்று எவராவது சொன்னால், நான் அவருடைய தலையைத் துண்டித்து விடுவேன். இதுவரை நயவஞ்சகர்கள் உலகில் இருந்து கொண்டிருக்கின்றனர். எனவே அல்லாஹ்வின் தூதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மரணமடைந்திருக்க முடியாது. அவர்களின் உயிர் உடலிலிருந்து பிரிந்துவிட்டதென்றால் அந்த உயிர் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களைப் போன்று, இறைவனைச் சந்திப்பதற்காகச் சென்றிருக்கிறது. பின்னர் அந்த உயிர் திரும்பி வந்து உலகிலிருந்து நயவஞ்சகர்களை முற்றாக அழித்து விடும் என்று கூறினார்கள்.

அடுத்து அவர்கள் அந்தச் செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சிக்குள்ளானதால் உருவிய வாளைக் கையில் பிடித்துக் கொண்டு, மிகுந்த உணர்ச்சிக்குட்பட்டவர்களாக, முஹம்மது ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்று எவராவது சொன்னால், நான் அவரைக் கொலை செய்து விடுவேன் என்று மீண்டும் மீண்டும் கூறியவாறு இங்குமங்குமாக நடந்து கொண்டிருந்தார்கள்.

அப்போது நபித்தோழர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவ்வாறு கூறிக்கொண்டு இங்குமங்குமாக நடந்து கொண்டிருந்ததை நாங்கள் கண்டபோது எங்கள் உள்ளங்களுக்கும் நிம்மதி கிடைத்தது. உமர் கூறுவது உண்மையே; ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடையவில்லை; நிச்சயமாக மக்களுக்கு இந்த விஷயத்தில் தவறான எண்ணம் ஏற்பட்டிருக்கிறது என்று நாங்கள் கூறினோம். உமர் அவ்வாறு கூறியதால், நாங்கள் எங்கள் உள்ளங்களுக்கு ஆறுதல் அளித்துக் கொண்டிருந்தோம் என்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சிலர் விரைந்து சென்று ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுக்கு அங்கு ஏற்பட்டிருந்த நிலைமைகள் பற்றி அறிவித்தார்கள். இதுகேட்டு அவர்கள் மஸ்ஜிதுக்கு வந்தார்கள். ஆனால் எவரிடமும் எதுவும் பேசாமல் நேராக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டிற்குச் சென்று, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்களா? என்று கேட்டதற்கு, ஆம் என்று அவர்கள் பதிலளித்தார்கள்.

உடனே அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பக்கத்தில் சென்று, அவர்களின் முகத்திலிருந்து ஆடையை அகற்றி அவர்களின் முகத்தில் முத்தமிட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி)

அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. அப்போது அவர்கள், இறைவன் மேல் ஆணையாக அவன் தங்களுக்கு இரண்டு மரணங்களைத் தர மாட்டான. 1) தாங்கள் உடல் ரீதியாக மரணமடைந்து விட்டீர்கள். 2) தாங்கள் தோற்றுவித்த ஜமாஅத் தவறான கருத்துகளுக்கும் தவறான கொள்கைகளுக்கும் உட்பட்டு மரணமடைந்து விடாது என்று கூறினார்கள்.

பின்னர் அவர்கள் வெளியே வந்து அங்கு வரிசையாக நின்றிருந்தவர்களுக்கிடையே நுழைந்து மவுனமாக மிம்பரை (உரையாற்றுவதற்கென்று மஸ்ஜிதில் அமைக்கப்பட்ட மேடை) நோக்கிச் சென்றார்கள். அவர்கள் மிம்பரின் மீது நின்றபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் உருவிய வாளுடன், முஹம்மது ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்று அபூபக்கர் சொன்னால், அவர்களைக் கொன்றுவிட வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களின் பக்கம் சென்று நின்று கொண்டார்கள்.

அவர்கள் பேசத் தொடங்கியதும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அவர்களின் ஆடையைப் பிடித்து, அவர்களைப் பேசாமலிருக்கச் செய்ய விரும்பினார்கள்.

ஆனால் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், சடக்கென்று ஆடையை அவர்களின் கையிலிருந்து அகற்றிக் கொண்டார்கள். பின்னர் அவர்கள்,

முஹம்மது ஒரு தூதர் மட்டுமே ஆவார். அவருக்கு முன் தோன்றிய எல்லாத் தூதர்களும் மரணமடைந்து விட்டனர். எனவே அவர் மரணமடைந்து விட்டாலோ கொலை செய்யப்பட்டாலோ நீங்கள் உங்கள் குதிகால்களில் திரும்பிச் சென்று விடுவீர்களோ? (நீங்கள் உங்கள் மார்க்கத்தை விட்டுச் சென்று விடுவீர்களோ) என்ற திருக்குர்ஆனின் (3:145) வசனத்தை படித்துக் காட்டினார்கள்.

மார்க்கம் இறைவனுடையதாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடையதன்று. இந்த வசனம் உஹுதுப் போர் நடந்தபோது அருளப்பட்டது. அப்போது சிலர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹிதாகி (எதிரிகளால் கொல்லப்பட்டு) விட்டார்கள் எனக் கேள்விபட்டு, மனம் தளர்ந்து அமர்ந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் இந்த வசனத்தைப் படித்துக் காட்டிவிட்டு, மக்களே! உங்களுள் எவர் இறைவனை வணங்கிக் கொண்டிருந்தாரோ அவர் அல்லாஹ் என்றென்றும் உயிருள்ளவன், அவன் ஒருபோதும் மரணமடைவதில்லை என்பதை நினைவில் கொள்ளட்டும். எவர் முஹம்மது (ஸல்) அவர்களை வணங்கி கொண்டிருந்தாரோ அவரிடம் முஹம்மது (ஸல்) அவர்கள் மரணமடைந்துவிட்டார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறினார்கள்.

இதுகேட்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், முஹம்மது ஒரு தூதர் மட்டுமே ஆவார். அவருக்கு முன் தோன்றிய எல்லாத் தூதர்களும் மரணமடைந்து விட்டனர் . . . . என்னும் திருக்குர்ஆன் வசனத்தை ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் படித்துக் காட்டத் தொடங்கியதும் எனக்குச் சரியான உணர்வு கிடைத்து விட்டது. அவர்கள் அந்த வசனத்தைப் படித்து முடித்த போது, என் ஆன்மீக கண்கள் திறந்துவிட்டன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மையிலேயே மரணமடைந்து விட்டார்கள் என்று நான் புரிந்து கொண்டேன். அப்போது என் கால்கள் நடுங்கின. நான் வலுவிழந்து கீழே விழுந்து விட்டேன் என்று கூறினார்கள்.

சிறிது நேரத்திற்குமுன் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களைத் தமது வாளால் கொல்ல நினைத்தவர், இப்பொழுது முற்றிலும் உண்மையை அடிப்படையாகக் கொண்ட அவர்களின் உரையைக் கேட்டு தமது கருத்தை மாற்றிக் கொண்டார்கள்.

ஏனைய நபித்தோழர்கள் அந்த வசனம் அப்போதுதான் அருளப்பட்டது போன்று உணர்ந்தார்கள். துயரத்தின் தாக்கத்தால் அது திருக்குர்ஆனின் ஒரு வசனம் என்பதையே மறந்து விட்டார்கள்.

மதீனாவின் மாபெரும் கவிஞராகிய ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்கள் பின்வரும் ஒரு கவிதையை அப்போது கூறினார்கள்.

"முஹம்மது ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களே! தாங்கள் என் கண்களின் கருவிழியாக இருந்தீர்கள். இன்று தாங்கள் மரணமடைந்து விட்டதால் என் கண்கள் குருடாகிவிட்டன. தாங்கள் மரணமடைந்த பிறகு இப்பொழுது எவர் வேண்டுமானாலும் மரணமடையட்டும். என் தந்தை, என் சகோதரர், என் மகன், என் மனைவி முதலானவர்களுள் எவர் மரணமடைந்தாலும் நான் பொருட்படுத்தப் போவதில்லை. தாங்கள் மரணமடைந்து விடக் கூடாதே என்றுதான் நான் பயந்து கொண்டிருந்தேன்".

இந்தக் கவிதை முஸ்லிம்கள் எல்லாருடைய உள்ளத்தி லிருந்தும் எழுந்த குரலாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்த அன்று முதல் பல நாள்கள் வரை மதீனாவிலுள்ள முஸ்லிம் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் எல்லாரும், முஹம்மது ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களே! தாங்கள் எங்கள் கண்களின் கருவிழியாக இருந்தீர்கள். தாங்கள் மரணமடைந்து விட்டதால் நாங்கள் குருடர்களாகி விட்டோம். இப்பொழுது எங்களுடைய குடும்பத்தினருள் எவர் மரணமடைந்தாலும் எந்த உறவினர் மரணமடைந்தாலும் நாங்கள் பொருட்படுத்தப்போவதில்லை. தாங்கள் மரணமடைந்ததுவிடக் கூடாதே என்றுதான் நாங்கள் பயந்து கொண்டிருந்தோம் என்ற கவிதையையே கூறிக்கொண்டிருந்தனர்!

*அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் வபாரிக் வஸல்லிம்.*

★ ★ ★ ★ ★

Written by : HAZRAT MIRZA BASHIR-UD-DIN MAHMUD AHMAD (Rali)
Translated by : Maulavi P.M. MUHAMMAD ALI H.A.
Published by : NAZARATH NASR-O-ISHAT
SADR ANJUMAN AHMADIYYA,
QADIAN, PUNJAB.